# சங்கப் புறத்திணைப் பனுவலில் மனிதநேயம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையில்
முனைவர் (Ph.D.) பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு


**முனைவர்பட்ட ஆய்வாளர்**

**கு. சீனிவாசன்**
**சுழல்எண்: 1525060001**

**நெறியாளர்**

**முனைவர் இயே. பெர்க்மான்ஸ்**
உதவிப் பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்



**தமிழியல்துறை**

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

**அண்ணாமலைநகர் - 608002**

**நவம்பர் - 2020**

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் இயே. பெர்க்மான்ஸ்**
உதவிப்பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

***"சங்கப் புறத்திணைப் பனுவலில் மனிதநேயம்"*** என்னும் தலைப்பில் ***கு. சீனிவாசன்*** என்பவர் 2015–2017 ஆம் கல்வியாண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில் முனைவர்பட்ட ஆய்வாளராக இருந்து செய்துள்ள இவ்ஆய்வு அவரது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இவ்ஆய்வின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

**முனைவர் ந. வெங்கடேசன்**
பேராசிரியர் மற்றும் தலைவர்

**முனைவர் இயே. பெர்க்மான்ஸ்**
(நெறியாளர்)

# நன்றியுரை

கருணையோடு என்னைக் காலமெல்லாம் காத்து வழிநடத்தி வரும் **இறைவனுக்கு** என் இதய மலர்களை சமர்ப்பணம் செய்கிறேன்.

உலக உயிரினங்களுள் பகுத்தறிவு உடைய மனித இனத்திற்குத் தேவையான இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று நன்றி மறவாப் பண்பு. செய்ந்நன்றி மறந்த மக்களுக்கு உய்வில்லை என்ற வள்ளுவப் பொன்மொழி **எல்லாத் துறைக்கும்** பொருந்திய ஒன்றாகும்.

தமிழ்மொழியின் பெருமையினை இவ்வுலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கும் பவளவிழாக் கண்ட பார்போற்றும் கல்விக் கோயிலாக திகழ்ந்து கொண்டிருக்கின்ற அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் தமிழியல்துறையில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்யும் வாய்ப்பளித்த பல்கலைக்கழகத்தின் **மாண்பமை துணைவேந்தர்** அவர்களுக்கும், **மதிப்பமை பதிவாளர், சீர்மிகு தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்** அவர்களுக்கும், **ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்** உள்ளிட்ட அனைவருக்கும் என் நன்றியினையும் வணக்கத்தினையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வு சிறப்புறவும் என் கல்விப்பயணம் தொடர்ந்திடவும் துணைநிற்கும் வகையில் உதவித் தொகை வழங்கி **(UGC-SRF)** ஊக்கப்படுத்திய பல்கலைக்கழக **மானியக் குழுவிற்கும் (UGC)** மனநெகிழ் வணக்கத்தினை உரித்தாக்குகிறேன்.

இந்திய மொழிப்புலத்தின் முதன்மையர் **பேராசிரியர் முனைவர் க. முத்துராமன்** அவர்களுக்கும், முன்னை முதன்மையர் பேராசிரியர் முனைவர் வீ.திருவள்ளுவன் அவர்களுக்கும் என் நன்றி.

சங்க காலத் தமிழர் பண்பாட்டை இலக்கிய உலகறியச் செய்யுமுகத்தான் "சங்கப் புறத்திணைப் பனுவலில் மனிதநேயம்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய விழைந்த எனக்கு அனுமதியளித்து ஊக்கப்படுத்திய தமிழியல் துறைத்தலைவர் **பேராசிரியர் முனைவர் ந.வெங்கடேசன்** அவர்களுக்கும் என்நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினை ஊன்றிப் பார்த்து உரிய நற்கருத்துகளை வழங்கியும், இவ்வாய்வு சிறப்புற அமையவும் முழு உருப்பெறவும் அவ்வக்காலங்களில் என்னை ஊக்குவித்து உதவி புரிந்த என் வாழ்வின்

வழிகாட்டி அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழியல்துறைப் **பேராசிரியப் பெருந்தகை முன்னைத் துறைத்தலைவர் முனைவர் அரங்க. பாரி** அவர்களுக்கும் என் வாழ்நாள் முழுதும் நன்றிக் கடப்பாடுடையேன்.

எனக்கு ஆய்வுத் தலைப்பினை வழங்கி, அதன்படி செயலாற்றவும், இவ்ஆய்வு சிறக்க பல ஆய்வு நூல்களை எனக்கு தந்து உதவிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை திருக்குறள் இருக்கையின் முன்னைப் **பேராசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கும் பெருநன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை ஆய்வாளராக ஏற்று ஆய்வுக்கு மட்டும் அல்லாமல் என்னுடைய வாழ்விற்கும் நல்ல பல கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வழிநடத்திச் செல்லுகின்ற என்னை நெறிப்படுத்திய என் ஆய்வுநெறியாளர் **முனைவர் இயே. பெர்க்மான்ஸ்** அவர்களுக்கும் என்றென்றும் நன்றி கடப்பாடுடையேன்.

இவ் ஆய்வின் போது பல்வேறு நிலைகளில் ஊக்கமும் ஆக்கமும் ஊட்டி இவ்வாய்வு முழுமைபெற பல்லாற்றானும் உதவி புரிந்த **பேராசிரியர்கள் முனைவர் அ. சிவபெருமான், முனைவர் வ. கணபதிராமன், முனைவர் ஏ. வீரப்பன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வேட்டின் பிழைத்திருத்தத்தில் பெரிதும் உதவி செய்த தமிழியல்துறை **பேராசிரியர் தெ. மேகநாதன், பேராசிரியர் தி. குமார்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்விற்கு உதவியும் என்னை நல்வழிப்படுத்தும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை பேராசிரியர்கள் **முனைவர் கோ.பிலவேந்திரன், முனைவர் ச. செந்தில்குமார், முனைவர் இரா. சதாசிவம், முனைவர் தி. நெல்லையப்பன், முனைவர் அரங்க. அன்பில்நாதன், முனைவர் மூ. பாலசுப்பிரமனியன், முனைவர் செ. பாலு, முனைவர் இரா. மலர்விழி, முனைவர் அ. அன்பு, முனைவர் கு. மணி, முனைவர் ஜா. இராஜா, முனைவர் சே. கல்பனா, முனைவர் ஆறு. அன்புஅரசன்** அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் அகம் மகிழ்கிறேன்.

ஆய்வுத் தொடர்பான நூல்களைப் பார்வையிடவும், சான்றாதாரங்களைத் தொகுக்கவும் அனுமதி அளித்து உதவிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் **தமிழியல்துறை நூலகத்தார்க்கும், பொதுநூலகத்தார்க்கும், உலகத்தமிழாராய்ச்சி**

**நிறுவன நூலகத்தார்க்கும், திருவண்ணாமலை மாவட்ட மைய நூலகத்தார்க்கும்,** என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழியல்துறையின் **ஆசிரியரல்லா பணியாளர்கள்** அனைவருக்கும், மற்றும் என்னுடன் பயின்ற **நண்பர்களுக்கும்** என் நன்றி.

என்னை இந்த உலகில் ஈன்று புறந்தந்து, சான்றோன் ஆக்கி விண்நின்று வாழ்த்தும் என் தந்தை **ப. குப்புசாமி** மற்றும் மண்ணின்று வழிநடத்தும் என் தாய் **கு.வெண்ணிலா அம்மையார்** அவர்கட்கும் மற்றும் எங்களை ஆளாக்கி உயிர் கொடுத்து உழைத்து எங்கள் குலதெய்வமாக வாழ்ந்து மறைந்த பாட்டி **திருமதி. ஆதிலட்சுமி அம்மாள்** அவர்களுக்கும் முதற்கண் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தையும் தாயும் ஆகி நின்று என் வாழ்வின் சுடர் விளக்காய் திகழும் எனதருமை தமையன் **கு. இளங்கோவன்** மற்றும் **கு. பிரபு** அவர்களுக்கும் என் வாழ்நாள் முழுதும் நன்றிக் கடப்பாடுடையேன்.

அக்கா **சு.ஜெயந்திசுந்தரமூர்த்தி** மாமா **ச.சுந்தரமூர்த்தி** அவர்களுக்கும் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நான் சோர்ந்து போகும்போதெல்லாம் தோள் கொடுத்து தாங்கி எனக்கு பக்கபலமாய் உயிரும் உடலுமாய் இருந்து எனது நலமே பெரிதென்றெண்ணி வாழும் அன்பின் வடிவம் என் காதல் மனைவி **சீ. மஞ்சுளாவிற்கும்** என் இதயப்பூர்வமான நன்றியினை உரித்தாக்குகிறேன். மற்றும் என் அன்பு மகன் **சீ.ம. பரிதியமுதன்** அவர்களுக்கும் நன்றி.

ஆய்வேட்டினை அழகுற புறக்கட்டமைப்புச் செய்த சிதம்பரம் அண்ணாமலைநகர் **ஆனந்த் கணினியகத்தார்க்கும்** நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

"நின்னை வணங்கி நின்தாள் பணிதலன்றி
என்னே யாம் செயற்பால"

**கு. சீனிவாசன்**
**ஆய்வாளர்**

# முன்னுரை

இவ்வுலகில் உயிர்கள் தோன்றி பல இலட்சம் ஆண்டுகள் என்று ஆய்வியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு மனிதகுல உயிர்கள் தோன்றிப் பல வருடங்கள் ஆகிய பின்னரே நாகரிகமும் பண்பாடும் படிப்படியாக வளர ஆரம்பித்து, பல்வேறு பரிணாம வளர்ச்சியில் மனித நாகரிகங்கள் உலகில் எண்ணிலடங்கா மாறுதல்களைத் தோற்றுவிக்க ஆரம்பித்தது. மனிதஇனம் பிறந்து வளர்ந்து வரும்பொழுது பல மாற்றங்களையும் பல ஏற்றத்தாழ்வுகளையும் சந்தித்து இருக்கின்றது. மக்கள் வாழ்வியல் முறைகளில் ஏற்படும் மனித உணர்வுகளைத் தோற்றுவிப்பதாக மட்டுமல்லாமல், மனிதநேயத்தை உணர்த்துவதாக அமைகின்றன. இக்காரணிகள் அப்படியே சங்க இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றன. மனிதநேயம் தமிழர்களின் வாழ்வில் இரண்டற பின்னிப் பிணைந்த நிலையைச் சங்கப்புற இலக்கியங்களில் காணமுடிகிறது.

பொதுவாக ஓர் உயிரினம் வாடுவதைக் கண்டு மனித உயிர்கள் அதனைப் பார்த்துக் கொண்டு நிற்பது மரபு அன்று. அதற்குச் சான்றாக கி.பி 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க வள்ளலார் அவர்கள் “வாடியப்பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று உயிர் மீது அளப்பறிய அன்பினைக் கொண்டார். இவ்வாறான அன்பு நேயத்தோடு அஃறிணை உயிர்களும் இருப்பது கண்கூடு. பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணி காப்பாற்றும் தாய்மைப் பண்பினைச் சங்கப்புற இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது.

நாகரிக வளர்ச்சியில் அன்புக் கூறுகள் மனிதநேயக் கூறுகளாக வளர்ச்சியடைகின்றன. மேலும், மனிதன் மனிதன் மீதும், பிற உயிர்களின் மீதும் வைக்கும் பற்றே அனைத்திற்கும் ஆணிவேராக அமைகிறது. இவ்வாறான மனித உயிர் நேசிப்பை இன்றைய தலைமுறைகள் உணர்ந்து கொள்வதற்குச் சங்கப் புறப்பாடல்கள் ஊன்றுகோலாக அமைகின்றன. தன் பொருள், தன் பிள்ளை, தன் வீடு என இருக்கும் கடுகு மனப்பாங்கு கொண்டோன் சிறந்த வாழ்வைத் தனக்கும் தன்னைச் சார்ந்து வாழும் சமுதாயத்திற்கும் தர இயலாது. பிறர்க்காக வாழும் பெருந்தகையாளர்களால் தான் இன்றும் உலகம் உயிர்ப்போடு உள்ளதாகச் சங்க கவிஞர்கள் கருதுவது இவண் உணரத்தக்கது.

சங்கப்புறப் பாடல்களில் இரக்கம், பிறர்க்கு என வாழும் தன்மை, கொடை, பகிர்தல் என அனைத்துக் கூறுகளையும் உற்றுநோக்கினால் அவை மனிதநேயம் என்ற ஒரே மையப்புள்ளியில் இழையோடுவதைக் காணலாம். அந்த மையப்புள்ளியாகிய மனிதநேயமும் அது சார்ந்த உணர்வுகளும் சங்கப்புறக் பாடல்களில் பிரதிபலிக்கின்றன. எனவே சங்கப்புற இலக்கியங்களில் காணப்படும் கருணை, கொடை, பகிர்தல், வீரம், வளம், தொழில், மக்களின் வாழ்வியல் ஆகியன மனிதநேயம் குறித்துப் பேசும்பொழுது முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே, மனிதநேயம் குறித்து ஆராயும்பொழுது மேற்குறித்தச் செய்திகளையும் இவ் ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது.

**ஆய்வுத்தலைப்பு**

*இவ் ஆய்வின் தலைப்பு,* ***“சங்கப் புறத்திணைப் பனுவலில் மனிதநேயம்”*** *என்பதாகும்.*

**ஆய்வு நோக்கம்**

*சங்கப் பாடல்கள் வெற்றிபெற்றுப் பல நூற்றாண்டுகள் கடந்தும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் அதனுடைய கருத்துருவாக்கமே ஆகும். சங்கப்புறப் பாடல்களில் காணப்படும் கருத்துச் செறிவுகளில் முதன்மை பெறுவது ஈகை, பிறன்மனை நோக்கா பேராண்மை, அவா அறுத்தல், புகழெனின் உயிரையும் கொடுக்கும் தன்மை, அஃறிணை உயிர்களின் மீது அன்பு ஆகியனவாகும். இவற்றில் பல கூறுகள் குறித்துத் தனித்தனியான ஆய்வுகள் இன்றளவும் வந்த வண்ணம் உள்ளன. எனினும் மேற்கண்ட கருத்துகளையெல்லாம் ஒன்றிணைக்கும் கூறாக “மனிதநேயச் சிந்தனைகள்“ என்னும் தலைப்பில் இவ் ஆய்வு அமைந்துள்ளது. இவற்றைத் தனித்தனித் தலைப்புகளில் ஆராய முற்படும்பொழுது புலவர்களின் மொழிவளம், சொல்வளம், பொருள்வளம் புலப்படுகிறது. ஈகை, கொடை, இவற்றின் வேறுபாடுகள் குறித்தும் எடுத்தாளப்பட்டுள்ளது.*

*சங்கப் புலவர்கள் புறப்பொருட்களை எப்பொருண்மைகளில் சுட்டியுள்ளனர் என்பது குறித்து ஆராயும் பொழுது மனிதநேயத்தின் தன்மையும், முக்கியத்துவமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு அமைகிறது.*

**ஆய்வுக் கருதுகோள்**

*சங்ககால மாந்தர்களின் உணர்வுக் குவியல்களை உள்ளடக்கிய சங்கப்புற இலக்கியத்தில் மனிதநேயச் சிந்தனைகளை ஆராயமுற்படும்பொழுது சங்க கால மனிதநேயம் உலகளாவிய பண்பாட்டுக்கு முன்னோடியாக இருந்தது என்பதை கருதுகோளாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

**ஆய்வு எல்லை**

***“சங்கப் புறத்திணைப் பனுவலில் மனிதநேயம்”*** *என்னும் இவ்ஆய்வு சங்க இலக்கியங்களில் காணப்படும் புற நூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி ஆகியன ஆய்வு எல்லைகளாக அமைகின்றன.*

**ஆய்வு முன்னோடிகள்**

*காலந்தோறும் சங்க இலக்கியங்கள் குறித்தும் அவ்விலக்கியங்கள் சார்ந்த சங்ககாலப் பண்பாடு குறித்தும் பல்வேறு ஆய்வுகள் நடந்துள்ளன. அடிப்படை ஆய்வுக்கும் மேல் ஆய்வுக்கும் சங்க கால மக்களின் வாழ்வியலைப் பன்முக நோக்கில் ஆய்ந்து வெளிப்படுத்த முனைகிற இவ்ஆய்வு புறத்திணைச் சார்ந்த மனிதநேயம் குறித்த*

ஆய்வை மேற்கொள்கிற நிலையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர்பட்டத்திற்காக ஆய்வுமேற்கொண்ட ஆர்.சுப்புலட்சுமி அவர்களின் “சங்க இலக்கியத்தில் மனிதநேயம்” (1995) என்கிற ஆய்வேடும் மேலும் அதே பல்கலைக்கழகத்தில் முனைவர்பட்டத்திற்காக ஆய்வு மேற்கொண்ட ப.முருகையன் அவர்களின் “சங்க இலக்கியத்தில் மனிதம்” (2005) என்ற ஆய்வேடும் ஆய்வு முன்னோடியாக அமைகிறது. மேலும் சங்க இலக்கியத்தில் மனிதநேயக் கருத்துகள் நிறைந்த நூல்களும், கட்டுரைகளும் இவ் ஆய்விற்கு முன்னோடியாக அமைகின்றன.

**ஆய்வு மூலம்**

சங்க இலக்கியங்களில் அமைந்த புறப்பாடல்கள் இவ் ஆய்வின் மூலமாகக் கொள்ளப்படுகிறது. மேலும், சங்க அக நூல்கள், பிற்கால புற இலக்கியங்கள், திறனாய்வுநூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியன துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

இவ் ஆய்வில் எடுத்தளாப்பட்டுள்ள திறனாய்வு முறைகள்

1. ஒப்பீட்டு முறைத்திறனாய்வு – புறத்திணைக் கூறுகளோடு மக்களின் வாழ்வினை ஒப்பிட்டுக் காண்பதின்வழி அவர்களின் வாழ்வியல் குறித்த செய்திகள் முழுமையடைகின்றன எனலாம். அவ்வகையில் “புறத்திணைப்பாடல்கள் நுவலும் பொருட்கள்” என்னும் தலைப்பில் மக்கள் வாழ்வியல் குறித்து ஆராயுமிடத்து ஒப்பிட்டுமுறைத் திறனாய்வு முறை கையாளப்பெறுகிறது.
2. பகுப்புமுறைத் திறனாய்வு – புறத்திணை இலக்கியம் என்னும் இயலில் புறத்திணை இலக்கியங்கள் முதலில் பகுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலும், புறத்திணைப் பாடல்களில் மனிதவளக் கூறுகள் என்னும் தலைப்பில் அமைந்த இயலில் அரசனின் மனிதநேயப் பண்புகளும் மக்களின் மனிதநேயப் பண்புகளும் பகுத்து ஆராயப்பெறுகின்றன.. இது ஆய்வின் முடிவை எட்டதுணை செய்கிறது.
3. விளக்கமுறைத்திறனாய்வு – புறத்திணைப் பாடல்களில் மனிதநேயம் என்னும் தலைப்பிலான இயலில், மனிதநேயம் என்பது என்ன? மனிதநேயத்தின் தன்மை, மனிதநேயத்தோடு திகழ்ந்த மன்னர்களின் செயல்கள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு, பகுப்புமுறைத் திறனாய்வு, விளக்கமுறைத் திறனாய்வு எனப் பல்நோக்குடன் தனது ஆய்வுக்களத்தைக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பெறுகிறது

### ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாகப் பின்வரும் நான்கு இயல்களைக் கொண்டு அமைகிறது.

**முன்னுரை**

**இயல் – 1 . புறத்திணை இலக்கியம்**

**இயல் – 2 . புறத்திணைப் பாடல்களில் மனிதவளக்கூறுகள்**

**இயல் – 3 . புறத்திணைப் பாடல்களில் மனிதநேயம்**

**இயல் – 4 . புறத்திணைப் பாடல்கள் நுவலும் பொருள்கள்**

**முடிவுரை**

**துணைநூற்பட்டியல்**

**பின்னிணைப்புகள்**

### ஆய்வேட்டின் இயல் விளக்கம்

### ஆய்வு முன்னுரை

ஆய்வேட்டிற்கு இன்றியமையாததாகவும், ஆய்விற்குத் தோற்றுவாயாகவும் முன்னுரை அமைகின்றது. இதில் ஆய்வுத்தலைப்பு, ஆய்வின் நோக்கம், ஆய்வின் கருதுகோள், ஆய்வு ஆதாரங்கள், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வுப் பயன், ஆய்வு முன்னோடிகள் ஆகியவை வரையறுத்துக் கூறப்படுகின்றன.

### இயல் – 1 . புறத்திணை இலக்கியம்

சங்க கால மக்களின் வரலாற்றுக் கருவூலமாக விளங்குவது சங்க இலக்கியங்களே. இவற்றில் அகம் மனிதஇனத்தின் காதல் வாழ்வினை முன்னிறுத்தியும் புறம் மக்களின் புற வாழ்க்கையும், புலவர்கள் வாழ்வதற்குரிய வாழ்வாதாரங்களை வழங்கி உதவிய புரவலர்களாகிய மன்னர்கள் ஆகியோரின் வரலாற்றையும் கூறும் நூலாக விளங்குகின்றது. ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், புலவராகவும் புரவலராகவும் விளங்கிய மாண்புடைய மன்னர்கள் போன்றவர்களின் வரலாறும் தனித்தன்மைகளும் புறத்திணைப் பனுவல்களில் இடம்பெற்றுள்ளன. புரவலர்கள் என்ற நிலையில் சேர, சோழ. பாண்டிய மன்னர்கள் மற்றும் குறு நில மன்னர்கள், வள்ளல்கள், வேளிர்கள் போன்றவர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் குறுநில மன்னர்கள் எழுவர் கடையேழு வள்ளல்களாகவும் விளங்கியுள்ளனர். புலவர், புரவலர்களுக்கிடையேயான நட்பு மிக உயர்ந்த நிலையில் இருந்ததைச் சங்கச் செய்யுள்களின் மூலமாக அறியமுடிகிறது. மன்னன் புரவலராக இருந்து புலவர்களுடன் நட்பு பாரட்டியதைப் புலவர்களே பாடியிருப்பது கூடுதல் சிறப்பாக அமைந்துள்ளது. சில மன்னர்கள் தங்களின் நாட்டின் வளத்தினையும், தம் மக்களின் வாழ்வியல்

நிலையினையும் அறிந்து பாடல் இயற்றும் புலமை பெற்று திகழ்ந்தார்கள். புறத்திணை இலக்கிய காலத்தில் மக்களின் வாழ்வியல் முறை, உயர்ந்த குறிக்கோள், எதிர்கால சந்ததிகளுக்கு எடுத்துகாட்டாக விளங்கிய வாழ்க்கை, பண்பாடுகள், மனிதநேயம் குறித்த சிந்தனைகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

**இயல் – 2 . புறத்திணைப் பாடல்களில் மனிதவளக்கூறுகள்**

இவ்வுலகம் பல்வேறு உயிரினங்களை உள்ளடக்கிய பேரண்டமாகும். இப்பேரண்டத்தில் மனிதஇனம் பிறந்து வளர்ந்து, தனக்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ளவர்களாக வாழ்ந்து மடிகின்றனர். அவர்கள் அனைவரும் உயர்ந்த ஒரே நிலையில் இருப்பதில்லை. ஏற்றத்தாழ்வுடனே வாழ்ந்து வருகின்றனர். மனிதர்களில் நல்லோரும் தீயோரும் கலந்து உள்ளனர். இவர்களில் மனித வடிவம் பெற்றவர்கள் எல்லாம் மனிதர்கள் அல்லர். அவர்களில் மனவுணர்வுகள் இல்லாதவர்களை மனிதர்களாகவே மக்கள் ஏற்று கொள்வது இல்லை. எனவேதான் மனிதர்களுக்குப் பகுத்தறிவு, பகுத்துணர் மனநெகிழ்வு முதலான மிகச் சிறந்த ஆளுமைப் பண்புகள் தோற்றம் பெறுகின்றன. மனிதனின் பண்புகள் தோற்றம் பெற்றுள்ளமையும், அம் மனிதவளத்தின் கூறுகளையும் இவ்வியல் சங்கப் புறஇலக்கியங்கள் வாயிலாக விளக்குகிறது.

**இயல் – 3 . புறத்திணைப்பாடல்களில் மனிதநேயம்**

மனிதனுடைய வாழ்வியல் பல தருணங்களை உள்ளடக்கியது. அது பெரும்பாலும் உணர்வுக் கலவையால் இயங்குகிறது. மனிதப் பருவங்களில் இரக்க உணர்வு என்பது எக்காலங்களிலும் இருந்து கொண்டேயிருக்கும். கருணை, வீரம் உள்ளிட்டவை அனைத்துத் தரப்பினருக்கும் வரும் என்பதைக் கூற முடியாது. இந்த இரக்க உணர்வு உலகப்பொது உணர்வு. மனிதர்கள் வளரவளர தங்களுடைய மனிதத்தை இழந்து விடுகின்றனர். அதனால்தான் முதியோர் இல்லங்களும், கருணை இல்லங்களும் பெருகி வருகின்றன. பலர் செய்யும் தவறுகளைச் சரி செய்யும் போக்கில் இவை இயங்கி வருகின்றன. மனிதநேயம் இன்று உள்ளதா? என்று எண்ணிப் பார்க்கையில் கவலைதான் மிஞ்சுகிறது. இன்றையநிலை மனிதநேயத்தை விடுத்து, சங்கப்புறஇலக்கியம் மனிதநேயத்தை எவ்வாறு போற்றியுள்ளது என்பது தெள்ளத்தெளிவு.

இன்றைய உலகம் மகிழ்வுடன் வாழ அன்பே அடிப்படை. அன்புடையவரே பிறருக்கும் இன்பத்தை உண்டாக்கி தாமும் இன்பம் உடையவராக வாழ்வர். இவ்வாறு உண்டாக்கக் கூடிய அன்பு உள்நோக்கமற்றதாகப் பிறருக்கு இடையூறு செய்யாததாக, அனைவரிடமும் இணக்கம் காட்டுவதாக அமைய வேண்டும். இந்த அன்பே "நேயம்" என்று கூறப்படுகின்றது.

இந்த நேயம் என்பது எவ்வுயிரிடமும் அன்பு கொள்ள வள்ளலாரைப் போல வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வருத்தமுற வேண்டும். இந்த நேயம் ஆழ் மனதில் இருப்பின் எவரிடமும் அன்புடன் இருக்கலாம். மனிதநேயம் என்பது மனிதர்களிடம் நிலவும் இரக்ககுணம் அல்லது பிறரிடம் அன்பு செலுத்துதல், மனிதர்களிடம் காட்டும்

நேயம், மனிதர்களுடைய நேயம் என்று பலவாறாகப் பொருள் கொள்ளத்தக்கது. உலகில் உள்ள உயிரினங்கள் பலவகைகளாகவும், எண்ணற்றவையாகவும் உள்ளன. அவற்றுள் மானுடப்பிறவி பெறுதற்கரியது என்பதை அன்றே கணித்து உணர்த்திய ஔவை மூதாட்டியார் “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்று பாடிச் சென்றமை இன்றும் பொருத்தமாக அமைகிறது அதிலும் இந்த மனிதஇனம் உலகில் தோன்றிய காலந்தொட்டுச் சமுதாய உணர்வுடன் இயல்பாகவே பிறருடன் ஒத்து வாழும் தன்மையினைப் பெற்று இருந்தனர். மேலும், உழைப்பும் ஆர்வம், பொருளீட்டம், வசதிப் பெருக்கம், அறிவாற்றல் போன்ற உந்துததலால் மனிதன் பிற மனிதரிடையே வேற்றுமையுணர்வு கொண்டு தன்னலத்தை வளர்த்துக் கொள்ளத் தொடங்கினான். அந்நிலையில் சமுதாயத்தில் இருந்து விலகிப் பிரிந்து நிற்கவும் முனைந்தான். மேலும், தன் மனைவி, தன் மக்கள், தன் உறவினர் எனும் உறவு பிணைப்பால் தன்னலம் தலையெடுக்கவே அவனது உயர்ந்த உள்ளம் சிறுத்துக் கடுகு மனப்பான்மை கொள்ளலாயினான். இதனால் மனித நேயத்திற்கு ஒரு வகைச் சோதனை ஏற்படலாயிற்று. இத்தகைய சூழலிலேதான் சான்றோர்களும் அறவாணர்களும் அருளாளர்களும் புலவர்களும் தோன்றி சமுதாயத்தைத் தங்களின் மேலான கருத்துக்கள் மூலம் மனித நேயத்தைக் காக்க முன் வந்தனர். அந்த வகையில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமான சங்கஇலக்கியங்களில் புறம் சார்ந்த பாடல்களில் காணலாகும் மனிதநேயச் சிந்தனைகளை இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

### இயல் – 4 . புறத்திணைப் பாடல்கள் நுவலும் பொருள்கள்

இலக்கியம் என்பது மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவி என்று கூறலாம். மனிதன் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது, பிற மனிதர்களின் மீதான பார்வையையும் வெளிப்படுத்துகிறான். மேலும், சமூகத்தின் மீதான பார்வையையும் தன்னையறியாமல் பதிவு செய்கிறான். இதில் இயற்கை அழகுகள், மனிதனின் செயல்கள், சமூகத்தின் புழங்குப் பொருட்கள் உள்ளிட்ட பல செய்திகளைத் திறனாய்வாளர்கள் கண்டெடுக்கின்றனர். அக்காலத்தில் வீரம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த போதிலும் மானுடநேயத்தையும் போற்றியுள்ளமை அறியத்தக்கது. அரசர்களும் புலவர்களும் நட்புணர்வுடன் இருந்தமையும் புலனாகிறது. அரச இனங்கள் தங்களிடையே போட்டுக் கொண்ட போட்டிகள் ஆகியவற்றைப் பற்றியும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

### ஆய்வு முடிவுரை

ஒவ்வொரு இயல்களிலும் ஆராய்ந்து பெறப்பட்ட முடிவுகள் முடிவுரை என்னும் பகுதியில் தொகுத்துத் தரப்பெறுகின்றன. சங்கப்புற வேந்தர்கள், சிற்றரசர்கள், கடையெழு வள்ளல்கள், கொடைப்பண்பு, இரக்கவுணர்வு, நிலையாமை ஆகியவற்றை அறிந்து பற்றற்று மனிதநேயத்துடன் வாழ்ந்தனர். இதன் அடிப்படையில் வாழ்ந்தவர்கள் இன்றளவு இல்லாத நிலையிலும் மக்கள் மனதில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதனை இவ்

ஆய்வு வெளிப்படுத்த முயல்கிறது. மேலும், இது குறித்து எதிர்கால ஆய்வாளர்கள் மேற்கொள்ளத்தக்க ஆய்வுக்களங்கள் இனங்காட்டப்படுகின்றன.

**ஆய்வுப் பயன்**

சங்க மற்றும் பிற்கால இலக்கியங்களில் மனிதநேயக் கூறுகளை ஆராயும்போது அவை மாந்தர் குலத்தின் சீரமைவிற்கு துணையாக நிற்கும். மேலும் இவ்வுலகம் சிறப்பாக இயங்குவதற்கு அடிப்படை காரணிகளான ஒழுக்கமும் அன்பும் இரண்டறக் கலந்து இருக்கிறது. இவற்றில் நுண்மையானது அன்பு. இந்த மனிதநேயத்தினை நுவலும் பொருள்கள் குறித்த இவ்வாய்வு சங்ககால மக்களின் வாழ்வியல் குறித்த திறனாய்வாக அமைந்து சிறக்கிறது. மேலும் நமது வருங்கால சந்ததியினர் நடந்து கொள்ள வேண்டிய முறைக்கு வழிகாட்டியாகவும் சான்றாகவும் இவ் ஆய்வு அமைகிறது.

**துணைநூற் பட்டியல்**

ஆய்வுக்கு உதவியாய் இருந்த முதன்மை நூல்கள் மற்றும் துணைநூல்கள் போன்றவை துணை நூற்பட்டியலில் அகரவரிசையில் இடம்பெற்றுள்ளன.

**பின்னிணைப்புகள்**

ஆய்விற்குத் துணையாக வலுசேர்க்கும் விதத்தில் புகைப்படங்கள், ஆய்வாளரின் ஆய்வுக் கட்டுரைகள், மேலும், பிற தகவல்கள் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

# இயல் – ஒன்று

# புறத்திணை இலக்கியம்

***முன்னுரை***

*சங்க கால மக்களின் வரலாற்றுக் கருவூலமாக விளங்குவது சங்க இலக்கியங்கள். இவற்றில் மக்களின் புற வாழ்க்கையும், புலவர்கள் வாழ்வதற்குரிய வாழ்வாதாரங்களை வழங்கி உதவிய புரவலர்களாகிய மன்னர்களின் வரலாற்றையும் கூறும் நூல்களாகச் சங்க இலக்கியப் புறப்பனுவல்கள் விளங்குகின்றன. ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், புலவராகவும் புரவலராகவும் விளங்கிய மன்னர்கள் போன்றவர்களின் வரலாறும் தனித்தன்மைகளும் புறத்திணைப் பனுவல்களில் இடம்பெற்றுள்ளன. புரவலர்கள் என்ற நிலையில் சேர, சோழ. பாண்டிய மன்னர்கள், குறு நில மன்னர்கள், வள்ளல்கள் மற்றும் வேளிர்கள் போன்றவர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் குறுநில மன்னர்கள் எழுவர் கடையேழு வள்ளல்களாகவும் விளங்கியுள்ளனர். புலவர், புரவலர்களுக்கிடையேயான நட்பு மிக உயர்ந்த நிலையில் பாடப்பட்டுள்ளது. மன்னன் புரவலராக இருந்து புலவர்களுடன் நட்பு பாரட்டியதை அந்தந்தப் புலவர்களே பாடியிருப்பது கூடுதல் சிறப்பாக அமைந்துள்ளது. புறத்திணை இலக்கிய காலத்தில் மக்களின் வாழ்வியல் முறை, அவர்களுடைய உயர்ந்த குறிக்கோள், எதிர்கால சந்ததிகளுக்கு எடுத்துகாட்டாக விளங்கிய வாழ்க்கை, பண்பாடுகள், மனிதநேயம் குறித்த சிந்தனைகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.*

***புறம் விளக்கம்***

*புறம் என்பது அகத்திற்குப் புறம்பானது ஆகும். அகம் என்பது கருத்தொருமித்த இருவரின் உள்ளம் பற்றி கூறுவது. இதனை எவராலும் உய்த்துணர முடியாது. இதற்கு எதிர்மறையாகப் புறம் என்பது, ஒத்த அன்புடையார் மட்டுமன்றி, உலகில் பிறந்த உயிர்கள் அனைவராலும் உய்த்து உணரப்படுவது. மேலும், தம்முடைய உணர்வுகளை அனைவருக்கும் எடுத்துக் கூறும் வகையில் அமைந்திருப்பது. அறம், வீரம், கொடை, பண்பாடு, விழுமியம், பழக்கவழக்கம், ஒழுகலாறுகள் உள்ளிட்ட அனைத்துப் பொருளிளும் புறம் அமையும்.*

***புறம் – பொருள்***

*புறம் என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. எனினும் இதற்கு வீரம், புறத்திணை என்ற பொருள்களே ஏற்றவை ஆகும். புறம் ஓர் ஒழுக்கம். இவ்வொழுக்கம் பன்னிரு வகைகளாக உள்ளன என்று இலக்கணங்கள் செப்புகின்றன.*

***புறம் – சொல் குறித்த அறிஞர் கூற்று***

*புறம் என்பது "மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்கிறார்."[1] என்று இளம்பூரணர் குறிப்பிடுவது இவண் உணரத்தக்கது.*

*"நச்சினார்க்கினியரோ அகத்திணையை விளக்கி புறத்திணையை விளக்காது இதனை ஒழிந்தன புறம் என்று விளக்கமளிக்கிறார்"*[2]

*கு.வெ.பாலப்பிரமணியன் அவர்கள் "இது ஆகுபெயராய்ப் பாலுணர்ச்சியாகிய அகமல்லாத பிற வாழ்வியல் எண்ணக்கூறுகளையும் செயற்பாடுகளையும் ஒருங்கு உணர்த்தும் சொல்லாகும்."*[3] *என்று புறம் என்பதற்கு விளக்கமளித்துள்ளார். புறம் என்பதற்கு சி.இலக்குவனார் "காதலுக்குத் துணையாக வீட்டுக்கு வெளியே நிகழக்கூடிய போரும்,பொருளீட்டலும் அரசியலும், அறப்பணிகளும் ஆகும்" என்று வரையறுப்பது இங்கு இணைத்துக் காணத்தகும்.*

*ச.வே.சுப்பிரமணியரோ "பண்டைக்காலம் முதலே பாடப்பெற்று வரும் இருபெரும் அடிப்படைப் பொருண்மைகளில் புறம் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது. மனிதனின் அகவாழ்க்கையில் உட்படாத பிறநிகழ்வுகள் உணர்வுகள் அனைத்தும் புறமாகின்றன. புறப்பொருள் புறத்திணைச் செய்திகளான போரையும், தலைவனின் வீரம், கொடை முதலிய புகழ்ச்சிக்குரியப் பண்புகளையும் வெளிப்படுத்துகிறது"*[4] *என்று குறிப்பிடுவது இவண் நோக்கத்தக்கதாகும். இவ்வாறு புறம் குறித்துப் பல்வேறு அறிஞர்கள் கூற்றை ஒப்பிட்டு நோக்கும்போது புறம் என்பது அகம் அல்லாத வீரம், போர், பண்பாடு , உணர்வுகள் புகழ், அரசியல் பற்றி பேசுவது புறம் என்று வரையறுக்கலாம். இனி திணை என்னும் சொல் குறித்து ஆராயலாம்.*

***திணை***

*"திணை" என்னும் சொல் இலக்கிய மரபிலும், இலக்கண வழக்கிலும் ஆளப்பெறுகின்றது. இச்சொல் "திண்" என்பதன் அடியாகப் பிறக்கிறது. இதனை "மண்திணிந்த நிலனும்"(புறம் -2), "திணி மணல் அடைகரை" குறுந்-165 போன்ற தொடர்களால் திண், திணி, திணை என உருவாகும் சொல் வடிவை அறியலாம் என்பர்."*[5] *திண்மை என்னும் பண்புரிச்சொல் மையீறு கெட்டு உடைமைப் பொருள் தரும் ஐகாரம் பெற்றுத் திணை என நின்றது என்பார் ச.பாலசுந்தரம்.*[6] *சங்க இலக்கியப் பரப்பில் திணை என்பது நிலம் , திண்ணை , இல்லம், மேடை , உயர்குடி , ஒழுக்கம், இனம்(பகுப்பு) என்னும் பொருள்களில் வழங்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. திணை என்பது நிலத்தைக் குறிப்பதாய் அமைந்து பின்பு படிப்படியே கருத்து மாற்றம் பெற்று ஒழுக்கம் எனும் பொருளையும் குறிக்கலாயிற்று என்பர். இதனை "முதலில் நிலத்தைச் சுட்டிய திணை என்ற சொல் அடுத்த நிலத்தில் இருந்த மக்களையும் மக்களல்லாத பிற பொருள்களையும் சுட்டியது. அதன் பின்னர் நாகரிக வளர்ச்சியில் மக்கள் கட்டிய வீட்டைக் குறித்தும் பின் மக்களின் குடிப்பிறப்பையும் குலத்தையும் சுட்டலாயிற்று. இறுதியில் உயர்ந்த ஒழுக்கத்தையும் அகப்புற ஒழுகலாற்றையும் உணர்த்தலாயிற்று எனக் கருதலாம்"*[7] *என்பர். இலக்கண வழக்கில் "நிலம்", "ஒழுக்கம்" எனும் இரண்டு பொருளில் கொள்ளப்படுகிறது. இதனை "ஒழுக்கத்திணை என்பாரும், நிலத்தினைத் "திணை" என்பாரும் என இரு பகுதியர் ஆசிரியர்"*[8] *என்பார் நக்கீரர். நிலங்களும்*

*ஒழுக்கங்களும் இயைபுபடுத்தப்பட்டதன் காரணமாகத் திணை என்ற சொல் நிலத்தையும் ஒழுக்கத்தையும் குறிப்பதைக் காணமுடிகின்றது. இதனை "நில அமைப்புக்கும் ஒழுக்கத்திற்கும் இடையே தொடர்பிருந்தமையால் தொல்காப்பியர் "திணை" என்ற சொல்லை இரண்டிற்கும் வழங்கி சூத்திரம் செய்துள்ளார்"*[9] *என்பர். இவற்றை ஒப்புநோக்கி காணும்போது "திண்" என்பதன் அடியாகப் பிறந்த திணை என்னும் சொல் நிலம், திண்ணை, ஒழுக்கம், இல்லம், மேடை, உயர்குடி, இனம்(பகுப்பு) என்னும் பொருள்களில் வழங்கப்பெற்றதையும் இலக்கண வழக்கில் நிலம், ஒழுக்கம் என்பனவற்றைக் குறித்தமைவதையும் அறிய முடியும்.*

**இலக்கியம்**

*இலக்கியம் என்பது இலக்கு + இயம் = இலக்கியம் என்று பிரித்து அவற்றிற்குப் பொருள் கொள்ளலாம். இலக்கு – இலக்கியம், இலக்கு – இலக்கணம் , இலக்கு – குறி; குறிக்கோள் என இலக்கு என்பதற்கு இவ்வாறான பொருள்களைக் கூறுகிறார்கள். மேலும், இலக்கு என்பதற்கு விளக்கம் என்ற பொருளும் உண்டு."சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளான அறத்தை எடுத்து காட்டுவது இலக்கியம்"*[10] *என்ற சுருக்கமானதொரு பொருளைக் கொண்டு இலக்கியம் என்பதை எளிமையாகப் புரிந்து கொள்ள முடியும். "எல்லே இலக்கம்" தொல் – சொல் – 7-21) என்ற தொல்காப்பிய நூற்பாவிலிருந்து விளக்கத்தைக் கொடுத்துள்ளார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன். இதனால் இலக்கம் - என்னும் சொல்லுக்கு "விளக்கம்" என்னும் பொருள் இருத்தல் வெளிப்படை எனலாம்.` இலக்கியம் என்பது நுண் கலைகளுள் ஒன்று. அவை அறிவும் மனோபாவமும் கலந்து தொழிற்பட்டு மக்களுக்கு இன்பத்தை விளைவிக்கும் என்று நுண்கலைக்கு பொருள் கூறி இலக்கியத்தைப் பற்றி, பின்வருமாறு எஸ். வையாபுரிபிள்ளை கூறுகிறார்.*

***"இலக்கியம் என்பது அழகுணர்ச்சி ததும்ப***
***எழுதியவற்றையே குறிக்கும்"*** [11]

*இலக்கியம் நுண்கலையைப் போலவே அறிவைத் தூண்டும் கருவியாகவும் இன்பத்தைக் கொடுக்கும் அமுதசுரபியாகவும் விளங்குகிறது. அகத்தியரின் பெயரால் வழங்கப்பட்டு வரும் ஒரு பழம் பாடல், யாப்பருங்கல விருத்தியாசிரியரால் ஈண்டு காட்டியுள்ளன.*

***"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே;***
***எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;***
***எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல***
***இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்"*** [12]

*என்ற பாடல் இலக்கணம் பற்றிக் குறிப்பிடுகிறது. இனி, புறப்பொருள் குறித்த இலக்கணத்தைக் காண்போம்.*

***புறப்பொருள் இலக்கணம்***

*புறப்பொருள் என்பது வீரம், போர், தூது, வெற்றி, கொடை, நிலையாமை முதலியவற்றைக் கூறுவது ஆகும். ஒரு குறிப்பிட்ட அரசனையோ, வள்ளலையோ குறுநில மன்னனையோ பெயரைச் சுட்டி அவனுடைய வீரம், வெற்றி, கொடை முதலியவற்றைப் பாடுவது புறப்பொருள் மரபு ஆகும். இவ்வாறு அன்றி ஒருவருக்கு அறிவுரை சொல்லுவது போலவோ யாரையும் சுட்டிக் கூறாமலோ புறப்பொருள் பாடல் அமைவதும் உண்டு. அகப்பொருள் பாடல் போலவே புறப்பொருள் பாடல்களும் திணை, துறை அடிப்படையில் அமைந்துள்ளன. ஆனால் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்ற இலக்கணங்கள் புறப்பொருளுக்கு இல்லை. புறப்பொருள் திணைகள் போரை அடிப்படையாகக் கொண்டவை. போர் செய்யச் செல்லும் அரசனும் படைகளும் போரிடும் முறைக்கு ஏற்ப வெவ்வேறு பூக்களை அணிந்து சென்று போரிடுவர். அவர்கள் அணிந்து செல்லும் பூக்களின் பெயர்களே திணைகளுக்கு பெயர்களாக அமைந்துள்ளன.*

***திணைகள் ஒப்பீடு***

*பொருளிலக்கண மரபில் திணைகளை ஒப்பிட்டும் ஆராயலாம். இவற்றைப் பின்வருமாறு சுருக்கமாக ஒப்பிடலாம்.*

- *குறிஞ்சி – வெட்சி*

  *நிலம் – மலை, இரவில் பிறர் காணாது நடப்பது, காவல் மீறி மேற்கொண்ட செயலை முடிப்பது.*

- *முல்லை –வஞ்சி*

  *நிலம் – காடு. தலைவனைப் பிரிந்த தலைவி காட்டில் இருப்பாள். அரசன் காட்டில் பாசறையில் தங்கியிருப்பான்.*

- *மருதம் – உழிஞை*

  *நிலம் – வயல். கோட்டை நிலத்தில் உள்ளது.தலைவி ஊடலில் இல்லினுள் இருப்பாள். அரசன் மக்களுடன் கோட்டைக்குள்ளிருப்பான்.*

- *நெய்தல் – தும்பை*

  *மணல் வெளி இரண்டிற்கும் பொதுவான இடம். போரில் இறந்தவர்க்கு இரங்குதல். தலைவிக்கு இரங்குதல். இரண்டு திணைகளிலும் பொதுவானது.*

- *பாலை - வாகை*

  *பாலை - நானிலத்திற்கும் நடக்கும். வாகை நான்கு புறத்திணையின் நிலமாக நடக்கும். பாலை பிரிதல் போல, வாகை சூட சுற்றத்தினரைப் பிரிவதால் இரு திணைகளுக்கும் பொருத்தம் ஆகும்.*

- பெருந்திணை – காஞ்சி

  பெருந்திணை காதல் வகைகளுள் தீயது. அதுபோல அறம். பொருள், இன்பம் ஆகியன தீயது. வீடுபேறே நிலையானது என்று காஞ்சித்திணையில் உரைக்கப்பட்டுள்ளது.

- கைக்கிளை – பாடாண்

  ஒருதலைக்காமம் போல ஒரு தலைவன் மீது கொண்டு பாடப்படுகிறது. தலைவி- தலைவனது காதல் உடையது கைக்கிளை. தலைவன் மீது ஆறாக் காதலினால் பாடப்பெறுவது பாடாண் திணை ஆகும்.

**புறத்திணை பொருள்**

புறம் குறித்து ஆராயும்போது அகத்திணையில் பாடப்படும் பொருள்கள் குறித்தும் ஆராய்வது நலம் பயக்கும். மக்களின் அக வாழ்வு குறித்துக் கூறுவன அக இலக்கியங்கள் ஆகும். அதே அக வாழ்வு கூட “சுட்டி ஒருவர் பெயர் சொல்லாதவரை” அக வாழ்வில் அடங்கும். அகவாழ்வினைக் கூட இவ்வரசன், இத்தலைவன் என்று பெயரைக் கூறிவிட்டால் அது புறத்திணையைச் சேரும். இதற்கு “நெடுநல்வாடை”யைச் சான்றாகக் காட்டலாம். இது குறித்து “இவற்றுள் வெட்சி முதலாகத் தும்பை ஈறாகப் போரைப் பற்றிய செய்திகளையும், வாகை போரில் கிடைக்கும் வெற்றிகளைப் பற்றியும், பாடாண், பொதுவியல், கைக்கிளை என்பன, கொடை, நீதி, பொதுக்கருத்துகள், ஒவ்வாக்காமம் ஆகியன பற்றி விளக்குவன”[13] சொ.பரமசிவம் குறிப்பிடுவது மேற்கண்ட கூற்றிற்குப் பொருந்தி வருகிறது. சுருங்கக் கூறின் அறம், பொருள், இன்பம், வீடு, வாழ்வு. சமூகம், கொடை, விழா, பிறப்பு, இறப்பு, மகிழ்வு, பெருமை, உரிமை, வாணிபம், தொலைநோக்கு, வானியல், அறிவியல், அறவியல் என்று எதைப்பற்றியும் சுவைபடவோ பாடலுள் சான்றாகவோ அமைந்து புறப்பொருள் சிறக்கும் எனலாம்.

**புறத்திணைத் தோற்றம்**

மனித வாழ்வு என்பது மிக நீண்ட வரலாற்றை உடையது. முதல் முதலில் தோன்றிய மாந்தயினம் வயிற்றுப் பாட்டிற்கு வழிவகை செய்து கொள்வதில் போராடி வெற்றி கண்டது. இனப்பெருக்கம், பசி ஆகியவற்றின் தேவை நிறைவடைந்ததும் நாகரிகம், பண்பாடு ஆகியன மனிதக் குழுக்களில் தோன்றி வளர்ச்சி பெற்றன. மனிதன் தன் பாதுகாப்பு உள்ளிட்ட தேவைகளுக்காகக் குழுவாக இருந்தான். அக்குழுவில் ஆளுமை மிக்க ஒருவன் தலைவனாய்த் தோற்றம் பெற்றான். முதன்முதலில் குழுக்களாக இருந்தவற்றின் தலைவன் தம் கூட்டத்தினரின் முடிவுகளைச் செயல்படுத்துபவனாக இருந்தான். காலம் செல்லச்செல்ல கூட்டத்தினரின் தேவைகளைச் சிறந்த முறையில் கவனிப்பவன் அதன் தலைவனாக இருந்தான். பின்னர் கூட்டத்தின் தலைவன் என்பவன் பாதுகாப்பு, எல்லை நன்மைகள், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்தல், தவறுகளைச் சரிசெய்தல், உள்ளிட்ட நிர்வாகத்தினையும் சேர்ந்து பார்த்துக்கொண்டான். அத்தகைய ஒரு நடைமுறையே இன்றும் பயன்பாட்டில் உள்ளமை நோக்கத்தக்கது.

இத்தகைய சூழலில் போர் செய்வதற்குத் தம்முடைய வீரர்களைத் தலைமையேற்று நடத்திச் செல்லும் சூழல் உருவாகியது. இவ்வாறாகப் போருக்குச் செல்லுதல், போர் உருவாகியவுடன் வீரர்களுக்கிடையே இடைவெளியும், கேள்விகளும் (எப்படையைச் சேர்ந்தவன்) உருவானவுடன் அங்கு அடையாளத்திற்காகப் போரில் மலர்கள் சூட்டப்பெற்றன. இதுவே புறத்திணைகள் தோன்றுவதற்குக் காரணமாய் அமையும்.

**போரின் தோற்றம்**

அக்காலத்தில் உணவு, உடை தேவைகளின் பூர்த்திக்காக (அ) தேவை முடிந்த அமைந்த நிலையில் அண்டை நாட்டினரை நோக்கி இந்நாட்டினரின் (அ) குழுவினரின் கவனம் திரும்பியது. சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் கேள்விகளற்று போருக்குச் சென்றனர். இதனை “அன்றைய நாளில் போருக்கு என்று ஒரு தனியான சமுதாயப் பிரிவு இல்லை. எல்லோரும் போருக்குக் கருவியினைத் தூக்க, வீரம் விளையாட கனல் கக்கப் போராடினர். வெற்றியின் புன்னகை வீரத்தின் விளைபொருளாகியது. அம்பும், வில்லும், வாலும், வேலும், குந்தமும் கோலும், கைக்கோடாரியும் எஃகினால் செய்யப்பட்ட எஃகம் முசலம் முதலிய ஆயுதங்களும் போருக்குப் பயன்பட்டன என்று”[14] கி.பாண்டுரங்கன் குறிப்பிடுவது இவண் இணைத்துக் காணத்தக்கதாகும்.

இதற்குப் பின்னர் தலைவன் அரசன் என்ற உயர்ந்த நிலையை அடைந்தான். உயர்ந்த இடத்தைப் பெற்றது போலவே அவனது பணியும் உயர்ந்த நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. இதற்கு சான்றாக,

> ***“கழி உப்பு முகந்து கல்நாடு மடுக்கும்***
> ***ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்***
> ***…………………………………………***
> ***வெயில் மறைக் கொண்ட உருகெழு சிறப்பின்***
> ***மாலை வெண்குடை ஒக்குமால் எனவே”*** [15]

என்ற பாடல் மூலம் வேந்தர்கள் தம் குடிகளைக் காக்க பேர் செய்யப் புகுந்தனர் என்பதை அறியலாம்.

**வீரத்தை விரும்புதல்**

மனித வரலாற்றை நுணுகி ஆராயும் இடத்து அவற்றின் இயல்புகள் எவையேனும் ஒரு பண்பினைத் தாங்கி நிற்கின்றன. அவ்வகையில் சங்ககாலத்தினை ”வீரயுகம்” என்று ச.கைலாசபதி அழைப்பார். அதே போலக் கதிர். மகாதேவனும் குறிப்பிடுவது இவண் உணரத்தக்கது. இதனைச், “சங்கப்புறப்பாடல்களைக் காணும்போது, வீரவாழ்வு இச்சமுதாயத்தைப் பண்பாட்டில் பெரிதும் மாற்றியிருக்கிறது எனலாம். எனவே இத்தகைய கால கட்டத்தினை வீரநிலைக்காலம் என்று அழைக்கலாம்”[16] என்று கூறுவது நோக்கத்தக்கது.

*மேலும், சங்கப்பாடல்களை நோக்கும்போது வீரத்தைப் போற்றும் தன்மையை உணரலாம். இதனைப் பல்வேறு சான்றுகளில் நோக்கலாம்.*

*ஊர் மன்றங்களில் தூங்கும் முழவின் மீது காற்று உரசும் போது எழும் ஒலியைக் கேட்டால் அது முழவொலி என்று நினைத்து போர்க்கான அழைப்பு வந்துவிட்டதாக என்று எண்ணி மகிழும் நிலையினை,*

***"பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை***
***வளி பொரு தெண் கண் கேட்பின்***
***அது போர் என்னும் என்னையும் உளனே"*** [17]

*என்னும் புறநானூற்றுப் பாடல் வழி உணரலாம். இறப்பினும் சிறப்பே, வீரன் என்பவன் பிறக்கும் போது தன்னுடைய இன்னுயிரைப் பிறருக்காக ஈதல் என்பது சாதாரண செய்தியல்ல சாதனைச் செய்தி. மனிதயினத்தில் இன்று வரை இந்நிகழ்வு கொண்டாடப்பட்டு வருகிறது. இன்றும் கூட பாகிஸ்தான் அரசிடம் சென்ற "அபிநந்தன்" என்னும் இராணுவ வீரர், ஒரே நாளில் மக்கள், மந்திரிகள் என அனைவர் மத்தியிலும் கதாநாயகனாகி விட்டார் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அதே போலச் சங்ககாலத்திலும் இறந்த வீரரின் சிறப்பு மிக அழகாகப் புலவரால் எடுத்துக் கூறப்பட்ட நிலை இதற்கு மிகச்சிறந்த சான்றாகும்.*

***"செற்றன்று ஆயினும், செயிர்த்தன்று ஆயினும்,***
***உற்றன்று ஆயினும், உய்வு இன்றுமாதோ;***
***பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி,***
***இரந்தன் றாகல் வேண்டும்-பொலந்தார்***
***மண்டு அமர் கடக்கும் தானைத்***
***திண் தேர் வளவற் கொண்ட கூற்றே".*** [18]

*இப்பாடலில் வீரனின் இறப்பு உயர்த்திப் பாடப்பட்டுள்ளது. இது புகழுக்கும் மேம்பாட்டுக்கும் உரியதாகப் பேசப்படுகிறது. வீரர்கள் முகம், தோள், மார்பு ஆகிய இடங்களில் விழுப்புண் பெற்று மறைவது பெரும் புகழையும் நிலைபேற்றையும் கொடுத்தது. மேலும், இறந்த வீரர்களின் நினைவாக அவர்களுக்கு நடுகற்கள் நடப்பட்டன. மேலும் மார்பில் விழுப்புண் பெற்று இறத்தலே சிறப்பு என்னும் நிலைமையும் தமிழகப்பாடல்கள் சுட்டுவதனை இனி ஆராயலாம்.*

***"நீயே, அமர் காணின் அமர் கடந்து, அவர்***
***படை விலக்கி எதிர் நிற்றலின்,***
***வாஅள் வாய்த்த வடு வாழ் யாக்கையொடு,***
***கேள்விக்கு இனியை, கட்கு இன்னாயே!***
***அவரே, நிற் காணின் புறம் கொடுத்தலின்,***
***ஊறு அறியா மெய் யாக்கையொடு.***
***கண்ணுக்கு இனியர்; செவிக்கு இன்னாரே!***

***அதனால்,நீயும் ஒன்று இனியை;அவரும்ஒன்றுஇனியர்;***

***ஒவ்வா யாவுள, மற்றே? வெல் போர்க்***

***கழல் புனை திருந்து அழக் கடு மான் கிள்ளி!***

***நின்னை வியக்கும் இவ் உலகம்; அஃது***

***என்னோ? பெரும! உரைத்திசின் எமக்கே".[19]***

என்ற பாடல் ஒரு வீரன் போரில் விழுப்புண் பெற்றிருத்தல் சிறப்பு என்று குறிக்கப்படுகிறது. இதில் விழுப்புண் பெறாதவரின் இழிநிலையும் சுட்டப்பெறுகிறது.

தமிழ்ச்சூழலில் தொடக்க காலத்தில் கூட்டமாக இருந்த மக்கள் தம் பாதுகாப்பிற்காகத் தலைவனைத் தேர்ந்தெடுத்து அவனுடைய தலைமையின் கீழ் நடந்தனர். மக்களின் உயிராக மன்னனைப் போற்றின. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது இதனைச் சுட்டுகிறது. தங்களின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அவனையே சான்றாக்கினர். அதனால் வளமிக்க வாழ்வையும், பாதுகாப்பான வாழ்வையும் தருபவன் அரசன் என்பர்.

**போருக்கான காரணங்கள்**

போர் என்பது வீர உணர்வு அடிப்படையிலானது என்று கண்டோம். மன்னனுக்கு அடிப்படையே தம் மக்களைக் காத்தலாம். மேலும், அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைத் தர வேண்டியவன் தலைவன் ஆகிறான். அதற்கான தேவையை நிறைவு செய்ய வேண்டும் போது அவன் தன் உணவுக்கான இடத்திற்காக பிற நாட்டினரின் மீது படை எடுக்கிறான். ஒருவேளை படையினருக்கும் மக்களுக்கும் தேவையானவற்றை அவன் தராமல் இருக்கும் போது அவர்கள் அரசனை எதிர்த்து கலகம் செய்வர். இந்நிலையைத் தவிர்க்கவும் போர்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. மேலும், பிற நாட்டரசரின் பெண்களை (அ) இளவரசிகளை மணப்பதன் மூலம், அந்நாட்டையும் தனக்கு உடைமை ஆக்கிக் கொள்ளுதல் என்னும் நிலையிலும் போர் ஏற்பட வாய்ப்புண்டு. இப்போருக்கான காரணங்கள் குறித்து,

"அளவு கடந்த மண்ணாசையாலும். பெரு விருப்புடைய பொன்னாசையாலும் தன்நாட்டில் வாழும் குடிகள் வளத்துடன் வாழ்வதற்குப் போதிய இடமில்லாததாலும், இடம் சிறிதென்னும் ஊக்க மேலிட்டாலும் உலகம் பொதுவெனப் பெறத்தன்மையாலும் தாமே அரசர்க்குத் தடையேற்படும் போது பிறன் ஒருவனுடைய மகளைத் தனக்கு மணம் செய்து கொடுக்குமாறு அரசனொருவன் வற்புறுத்தியவிடத்தும் அம்மகளை மறுத்த காரணத்தாலும் புகழின் மீது கொண்ட விருப்பின் காரணத்தாலும் சங்க காலத்தில் போர்கள் ஏற்பட்டன"[20] என்று பரமசிவம் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

மேலும், ஆநிரை கவர்தலும், மீட்டலும் போருக்குரிய காரணங்களாகத் தொடக்கத்தில் இருந்தன. அவ்வாறு மீட்ட ஆநிரைகளைத் தமக்கென வைத்திராது பலருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பண்புடையோராக விளங்கினர். இந்நிலை மாறி,

*பின்னர் நில எல்லைக்காகவும், ஆட்சித் தலைமைக்காகவும், கொள்கைக்காகவும், இனமானம் கருதியும் போர்கள் நடைபெறலாயின. டார்வின் போன்ற கூர்தலறக் கோட்பாட்டினர். "போரானது, 1. தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் உணர்வு, 2. தகுதியுடையவை நிலைபெறுதல்"*[21] ஆகிய இரண்டு காரணங்களின் அடிப்படையில் நிகழும் என்பர்.

*பழங்காலத்தில் போர் தவிர்க்க இயலாததாகவும், காலத்தின் தேவையாகவும் அமைந்திருந்தது. எனவே மூவேந்தர்களும் தங்களுக்குள் போர் புரிந்த கொண்டு மாண்டது வரலாற்றில் தவிர்க்க முடியாதது. மூவேந்தரும் போர்புரிந்து அழிந்ததைக் குறை கூறுவோரும் உண்டு. தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பே மூவேந்தரும் போர்புரிந்ததை,*

**"போந்தை வேம்பே ஆர்என வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும்"**[22]

*எனும் தொல்காப்பிய நூற்பா அடிகள் உணர்த்தும். மூவேந்தரும் போர் மேற்கொண்டதற்கான காரணங்களைப் பின்வருமாறு கூறுவர்.*

### *(1)* இடமின்மை

*தன்னாட்டில் வாழும் குடிகள் வளத்துடன் வாழ்வதற்குப் போதிய இடமின்மையாலும் இடம் சிறிதென்னும் ஊக்க மேலிட்டினாலும் வேந்தர் போர் தொடுப்பர் என்பதனை,*

***"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்***
***அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"***[23]

*எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. பெண்கோடல் காரணமாகவும் போர் நிகழ்வதுண்டு. இக்காரணம் பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் மகட்பாற் காஞ்சித்துறையைச் சார்ந்தன. புறநானூற்றில் பதினெட்டுப் பாடல்கள் (336 முதல் 354 )வரை இத்துறைக்குரியன. இனமானம் காப்பதற்காகவும் வேந்தர் போரில் ஈடுபட்டதுண்டு.*

### *(2)* இகழ்ச்சியை எதிர்த்தல்

*மாற்றார் தம் ஆற்றலை இகழ்வது கண்டு பொறாது போர்க்கு எழுவதும் உண்டு. தன் ஆற்றலையும் வலிமையையும் உணராது இகழ்ந்து உரைத்ததன் காரணமாகச் சோழன் நலங்கிள்ளி போர்க்கு எழுந்தான் என்பதை,*

**"ஆற்றல் உடையோர் ஆற்றல்போற்றாது என்**
**உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்**
**துஞ்சுபுலி இடறிய சிதடன் போல"**[24]

*என்று வடபுலத்தரசர் தமிழ் வேந்தரை இகழ்ந்துரைத்ததாகக் கேள்வியுற்ற சேரன் செங்குட்டுவன் இமய படையெடுப்பை மேற்கொண்டான்.*

### *(3) தலைமை விருப்பம்*

*ஏனைய வேந்தரிலும் தாமே தலைமைபெற வேண்டும் என்ற விருப்பமும் போருக்கான காரணமாக அமைந்துள்ளது. வெண்ணிப்பறந்தலை, வாகைப் பறந்தலை, தலையாலங்கானம், நெய்தற்கானம், கருவூர், கானப்பேர், கழுமலம், தகடூர் என்னும் இடங்களில் நடைபெற்ற போர்கள் தலைமை விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்றன எனலாம்.*

### *(4) அரசுரிமை*

*அரசுரிமைக்குத் தடை ஏற்படும் போது போர் நிகழ்வதுண்டு. உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாற்பெருவளத்தான் பகைவரின் காவலின்றி தப்பிச் சென்று அரசுரிமையைப் பெறுவதற்காகப் போர் தொடுத்தான் என்று கூறப்படுகிறது.*

***"பவ்வ மீமிசைப் பகல் கதிர் பரப்பி,***
***வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்கு***
***பிறந்து தவழ் கற்றதன் தொட்டுச் சிறந்த நன்***
***நாடு செகிற் கொண்டு நாள்தொறும் வளர்ப்ப,***
***ஆளி நன் மான் அணங்குடைக் குருளை***
***மீளி மொய்ம்பின் மிகு வலி செருக்கி"*** [25]

*என்று கூறுவதில் இளவரசர் தமக்கு முறையாக வரும் அரசுரிமையை வேந்தர் தருவதற்கு முன்பாக ஆட்சி உரிமையைப் பெறுவதற்குப் போர் மேற்கொள்வதுமுண்டு இதனை,*

***"உயர்ந்தோர் உலகம் எய்தி, பின்னும்***
***ஒழித்த தாயம் அவர்க்கு உரித்தன்றே***
***அதனால் அன்னது ஆதலும் அறிவோய் நன்றும்"*** [26]

*இந்த பரந்த உலகத்தில் நின்னுடன் போர் செய்ய இருவரையும் எண்ணிப்பார்த்தால் பகை மன்னரான சேரன், பாண்டிய மன்னர் அல்லர். நீ பரந்த புகழை இவ்வுலகில் அடைந்து தேவர் உலகம் சென்றால் உன்னால் கைவிடப்பட்ட அரசுரிமை நின்னுடன் போரிட வந்த அவர்களுக்கு உரியது என்று கூறுவதில் இளவரசர் போர்தொடுத்த முறையை அறியமுடிகிறது.*

*தன் உரிமையை நிலை நாட்டுவதற்கு அல்லது பெறுவதற்குத் தாயத்தாருடன் போர் நிகழ்த்துவதுண்டு. நலங்கிள்ளிக்கும் , நெடுங்கிள்ளிக்கும் நடந்த போர் இதற்குச் சான்றாகும்.*

**(5) பொறாமை**

*பொறாமை காரணமாகவும் போர்கள் ஏற்படுவதுண்டு. மூவேந்தரினும் புகழில் மேம்பட்டு விளங்கிய பாரி வள்ளலை அழிக்க சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் ஒன்று சேர்ந்து போரிட்டனர் என்பதை,*

**"நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்"** [27]

**"கடந்து அடு தானை மூவிரும் கூடி**
**உடன்றனிர் ஆயினும், பறம்பு கொளற்கு அரிதே"** [28]

*புறநானுறு கூறுகின்றது. போர் தோன்றுவதற்குப் பொறாமையும் காரணமாக அமைந்துள்ளது. இன்றும் வளமை பெற்ற நாட்டைக் கண்டு பொறாமையின் மிகுதியாக மற்றைய நாடுகள் போர் தொடுப்பதையும் அணுகுண்டு வீசுவதையும் இணைத்து நோக்கலாம்.*

*அமெரிக்கா இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பான் மீது குண்டெறிந்தமை இதன் பாற்படும்.*

*மறவர்களின் மிகைப்பட்ட மறப்பண்பு போருக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளது. தன்னுறு தொழிலினராய் மறவர்கள் விளங்குவதும் அவ்வாறு விளங்கும் மறவர்களின் வீர மேம்பாட்டை வெட்சித்திணைப் பாடல்கள் விளக்குவதும் இதற்குச் சான்றாகும். மேலும், போரில்லையெனில் மறவர்கள் தமக்குள்ளேயே போரிட்டு மடிந்து விடுவர் என்பதை.*

**"உட்பகை ஒருதிறம் பட்டெ௳ன, புட் பகைக்கு**
**ஏவான் ஆகலின், சாவேம் யாம் என,**
**நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப"** [29]

*என்ற புறநானூற்றுப் பாடல் சிறப்பித்துக் கூறியுள்ளது.*

**(6) வேட்கை**

*சங்ககாலத்து மன்னர்கள் போர் வேட்கை கொண்டவர்கள் சேரன் செங்குட்டுவன், பொதியமலையில் கல்லெடுக்காது இமயத்தில் கல்லெடுக்கச் சென்றமை அவர்களது வீரத்தையும் போர் எண்ணங்களையும் குறிப்பதாக அமைந்துள்ளது. இதனை,*

**"பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு**
**முதுநீர்க் காவிரி முன்துறைப் படுத்தல்**
**மறத்தகை நெடுவாள் எம்குடிப் பிறந்தோர்க்குச்**
**சிறப்பொடு வரூஉம் செய்கையோ அன்று"** [30]

*மன்னர்களும் மறவர்களும் பெருமைக்காகவும் போர் செய்துள்ளனர். "ஒருவன் தாங்கியப் பெருமை புண்கிழித்து முடியும் மறத்தினானும்" என்ற தொல்காப்பிய நூற்பா*

*இதற்கு உதாரணமாகும். மேலும், வெற்றி பெற்ற மன்னன் பெருமை கருதி தான் பெற்ற வெற்றியைத் தன் பெயரோடு இணைத்துக் கூறிக் கொண்டதை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை போன்ற பெயர்கள் வழி அறியலாம். மன்னர்கள் தம் பெயரோடு இணைத்துக் கொண்ட சிறப்புகள் போர்த் தொடர்புடையவையாகும்.*

*சங்ககாலம் வீரத்திற்கு முதன்மை அளித்த காலம். போர் என்பது தவிர்க்க முடியாத நிகழ்ச்சி என்றும், இது உலகத்தின் இயற்கை என்றும் பண்டைத்தமிழர் கருதினர்.*

***அ(ம)றப் போர்***

*போர் நடைபெற்ற முறைகளை ஆராயும் போது அவற்றினிடையே இருந்த நனிநாகரிகம் பெரு வியப்பைத் தருகிறது. அவ்வறமுறை நனி நாகரிகம் உடையது. இன்று ஏன் மிகப் பிற்காலத்தில் ஏற்பட்ட இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் நகரங்களான ஹிரோஷிமா நாகசாசியின் மீது மிக மோசமான விளைவுகளைத் தரும் அணுகுண்டுகளை வீசி, இன்னும் கூட அதன் பாதிப்புகளில் இருந்து மீளமுடியாத சூழலைத் தந்த அமெரிக்காவுடன் நம் முன்னோரின் போர் முறையை ஒப்பிடுதல் என்பது சங்கத் தமிழரின் மேன்மையை உணர்த்தும்.*

> ***"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,***
> ***பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்***
> ***தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்***
> ***பொன் போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்,***
> ***......................................................................***
> ***நல் நீர்ப் பஃறுளி மணலினும் பலவே!"*** [31]

*பசுக்கள்,மகளிர் மற்றும் நோய் வாய்ப்பட்டவர்கள், பிள்ளைகளைப் பெறாதவர்களும் பாதுகாப்பான இடங்களைச் சென்று அடையுங்கள் என்று கூறும் தமிழரின் பாங்கு உயர்வானது; பண்பாட்டையும் நாகரிகத்தையும் உடையது.*

***மாலை சூடுதல்***

*போரில் அனைவரும் தத்தமக்குரிய மாலையை அணிந்து போரிட்டமையைப் பல்வேறு பாடல்கள் விளக்கி நிற்கும்.*

> ***"இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை***
> ***அரவாய் வேம்பி அம்குழைத் தெரியலும்"*** [32]

*என்ற அடிகள் தமக்குரிய பூக்களை அணிந்து போர் புரிந்தமையை விளக்கி இவ்வாறான மாலைகளை அணிந்து போரிட்டமை ஏனெனில் தங்களுடைய நாட்டின் மறவன் இவன் என்பதை அடையாளம் கண்டு தேவையற்ற உயிரிழப்பைத் தடுக்க எனலாம். மேலும், இது போன்ற போர்கள் அறநெறியில் நடந்துள்ளது என்பதை முன்னரே கண்டோம்.*

**புறப்பொருளைப் பற்றி குறிப்பிடும் நூல்கள்**

புறப்பொருள் பற்றி கூறும் இலக்கணங்களை இனி காணலாம்.

1. தொல்காப்பியம்
2. பன்னிரு படலம்
3. புறப்பொருள் வெண்பாமாலை
4. வீரசோழியம்
5. இலக்கண விளக்கம்
6. தொன்னூல் விளக்கம்
7. சுவாமிநாதம்
8. பன்னிருபாட்டியல்
9. முத்துவீரியம்
10. அறுவகை இலக்கணம்

ஆகிய நூல்கள் புறப்பொருள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அகவாழ்வு பற்றி பல்வேறு நூல்கள் குறிப்பிடுகின்றன. இலக்கணங்களை,

1. எழுத்தின் அமைப்பு முறை
   (எழுத்து. சொல், பாட்டியல், அணி, யாப்பு)
2. நூல் நுவலும் பொருள்
   (அகம், புறம்)

என்று இரு வகையாகப் பிரிக்கலாம். "மறைந்த போன இலக்கண நூல்களாக முப்பத்து மூன்று இலக்கண நூல்களைக் குறிப்பிடுகிறார்"[33] சோம.இளவரசு. இவற்றுள் புறப்பொருள் குறித்து எந்நூலும் பேசவில்லை. இவற்றுள் புறப்பொருள் குறித்து பேசும் நூல்கள் மேற்கண்ட பத்து நூல்களேயாகும். புறப்பொருள் குறித்து பேசும் இலக்கண நூல்களின் விளக்கங்களை பின்னர் விரிவாகக் காணலாம்.

**புற இலக்கணங்கள் தோன்றாமைக்குக் காரணம்**

புற இலக்கணங்கள் போர், கொடை, புகழ் என்று பல செய்திகளைப் பேசுகின்றன. இவற்றுள் போர் பற்றிய செய்திகளே மிகுதி. ஆழ்ந்து சிந்திக்கும் போது போர் குறித்த செய்திகளை புலவர்கள் அதிகம் போற்றவில்லை என்று தோன்றுகிறது. மேலும் பத்துப்பாட்டில் கூட போர் பற்றிய இலக்கியங்கள் இல்லை. மேலும் புறப்பாடல்களில், போர் பற்றிய செய்திகள் அதிகமாக இல்லாமல், அவற்றுக்குப் பதிலாக, அரசனைப் புகழ்ந்து பாராட்டும் போது, அவனுடைய வெற்றி சிறப்பில் போர் சிறப்பு பாடப்படுகிறது. எனவே புறப்பொருளின் மீது புலவர்களுக்கு உள்ள ஈடுபாடின்மை அவ்விலக்கணம் தோன்றாமைக்குக் காரணமாகக் கூறலாம். மேலும், போரும் புறவாழ்வும் வரையறைகளுக்கு அப்பாற்பட்ட திருப்பங்களுடன், சூழ்நிலைகளுடன் கழிந்தன என்பதோ புற வாழ்க்கையில் அக வாழ்க்கையில் உள்ளது போன்ற

*நிலைத்தன்மையும் நீடித்த தன்மையும் இல்லாமல் போனதோ புறப்பொருள் இலக்கண நூல்கள் அதிகம் தோன்றாமைக்குக் காரணமாய் இருக்கலாம்.*

***புறப்பொருள் குறித்த இலக்கண விளக்கங்கள்***

*தொல்காப்பியம் ஏழு, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டு திணைகளையும் கூறியுள்ளன. வீரசோழியம், வடமொழி குறித்த இலக்கணத்தைத் தமிழ் மொழிக்கும் பொருந்தும் என்று கூறியுள்ளது. இலக்கணவிளக்கம் வெறும் இருபத்தொன்று, செய்யுட்களில் இயம்பியுள்ளது. தொன்னூல்விளக்கம் மற்றும் அறுவகை இலக்கணம் ஆகிய இரண்டும் காலத்திற்கு ஏற்றார் போல புறப்பொருள் குறித்துப் புதிய கொள்கைகளை வகுத்துள்ளன. சாமிநாதமும், முத்துவீரியமும் முந்து நூல்களையே புறப்பொருளில் ஒத்து காணப்படுகின்றன.*

***புறத்திணைப் பாகுபாடு***

*காதல் தவிர, பிறவற்றைக் கூறும் புறத்திணைப் பகுதியில் ஏழு திணைகள் உள்ளதாகத் தொல்காப்பியர் கூறுவார். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனப் பெயர் பெறும். அன்பின் ஐந்திணை எனப் பெறும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை போலவே, இப்புறத்திணைகளும் பூக்களின் பெயரைக் கொண்டு பெயர் பெற்றிருப்பதைக் காணலாம். 'பாடாண்' மட்டுமே பூப்பெயரைக் கொள்ளவில்லை. ஏழு அகத்திணைகளுக்கு இணையாக ஏழு புறத்திணைகளைத் தொல்காப்பியர் கூறுகிறார். அகத்திணைக்குரிய குறிஞ்சி இங்கு வெட்சி என்னும் திணை ஒழுக்கத்தைத் தனக்குப் புறத்திணையாகக் கொள்ளும். முல்லைக்கு வஞ்சித் திணை புறத்திணையாகும். மருத ஒழுக்கத்திற்குப் புறத்திணையாவது உழிஞைத் திணையாகும். நெய்தலுக்குத் தும்பை என்பது புறத்திணையாகும். பாலை என்னும் நடுவுநிலைத் திணைக்குப் புறத்திணையாக வாகைத்திணை அமையும். பெருந்திணை என்னும் பொருந்தாக் காமப் பொருளுடைய அக புறத்திணைக்கு - நிலையாமைப் பொருள் குறித்த காஞ்சித் திணை புறத்திணையாகும். கைக்கிளை என்னும் ஒருதலைக் காமத்திற்குப் புறத்திணையாகப் பாடாண் திணை அமையும். இவ்வகத்திணைகள் ஏழும், புறத்திணைகள் ஏழும் ஒன்றிற்கொன்று தொடர்புடையனவாகக் கூறப் பெறுதல், தொல்காப்பியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது.*

***தொல்காப்பியப் பொருளதிகாரம்***

***"செய்தால் பெயர் பெற்றன அகத்தியம், தொல்காப்பியம் என இவை"*** [34]

*என இறையனார் களவியல் உரையில் வருவதால் தொல்காப்பியம் தொல்காப்பியரால் இயற்றப்பட்டது என்பது நன்கு தெளியப்படுகிறது. இவரை ஒல்காப் புகழ் தொல்காப்பியனார் என்றும் குறிப்பிடுவர். இன்றைய தமிழ் கூறும் நல்லுலகத்திற்குக் கிடைக்கும் தமிழ் நூல்களுள் பழமையான இலக்கணமாகத் திகழ்வது*

தொல்காப்பியமாகும். இந்நூல் செய்யுள் வழக்கு, உலக வழக்கு (தொல். சொல். 18) என்ற இரு நிலையிலும் மொழியின் இயல்பை விளக்குகிறது.

**"இயல்பென மொழிப"...**[35]

**"கிளவி யென்ப"...**[36]

முதலான சொற்களால் இவர்க்கு முன்பு இலக்கண நூல்கள் இருந்துள்ளமையைத் தெளியலாம். ரா. இராகவையங்கார், "இவர் வழக்கினுஞ் செய்யுளையே தம் கருத்தில் கொண்டு அதற்குப் பண்டைத் தமிழர் வழங்கிய இலக்கண வரம்பினைத் தம் நுண்ணறிவினாற் கண்டு, அப்பழைய செய்யுள் வழக்கு நெறி இகவாமை கருதி என்மனார் புலவ... என்பது போல முன்னோரைக் கூறுதல் இவர்க்கு வழக்காம்"[37] எனக் கூறும் கருத்து கருதத்தக்கதாகும்.

தமிழர்க்கு இலக்கணக் கருவூலமாக விளங்கும் தொல்காப்பியம் எழுத்து,சொல், பொருள் என்ற மூவதிகாரப் பகுப்பையும், ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களையும் கொண்டுள்ளது. பொருளதிகாரம் எழுத்து, சொல் இவற்றிற்கு அடுத்தாற் போல் அமைந்துள்ளது. தொல்காப்பியத்தின் வைப்பு முறையை, "இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின் பொருளதிகாரம் என்னும் பெயர்த்து. இது பொருள் உணர்த்தினமையின் பெற்ற பெயர் நிறுத்த முறையானே எழுத்தும் சொல்லும் உணர்த்தினார். இனிப் பொருள் உணர்த்த வேண்டுதலின் இவ்வதிகாரம் பிற்கூறப்பட்டது. பொருள் என்பது யாதோ எனின் மேற்சொல்லப்பட்ட சொல்லின் உணரப்படுவது"[38] என்று இளம்பூரணரும், "எழுத்துஞ் சொல்லும் உணர்த்தி அச்சொற்றொடர் கருவியால் உணரும் பொருள் உணர்த்தலின் மேலதிகாரத்தோடு இயைபுடைத்தாயிற்று"[39] என்று நச்சினார்க்கினியரும் இயைபுபடக் குறித்திருப்பது எண்ணத்தக்கதாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஒன்பது இயல்கள் உள்ளன. அவற்றுள், 1.அகத்திணையியல் 2.புறத்திணையியல் 3.களவியல் 4.கற்பியல் 5.பொருளியல் ஆகிய ஐந்தும் இலக்கியத்தின் பாடுபொருளை விளக்குகின்றன. மெய்ப்பாட்டியல், உவமவியல்,செய்யுளியல்,மரபியல் எனும் நான்கும் இலக்கிய வடிவம், யாப்பு,அணி முதலியவற்றை விளக்குகின்றன. தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் இலக்கியவியல் என்னும் தன்மையது. இலக்கியத்திற்கு அடிப்படையாய் அமைவன கருத்து, கற்பனை, உணர்ச்சி, வடிவம் என்பன. இவை குறித்துப் பொருளதிகாரத்தில் கூறப் பெற்றுள்ளன. தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியல் என்பது போர் பற்றிய செய்திகளை மிகுதியாகக் கூறுகின்றது. சமுதாய வாழ்க்கை குறித்தும் கூறுகிறது.

அகம், புறம் என்ற இரண்டும் வாழ்வியலுடன் பொருந்தியுள்ள தன்மையை உணர்ந்த அ.ச. ஞானசம்பந்தன், "தொல்காப்பியர் வகுத்துள்ள பொருளதிகாரத்துக்கு ஒப்பான இலக்கணம் எங்கும் இல்லை. இப்பொருளதிகாரம் வெறும் மொழிக்கும் மொழியாலாகிய இலக்கியத்திற்கும் மட்டும் இலக்கணம் வகுக்கவில்லை.

அம்மொழியைப் பேசும் மக்களுக்கும், அவர்கள் வாழ்க்கை முறைக்கும் கூட இலக்கணம் வகுத்தது. இதனால் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஒரு சமுதாய நூல் என்று கூடக் கூறலாம்"[40] என்று பாராட்டுவதால் அறியலாம்.

தொல்காப்பியரின் பொருளதிகாரம் என்ற ஒன்றின் மூலமாக யாப்பு, அணி,நிகண்டு, பாட்டியல் என்ற பல்வேறு இலக்கண நூல்கள் பிற்காலத்தில் தனித்தனியே கிளைத்தமையால் ஏனைய அகப்பொருளும், புறப்பொருளும் பொருளிலக்கணம் என்ற நிலையை அடைந்தன. அகம், புறம் இரண்டும் மேலும் விரிந்து தோன்றுவதற்குக் காரணமாயின.மேலும், அ.மா. பரிமணம், "தமிழ் மொழியின் எழுத்து, சொல் ஆகியவற்றின் இலக்கணங் கூறும் அதிகாரங்கட்கப்பால் தமிழ் வாழ்வின் நெறிமுறை கூறும் பொருளதிகாரத்தில்தான் நிறைவு பெறுகின்றது. பொருளதிகாரம் என்னும் பெயரில் பொருள் என்னும் சொல், அகமெனவும் புறமெனவும் அமைந்து கிடக்கும் வாழ்க்கையைச் சுட்டி நிற்கக் காண்கிறோம்"[41] எனக் கூறும் கருத்து குறிக்கத்தக்கதாகும்.

சோ.ந.கந்தசாமி அவர்களும் பின்வருமாறு விளக்கமளிக்கின்றார். "தமிழ் மக்களின் இன்ப வாழ்க்கையின் இலக்கணமாக அமையும் அகத்திணை மரபுகளும் புறத்திணை மரபுகளும் தமிழ் மொழியில் மட்டுமே வரையறையும், செப்பமும் பொருந்த விரித்துக் கூறப்பெற்றன என்பது அறிஞர் பலர்க்கும் ஒப்பமுடிந்த கருத்தாகும்".[42] புறம் என்பது பரந்துபட்ட பொருளாகும். அகத்துள் கூறாது ஒழிந்தனவெல்லாம் புறம் என்று குறிக்கப்பெறும். இது பரந்துபட்ட பொருளைக் குறித்தலும் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் அகத்திணை செய்திகளை நோக்க, புறம் சிறுபான்மையாகவே இடம் பெற்றுள்ளது. எனினும் பழந்தமிழர் வீரம்,மேம்பாடு, போர் நெறி முதலான பல செய்திகளின் களஞ்சியமாகப் புறத்திணை விளங்குகிறது.

**அகத்திணைகளும் புறத்திணைகளும்**

அகத்திணைகள் ஏழற்கும் ஏழு புறத்திணைகளை இணைத்து இன்னின்ன அகத்திணைகளுக்கு இன்னின்ன புறத்திணைகள் உரியனவாகும் எனப் பிரித்து விளக்கியுள்ளமையை முன்னர்க் கண்டோம்.

தொல்காப்பியர் புறத்திணையியலின் முதல் நூற்பாவில்

**"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்**
**வெட்சி தானே குறிஞ்சியது புறனே ;**
**உட்குவரத் தோன்றும் ஈர்ஏழ் துறைத்தே"** [43]

என்பதன் மூலம் அகத்திணை இலக்கணத்தை முழுமையாக உணர்ந்தோர் மட்டுமே புறத்திணை இலக்கணத்தைச் சிறப்பாக அறிய இயலும் என்ற கருத்தினைக் கூறுகிறார்.

தொல்காப்பியர் அகப் புறப் பொருள்களைப் பிரித்து விளக்கியுள்ள அடிப்படையில் புறத்திணைப் பாகுபாடுகளைக் காண்போம்.

**குறிஞ்சியும் வெட்சியும்**

அகத்திணைக்குரிய குறிஞ்சி, புறத்திணையாகிய வெட்சி என்னும் திணை ஒழுக்கத்தைத் தனக்குப் புறத்திணையாகக் கொண்டமைக்கு நுண்ணிய காரணங்கள் உண்டு. தொல்காப்பியர்,

**“வெட்சி தானே குறிஞ்சியது புறனே**
**உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே”** [44]

என்று கூறுவார். இந்நூற்பாவால் வெட்சித்திணைக்குரிய இடத்தையும், துறையையும் வரையறுத்துக் கூறியுள்ளார். வெட்சி என்ற புறத்திணை குறிஞ்சி என்ற அகத்திணைக்குப் புறமாக அமைந்தமைக்குரிய காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்.

- ❖ பகை நாட்டினர் ஆநிரைகளைக் கவர்ந்து கொள்ளுதல் என்பது பசுக்கள் மேயும் குறிஞ்சி நிலத்தில் கோட்டைக்கு வெளியே (காவல் காட்டில்) கட்டப்பட்டுள்ள ஆநிரைகளைக் கவர்வதால் அது குறிஞ்சிக்குப் புறமாயிற்று எனலாம்.
- ❖ மகளிர் உள்ளத்தை இளைஞன் ஒருவன் களவாடுவதே குறிஞ்சித் திணை. அதே போல் ஒரு மன்னன் ஆநிரைகளை, வேற்று மன்னன் இரவு வேளையில் கவர்ந்து வருதல் வெட்சித் திணையாகும்.

**முல்லையும் வஞ்சியும்**

வஞ்சியாகிய புறத்திணை முல்லையாகிய அகத்திணைக்குப் புறமாகும். மாற்றார் நாடெல்லாம் தனக்கே வேண்டுமென்று நினைத்துப் போருக்குச் சென்ற வேந்தனை, ஒரு மன்னன் அஞ்சாது எதிர் சென்று போர் செய்ய முற்படுவதை வஞ்சி கூறும். இதனைத் தொல்காப்பியர், வஞ்சி தானே முல்லையது புறனே எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே (புறத்திணையில்,6) என்று கூறுவார். இத்திணையை முல்லைத் திணைக்குப் புறமாகக் கூறியதற்கு நுண்ணிய காரணம் உண்டு. படையெடுத்துச் செல்லும்போது படை இளைப்பாறவும் நீர் அருந்தி, உணவு சமைத்து உண்ணவும், நிழல் சூழ்ந்த இடம் தேவைப்படும். நிழல் சூழ்ந்த காடும், கார் காலத்தில் வேண்டுமளவு நீரும் தேவைப்படுவதால் முல்லைக்கு வஞ்சி புறத்திணையாயிற்று. மேலும் தலைவனுக்காகக் காத்திருக்கும் தலைவியின் நிலையும் இங்குப் போர்க்களத்தில் வெற்றிக்காகக் காத்திருக்கும் வீரனுக்குப் பொருந்தும்.மேலும்,

**“உழிஞை தானே மருதத்துப் புறனே**
**முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்**
**அனைநெறி மரபிற்று ஆகும் என்ப”** [45]

என்று தொல்காப்பியர் உழிஞைத் திணையை மருதத்துக்குப் புறத்திணையாகக் கூறுவார். அரண் என்பது இயற்கையான, மற்றும் செயற்கையான அரண்களாகும். உழிஞைத் திணை மருதத்திற்குப் புறமாதற்குரிய காரணம் வருமாறு வஞ்சியில் போரிட்டுத் தோற்ற வேந்தன், தன் நாடு சென்று அரண்மனைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டிருப்பான். போரிட்டு வென்ற வேந்தன் அவன் நாட்டில் புகுந்து இரவில் முற்றுகையிடுவான். போரிடும் காலம் விடியற்காலமாகும். மருதத் திணையில் ஊடல் கொண்ட மகளிர், கணவன் மார்களுக்குக் கதவடைத்துத் தனிமையில் இருப்பர். தலைவனும் விடியற்காலையில் வந்து கதவினைத் திறந்து உள்புக நினைப்பது மருத ஒழுக்கமாகும். இதனால் உழிஞையும் மருதமும் இணையாயின.

**நெய்தலும் தும்பையும்**

தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறமாகும். இருபெரும் வேந்தரும் ஒரு களத்தில் போரிடுவர். அதற்குக் களரும் மணலும் பரந்த நிலமே போரிடும் களமாக அமையும். அவ்வாறு போரிடுவதற்குப் போதிய இடம் கடலைச் சார்ந்த மணல் பகுதியாக இருப்பது சிறப்புடையது கதிரவன் மறையும் காலம் போர் முடியும் நேரமாகும். எனவே நெய்தலுக்கு உரிய எற்பாடு நேரமே தும்பைக்கும் உரியதாயிற்று. மேலும் போர்க்களம் சென்ற காதலன் உயிருடன் திரும்பி வருதல் அவ்வளவு உறுதியில்லை. எனவே நெய்தலின் உரிப்பொருளாகிய இரங்கலும் இரங்கல் நிமித்தமும் தும்பைக்குப் பொருந்துவதாயின.

இதனைத் தொல்காப்பியரும்

**"தும்பை தானே நெய்தலது புறனே**
**மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை அழிக்கும் சிறப்பிற்று என்ப"** [46]

என்று உரைப்பர்.

**பாலையும் வாகையும்**

வாகை தானே பாலையது புறனே தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப் பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப (புறத்திணையில், 15) என்று தொல்காப்பிய நூற்பா கூறும். வாகை என்பது வெற்றியைக் குறிக்கும். வாகைத் திணை பாலை என்னும் அகத்திணையினது புறமாகும். பாலைக்கு வாகை எவ்வாறு புறமானது என்பதற்குக் கீழ்வரும் காரணங்களைக் கூறலாம்.

- பாலை தனக்கென ஒரு நிலமின்றி எல்லா நிலத்திலும் வறட்சிக் காலத்தில் உருவாகும். அதுபோல வாகையும் எல்லா நிலத்திலும் நிகழ்வது.
- காதலுற்ற தலைவனும் தலைவியும் புணர்ச்சியினின்று நீங்கி இல்லறம் நிகழ்த்தி, பொருள் தேடுவதற்காகப் பிரிவது பாலைத்திணையாகும்.

*வாகையில் புகழ் எய்துவதற்காக, வெற்றி பெற்ற வேந்தன் துறக்கம் (வீடுபேறு) பெறும் கருத்தினால் பிரிவான். எனவே இரண்டிலும் பிரிவு உண்டு.*

- ❖ *பாலை அறக் காதலை வளர்த்து, மீண்டும் இன்பத்தை மிகுவிப்பது போல, வாகை மறக் காதலை வளர்த்து வெற்றி இன்பம் விளைவிப்பதாலும், பாலை போல வாகையும் குறிப்பிட்ட நிலம் என்ற வரையரையின்றி எங்கும் நிகழுவதலாலும் இரண்டும் ஒப்புமையாயின.*

- ❖ *பாலைக்குரிய பெரும்பொழுதும், சிறுபொழுதுமே போர் நிகழ்ச்சி முடிவு பெறுதற்குச் சிறந்தனவாதலின் நிலம், பொழுது என்னும் இரண்டு முதற்பொருள்களால் வாகை பாலைக்குப் புறமாயிற்று. எத்துறையிலும் வெற்றி காண வேண்டுமாயின் தலைவியைப் பிரிந்தே ஆதல் வேண்டும். எனவே உரிப்பொருளாலும் புறமாயிற்று.*

***கைக்கிளையும் பாடாண் திணையும்***

*பாடாண் திணையானது கைக்கிளைக்குப் புறத்திணையாகும். கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கோ, ஒரு பொழுதுக்கோ உரியதாகாமல் எல்லா நிலத்திற்கும், எல்லாப் பொழுதுக்கும் உரிய ஒருதலைக் காமமாகும். அதுபோல இதுவும் ஒரு பாலுக்கு உரியது அன்று. ஒருவனை ஒருவன் ஏதேனும் காரணம் பற்றிப் பாராட்டி நிற்பது பாடாண் திணையாகும். வெட்சி முதல் வாகை ஈறாக உள்ள திணைகள் போர் தொடுப்போரும் எதிர்ப்போருமாகிய இருவருக்கும் உரியது; காஞ்சியாவருக்கும் உரியது; அவ்வாறு இல்லாமல் பாடாண் திணை பாடப்படுபவர், பாடுபவர் என்னும் இருவருள் பாடுவோர் விருப்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருத்தலின் கைக்கிளை போல இதுவும் ஒருவர் விருப்பமாயிற்று. இதனைத் தொல்காப்பியர்,*

> ***"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே***
> ***நாடுங் காலை நாலிரண்டு உடைத்தே"*** [47]

*எனக் கூறுவார்.*

***பெருந்திணையும் காஞ்சியும்***

*காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும். காஞ்சித்திணை அகத்திணையாகிய பெருந்திணைக்குப் புறத்திணையாகும். அது நன்று அல்லாத சிறப்பினை உடையது; மேலும் நிலைபேறில்லாத இவ்வுலகத்தைப் பற்றிய வழியினைக் கூறுவது ஆகும். நன்றல்லாத சிறப்பாவது செயலால் நன்றல்லாதது போல் தோன்றி, கொள்கையால் சிறந்திருத்தல். அன்பின் ஐந்திணைகளில் பெருந்திணையாகிய மடல் ஏறுதல் போல்வன வரின் அவற்றிற்குப் புறமாக ஒதுக்கப்படுதல் போல, வெட்சி முதலிய புறத்திணைகளில் நிலையாமை உணர்வு வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுதலின், காஞ்சி பெருந்திணைப் புறமாயிற்று. இதனைத் தொல்காப்பியர்,*

***“காஞ்சி தானே பெருந்திணைப் புறனே***
***பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்***
***நில்லா உலகம் புல்லிய நெறித்தே.”*** [48]

*எனக் கூறுகிறார். தொல்காப்பியம் ஓரியற்கண் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி,பாடாண் என்னும் முறை வைப்பில் புறப்பொருளை விளக்குகிறது. முப்பத்தாறு நூற்பாக்களில், அகத்திணை ஏழனுக்குப் புறனாகப் புறத்திணை ஏழும் விளக்கப் பெறுகின்றன. புறப்பொருளைக் குறிஞ்சி முதலாய ஐந்து அகத்திணைகள் போலவே மலர்க்குறியீட்டால் (பாடாண் நீங்கலாகக்) கூறுவதும் எண்ணத்தக்கது. தொல்காப்பியர் முந்து இலக்கணமும் தம் கால வழக்கும் நன்குணர்ந்து திணை அறிமுகம், புறனாதல், விளக்கம், துறையமைதி என்ற நிலையில் புறத்திணையை விளக்குகிறார்.*

*அகமும் புறமும் எனச் செழித்த பொருளிலக்கணச் சிறப்பை ந.சுப்புரெட்டியார், “அமிழ்தினும் இனிய தமிழ் மொழியின் தனிச்சிறப்பு அதில் அமைந்துள்ள பொருள் இலக்கணம் ஆகும். பிற மொழிகள் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் கொண்டனவே அன்றி மக்கள் வாழ்வியலை ஆராய்ந்த பொருள் இலக்கணமும் கண்டவை அல்ல. பொருள் இலக்கணமும் அகம், புறம் என்னும் இருதிணை வடிவு அமைந்ததாகத் தமிழ் மொழி ஒன்றின் கண்ணேதான் நின்று இலங்குவதாகப் பன்மொழி அறிஞர்களும் ஒருமுகமாக ஒப்புக்கொண்டுள்ளனர்”*[49] *என்று கூறுவது கருதத்தக்கது.*

***பன்னிரு படலம்***

*புறப்பொருள் இலக்கணத்தைக் கூறுகிற பன்னிரு படலம் என்னும் பெயருள்ள நூல் இருந்தமை உரையாசிரியர்களால் தெரிய வருகிறது. இந்நூலைப் பின்பற்றி இதற்கு வழிநூலாகப் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் இயற்றப்பெற்றது. தொல்காப்பியர் கூறிய ஏழு புறத்திணைகளைப் பன்னிரண்டாகக் கூறியது இந்நூலின் ஆசிரியரே. அகத்திய முனிவரின் மாணாக்கர் பன்னிருவர் சேர்ந்து புறப்பொருள் இலக்கணம் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு படலம் இயற்றினர். அவர்கள் இயற்றிய நூலே பன்னிரு படலம் என்பதாகும். இதன் வெட்சிப் படலம் தொல்காப்பியரால் படைக்கப்பெற்றது என்னும் கருத்தை இளம்பூரணர் தம் பொருளதிகார உரையில் விளக்கமாக மறுக்கிறார். இந்நூல் கூறிய புறப்பொருள் மரபுகளை உள்ளபடி அறிய முடியாவிடினும் இதன் வழி நூலாகிய புறப்பொருள் வெண்பாமாலையைக் கொண்டு உணரலாம்.*

***புறப்பொருள் வெண்பாமாலை***

*தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் புறப்பொருளுக்குப் புறத்திணையியல் என்ற ஒரே இயலினை வகுத்துள்ளது. தமிழில் இன்று கிடைக்கும் பல்வேறு இலக்கண நூல்களுள் புறப்பொருள் சார்ந்து அமைந்த ஒரே நூல் புறப்பொருள் வெண்பாமாலை. இதன் ஆசிரியர் ஐயனாரிதனார். இவர் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு ஆகும்.*

தொல்காப்பிய அடிப்படையில் புறப்பொருள் அமைந்தாலும் பன்னிருபடலம் படைத்துக்கொண்ட மரபை இந்நூலாசிரியர் போற்றியுள்ளார். புதுத்திணைகள், புதுத்துறைகள், பழந்துறைகள் எனப் பல்வேறு நிலைகளில் புறப்பொருளில் ஏற்பட்ட புதிய மரபுகளை இந்நூலாசிரியர் கூறியுள்ளார்.

**வீரசோழியம்**

கி.பி.11ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரனார் என்பவரால் இந்நூல் இயற்றப்பட்டது. இது, ஐந்து அதிகாரங்களைக் கொண்டது. இதுவே தமிழில் கிடைக்கும் ஐந்து இலக்கணம் பேசும் நூல்களில் காலத்தால் முந்தியது எனலாம். இந்நூலின் நான்காவது அதிகாரம் யாப்பதிகாரம் ஆகும். நூலில் 105 முதல் 140 வரையிலான பகுதியில் யாப்பியல் செய்திகள் பேசப் பெற்றுள்ளன. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை ஆகியனவற்றைப் புறம் என்றும், வாகை, பாடாண், பொதுவியல் ஆகியனவற்றைப் புறப்புறம் என்றும் பகுக்கிறது. கைக்கிளை, பெருந்திணைகளை அகப்புறம் என்றும் கூறுகிறது. இது புறப்பொருள் வெண்பாமாலை நெறியில் அமைகின்றது. புறப்பொருள் வெண்பாமாலை போல விரிவு பெறாது ஒவ்வொரு திணைக்கண்ணும் இடம்பெறும் துறைகளைத் தொகுத்தளிக்கின்றது.

**இலக்கண விளக்கம்**

இந்நூல் திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் கி.பி.17ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்றது. இஃது ஓர் ஐந்திலக்கண நூல். இதற்கு நூலாசிரியரே உரையும் எழுதியுள்ளார். இந்நூல்பொருளதிகார புறத்திணையியலுள் தொல்காப்பியம் கூறிய ஏழு வகைகளைக் கூறுகிறது. அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை,காஞ்சி, பாடாண் என்பனவாகும். இந்நூல் இருபத்தொரு நூற்பாக்களில் புறப்பொருளை விளக்குகிறது.

**தொன்னூல் விளக்கம்**

வீரமாமுனிவர் இந்நூலின் ஆசிரியராவார். இத்தாலி நாட்டைச் சார்ந்த இவர் சமயம் பரப்பத் தமிழகத்திற்கு வந்தார். தமிழைக் கற்று, இம்மொழியில் பல நூல்களைச் செய்துள்ளார். இவர் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு. தொன்னூல் விளக்கம் செய்த இவர், தாமே இந்நூலுக்கு ஓர் உரையும் செய்துள்ளார். இந்நூல் நூற்பா யாப்பினால் ஆனது. இதன்கண் 201 முதல் 250 வரை உள்ள நூற்பாக்களில் யாப்புப் பற்றிப் பேசியுள்ளார். அகப்பொருளையும், புறப்பொருளையும் ஒரே நூற்பாவில் கூறுகிறது. வெட்சி, கரந்தை, வஞ்சி,காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை என்று ஏழு திணைகளின் பொருண்மையைக் கூறுகிறது.

**முத்துவீரியம்**

முத்துவீர உபாத்தியாயர் என்பவரால் இந்நூல் இயற்றப்பட்டது. திருச்சி உறையூரைச் சார்ந்த இவர் கி.பி.19ஆம் நூற்றாண்டினர். நூலாசிரியர் பெயராலேயே

இந்நூல் வழங்கப் பெறுகிறது. இது ஐந்து இலக்கணங்களையும் பேசுகிறது. பொருளதிகாரத்தில் இவர் புறப்பொருள் பற்றிப் பேசவில்லை. அகப்பொருளை மட்டுமே பேசியுள்ளார். யாப்பு அதிகாரம் என்பது மூன்று இயல்களுடன் 267 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. தொல்காப்பியம் அகத்திணையியல், களவியல் இடையே புறத்திணையியலை அமைத்தது போல முத்துவீரியமும் அகவொழுக்கவியல், களவொழுக்கவியல் இடையே பத்து நூற்பாக்களில் புறப்பொருளை விளக்குகிறது. இப்பகுதியில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை,வாகை என்னும் புறத்திணைகளை இந்நூல் கூறுகிறது.

**சுவாமிநாதம்**

இந்நூலின் ஆசிரியர் சுவாமிநாத கவிராயர் என்பவராவார். இவர் காலம் கி.பி.19ஆம் நூற்றாண்டு. இவர் நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சியில் பிறந்தவர். இந்நூல் ஆறு அதிகாரங்களை உடையது. கிடைத்துள்ளவை 202 செய்யுள்கள். அந்தாதித்தொடையில் இவற்றை ஆசிரியர் இயற்றியுள்ளார். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை,காஞ்சி, பாடாண், பொதுவியல் என திணைகளின் வகைகளைக் கூறுகிறது. இலக்கண விளக்கம் போன்று ஓரளவு விரிவாகப் புறப்பொருளைக் கூறும் நூலாகச் சுவாமிநாதம் அமைகிறது. இலக்கண விளக்கம் போன்றே வெட்சியுள் கரந்தைக் கூறுகளையும் உழிஞையில் நொச்சியினையும்,காஞ்சியில் நிலையாமை, எதிரூன்றல் என இருவகைப் பொருட் கூறுகளையும் இணைத்துக் கூறுகிறது. இவற்றுடன் பொதுவியல் கூறுகளையும் இணைத்துக் கூறுகிறது.

**அறுவகை இலக்கணம்**

தொல்காப்பியம் தொடங்கி சுவாமிநாதம் வரையில் இலக்கண நூல்கள் பலவும் ஒரே நெறியில் போர் வகை, நிலையாமை, வெற்றி, புகழ் ஆகியவற்றையே புறப்பொருள் கூறுகளாக விளக்கியுள்ளன. ஆனால் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் நிலத்தியல்பு, வருணத்தார் இயல்பு, உயிரின இயல்பு, கருவிகளின் இயல்பு, பிரபஞ்ச இயல்பு எனப் புறப்பொருளைக் கூறுதல் மரபிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தொல்காப்பியம் தொடங்கிப் பல்வேறு இலக்கண நூல்களும் பொருளிலக்கணத்தை விளக்கி வந்துள்ளன. பிற்கால இலக்கணங்களின் போக்கைத் தமிழண்ணல், “பிற்கால இலக்கண ஆசிரியர்களிற் சிலர் எழுத்து சொல்லோடு நின்றுவிட்டனர். மூன்றாவதான பொருளையும் எழுதியவர்கள்கூட முன்னைய தொல்காப்பியக் கருத்துக்களைத் திரும்பவும் சுருக்கமாகக் கூற முயன்றனரே தவிர, புதுமை படைக்கவோ முன்னதை மேலும் விளக்கவோ முயன்றிலர்”[50] என்கிறார். எனினும் தொல்காப்பிய நூலைப் பின்பற்றித் தம் கால மாற்றத்தைத் தம் நூலில் பிரதிபலிக்கும் நூல்களாகப் புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள் இரண்டும் திகழ்கின்றன. மேலும், இடைக்கால அக, புற இலக்கணக் கல்விக்கு இவ்விரு நூல்களும் சிறந்தனவாக விளங்குகின்றன.

இந்நூல்களை அடியொற்றிப் பிற்கால இலக்கண நூல்களும் பின்பற்றியுள்ளன என்பதும் மறுக்க இயலாதது.

**புறத்தில் அகம்**

இதுகாறும் புறப்பொருள் குறித்த இலக்கணங்களைக் கண்டோம். இனி புறப்பொருள் பற்றிப் பேசும் இலக்கியங்களை ஆராய்வோம். அகம் அல்லன அனைத்தும் புறம் என இயம்பப் பெறும். இப்பொருள் அங்கதம், புகழ்வது போல் பழித்தல், வேற்று பொருள் வைப்பு என்று இலக்கிய அழகுகளைப் பெற்றுச் சிறக்கின்றது. புறப்பொருள் பாடல்களை ஆராயும்போது அவற்றை பின்வரும் அமைப்பு முறையில் உள்ளனவாகக் கருதலாம்.

1. தலைமை மாந்தர் பெயர் வெளியிடாமை
   (அடிக்குறிப்புகளில் அறிகிறோம்)
2. காதல் உணர்வுகளை வெளிப்படுத்துதல்
   (காவற்பெண்டு, நக்கண்ணையார் பாடல்கள்)
3. உள்ளுறையைப் பயன்படுத்துதல்
   (புறம் 23,200,203. கொடுமையைக் குறிக்க)
4. அணிகளைப் பயன்படுத்துதல்
   (உவமை, உருவக அணிகள்)

என்ற அக அமைப்பு முறை புறப்பாடல்களிலும் கலந்து வருதல் உண்டு. இவ்வாறு புறப்பாடல்கள் வெறும் போரினை மட்டும் குறிப்பிடாமல் பல்வேறு சம்பவங்களையும் இணைத்துப் பல்சுவை பெட்டமாக விளங்குகிறது.

**அகத்தில் புறம்**

புறச்செய்திகள் அல்லாத அகநூல்கள் குறைவு. அகநானூற்றில் 149 பாடல்கள் வரலாற்றுச் செய்திகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளன. மேலும், அகப்பொருள் பாடல்களுக்குப் புறப்பொருள் தரவுகளே நீட்சியை வழங்கியுள்ளமை உணரத்தக்கது. பிற நூல்களான நற்றிணையில் 58 வரலாற்று குறிப்புகளும். குறுந்தொகையிலும் 28 பாடல்களில் வரலாற்றுச் செய்திகளும். கலித்தொகையில் பல இதிகாசச் செய்திகளும், குறிஞ்சி, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலையில் புறப்பொருள் செய்திகள் நூலின் நீட்சிக்கும் சுவை திரட்சிக்கும் ஆதாரமாக அமைந்துள்ளமையைக் காண்போர் உணர்வர். எனவே அகமும் புறமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றது. அகப்பாடல்களே மிகுதி என்று, சங்கப் பாடல்களை "தமிழ்க்காதலில்" கூறிய வ.சு.ப மாணிக்கனாரின் கூற்று எற்புடையது எனினும் ஆழ்ந்து நோக்கும்போது, அகப்புற வாழ்வு இணைந்தது; பிரித்தறிய முடியாதது, வெறும் அகம் மட்டுமெனில் இனிப்புசுவை திகட்டுதல் போல, காரச்சுவை கரித்தல் போல, அளவான இனிப்புடன், அளவான காரமும் நம் நா ஏற்பதைப் போல அகமும் புறமும் அகத்தில் புறமும், புறத்தில் அகமும்

இணைந்து சிறப்பதைக் கண்டோம். இனி புறப்பொருளைப் பாடும் இலக்கியங்களைக் காண்போம்.

***புறப்பொருள் நுவலும் இலக்கியங்கள்***

*புறப்பாடல்களைப் பாடுதல் எளிதன்று அஃது. ஆழ் மனதில் ஊற்றெடுத்து. அடுத்திருப்போரை அகமகிழச் செய்யும் வண்ணம் எளிய, அருமைத்தான நடையில் ஏற்றுக் கொள்ளும் பொருண்மையுடன் விளங்குதல் வேண்டும்.*

***சங்கப்பாடல்கள் அறிமுகம்***

*தமிழகத்தில்தான் உலகில் முதல் மனிதன் பிறந்திருக்க வேண்டும் என்று பாவாணர் கருதுகிறார். அவருடைய கூற்றின் உண்மை நோக்கியே ஆதிமனிதனின் உடற்கூறுகளைக் கண்டறியும் நோக்கில் டி.என்.ஏ எனப்படும் மரபணு பரிசோதனை நடைபெற்று வருகிறது. அப்பரிசோதனையில் உலகின் தொல்குடிகள் என்பது ஆப்பிரிக்கர்களைக் குறிக்கும் என்றும், தற்போது அதன் வேர்கள் தமிழ் மாந்தர்களிடம் உள்ளது என்பதும், குமரிக்கண்டம் என்பது இந்தியப் பெருங்கடலில் மறைந்த லெமூரியாக் கண்டம் என்றும் அறிவியலாளர்கள் சுட்டுவது இவண் ஆழ்ந்து நோக்கத்தகும்.*

*இது மட்டுமன்றி பிற மொழிகளின் தோற்றம் உள்ள காலத்திலேயே தமிழுக்குச் சங்கம் வைத்து வளர்த்தமை அம்மொழியின் தொன்மையையும் அம்மொழியியலாளரின் பண்பட்ட நாகரிகத்தையும் விளக்கும்.*

***சங்கம் – சொல் விளக்கம்***

*சங்கம் என்னும் சொல் தமிழ் இல்லை என்று கூறுவோர் உளர். "சகரக் கிளவி மொழி முதல் வாரா" என்ற தொல்காப்பிய செய்யுளுக்குச் சான்று காட்டுவர். இது பொருத்தமானதே எனினும், சங்கம் என்னும் சொல்லில் முற்கால அமைப்புகள் குறிப்பிடப்படவில்லை. அவை மன்றம், கூடல் ஆகிய பெயர்களில் வழங்கி வந்திருக்க வேண்டும். இந்த சங்கம் பற்றிய செய்திகள் முதன்முதலில் இறையனார் களவியல் உரையில் தான் குறிப்பிடப்படுகின்றன. வில்லிப்புத்தூரார் "நன்றறிவார் வீற்றிருக்கும் கூடல்" என்று மதுரையைப் புகழ்வது இவண் சுட்டத்தகும்.*

*கடல் கோளினால் (சுனாமி, ஆழிப் பேரலையால்) மறைந்த தென் மதுரையில் முதற் சங்கம் நடைபெற்றது. இதனைச் சிவபெருமான், அகத்தியர், முருகக் கடவுள், முரஞ்சியூர் முடிநாகராயர், குபேரனார் உள்ளிட்ட 449 பேர் அதிலிருந்து தமிழ் வளர்த்தனர் என்பர். 4449 புலவர் 4440 ஆண்டுகள் இத் தலைச்சங்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது.*

*வித்துவான் வெள்ளைவாரணர் "மகாபாரத காலத்திற்கு முன் வாழ்ந்தவர் தொல்காப்பியர் என்றும், இவரே இடைச் சங்கத்தின் பிற்பகுதியிலும் இடைச் சங்கத்தின்*

*முதலிலும் வாழ்ந்தவர் என்று குறிப்பிடுகிறார்". (வெள்ளைவாரணார். க 1978, ப -11, தமிழ் இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை)*

*அடுத்ததாக இடைச் சங்கம் தோன்றி வளர்ந்தது கபாடபுரத்தில் ஆகும். இதுவே கடல் கோளிற்குப் பின்னர் உருவான தென்நாட்டினரின் (பாண்டியரின்) தலைநகரமாகும். வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை 59 பேர் பாண்டியரின் புரவலர்களாக இருந்தனர். அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழியார், மோசியார், வெற்றூர்க் காப்பியனார், சிறுபாண்டரங்கனார், திரையன் மாறனார், துவரைக் கோன், கீரந்தையார் முதலிய 59 பேர் இடைச் சங்கத்திலிருந்து தமிழை ஆய்ந்தனர். இச்சங்கப் புலவர்கள் 3700 பேர் ஆவர். கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, முதலிய நூல்கள் அவர்கள் பாடியவை ஆகும். இச்சங்கம் 3000 ஆண்டுகள் நடைபெற்றது என்பர்.*

*மூன்றாம் சங்கம் தோன்றக் காரணம் இரண்டாம் சங்கம் கடல்கோளினால் அழிந்த நிலையே ஆகும். இச்சங்கத்திலும் 49 புலவர்கள் அமர்ந்து தமிழாராய்ந்தனர். இவர்கள் இயற்றியவையே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும்.இச்சங்கம் 1850 ஆண்டுகள் நடைபெற்றது என்பர். இச்சங்கம் பற்றிய செய்திகளைத்தரும் நூல் இறையனார் களவியல் உரையாகும். இதில் கூறப்படும் தகவல் அனைத்தும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல எனினும் உயற்வு நவிற்சியைப் புறக்கணித்து விட்டு உண்மையை ஆராய வேண்டும் என்பதை வள்ளுவச் சான்றுடன் நவில்வது சிந்திக்கத்தக்கது.*

***"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்பது அறிவு " (குறள் – 355)***

*என்பது நியதி. எனவே இப்புராண வரலாறுகளை நன்கு ஆராய்ந்து அவற்றுள் உண்மையைக் காண்பதே பொருத்தமானதாகும்." (கே.கே.பிள்ளை ப - 77, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1972)*

*பல்வேறு இலக்கிய வகைகளின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்வது சங்க இலக்கியம் எனில் அதில் ஐயமில்லை.*

***சங்கப் பாடல் பாடியோர்***

*சங்க காலப் பாடல்களை உற்று நோக்கினால் அதில் மரபுக் கட்டமைப்பு, பொருள் ஆழம், இலக்கிய அழகுகள் ஆகியன இடம்பெற்று இருப்பதை அறியலாம். இவை அனைத்தும் தமிழைத் தெளிவுறக் கற்றோராலேயே இயற்றப்பட்டிருக்கக் கூடும். அக்காலத்தில் கல்வி என்பது கண்டிப்பாக இலக்கியங்களைக் கற்றல் என்பதிலேயே நிறைவுற்றுள்ளது. அது குறிப்பிட்ட சமயம். இனம் ஆகியவற்றைச் சார்ந்ததாக இருக்கவில்லை. ஆனால் சங்கப்பாடலைத் தொகுத்தோர் குறித்து நோக்கும் போது அவர்கள் அந்தணர், (கபிலர்) குறி கூறும் குறத்தி (குறமகள் இளவெயினி) உள்ளிட்ட அனைத்துச் சமூகத்தினரும் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரியவரும். கல்வி இல்லாமல்*

ஒரு இலக்கியத்தைப் படைத்தல் என்பது சாத்தியமில்லாத ஒரு செய்தி எனலாம். எனவே சமூகத்தின் அனைத்து நிலையினரும் கவிதை இயற்றியிருத்தல் வேண்டும் என்பது திண்ணம். எனவே சங்க இலக்கியத்தில் அரசர், கணக்கர், அந்தணர், வணிகன், குறமகள் உள்ளிட்ட (சமூகப் பரவலான) மக்கள் இடம் பெற்றிருப்பதால் இது ***மக்கள் இலக்கியமாகத்*** திகழ்கிறது.

**நூல் தொகுப்பு**

பல்வேறு காலங்களில் பாடப்பட்டிருக்க அவற்றில் உள்ள பாடல்களைத் தொகுத்தல் என்பது மிக போற்றத்தக்க முயற்சி எனில் மிகையில்லை. தொகுத்தல் என்னும் உணர்வு எப்போது தோன்றியிருக்க வேண்டும் என்பதை ஆராயும் போது தொல்காப்பியம் தோள் கொடுக்கிறது.

**"தொகுத்தல் விரித்தல் தொகை விரி மொழி பெயர்த்து**
**அதர்ப்பட்ட யாத்தலோடு அனைமர பினவே" (தொல்- மரபி -99)**

என்ற வரிகளில் நூல்களின் வகைகளைச் சுட்டும் போது தொகைநூல்கள் குறித்துக் குறிப்பிடுகிறார். அவ்வகையில் நூல்களைத் தொகுத்தல் தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கி விட்டது என்று கருதலாம். எட்டுத்தொகை உள்ளிட்ட நூல்களின் தொகுப்பிற்கு, காரணம் அவர்கள் நூல்களைக் காக்க வேண்டும் என்பதாக இருக்கலாம். கடலாலும் கறையானாலும், வேறு சில காரணங்களாலும் தமிழ் நூல்கள் அழிந்து கொண்டேயிருந்தன. எனவே சிதறிக் கிடந்த நூல்கள் தொகுக்கப்பட்டன. இவ்வாறு எட்டுத் தொகையில் சிறு பாடல்கள் இயற்றியுள்ளோரை இணைத்து, பத்துப் பாட்டின் நீண்ட பாடல்களை இணைத்தும் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

**புறத்திணையைப் பாடிய புலவர்கள்**

சங்க இலக்கியத்தில் புறத்திணையைப் பாடிய புலவர்கள் பலர். சங்க இலக்கியத்தை பாடியோர் 473 பேர் ஆவர். இவர்களுள் புறத்திணையை மட்டும் பாடியோர் 95 பேர். அகத்தையும் புறத்தையும் பாடியோர் 71 பேர். இவர்களுள் 15 பேர் பெண்பாற்புலவர்கள் ஆவர். புறத்திணை இலக்கியம் அக்கால சமூகத்தினைப் பதிவு செய்வதுடன் அம்மக்களின் மனதினை வாழ்வினைப் பதிவிட்டு காலத்தைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது.

**புறத்திணை இலக்கியங்கள்**

"இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப் புலப்படுத்துகிறது. அது மனிதனின் ஆன்மாவையும், அவன் கருத்துகள், உணர்ச்சிகள், தலைநோக்கங்கள், முதலியவற்றையும் சொல்வடிவிலே காட்டும் குறிப்பாகும்"[51] என்பர் எஸ். வையாபுரிபிள்ளை." புறத்திணை இலக்கியங்கள் தமக்கேயுரிய பொதுப்பண்புகளாகச் சிலவற்றைக் கொண்டுள்ளன. அவற்றை உலக இலக்கியங்களும் கொண்டுள்ளமையை திரு கு.வெ.பா விரிவாக எடுத்துக்காட்டுகிறார். வீரம், சமயம்,

அறத்தைப்போற்றுதல், தன்னுணர்வு, தொகைசெய்தல், நிலையாமை. உலகத்தோற்றம் போன்றவற்றை அவை தன்னுள்ளே கொண்டிலங்கும் தன்மைகளை விரிவாக ஆராய்கிறார்”[52]. இனி இவ்விலக்கியங்கள் குறித்து விரிவாகக் காண்போம்.

புறத்திணையில்

- புறநானூறு
- பதிற்றுப்பத்து
- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- மலைபடுகடாம்
- மதுரைக்காஞ்சி
- பரிபாடல் – பதினான்கு புறப்பொருள் குறித்தன.
- புறத்திரட்டு
- தகடூர் யாத்திரை
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை

ஆகியன புறத்திணையில் அமைந்த இலக்கியங்களாக கிடைக்கின்றன.

**புறநானூறு**

புறத்திணை என்பது இன்னின்ன பொருட்களை உடையது என்று விளக்க முடியாது. புகழ். வீரம். சமுதாயம். துன்பம், மகிழ்ச்சி, சிறுவர்கள், முதியோர் என அனைவரின் வாழ்வையும் உள்ளடக்கியது. இவ்வாறு மக்களின் அனைத்து நிலைகளையும் அடி முதல் முடி வரை கூறுவதைப் போல சாமானியனிலிருந்து சாம்ராஜ்ஜியம் வரை போற்றிப் பாடுவது இது. போற்றுதல், தூற்றுதல். மகிழ்தல். மகிழ்வித்தல் எனப் பல்வேறு பொருண்மைகளை உடையது இது. இதனை இதனால் இப்படி. என்றவாறு வரையறுத்தல் இயலாது. எனினும் இத்திணையின் நோக்கத்தினை அமைப்பு முறையை ஆராயும் போது தெரிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| வெட்சி<br>கரந்தை<br>காஞ்சி<br>உழிஞை<br>நொச்சி<br>தும்பை | போரில் ஈடுபட்டு வெற்றி பெறுதலுக்கு முன்னான நிகழ்வுகளைக் கூறுவன. |
| வாகை<br>பாடாண் | மன்னர்களின் வெற்றி பற்றிக் கூறுவன |
| பொதுவியல்<br>கைக்கிளை<br>பெருந்திணை | தலைக் காதலும் காமமும் |

**புறநானூற்றில் திணையும், துறைகளும்**

புறநானூற்றில் பல துறைகளில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி, பரிபாடல் முதலியன. புறநானூற்றைப் போல தனித்தனி திணை துறைகளால் அமைந்தவை அல்ல. எனவே புறநானூற்றில் அமைந்த துறைகளைப் பற்றி இவண் விரிவாக ஆராய்தல் நலம் பயக்கும்.

1. வெட்சி - உண்டாட்டு. தலைத்தோற்றம் (257, 258, 262, 269, 297)
2. கரந்தை - செருமலைதல், பிள்ளைப்பெயர்ச்சி, கையறுநிலை, பாண்பாட்டு நெடுமொழி, நீண்மொழி, வேத்தியல், குடிநிலையுரைதல். (259, 260, 261, 263, 264.265, 270.278, 286, 287.290, 291)
3. வஞ்சி - கொற்றவை, மழபுலவஞ்சி, பெருஞ்சோற்றுநிலை, துணைவஞ்சி (4, 7, 41.16, 292.36, 45.46, 47.57, 213)
4. காஞ்சி - பெருங்காஞ்சி, வஞ்சினக்காஞ்சி, பூக்கோட்காஞ்சி, மறக்காஞ்சி, தொடாக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, மனையறம், துறவறம். (359, 360, 365, 366, 71, 72, 73, 293, 357, 281, 336, 356, 358)
5. நொச்சி - செருவிடை வீழ்தல். குதிரை மறம், மகண் மறத்தல் (271, 272, 299, 109, 110, 111)
6. தும்பை - தானைமறம், குதிரைமறம், பாண்பாட்டு, எருமைமறம், நூழிலாட்டு, களிற்றுடனிலை, தானைநிலை, மூதின்முல்லை, உவகைக்கலுழ்ச்சி, தொகைநிலை . (87, 88, 89, 190, 294, 300, 301, 273, 302, 303, 304, 283, 284, 311, 80, 274, 275, 309, 310, 307, 276, 288, 277, 278, 295, 62, 63).

7. வாகை - இயன்மொழி, நல்லிசை வஞ்சி, மழபுல வஞ்சி, முதல் வஞ்சி, மறக்களவழி ஏர்க்கள உருவகம், மறக்கள வேள்வி, பார்ப்பன வாகை, தாபதவாகை, மூதின்முல்லை, ஏறாண் முல்லை, வல்லாண் முல்லை, சால்பு முல்லை, பாணாற்றுப்படை. (17, 19, 20, 21, 22, 23, 25, 26, 31, 33, 37, 42, 43, 44, 51, 52, 53, 54, 61, 66, 76, 77, 78, 79, 81, 82, 93, 94, 98, 99, 100, 104, 125, 167, 174, 368, 369, 370, 371, 373, 372, 166, 305, 251, 252, 279, 306, 308, 312, 326, 327, 328, 329, 330, 331, 332, 333, 334, 335, 86, 296, 170, 178, 179, 180, 181, 313, 314, 315, 316, 317, 318, 319, 320, 321, 322, 323, 324, 325, 285)

8. பாடாண் - பூவை நிலை, பாசற்றுநிலை, இயன்மொழி. கடைநிலை, பரிசில் விடை, பாணாற்றுப்படை, புலவராற்றுப்படை, விறலியாற்றுப்படை, செவியறிவுறூஉ, குடைமங்கலம், வாள்மங்கலம், உடனிலை, புலவராற்றப்படை, வாழ்த்து.

9. பொதுவியல் - முதுபாலை, தாபதநிலை, ஆனந்த பையுள், கையுறுநிலை, முதுமொழிக்காஞ்சி, பெருங்காங்சி, பொருண்மொழிக்காஞ்சி, இயன்மொழிவாழ்த்து. (253, 256, 248, 249, 250, 228, 229, 246, 247, 280, 65, 112-120, 217-227, 230-245, 18, 27, 74, 194, 362, 363, 364, 24, 75, 121, 182, 183, 185-193, 195, 214, 28, 29)

10. கைக்கிளை - பழிச்சுதல் (83,84,85)

11. பெருந்திணை - குறுங்கலி (143 – 147)

சிதைந்தவை - 267, 268, 289, 261, 244, 282, 289, 244, 323, 355 ஆகிய பாடல்கள் சிதைந்தவை. இவற்றுள் (323, 344, 355) என்ற பாடல்கள் முற்றிலும் சிதைந்து விட்டன. இவ்வாறு புறத்திணைகளை விளக்கிக்கூறுதல் என்பது ஆய்வுப் புரிதலை எளிமையாக்கும் என்பதால் இதனை விரிவாகக் காணலாம்.

**வெட்சித்திணை துறைகள்**

வெட்சித் திணையில் இரண்டு துறைகள் இடம் பெறுகின்றன.

- உண்டாட்டு – ஆநிரைகளைக் கவர்ந்து வந்த மறவர்கள் மதுவினை உண்டு மகிழ்வோடு ஆடுதல் உண்டாட்டு ஆகும். இதற்கு,

**“……………………………புரவே; நார்அரி**
**நனை முதிர் சாடி நறவின் வாழ்த்தி,**
**துறைநனி கெழீஇக் கம்புள் ஈனும்**
**தண்ணடை பெறுதலும் உரித்தே, - வைந் நுதி**
**நெடுவேல் பாய்ந்த மார்பின்,”** [53]

என்ற பாடல் சான்றாகிறது.

- *தலைத்தோற்றம் - ஆநிரைகளை கவர்ந்து வருவதை உணரந்த சுற்றத்தினர் மகிழ்வது தலைத்தோற்றம் என்னும் துறையில் அடங்கும்.*

**“நறவும் தொடுமின் ; விடையும் வீழ்மின்;**
**பாசுவல் இட்ட புன் காற் பந்தர்ப்**
**புனல் தரும் இள மணல் நிறையப் பெய்ம்மின்-**
**ஒன்னார் முன்னிலை முருக்கிப், பின் நின்று;**
**நிரையோடு வரூஉம் என்னைக்கு**
**உழையோர் தன்னினும்பெருஞ் சாயலரே”** [54]

*என்ற பாடல் இதற்குச் சான்றாகின்றன.*

**கரந்தைத்திணை**

*இத்துறையின்கீழ் ஆறுதுறைகள் இடம் பெறுவதைக் கண்டோம். அவற்றைச் சான்றுடன் நோக்குவோம்.*

- *செருமலைதல் – தங்களுடைய ஆநிரையைக் கவர்ந்த வெட்சிப்பூவினரை வளைத்துக் கொண்டு கடமையாகப்போரிடல் இத்துறையில் அடங்கும்.*

**“ஏறுஉடைப் பெருநிரை பெயர்தர, பெயராது**
**இலை புதை பெருங் காட்டுத் தலை கரந்து இருந்த**
**.........................................................**
**புடை இலங்கு ஒள்வாள் புனை கழலோயே!”** [55]

*என்ற பாடலைச் சான்றாக்கலாம்.*

- *கையறுநிலை – போர்காலத்தில் இறந்துபட்ட வீரர்க்கு பாணர் உரிமம் செய்வது இத்துறையின் கீழ் அடங்கும். பாணர்களின் அவ்வீரர்களை நினைத்து கையறவு செய்வது இதன்பாற்படும்.*

**“வளரத் தொடினும், வௌவுபு திரிந்து,**
**விளரி உறுதரும் தீந்தொடை நினையாத்**
**.........................................................**
**எவ்வம் கொள்வை ஆயினும், இரண்டும்,**
**.........................................................**
**கையுள போலும் கடிதுஅண் மையவே;**
**.........................................................**
**படஞ்செய் பந்தர்க் கல் மிசையதுவே.”** [56]

**“அந்தோ! எந்தை அடையாப் பேர் இல்;**
**வண்டுபடு நறவின் தண்டா மண்டையொடு**
**.........................................................**
**புல்லென்றனையால், பல்அணி இழந்தே”** [57]

*உள்ளிட்ட பாடல்கள் இதற்குச் சான்றாகும்.*

- *நெடுமொழி - ஒரு வீரன் தன் பெருமையைத் தன் அரசனுக்குத் தானே எடுத்துக் கூறுவது இதன் பொருளாகும். இதனை,*

***"எமக்கே கலங்கல் தருமே தானே***
***தேறல் உண்ணுமன்னே : நன்றும்***
***இன்னான் மன்ற வேந்தே; இனியே-***
***நேரார் ஆர் எயில் முற்றி,***
***வாய் மடித்து உரறி,' நீ முந்து என்னானே"*** [58]

*என்ற பாடல் சுட்டி நிற்கிறது.*

- *வேத்தியல் – மன்னன் மறவனுக்குச் சிறப்புச் செய்தமையைக் குறிக்கும். இதற்குச் சான்றாக,*

***"வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்***
***தன்னோர் அன்ன இளையர் இருப்ப,***
***பலர்மீது நீட்டிய மண்டைஎன் சிறுவனைக்***
***கால்கழி கட்டிலிற் கிடப்பித்,***
***தூவெள் அறுவை போர்ப்பித்திலதே"*** [59]

***"சிறாஅஅர் ! துடியர்! பாடுவல் மகாஅஅர்;***
***தூவெள் அறுவை மாயோற் குறுகி***
***.........................................................***
***மணிமருள் மாலை சூட்டி, அவன் தலை***
***ஒரு காழ் மாலை தான் மலைந்தனனே!*** [60]

*என்ற பாடல்கள் மேற்காண் கூற்றிற்கு அரணாகின்றன.*

- *குடிநிலையுரைத்தல் – கரந்தை மறவர்கள் தம் குடியின் வரலாற்றைப் புகழ்ந்து கூறுவது இத்திணையின் பாற்படும்.*

***"இவற்கு ஈந்து உண்மதி, கள்ளே; சினப்போர்***
***இனக் களிற்று யானை இயல் தேர்க் குருசில்!***
***.........................................................................***
***மறைக்குவன் - பெரும ! நிற்குறித்து வரு வேலே"*** [61]

*என்ற பாடல் குடிநிலையுரைத்தலுக்குச் சான்றாகும்.*

**வஞ்சித்திணை**

*வஞ்சித்திணையின் கீழ் நான்கு துறைகள் இடம்பெற்றுள்ளன அவற்றைக் காணலாம்.*

- *கொற்றவள்ளை - வஞ்சி வேந்தனின் புகழை எடுத்துக்கூறி அவனது பகை நாட்டின் அழிவிற்கு இரங்குதல் இத்துறையின் பாற்படும். இது "கொற்றவள்ளை" என்று அழைக்கப்படும்.*

- *மழபுலவஞ்சி – இது பகைவரின் நெல்விளையும் வயல்கள், உள்ளிட்டவை கொள்ளையிடப்பட்ட நிலையைக்குறிக்கும்.*

- *பெருஞ்சோற்று நிலை – வஞ்சி வேந்தன் தன் மறவர்களுக்கு மிக்க சோற்றுத்திரளை அவர் கொள்ளும் முறையாலே கொடுத்து இத்துறையின் பாற்படும்.*

- *துணைவஞ்சி – போருக்குச் சென்றோனை சந்து செய்தல் இத்துறையின் பாற்படும்.*

***காஞ்சித்திணை***

*காஞ்சி என்பது நிலையாமை என்பது பொருள்படும். இத்திணை ஏழு துறைகளை உடையது.*

- *பெருங்காஞ்சி - பெருங்காஞ்சி என்பது காஞ்சி மறவர் வஞ்சி மறவரை எதிர்த்துத் தம் போர் வலிமையை வெளிப்படுத்துவது இத்துறையின் பாற்படும்.*

***"காடு முன்னினரே, நாடுகொண் டோரும்!***
***நினக்கும் வருதல் வைகல் அற்றே;***
***..........................................***
***ஈண்டு நீடு விளங்கும்நீ எய்திய புகழே." [62]***

*இப்பாடல் இதற்கு சான்றாகிறது.*

- *வஞ்சினக்காஞ்சி - காஞ்சி தன் பகைவரை வெல்லுவதற்காகச் சூளுரைத்தல் இத்திணையில் அடங்கும்.*

- *பூக்கோட் காஞ்சி - காஞ்சி மறவர் போர் செய்தற் பொருட்டுத் தம் மன்னன்பாற் பூப் பெருதல் என்பது இத்துறை சுட்டும்.*

- *மறக்காஞ்சி - வஞ்சியினர் அஞ்சும் படி காஞ்சி வேந்தன் போரைச் செலுத்துவதும் பகைவரின் உயர்ச்சியைப் பெறாமல் தன் விழுப்புண்ணைப் பிளந்து உயிர்நீத்தல் என்பதும் இத்துறையில் அடங்கும்.*

- *தொடாக்காஞ்சி - காஞ்சி மறவனுடைய புண்ணைத் தீண்டச் சென்ற பேய் அஞ்சி திரும்பியதை இத்துறை சுட்டும்.*

- *மகட்பாற்காஞ்சி - ஒருவன் தன் மகளை விரும்பும் அரசனோடு சண்டையிடுதல் இத்துறையைச் சேர்ந்ததாகும்.*

***“கானக் காக்கைக் கலிச்சிறகு ஏய்க்கும்***
***மயிலைக் கண்ணிப், பெருந்தோட் குறுமகள்,***
***ஏனோர் மகள்கொல் இவள்?’ என விதுப்புற்று,***
***......................................................................***
***மாட்சியவர் இவள் தன்னைமாரே”*** [63]

*என்ற பாடலை மகட்பாற்காஞ்சிக்குச் சான்றாக்கலாம்.*

- *மனையறம் துறவறம் - இலக்கண நூல்களில் இத்துறை குறிப்பிடப்படவில்லை. மனையறத்தை விடத் துறவறமே சிறந்தது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.*

***“பருதி சூழ்ந்தஇப் பயங்கெழு மாநிலம்***
***ஒருபகல் எழுவர் எய்தி யற்றே;***
***................................................................***
***விடாஅ தோர்இவள் விடப்பட் டோரே”*** [64]

**நொச்சித்திணை**

*இத்திணையின் கீழ் மூன்று துறைகள் இடம்பெற்றுள்ளன.*

- *செருவிடை வீழ்தல் - அரணைக் காத்தலுக்காகப் போரில் இறந்த நொச்சி மறவரின் வெற்றியைக் கூறுவது இதன் பொருளாகும்.*

***“நீர் அறவு அறியா நிலமுதற் கலந்த***
***கருங்குரல் நொச்சிக் கண்ணார் குரூஉத் தழை***
***மெல்இழை மகளிர் ஐது அகல் அல்குல்***
***.....................................................***
***மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே”*** [65]

*என்ற பாடலை செருவிடை வீழ்தலுக்குச் சான்றாக்கலாம்.*

- *குதிரை மறம் - நொச்சி மறவரின் குதிரைகள் வீரப்பண்பினைப் பாராட்டுவது குதிரை மறம் எனப்படும்.*
- *மகண்மறுத்தல் - இது உழிஞை அரசன் மகட்கொடை கேட்க அதனை நொச்சியரசன் மறுப்பதாகும்.*

**தும்பைத் திணை**

*புறநானூற்றில் பத்து துறைப்பாடல்கள் தும்பைத்திணையில் இடம்பெற்றுள்ளன.*

- *தானை மறம் - இரு வேந்தனது படைகளும் போர் செய்து மடியாமல் விலகிச் செல்லுதல், மற்றும் அரசனுக்கு உறுதி கூறுதல் என்னும் பொருள் உடையதாகும்.*
- *குதிரை மறம் - தும்பை வேந்தனின் குதிரைத்திறத்தைச் சொல்வது இதுவாகும்.*

- *பாண்பாட்டு - தும்பை வீரர்கள் போரில் ஈடுபட்டு மறைந்த மறவர்களுக்குப் பாணர்கள் பாடல் இயற்றுவது இத்துறையாகும்.*

- *எருமை மறம் - மறவன் ஒருவன் புறமுதுகிட்டு ஓடும் தன் படைக்குப் பின்னே நின்று சிறந்து பகைவரைத் தடுத்தல் இத்துறையைச் சாரும்.*

- *நூழிலாட்டு - ஒரு வீரன் தன்னுடைய பார்வைப் பிளந்த பகைவர் வேலினைப் பறித்து அப்பகைவரை நோக்கி எறிதல் இத்துறையாகும்.*

- *களிற்றுடனிலை - மறவன் ஒருவன் யானையின் மேல் வேலெறிந்து வீழ்த்தி அந்த யானையின் கீழ்ப்பட்டது இத்துறையில் அடங்கும். களிற்றைக் கொன்று தானும் வீழ்தல் இத்துறையாகும்.*

- *தானைநிலை - தானை நிலை என்பது போரில் ஈடுபட்ட வீரன் ஒருவனின் சிறந்த வீரத்தை இரு படையினருமே பாராட்டுதல் தானைமறம் ஆகும்.*

- *மூதின் முல்லை - மூதின் முல்லை என்பது மறக்குடி மகளின் வீரத்தினை சுட்டுவதாகும்.*

- *உவகைக் கலுழ்ச்சி - போர்க்களத்தில் விழுப்புண்பட்டு மாய்ந்தவனை அவன் இற்கிழத்தி (மனைவி) கண்டு மகிழ்ந்து கண்ணீர் விடுவது இத்துறையில் அடங்கும்.*

- *தொகைநிலை – போர் நடந்து கொண்டிருக்கும்போது போரிட்ட இரண்டு மன்னர்களும் ஒருவர் கூட எஞ்சாமல் இரண்டு நிலையினரும் இறந்து விடுவது தொகைநிலை ஆகும்.*

***வாகைத்திணை***

*வெற்றியைக் குறிப்பதற்கு இன்றும் கூறப்படும் சொல் "வாகை சூடினான் என்பதாகும். இது ஒன்பது துறைகளை உடையது.*

- *அரசவாகை - அரசவாகை என்பது பகைவரிடம் வெவ்விய ஆற்றலையும் சுற்றத்தினரிடம் அருளையும் உடையராக இருத்தல். செங்கோன்மை என்ற தன்மையுடையவனை அரசவாகை என்பர்.*

- *நல்வஞ்சி - பகைவரின் நாடு அழிவிற்கு இரங்குவது நல்வஞ்சி எனப்படும்.*

- *இயன்மொழி - இயன்மொழித்துறை என்பது அரசனின் இயல்பையும், கொடையையும் கூறுவது ஆகும்.*

- *மறக்களவழி - செங்கோல் அரசனை உழவனாக உருவகித்து பாடுதல் "மறக்களவழி" எனப்படும். இதனை,*

***“இருப்பு முகஞ் செறிந்த ஏந்துஎழில் மருப்பின்,***
***கருங்கை யானை கொண்மூ ஆக,***
***.............................................................***
***தாழா ஈகைத், தகை வெய் யோயே!*** [66]

*என்ற பாடல் இதற்கு நல்ல சான்றாகிறது.*

- *மறக்களவேள்வி - வாகை சூடிய வேந்தன் களவேள்வி செய்தது இதன் பொருளாகும்.*
- *பார்ப்பன வாகை - மறையைக்கேட்டுச் சிறப்பு எய்திய அரசனின் (பார்பனனின்) வெற்றியைக் கூறுவது பார்ப்பன வாகை எனப்படும்.*
- *தாபத வாகை - தாபதர் தம்முடைய தவவொழுக்கத்தில் தவறாது மேம்பட்டமையைக் கூறுவது தாபதவாகை எனப்படும்.*
- *ஏறாண்முல்லை - வீரம் வளரும் போது மறக்குடியின் ஒழுக்கத்தைக் கூறுவது “ஏறாண்முல்லை” ஆகும்.*
- *வல்லாண் முல்லை - ஒரு மறவனுடைய குடி, ஊர், பண்பு முதலியவற்றைப் பாராட்டி அவனது ஆண்மையை விதந்து கூறுவது “வல்லாண் முல்லை“ ஆகும்.*
- *சால்பு முல்லை - சான்றோரின் இயல்பு மிகுதியைச் சொல்வது சால்பு முல்லையின் பாற்படும்.*

***பாடாண்திணை***

*அரசனின் வெற்றியைப் பாடுவது பாடாண்திணை ஆகும். இதன்கீழ் பதினைந்து துறைகள் உள்ளன.*

- *பூவைநிலை - மாயனின் உருவத்தோடு உவமித்து காயம்பூவைப் புகழ்வது பூவை நிலை எனப்படும்.*
- *பரிசிற்துறை - வேந்தனிடம் தான் பெறக் கருதிய பொருள் இதுவெனக் கூறுவது பரிசிற்துறை ஆகும்.*
- *பரிசில்கடா நிலை - வேந்தரிடம் பரிசைப்பெற்றுப் பெயர்தல் வேண்டும் என்று கூறுவதால் இதுபரிசில் கடாநிலை எனப்படும்.*
- *கடைநிலை - இத்துறை புறப்பொருள்வெண்பாமாலையில் இல்லை.*
- *பரிசில் விடை - வேந்தன் பரிசிலர்க்குப் பொருள் வழங்கி விடைகொடுத்தது இதனுயை பொருளாகும்.*

- *பாணாற்றுப்படை - பரிசில் பெற்ற பாணன் பரிசில் பெறாத பாணனை. பெருவதற்கு ஆற்றுப்படுத்துவது இவ்வகையைச் சாரும்.*
- *விறலியாற்றுப்படை - இது விறலியை ஆற்றுப்படுத்துவது.*
- *செவியறிவுறூஉ - செங்கோல் அரசனுக்கு நிலையான பெரிய கருத்தினை உணரும்படிக் கூறுதல் இத்துறையைச் சார்ந்ததாகும்.*
- *குடைமங்கலம் - அரசனின் வெண்கொற்றக்குடையை மதியுடன் ஒப்புமைப்படுத்தி பாடுவது இத்துறையாகும்.*
- *வாண்மங்கலம் - இது வாளின் சிறப்பைப் பாடுவதாகும்.*
- *புலவராற்றுப்படை - பேரறிவாளர்களை அரசர்களோடு ஆற்றுப்படுத்துதல் ஆகும்.*
- *வாழ்த்தியல், வாழ்த்து - தன்னால் விரும்பப்படும் தலைவன் நலமோடு வாழ வேண்டும் என்று புலவன் வாழ்த்துவது வாழ்த்தியல் என்னும் துறையாகும்.*
- *உடனிலை - இருவேந்தரும் ஒருங்கிருக்கையிள் வேறுபாடு இல்லாமல் கருத்தொற்றுமையுடன் இருந்தால் இவ்வுலகத்தைக் கைப்பற்றலாம் என்று புலவர் பாடுவது இத்துறையின் பாற்படும்.*

**பொதுவியல் திணை**

- *முதுபாலை - காட்டிடை கணவனை இழந்த மடந்தையின் புலம்பலைக் கூறுவது இத்துறையாகும்.*
- *தாபதநிலை - கணவனை இழந்தவளின் கைம்மை நிலையைக் கூறுவது*
- *ஆனந்தப்பையுள் - கணவனை இறந்தமையால் தலைவி மெலிந்து வருந்துதல் இத்துறையின் பொருளாகும்.*

> ***"பல்சான் றீரே ; பல்சான் றீரே***
> ***செல்க எனச் சொல்லாது, ஒழிக என விலக்கும்,***
> ***பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே" [67]***
>
> ***"யானை தந்த முளி மர விறகின்***
> ***கானவர் பொத்திய ஞெலி தீ விளக்கத்து" [68]***

*என்ற பாடல்களை இதற்கான சான்றாக்கலாம்.*

- *கையறுநிலை - மன்னன் இறந்தானாக அவனைச் சேர்ந்தோர் கையற்றுக்கூறுதல் கையறுநிலை ஆகும்.*

- புகழைக்கூறி இரங்குதல் - இறந்த மன்னனின் புகழை இரக்கம் மேலிட கூறுதல் இத்துறையின் பாற்படும்

- முதுமொழிக்காஞ்சி - அறிவுடைய புலவர் அறம், பொருள், இன்பங்களின் இயல்பினை உணர்த்துதல் இத்துறையாகும்.

- பெருங்காஞ்சி - உலக நிலையாமையைக் கூறதல்

- பொருண்மொழிக்காஞ்சி - மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவெனக் கூறுதல் பொருள் மொழிக்காஞ்சியாகும்.

**கைக்கிளை**

இதன் கீழ் பயந்தோர்ப் பழிச்சல் என்னும் துறை இடம் பெற்றுள்ளது.

- பழிச்சுதல் - இதில் தலைவன் மீது காதல் கொண்டு அவனைப்புகழ்ந்து கூறுதல் இத்துறையாகும். பயந்தோரைப் புகழாது தலைமகனையே புகழ்வதால் "பழிச்சுதல்" என்று பெயர் பெற்றது.

- மெலிவொடு வைகல் - தலைவனை நினைத்து மகளிர் வளை கழலுவகையும், பசலை ஏற்படும் வகையும் குறித்து வரும் பாடல்கள் மெலிவொடு வைகல் என்னும் துறையின் பாற்படும் என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

**பெருந்திணை**

இதன்கீழ் குறுங்கலி என்னும் துறை வரும்.

- குறுங்கலி - தலைவன், தலைவியைக் கைவிட்டுப் பிற மகளிரை விரும்புவதற்கு அவன் நெஞ்சத்தே மாறுபட்டெழுந்த காமவேட்கை கெடும்படி கூறுதல் ஆகும்.

இவ்வாறு புறநானூறு புறப்பொருளில் பல்வேறு துறைகளைப்பெற்று சிறந்துள்ளமையை மேற்கண்ட பாடலாலும் சான்றுகளாலும் அறியலாம்.

**பதிற்றுப்பத்து**

இலக்கியம் என்பது உண்மையும் புனைவும் கலந்து புலவர்களால் இயற்றப்பட்டது. அவ்வகையே பல்வேறு இலக்கியங்களும் தோற்றம் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்தில் இலக்கணங்களில் சுட்டப்பெறும் துறைகளும் சுட்டப்பெறாத துறைகளும் காணப்படுகின்றன.

இது அகவற்பாக்களால் ஆன பத்து பத்துப் பாடல்களை உடையதால் பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. இவை பத்து சேர மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்டவை.

***பதிற்றுப்பத்தில் உள்ள துறைகள்***

*பெருஞ்சோற்றுநிலை, தும்பையரவம், ஒள்வாள்மாலை, காவன்முல்லை, பரிசிற்றுறை, பாடாண்பாட்டு, இயன்மொழிவாழ்த்து, நாடுவாழ்த்து, களவழி, பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, முல்லை, செந்துறைப்பாடாண்பாட்டு, வஞ்சித்துறை பாடாண்பாட்டு, வாகை, காட்சிவாழ்த்து, குரவைநிலை, உழிஞையரவம் ஆகிய துறைகள் பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ளன. இனி இத்துறைகளைப் பற்றிக் காண்போம்.*

***பெருஞ்சோற்று நிலை***

*வேந்தனானவன் தம்முடைய வீரர்கள் பகைப்புலத்தை அழித்துத் தருவர் என்று கூறி அவர்களுக்கு மிகுதியான சோற்றுத் திரளைத் தருவது பெருஞ்சோற்று நிலை ஆகும்.*

*இதற்கான சான்றாக,*

***"ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழல்கால்***
***பெரும் சமம் ததைந்த செருப்புகல் மறவர்***
***உருமு நிலன் அதிர்க்கும் குரலொடு கொளை புணர்ந்து***
***பெருஞ்சோறு உகுத்தற்கு, எறியும்***
***கடுஞ்சின வேந்தே நின் தழங்கு குரல் முரசே."*** [69]

*இப்பாடலைக் காட்டலாம்.*

***தும்பையரவம்***

*போருக்குச் செல்லுதல் கருதித் தும்பை சூடிய மன்னன் தனது படையைத் தலையளி செய்வது தும்பையரவம் என்னும் துறையைச் சேரும்.*

***"செவ்உளைய மா ஊர்ந்து***
***நெடுங் கொடிய தேர்மிசையும்***
***..................................................***
***அரைசுபடக் கடக்கும் ஆற்றல்***
***புரை சால் மைந்த நீ ஓம்பல் மாறே"*** [70]

*இப்பாடல் மன்னன் தன்னுடைய படை வீரர்களுக்கு "தலையளி" செய்தமையை இதன்மூலம் அறியமுடிகிறது.*

***ஒள்வாள் மாலை***

*வாள்களை உடைய தும்பைப்பூவினைச் சூடிய மறவர்கள் போர் செய்த பகையரசரை சூழ்ந்து ஆடியது இத்துறையைச் சாரும். இதற்குச் சான்றாக,*

***"வலம்படு முரசம் துவைப்ப, வாள்உயர்த்து***
***.........................................................***
***வீந்து உகு போர்க்களத்து ஆடும் கோவே".*** [71]

இப்பாடலில் போர்க்களத்தில் பகைவேந்தனைக்கொன்று அப்போது மகிழ்ச்சியில் வாளை உயரே தூக்கிக் கொண்டு ஆடுவர். இது ஒள்வாள்மலையின் பாற்படும்.

**காவன் முல்லை**

வேந்தனின் காவல் சிறப்பைப் பற்றிக் கூறுவது காவன்முல்லைத் துறையாகும். இதற்குச் சான்றாக,

> ***"பல்வேல் இரும்பொறை நின்கோல் செம்மையின்***
> ***நாளின் நாளின் நாடுதொழுது ஏத்த***
> ***உயர்நிலை உலகத்து உயர்ந்தோர் பரவ"*** [72]

என்ற பாடல் வேந்தன் தன் நாட்டினை மிகச் சிறப்பாகக் காவல் காத்ததனை எண்ணி உயர்த்திப் பாடுவதால் இப்பாடல் காவன்முல்லை துறையில் அடங்கும்.

**பரிசிற்றுறைப் பாடாண் பாட்டு**

இத்துறை இரவலன் தனக்கு வேண்டிய பரிசிலை மன்னனிடம் கேட்டுப் பெறுவதைக் குறிக்கும். இத்துறையே அதிக பாடல்களைப் பெற்றுள்ளது.

> ***"எல்லு நனி இருந்து, எல்லிப் பெற்ற***
> ***அரிது பெறு பாயற் சிறு மகிழானும்***
> ***கனவினுள் உறையும் பெருஞ்சால்பு ஒடுங்கிய***
> ***நாணு மலி யாக்கை வாள் நுதல் அரிவைக்கு***
> ***யார்கொல்? அளியை"*** [73]

இப்பாடலில் வேந்தன் போரில் ஈடுபட்டு பாசறையிலேயே தங்கியிருக்கின்றான். இதனால் அவனுடைய மனைவி தனியாக இருந்து பிரிவுத் துயரில் வருத்தமுறுகிறாள். இதனைக் கண்ட புலவர் உள்ளம் வருத்தமுறுகிறது. அவர் அரசனிடம் சென்று தலைவியின் நிலையைக் கூறி எனவே அவனுடைய மனைவியைக் காண வேண்டும் என்று கூறுவது இவண் நோக்கத்தக்கது. மேலும், புலவர் தமக்காக எதையும் கேட்காமல் தன்னுடைய நாட்டின் அரசிக்கான தன்னலம் கருதாது பரிசாக அரசனை தன்னுடைய இல்லத்திற்கு வரச்செய்வது சிறப்புமிக்க செயலாகும்.

**இயன்மொழி வாழ்த்து**

மன்னவனின் இயல்பையும் பெருமையையும் மொழிவது இத்துறையின் பாற்படும்.

> ***மாரி பொய்க்குவது ஆயினும்***
> ***சேரலாதன் பொய்யலன் நசையே."*** [74]

என்ற பாடல் தலைவனின் பெருமையைக் கூறா நின்றது.

***நாடு வாழ்த்து***

*இத்துறையின் கீழ் மன்னனின் நாடானது வாழ்த்தப்பெறும். அதில் மன்னனின் நாட்டுச் சிறப்பு உள்ளிட்ட அனைத்தும் குறிக்கப் பெருகிறது.*

***"திரு உடைத்து அம்ம – பெருவிறற் பகைவர்***
***..........................................................***
***இளை இனிது தந்து, விளைவு முட்டுறாது"*** [75]

*என்ற பாடல் நாட்டினைப் பற்றியும், மன்னனின் காவலைப் பற்றியும் குறிப்பிடுகின்றது.*

***களவழி***

*யாழ்ப்பாணர் அல்லது பாணர்களுக்கு போர்களத்தில் விழ்ந்து கிடக்கும்போது அரசன் வழங்கும் பெருஞ்செல்வத்தைப் பற்றிக் கூறியது இத்துறையில் அடங்கும். இதனைப் பாணர் ஒருவர் வேந்தனிட்ட புதிய வருவாய்களை நீ பெற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் என்றும் அதற்கு நிலையான வலிமையை உடையதாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறார்.*

*இதனை,*

***"வீயா யாணர் நின்வயி னானே***
***தாவாதாகும் மலி பெறு வயவே***
***மல்லல் உள்ளமொடு வம்பு அமர்க் கடந்து***
***செரு மிகு முன்பின் மறவரொடு தலைச் சென்று***
***பனை தடி புனத்தின், கைதடிபு, பல உடன்"*** [76]

*என்னும் பாடலின் வழி அறியலாம்.*

***பாணாற்றுப்படை***

*பரிசல் பெற்று வரும் பாணன் தன்னைப் போன்ற பாணனைப் பரிசில் பெற்று வளமோடு வாழ வழி நடத்துதல் இதன் பாற்படும்.*

***"தென் கடல் முத்தமொடு நன் கலம் பெறுகுவை***
***கொல் படை தெரிய, வெல் கொடி நுடங்க,***
***..................................................................***
***..................................................................***
***பறைபண் அழியும் பாடுசால் நெடு வரைக்***
***கல் உயர் நேரிப் பொருநன்***
***செல்வக் கோமாற் பாடினை செலினே"*** [77]

*என்று பாடல் இதற்குச் சான்றாகும். தமிழரின் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கூற்றிற்கு அச்சாரம் இட்டுள்ளமை இதன்பாற்படும். இத்துறையில் இருபெரும் நூல்கள் இயற்றப்பட்டுள்ளமை தமிழ் மன்னர்களின் பெருமையையும், பரிசிலர்களின் தன்மையையும் உணரலாம்.*

***விறலியாற்றுப்படை***

*வெற்றியையுடைய மன்னனது புகழைப் பாடும் விறலியை வள்ளல்களிடம் வழிப்படுத்துவது “விறலியாற்றுப்படை” யாகும் “ஆற்றுப்படை” என்பதற்கு ஆற்றுப்படுத்துதல் – வழிப்படுத்துதல் – நெறிப்படுத்துதல் என்று பொருள் தரும்.*

***“செல்லாயோதில் சில் வளை விறலி***
***மலர்ந்த வேங்கையின் வயங்கு இழை அணிந்து***
***……………………………………………***
***அழல்விடுபு, மரீஇய மைந்தின்***
***தொழில் புகல் யானை நல்குவன், பலவே”*** [78]

*என்ற பாடல் மூலம் இதனை அறியலாம்.*

***முல்லை***

*இப்பாடல் தலைவன் தலைவி பிரிந்து இருக்கும் நிலையைச் சுட்டுகிறது.*

***“பெருந்தகைக்கு அமர்ந்த மென்சொல் திருமுகத்து***
***மாண் இழை அரிவை காணிய ஒரு நாள்***
***பூண்க மாள, நின் புரவி நெடுந் தேர்”*** [79]

*இப்பாடலில் மன்னனைப் பிரிந்து இருக்கும் தலைவியைச் சென்று அவளோடு வாழ வேண்டும் என்று கூறுவதை முல்லைத் துறையில் அடக்கலாம்.*

***செந்துறைப் பாடாண்பாட்டு***

*உலகில் இயற்கை வகையில் இயன்ற சாதாரண மக்களைப் பாடுதல் ஆகும். இதுவே செந்துறைப்பாடாண் பாட்டு எனப்படும். மன்னர்களது வீரம், கொடை முதலிய இயல்புகளை மன்னனின் முன்னிலையிலும், படர்கையிலும் பாடுவதாக உள்ளது.*

***“வெல் புகழ்க் குட்டவற் கண்டோர்***
***செல்குவம் என்னார், பாடுபு பெயர்ந்தே”*** [80]

*என்ற பாடல் மன்னனின் சிறப்பைச் சுட்டுகிறது.*

***வஞ்சித் துறைப்பாடாண் பாட்டு***

*மன்னன் படையெடுத்துச் செல்லுதலும், பகைவரின் நாட்டில் உள்ள இடங்கள் அழிதலும் ஆகியவற்றைக் கூறுதல் இத்துறையின் பாற்படும். இவற்றில் பகைவரின் புகழ்கெடும்படியாகவும் சினம் அழியும்படியாகவும் அவர்களின் தன்மையைப் பாடியுள்ளமை இத்துறையின்பாற்படும். இதற்கு இலக்கணங்கள் கூறப்படவில்லை. இது புதிய துறையாகும்.*

***“ஆள்மலி மருங்கின் நாடுஅகப் படுத்து***
***நல்இசை நனந்தலை இரிய, ஒன்னார்***
***உருப்பு அற நிரப்பினை ஆதலின், சாந்து புலர்பு***
***வண்ணம் நீவி வகை வனப்புற்ற”*** [81]

*என்ற வரிகள் மூலம் சான்றாகிறது.*

***வாகைத்துறை பாடாண் பாட்டு***

*மன்னனின் புகழ், தானையைப் பாதுகாக்கும் தன்மை ஆகியன குறிப்பிடப்படும். மேற்கண்டதைப் போல இதுவும் புதிய துறையாகும்.*

***வாகை***

*தொல்காப்பியம் இதனைத்திணையாகக் குறித்தாலும் பதிற்றுப்பத்தில் துறையாகப் பாடப்பட்டு வந்துள்ளமை நோக்கத்தக்கது.*

> ***"காஞ்சி சான்ற செருப் பல செய்து, நின்***
> ***குவவுக் குரை இருக்கை இனிது கண்டிகுமே***
> ***காலை, மாரி பெய்து, தொழில் ஆற்றி***
> ***விண்டு முன்னிய புயல் நெடுங்காலைக்***
> ***கல் சேர்பு மா மழை தலைஇ***
> ***பல்குரல் புள்ளின் ஒலி எழுந்தாங்கே"*** [82]

*என்ற அடிகள் மன்னனின் வெற்றிச் சிறப்பைப் பாடி நின்றன.*

***காட்சி வாழ்த்து***

*இதுவும் இலக்கணம் சுட்டாத துறையாகும். இவை மன்னரின் சிறப்பை அவர்களை நேரில் கண்டு வாழ்த்தும் பொருளில் அமைந்துள்ளது.*

> ***"வள்ளியை என்றலின் காண்கு வந்திசினே***
> ***உள்ளியது முடித்தி வாழ்க நின்கண்ணி"*** [83]

*என்ற பாடலில் உன்னைக் காணவந்து பாடினேன். மிகச் சிறப்பு மிக உன்னுடைய கண்ணி வாழ்க என்று குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.*

***குரவை நிலை***

*புற இலக்கணங்களில் இத்துறையும் ஒன்று. மகிழ்வில் (வெற்றியின்) மகளிரின் துணங்கைக் கூத்து ஆடியதனால் அவனது மனைவி ஊடலைக் கொண்டமையை இத்துறை சுட்டி நிற்கிறது.*

> ***"சுடரும் பாண்டில் திரு நாரு விளக்கத்து***
> ***…………………………………………***
> ***நளிந்தனை வருதல், உடன்றனள் ஆகி"*** [84]

*என்ற பாடலில் மகளிரோடு துணங்கைக் கூத்தை ஆடியதை மனைவி கண்டு ஊடல் கொள்கிறாள்.*

***உழிஞையரவம்***

*இத்துறையும் இலக்கணத்தில் குறிப்பிடப்படவில்லை. மக்கள் போருக்கு எழும்போது ஏற்படும் அரவமே "உழிஞையரவம்" என்ற துறையாக கொள்ளப்பட்டுள்ளது. இதனை,*

***"மன்பதை பெயர அரசுகளத்(து) ஒழிய***
***கொன்றுதோள் ஓச்சிய வென்(று)ஆடு துணங்கை***
***மீபிணத்(து) உருண்ட தேயா ஆழியின்***
***பண்அமை தேரும் மாவும் மாக்களும்***
***எண்ணற்(கு) அருமையின் எண்ணின்றோ இலனே"*** [85]

*என்ற பாடல்வழி அறியலாம். இதுவரை புறத்திணையின் துறைகள் குறித்து ஆராய்ந்தோம். இனி புறத்திணையில் இயற்றப்பட்ட நூல்கள் குறித்து ஆராய்வோம்.*

***திருமுருகாற்றுப்படை***

*பத்துப்பாட்டின் முதற்பாட்டாக அந்நூலின் கடவுள் வாழ்த்து அமைந்து சிறக்கிறது. ஆரம்ப நிலையில் துன்பப்படுவோரைக் காக்குமாறு முருகனிடம் வேண்டுதல் என்ற நிலையில் இருந்து முருகனிடம் ஆற்றுப்படுத்துதல் என்னும் நிலைக்கு மாறியது திருமுருகாற்றுப்படை ஆகும். இது ஆசிரியப்பாவால் ஆன நூலாகும். ஆற்றுப்படை என்னும் துறையைச் சேர்ந்ததாகும்.*

*முதல் பகுதியில் திருப்பரங்குன்றம் என்னும் மலைக்கோயில் வளம், முருகனின் கோலம், சூரனுடன் முருகன் செய்த போர் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.*

*திருச்செந்தூர்த் தலம், ஆறுமுகங்கள், பன்னிரு தோள்களின் செயல்கள் என்றவாறு இரண்டாம் பகுதியில் குறிப்பிடப்படுகிறது. மேலும் திருமுருகாற்றுப்படையில் திருச்செந்தூர். திருவேரகம், பழமுதிர்சோலை, மலைப்பகுதி ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. இது 11 – ஆம் திருமுறையாகப் போற்றப்பட்டுள்ளது. முருகன் கிடைத்தற்கரிய பரிசிலை நல்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை உணரத்தக்கது.*

***பொருநராற்றுப்படை***

*பொருநர் என்பது ஒருவரைப் போல வேடமிட்டுப் பாடுபவரை பொருநர் என்பர் இவர்களுள் ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநர் என்ற மூன்று வகையில் வேளாண்மை, போர்க்களம், மன்னனின் வெற்றி ஆகியவற்றைப் பாடுநர். இவற்றில் போர்க்களம் பொருநரைப் பற்றி பொருநராற்றுப்படை கூறுகிறது.*

*மேலும், ஏழடி சென்று வழியனுப்புதல், வரவேற்றல் என்பது தமிழரின் பண்பாடு. பொருநர்களை வரவேற்று உபசரித்தல் மற்றும் வழியனுப்புதல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்தான் கரிகாலன் என்றும் இரவலர்க்கு பரிசளித்தமையையும் இரவலர்கள் உண்ணும் தன்மையையும் முடத்தாமக்கண்ணியார் கூறுவது இவண் உணரத்தக்கது. இதில் பொருநர் பாடும் இசையில் ஆறலைக் கள்வரும் மயங்கித் தம் தொழிலை விட்டு அருள் மனம் கொண்டவராக மாறினர். இதில் பாடினியின் பாதாதி கேச வருணணை, கரிகாலனின் வெற்றி, சோழ நாட்டின் வளம், நீர் வளம்,நில வளம் ஆகியவற்றை முடத்தாமக்கண்ணியார் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

இவர் கடையேழு வள்ளல்கள் குறித்தும், அவர்களின் அருமையான குணங்கள் பற்றியும் கூறியுள்ளமை இவண் சுட்டத்தகும்.

**பெரும்பாணாற்றுப்படை**

இது ஆசிரியப்பா என்னும் பாவில் அமைந்தது. இதனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றியுள்ளார். இதன் பாட்டுடைத் தலைவர் தொண்டைமான் இளந்திரையன் ஆவார்.

இந்நூல் பாணன் யாழின் வருணனை , பாணன் வறுமை, உப்பு வணிகர் செல்லும் வழி, எயிற்றியர் குடிசை, பாலை நிலக் கானவர், எயினர்,குறிஞ்சி நில மக்களின் இயல்பு, கோவலர் குடியிருப்பு, அந்தணர் உறைவிடம், பட்டினத்து மக்களின் பாங்கு ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் குறிஞ்சி நில மக்கள் ஏற்றை அறுத்து உணவு, அரிசிக்கல், அவரை, பருப்பு கலந்த வரகு சோறு, நெல்லரிசியுடன் கோழி வறுவல், தினைச் சோறு, பால், மீன் இறால், முயல்,பன்றி, ஈந்தின் விதை, உடும்புப் பொரியல், புல்லரிசி, கருவாட்டுக் குழம்பு, கருடன் சம்பா, நெய்ச்சோறு, கறிவேப்பிலை கருவேம்பு, மிளகு, மாதுளைக்கறி, மாவடு ஊறுகாய் ஆகியவற்றை உணவாகக் கொண்டனர்.

பெரும்பாணாற்றுப்படையில் அக்காலத்திலேயே கலங்கரை விளக்கம் இருந்த காட்சியை (346-350) என்ற வரிகள் சுட்டி நிற்கின்றன. மேலும், (கோவை) கோவன்புத்தூர் என்றும் சிராப்பள்ளி (திருச்சி) முகப்பு ஏரி (முகப்பேர்) என்ற பெயர்கள் பெரும்பாணாற்றுப்படையில் சுட்டப் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

**சிறுபாணாற்றுப்படை**

சிறுபாணாற்றுப்படை பத்துப்பாட்டுள் மூன்றாவது நூலாக இடம்பெற்றுள்ளது. இஃது ஆசிரியப்பாவால் ஆனது. 269 அடிகளைக் கொண்டது. பழம்பெரும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். பிற்காலத்தில் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனாரும் வேறு சிலரும் உரை எழுதி உள்ளனர். யாழ்ப்பாணர்களுள் பெரிய யாழை இசைப்பவர் பெரும் பாணர், சிறிய யாழை இசைப்பவர் சிறுபாணர் என்றும் அழைக்கப் பெறுவர். நல்லியக்கோடன் என்பவன் ஒரு சிற்றரசன். இவனைப் புகழ்ந்து பாடிய சிறுபாணன் ஒருவன் பரிசு பெற்று வருகிறான். இவன், தன் எதிரில் வந்த வேறு ஒரு சிறுபாணனை இம்மன்னனிடம் சென்று பரிசுபெறும் வகையில் நெறிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஒரு சிறுபாணன் வேறு ஒரு சிறுபாணனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் **சிறுபாணாற்றப்படை என்னும் பெயர் பெற்றது.** இனி அடுத்த நூலான கூத்தராற்றுப்படை குறித்து நோக்குவோம்.

**கூத்தராற்றுப்படை**

இதுவும் ஆற்றுப்படை நூல்களில் ஒன்றாகும். ஆசிரியப்பாவில் 583 வரிகளை உடைய பெருங்கௌசிகனார் இயற்றிய பாடலாகும்.

பேரியாழின் இயல்பினைக் "கூத்தராற்றுப்படை" விளக்குகிறது. கூத்தர்கள் இசைக்கருவிகளைச் சிறுசிறு முடிச்சுகளாகக் கட்டி தொங்கவிட்டுச் சென்றுள்ளனர். சங்ககாலத்தில் முழவு (பாணி), ஆகுளி (சிறுபறை), பதலை (தபேலா), கோடு (கொம்பு), தூம்பு (நெடு வங்கியம்), குழல் (புல்லாங்குழல்) யாழ், பாண்டில(ஜால்ரா) ஆகியவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை தோல் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள்,கஞ்சக் கருவிகள் என்றவாறு கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கூத்தர்கள் பேரியாழை வைத்திருந்தமைப்பற்றி மலைபடுகடாம் சுட்டுகிறது. மேலும் பன்றிப் பொறிகள், பாம்புக் குழிகள், யானைகளை விரட்ட கவண் கற்கள், வழுக்கும் இடங்கள், மலைக்காட்சிகள் ஆகியன வருணிக்கப்பட்டுள்ளது. மலையில் வழிமாறி செல்பவர்களை மலைக்குறவர்கள் உதவி செய்து வழியனுப்புவர்.

மேலும், நன்னன் சேய் நன்னன் என்னும் வள்ளலின் சிறப்பு விதந்தோதப்படுகிறது. நன்னன் பொற்றாமரை அணிகலன்கள் ஆகியன கொடுத்த கொடைச் சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

**மதுரைக்காஞ்சி**

சங்கத்தமிழ் பத்துப்பாட்டில் உள்ள நுல்களுள் மிகவும் நீளமானது மதுரைக்காஞ்சி. மாங்குடி மருதனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டள்ளது. 782 அடிகளை உடைய இந்நூல் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கு உலகியல் உணர்த்துவதாய் அமைந்துள்ளது. பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையின் அழகையும், வளத்தையும் அந்நாட்டின் ஐவகை நிலங்களைப் பற்றியும் கூறுகின்றது. இப்பாட்டின் தொடக்கத்தில் திரைகடல் சூழ்ந்த ஞாலம் பற்றிப் பாடும் புலவர் பிறகு தேன் கூடுகள் நிறைந்திருக்கும் மலையுச்சிகளைப் பற்றியும் கூறுகிறார். இந்த உவமைகள் இயற்கை வளம் குறித்துப் பாடும் பொருட்டு அமைந்தவை அல்ல. வாழ்க்கை அலை போன்று நிலையில்லாதது. எனவே நல்லறங்கள் செய்து மலைபோல் என்றும் அழியாப் புகழைத் தேடிக்கொள் என்று மன்னனுக்கு மறைமுகமாய்க் கூறுகிறார்.

இதுவரை சங்கப் புற நூல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டன. இனிப் பதினெண் கீழக்கணக்கு நூல்களில் புறம் பற்றிப் பேசும் நூல் ஒன்று களவழி நாற்பது. இனி அது கூறும் செய்திகளை நோக்குவோம்.

**களவழி நாற்பது**

இந்நூலை இயற்றியவர் பொய்கையார். இது 40 பாடல்களை உடையது. இது வாகைத்திணையில் இயற்றப்பட்டது. களவழி நாற்பதில் போர்க்களம் பற்றி பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழன் கோச்செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறை. போர் கழுமலத்தில் நடைபெற்றது. அதில் கணைக்கால் இரும்பொறை சிறை வைக்கப்பட்டான். சேரமான் கணைக்கால் இரும்பொறை தோற்றவுடன் அவனைச் கோச்செங்கணான் சிறை

வைத்தான். அதில் நீர் வேட்கை காரணமாக நீர் கேட்க அந்த நீரினைக் காவலாளி தாமதமாகத் தருகிறான். அதனால் மானத்தைப் போற்றிய இரும்பொறை வடக்கிருந்து உயிர் துறந்தமையை புறம் – 74 ஆம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. ஆனால் இரும்பொறையின் சிறப்பறிந்த பொய்கையார் கோச்செங்கணானின் மனம் குளிர அவனுடைய வெற்றியைக் களவழி நாற்பதில் பாடியுள்ளார். மேலும், கோச்செங்கணானும் பொய்கையாரின் கருத்தை ஏற்று இரும்பொறையை விடுதலை செய்ய ஒப்புதல் அளித்தான். எனினும் இழிநிலையை விரும்பாத கணைக்கால் இரும்பொறை உண்ணா நோன்பிருந்து இறந்தமையைக் காண்கிறோம். இதில் புலவரின் இனிய மனமும், கோச்செங்கணானின் இரக்கமும். இரும்பொறையின் தன்மானமும் தெரியவருகிறது. களவழி நாற்பதில் யானைப்போர் மிகுதியாகப் பாடப்பட்டுள்ளது. யானைப் பற்றிய காட்சிகள் சுட்டப்பெற்றுள்ளன. அட்டகளத்து என்று களவழி நாற்பதின் 40 பாடல்களும் முடிகின்றன. இது தொல்காப்பியரின் “அம்மை“ என்னும் வனப்பு வகையைச் சார்ந்தது.

**புறப்பாடல் உணர்த்தும் செய்திகள்**

- இல்வாழ்வு முறை
- சமூக உணர்வு
- பண்பாடு
- போர்
- வீரம்
- தொழில்
- ஊரின் அமைப்பு
- பொதுமை நோக்கு
- குடியிருப்பு இடங்கள்
- வெற்றி – தோல்விகள்
- கால வகைகள்
- விலங்குகள்
- யாழ் வகைகள்
- பறை வகைகள்
- வரலாற்று உண்மை
- வானியல்
- தீங்கற்ற போக்கு
- நட்பு
- இயற்கைப் பிரிவு
- வழிபாடு
- நம்பிக்கை
- கொடை
- வரலாறு
- அறம்
- விழுமியங்கள்
- வாழ்வு நிலை மாற்றங்கள்
- எழுச்சிகள் - வீழ்ச்சிகள்
- பொருளீட்டு முறை
- பறவைகள்
- ஊர் வகைகள்
- பண் வகைகள்
- தாவர வகைகள்
- உளவியல் செய்தி
- நீதி முறை
- பிறன் நலன் விழை

ஆகியவற்றை உணர்த்தி நிற்கிறது. அக வாழ்வினைத் தவிர்த்த அனைத்தும் புறவாழ்வென கூறிவிட முடியும். மேற்கண்ட தலைப்புகளுள் புறப்பாடல் செய்திகளைச் சுட்டிக் கூறலாம். இனி சங்க மக்களின் வாழ்வு குறித்து ஆராய்வோம்.

**புகழ்பட வாழ்தல்**

புகழ் எனின் உயிரையும் கொடுத்து பழியெனின் உலகெல்லாம் கொடுப்பர் கூட அதைப் பெற்றுக் கொள்ள வெண்டாமென மறுக்கும் மனத்தைப் பெற்றவராய்த் தமிழர்கள் வாழ்ந்தனர்; இது புதிய துறையாகும்.புகழுக்காக ஈதலை செய்கின்ற தன்மையை,

> **"இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது**
> **கொள் என விடுவை ஆயின், வெள்ளென**
> **ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்,**
> **ஈண்டுநீடு விளங்கும்நீ எய்திய புகழே."** [86]

என்ற வரிகளில் மேற்கண்ட கூற்றுகளுக்கு அரணாகின்றனர். மேலும்,

> **"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
> **தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே;"** [87]

இவற்றுள் பொருளை ஈவது வெறும் புகழுக்காக என்று நினைப்பின் அது உண்மையல்ல. தங்களை நாடி வந்தோர்க்கு நல்லது செய்தல் வேண்டும் என்ற உணர்வே இச்செய்திக்கு இடமளிக்கும்.

**புறப்பொருள் புலவர்களின் படைப்பாளுமை**

சங்க இலக்கியம் என்பது அக்கால மக்களின் அன்பு, அறிவு, அருள், அடக்கம், அமைதி, ஆற்றல். ஆசை, இன்பம், துன்பம், இரக்கம், ஈகை. உண்மை, உயர்வு, மானம், ஊக்கம், எழில், எளிமை, அவலம், ஏற்றம், ஐயம், கல்வி, உயர்வு, மேன்மை ஆகியவற்றை உணர்த்தி நிற்கிறது.

மன்னர்கள், மக்கள், தலைவன், தலைவி, பறவைகள், உணர்வுகள், உணவுகள், போர்கள், நிலையாமை, ஏற்றத்தாழ்வு போன்றவற்றையும் இவை சங்க இலக்கியங்கள் தன்னுள்ளே கொண்டுள்ளன. இவை சுமார் எட்டாயிரம் ஆண்டுகள் ஆன பின்னும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் புலவர்களின் அறிவுசால் மேம்பாடு என்பதும் அதற்கு அவர்கள் கற்ற கல்வி கை கொடுத்திருக்கும் என்பதும் உண்மையாகும். புலவர்களின் சொற்கள் பல நூற்றாண்டு கழித்தும் மக்கள் மனதில் நின்றிருப்பதற்குக் காரணம் அவர்கள் படைப்பு மகத்துவம் மிக்கதாய் அமைந்திருப்பதே காரணமாகும்.

**புலவர்கள் செயல்கள்**

பிழை புரிந்தவர்கள் நம்மவர்கள் என்று அவர்களைத் தண்டிக்காமலும், பகைவர்கள் என்று பிழை புரிந்தவர்களைத் தண்டித்தலும் தவறு என்று அரசர்களுக்கு நடுவுநிலமையை எடுத்தரைத்தனர் புலவர்கள்.

**புலவர்கள் பெற்றவை**

வேந்தர்கள் புலவர்கள் மீதுள்ள அன்பினால் பரிசுப் பொருள்களைத் தந்துள்ளனர்.

1. **தன் நாட்டு ஆட்சியைக் கொடுத்தல்**
2. **ஊர்களைக் கொடுத்தல்**
3. **ஆட்சி உரிமையில் பங்கெடுத்தல்**
4. **புலவர்கள் குன்றேறி நின்று கண்ணிற்பட்ட இடங்களை எல்லாம் பெறல்**
5. **அரசனுடைய வருவாயில் பங்களித்தல்**
6. **புலவரும் அவரது மனைவியும் மேலுலகம் செல்ல வேண்டி வேள்வி செய்தல்**
7. **அரசனுடைய மகனையே புலவருக்குத் தொல் கடனாற்றக் கூறுதல்**
8. **பதினாறாயிரம் என்று ஆயிரக்கணக்கில் பரிசு பொருள் அளித்தல்.**

என்றவாறு பல்வேறு பரிசுகளை அரசன் புலவருக்கு அளித்துள்ளான்.

**புலவர்களின் அறவுரைகள்**

- அரசன் இரக்கம், கருணை கொண்டு நல்லாட்சி நல்குதல் வேண்டும்.
- அரசுக்கு கீழே பணியாற்றும் பணியாளர்கள் முறைப்படி நடந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.
- உலகில் இயற்கையைச் சரியாகப் பயன்படுத்துமாறு ஆட்சி செய்தல் வேண்டும்.
- மக்களிடையே நேர்மையைக் கொண்டிருக்க வேண்டும்.
- கொலை. கொள்ளை, துன்புறுத்தல் ஆகிய பண்புகள் மக்களிடையே அறவே இருக்கக் கூடாது.
- அறிவுடைய அமைச்சர்கள் புலவர்களின் அறிவுரையைக் கைக் கொண்டு ஆட்சி செய்ய வேண்டும்.
- கடமையைத் தவறாது செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.
- அனைத்திற்கும் அடிப்படை உழவு. எனவே உழவரைப் பாதுகாத்தல் வேண்டும்.
- இரவலர்களுக்கு வேண்டும் உணவினைத் தருதல் வேண்டும்.
- அறத்தை, அன்பைச் செலுத்தி ஆட்சி வேண்டும்.
- யானை புகுந்த நிலம் போல அல்லாமல் குடிமக்களின் நிலையறிந்து வரிவாங்குதல் வேண்டும். உள்ளிட்ட பல்வேறு அறி(ற)வுரைகளை வேந்தர்களுக்குப் புலவர்கள் நல்கியுள்ளமை இவண் கருதத்தகும்.

***புலவர் – அரசர் உறவு***

*இவ்வுலகில் பல்வேறு செயல்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. சில தோன்றியவுடன் மறைந்து விடுகின்றன. சில பல காலம் நிலைத்து நிற்கின்றன. அவ்வாறு நிலைத்து நிற்பதில் முக்கியத்துவம் வாய்ந்தது புகழ் என்பது ஆகும்.*

> **"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்**
> **தோன்றலின் தோன்றாமை நன்று"** [88]

*என்பார் வான்புகழ் வள்ளுவர். அந்த புகழை. இறவா சிறப்புடையதைப் புலவர்கள் வாயிலாகப் பெற வேண்டும் என்பது வேந்தனின் பெருவிருப்பமாக இருந்து வந்துள்ளது. புலவர்களால் பாடப்படாமையைத் தங்களின் வாழ்விற்கு இழுக்கு என்று அரசர் கருதியமையும் இவண் சுட்டத்தகும். அரசன் ஒருவன் எவரையும் கண்டு மயங்காதவனாக இருந்தாலும் கூட புலவர் எனில் மயங்கி நிற்பது கண்கூடு. புலவருடன் நட்பு கொண்டிருந்த அரசர்கள், புலவராகவே இருந்த அரசர்கள் , புலவரைப் போற்றிய அரசர்கள் எனச் சங்ககாலம் தம்மிடைய பல்வேறு அரசர்களை அறிமுகப்படுத்தியுள்ளது.*

***அரசர்கள் புலவரை போற்றிய முறைகள்***

*ஆயிரம் அலுவல்கள் உடையவன் அரசன் எனினும் கூட புலவரைப் பேணுதலையும் போற்றுதலையும் மரபாகவே கொண்டுள்ளான் அவன். இதனை எடுத்துக்காட்டப் பல்வேறு அகச் சான்றுகள் சங்கப் புதையலில் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றைத் தோண்டி எடுப்பின் அக்கருத்துகள் வைரமாய் மின்னி காண்போரை வசப்படுத்தும்.*

***மகனை தொல்கடனுக்கு அனுப்புதல்***

*பரணர் பல்வேறு பாடல்களைப் பாடியவர். இவர் வரலாற்றுப் புலவர் என்று ஆசிரியர்களால் மதிக்கப்படுவர். தம்முடைய ஒவ்வொரு அகப்பாடலிலும் ஏதேனும் ஒரு வரலாற்றுச் செய்தியை வைத்துப் பாடிச் சிறப்பித்துள்ளார். அவ்வகையில் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் பரணரின் பாடல் புலமையைப் பாராட்டி தன்னுடைய மகனையே அவனுக்கு தொல்கடன் தொண்டு செய்ய உடன் அனுப்பினான் என்ற செய்தி இவண் சுட்டத்தக்கது. பதிற்றுப்பத்தின் 5 – ஆம் பத்தில் இச்செய்தி காணப்படுகிறது.*

*அரசன் என்பான் அக்காலத்தில் இறை என்று மதிக்கப்பட்டிருந்தான். அவனே சட்டம், அவனே ஆட்சி அவன் நாவிலிருந்து புறப்படுபவையே நீதி என்றவாறு இருந்த காலம். அனைத்தையும் தீர்மானிக்கும் சர்வ வல்லமையும் அதிகாரமும் அவனுக்கு இருந்தது. அரசன் நினைத்தால் கேள்விகளற்று எதையும் நிறைவேற்றும் அதிகாரம் அவனுக்கு இருந்தமையைப் பழங்கால நூல்கள் சுட்டி நிற்கின்றன. அவன் எடுக்கும் எந்தவொரு முடிவுக்கும் யாருக்கும் சான்று காட்ட கூடிய தேவை அவனுக்கு இல்லை. அவன்நிலை இதுவெனில் அனுடைய மக்களை எவ்வாறு புறந்திருப்பான்? என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் தன்னுடைய பிள்ளைகளை எவ்வாறெல்லாம்*

*வளர்க்க வேண்டும் என்ற கனவு கண்டிருப்பான். ஆனால் புலவர் மேல் இருந்த அன்பினால் தன் மகனையே அவனுக்குத் தொண்டு செய்ய அனுப்பிய அரசனின் பெற்றியை என்ன வென்று சொல்வது.?*

*புலவர்கள் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்துபவர் எனினும் அவரைத் தாழ்வாக நினையாமல் அவர்களுக்குச் சமமான மரியாதை அளித்ததுடன் தன் மகனையே பணிசெய்ய வார்த்த தன்மை தமிழ் மன்னர்களின் தகைமையைக் கூற வார்த்தைகள் இல்லை இவ்வாறு பரணருக்குக் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் தன் மகனையே தொல்கடனுக்கு அனுப்பிய நிகழ்வை இன்று மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட அரசினை சிந்தித்துப் பார்க்கும் போது ஏக்கம் மேலிடுவதைத் தவிர்க்க முடியவில்லை.*

***வாயிலினுள் நுழைதல் எளிது***

*இன்று சாதாரணமாக ஒருவரது வீட்டினுள் நுழைவது அரிது. இவ்வாய்வாளரின் அண்டை வீட்டினர் ஒருவர் வீட்டில் திருடுபோய் விட்டது. நான்கு நாட்கள் தொடர்ந்து வெளியூரில் இருந்துவிட்டதனால் திருடர்களுக்குக் கொண்டாட்டமாகிவிட்டது. தங்களின் தொழில் திறமையைக்காட்டிவிட்டனர். இதனைப் பார்த்த பின் ஆய்வாளரின் மூன்றாம் வீட்டுக்காரர், வேகவேகமாக இருக்கும் காலி இடங்களை அடைத்து காற்றுகூட புக முடியாத கதவை உருவாக்கினார். அத்துடன் யாருமற்ற தனிமையே அத்தம்பதியினருக்குத் துணையாகிறது. தனிமையில் உழன்று நோயும், மனநோயும் பெருகி அல்லலுரும் மாக்கள் அவர்கள். இன்று, எவரும் எவர் வீட்டினுள்ளும் செல்வதுமில்லை. இல்லத்திற்கு வருவோரை அழைப்பதுமில்லை. கோயில் வாசலில் இரவலர்கள் நிற்கும் காட்சி அந்தோ... பரிதாபம்.*

*ஆனால் அக்காலத்தில் பசியால் தவித்துக் குரல் காட்டும் கன்றிடம் இரங்குவது போல இரங்கி துன்பங்களைப் போக்கினான்.முதலில் பரிசில் பெற வரும் இரவலர்களை, அன்போடு அழைத்து அவர்கள் அணிந்திருக்கும் அவ்வாடையானது கந்தையாய், கசங்கி, பாசி பிடித்து அழுக்கு நாற்றத்துடன் இருக்கிறது. அவற்றை எடுத்துவிட்டு பெருதற்கரிய பட்டாடைகைளை வழங்குகிறான். அப்பட்டாடைகள் அவர்களுக்கு மகிழ்வைத் தருகின்றன. பின்னர் பெறுவதற்கு அரிதான தேறலைப் பெறச் செய்கிறான். இதனால் பரிசிலரின் மனத்துன்பமும் உடல் துன்பமும் நீங்குகிறது. இவ்விடத்தில் ஒரு செய்தி ஆழ்ந்து நோக்கத்தக்கது. யாதெனில், ஏன் முதலில் அவர்களுக்குப் புத்தாடைகளை வழங்குகிறான். ஏன் அவர்களை ஆரத்தழுவுகிறான். ஏன் அவர்களுக்கு வேண்டிய உணவளித்து, தானே பின் சென்று வழியனுப்புகிறான்.*

*முதலில் பரிசில் கேட்டு வரும் புலவரின் உள்ளம் சிறிதளவும் தொய்ந்து விடலாகாது. அதனால் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி இருப்பினும். அவனை அழைத்து முதலில் கட்டி அணைத்து அவனை அழைப்பதன் மூலம் அவன் (இரவலன்) முகம் மற்றும் அகத்தை மலரச் செய்து அவன் அன்புக்குப் பாத்திரமாகிறான்.*

அடுத்ததாக “ஆள்பாதி ஆடை பாதி” என்பதற்கேற்ப அழுக்கடைந்த ஆடையுடன் வரும் புலவர்களை அழைத்து அவர்களும் புதிய ஆடைகளை அணிவித்து அவர்களுக்குத் தேவையான ஆடைகளை வழங்குகிறான்.

பின்னர் அவர்களை அழைத்து இனிய மதுவினை வழங்குகிறான். இத்தகைய உபசரிப்பில் உள்ளம் குளிர்ந்து, அவன் வழங்கும் பல்வேறு வகையான மதுவினைப் பருகி இன்பமடைகிறான். மேலும் அவர்களின் பற்கள் மழுங்கிப் போகும் வண்ணம் உணவினை உண்ணச் செய்கிறான். இவ்வாறு இரவலனுக்கு உணவளித்த நிலையைப் பொருநராற்றுப்படை செப்புகிறது.

**மன்னனின் அருமை**

மன்னன் அனைத்தையும் தந்து இரவலர்களை காப்பவர்களாக உள்ளதை காணமுடிகிறது. எனவே இரவலர்களின் துயர் துடைப்பவனாக, அவர்களை ஏற்று அன்புடன் உபசரிப்பவனாக உள்ளான். எனவே அவனை இழக்கும் சூழலில் புலவர்கள் பாடும் பாடல் நெஞ்சை உருக்குவனவாகவும், கையறுநிலையிலும் அமைந்துள்ளமை இவண் சுட்டத்தக்கது. சான்றாக,

**“இனி, பாடுநரும் இல்லை, பாடுநருக்கு ஒன்று ஈகுநரும் இல்லை”** [89]

இப்பாடலில் புலவர் இனிபுலவர்களைப் பேணுபவர் இல்லை. அதனால் அரசர்களைப் பாடுபவரும் இல்லை என்று வருந்துகிறார். வறியவர் ஆயினும் அன்புடன் உபசரிக்கும் அரசர்களைக் கண்டு மகிழ்ந்து வாழ்ந்த நிலையைக் கற்போர் உணருகிறோம். மன்னனுடைய மார்பில் பட்ட வேலானது பாணருடைய மண்டையைத் துளைத்து, இரந்து நிற்பவரின் கையைத் துளைத்து, சுற்றத்தினரின் கண்ணின் ஒளியை அழித்து அறிவுடைய புலவரின் நாவில் சென்று வீழ்ந்ததாகக் கவிஞர் பாடியுள்ளார். இவ்வாறு புலவர் கூறுவதிலிருந்து புலவர் வாயால் அவர்கள் பெற்ற வாழ்த்தினை உணரமுடிகிறது. புலவர்களினால் பாராட்டப்படுவதைப் பெரும் பேறாக ஆட்சியாளர்கள் கருதியது நோக்கத்தக்கது. எனவே புலவர், புலவரிடையே தோன்றிய அன்பு (நட்பு) வெறும் பொருளுக்காக மட்டும் அன்று என்பதை உணரலாம்.

**தன் மகள் போல போற்றுதும்**

புலவர்கள் தங்கள் குடும்பத்தினரைக் கருதி வந்ததைப் போலவே அரசனின் குடும்பத்தினரையும் தங்களுக்குள் ஒன்றாகக் கருதி வந்தனர். இதனைப் பாரி மகளிரைத் தம் மகளாக ஏற்று திருமணம் செய்விக்க முயன்ற கபிலர் கட்டாயம் நம் நினைவை எட்டுகிறார்.

**அரசரிடம் அன்பு**

புலவரிடம் வேந்தர்கள் அன்பு கொண்டிருந்தனர். புலவர் மன்னன் மீதான அன்புள்ளம் பின்வரும் பாடல்களின் மூலம் விளங்குகிறது.

**“அன்னன் ஆகலின் எந்தை உள் அடி**

**முள்ளும் நோவ உறாற்கதில்ல”** [90]

என்னும் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூற்று. பலவரின் அன்பினைக் காட்டுகிறது. அதாவது அரசனின் காலடியில் சிறுமுள்ளும் குத்தாது போக வேண்டும் என்ற பாடுவது இவண் உணரத்தக்கது. எப்போதும் தம்மை நாளும் கவனிக்கும் தலைவன் தம் நெஞ்சிலே இருப்பதை,

**“என் நெஞ்சம் திறப்போர் நிற் காண்குவரே”** [91]

என்ற பாடல்வரி புலப்படுத்துகிறது.

**புலவரை மதித்தல்**

புலவர்கள் மிதான அன்புக்குக் காரணம் அவர் மீதான அறிவுக்காரணமே ஆகும். தமிழறிந்த நல்லறிஞர்கள், மன்னனின் மனதில் இடம்பிடித்தனர். ஒருமுறை புலவர் மோசிகீரனார், மன்னனைக் காணச் சென்றார். அப்போது களைப்புத் தோன்றியது.எனவே அங்குக் காணப்பட்ட கட்டில் ஒன்றில் படுத்து அயர்ந்து உறங்கி கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக அரசன் இரும்பொறை வந்தான். அவனுடைய முரசு கட்டிலில் துயின்று கொண்டிருந்த கீரனாரைப் பார்த்தான். முரசுக்கட்டில், வெண்கொற்றக்குடை, செங்கோல் ஆகியவை அரசனுக்க நிகராக வைத்து வணங்கத்தக்கன. ஆனால் களைப்பு உடலை வருத்த கண்கள் சோர உடல் ஓய்வுக்கு அழைக்க கண்ணயர்ந்துவிட்டார் கீரனார். அது கண்ட காவலனுக்கோ, கோபம் கனன்றது. படுத்திருப்பவரைப் பார்த்து வெட்ட வேண்டும் என்ற ஆத்திரம் கிளம்பியது. ஆனால் அருகில் சென்ற போது மோசிகீரனாரைக் கண்டு மனம் மகிழ்ந்து கவரி வீச ஆரம்பித்தான். இதனால் விழித்த மோசிகீரனார் இரும்பொறையின் செயலைக்கண்டு திகைத்து, பேரின்பம் உற்றார். தவறு செய்த தம்மைத் தண்டிக்காமல் தொண்டு செய்த அரசனின் செயலை உன்னினார். மனம் மகிழ்ந்து தமிழின் மீதுள்ள அவன் பற்றைப் பாடலாகப் பாடினார்.

**“அதூஉம் சாலும் , நல் தமிழ் முழுது அறிதல்”** [92]

என்ற அடியில் அவ்வரசனின் தமிழன்பை எடுத்துக்கட்டியுள்மை அறியத்தக்கது.

**எவ்வுயிரையும் தம்முயிர் போல் கருதுதல்**

இரக்கம் அன்பு இவை அருள் மிக்க உள்ளத்தில் இடம்பெறும். மனித உயிரின் சிறப்பே அதுதான். உலகில் தோன்றும் உயிர்கள் அனைத்திற்கும் உணர்வுண்டு. அவ்வுணர்வை மதித்து நடத்தலே மாண்பாகும். தன் வாழ்வில் தான் சார்ந்த மனிதர்களின் உணர்வுகளை மதித்த மனிதனே தலைவன் என்னும் உணர்வினைப் பெறுகிறான். உற்று நோக்கும் போது, தன் தொண்டர்களின் மனநிலையை உணர்ந்த மனிதன், தலைவன் பதவியில் நீடித்து நிற்பான். ஏனெனில் தலைவனின் மனதில் தான் இருக்கிறோம் என்பது

தொண்டர்களுக்கு மகிழ்வைத்தரும். தலைவனின் இதய சிம்மாசனத்தில் அவன் அமர்கிறான். எனவே நிஜ சிம்மாசனம் அவனை விட்டு அகலுவதே இல்லை.

அதே போல வீட்டுத் தலைவன் என்பவன் தன் மனைவி, மக்கள் மீது அன்பு கொண்டவனாக, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவனாக திகழ வேண்டும். அப்போது தான் அவன் வெற்றி பெற்ற குடும்பத் தலைவனாக ஏலும். இவ்வாறு சக மனிதர்கள் மீது காட்டும் அன்பானது "தலைவன்" என்ற உயர் பதவியை அளிக்கிறது. ஆனால் அதையும் தாண்டி அஃறிணை உயிர்களின் மீது தலைவர்கள் காட்டிய அன்பு உலக மக்கள் உள்ளத்திலும் நீங்கா புகழைப் பெற்று விடுகிறது. நூற்றாண்டுகள் பல கடந்தும் அவர்கள் மக்கள் நாவில் நர்த்தனமாடும் பேறு பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார்" இன்னும் வாழ்கிறார். வாடும் வயிறுகளுக்கு உணவளித்து பசிப்பிணி போக்கிய மனிதம் என்னும் மருத்துவராகி இறவா புகழ் எய்தி விட்டார். இவ்வுலகம் உள்ளவரை அவருடைய செயல்கள் நிலைக்கும். இவருக்கு முன்னர் எவ்வித எதிர்பார்ப்புமின்றி அஃறிணை உயிர்களின் மீது அன்பு செலுத்திய பலரைச் சங்க இலக்கியப் புதையல் தக்க வைத்துள்ளமை இவண் உணரத்தக்கதாகும்.

தலைவி அஃறிணை உயிர்களின் மேல் அன்பாக இருப்பதைக் காண்கிறோம். தினையைக் காய வைத்து வைத்திருக்கிறாள் தலைவி. அப்போது பறவைகள் வந்து தமக்கான இரையை மகிழ்வுடன் கொத்தித் திங்கின்றன. தலைவி இதனைக் காண்கிறாள். எனினும் அவற்றை விரட்ட அவளுடைய தாய்மை உணர்வு இடம் தரவில்லை என்பதை,

**"பார்வை மடப்பிணை தழீஇ, பிறிது ஓர்**
**தீர் தொழில் தனிக்கலை திளைத்து விளையாட,**
**.............................................................**
**மான்அதட் பெய்த உணங்கு தினை வல்சி**
**கானக் கோழியோடு இதல் கவர்ந்து உண்டென,"** [93]

என்ற பாடல் வழி அறியமுடிகிறது.

**வேள்பாரியின் பேரன்பு**

கடையெழு வள்ளல்களில் பாரியும் பேகனும், தனித்தன்மை மிக்கவர்களாகப் போற்றப்படுகின்றனர். பாரி தான் வலம் வரும்போது கொழுகொம்பு இன்றித் தடுமாறிய கொடிக்கு தேர் கொடுத்ததால் இறவாப் புகழ் பெற்றான். இன்று, ஆனந்த விகடன் வார இதழில் நெடுந்தொடராய் வந்து மாபெரும் புகழைத் தேடிதந்து அதன் பெற்ற புகழில் அதன் ஆசிரியர் திரு.சு.வெங்கடேசன் பாராளுமன்ற உறுப்பினர் (எம்.பி) பதவியைப் பெறுவதற்கு "வேள்பாரி" உறுதுணையாய் நின்றான் எனில் அதில் மிகையில்லை. மேலும், பேச்சு வழக்கில் "ஆமாம்" பெரிய பாரி வள்ளல் நெனப்பு" என்ற வரிகள் இன்னும் பாரி குறித்த மக்களின் நினைப்பைச் சுட்டுகின்றன. இதனை,

***“.....பூத் தலை அறாஅப் புனை கொடி முல்லை***
***நாத் தழும்பு இருப்பப் பாடாதுஆயினும்,***
***'கறங்கு மணி நெடுந் தேர் கொள்க!' எனக் கொடுத்த***
***பரந்து ஓங்கு சிறப்பின் பாரி”*** [94]

*என்ற வரிகள் பாரி முல்லைக்கொடிக்குத் தேர் ஈந்த நிலையைச் சுட்டி நிற்கின்றன. பாரி தன்னுடைய தேரில் சென்று கொண்டிருந்தான். அப்போது வழியில் முல்லைக் கொடி ஒன்று படர்ந்து கொண்டிருந்தது. அதன் ஒரு முனை கொழுகொம்பு இல்லாமல் படர துடித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்ட பாரியின் மனம் அக்கொடியின் நிலையைக் கண்டு இறங்கியது. பின்னர் தேரோட்டியை அழைத்து, தன் தேரினை அக்கொடிக்கு அருகில் விடச் செய்தான். அதன் பின் தன் அரண்மனைக்கு நடந்தே சென்றான். பாரியின் இச்செயல் அஃறிணை உயிர்களும் தம் உயிராய் நினைத்து மயங்கிய நிலையைச் சுட்டி நிற்கிறது.*

***வையாவி பேகனின் கருணை***

*வையாவி கோப்பெரும்பேகன் கடையேழு வள்ளல்களில் ஒருவன். இவன் தன்னுடைய மலையின் அழகை இரசித்துக் கொண்டிருந்தான். அப்போது பெய்த மழையால் மயில் நடுங்கிக்கொண்டிருந்தது. அப்போது அதனைக் கண்ட பேகன் அந்த மயிலுக்குத் தன்னுடைய போர்வையை அளித்தான். இதனைக் “கொடைமடம்“ என்பர். அதாவது உள்ளவர், இல்லாதவர், கேட்டவர் கேட்காதவர் என அனைவருக்கும் வரையாது கொடுத்தலே “கொடைமடம்“ ஆகும். முல்லைக்கொடி, மயில் இரண்டும் தன்னைத்தானே பாதுகாத்து சூழலுக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக் கொள்ளும். இதனை அறிந்த அரசர்கள், அவ்வாறு இல்லாமல் தாமே முன்வந்து அஃறிணை உயிர்களுக்கு இரக்கத்துடன் செயல்படுவது இவ்வகையைச் சாரும்.*

***“மடத் தகை மாமயில் பனிக்கும் என்று அருளி***
***படாஅம் ஈத்த கெடாஅ நல் இசை,***
***கடாஅ யானைக் கலிமான் பேக!”*** [95]

*என்ற பாடல் வையாவி பேகனின் உள்ளத்தைப் புலப்படுத்தி உள்ளன.*

*சங்க மக்களிடையே உயிர்களின் மீது அன்பிருந்தமையை மேலும் ஒரு சங்கப் பாடல் விளக்கும். ஒரு கோயில், குறிஞ்சி நிலக்கடவுளான முருகனின் இல்லம் அது. அங்கு மக்கள் முருகனின் அருள் பெற கூடியிருக்கின்றனர். சேயோனின் அருள்பெற வந்தவர்களுக்குத் தாமும் அருள் பாலிக்கிறது யானை. அதற்குத் தாம் கொண்டு வந்த உணவுகளைக் கவளம் கவளமாக அள்ளித் தருகின்றனராம் பெண்கள். அவை உண்டு கீழே சிந்திய எச்சில் உணவை அமுதெனப் பருகிய மகளிரை நோக்கும் போது அவ்யானையின் மீது அவர்கள் கொண்ட அபரிதமான அன்பு வெளிப்படுகிறது. செல்வச் செழிப்பில் வளர்ந்த தலைவி, தலைவன் இல்லத்தில் தலைவன் மீதுள்ள அன்பினால்*

மானுண்டெஞ்சிய நீரைப் பருகுகிறாள். இங்கு, மான் மீது, தலைனுக்கு இருக்கும் அன்பு புதைந்து கிடக்கிறது. அதுபோல இம்மகளிருக்கு யானை மீதுள்ள பேரன்பு உணவின் மூலம் வெளிப்படுகிறது. இதனை,

**"மலிவுடை உள்ளத்தான் வந்து செய் வேள்வியுள்,**
**பல் மணம் மன்னும் பின் இருங் கூந்தலர்,**
**கன்னிமை கனிந்த காலத்தார், நின்**
**கொடி ஏற்று வாரணம் கொள் கவழ மிச்சில் "** [96]

என்ற பரிபாடல் அடியினில் அறிந்து மகிழலாம்.

**தூது**

இவ்வுலகம் பல்வேறு நாகரிக வளர்ச்சியை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் மனிதனின் அறிதிறனில் முக்கியமானது. தகவல் தொடர்புக்கு அடிப்படையான, மொழியே அதிக மதிப்புடையது எனலாம். அந்த மொழியைக் கண்டறிதல் என்பது இலகுவானதாக இருந்து விடவில்லை. நீண்ட தவறுகள் நீண்ட மாற்றங்களுக்குப் பிறகு இன்றைய நிலையைத் தொடுவதற்குப் பல்வேறு வரிவடிவத் திரிபுகளைப் பெறவேண்டியிருந்தது.

**மொழியை ஆளும் திறமை**

ஒரு மொழியை ஆளுதல் என்பது எளிய ஒன்று அல்ல. திறம்பட,சுவைபட சொல்லியதை வெற்றி பெரும் உடையாடல் ஆகும். **"சொலல் வல்லன்"** என்று வள்ளுவரும் குறிப்பிடுவதைக் காண்க. இது அனைவருக்கும் கை வருமா எனில் அது அபூர்வமே. எனவே தான் அக்காலத்தில் தூதுவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது கவனத்துடன் தேர்ந்தெடுத்தனர்.

**சொலல் வல்லர்**

அரசரால் உருவாக்கப்படும் (அ) நியமிக்கப்படும் தூதர்கள் தவிர்த்து சங்கப் புலவர்கள் சிலரே தூதுவர்களாகச் செயல்பட்டு வந்துள்ளனர். அவர்கள் யாராலும் நியமிக்கப்படாமல் போர் ஏற்படாமல் தடுப்பதற்கு அவர்களாகவே தூது சென்றுள்ளனர். இதனைச் சங்க இலக்கியத்தில் இருந்து உணரமுடிகிறது.

**தூது சொல்லுபவர்க்கு**

**"அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பாற்கு**
**இன்றி யமையாத மூன்று"** [97]

என்று வள்ளுவர் தூதுரைப்பார் பற்றி குறிப்பிட்டுள்ளமை இவண் இணைத்துக் காணத்தகும். சோர்வு தராத மொழி வன்மையும், சோர்விலாத மனத்துடன் தூய்மை, துணிவு எதிர்க்கருத்தையும் மாற்றும் துணிவுடையனவாகத் தூதுவன் திகழ வேண்டும். தேர்ந்தெடுத்த சொற்களால் நயம்பட எதையும் உரைக்க வேண்டும். தூதுவனின் உரைக்கு

எதிர் உரை இல்லாமல், மாற்றாரின் மனம் மகிழத்தக்க சான்றுகளுடன் தானே பெரியவன் என்று உணர்வு எதிரிலிருப்பவருக்கு ஏற்படா வண்ணம் திறனறிந்து உடையது.

தன் உயிர்க்கே ஆபத்து எனினும் அதனால் தளர்வு கொள்ளாமல் தன்னுடைய மன்னனுக்கு பயன்தரும் உறுதியான தூதுரைப்பவனே உண்மையான தூதுவன் ஆனான்.

இன்றும் கூட, விற்பனைப் பிரிவு (MARKETING) என்பது மறைமுகத் தூதே ஆகும். இன்று ஊதியத்தை அதிகமாகப் பெற்றுத்தரும் ஒரு தொழிலாக இது அமைந்துள்ளது. விற்பனை அதிகரிக்க அதிகரிக்க வருமானமும் அதிகரிக்கும். எவரெல்லாம் இத்துறையில் ஜொலிக்க முடியும். இவ்வாறான விற்பனையாளர் பிரிவிற்கு ஆளைத் தேர்ந்தெடுக்க முதற் தகுதியாக அவர்களின் பேச்சு அமைய வேண்டும். இரண்டாவது திறமை, அறிவு நுட்பம், எதிர்தரப்பினரின் மனதில் இருப்பதை அறிந்து அதற்கேற்றாற் போல நாம் பேச்சைத் தொடங்க வேண்டும். அதன் பின்னர் தம்முடைய பொருள்களின் தன்மையைப் கேட்போர் ஏற்கும் வண்ணம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு உளவியல் முறையில் கேட்போரை ஈர்க்கும் தன்மையில் பேசுவதே வெற்றிக்கு வழியாகும். இதுவே அன்றைய தூதுவர்களின் நிலையும் ஆகும். "தூதுவர்கள் அன்புடையவர்களாய், நல்ல குடியிலே பிறந்தவர்களாய், வேந்தர்களால் விரும்பப்படும் பண்பாளர்களாய்த் திகழ வேண்டும். அன்பு , அறிவு, உரு என்பன மூன்றும் ஒரு சேர அமைவதுடன் சொல் வன்மையும் தூதுவர்க்கு வேண்டும் என்பதை தமிழண்ணல் குறிப்பிடுகிறார்".[98]

**புலவர்களின் தூது**

புலவர்கள் வெறும் புலமைத் தொழிலில் ஈடுபடவில்லை. இது போன்று பல்வேறு புலவர்கள் புலமைத் தொழில் மட்டுமின்றி, தூதுவர்களாகச் செயல்பட்டுள்ள தன்மையைக் காணலாம்.

- கோவூர் கிழார்
- ஔவையார்

ஆகியோர் சங்ககாலத்தில் தூது சென்றுள்ளனர். இவர்களின் தூதுத் திறம் குறித்துக் காணலாம்.

**கோவூர் கிழார்**

புலமையில் சிறந்த இவர், அருளுள்ளம் படைத்தவர், அரசியலில் பங்கு கொண்ட புலவர்களில் இவரை முதன்மையானவராகக் கூறலாம்.

நெடுங்கிள்ளிக்கும், நலங்கிள்ளிக்கும் பகையைத் தவிர்க்க விரும்பிய இவர். ஒருமுறை அரசரிடம் நயமான முறையில் அறிவுரையைக் கூறியவர். எனினும் நலங்கிள்ளி நெடுங்கிள்ளியுடன் இருந்த போர் வெறி அடங்கவில்லை. நயமாகக் கிழார் கூறிய அறிவுரையை நோக்குவோம். அதாவது நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரையும் தனித்தனியே கண்டார். அரசனே சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்களின் எதிரியாக

*இருப்பவன் வேப்பம் பூ மாலையணிந்த பாண்டியனோ, பனம் பூ அணிந்த சேரனோ இல்லை. ஆத்திப் பூவினை அணிந்த சோழனே ஆவான். சோழர்களின் குடிப்பெருமையை நினையுங்கள். அதை நினைக்கும் போது நீங்கள் கைக்கொண்ட எதிர் உணர்வு தங்களை விட்டுப் போய்விடும். சிபி உள்ளிட்ட பல்வேறு அரசர்கள் சேர்த்துக் காத்த பெருமையைத் தாங்கள் குலைக்கும் நோக்கில் நடக்கலாமா? என்று பணிவாகவும், நயமாகவும் அவர் கூறிய சொற்கள் இரு வேந்தர்களின் உள்ளமும் தெளிந்தது.*

***"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;***
***கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்!***
***……………………………………………………..***
***குடிப்பொருள் அன்று, நும் செய்தி; கொடித்தேர்***
***நும் ஓர் அன்ன வேந்தர்க்கு***
***மெய்ம்மலி உவகை செய்யும், இவ் இகலே!"*** [99]

*இவ்வாறு கோவூர்கிழார் இருபெரு வேந்தரிடையே சென்று கூறிய காரணத்தால் போர் தவிர்க்கப்பட்டது. போர் இல்லாததால் உயிரிழப்புத் தவிர்க்கப்பட்டது. மக்கள் அவதி குறைந்து மன நிறைவுடன் வாழ்ந்தனர். நாட்டில் பொருட்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.*

***ஔவையார்***

*ஔவையார் தமிழ் மழலைச் செல்வங்களும் அறிந்த நற்புலவர். அதிகமான பாடல்களை எழுதியவரும் இவரே. இவருடைய பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை நிரம்பி நிற்பதில் இருந்து இவருடைய அறிவாற்றலை அறிந்து கொள்ளலாம். இவர் அதியமான் நெடுமான் அஞ்சியின் நெருங்கிய நண்பர். அஞ்சியின் வீரத்தை நன்கு அறிந்தவர். இவருடைய பாடல்களில் பெரும்பாலானவை அதியனையும், பொகுட்டெழினி குறித்தும் பாடியவை ஆகும். இவர் மழவர் படைகளின் தலைவனான அதியனின் வீரத்தினை நன்குணர்ந்தவர். முன்னரே கபிலர், பாரியைக் குறித்து பாரியிடம் நாட்டை வாங்குதல் எளிய ஒன்று.அவனுடைய நாட்டிற்குச் சென்று பரிசில் பெருபவர் போல வரிசையில் சென்று கேட்டால் அவன் தன்னுடைய நாட்டையே தந்துவிடுவான். அதுபோல் அஞ்சியிடம் எதையும் கேட்டால் எதிர்த்தால் வீழ்வர் என்ற பொருண்மையைப் பாடியவர் ஔவை. அஞ்சியிடம் மழவர் படை வீரத்திற்குப் பெயர் பெற்றது. எத்திறப்பட்ட பகையினரையும் இவனுடைய படை வீழ்த்தும். இதையெல்லாம் அறிந்த ஔவை தொண்டைமானிடம் தூது செல்கிறார். தொண்டைமானும் ஓர் அரசன் சகல அதிகாரங்களும் நிரம்பியவன். அவனிடம் சென்று அவன் மனம் வருத்தமுறாத வண்ணம் கூறிய புலவரின் நெஞ்சத்துணிவு வியக்கத்தக்கது.*

***"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்***
***கண் திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து***
***……………………………………………***
***இல்லாயின் உடன் உண்ணும்***
***இல்லோர் ஒக்கல் தலைவன்***
***அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே"*** [100]

தொண்டைமானிடம் சென்று ஔவையார் அரசே! உன் படைக்கலங்கள் மாலையிடப்பட்டு நெய்பூசி, பளபளவென்று அழகாக உள்ளன. ஆனால் அதியமானிடம் இருக்கக்கூடிய படைக்கருவிகள் அழுக்கடைந்து காணப்படுகின்றன. முனைகள் உடைந்து எப்போதும் படைக்கருவிகள் கொல்லனின் உலைக்களத்திலேயே உள்ளன என்று கூறுவதன் மூலம், அதியனின் போர் பயிற்சியையும் அறியலாம். இதன் பொருளை ஆழந்து உணர்ந்த தொண்டைமான் போரினைக் கைவிட்டு விட்டான்.

**"கடனறிந்து காலம் கருதி இடனறிந்து**
**எண்ணி உரைப்பான் தலை."** [101]

**"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**
**உறுதி பயப்பதாம் தூது."** [102]

என்கிறார். அதாவது, தன் கடமையை அறிந்து காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து சிந்தித்து உரைப்பவன் சிறந்த தூதன். மற்றும், தான் கூறும் செய்தியால் தான் உயிரிழக்க நேரினும், தன்னாலான எல்லா முயற்சிகளையும் குறையாது செய்து தன் அரசனுக்கு நன்மை உண்டாக்குபவனே சிறந்த தூதன். இந்த குறட்பாக்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அவ்வையாரின் சொல்வன்மையும் செயலும் இருப்பதை இப்பாடலின் மூலம் நாம் அறிய முடிகிறது.

**புலவர்களே உற்றதுணை**

சேரன் சோழனோடு போரிட்டுத் தோற்றான். சேரன் யானைகட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியொடு போரிட்டுத் தோற்றான். அதற்குக் காரணம் பெருநற் கிள்ளிக்கு துணையாக திருமுடிக்காரி அவனுடன் போரிட்டான். அதனால் தான், தான் தோற்றுவிட்டதாகச் சேரமான் கருதியதைப் பொருந்தி இளங்கீரனார் புறம் – 53 குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.

அது மட்டுமின்றி திருமுடிக்காரியின் துணை இரும்பொறைக்குக் கிடைக்காமல் போனததால் தான் தான் தோற்றுவிட்டதாக இரும்பொறை கருதியதையும், பெருநற்கிள்ளிக்கு மலையமான் திருமுடிக்காரியின் துணை கபிலர் இருந்திருந்தால் தனக்குக் கிடைத்திருக்கும் என்று இரும்பொறை தன் மன ஏக்கத்தை வெளிப்படுத்தியிருப்பதைப் புலவர் குறிப்பிட்டுள்ளமை இதில் புலவரின் நட்பு ஒரு நாட்டின் போருக்குத் துணை செய்வது இவண் சுட்டத்தக்கது.

புலவர்கள் அரசன் தமக்குள்ளே ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதை விரும்பியுள்ளனர். இதனை,

**"கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்;**
**யான் அறி அளவையோ இதுவே; வானத்து**
**வயங்கித் தோன்றும் மீனினும், இம்மெனப்**
**பரந்து இயங்கும் மாமழை உறையினும்,**
**உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக, நும் நாளே!"** [103]

இப்பாடலில் ஔவையார் சேரன் மாரிவெண்கோ, பாண்டியன் உக்கிரபெருவழுதியும், சோழன் பெருநற்கிள்ளியும் ஒருவரையொருவர் நட்பு பாராட்டினர் இதனைக் கண்டவுடன் ஔவையாரின் மனம் மகிழ்ந்து இந்நிலை என்றும் தொடர வேண்டும் என்று பாராட்டியுள்ளமை மேற்கண்ட பாடல் விளக்கி நிற்கும்.

மேலும், பகையால் மன்னர்களிடையே ஏற்பட்ட போர் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை அறிந்த புலவர்கள் அதனை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், சேரமான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடன் பகை கொண்ட கரூவூர் கோட்டையை முற்றுகையிட்டான். இதனை அறிந்தும் சோழனை எதிர்க்கும் திறனின்றிக் கோட்டைக்கு உள்ளேயே அடைந்து கிடந்தான் இதனைக் கண்ட ஔவை,

***"கடிமரம் தடியும் ஓசை தன் ஊர்***
***நெடுமதில் வரைப்பின் கடி மனை இயம்ப***
***ஆங்கு இனிது இருந்த வேந்தனோடு, ஈங்கு,நின்***
***சிலைத் தார் முரசம் கறங்க***
***மலைத்தனை என்பது நாணுத் தகவு உடைத்தே"*** [104]

என்ற வரியில் வீரமற்று காவல் மரத்தை வெட்டியும் கூட சேரன் கோட்டைக்கு உள்ளேயே இருப்பதைக் கண்டு ஔவையார் சோழனுக்கு எடுத்துச் சொல்லி, சேரன், சோழனுக்கு நிகரான, வீரமுடையவன் அல்லன் எனவே வீரனுடன் போரிடுவது தான் சிறப்பு என்று எடுத்துக் கூறி நடக்க இருந்த போரைத் தடுத்து நிறுத்தி சோழனை திருப்பி அனுப்பினார். வேந்தர்களிடம் அன்பு காட்டி வாழ்ந்தவர்கள் புலவர்கள் அவர் வெற்றியினை அஞ்சாமல் எடுத்துக் கூறும் ஆற்றல் பெற்றிருந்தனர். சோழன் நலங்கிள்ளி, ஆவூர் கோட்டையினை முற்றுகையிட்டிருந்தான். கோட்டையினுள் இருந்த சோழன் நெடுங்கிள்ளி துணிவற்றவன் என்றும் அவனை எதிர்ப்பது தவறு என்று எடுத்துச் சொல்லுதல் இவண் உணரத்தக்கது.

**தொகுப்புரை**

*புறத்திணை இலக்கியம் என்னும் இத்தலைப்பில் பின்வரும் கருத்துகள் ஆராயப்பெற்றுள்ளன.*

- *மனித வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து பிறக்கின்ற இலக்கியங்களே காலத்தின் கண்ணாடியாகத் திகழும். அந்த வகையில் சங்கப்புறப் பனுவல்கள் முதலிடம் பெறுகிறது.*
- *புறநானூறு, பதிற்றுப்பத்து நூல்களில் உள்ள திணையும் துறைகளும் விளக்கப்பட்டுள்ளன.*
- *புறத்திணை தோற்றத்திற்கான காரணம், ஆசை அதன் காரணமாக உருவாகக்கூடிய போர்கள் மற்றும் புறவாழ்வியல் முறைகள் ஆகியன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.*
- *புறத்திணையின் மிக முக்கிய பொருளான போர் ஏற்படுவதற்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன.*
- *அக்கால மக்கள் கோபத்தையும், பகையையும் போர் மூலம் மற்றவர்களிடம் வெளிப்படுத்தியமையும், அதன் மூலம் கிடைக்கும் வெற்றி வாழ்வின் இலக்காக நினைத்தையும் காணமுடிகிறது.*
- *அகநூல்களுள் காணப்படும் புறத்திணைச் செய்திகளையும் விளக்கப்பட்டுள்ளன.*
- *புறத்திணையைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை மற்றும் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.*
- *புறத்திணையில் அமைந்த பனுவல்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.*
- *புறத்திணையில் இடம் பெற்றுள்ள இன்னபிறச் செய்திகளையும் குறிப்பிட்டு விளக்கப்பட்டுள்ளன.*
- *எவ்வுயிரையும் தம்முயிர் போல் கருதும் இரக்கம், அன்புணர்வு போன்றவற்றையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.*
- *புலவர்கள் வெறும் புலமைத் தொழிலில் ஈடுபடவில்லை. இது போன்று பல்வேறு புலவர்கள் புலமைத் தொழில் மட்டுமின்றி, தூதுவர்களாகச் செயல்பட்டுள்ள தன்மையைக் காணமுடிகிறது.*
- *இவ்வியலில் புறத்திணை இலக்கியங்களில் போர் தோன்றுவதற்கான காரணம் ஆகியன ஆராயப்பட்டுள்ளமையால் புறத்திணை குறித்த முழுமையான தரவுகள் தரப்பட்டுள்ளன.*

## சான்றெண் விளக்கம்

1. தொ.பொருள்.இளம்.உரை.முன்னுரை.
2. தொ.பொருள்.நச்சி.உரை.முன்னுரை.
3. கு.வெ.பா – சங்கஇலக்கியத்தில் புறப்பொருள். ப – 12.
4. ச.வே.சுப்பிரமணியன் – தமிழ் இலக்கிய வரலாறு, ப- 108.
5. நா.பாலுசாமி – (ப.ஆ) வாழ்வியற் களஞ்சியம், தொ. பத்து – ப -252.
6. பாவலரேறு ச. பாலசுந்தரம் (உ.ஆ) தொல்காப்பியம் ஆராய்ச்சி காண்டிகை உரை. ப-26.
7. மா.சோமசுந்தரம் , சங்க அகப்பாடல்களில் திணை மயக்கம். (ஆய்வேடு ப – 4).
8. நக்கீரர் (உ.ஆ) களவியல் என்ற இறையனார் அகப்பொருள். ப- 1.
9. மனோன்மணி சண்முகதாஸ், குறுந்தொகை ஒரு நுண்ணாய்வு , ப – 56.
10. ஞானசம்பந்தன் அ.ச. இலக்கியக்கலை ப – 5.
11. பிச்சமுத்து . ந , திறனாய்வும் இலக்கியக் கொள்கைகளும் ப -6.
12. ஞானசம்பந்தன் அ.ச. – இலக்கியக்கலை ப – 3.
13. சொ.பரமசிவம் – நற்றமிழ் இலக்கணம் , ப – 384.
14. கி.பாண்டுரங்கன், பண்டைத்தமிழர் போரியல் , ப-30.
15. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .60 : 7-12.
16. கதிர். மகாதேவன், பழந்தமிழர் வீரபண்பாடு – ப – 23.
17. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 89 :7-9.
18. மேலது., பா.226.
19. மேலது., பா.167.
20. சொ.பரமசிவம், நற்றமிழ் இலக்கணம், ப – 393.
21. சங்ககால அரசர் வரிசை. கா.கோவிந்தன் , ப – 107.
22. தொல். பொருள். புறத்திணை, நூ . 63.
23. மேலது., நூ . 64.
24. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 73 : 5 -7
25. இரா. மோகன் (உ.ஆ.), பொருநராற்றுப்படை, அடி. 135-140
26. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 213:10-12.
27. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 109:1.
28. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 110 :1-2.
29. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 68 :11-13.
30. சிலம்பு – 25 – 122-125

31. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 9.
32. இரா. மோகன் (உ.ஆ.), பொருநராற்றுப்படை, அடி. 143-144
33. சோம. இளவரசு – இலக்கண வரலாறு , ப- 221 , மெய்யப்பன் திப்பகம், சிதம்பரம்.
34. இறை. கள. உரை. சூ.1.
35. வ.த.இராமசுப்பிரமணியம் (உ.ஆ.),தொல்.பொருள். அகத்திணை,நூ. 4.
36. வ.த.இராமசுப்பிரமணியம் (உ.ஆ.),தொல்.பொருள். கற்பியல்,நூ. 168.
37. ரா.இராகவையங்கார்,தமிழ் வரலாறு, ப.297.
38. தொல். பொருள். தோற்றுவாய், இளம்பூரணர் உரை.
39. தொல். பொருள். நச்சினார்க்கினியர் உரை.
40. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, ப.285.
41. அ.மா.பரிமணம்,இயற்கை நாட்டியம், ப.38.
42. சோ.ந.கந்தசாமி, புறத்திணை வாழ்வியல், ப.2.
43. வ.த.இராமசுப்பிரமணியம்(உ.ஆ.),தொல்.பொருள். புறத்திணை,நூ .59.
44. மேலது., நூ . 59:3-4
45. மேலது., நூ. 66.
46. மேலது., நூ. 70.
47. மேலது., நூ. 78.
48. மேலது., நூ. 76.
49. ந.சுப்புரெட்டியர், அகத்திணைக் கொள்கைகள் - ப.2.
50. தமிழண்ணல்,சங்க இலக்கிய ஒப்பீடு- இலக்கியக் கொள்கைகள், ப.13.
51. எஸ்.வையாபுரிபிள்ளை. இலக்கியச் சிந்தனைகள் ப- 17.
52. சங்க இலக்கியத்தில் புறப்பொருள், ப. 263-273.
53. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 297: 5-9.
54. மேலது.,பா.262.
55. மேலது.,பா. 259.
56. மேலது.,பா. 260.
57. மேலது.,பா.261.
58. மேலது.,பா.298.
59. மேலது.,பா.286.
60. மேலது.,பா.291.
61. மேலது.,பா. 290.

62. மேலது.,பா.359, 8-18.

63. மேலது.,பா.342.

64. மேலது.,பா.358.

65. மேலது.,பா.271.

66. மேலது.,பா.369.

67. மேலது.,பா.246:1-3.

68. மேலது.,பா.247:1-2.

69. அ.ஆலிஸ்,(உ.ஆ.), பதிற்றுப்பத்து, பா.30:40-44.

70. மேலது., பா.34:4-12.

71. மேலது., பா.56: 4-8.

72. மேலது., பா.89:9-11.

73. மேலது., பா.19:11- 15.

74. மேலது., பா.18:11-12.

75. மேலது., பா.28:1-5.

76. மேலது., பா.36:1-5.

77. மேலது., பா.67:4-23.

78. மேலது., பா.40:21-31.

79. மேலது., பா.81:30-32.

80. மேலது., பா.46:13-14.

81. மேலது., பா.50:14-17.

82. மேலது., பா.84:19-25.

83. மேலது., பா.54:1-2.

84. மேலது., பா.52:13-16.

85. மேலது., பா.77:3-7.

86. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 359 : 15-18.

87. மேலது., பா.165: 1-2.

88. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள் - 236.

89. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 235: 17.

90. மேலது., பா. 171:12-13.

91. மேலது., பா.175:2.

92. மேலது., பா.50:10.

93. மேலது., பா.320:4-11.

94. மேலது., பா.200:9-1.2.

95. மேலது., பா.145:1-3.

96. பெ.சுப்பிரமணியன் (உ.ஆ.), பரிபாடல்.19: 88-91.

97. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.), திருக்குறள் - 682.

98. பரிசில் வாழ்க்கை – ப -50, மீனாட்சி புத்தக நிலையம், மயுரா வளாகம், மதுரை – 1.

99. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 45.

100. மேலது., பா.95.

101. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.), திருக்குறள் – 687.

102. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.), திருக்குறள் – 690.

103. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 367:14-18.

104. மேலது., பா.36:9-13.

# இயல் – இரண்டு

# புறத்திணைப் பாடல்களில் மனிதவளக்கூறுகள்

***முன்னுரை***

*இவ்வுலகம் பல்வேறு உயிரினங்களை உள்ளடக்கிய பேரண்டமாகும். இப்பேரண்டத்தில் மனிதயினம் பிறந்து வளர்ந்து, தனக்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ளவர்களாக வாழ்ந்து மடிகின்றனர். அவர்கள் அனைவரும் உயர்ந்த ஒரே நிலையில் இருப்பதில்லை. ஏற்றத்தாழ்வுடனே வாழ்ந்து வருகின்றனர். மனிதர்களில் நல்லோரும் தீயோரும் கலந்து உள்ளனர். இவர்களில் மனித வடிவம் பெற்றவர்கள் எல்லாம் மனிதர்கள் அல்லர். அவர்களில் மனவுணர்வுகள் இல்லாதவர்களை மனிதர்களாகவே மக்கள் ஏற்றுக் கொள்வது இல்லை. எனவேதான் மனிதர்களுக்குப் பகுத்தறிவு, பகுத்துணர் மனநெகிழ்வு முதலான மிகச் சிறந்த ஆளுமைப் பண்புகள் தோற்றம் பெறுகின்றன. மனிதனின் பண்புகள் தோற்றம் பெற்றுள்ளமையும், அம் மனிதவளத்தின் கூறுகளையும் இவ்வியல் சங்கப்புற இலக்கியங்கள் வாயிலாக விளக்குகிறது.*

***மக்களும் மாக்களும்***

*இவ்வுலகில் மனித உடலோடு இருப்பவர்கள் அனைவரும் மனிதர்கள் அல்லர். அவர்கள் சிறந்த பண்பு உடையவர்களாக இருந்தால் “மக்கள்“ என்றும் அவ்வாறு பண்பு இல்லாமல் இருந்தால் “மாக்கள்“ என்றும் அழைப்பர். இது சிறந்தது, இது சிறப்பற்றது என்பதை உணர்ந்து சிறப்புடையவர்களாக வாழ்பவர்களையே தமிழ்ச் சமூகம் மக்களாகப் பாவிக்கிறது. இதனை.*

***“ஒரு திசை ஒருவனை உள்ளி நால் திசைப்***
***பலரும் வருவர் பரிசில் மாக்கள்***
***வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்***
***ஈதல் எளிதே மாவண் தோன்றல்***
***அது நற்கு அறிந்தனை ஆயின்***
***பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே”*** [1]

*என்ற பாடலில் நாடி வருவோர்க்கெல்லாம் நல்கும் தன்மையுடைய அரசனைப் புலவர் சாடுகிறார். வரும் கூட்டத்தினருள் புலவரும் பொதுநரும் வருவர். அனைவருக்கும் தகுதியறிந்து தர வேண்டுமே தவிர, பொதுவாகத் தருதல் கூடாது. வள்ளல்களிடம் இவ்வுணர்வு இருக்க வேண்டும் என்பதை இப்பாடல் சுட்டுகிறது. எனவே வந்திருப்பது அறிவுசால், மக்களா, மாக்களா என்பது உணர்ந்து செயல்பட வேண்டுமாய் அரசனுக்கு அறிவுறுத்துகிறார் புலவர்.*

**ஈதலே அறம்**

ஒருவர் உழைக்கும் உழைப்பு என்றுமே வீண்போகாது. ஒரு பணிக்காக அலைந்து திரிந்து மனச்சோர்வில் உழன்று இனி கடவுளின் செயல் என்ற மனநிலையில் நிலைத்திருப்போம். அப்போதுதான் இறைவன் நம்மை காக்கும் நிலையில் மனச்சோர்விலிருந்து வெளிவரும் வகையில் ஒருவர் எதிர்பார்ப்பதைவிட மேலான, பொருளாதார நிலையில் வளர்ந்த ஒரு வாய்ப்பை அளித்திடுவான் என்பது திண்ணம். அந்த நாள் மாறி ஒருவருடைய உழைப்புகளுக்கெல்லாம் ஒரு வெற்றி நிச்சயமாய் காத்திருக்கிறது. அவ்வகையில் ஒரு இடத்தில் பொருள் தேடச் செல்லும்போது காலம் நீட்டினால் கவலைப்படக்கூடாது. செல்வம் சேர்ப்பது என்பது ஈதலுக்கானது என்பது தமிழர் கோட்பாடு. செல்வம் என்பது தான் மட்டுமே அனுபவிப்பதற்கு அல்ல. பிறருக்கு கொடுப்பதற்கும் ஆகும். இதனை,

> **"பிறர்க்கு என முயலும் பேர் அருள் நெஞ்சமொடு**
> **காமர் பொருட் பிணி போகிய"** [2]

என்ற அடிகள் சுட்டுகிறது.

**இரக்கமற்றவன்**

தலைவன் பொருள் தேடிச்செல்லும் போது தலைவியை நினைக்க வேண்டும். அவளுடைய மனம், அன்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து பொருள் தேடச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாமல் பொருளே பெரிது என்பவன் இரக்கமற்றவன் என்னும் பொருளில்,

> **"அருளும் அன்பும் நீக்கித் துணைது றந்து**
> **பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்"** [3]

என்று தலைவியை விட்டுப் பிரிந்து சென்ற தலைவனைப்பற்றி சங்க இலக்கியம் குறிப்பிடுவது உணரத்தக்கது. பொருளைச் சேர்ப்பது என்பது, தான் மட்டுமே வைத்து உண்பது மட்டுமல்ல விருந்தோம்பலினால் அனைவருக்கும் அளிப்பது ஆகும். விருந்தோம்பல் என்னும் நிகழ்வு ஆழ்ந்து நோக்கும் போது நெகிழத்தக்க ஒன்று. புதிதாக வருவோருக்குப் பசிக்கு உணவளிக்கும் செயலே உயிர்காப்பது ஆகும். இந்தச் செயல் சங்க காலத்தில் இருந்து வந்துள்ளமை நோக்கத்தக்கது. மேலும், இன்று விருந்தோம்பல் என்பது வேறு வகையில் உள்ளது. மேலும், வெளிநாடுகளில் மற்றவர்களுக்கு ஈவது என்பது கௌரவ குறைச்சலாக இன்றைய மக்கள் கருதுகின்றனர். எனவே உணவகத்திற்கு வருகின்ற மக்கள் தங்கள் தேவைக்கு உணவினைக் கேட்டு வாங்கி விட்டு மீதமான தொகைக்கு உணவுக்கான ரசீதினை வாங்கி அங்கிருக்கும் சுவற்றில் ஒட்டி வருகின்றனர். உணவிற்காகத் தவிக்கும் ஏழைகள் அவ்விடத்து வந்து அங்கிருக்கும் ரசீதினில் ஒன்றினை எடுத்து அதன் மூலம் உணவினை வாங்கிவிட்டு தமக்குத் தேவையான உணவினை எடுத்து உண்பர். தற்போதைய ஈகை இவ்வாறு இருப்பது நோக்கத்தக்கது.

***நல்லதைச் செய்வோம்***

*இவ்வுலகம் பல்வேறு சூழல்களில் இயங்கிக் கொண்டுள்ளது. ஒரு அழகான சொலவடை உண்டு. திரைப்பட இயக்குநர் கே.பாக்யராஜ் அவர்கள் தம்முடைய இதழான "பாக்யாவில் எழுதியுள்ள வசனம் உலகத்திலேயே பெரிய சந்தோசம் அடுத்தவங்க சந்தோசப்படுத்தி பாக்குறது தான்" என்பதாகும். இது ஒரு வகை. ஒரு சிலர் தாம் மட்டுமே உயர்ந்தவர்கள் , தாம் மட்டுமே சிறந்தவர்கள் உலகில் தமக்குத் தான் எல்லாம் தெரியும் என்று வாழும் தன்மை உள்ளவர்கள் உண்டு. இவர்கள் பிறருக்குத் துன்பத்தை தந்து, தானும் துன்புற்று வாழ்பவர்கள். நன்மை செய்வதாக எண்ணி தாங்கள் பேசும் பேச்சில் பிறருக்குத் துன்பம் தரும் கருத்துகளைக் கூறி அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்துவர். இவர்களை நோக்கியே,*

***"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,***
***அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்***
***எல்லாரும் உவப்பது; அன்றியும்***
***நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே"*** [4]

*என்று நன்மையையே செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள புலவரைப் புறநானூறு சுட்டுவது உணரத்தக்கது. பிறருக்கு நல்லது செய்யாமல் இருப்பது நமது சூழலைப் பொறுத்தது. ஆனால் பிறருக்குத் துன்பம் தராமல் ஒதுங்கியிருத்தல் நலம் என்பது மிகவும் நயந்து கூறியுள்ளமை நோக்கத்தக்கது. இதனை ஒட்டியே உலகில் உயர்ந்தவற்றையே உற்று நோக்க வேண்டும் என்பதனை,*

***"ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல்***
***ஈர்ந் தண் முழவின் பாணி ததும்ப,***
***புணர்ந்தோர் பூ அணி அணிய, பிரிந்தோர்***
***பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப,***
***படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்!***
***இன்னாது அம்ம, இவ் உலகம்;***
***இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே."*** [5]

*என்ற அடிகளில் மக்கள் உயர்ந்தவற்றையே நினைக்க வேண்டுமென்பதைச் சுட்டியுள்ளமை உணரத்தக்கது ஆகும். உலகம் என்பது இன்பமும் துன்பமும் இணைந்தது. ஒரு இல்லத்தில் இறப்பு நிகழ்கிறது. இன்னொரு இல்லத்தில் பிறப்பு நிகழ்கிறது. இவைகளை, உற்று நோக்கி இன்னாதனவற்றை நீக்கி நல்லனவற்றையே செய்து வாழ வேண்டும். இதுவே நல்லது என்று குறிப்பிடுவது இவண் இணைந்து நோக்கத்தகும்.*

***"இன்பமும் இடும்பையும், புணர்வும் பிரிவும்,***
***நன்பகல் அமையமும் இரவும் போல,***
***வேறு வேறு இயல ஆகி, மாறு எதிர்ந்து"*** [6]

*என்ற வரிகளும் இரவும் பகலும் போல மாறி மாறி வரும் என்பதைப் புலவர் சுட்டியுள்ளமையைக் காட்டுகிறது.*

**எல்லோர்க்கும் கொடுமதி**

இன்பம் துன்பம் இரண்டும் மாறி மாறி வரும் எனினும் உயர்ந்த நோக்கோடு வாழ வேண்டும் என்பதை முன்னரே பார்த்தோம். புலவர் பெருஞ்சித்தனார் குமண வள்ளலிடம் சென்று பரிசுப் பொருட்களைப் பெற்று வருகிறார். அவற்றை எல்லாம் தமக்கே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கீழ்த்தரமாக (சாதாரணமாக) எண்ணவில்லை. அவற்றை உண்ண விரும்புவர்களுக்கும் நீ விரும்புவர்களுக்கும் உனது உறவினர்களுக்கும், பசியால் நாம் வருந்திய போது உதவிய நல்லோர்களுக்கும், உறவினர், அல்லாதோர் என அனைவரிடமும் தந்து அனைவருக்கும் கொடுப்பாயாக என்று கூறும் பெருஞ்சித்தனார் கற்போரின் உள்ளத்தில் உயர்ந்து நிற்பதைக் காண்கிறோம். இதனை,

***"நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்,***
***பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்,***
***கடும்பின் கடும் பசி தீர யாழ நின்***
***நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்,***
***இன்னோர்க்கு என்னாது, என்னோடும் சூழாது,***
***வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்***
***எல்லோர்க்கும் கொடுமதி-மனைகிழ வோயே"*** [7]

இப்பாடல் பெருஞ்சித்திரனாரின் வழி தமிழர்களின் உயர்ந்த உள்ளத்தைச் சுட்டுகிறது.

**ஈதல் செய்வீர்**

இவ்வுலகில் பிறக்கும் போது எவரும் எதனையும் கொண்டு வருவதில்லை. உலகை விட்டு செல்லும் போது எதுவும் கொண்டு செல்வதில்லை. நாசிச பாசிச ஆட்சி செய்த ஹிட்லரும் முசோலினியும் இறந்த நிலை பரிதாபகரமானது. அவர்களுக்காகக் கண்ணீர் சிந்த எவரும்இல்லை. மாவீரன் நெப்போலியன் கூட தனிமைச் சிறையில் வாடி உயிர்விட்டான். இதையெல்லாம் முன்னரே உணர்ந்த முன்னோர்கள் அவர்களுக்கு அறிவுரை கூறிய விதம் போற்றுதற்குரியது. உயிர்களுக்கு தேவை உணவு மட்டுமே அத்தேவைகள் தீர்ந்து விட்டால் மனநிம்மதி அடைய வேண்டும். "இதைத்தான் நமக்கு கீழே உள்ளவர் கோடி, நினைத்து பார்த்து நிம்மதி நாடு" என்ற திரைப்பாடல் உணர்த்துகிறது. அதையும் தாண்டி நக்கீரர் ஒரு நற்கருத்தினை நவின்றுள்ளார். அஃதாவது.

***"கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,***
***உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;***
***பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே;***
***செல்வத்துப் பயனே ஈதல்,***
***துய்ப்பேம் எனினே, தப்புந பலவே"*** [8]

என்ற பாடலில் நாம் உண்பவை, உடுப்பவை இரண்டு தான் இவை தவிர மிதமிருப்பவற்றை அனைவருக்கும் தந்து உதவ வேண்டும். அதனை விடுத்து அவற்றைத் தாமே அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினால் அவற்றைப் பெறாமல்

*மறைந்தவர்கள் எண்ணிலடங்காதோர், இதனை மனதில் வையுங்கள் என்று அறிவுரை நல்கியிருப்பது நோக்கத்தக்கது.*

*மேற்கண்டவற்றை நோக்கும்போது, சங்கத்தமிழ் மக்கள் ஈதலில் இன்பம் உடையவர்கள் என்பதும், கொடுத்து மகிழ்வதை கடமையாகக் கொண்டிருந்தனர் என்பதும் புலனாகிறது.*

***ஈகை பெறுவதின் சிறப்பு***

*ஈகை வாழ்க்கை என்பது பிறருக்குத் தீமை செய்யாது, தலைகுனியவும் நேராது. எனவே தான் கம்பர்,*

> ***“மன்னவனும் நீயோ? வளநாடும் நின்னதுவோ?***
> ***உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்-என்னை***
> ***விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ***
> ***குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?”*** [9]

*என்று துணிவாகக் கூற முடிந்தது. குடியாட்சியில் அனைவரும் இந்நாட்டு மன்னர்கள். இந்நாட்டில் எவரும் எவரை நோக்கியும் கேள்விகள் எழுப்ப உரிமை உண்டு. ஆனால் அரசினைக் கேள்வி கேட்க அவர்கள் இருப்பார்கள். கேள்வி கேட்டபின் இருப்பார்களா? என்பது ஐயமே, எனினும் முடியாட்சியில் மன்னனே இறைவன். குடிகள் எல்லாம் அவன் வழிச் செல்வர். “மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்” என்பது வாக்கு. எனினும் அக்காலத்தில் தைரியமுடன் செயல்பட்டு அரசனையே கேள்வி கேட்பதற்குக் காரணம் அவர்களின் புலமை அவர்களுக்குத் தந்த துணிவே. மேலும், புலவர்கள் மீது அரசர்கள் பெரும் மதிப்புக் கொண்டிருந்தனர். மன்னர்களை விடப் புலவர்களுக்கு மக்களிடம் அன்பிருந்ததையும் இது பறைசாற்றி நிற்கிறது. இதனை “அவனை அவர் பாடியது“என்று கொளு குறிப்புகளில் கூறப்படும் தொடர்களில் அவன் என் மன்னனையும், அவர் என்பது புலவனையும் குறிக்கும் எனலாம். ஏனெனில் “புலமையை என்றும் எவராலும் எங்கும், எப்போதும், விலைக்கு வாங்கிவிட முடியாது என்று கூறும் அளவிற்குப் புலமைக்கு மதிப்பு இருந்து வந்தது. எனவேதான் தம் மனைக் கிழத்தியிடம் கிடைப்பவற்றைப் பகிர்ந்து உண்ணுமாறு புலவரால் அறிவுறுத்த முடிந்தது.*

***அன்புடைமையும் விருந்தோம்பலும்***

*பொதுவாக இல்லத்திற்கு வருவோரை நல்லுள்ளத்தோடு, வரவேற்று கனிவுடன் அன்புருக உபசரிப்பதே தமிழர் கோட்பாடாகும். இவற்றுள் தன்னிடம் பொருளிருந்து உபசரித்தல் என்பது வேறு. பொருள் இல்லையெனினும் அதே உள்ளத்தோடு அவர்களை கவனித்தல் என்பதைக் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். இதனைச் சங்கப் புறப்பாடல் நமக்கு சுட்டி நிற்கிறது.*

> ***“தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்,***
> ***நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்***
> ***இற்பொலி மகடூஉப் போலச், சிற்சில”*** [10]

*என்ற பாடல் மேற்காண் கூற்றிற்கு அரண் செய்யும். பல்வேறு விருந்தினர்கள் வரினும் அவர்களைத் தம் இல்லத்தாரைப் போல கவனிக்கும் தன்மை இன்று நிறைய பெண்களிடம் அருகி நிற்கிறது. தாய் வழிப் பாட்டி வருவோர்க்கெல்லாம் அயராது சமைத்துத் தருபவர். வீட்டினர் விருந்தினர்களால் நிரம்பியிருக்கும் இல்லத்தில் ஒற்றையாளராய், பல்வேறு வியஞ்சனங்களைப் பக்குவமாய்ச் சமைத்து பந்தியிடுவார். இறுதியாக மீதமிருக்கும் எளிய உணவு அவருக்குக் கிடைக்கும். எனினும், கோணாமல் அடுத்தவேளை உணவிற்குத் தயார் செய்யம் பாட்டியை இப்போது நினைக்கும் பொழுது பெருமிதமும் பெருமூச்சும் ஒருசேர தலைதூக்குகின்றன. இன்றைய மகளிர் தங்களின் அன்றாட வேலைகளைச் செய்ய சோம்பல்பட்டு உணவகங்களை நாடுவதும், கேளிக்கைகளில் தங்களைத் தொலைப்பதும், ஆண்களும் நிலை பிறழ இருப்பதும் உண்மையில் வேதனைக்குரிய செய்திகள் ஆகும். உறவுகள், நட்புகள் அருகித் தொலைபேசியும் தொலைக்காட்சியும் அவர்களின் பெரும்பாலான நேரங்களை ஆக்கிரமித்துக் கொள்வதும் மனதை நெருடும் செய்திகள் ஆகும். இத்தலைமுறையினரான நாம், இயற்கை விவசாயம் உணவு ஆகியவற்றில் விழித்துக் கொண்டது போல நம் தலைமுறையினரின் செயல்பாடுகள், தன்மைகள் ஆகியவற்றிலும் மாற்றங்களைக் கொண்டு வருவது ஒவ்வொருவரின் கடமையெனில் மிகையில்லை. சங்க மாந்தர் வழிபடும்போது விருந்தினர்களை உபசரிக்க வேண்டும் என்ற அருமையான உணர்வோடு வேண்டி இருந்திருக்கின்றனர் என்பதை,*

***"ஒலிமென் கூந்தல் ஒள்நுதல் அரிவை***
***நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது;***
***விருந்து எதிர் பெறுகதில் யானே"*** [11]

*என்ற பாடல் அறிவுறுத்துகிறது. மேலும், வீட்டில் பொருட்கள் இல்லை. உடனே தலைவி வீட்டில் இருக்கக் கூடிய விதையினை எடுத்து குத்தி உலையிட்டு விருந்து சமைக்கிறாள் என்பதை,*

***"..................மனையோள் விரும்பி,***
***வரகும் தினையும் உள்ளவை எல்லாம்***
***இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்,***
***குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்,***
***குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து,***
***சிறிது புறப்பட்டன்றோ இலளே"*** [12]

*என்ற அடிகளில் இல்லையெனினும், இல்லாளின் நடத்தை பாங்குற உணர்த்தப்படுகிறது. இதனை அடியொற்றியே பக்தி இலக்கிய கால இல்லறத்தானாகிய இளையான்குடிமாற நாயன்மார் தம் நிலத்தில் விதைத்த நெல்லினைக் கொண்டு வந்து விருந்து உபசரித்ததைக் காணமுடிகிறது.*

***“செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்***
***மல்லல் நீர் முளை வாரிக் கொடு வந்தால்***
***வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று***
***அல்லது ஒன்று அறியேன் என்று அயர்வுற”*** [13]

*பகலில் விதைத்த நெல் விதைகளை வாரிக்கொண்டு வந்தால் அதைக்கொண்டு முடிந்தவரை உணவு சமைக்கலாம் என்று இளையான்குடிமாற நாயன்மாரின் இல்லறத்தரசி தெரிவித்தாள். மேலும், நிலையில் தாழ்ந்தாலும் யாசித்தல் கூடாது என்பர். “இன்றும்” யாசித்தல் என்பது மனக்குறை தரக்கூடிய ஒரு நிகழ்வாகவே இருந்து வருகிறது.*

***“ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்***
***ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;***
***கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்***
***கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று”*** [14]

*என்று இரத்தல் குறித்து கழைதின் யானையாரின் கூற்று உணரத்தக்கது. ஆனால் ஒருவன் முயற்சியுடையவன்; உணர்வில், செயலில் என அனைத்திலும் சிறப்பானவன். அவன் ஒரு தொழில் தொடங்குகிறான். ஆனால் அத்தொழிலில் அவனால் வெற்றி பெற முடியவில்லை. ஊரில் ஒரு சொலவடை உண்டு உப்பு விற்கப் போனால் மழை வருது, மாவு விற்கப் போனால் காத்து வருது என்பர். அதுபோன்று நேரமும் காலமும் ஒத்துழைக்கவில்லையெனில் அவனைக் கூறி பயனொன்றும் இல்லை. இந்நிலையில் அவன் மீண்டு வர ஏதேனும் வழி இருக்கிறதா என்று ஆராய்ந்தாலும் உண்பதற்கு ஏதேனும் இருந்தால் தானே உயிர்வாழ ஏலும்.? என்ற வினா எழுகிறது. எனவே தான் “இரத்தல் இழிவு” என்று கூறிய முன்னோர், பிறருக்கு ஈகை செய்து வாழ வேண்டும் என்பதை ஐயமிட்டு உண் என்று அழுத்தமாகப் பாடியுள்ளனர்.*

*பாடல்கள் பல பாடிப் பரிசில்கள் பெற்று வாழும் வாழ்வு ஒன்று. அடுத்ததாக வெறும் செல்வத்தை நோக்கி அதன் பின்னே சென்று பொருள் சேர்க்கும் வாழ்வு செல்வ வாழ்வு. புலமை அல்லாதோரின் வாழ்வு இது. இவர்கள் தங்களுக்குத் தேவையானச் செல்வத்தை சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வர். புலவர்கள் பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப் போல புரவலர்களை நாடிச் செல்வர்.*

***விருந்து***

*உலகத்தின் பொதுமைப் பண்புகளில் ஒன்றான விருந்தோம்பல் மானுட வாழ்வின் நெறிகளுள் முக்கியமானது; தலையாயது. இதுவே மானுட நேயத்தின் இழையாகத் தோன்றுவது. தமிழகத்தில் விருந்து என்பது மிக நீண்டதொரு பாரம்பரியம் உடையது. நல்ல மரபினை உடையது. பசியுடன் வரும் உயிரின் மனம் கோணாமல் உணர்வறிந்து உணவிடும் உள்ளத்தின் ஆவலை வெளியிடும் தன்மையுடையது விருந்தோம்பல். இதனைத் தொல்காப்பியர்,*

***“விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்***
***பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”*** [15]

*என்று கூறுகிறார். மேலும்,*

***“விருந்தினரை வரவேற்பான் தமிழன், அந்த***
***விருந்தினர்க்கு நலம் செய்வான் தமிழன், சாவா***
***மருந்தேனும் வந்தவர்கள் பசித்திருக்க வாயில்***
***இடான் தமிழன், இது பழமை தொட்டே***
***இருந்து வரும் பண்பாகும்”*** [16]

*என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் உரைப்பார். நாடி வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று அன்போடும் ஆர்வத்தோடும் உபசரிப்பதைத் தமிழ் மக்கள் கடமையாகக் கொண்டனர். உறவினரும் நண்பருமன்றிப் புதிதாக வருபவர்களையே தமிழ் மக்கள் விருந்தினராகக் கருதினர். இதனையே புறநானூற்றில் “ஊன்பொதி பசுங்குடையார்” என்ற புலவர்,*

***“வருநர்க்கு வரையா வசை இல் வாழ்க்கை”*** [17]

*என்பார், வருகின்ற விருந்தினர்களுக்குச் சுவையான உணவளித்து விருந்தோம்புவதே பழியற்ற வாழ்க்கை என்பதனை உணர்த்துகின்றார். “குடும்பத்தில் கணவனும், மனைவியும் இணைந்து ஆற்றவேண்டிய அறம் விருந்தோம்பல் ஆகும். இல்வாழ்க்கை நடத்தும் கணவனும், மனைவியும் தம் உற்றார் உறவினரைக் காக்கக் கடமைப்பட்டவர். அத்துடன் நில்லாது தம் இல்லம் நாடிவரும் பிறரையும் உண்டியாலும், உறையுளாலும் உபசரித்தல் அவர்தம் கடமை என்று அறநூல்கள் உரைக்கின்றன” என்பார் மா. இராசமாணிக்கனார். எனவே தான் இது குறித்து கூறாத இலக்கிய ஆர்வலர்களே இல்லை எனலாம். இதனை,*

***“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து***
***நோக்கக் குழையும் விருந்து”*** [18]

*என்று வள்ளுவர் விருந்தோம்பல் செய்யும் முறை பற்றி தெளிவாகக் கூறியுள்ளமை இவண் உணரத்தக்கது.*

**கூடி உண்ணுதல்**

*கிடைக்கும் உணவினை அனைவருக்கும் பகிர்ந்துஅளித்து விட்டு ஒன்றாக உண்ணும் நிலையையும் இப்பாடல் உணர்த்தி நிற்பது உணரத்தக்கது.*

***“உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்***
***அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்***
***தமியர் உண்டலும் இலரே”*** [19]

*என்ற புறநானூற்றுப் பாடலும்,*

***“தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்***
***இழந்த என்னை........................”*** [20]

*எனச் சிலப்பதிகாரத்தில் கண்ணகி கவலையுறுவது இவண் சுட்டத்தக்கது. இல்லறத்தில் இருக்கும் பெண் தான் செய்ய வேண்டிய கடமைகள் செய்ய முடியாமல் கண்ணகி வருந்துகிறாள். கண்ணகியின் நிலை இவ்வாறு இருக்க இவளுடைய முன்னோரான சங்கப் பெண்களின் வாழ்வியலை உற்று நோக்கின் விருந்தோம்புதல் குறித்துப் பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன.மேலும்,*

***“சோறு வாக்கிய கொழுங் கஞ்சி***
***யாறுபோலப் பரந்து ஒழுகி”*** [21]

*என ஆற்றுவெள்ளமாய்க் கஞ்சி வடித்துச் சோறு படைத்து விருந்தோம்பிய அன்புநெறியும் வியப்பில் ஆழ்த்துவதாய் உள்ளது.*

***”வருநர்க்கு வரையா வசை இல் வாழ்க்கை”*** [22]

***“விருந்துஇறை நல்கும் நாடன், எங்கோன்”*** [23]

*என்னும் விருந்து உபசரித்த நிலையைச் சங்கப் பாடல்களில் காண ஏலுகிறது.*

**விருந்து பொருட்கள்**

*அந்தந்த நிலப்பகுதியில் விளையக்கூடிய பொருட்கள் பெரும்பாலும் விருந்தில் காணப்படும். அவ்வகையில் நெய்தல் நிலங்களில் தம் இல்லத்திற்கு விருந்திற்கு வருவோருக்கு, வாளை, ஆமை, கரும்பு, தேன் உள்ளிட்ட பொருட்களை விருந்திற்குத் தந்துள்மையைப் பின்வரும் பாடலால் அறிய ஒண்ணும்.*

***“பெருவிறல் யாணர்த் தாகி அரிநர்***
***கீழ் மடைக் கொண்ட வாளையும் உழவர்***
***படை மிளிர்ந் திட்ட யாமையும் அறைநர்***
***கரும்பில் கொண்ட தேனும் பெருந்துறை***
***நீர் தரு மகளிர் குற்ற குவளையும்***
***வன்புலக் கேளிர்க்கு வரு விருந்து அயரும்***
***மென்புல வைப்பின் நல் நாட்டுப் பொருந”*** [24]

*என்ற பாடல் தம் நிலத்தில் விளைவனவற்றைத் தந்து உபசரித்த தன்மையைச் சுட்டி நிற்கிறது.*

**குடும்பத்துடன் வந்து தங்குங்கள்**

*தம் இல்லத்திற்கு வருவோரை முகமனோடு வரவேற்கும் சமூகமாக மட்டும் இல்லாமல் அவர்கள் குடும்பத்தையும் சேர்த்து அழைத்து வந்து தங்கிச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது என்பதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.*

***“இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு இனிது அருந்தித்,***
***தங்கினை சென்மோ, பாண”*** [25]

*என்ற வரிகளில் தன்னைச் சார்ந்தவர்கள்,உறவுகள் என்ற குறுகிய வட்டமின்றி வெளியிலிருந்து வருபவர்களையும் தன்னுடைய இல்லத்தில் தங்க வைத்துப் பார்க்கும் பேரன்புடைய உள்ளத்தையும் இல்லத்தையும் கொண்டவர்களாகத் தமிழர்கள் இருந்திருக்கின்றனர் என்பதை உணர முடிகிறது.*

***வறுமையிலும் செம்மை***

*புலவர் தாம் பெற்ற செல்வத்தினைத் தம் உறவுகளுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் கொடுத்து அடைக்கலம் தரும் மாண்பினை அறிந்தோம். மேலும் தன்னிடம் இருக்கக் கூடிய சிறிய உணவினைக் கூட அனைவருக்கும் பகிர்ந்து அளித்த நிலையினை,*

***“தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்,***
***நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்***
***இற்பொலி மகடூஉப் போலச்”*** [26]

*என்ற வரிகள் குறைவாகத் தன்னிடம் உள்ள உணவினை அனைவருக்கும் பகிர்ந்து அளித்த இல்லறத்தாளை உறையூர் முதுகூத்தனாரின் வரிகள் சுட்டி நிற்கிறது. மேலும், விருந்தினை உண்டவர்கள் தமக்குத் தேவையானவற்றை உண்டுவிட்டு மீதமிருந்ததைப் பசியென்று வந்தவருக்குத் தந்து அவர்களின் பசியினைப் போக்கிய நற்பண்பினை,*

***“உண்ட நன்கலம் பெய்து நுடக்கவும்***
***தின்ற நண்பல் ஊன் தோண்டவும்”*** [27]

*என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. தன் கணவன் எடுத்து வந்த கொழுத்த இறைச்சியை அனைவருக்கும் பங்கிட்டுத் தந்த குறத்தியைக் குறிஞ்சித்திணையில் காணலாம். இங்கு பாணன், ஏதோ ஒரு காரணத்தினால் இறந்து விடுகிறான். ஆனால் வழக்கம் போல விருந்துக்கு வருபவர்கள் அங்கு வருகின்றனர். அவர்களிடம் இல்லையென்று சொல்ல எதுவும் இல்லை பாடியினிடம், ஆனால் அவளோ புறாக்கள், காடைகள் போன்றவற்றை வளர்க்கும் மெல்லிய பண்புள்ளவள். அதனால் விருந்துக்கு வருபவர்களிடம் ஊற்று நீர் சாடியில் உள்ளது. புறா உள்ளிட்ட பறவைகளுக்கு அளிக்கும் தினையரிசி உள்ளன. சுட்ட முயலின் இறைச்சி இங்குள்ளது அதையாவது உண்டு செல்லுங்கள் என்று கூறும் பாங்கு உணரத்தக்கது.*

***“முயல்சுட்ட ஆயினும் தருகுவேம்; புகுதந்து***
***ஈங்கு இருந்தீமோ முதுவாய்ப் பாண”*** [28]

*என்ற வரிகள் பாடினியின் விருந்தோம்பும் பண்பினை உணர்த்தி நிற்கிறது.*

*சிலம்பில் கண்ணகி விருந்தினருக்கு விருந்தளிக்க முடியாமல் துயருவதைப் போல கம்பராமாயணத்திலும்,*

***“அருந்தும் மெல் அடகு ஆர் இட***
***அருந்தும்?' என்று அழுங்கும்;***
***'விருந்து கண்டபோது என் உறுமோ?' என்று விம்மும்”*** [29]

*என்ற அடிகள் சீதை அசோக வனத்தில் துயருருவதைக் கம்பர் காட்டிச் செல்லுகிறார். மேலும், இரவு நேரங்களில் உறங்குவதற்கு முன் கதவினை அடைக்கும் வழக்கம் உண்டு. அவ்வாறு கதவினை அடைக்கும் முன் இல்லத்தின் உள்ளே வந்து தங்கும் விருந்து உளரோ? என்று உபசரிப்பதை,*

***“பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்***
***வருவீர் உளீரோ எனவும்”*** [30]

*என்ற பாடலின் வாயிலாக நன்னாகையார் குறிப்பிடுகிறார். மேலும், இரவு நேரங்களில் விருந்தினர் வந்தாலும் இல்லறத்தாள் மகிழ்வாள் என்பதை,*

***“அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்”*** [31]

*மேற்கண்ட பாடல்வரி உணர்த்தி செல்கிறது.*

**தாளித்த உணவு**

*அமிழ்தம் போன்ற இனிதான சுவையை உடைய உணவினை இல்லற மகளிர் விருந்தினர்க்கு அளித்துள்ளமையை,*

***“அமிழ்துஅட்டு ஆனாக் கமழ் குய் அடிசில்***
***வருநர்க்கு வரையா வசை இல் வாழ்க்கை”*** [32]

*என்ற அடிகளில் காணலாம்.*

**சிந்தாமல் சிதறாமல்**

*சங்கத்தலைவி தினையை இடிக்கும் இடத்தில் குழவியைச் சரியாகப் போட எப்புறமும் சிதறாமல் எடுத்து உணவு சமைத்து அவற்றை அனைவருக்கும் உணவாக்கினாள் என்பதை,*

***“குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து,***
***சிறிது புறப்பட்டன்றோ இலளே”*** [33]

*என்ற வரிகள் மேற்காண் கூற்றுக்குச் சான்றாகி நிற்கின்றன. இன்னொரு தலைவியோ பரிசிலர் பாணர் ஆகியோருக்கு உணவு சமைத்து அளித்த பின்னரும் மீண்டும் எவரேனும் வருவர் என்று நினைத்து அவர்களுக்கான உணவு சமைத்தலில் ஈடுபட்டாள் என்பதை,*

***“.. .. .. .. .. .. ன் ஊரே மனையோள்***
***பாணர் ஆர்த்தவும், பரிசிலர் ஓம்பவும்,***
***ஊண்ஒலி அரவமொடு கைதூவாளே”*** [34]

*என்ற வரிகள் விருந்தோம்பலின் உச்சமான அப்பெண்ணின் செயலை தன்னகத்தே கொண்டுள்ளது.*

**வேட்டுவ மகளிரின் விருந்தோம்பல்**

வேட்டுவ மகளிர் தம் இல்லத்திற்கு வருபவர்களுக்குப் பல பொருட்களைத் தந்துள்ளனர். அவர்களிடையே தங்குவதற்கு இடமும் அளித்துப் பராமரிப்பர். இறைச்சியை எடுத்துக் கொண்டு அவற்றின் பருத்த தசையை நெய்யில் பொரித்து, தினையரிசியால் செய்த உணவுடன் விருந்தினர்க்கு அளிப்பர் என்பதைப் பெருங்கௌசிகனார் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வழியில் செல்லும் கூத்தர்களைக் கண்ட இல்லற மகளிர் அவர்களை அழைத்து வரச் செய்வாளாம். பின்னர் அவர்களுக்குத் தம் இல்லத்தில் உணவு வழங்கும் தன்மையை,

> ***“அகம் மலி உவகை ஆர்வமொடு அளைஇ,***
> ***மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்”*** [35]

என்ற வரியில் அறிகிறோம். “உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு” என்பது முதுமொழி. அதுபோல பாணர்கள் அவ்வீட்டிலே தங்கிவிடும் சூழலும் இருப்பதை,

> ***“செருச்செய் முன்பின் குருசில் முன்னிய***
> ***பரிசில் மறுப்ப நீடலும் உரியிர்,***
> ***அனையது அன்று அவன் மலைமிசை நாடே”*** [36]

என்ற வரிகளில் வழிபோக்கர்களான பாணர்கள் தம்மை மறந்து தங்கியிருத்தலைக் காணும்போது அவர்களின் விருந்தோம்பலின் சிறப்பை அறிய முடிகிறது.

**அவரைச் சோறு**

முல்லை நிலங்களில் கூரைகட்டி அங்கு வாழ்ந்து வந்த மகளிர் சிறிய வரகுடன் அவரைப் பருப்பைப் போட்டுத் துழாவி, மிகுந்த மணத்துடன் சுவையுடன் உணவு செய்துள்ளனர். இதனை,

> ***“அவரை வான் புழுக்கு அட்டி பயில்வுற்று,***
> ***இன்சுவை மூரல் பெறுகுவிர்”*** [37]

என்ற வரிகள் மூலம் அறியலாம். சிவப்பான அவரை விதை, மூங்கிலரிசி,நெல்லரிசி, அகியவற்றை உலையில் இட்டு புளி சேர்த்து இறைச்சியுடன் வழிபோக்கர்களுக்குப் பரிமாறி உள்ளனர். இதனை,

> ***“பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி***
> ***வெண் எறிந்து இயற்றிய மாக் கண் அமலை***
> ***தண்ணென் நுண் இழுது உள்ளீடு ஆக,***
> ***அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவிர்”*** [38]

என்ற வரிகள் அரிசி உணவு இறைச்சித் துண்டுகளோடு சேர்த்து உண்ணத் தந்த முல்லை நில மகளிரை காட்டி நிற்கிறது. மேலும்,

***“வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ,***
***ஆய் மகள் அட்ட அம் புளி மிதவை***
***அவரை கொய்யுநர் ஆர மாந்தும்”*** [39]

என்ற வரிகள் வேளைப் பூவினையும் தயிரோடு சமைத்து, அவரைக் காய்களைக் கொண்டு விருந்தினருக்கு உண்ணக் கொடுத்த விருந்தோம்பல் நிலையைச் சுட்டுவது இவண் நோக்கத்தக்கது.

***அவல் சோறு***

வயல் வெளிகள் நிறைந்த மருத நிலத்தில் பலவகையான காய்கறிகள், பழங்கள் கீரைகள் கிடைத்தன. இவற்றுள் மருத நிலத்தின் உழவர்கள் வயலுக்குச் சென்று கரும்பு, நெல் முதலியவற்றை எடுத்து வந்தனர்.

***“பழஞ்சோற்று அமலை முனைஇ, வரம்பில்***
***புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்,***
***அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து”*** [40]

என்ற வரிகளில் அவலை உரலில் போட்டு குத்திய காட்சியைக் காணலாம். மேலும் நெல்லரியும் பெட்டை கோழியின் கறியையும், சேர்த்து அளிப்பதை,

***“மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்”*** [41]

***“கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின்”*** [42]

என்ற அடிகள் அம்மகளிர் அளித்த விருந்தோம்பலைச் சுட்டுகின்றன. மேலும்,

***“தாழ்கோட் பலவின் சூழ் சுளைப் பெரும்பழம்,***
***……………………………………………………………***
***குலை முதிர் வாழைக் கூனி வெண்பழம்”*** [43]

பலா, வாழை, இளநீரு, நுங்கு, வள்ளிக்கிழங்கு, சோறு முதலியவையும் அந்நிலமக்கள் உண்டதோடு விருந்துக்காக வந்தவர்களிடமும் கொடுத்துள்ளமையை அறிய முடிகிறது.

***“முள் அரித்து இயற்றிய வெள் அரி வெண்சோறு”*** [44]

என்ற அடி ஊன் வெண் சோற்றைத் தமக்கு அளித்துள்ளமையைப் பற்றி கூத்தர்களின் கூற்றாக அறியமுடிகிறது.

***கூத்தர்களுக்கான விருந்தோம்பல்***

கடலில் வலை வீசிக் கெண்டுவந்த வாளை மீனின் தசையை, வரால் மீனின் தசையைக் கலந்து அவற்றை இனிய ஊன்உணவாக்கி, பகன்றைப் பூ கண்ணியமைந்த கூத்தர்களுக்கு அளித்துள்ளமையை,

***“வலையோர் தந்த இருஞ்சுவல் வாளை,***
***நிலையோர் இட்ட நெடுநாண் தூண்டில்,***
***பிடிக்கை அன்ன செங்கண் வராஅல்,***
***துடிக்கண் அன்ன குறையொடு விரைஇ***
***பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர் ”*** [45]

என்ற வரிகள் மேற்காண் கூற்றுக்கு அரண் செய்யும். இவற்றிலிருந்து நெய்தல் நில மகளிர் தமக்கு எளிதாக கிடைக்கக் கூடிய மீன் உள்ளிட்டவற்றை விருந்தாக வழங்கியுள்ளமை சுட்டத்தக்கது.

***பாணர்களின் பசி அகற்றுதல்***

பெரும்பாணன் சுற்றத்தினருடன் திரையனைக் காணச் செல்கின்றனர். அப்போது அங்கு வாழும் எயினர்கள் அவர்களை (பாணர்களை) அழைத்து விருந்தளிப்பர். பாலை நிலத்தில் உணவு என்பது எளிமையாகக் கிடைக்கும் ஒன்றாகாது. அவர்களின் மகளிர் எறும்புகளின் கூட்டுக்குச் சென்று புற்றரிசியை எடுத்து வருவர். அந்த அரிசி கிடைப்பதற்கு அரியது. இதனை வருபவர்களுக்கு விருந்தளிப்பர். வறட்சி மிக்க காலத்தில் நீரும், உணவும் கிடைத்தல் அரிது எனினும் அவற்றை வரும் சுற்றத்தினருக்கும் தந்து உதவுதல் என்பது உளங்கொளத்தக்கது. இதனை,

***“வல் ஊற்று உவரி தோண்டித் தொல்லை***
***முரவு வாய்க் குழிசி முரி அடுப்பு ஏற்றி***
***…………………………………………………..***
***…………………………………………………***
***தெய்வ மடையின் தேக்கிலைக், குவைஇ நும்”*** [46]

என்ற வரிகள் விளக்கி நிற்கும். தேக்கு இலையில் உணவினைத் தந்து உபசரித்தமையை இப்பாடல் சுட்டுகிறது. மேலும், பாலை நிலத்தில் வெப்பம் மிகுந்த குடிலில் தங்கியிருக்கும் எயினர் குலப் பெண் சமைத்த இனிய புளியங்கறியோடு ஆமானின் சூடான இறைச்சியுடன் பாணரின் பசி அழியுமாறு நிரம்பத்தந்தாள் எயினத் தலைவி என்பதை,

***“எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு***
***தேமா மேனி சில்வளை ஆயமொடு,***
***ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்”*** [47]

என்ற பாடல் வரிகளில் புல்லரிசியினைச் சேகரித்துத் தந்து அதன் மூலம் விருந்தோம்பும் எயின மகளின் தன்மை சுட்டப் பெறுகிறது.

வில்லேந்திய எயினர்கள் மேட்டுநிலச் செவ்வரிசியுடன் உடும்புக் கறியைச் சேர்த்து உண்பர். மலைநாட்டு மக்கள் தம் மனைகளில் தாங்களே காய்ச்சி வைத்திருக்கும் கள் வகைகளுள் நெல் இட்டுக்காய்ச்சி கள்ளினை உண்பர் என்பதை,

**"இல்அடு கள்இன் தோப்பி பருகி"** [48]

என்ற வரி சுட்டுகிறது. முல்லை நில மக்கள் தயிர், பால், மோர், நெய் போன்றவற்றை விற்று வந்த பொருளில் மீண்டும் ஆடு மாடுகளை வாங்கி வளர்த்து வருபவர்கள். இவர்கள் வழியில் பாணர்களைக் காணும்போது, தினையரிசியிலான சோற்றை இனிய பாலொடு கலந்து விருந்து தருவர்,

**"எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம்**

**.........................................................**

**பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்"** [49]

என்ற வரிகள் மேற்காண் கருத்தை சுட்டி நிற்கின்றன. இதுபோல மருதநில மாந்தரும் பாணரை இனிதாக வரவேற்று வரகரிசிச் சோற்றுடன் அவரைக் கொட்டைப் பொரியலையும் தந்து உபசரிப்பர். மேலும் வெண்ணிற மெல்லிய அரிசியைச் சோறாக்கி அதனுடன் வீட்டில் வளர்த்த பெட்டைக் கோழிப் பொரியல் செய்து விருந்தளிக்கும் உழவரின் உபசரிக்கும் நிலையை பெரும்பாணாற்றுப்படை சுட்டுகிறது. இதேபோல பார்பனப் பெண் விருந்து வழங்குவதை,

**"சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல்**

**வளைக்கை மகடூஉ வயின் அறிந்து அட்ட,**

**.......................................................................**

**தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்"** [50]

என்ற வரிகள் தன்னகத்தே கொண்டு நிற்கிறது. மேலும், நெய்தல் நிலத்தவர்கள் கொழியில் அரிசியை இனிய களியாகத் துழாவி அதனை வாய்அகன்ற தட்டில் வார்த்துச் சூடுபோக ஆற்றிய களியோடு மணம் மிக்க கள்ளையும், சுட்டு எடுத்த மீனையும் உண்பதற்குத் தருவர்.

**"வெந்நீர் அரியல் விரல்அலை நறும்பிழி**

**தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவீர்"** [51]

என்ற வரிகள் மேற்காண் கருத்தைச் சுட்டி நிற்கின்றன.

**தொண்டைமானின் விருந்தோம்பல்**

சங்ககால மன்னர்களைப் போலவே தொண்டைமான் இளந்திரையனும் தன்னை நாடி வரும் பாணர்கள், புலவர்கள் என அனைவரையும் இன்மொழியால் வரவேற்று, தன் அரண்மனைப் பணியாளர்களைக் கொண்டு வான் போன்ற அகன்ற பாத்திரத்தில் இட்டு அவர்களுக்கு வேண்டியதைத் தந்து உபசரிப்பான். இதனை,

**"மகமுறை மகமுறை நோக்கி முகன் அமர்ந்து**

**ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி"** [52]

என்ற பெரும்பாணாற்றுப்படை வரியின் மூலம் அறியலாகிறது. மேலும் பொருநராற்றுப்படையிலும் விருந்தினைப்பற்றி, கரிகாலனை நாடிச்சென்ற நாள்தொட்டுப் பகலும் இரவும் மூச்சுக் காற்றுக்குக் கூட உள்ளே இடம் இன்றிக் கொழுப்புடைய கறியையே உண்டனர். அதனால் பொருநனுக்கும் அவன் கூட்டத்தார்க்கும் பற்கள் தேய்ந்து போயினவாம். இதைப் புலவர் அழகான உவமை கொண்டு விளக்குகிறார்:

**"கொல்லை உழுகொழு ஏய்ப்ப, பல்லே**
**எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி"**[53]

என்ற வரிகள் சுட்டுகிறது.

**பழைய ஆடையும் புதிய ஆடையும்**

பொருநன் அணிந்திருந்த பழைய ஆடையில் ஈரும் பேனும் இருந்து அரசாள்கின்றன. அது, வேர்வையில் நனைந்து அழுக்கில் திரண்டு, கிழிசல்களை மீண்டும் மீண்டும் தைத்ததால் கந்தலாகி விட்டது. அதனால் துணி நெய்தது போல் இல்லை, தைத்தே செய்ததுபோல் இருக்கிறது. நூல் இழை ஓடிய வழி எது என்று கண்பார்வை கூட நுழைந்து கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு நுண்மை! பூ வேலைப்பாடு கனிந்து இருக்கிறதாம். பாம்பு உரித்த தோல்போல் மென்மையாய் உள்ளதாம் என்பதை,

**"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து**
**அரவுரி அன்ன அறுவை நல்கி..."**[54]

அந்த வகையில் ஆன ஆடையை அளித்து உபசரித்த நிலையைக் காண முடிகிறது. மேலும்,

**"பாசி அன்ன சிதர்வை நீக்கி**
**ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன் உடீஇ . . . ."**[55]

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகளும் மேற்காண் கருத்துக்கு அரணாகின்றன.

இவ்வாறு விருந்தோம்பல் என்னும் பண்பு மண்ணின் மைந்தர்களான தமிழர் மத்தியில் இன்றும் நிலைத்திருக்கிறது. வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் என்று இன்று வரை போற்றப்படுவது நோக்கத்தக்கது. நகைக்கடையின் மூலம் வருவாய் சேகரிக்கும் ஜெயின் சமூகத்தைச் சார்ந்தவர்கள் தமிழக நகைத்துறையில் இடம் பிடித்துள்ளனர் இதற்கு தக்கதொரு சான்றாகும். அதே போலத் திரைத்துறையில் பிற மாநிலத்தவர்கள் கோலோச்சுகின்றனர். எனினும் இன்னும் மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் வந்தாரை வாழ வைப்பவர்களாக இருப்பதற்குக் காரணம் நம்முடைய முன்னோரின் விருந்தோம்பல் பண்பே... என்று எண்ண இடந்தருகிறது.

**ஒப்புரவும் ஈகையும்**

**மன்னர்கள் உள்ளிட்டோரின் ஈகை**

ஒருவன் உண்டு உடுத்தி இன்பமாக வாழ்ந்து சுற்றத்தார்க்கும் பிறருக்கும் உதவி செய்து நல்வாழ்வு வாழ்வதற்குக் காரணமாக இருப்பது அவர்களுடைய பொருள்

முயற்சி. அந்த வகையில் மன்னர்கள் பிறருக்கு அளிப்பதையே தம்முடைய அன்றாடச் செயல்களில் ஒன்றாகக் கொண்டிருந்தனர். இதுவே தம் வாழ்வின் பெரும் பேறாகக் கருதினர். மேலும் ஈகை என்பது ஒருவர் மற்றவருக்கு மனமுவந்து பலனை எதிர்நோக்காது செய்யும் உதவியாகும். ஒருவன் கல்வி கற்று, மனைவி மக்களாய் இணைந்து இல்வாழ்க்கை வாழ்வது எல்லாம் தாங்கள் வாழ்வதற்கு மட்டுமல்ல. மற்றவர்க்கு உதவி செய்வதற்காகவும்தான். மற்றவர் நலனை மனதில் எண்ணித் தன் செயலைப் பிறருக்காகவே செய்யும் மனிதனே மாண்புடையவன் என்று அழைக்கப்படுவான். ஒருவன் மற்றவருக்காகச் செய்யும் உதவியால் அவனுக்குப் புண்ணியம் கிட்டும் என்றும் அப்புண்ணியம் அவனையும் அவன் குடும்பத்தில் உள்ளோரையும் இப்பிறவியில் மட்டும் காப்பதன்றித் தொடர்ந்து வரும் பிறவிகளிலும் காத்து நிற்கும் என்பதும் நம்பிக்கை. 'தர்மம் தலை காக்கும்' என்னும்; ஆன்றோர் மொழி இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

**ஈகை – விளக்கம்**

பிறரது துன்பத்தைக் கண்டபோது மனமிரங்கித் தானே சென்று உதவுதலே ஈகை. இப்பண்பு அனைத்துயிர்களிடமும் இயல்பாகவே காணப்படுகிறது. இப்பண்பு இல்லையெனில் என்றோ புவி அழிந்து போயிருக்கும். அறிந்தவர், அறியாதவர் என்று பாராமல் தேவைப்படும் காலத்தில் தேவைப்படுவோர்க்குக் கொடுத்தலே ஈகை. இப்பண்பு இரக்கத்தின் வெளிப்பாடாக விளங்குகிறது. உயிர்க்குலத்தின் புண்ணிய உற்பத்திக்கு வழிவகுக்கும் இப்பண்பின் மூலமே ஒருவரது மனிதநேயம் வெளிப்படுகிறது. ஈகை என்ற சொல்லுக்குப் பல அறிஞர்களும் பல்வேறு வகையில் விளக்கம் தருகின்றனர். அவையாவன: ஈகை என்ற சொல்லுக்குக் கௌரா தமிழ் அகராதி, "இண்டங்கொடி, கற்பக மரம், காடை, கொடை, பொன், முகில், வண்மை"[56] எனப் பலபொருள் தருகிறது.

ஈதல் என்பது காலந்தோறும் மானுட வாழ்வில் நின்று நிலைபெற்ற ஒழுகலாறாகும். இதனை இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டி, பண்பாட்டின் செழுமையைப் பறைசாற்றுகின்றன. 'ஈகை' என்னும் சொல்லிற்கு, "'கொடை', 'பொன்', 'கற்பகம்"[57] என்று தமிழ்ப் பேரகராதியும் 'ஈகை' என்பது "கொடை', 'பொன்', 'இண்டங்கொடி"[58] என இலக்கியச் சொல்லகராதியும் ஈகையானது "பொன், கற்பகம், காற்று, கொடுத்தல், இல்லாமை, இரண்டைமரம்"[59] என்னும் பொருள்களைக் குறிப்பதாக அகராதி நிகண்டும் பொருள் கூறுகின்றன.

ஈதல் என்பதற்குக் கொடுத்தல், சொரிதல், பிரித்தல் எனத் தமிழ்-ஆங்கில அகராதி பொருள் கூறுகிறது.( தமிழ்-ஆங்கில அகராதி. ப-128) இக்கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும்போது ஈதல் என்பது ஒருவருக்குக் கொடுத்தலையே வலியுறுத்தி நிற்பதை அறியமுடிகின்றது.

ஈதலைக் கொடுத்தல் எனக் கூறிக், கொடுத்தலாவது, "வேள்வியாசானும் அவருக்குத் துணையாயினாரும் ஆண்டு வந்தோரும் இன்புறுமாற்றான் வேளாண்மை

செய்தல்"[60] என வேத வழக்கோடு பொருத்தித் தொல்காப்பியர் சுட்டுவதாக நச்சினார்க்கினியர் எடுத்துரைக்கின்றார்.

'கொடு' என்னும் சொல் படர்க்கைக்குரியது. இருப்பினும் தன்னைப் பிறர்போல் கூறும் குறிப்பினால் தன்மைக்குரிய சொல்லாகக் கொடு அமையும் எனத் தெய்வச்சிலையார் கூறுகிறார். கொடு என்பது தன்மைக்குரிய சொல் அன்று. உயர்ந்தோன் இழிந்தோனை இரக்கும்போது தன்னைப் பிறர்போல் கருதி 'கொடு' எனக் கூறினாலும் தன்மைக்குரியதாக இச்சொல் அமையாது என்பர் இளம்பூரணர்.

ஏற்றல் என்பதற்கு, எதிர்த்தல், கொள்ளல், ஏற்றுதல் எனத் தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகிறது.( தமிழ்ப் பேரகராதி தொகுதி-1. ப-424) இலக்கியச் சொல்லகராதி ஏற்றலுக்கு, கொள்ளுதல், யாசித்தல், அடுக்குதல், எதிர்த்தல் எனப் பொருளுரைக்கிறது.( இலக்கியச் சொல்லகராதி. ப-41) ஏற்றல் என்னும் சொல்லிற்குக் கோடல், எதிர்ந்து பொருதல், உணர்தல், இரப்பு என்ற நான்கு பொருளை அகராதி கூறுகின்றது.( அகராதி நிகண்டு. ப-117) நால்வகை வருணத்தாரின் கடமைகளைச் சுட்டுமிடத்துத் தொல்காப்பியர் ஏற்றலை அந்தணர்களுக்கு மட்டுமே உரிய செயலாகக் கூறியுள்ளார். இலக்கியங்களில் ஏற்றலுக்குரியவர்களாகப் புலவர்கள் இடம்பெற்றுள்ளனர். ஏற்றல் மட்டுமன்றி இரத்தல் என்கிற நிலையும் உண்டு. ஏற்றல், இரத்தல் ஆகிய இரண்டு சொற்களும், சொற்களில் மட்டுமின்றிப் பொருளைப் பெறுகின்ற நிலைகளிலும் வேறுபட்டு உள்ளதை அறியமுடிகின்றது.

"வறியார்க் கொன்று ஈவதே ஈகை" (மயிலை சிவமுத்து (உ.ஆ.) திருக்குறள் இனிய எளிய உரை, பா.221, ப.57) என்னும் குறளில் வள்ளுவர் ஏழைகளுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதே ஈகை என்கிறார். "ஈகை என்று குறிப்பிடும்போது உண்மையாக வறியநிலையில் உள்ளவர்களுக்கு அவர்களின் துன்பம் போகக் கொடுப்பதேயாகும்"[61] என்ற முருகேசனின் கூற்றும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. "இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே" (க.ப. அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம், பா.1076, ப.505) என்னும் பாடலில் ஔவையாரும் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதே செல்வரின் கடமை என்கிறார். மனிதநேயம் என்னும் நூலில் "ஈகைப் பண்பு என்பது நல்லுள்ளங் கொண்ட பெரியோர்களிடமிருந்து வழிவழியே வரக்கூடிய சிறப்பினைக் கொண்டது"[62] என்கிறார் அழகப்பன். "மழை உதவுகிறது, அஃது எனின் எதிர்பார்க்கிறது? கைம்மாறு கருதாத செய்கை அதன்பால் உள்ளது. அஃது உலக அபிமானம்; இந்த உலகம் வாழவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் மனிதன் பிறர்க்கு ஈவது; தருவது மனித அபிமானம்"[63] என்ற சீனிவாசனின் கூற்று எதிர்பார்க்காமல் கொடுக்கும் மழை போன்ற தன்மை கொண்ட மனிதநேயமே ஈகை என்கிறது. "கடுங்குளிரால் நடுங்குகின்றதென்று கருதித் தோகை விரித்தாடிய கான மயிலுக்குக் கலிங்கம் நல்கினான் ஆவியர் பெருமகன் பேகன்"[64] என்று அழகப்பன் பிற உயிர்களைக் கண்டு இரங்கும் மனிதநேயமே ஈகை என்கிறார்.

மேற்கண்ட அறிஞர்களின் கூற்றுக்களை இணைத்துக் காணும்போது ஈகை என்பதற்கான விளக்கத்தைக் கீழ்க்கண்டவாறு உணரமுடிகிறது.

அதாவது பிறரது துன்பத்தைக் கண்டபோது மனமிரங்கித் தானே சென்று உதவுதலே ஈகை. இப்பண்பின் மூலமே ஒருவரது மனிதநேயம் வெளிப்படுகிறது. இரக்கத்தின் வெளிப்பாடாக ஈகை விளங்குகிறது. வறியநிலையில் உள்ள ஏழைகளுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதே ஈகை. அவ்வீகை நல்லுள்ளங் கொண்ட சான்றோரிடம் இருந்தே வெளிப்படுகிறது. எதிர்பாராது கொடுக்கும் மழை போன்ற தன்மை கொண்ட மனிதநேயமே ஈகை. இப்பண்பு இல்லையெனில் என்றோ புவி அழிந்து போயிருக்கும். ஈகை என்னும் பண்பு உயர்ந்தோர்மாட்டே காணப்படுவது. மற்றவர்களுக்குக் கொடுத்து அதனால் மனம் மகிழும் மக்களே சான்றோராவர். ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு கொண்ட மனிதன்வரை அனைத்து நிலையில் உள்ளோர்க்கும் கொடுத்து இன்பம் கண்டவன் தமிழன். புகழுக்காகத் தன் உயிர் ஈந்தவர்கள் எத்துணைபேர். ஒவ்வொருவரும் அவரவர் நிலைக்கு ஏற்ப, தகுதிக்கு ஏற்ப மற்றவர்களுக்குக் கொடுத்து இன்பம் கண்டனர். ஈகை புரிவோர் பலனை எதிர்நோக்காவிட்டாலும் ஈகைப் பண்புடையவர்க்குப் பல்வேறு பயன்களும் உண்டாவது உண்மையே என்பதையும் உணர முடிகிறது.

**ஈகைப் பாடல்கள்**

மன்னர்கள் பிறருக்குக் கொடை அளிப்பது குறித்து ஒவ்வொரு நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. பின்வரும் பாடல்களில் எத்தனை இடங்களில் இச்செய்திகள் இடம் பெற்றுள்ளன என்பது குறிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | புறநானூறு | - | 61 பாடல்கள் |
| 2. | பதிற்றுப்பத்து | - | 40 பாடல்கள் |
| 3. | பரிபாடல் | - | 2 பாடல்கள் |
| 4. | பொருநராற்றுப்படை | - | 91 அடிகள் |
| 5. | சிறுபாணாற்றுப்படை | - | 27 அடிகள் |
| 6. | மலைபடுகடாம் | - | 33 அடிகள் |
| 7. | மதுரைக்காஞ்சி | - | 21 அடிகள் |

ஈதல் குறிப்பிட்டுள்ளமை சங்க காலத்தில் ஈகையறம் போற்றப்பட்டுள்ள தன்மை விளக்கம் பெறும்.

**பரிசில் ஏற்போர்**

புரவலர்கள் ஈந்தவற்றை பெற்றுக்கொள்பவர்கள் எவரென நோக்கின் அவர்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | புலவர்கள் | - | கொடு |
| 2. | கலைஞர்கள் | - | தா |
| 3. | வீரர் | - | ஈ |
| 4. | அந்தணர்கள் | | |
| 5. | இரவலர்கள் | | |
| 6. | வருநர் | | |

என்ற மூன்று நிலைகளில் இதனைப் பிரிக்கலாம். தன்னைநாடி வருவோர்க்கும் நாட்டோருக்கும் ஈயும் தன்மையைச் சங்கப்பாடலின் வழி அறியமுடிகிறது. மேலும், இவ்வாறு எவரெல்லாம் கொடை அளிப்பர் என்பதை பின்வரும் அட்டவணை விளக்கும்.

| வ.எண் | கொடை அளிப்போர் | பரிசில் பெறுவோர் |
|---|---|---|
| 1 | அரசர் | அந்தணர், புலவர், கலைஞர், வீரர்,இரவலர், வருநர் |
| 2 | வள்ளல்கள் | கலைஞர், இரவலர் |
| 3 | பெருநிலக்கிழார்கள் | கலைஞர், இரவலர், வருநர் |
| 4 | மறவர் | புலவர், கலைஞர், இரவலர் |
| 5 | ஐந்நில மக்கள் | புலவர், கலைஞர், இரவலர் |
| 6 | மகளிர் | புலவர், கலைஞர், இரவலர் |

இவற்றில் அக்காலத்தில் வாழ்ந்த மன்னன் முதல் மகளிர் வரை பிறருக்காகவே வாழ்ந்த உயரிய தன்மை இவண் உணரப்படும். இவ்வாறு மற்றவர்களுக்கு அளிக்கும் போது பின்வரும் முறைகள் உள்ளன. ஈ என்பது கொடுப்பவனை விட ஏற்பவன் இழிந்த நிலையில் வறுமையில் இருப்பான். (இரவலன்,வருநர்,வீரர்) தா என்று கேட்பவன் உரிமையுடையவன்.பழகும் நண்பன் முறையில் அமைவான். (கலைஞன், பாணன்) கொடு என்பவன் கொடுப்பவனுக்குச் சம அல்லது உயர்ந்த நிலையில் இருப்பான். (சான்று புலவன், அந்தணன்) ஆகியவை ஈயும் முறையில் கொடுப்போனுக்கும் ஏற்போனுக்கும் இடையேயுள்ள உறவு ஆகும்.

இவ்வாறு சங்ககாலத்தில் ஈகை உணர்வு இருந்த காரணத்தால் அவர்களின் கொடுக்கும் உணர்வு பெறப்படும். இனி இவற்றை விரிவாகக் காணலாம்.

**ஈ எனப் பெற்ற இரவலர்கள்**

“ஈ” என்று கூறுவது இரந்து நிற்றலைக் குறிக்கும். இவ்வாறு இரந்து நிற்போர் “இழிந்தோனாக சுட்டப்பெறுகின்றனர். எனவே இவர்கள் “ஈ“ என்னும் நிலையில் பொருளைப் பெறுபவர்களாவர். இவ்வாறு பெறுபவர்கள் இரவலர்கள் ஆவர். இரவலர்கள் வறுமையின் காரணமாக அரசர், வள்ளல், பெருநிலக்கிழார், மகளிர் ஐவகை மக்கள் ஆகியோர் இரவலர்களுக்கு மன உவகையோடு பொருள் அளித்தனர்.

**அரசர் அளித்தவை**

இரவலர்களுக்கு அரசர்கள், உணவுகள், அணிகலன்கள், களிறு, தேர், அம்பண அளவை நெல், குதிரை முதலியவற்றை அளித்தனர்.

***"மடை வேண்டுநர்க்கு இடை அருகாது,***
***அவிழ் வேண்டுநர்க்கு இடை அருளி***
***விடை வீழ்த்துச் சூடு கிழிப்ப"*** [65]

*என்னும் பாடலடிகள் இதனை உணர்த்துகின்றன.*

***வள்ளல்கள் அளித்தல்***

*வள்ளல்கள் தங்களிடமிருந்து பொருட்களைத் தாங்களே வைத்துக் கொள்ளாமல் உணவு, ஊன் உணவு, மது, இழையணி, நெடுந்தேர், அணிகள் பூண்ட யானை, ஊர் அவர்கள் கேட்ட பரிசிலை வழங்கினர்.*

***"நிழல் இல் நீள் இடைத் தனிமரம் போலப்***
***பணைகெழு வேந்தரை இறந்தும்***
***இரவலர்க்கு ஈயும் .............."*** [66]

*என்ற பாடல் இதற்குச் சான்றாகிறது.*

***நிலக்கிழார்களின் ஈகை***

*இரவலர்கள் தங்களை நாடி வரவேண்டும் என்று எதிர்பார்க்காமல் வாடி, வரும் இரவலர்களுக்கு உணவு, களிறு குதிரை, தேர் முதலியவற்றைக் கொடுத்துள்ளனர்.*

***"புளிச் சுவை வேட்ட செங் கண் ஆடவர்***
***தீம் புளிக் களாவொடு துடரி முனையின்***
***..................................................................***
***எயினர் தந்த எய்ம் மான் எறி தசைப்***
***பைஞ் ஞிணம் பெருத்த பசு வெள் அமலை***
***வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய"*** [67]

*மல்லிகிழான் காரியாதி வருநர்க்குக் கறியும் சோறும் பனங்குடையில் வைத்து அளித்தான். இவனை எம்மைப்போல் போற்ற வேண்டும் என்று கூறும் தன்மையுடையவர். பசி என்னும் துயரைப் போக்குவனாக விளங்கினர். மேலும், மறவர்களும் மது, சோறு, நெய் சொரிந்த ஆட்டிறைச்சி ஆகியவற்றை இரவலர்களுக்கு வழங்கியுள்ளமையை மேற்காண் பாடல் குறிப்பிடுகிறது. மேலும், புலவர்கள் தம்மை நாடிவர வேண்டும் என எண்ணாமல் அவர்கள் வருகையை உணர்ந்தவுடன் அவர்களைத் தேடிச் சென்று பொருள் வழங்குபவராய் பெருநிலக்கிழார்கள் திகழ்ந்தனர் என்பதை,*

***"தன்கடைத் தோன்றினும் இலனே பிறன் கடை***
***அகன் கண் தடாரிப் பாடுகேட்டு அருளி***
***வறன்யான் நங்கல் வேண்டி என்அரை***
***நீல்நிறச் சிதாஅர் களைந்து***
***வெளியது உடீஇ என் பசிகளைந் தோனே"*** [68]

இப்பாடல் தெளிவுபடுத்துகின்றது. வானத்தில் வெள்ளி முளைக்கவும் பறவைகள் ஒலிக்கவும், இரவுப் பொழுது நீங்கும் விடியற்காலத்தில் எருதுகளை வாழ்த்தி யான் அவன் பெருமனைக்குச் செல்லவில்லை. இன்னொருவன் மனையில் யான் கொட்டிய தடாரிப் பறையின் ஓசை கேட்டு என் வறுமையைப் போக்க விரும்பினான். அவன் என் இடுப்பில் அணிந்திருந்த அழுக்கேறிய ஆடையைக் களைந்து, வெள்ளிய ஆடைகளை அணிவித்துப் பசித்துன்பம் தீர்த்தான் என்பதை மேற்கண்ட பாடல் மூலம் அறியலாம். மேலும், இவர்கள் புலவர்களுக்கு நெற்குவை, அணிகலன்கள், பசுக்கள், களிறு போன்றவற்றை வழங்கியக் குறிப்பினை,

> ***"இன மலி கதச் சேக் களனொடு வேண்டினும்***
> ***களம் மலி நெல்லின் குப்பை வேண்டினும்***
> ***அருங் கலம் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை***
> ***பிறர்க்கும் அன்ன அறத் தகையன்னே"*** [69]

என்று காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடல் சுட்டுகின்றது. விளைநிலங்களை விளைப் பகடுகளோடு நல்கிய குறிப்பினை மதுரை அளக்கர் ஞழலார் மகனார் மள்ளனாரின் பாடலும், தன் மனைப் பொன் போல் மடந்தையைக் காட்டி, இவனை என்போற் போற்று எனக்கூறும் ஈகை மேம்பாடுடையவராய்த் திகழ்ந்த குறிப்பினை மதுரை நக்கீரரின் பாடலும் புலப்படுத்துகின்றன.

மேலும், பெருநிலக்கிழார்களும் தங்களை நாடி வந்த கலைஞர்களுக்கு இறைச்சி, பண்ணியம், தேறல் முதலியவற்றை வழங்கியுள்ளனர். எறும்புகள் தம்முடைய முட்டைகளை தூக்கிக்கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்வது போல அங்கு வந்த பரிசிலர்களின் வறுமையைத் தீர்ப்பதாக,

> ***"உண்ணா மருங்குல் காட்டித், தன்ஊர்க்***
> ***கருங்கைக் கொல்லனை இரக்கும்,***
> ***திருந்து இலை நெடு வேல் வடித்திசின் எனவே"*** [70]

என்ற பாடல் மேற்கண்ட கூற்றுக்கு அரணாகிறது. மேலும், பெருநிலக்கிழார்கள் புலவர்களைச் சிறப்பாக போற்றினர். அம்பர் என்னும் பெருநிலக்குடிக்கிழார் வேறு ஒரு செல்வந்தனைப் புகழ்ந்து பாடினார். எனினும், அருவந்தை குடியின் அம்பர் அந்தப் புலவனை அழைத்து அழுக்கேறிய அவர்களது ஆடைகளைக் களைந்து வெள்ளிய ஆடைகளை அணிவித்தான். மேலும் தன் மனையாளிடம் "என் போற் போற்று" என்று கூறிய பெருநிலக்கிழார்களும் இருந்துள்ளனர் என்பது அறியலாகிறது.

***ஐந்திணை மக்களின் அன்பு***

இரவலர்கள் ஒரு புலத்திலிருந்து மற்றொரு புலத்திற்குச் செல்லும் போது அங்கு வாழக் கூடிய மக்கள் அங்குள்ளோருக்கு உணவினை வழங்குவர். "குறவர்கள் மானிறைச்சியை மரை ஆவின் பாலை உலை நீராக வைத்து தினை அரிசியில் சோறாக்கி

*சந்தன விறகால் அடுப்பெரித்து மிகப்பெரிய வாழை இலையில் பலருக்கும் உணவளித்து மகிழ்வர்."* [71]

*சங்கத்தில் மன்னனே மலர்தலை உலகத்து உயிராக இருந்து, மன்னன் எவ்வழியோ அவ்வழியே மக்கள் என்னும் வாழ்வியலை உணர்த்தினான். அதன்படி, மன்னனின் ஈகைச் செவ்வியை உணர்ந்த மக்களும் ஈகையாளராய்த் திகழ்ந்தனர். ஐந்நிலத்தில் வாழும் மக்களும் தங்கள் இல்லங்களில் வைத்திருக்கும் உணவு தானியங்களை அளித்து வறுமையைப் போக்குகின்றனர். மன்னன் பெருங்கொடையாளனாகத் திகழ்ந்தமையால் மக்களும் தங்களிடம் இருக்கும் சிறுசெல்வத்தையும் வாரிக்கொடுக்கும் வள்ளல் குணமுடையோராகத் திகழ்ந்த பாங்கு அறியத்தக்கது.*

*புலவர்கள் மன்னனைக் கண்டு பரிசில் பெறச் செல்லும் பொழுது வழியிடையில் உள்ள மக்கள் அவர்களைப் போற்றினர்.*

***"............மனையோள் விரும்பி***
***வரகும் தினையும் உள்ளவை எல்லாம்***
***இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென***
***குறித்து மாறு எதிர்ப்பைப் பெறாஅமையின்***
***குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து***
***சிறிது புறப்பட்டன்றோ இலளே"*** [72]

*தம்மிடம் உள்ள வரகும், தினையும் இரவலர்க்கு வழங்கப்பட்டு விட்டன. குறி எதிர்ப்பாகத் தந்த பொருள்களும் கிடைக்கப்பெறவில்லை. அதனால் வீரனின் மனைவி, விதைப்பதற்காக வைத்திருந்த தினையைக் குத்தி உணவு சமைத்து வழங்கினாள் என்பதன் வழி வீரனின் மனைவியின் விருந்தோம்பும் இயல்பு இப்பாடலால் விளக்கப்பட்டுள்ளது.*

***ஈகைப் பண்பென்னும் ஈடிலா விழுமியம்***

*இரக்கம், அருள் ஆகியவற்றின் அடிப்படையில் ஈகை, ஒப்புரவு ஆகிய விழுமியங்கள் அமைகின்றன. பசி, பட்டினி, இல்லார், உள்ளார், ஏற்ற இறக்கங்கள் போன்ற வேறுபாடுகளும் மாறுபாடுகளும் இல்லாமல் உலகம் உய்தல் வேண்டுமெனில், ஈகை யும் ஒப்புரவும் உலகில் வாகை சூடல் வேண்டும். கடியலூர் உருத்திரங்கண்ணனார், இளந்திரையனைப் பற்றிப் பாடிய பெரும்பாணாற்றுப்படையில் மேற்சுட்டப்பட்ட ஈகைப்பண்பு என்னும் வாழ்வியல் விழுமியம் விளங்கக் காணலாம்.*

***"பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்***
***கருவி வானம் துளிசொரிந் தாங்கு.***
***பழம்பசி கூர்ந்தஎம் இரும்பேர் ஒக்கலொடு***
***வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி***
***வால்உளைப் புரவியோடு வயக்களிறு முகந்துகொண்டு***
***யாம்அவ ணின்றும் வருதும்... "*** [73]

*“கொடும்பஞ்சம் நிலவும் காட்டகத்தில் ஆராவாரம் உண்டாகும்படிக் கருமுகில்கள் ஒன்றுகூடி நன்மழை பொழிந்தாற் போன்று தொன்று தொட்டுப் பழம்பசியால் பெரிதும் வருந்திய எமது பெரிய சுற்றத்தார்களோடு, பிறர்க்கும் கொடுக்கக் கொடுக்கக் குறையாத நிறைவான – அளவற்ற பெருஞ்செல்வத்தையும் ஒப்பனை செய்யப்பட்ட குதிரைகளையும் ஒப்பிலா வலிமிகு யானைகளையும் வள்ளல் வழங்கினான் என்றும் வழங்கிய வளங்களை வாரிக் கொண்டு அவனுடைய ஊரிலிருந்து வருகின்றோம்.” என இளைந்திரையனிடம் பரிசில் பெற்று வரும் பாணன், தான் பெற்ற பெருஞ்செல்வ வளங்களைப் பற்றி மற்ற பாணர்களிடமும் பகிர்கிறான். இதில் வளம்மிகு வள்ளல் இளந்திரையனின் ஈகை விழுமியம் இனிதுற விளங்குகின்றது.*

*திருவள்ளுவரும் ஈகைபற்றி ஆழமாகவே சிந்தித்திருக்கிறார்; ஆய்வு செய்திருக்கின்றார். அதன் விளைவே ஈகை என்னும் 23–ஆவது அதிகாரம். அதில் பெரும்பாணனின் பெரும்பசியைத் தீர்த்த பெருவள்ளல் இளந்திரையனின் வள்ளன்மைக்குப் பொருத்தமாக அமைந்த குறள்மணி ஒன்று உள்ளது. அந்த ஒளிர்மணி:*

***“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்***
***பெற்றான் பொருள்வைப்பு உழி”*** [74]

*உண்ணவும் வழியின்றி வாடுகின்ற இல்லாதவர்களது பசி நாளடைவில் அவர்களை அழித்துவிடும். அத்தகைய கொடிய பசியைத் தீர்த்தலே ஒருவன் செய்ய வேண்டிய அறச்செயலாகும். அந்த அறச் செயல்தான் அவன் திரட்டிய பொருளைச் சேமித்து வைக்கும் பாதுகாப்பான இடமாகும் என்று வள்ளுவனார் குறிப்பிடுவது உணரத்தக்கது.*

***ஒப்புரவு என்னும் ஒப்பில்லா விழுமியம்***

*ஈகை என்பது தனிக்கொடை. தனியர் வந்து கேட்கும் போது ஈவது. ஒப்புரவு என்பது பொதுக்கொடை. வருகின்றவர்கள் எல்லோருக்கும் கொடுப்பது. தம்மைப் போலப் பிறரும் வாழ்தல் வேண்டும் என்னும் பெருநோக்கோடு கொடுப்பது. அஃதாவது பிறரும் தமக்கு ஒப்ப வாழும்படிப் புரத்தல் ஆகும். ஒப்பப் புரத்தலே ஒப்புரவு என்பதாகும்.*

*வள்ளல் குமணனைப் பாடிப் பரிசில் வளங்களைக் கொண்டுவருகிறார் பெருஞ்சித்தினார். தம்மை ஒப்ப எல்லோரும் வாழ்தல் வேண்டும் என்னும் பெருநோக்கர் அவர். அதனால், தமக்குக் கிடைத்தமைபோல் வளங்கள் எல்லாம் எல்லாருக்கும் கிடைக்க வேண்டும் என்று எண்ணுகிறார். எல்லாவற்றையும் தாமே நுகர்தல் வேண்டும் என்றும் எண்ணவில்லை. எனவே, “இன்னார் என்னாது நானும் கொடுப்பேன்; நீயும் அப்படியே கொடுப்பாயாக” எனத் தம் அன்பு மனையாளிடம் பின்வருமாறு மொழிகிறார்,*

***“நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்***
***......................................................***
***பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்***
***திருந்து வேல் குமணன் நல்கிய வளனே”*** [75]

உன்னை விரும்பி வாழ்கின்றவர்களுக்கும், நீ விரும்பி வாழ்கின்றவர்களுக்கும் பல வகைகளாலும் சிறந்த கற்பு அமைந்த உன் சுற்றத்தார்க்கும் நம் சுற்றத்தார்க்கும் வருத்தம் தரும் கடும்பசி நீங்கும்படி, அன்பு உடைமையால் கைமாற்றாகக் கொடுத்தவர்க்கும், இன்னவர்க்கு என்னாமலும் என்னைக் கேட்டுக் கொடுக்க வேண்டும் என்பதும் இல்லாமல், இவற்றை வைத்துக் கொண்டு நெடுங்காலம் வாழ்க்கை நடத்தலாம் என்பதும் இல்லாமல், நீயும் எல்லோருக்கும் கொடுப்பாயாக. மனை அறம் காக்கும் உரியவளே..! பழங்கள் பழுத்துத் தொங்கும் பழுதிலா மரங்கள் நிறைந்த முதிர மலைத் தலைவன் திருத்தமாகச் செய்யப்பட்ட வேலை உடைய குமணன் கொடுத்த கொடைப் பெருவளன் ஈதே என்று புலவர் குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.

**"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு."**[76]

அயராது தம் உழைப்பால் திரட்டிய பொருள்கள் உதவி ஆளுமையால் ஆராய்ந்து அறிந்து தகுதியானவர்களுக்கு வேறு யாரிடமும் சென்று கேட்டுப் வேண்டிப் பெற வேண்டிய தேவை இல்லாத வகையில் வேண்டிய எல்லாவற்றையும் கொடுப்பதற்காகத்தான் என்று குறள் கூறும் ஈகை இலக்கணத்திற்குக் குமணனும், ஒப்புரவு அறிதல் இலக்கணத்திற்குப் பெருஞ்சித்திரனாரும் சாலச்சிறந்த சான்றாளர்களாகத் திகழ்வதைக் காணலாம்.

**மகளிரின் ஈகை**

மகளிர் வீரச் செறிவுடையோர் என்பதைப் பல சான்றோர்கள் நமக்கு எடுத்துகாட்டியுள்ளனர். அதே மகளிர் ஈகைத் தன்மையுடன் இருந்து வந்ததைச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

**"இல்லது நோக்கி இனிவரவு கூறாமுன்**
**நல்லது வெஃகி வினை செய்வார்"**[77]

என்ற வரிகள் மகளிர் இரவலர்கள் எதிர் நோக்குவதற்கு மேல் அவர்களுக்கு வேண்டியதைச் செய்வர் என்ற கருத்தினை விளக்கி நிற்கிறது.

**தா – என்னும் முறையில் பெறுவோர்**

"தா" என்பது ஒப்போனின் சொல்லாகும். வேந்தர்களைக் கலைஞர்கள் புகழ்ந்து (அவர்களைக் கொண்டே) அவர்களைச் சார்ந்து இவர்கள் வாழ்வதால் "கொடு" என்று கேட்டு பெறும் நிலையில் உள்ளனர்.

**மன்னர்களின் ஈகை**

கலைஞர்களாகிய பாணர்கள் கலைகளில் வல்லவர்கள் இவர்கள் இனிப்பினை நாடும் எறும்பு போலவும், பழத்தினை நாடும் பறவை போலவும் புரவலர்களை நாடிச் செல்வர். இவ்வாறு செல்லும் இவர்களை ஏமாற்றாமல் மாரி போல வாரி வழங்கினர்.

இதனை பின்வரும் சொற்கள் உறுதிபடுத்துகின்றன. பரிசிலர் இருக்கை பாணர் நாளவை என்று பாராட்டப்பட்டவை அரசர் சபையாகும். இதனை,

**"தென்கடல் முத்தமொடு நன்கடல் பெறுகுவை"** [78]

என்ற அடி உறுதிபடுத்துகின்றன.மேலும்,

***"பாணர் வருக, பாட்டியர் வருக,***
***யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக என,***
***இருங்கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்,***
***கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி"*** [79]

என்ற வரிகள் அரசன் அளித்த சிறந்த பரிசுப் பொருட்களை உணர்த்தி நிற்கிறது.

**கொடு என்னும் ஈகை**

புலவர்கள் மற்றும் அந்தணர்கள் அரசன் மற்றும் பிற வள்ளலிடம் காணப்படும் தவறுகளைச் சுட்டிகாட்டுவோராய் இருப்பர். எனவே அவர்கள் கொடு என்று உரிமையாய்க் கேட்டுப்பெறும் நிலையில் இருப்பர் என்பது உணரத்தக்கது.

**அரசர்களின் ஈகை**

அந்தணர்களுக்கு அரசர்கள் பொன், அணிகலன்கள், பசு, ஊர் ஆகியவற்றைக் கொடுத்தனர்.

***"அறம் கரைந்து வயங்கிய நாவின், பிறங்கிய***
***உரைசால் வேள்வி முடித்த கேள்வி,***
***அந்தணர் அருங் கலம் ஏற்ப"*** [80]

என்ற வரிகள் மன்னன் அந்தணர்களுக்கு அளித்தமையைச்சுட்டி நிற்கும். மேலும் புலவர்களுக்கு உணவு,உடை,கள்,பொன்,பொருள், அணிகலன்கள், நிலம், தேர், வார்,யானை, குதிரைகள், களமர்(இல்லத்தில் பணிபுரிவோர்) ஆகியவற்றைத் தந்துதவினர் என்பதை,

**"இலம்படு புலவர் ஏற்றகை ஞெமரப்**
**பொலஞ்சொரி வழுதி"** [81]

என்ற பரிபாடல் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

**மக்களின் ஈகை**

உழவர்களை ஓய்வு நேரங்களில் கலைஞர்கள் உற்சாகப்படுத்துவர். உழவர்கள் கோழிப்பெடைப் பொரியலைக் கலைஞர்களுக்குக் கொடுத்தனர். மேலும், மீன் உணவையையும் அளித்தமையைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

***"..........உலைஇய உருப்புஅவிர் குரம்பை***
***எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு***
***தேமா மேனிச் சில்வளைஆயமொடு***
***ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர் "*** [82]

அந்த நிலப்பகுதி மக்கள் எயிற்றியரும் அங்கு வாழ்வதைக் காணலாம். கூரை வேயப்பட்டிருக்கும் அவர்களது குரம்பை வீடுகளில் உறுத்தும் வெயில் வாலைக் குலைத்துக் கொண்டு முற்றத்திலேயே முடங்கிக் கிடக்கும். வெயிலின் சினம் செல்லுபடி ஆகாத குரம்பை அது. அங்கே எயிற்றியர் நல்கும் இனிய புளிச்சோறு பெறலாம். காட்டில் மேயும் ஆமான் ஆட்டுக் கறி சுட்ட வறுவல் உணவும் பெறலாம். இனிய மாந்தளிர் போன்ற மேனியையுடைய உன் ஆயத்தாரும் பெறலாம். போதும்போதும் என்னும் அளவுக்கு விருப்பம் தீரப் பெறலாம் என்று கூறுவதைக் காணமுடிகிறது.

**மறவன் புலவருக்கு ஈதல்**

புலவரை அரசர்கள் மட்டுமில்லாமல் மறவரும் காத்துள்ளனர். இவ்வுலகில் பாரி உள்ளிட்ட வள்ளல்கள் இறந்துவிட்டனர். இப்போது எம்மைக் காக்க, எம் மண்டையை ஈத்து மலர்பவர் யாவர் உளர் என்று பரிசிலரைக் கேட்க அவர்கள் பாண்டியன் மறவன் நாலைகிழான் உள்ளான் என்று கூறுவது பெருங்நிலக்கிழாரின் சிறப்பை உணர்த்தி நிற்கிறது.

இவர்களைப் போலவே மகளிர் பாடுநர்க்குப் பிடியானைகளை அளித்துள்ளனர். ஆனால் மறவர்கள், அந்தணர்கள் உள்ளிட்ட உயர்ந்தோருக்குப் பரிசுப் பொருட்கள் அளித்தமைக்குச் சான்றுகள் இல்லை.

**வரம்பில்லா ஈகை**

சேரன் செங்குட்டுவன், போர் நிகழும் போதெல்லாம் வெற்றியின் அடையாளமாகக் களிறுகளைப் பெற்றான். இவ்வாறு அரிதாகப் பெற்ற பொருளையும் எளிதாகப் பாணர்க்கு வழங்கியமையை,

**“அட்டு ஆனானே குட்டுவன் அடுதோறும்**
**பெற்று ஆனாரே பரிசிலர் களிறே”** [83]

என்னும் பாடல் உணர்த்துகிறது.பாணர்களுக்குப் பொற்றாமரையும் விறலியர்க்கு முத்து மாலைகளையும் அளிப்பதை,

**“பைம் பொற் தாமரை பாணர்ச் சூட்டி**
**ஒள் நுதல் விறலியர்க்கு ஆரம் பூட்டி”** [84]

பதிற்றுப்பத்து தெளிவுப்படுத்துகின்றது. இரவலர் வாராவிட்டாலும் அவர்கட்கு ஈந்து மகிழ்கின்ற இன்பத்தை விரும்புவதால் பிறநாடுகளிலிருந்து இரவலரைத் தேரேற்றிக் கொணர்ந்து மிகுதியாக உணவு படைக்கின்றான்.

**ஈதலில் பெற்ற இன்பம்**

தானம், தர்மம் என்னும் அறச்செயல்கள் வீடுபேற்றை வழங்கும் வல்லமை பெற்றன. பாடுபட்டுச் சேர்த்த பெருஞ்செல்வத்தின் பயனே பிறருக்கு கொடுத்து உதவுவதில்தான் உள்ளது. அத்தகு ஈதலை விட இன்பம் இவ்வுலகில் வேறில்லை என்ற வாழ்வின் உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் சங்கத் தமிழர்கள்,

**"உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே"** [85]

*அதனால் செல்வத்துப் பயனே ஈதல் என்ற புறநானூற்றின் வழி கூடி மகிழ்ந்து பிறருக்கீந்து வாழ்ந்தனர். மேலும், பிறருக்குக் கொடுத்து உதவாத நிலையை மிகவும் இழிவாகக் கருதி வாழ்ந்தனர்.*

*ஈகைக் குணத்திற்கு அடிப்படையே இரக்க உணர்வு தான். ஈரமுடைய உள்ளம் தான் பலரது துன்ப விளைவுக்கு ஊற்றுக்கண்ணாகவும் இருக்கிறது என்பது சங்கத்தமிழர் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

**ஈதல் அளிக்கும் முறை**

*அரசன் அனைத்துத் தரப்பினர்க்கும் பரிசில் அளித்தான் என்பதைக் கண்டோம். இனி ஒவ்வொருவரும் எவ்வாறான சடங்குகளை மேற்கொண்டு ஈந்தனர் என்பதைப் பின்வரும் பட்டியலின் மூலம் உணரலாம்.*

**அளிக்கும் முறைமை**

- *நீர் வார்த்தல்* → *அந்தணர்*
- *ஏழடிப் பின்சென்று வழங்குதல்* → *புலவர்கள்*
- *பசு கன்றினை நோக்குதல் போன்று நோக்கி வரவேற்றல், கள்ளளித்தல் (சிறுபா – 238-245)* } *கலைஞர்கள்*
- *இரவலர்களோடு அமர்ந்து கள் உண்பவர்கள்* } *இரவலர்கள்*

*மிகவும் அன்பாகவும் அக்கறையாகவும் தன்னை நாடி வந்தோர்க்கு ஈகையாளர்கள் பரிசளித்துள்ளமையை இதுகாறும் கண்டோம்.*

**ஈகை சிறப்பு**

*கொடுத்தல் என்பது இன்றுவரை சமுதாயத்தில் இருந்து வருகிறது. சான்றாகக் கோவை, சென்னை போன்ற மாநகரின் பெரிய மருத்துவமனைகளில் இன்றும் கூட நோயாளிகளுக்கு இலவசப் பிரிவு, தொகை செலுத்தும் பிரிவு என இரு பிரிவினைக் கொண்டுள்ளது. இரண்டிலுமே ஏறத்தாழ சிகிச்சை ஒன்று தான், எனினும் அக்கால வள்ளல்களைப் போல ஈந்தார் எவரேனும் உண்டா? என்பதை என்னும்போது ஏமாற்றமே நிறைகிறது. பசியென்று வருவோர்க்கெல்லாம் ஈந்த பூமி இது. அதை இவ்விடத்தில் நோக்கும்போது முன்னோரின் பெருமை விளங்குகிறது.*

**"மாரி பொய்குவது ஆயினும்**
**சேரலாதன் பொய்யலன் நசையே"** [86]

என்ற பாடல்வரி பொய்யாத சேரனின் பரிசினைச் சுட்டி நிற்கிறது. வைகை வெள்ளம் போன்ற ஈகையுடையவன் என்பதை பாடலடிகள் சுட்டி நிற்கின்றன.

**"கடல்வயின் குழீஇய அண்ணல்அம் கொண்மூ**
**நீர் இன்று பெயராவாங்கு, தேரொடு**
**ஒளிறு மறுப்பு ஏந்திய செம்மற்**
**களிறு இன்று பெயரல, பரிசிலர் கடும்பே"** [87]

என்ற வரிகள் ஈகையின் உணர்வுடைய தன்மையைச் சுட்டுகின்றன.

**ஈகையின் பயன்கள்**

எதிர்பலன் பாராது செய்யப்படுவது ஈகை எனினும் ஈகையின் பின்விளைவாய்ப் பல்வேறு பயன்கள் உண்டாகின்றன. அதாவது கொடுப்பவருக்கும் பெறுபவருக்கும் மகிழ்ச்சி உண்டாகிறது. கொடுப்பவர்களுக்கு மனதிலே நிம்மதி ஏற்படுகிறது. அதுமட்டும் இன்றி அவர்களுக்கு அழியாத புகழும் உண்டாகிறது. மனிதப் பிறவியின் நோக்கமே இப்புகழினைப் பெறுவதுதான் என்று அறிஞர்களும் அற இலக்கியங்களும் உணர்த்துவது அனைவரும் அறிந்த ஒன்றே. அவர்கள் கூறுவதைக் கொண்டு ஈகையின் பயன்களை கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்த முடிகிறது.

- நிம்மதி கிட்டும்

பொருளைப் பெற்றவர்கள் கொடுத்தவர்களை வாழ்த்தும்போது அவர்களுடைய குடும்பத்தில் அமைதி தவழ்கிறது. மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடுகிறது. எல்லாவித வளங்களும் கிட்டுகிறது. "தங்களிடம் வந்து கேட்ட புலவர், வேசியர், யாசிப்பவருக்குக் கொடுத்து தரித்திரமடைந்தவர் எவரும் இல்லை"[88] என்ற பத்மதேவனின் கூற்று ஈகையால் தாழ்ந்தவர் எவருமில்லை என்ற கருத்தினையே உணர்த்துகிறது.

- சிறப்பு கிட்டும்

தாயிழந்த பிள்ளைக்கும் கணவனை இழந்த மனைவிக்கும் ஈகை புரிபவரே சிறப்புடன் வாழ்வர் என்பதை

**"தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி"** [89]

வைத்து வழங்கி வாழ்வார் என்று ஏலாதிப் பாடல் சுட்டுகிறது.

"திருவள்ளுவர் விரும்பும் குடும்பம்" என்ற நூலில், "சேர்த்து வந்த பொருளை பலர்க்குப் பயன்படும்படி பகுத்துக் கொடுத்துவிட்டுத் தானும் உண்டு வாழும் வாழ்க்கையை யாரும் பழிக்க முடியாது"[90] என்கிறார் பச்சையப்பன். தமிழியல் ஆராய்ச்சி என்னும் நூல், "ஒருவன் பொருளீட்டுவதன் நோக்கமே ஈதல் தொழிலை இடைவிடாது செய்ய வேண்டும் என்ற அவாவினாலே"[91] என்கிறது.

➢ *அரசனாகப் பிறப்பான்*

*இப்பிறவியில் ஒருவனுக்கு உதவியவன் அடுத்த பிறவியிலே அரசனாவான் என்று அற இலக்கியங்கள் கூறுகின்றன.*

***“தளையாளர், தாப்பாளர், தாழ்ந்தவர், பெண்டி***
***ருளையாளர் ரூணொன்று - கிளைஞராய்***
***மாவலந்த நோக்கினா யூணீய்ந்தார் மாக்கடல்சூழ்***
***காவலந்தீ வாள்வாரே நன்கு”*** [92]

*என்னும் ஏலாதிப் பாடல் செய்த குற்றத்திற்காக அரசரால் தண்டிக்கப்பட்டவர்களுக்கும், பிறரால் தாக்கப்பட்டவர்களுக்கும் நோயால் வருந்துகிறவர்களுக்கும் உணவளித்து உதவியரே அடுத்த பிறவியில் உலகினை ஆள்வர் என்கிறது.*

***கல்வியும் கேள்வியும்***

*ஒரு நாட்டின் வளம் என்பது அந்நாட்டினரின் மனித வளத்தை அடிப்படையாகக் கொண்டு குறிக்கப்படும். மனித வளம் என்பது வெறும் மனிதர்களை மட்டுமே குறிக்காது. அந்த மனிதர்களை அவர்களின் அறிவைச் சுட்டுவதாக அமையும். இவ்வாறு யோசிக்கும் போது, தமிழர்கள் பெற்ற கல்வியை மிகச் சிறப்பானதாகக் குறிப்பிடும் சங்ககாலத்தில் கிடைத்துள்ள குறிப்பின்படி கிட்டத்தட்ட 500 புலவர்கள் இருந்துள்ளனர். பெண்பால் புலவர்கள் 40 க்கும் மேற்பட்டோர் வாழ்ந்துள்ளமை சங்கப்பாடல்களின் வழி அறியமுடிகிறது.*

***கல்வியின் வகைகள்***

*கல்வி என்பது இன்றைய சூழலில் ஒரு துறையோடு, ஒரு பிரிவோடு நில்லாமல் பல்வேறு நுண்ணிய பிரிவுகளில் இருந்து வருகிறது. இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு வழங்கும் கல்வியை உற்று நோக்கினால் இதனை உணர முடியும். இதுபோல சங்க காலத்தில் எண், எழுத்து, வானியல், மருத்துவம், இசை,ஓவியம், சிற்பம், நாட்டியம் முதலியவை பற்றி நூல்கள் குறிப்பிட்டுள்ளமையைக் காணமுடிகிறது. மேலும், பலதரப்பு அறிஞர்களும் தமக்குள் கூடி வாதிட்டமையை,*

***“பல் கேள்வித் துறைபோகிய***
***தொல் ஆணை நல் ஆசிரியர்***
***உறழ் குறித்து எடுத்த உருகெழு கொடியும்”*** [93]

*என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது.*

*கல்வி என்பது மாந்தர்களின் இயல்பான அறிவூக்கத்தை மேம்படுத்தி அவற்றை மென்மேலும் வளர்ச்சியுறச் செய்வதாகும். இறந்தகால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத் தன்மையை எதிர்நோக்கி நிகழ்காலத்தினைக் கட்டமைக்கும் வல்லமை கற்றவர்களிடையே தோன்றும் எனலாம். உள்ளம் உறுதியடைந்து அறிவினில்*

தெளிந்து, ஆற்றலில் உயர்ந்து இச்சகத்திற்கான புதிய வளத்தை இக்கல்வி அளிக்கிறது எனில் அதில் மிகையில்லை. கல்வி ஒவ்வொருவரும் மனிதனின் சிந்தனையிலும் உயரிய குறிக்கோளைத் தோற்றுவிக்கிறது எனலாம்.

**எவ்வாறு கற்றல் வேண்டும்**

கல்வி கற்றல் குறித்து இலக்கியங்கள் பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்டுள்ளன. அவற்றை இனி காணலாம். ஊதியமில்லாக் கல்வி உருப்படாது என்பது பழமொழி இலவசக் கல்வி நடைபெறும் இந்நாள் போலில்லாது அந்நாளில் ஆசிரியருக்குப் பெரும்பொருள் கொடுத்தும்,வேண்டிய உதவிகளைச் செய்தும் அவர் சினங்கொள்ளாத வகையில் இரு என இருந்து, சொல்லெனச் சொல்லி அடக்கத்துடன் கல்வி கற்றனர் என்பதை,

> **"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
> **பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"** [94]

என்ற வரிகள் கல்வி பெறுவதற்கு மாணவர்கள் செய்ய வேண்டிய செயல்களைச் சுட்டியுள்ளது. அதுபோலவே கலித்தொகை ஆசிரியர்களுக்குச் செய்ய வேண்டிய சேவையைச் சுட்டுகிறது.

> **"கற்பித்தான் நெஞ்சு அழுங்கப் பகர்ந்து உண்ணான், விச்சைக்கண்**
> **தப்பித்தான் பொருளேபோல், தமியவே தேயுமால்,"** [95]

என்ற வரிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது. இது ஆசிரியர்கள் (கல்வி கற்றோர்) பெற்ற உயர்நிலையையும், அனைவரும் கல்வி பெற வேண்டிய அவசியத்தையும் ஒருங்கே உணர்த்தி நிற்கிறது.

**மன்றங்கள்-பள்ளிகள்**

சங்க காலத்தில் கல்வி நிறுவனங்கள் பள்ளிகள் என்னும் பெயரில் எந்த இலக்கியத்திலும் குறிக்கப் பெறவில்லை.அதற்கு இணையாக மன்றம் என்ற பெயரில் இயங்கி வந்தன என்பதை,

> **"அன்னாய் இவன் ஓர் இள மாணாக்கன்**
> **தன் ஊர் மன்றத்து என்னன் கொல்லோ"** [96]

என்று கூறுமிடத்து மாணவர்கள் மன்றத்திடை இருந்து கல்வி பயின்றதனைக் குறிப்பால் அறியலாம். சங்க காலத்தில் ஊர்ப்பொது மன்றங்களில் தான் அனைத்தும் நடைப்பெற்றன.பொதுமன்றங்களில் பலா, வேம்பு முதலிய மரங்களின் நிழலில் பாணர்,பொருநர் முதலிய இரவலர்கள் வந்து தங்குதலும்,அங்குள்ள மரங்களில் தம் இசைக் கருவிகளைத் தொங்க விடுதலும் மரபாகும்.இச்செய்தியினை,

> **"மன்றப் பலவின் மாச் சினை மந்தி**
> **இரவலர் நாற்றிய விசி கூடு முழவின்"** [97]

***"மன்றப் பலவின் மால்வரை பொருந்தி என்"*** [98]

***"மன்ற வேம்பின் மாச் சினை ஒண் தளிர்"*** [99]

***"மன்ற வேம்பின் ஒண் குழை மலைந்து"*** [100]

***"மன்ற வேம்பின் ஒண்பூ உறைப்ப"*** [101]

*என்னும் புறநானூற்று அடிகள் மூலம் அறியலாம் இங்ஙனம் ஊர்ப்பொது மன்றங்கள் பலர் கூடி வாதிடவும் கல்வி கற்கவும் பயன்படுத்தப் பெற்றிருந்தது என்பதை ஊகிக்க முடிகின்றது.*

*சங்க காலப் புலவர்கள் பலர் ஆசிரியர்களாக விளங்கியுள்ளனர் என்பதை ஆசிரியன் பெருங்கண்ணன், குலபதி நக்கண்ணனார், மதுரை ஆசிரியர் கோடங்கொன்றனார், மதுரை இளம்பாலாசிரியன் முதலிய பெயர்களைக் கொண்டே அறியலாம். புறநானூற்றில் அடைநெடுங்கல்வி யார் என்னும் புலவர் ஒருவர் பெயர் காணப்பெறுகிறது. இப்பெயர் கல்வியால் பெற்ற சிறப்புப் பெயராகும்.*

**பெண்கள் கல்வி கற்றல்**

*ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கல்வி கற்றமையை நாம் இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசத்தியார், ஔவையார், காக்கைப்பாடினியார், உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இருந்தமையை அறிகிறோம். புலவர்களைக் கல்வியறிவு பெற்றவர்களைச் சிறப்பிக்கும் முகமாக,*

***"அம் சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்"*** [102]

***"நாநவில் புலவர்"*** [103]

*என்ற சொற்கள் தாங்கி நிற்பது இதனை உணர்த்துகிறது.*

***தமிழரின் பிறதுறை அறிவுகள்***

*தமிழர்கள் தங்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப தகவமைத்து வாழ்ந்தனர்.அவை நீர், வானியல், இசை, ஓவியம், கட்டிடம் என பலவகைகளாக அமைந்திருந்தன. இவ்வாறான அறிவுகளைப் பெறுவதற்கு அவர்களின் கல்வியும், அனுபவமும் சூழலும் காரணமாக அமைந்தது எனலாம்.*

***நீர் மேலாண்மை***

*பயிர்கள் உருவாக்கி வளர்க்கப் பாசனத்திற்குப் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தியமை நீர் மேலாண்மை என்று குறிப்பிடப்படும். தென்மேற்குப் பருவக் காற்றினால் கிடைக்கும் மழையால், பெருக்கெடுத்தும் ஓடும் ஆற்று நீரைக்கண்டு மகிழ்ந்து, நீரினை வணங்கி , ஆடிப் பெருக்கு விழாக் கொண்டாடிய பண்டைத் தமிழர், அந்நீரினை சேமித்து வறட்சிக் காலத்திலும் பயன்படுத்தும் வகையில் சிறந்த நீர்*

மேலாண்மை முறையினைக் கொண்டவராய் இருந்தனர். பெருகி வரும் நீரினை அணைக்கட்டித் தேக்கி மதகுகள் வழியாய் நீரைச் செலுத்திப் பாசனம் செய்ததை,

**"பாறைப் பரப்பிற் பரந்த சிறை நின்று"** [104]

**" புனல் அம் புதவின் மிழலை"** [105]

என்ற வரிகள் தெரிவிக்கின்றன. குளம் போன்ற நீர்நிலைகளை ஏற்படுத்தி வேளாண்மையை மேம்படுத்திக் காத்தலே உயிர்கள் நிலைக்க வழியாகும். அதனால் நீராதாரம் பெருக்குமாறு பாண்டிய நெடுஞ்செழியனை நோக்கி ,

**"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோரே உயிர்கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே**
**வித்தி வான் நோக்கும் புன்புலம் கண் அகன்**
**வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்**
**இறைவன் தாட்கு உதவாதே அதனால்**
**அடுபோர்ச் செழிய இகழாது வல்லே**
**நில நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்"** [106]

என்று குடபுலவியனார் கூறுவதிலிருந்து வேளாண்மையின் தேவையையும், நீர் மேலாண்மையையும் உணர்ந்த தமிழரின் உழவுத் தொழிலின் அறிவை அறியலாம்.

**பயிர் செய்தல்**

ஆங்காங்கே உள்ள காடுகளை அழித்து அவற்றில் பாசனம் செய்து அவற்றில் பயிர் செய்து அவற்றை உழவுக்குப் பயன்படுத்துதல் இவ்வாறு பாசனத்திற்கு சுனை, காட்டாறு, ஆற்று நீர், ஆகியவற்றை திசைமாற்றி விடப்பட்டு பாசனத்திற்குப் பயன்பட்டது.

மேலும், தாங்களாகவே கேணி, கூவல், குளம் போன்ற செயற்கை நீர் நிலைகளை உருவாக்கி உள்ளனர். இதனை,

**"நெய்ம் மாண் சிவிறியர், நீர் மணக் கோட்டினர்,"** [107]

**"எறிவன எக்குவ ஈரணிக்கு ஏற்ற"** [108]

என்ற வரிகள் செயற்கை நீர் நிலைகளை உருவாக்கி நீர் பாசனம் செய்தமைக்குச் சான்றாக உள்ளது. குளங்களை உருவாக்கி அவற்றில் நிறைய மழை பெய்யும் சமயங்களில் ஆட்களை அமர்த்தி அவற்றில் கல்லையும், மரக்கட்டையையும் இணைத்து அவற்றை அடைத்தனர்.

***"மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும்,***
***இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்,***
***காவலர்ப் பழிக்கும், இக் கண் அகல் ஞாலம்"*** [109]

*என்ற அடிகள் நீதி தவறாமல் ஆட்சி செய்து நீர் நிலைகளைப் பெருக்கி உழவுத் தொழில், உழவரைக் காக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் வெள்ளைக்குடி நாகனார்.*

***பயிர் இடைவெளி***

*பல்வேறு வகையான பயிர்களை, வெவ்வேறான இடைவெளிவிட்டுப் பயிர் செய்தனர் தமிழர். குறிப்பிட்ட சீரான இடைவெளியில் நடவு மேற்கொண்டாலே போதிய காற்றோட்டம், கதிரவன் வெளிச்சம் கிடைத்து பயிர்கள் செழித்து வளரும் என்ற உழவுத் தொழில் நுட்பத்தை அறிந்திருந்தனர். இதை,*

***"பால் வார்பு கெழீஇ, பல் கவர் வளி போழ்பு,***
***வாலிதின் விளைந்தன, ஐவன வெண்ணெல்"*** [110]

*என்ற வரிகள் அறியத்தருகின்றன. இவ்வாறான சான்றுகளை நோக்கும்போது நீர் மேலாண்மை சங்ககாலத்தில் நிறைந்துள்ளது என்பதை அறியலாம்.*

***மருத்துவ அறிவு***

*கல்விச் செல்வத்தால் பொருள் செல்வம் மனிதனுக்குக் கிடைக்கின்றது. தன்னுடைய கல்விச் செல்வத்தை அதாவது தான் கற்ற கல்வியின் பயனாக கிடைத்த பட்டத்தை முதலாக வைத்துப் பொருள்செல்வம் ஈட்டி, அதன் மூலம் எல்லோராலும் போற்றப்படுகிறான். சனவரி மாதம் முதல் உலகையே மிரட்டிக் கொண்டிருக்கும் ஆட்கொள்ளி நோயான கொரோனாவை விரட்ட உலகில் உள்ள அனைத்து மருத்துவர்களும் தங்களால் இயன்ற வரை போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் சுக துக்கங்களை மறந்து நோயாளிகளின் உடல்நலனையே கருத்தில்கொண்டு செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது. இச்செயலானது மனிதநேயத்தின் உச்சம் எனலாம். எனவே மருத்துவக் கல்வி அறிவுடையவர் மண்ணில் சில மனிதர்களை வாழ வைக்கும் முதல்வனாக விளங்குகிறான். இதே போல் சங்க இலக்கியப் புலவர்கள் தங்களின் வாழ்வியல் அனுபவங்களைத் தம் பாடல்களில் சுட்டியுள்ளமை உணரத்தக்கது.*

*மருந்து என்னும் சொல் புறநானூறு (180) நற்றிணை (226) ஆகியவற்றில் வந்துள்ளமை இவண் கருதத்தகும்.*

***"பொருந்தி யான் தான் வேட்ட பொருள் வயின் நினைந்த சொல்,***
***திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய***
***மருந்து போல், மருந்து, ஆகி மனன் உவப்பப்***
***பெரும் பெயர் மீளி - பெயர்ந்தனன் செலவே"*** [111]

*என்ற அடிகள் தலைவனின் வருகை பற்றி குறிப்பிடும் போது மருத்துவன் குறித்தும் மருந்து குறித்தும் புலவர் சான்று காட்டி விளக்கியுள்ளமை மேற்காண் கூற்றுக்கு அரண்*

செய்யும். மேலும் அறம் கூற வந்த வள்ளுவர் "மருந்து" என்ற ஓர் அதிகாரத்தை அமைத்து மருத்தவம் சார்ந்த பல செய்திகளைக் கூறியுள்ளார்.

**போரில் மருத்துவம்**

போர்க்களத்தில் மருத்துவம் செய்வதற்கு நிறைய மருத்துவர்கள் உடன் சென்றுள்ளனர். அவர்கள் போரில் ஏற்பட்ட புண்ணினைத் தடுக்க அத்திப்பாலைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும்,

**"மீன் தேர் கொட்பின் பனி கயம் மூழ்கி**
**சிரல் பெயர்ந்து அன்ன நெடு வெள் ஊசி**
**நெடு வசி பரந்த வடு வாழ் மார்பின்"** [112]

என்ற வரியில் போரில் விழுப்புண் பெற்ற வீரர்கள் வேல்பட்ட புண்ணை ஊசியால் தைத்த நிலையை அறிய முடிகிறது.மேலும்,

**"செருவா உழக்கிக் குருதி ஓட்டிக்,**
**கதுவாய் போகிய நுதிவாய் எஃகமொடு,**
**பஞ்சியும் களையாப் புண்ணர்"** [113]

மருந்து வைத்து தைத்து பின் அவற்றைப் பஞ்சிட்டு மூடி புண்ணைச் சீர் செய்தமையைச் சுட்டுகிறது. மருத்துவர் தாமோதனரனார் என்னும் பெயரில் புலவர் இருந்தமையைக் காணமுடிகிறது.

**வானவியல் அறிவு**

இன்று நாம் சந்திராயன் 1, 2 வினை நிலவிற்கு அனுப்பி திரு அப்துல்கலாம் கண்ட வல்லரசு இந்தியாவை விஞ்ஞான ரீதியில் உயர்த்தி கூறியுள்ளமை உணரத்தக்கது. இக் கருத்தினை அடியொற்றியே ஞாயிற்றின் வீதியும் இயக்கமும், அவ்வியக்கத்தால் சூழப்பெறும் ஞாயிறு வட்டமும், காற்றியங்கும் திசையும், ஓர் ஆதாரமுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் எனச் சொல்லப் பெற்ற இவற்றை எல்லாம் அப்பகுதிக்கே சென்று அளந்தறிபவர்களைப் போலக் கணக்கிட்டுக் கூறினர் தமிழர். கோள் முதலானவற்றின் இயக்கம் இத்துணை நாழிகைக்கு இவ்வளவு செல்லும் என்றும் வேகத்தின் அளவையும் கணித்து அறிந்து கூறினர். இச்செய்தியை,

**"செஞ்ஞா யிற்றுச் செலவும்**
**அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்,**
**பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,**
**வளி திரிதரு திசையும்,**
**வறிது நிலைஇய காயமும், என்றிவை**
**சென்றளந்து அறிந்தார் போல, என்றும்**
**இனைத்து என்போரும் உளரே அனைத்தும்"** [114]

என்ற அடிகளில் வானியலை அளந்தறிந்த தன்மையினை அறிய முடிகிறது. இவை மட்டுமின்றி மழைபொழிவதற்கான காரணம் நீர் ஆவியாகி அதன் வழி மேகங்கள் உருவாகி பின்னர் அம்மேகத்தின் மூலமாக மழையானது பெய்யும் என்பதைச் சுட்டும் பாடல்களும் உள்ளமை நோக்கத்தக்கது. மேலும்,கோள்களும் மீன்களும் சூழ ஞாயிறு இருப்பதை,

**"வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து"** [115]

என்ற வரிகள் இயம்புகின்றன. ஞாயிறு,நாள்மீன், பிற மீன்கள் பற்றிய செய்திளை ஓவியமாகத் திருப்பரங்குன்றப் பொதுவெளியில் வரையப்பட்டிருந்தமையையும், பொதுமக்கள் கண்டதையும் ,

**"என்றூழ் உற வரும் இரு சுடர் நேமி**
**ஒன்றிய சுடர்நிலை உள்படுவோரும்"** [116]

என்ற வரிகள் எடுத்தியம்புகின்றன.

**கட்டடங்கள்**

சங்ககாலத்தில் கட்டடங்கள் பல இருந்து வந்தன என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய்க் கீழடி ஆய்வின் மூலம் உலகு உணர்ந்ததாகும். மேலும், இலக்கிய ஆதாரங்களும் பல உள்ளமை நோக்கத்தக்கதாகும்.

**"சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்"** [117]

சுடுமண்ணால் செங்கற்கள் உருவாக்கப்பட்டு அவை கட்டடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. நகரங்கள் நல்ல முறையில் இன்றைய நாகரிகத்திற்கேற்ப அமைக்கப்பட்டிருந்த தன்மையைப் பரிபாடலும், மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுவது உணரத்தக்கது. மதுரை மாநகரத் தெருக்கள் வட்ட வடிவில் காணப்பட்டன. கழிவு நீருக்கென தெருவில் தனியே கழிவு நீர்க்குழாய்கள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் சிறந்த கட்டமைப்புகளைக் கொண்ட பழந்தமிழகத்தில், அதை உருவாக்கக் கட்டடப் பொறியியல் சார்ந்த நூல்களைக் கற்றதோடன்றி, பட்டறிவு வழியாகவும் திறமை பெற்ற கட்டடக்கலை அறிஞர்கள் இருந்தனர். தமிழில் இன்று, மனையடி சாஸ்திரம்" எனும் நூல் மட்டுமே புழக்கத்தில் உள்ளது. "வடமொழியில் உள்ள மயமதம், மானசாரம், மதுசாரம், ஐந்திரமதம். விசுவகர்மியம், சகலாதிகாரம் என்ற நூல்களில் கூறப்படும் கட்டடக்கலை அமைப்பு தென்னகத்திற்கே உரியது. மேலும் இந்நூலில் கூறப்படும் கட்டட உறுப்புகள், நில வகைகள், பயன்படு பொருட்கள் ஆகியன தமிழ்ப் பெயர்களாய் இருப்பதனால், இந்நூல்கள் தமிழில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவை என எண்ண வாய்ப்புண்டு. தமிழில் இருந்த மூல நூல்கள் அழிந்து போயிற்று என்பர் ஆய்வாளர் சண்முகன்" [118]

***இசை***

*இசை என்பது அனைவருக்கும் பிடித்தமான ஒன்றாகும். தமிழர் வாழ்வில் மிக முக்கிய அடையாளமாகத் திகழ்வது தமிழர் இசை ஆகும். தமிழ்க்குடும்பங்களில் பிறப்பு முதல் இறப்பு வரை இசையும் பாட்டும் தொடர்ந்து வந்து கொண்டு இருந்துள்ளது.*

*தொல்காப்பியர் குறிப்பிடும் வண்ணங்கள்,அளபெடைகள் உள்ளிட்டவை இசையில் அல்லது ஓசையின் ஒழுங்கமைவைக் காட்டி நிற்கின்றன. ஓசையின் ஒரு ஒழுங்கமைவே ஏதேனும் ஒரு இசையாகப் பரிணமிக்கிறது. பண்களைப் பாடுபவர்கள் "பாணர்கள்" ஆவர். இப்பாணர்கள் பல்வேறு நாடுகளுக்கு நடந்தே சென்று தம்முடைய இசைப்புலமையின் மூலமாகப் பரிசுகளைப் பெற்று தம் வாழ்வினை நடத்தி வந்தனர். இவர்களின் முக்கியத்துவத்தை "பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை" ஆகியன உணர்த்தி நிற்கும். பண்டைய காலத்தில் கூத்தரின் கருவி குறித்து, மலைபடுகடாமில் குறிப்புகள் காணப்படுகிறது. இதனை,*

***"திண் வார் விசித்த முழவொடு, ஆகுளி,***
***நுண் உருக்கு உற்ற விளங்கு அடரப் பாண்டில்,***
***மின் இரும் பீலி அணித் தழைக் கோட்டொடு,***
***கண் இடை விடுத்த களிற்று உயிர்த் தூம் பின்,***
***இளிப் பயிர் இமிரும் குறும் பரம் தூம்பொடு,***
***விளிப்பது கவரும் தீம் குழல் துதைஇ,***
***நடுவு நின்று இசைக்கும் அரிக் குரல் தட்டை,***
***கடி கவர்பு ஒலிக்கும் வல் வாய் எல்லரி"*** [119]

*என்ற செய்யுளில் முழவு, ஆகுளி, பாண்டில்,கோடு, தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை முதலிய கருவிகள் சுட்டப்படுகின்றன. இக்கருவிகளைத் தோற்கருவி, துளை, நரம்பு , கஞ்சம் என்றவாறு பகுப்பர்.*

*இசைக்கருவிகளுக்கென்று தனி நூல்கள் வழங்கி வந்துள்ளமையை மறைந்து போன தமிழ்நூல்கள், என்னும் நூலில் மயிலை சீனிவேங்கடசாமி குறிப்பிடுகிறார். முதுநாரை, முதுகுருகு போன்ற நூல்கள் இருந்து அழிந்ததை இறையனார் களவியல் உரை சுட்டுவதும் நோக்கத்தக்கது.*

***சங்ககால மக்களின் இசை அறிவு***

*சங்க காலத்திலேயே மக்கள் இசை அறிவுடன் வாழ்ந்திருந்தனர். அவர்கள் தங்களுடைய பொழுதுபோக்குக்காகவும், மனமகிழ்ச்சிக்காகவும் இசையை நாடிச் சென்றனர். இசை என்பது மனதை மகிழ்விக்கவும் மட்டுமல்ல அமைதிக்கு ஆற்றுபடுத்துகிறது என்று அறிவியல் குறிப்பிடுகிறது. இசை மன அமைதியைத் தரும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.*

*குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழு சுரங்களும் தமிழ்ச்சுரங்கங்கள் ஆகும்.*

*தோற்கருவிகளுக்கு தாள இசைக்கருவிகள் என்ற பெயரும் உண்டு. கருவிகளின் பெயர்களைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.*

***"பேரிகை படகம் இடக்கை உடுக்கை***
***சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை***
***திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை***
***தமருகம் தண்ணுமை தாவில் தடாரி***
***அந்தரி முழவொடு சந்திர வளையம்***
***மொந்தை முரசே கண்விடு தூம்பு***
***நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம்***
***மாசில் தகுணிச்சம் விரலேறு பாகம்***
***தொக்க உபாங்கம் துடிபெரும் பறையென***
***மிக்க நூலோர் விரித்துரைத் தனரே"*** [120]

*இவ்வரிகள் முற்கால தமிழ் இசைக்கருவிகளைச் சுட்டுகின்றன. பறை - குறும்பறை யசை (புறநானூறு. 67, 9), ஆறெறிபறையுஞ் சூறைச் சின்னமும் (சிலப்பதிகாரம். 12, 40), தண்ணுமை - தண்ணுமைப் பின்வழி நின்றது முழவே (சிலப். 3, 140) தண்ணுமை வளிபொரு தெண்கண் கேட்பின் (புறநா. 89, 7)மறப்படை நுவலும் அரிக்குரல் தண்ணுமை (புறநா - 270,8), முழவு- "பண்ணமை முழவு"( பதிற்,) முழவு முதலரை (குறுந், 301 -1), முரசு - மண்ணுறு முரசம் கண்பெயர்த்து, இயவர்" (பதிற்.19:5-7), உருகெழு முரசம் (புறம்.50:5), குளிர் –கொடிச்சிகைக்குளிரே-(குறுந்தொகை291,2),தூம்பு-விரல்செறிதூம்பின், (பரிபாடல் 21 -31) துடி - துடியடிக் குழவிய " (புற. 369), வயிர் - வயிராமொடு வலம்புரி ஆர்ப்ப" (பதிற் - 67) தடாரி - மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி, (பரிபாடல் 21, 41), ப ஆகுளி -நல்யாழ், ஆகுளி, பதலையடு சுருக்கிச், (புறம் - 64) சில்லரி – (மதுரைக்க -612), கொட்டு- (ஐங்குறு -371), மத்தரி –( பரி – 12) என்றவாறு முற்கால இசைக்கருவிகள் இருந்து வந்தமையை அறியலாகிறது.*

**ஓவியம்**

*மனதில் பட்டதை அடுத்தவருக்குப் புரிய, தெரிய, தெளிய வைப்பதற்கு ஓவியங்கள் பயன்பட்டன. எனவே தான் முதன் முதலில் தோன்றிய எழுத்துகள் சித்திர எழுத்துகளாக பரிணமித்தன. இவை தம் மனதில் தோன்றிய உணர்வுகளைக் கருத்தை வெளிப்படுத்த எழுந்தவையாகும். பட்டினப்பாலையில் இந்த ஓவியங்கள் குறித்து,*

***"வேறுபட்ட வினை ஓவத்து***
***வெண்கோயில் மாசு ஊட்டும் "*** [121]

*கூறியுள்ளதை அறியமுடிகிறது. இதுகாறும் தமிழர்களின் கல்வி மற்றும் அனுபவங்களால் பெற்ற அறிவினைக் கொண்டு மருத்துவம், கட்டடம், ஓவியம், இசை, வேளாண்மை*

*ஆகிய துறைகளில் அவர்கள் பெற்றிருந்த உயரிய நிலையைக் கண்டறிந்தோம். இனி பெண் கல்வி குறித்துக் காண்போம்.*

***சங்கப்புறப்பாடல்களில் பெண் கவிகளின் ஆளுமை***

*சங்கப்புறப்பாடல்களில் பெண்களின் பங்களிப்பு மிகச் சிறப்பாக உள்ளது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நாகரிகமடைந்த பெண்களின் நிலமையைக் காட்டிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த பெண்பாற் புலவர்கள் உயரிய இடத்தில் இருந்தனர். இவர்களின் புலமை நலனை இனி ஆராய்வோம்.*

***பெண்பாற்புலவர்கள் பாடியவை***

*சங்கப்புறப் பனுவல்களில் பென்பாற்புலவர்களால் பாடப்பட்ட பாடல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகியவற்றில் காணமுடிகிறது. புறநானூற்றில் பெண் மொழி அகம் சார்ந்த உணர்ச்சிகளைப் பதிவு செய்வதில் மட்டுமல்லாமல் புறம் சார்ந்த உணர்ச்சியைப் பதிவு செய்வதிலும் பெண்மொழியின் பங்கேற்பு குறிப்பிடத்தகுந்ததாக இருக்கிறது. பெண்கவிஞர்களின் புறம் சார்ந்த பாடல்களாக நமக்குக் கிடைக்கின்ற புறநானூற்றுப் பாடல்கள் குறிப்பிடத்தகுந்தன. புறநானூற்றில் இடம் பெற்றுள்ள 19 பெண் புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை 62, இவைதவிர பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தின் பாடல்களைக் காக்கைப்பாடினி நச்செள்ளையார் என்னும் புலவரும், பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படையை முடத்தாமக் கண்ணியார் என்னும் பெண்பாற் புலவர் ஒருவரும் பாடியிருக்கிறார். இனி, அப்புலவர்களில் சிலரின் பெயர்களையும் பாடிய பாடல்களின் தன்மையினையும் காண்போம்.*

***<u>புறநானூறு</u>***

*புறநானூற்றில் ஔவையார் முப்பத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். (87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 101, 102, 103,104, 140,187,206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311, 315,367, 390, 392) என்னும் எண்ணிக்கையில் அவை இடம் பெற்றுள்ளன.*

*இதில் அதியமானின் வெற்றி, இயல்பு, வீரச்சிறப்பு ஆகியவற்றைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இனி ஔவை பாடிய சில பாடல்களைக் காணலாம். புறநானூற்றின் 92-வது பாடலாக இடம் பெற்றுள்ள ஔவையாரின் பாடல் குழந்தைகளின் மொழியையும், புலவரின் மொழியையும் ஒரு புள்ளியில் ஒன்று படவைக்கிறது. குழந்தைகள் பேசும் சொற்கள் யாழின் இசையுமல்ல, காலத்திலும் பொருந்தி வராதன. பொருளும் இதுவென்று அறிய இயலாதன எனினும் அவை அக்குழந்தைகளின் தந்தையருக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருவதாக அமைவன. அதுபோல மன்னனே என் வாய்மொழிகளும் அத்தகையதே. இக்குறிப்பை,*

***"யாழொடும் கொள்ளா; பொழுதொடும் புணரா;***
***பொருள்அறி வாரா; ஆயினும், தந்தையர்க்கு***
***அருள்வந் தனவால், புதல்வர்தம் மழலை;***

***என்வாய்ச் சொல்லும் அன்ன; ஒன்னார்***
***கடி மதில் அரண்பல கடந்து***
***நெடுமான் அஞ்சி! நீ அருளல் மாறே"*** [122]

என்ற பாடல் உறுதிப்படுத்துகிறது. மேலும், அதியமானின் வீர சிறப்பினைப் பின்வருமாறு பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***"ஒல்வான் அல்லன் வெல்போ ரான்எனச்***
***சொல்லவும் தேறீர் ஆயின், மெல்லியல்***
***கழற்கனி வகுத்த துணைச்சில் ஓதிக்***
***குறுந்தொடி மகளிர் தோள்விடல்***
***இறும்பூது அன்றுஅஃது அறிந்துஆ டுமினே"*** [123]

அதியமானின் வாள் போர் புரிந்து மழுங்கியுள்ளது. வேல் நிலை திரிந்தியுள்ளது. களிறுகளின் தொடி மாற்றம் பெற்றுள்ளது. குதிரையின் குளம்புகள் தேய்ந்துள்ளன. அம்புகளால் மாற்றம் பெற்ற கேடயத்தை அதியன் ஏந்தியுள்ளான். இவனைப் பகைத்தவர் உயிருடன் இல்லை. எனவே உங்களின் ஊர் உங்களுக்கு வேண்டுமெனில் திரையைச் செலுத்துக. அல்லேல் தங்களின் தோளை தங்கள் மனைவியர் பிரிவது உறுதி என்று கூறுகிறார். இதில் அதியனின் வீரம் சுட்டப்பெறுகிறது. மேலும், அதியனின் மகன் பொகுட்டெழினியையும் ஔவையார் பாடியுள்ளார்.

***"அலர் பூந் தும்பை அம் பகட்டு மார்பின்***
***திரண்டு நீடு தடக்கை என்னை இளையோற்கு***
***.......................................................***
***கைமான் கொள்ளுமோ?' என***
***உறையுள் முனியும்அவன் செல்லும் ஊரே."*** [124]

மலர்ந்த தும்பைப் பூவாலான மாலையை அணிந்த அழகிய அகன்ற மார்பினையும், திரண்டு நீண்ட பெரிய கையையும் உடைய என் தலைவன் அதியமானின் மகனுக்கு இரண்டு பகைகள் தோன்றி உள்ளன. ஒன்று, பூப்போன்ற, மைதீட்டிய கண்கள் பசந்து, தோள்கள் மெலிந்த பெண்கள் காதல் நோயால் இவன் மீது கொண்ட சினம். மற்றொன்று, விழா இல்லையாயினும், தவறாது மிகுந்த அளவில் ஆட்டுக்கறியை உண்ட சுற்றத்தினரோடு இவன் வேறுவேறு ஊர்களுக்குச் செல்லும் பொழுது அங்குள்ள மக்கள், இவன் யானைகள் அவர்களுடைய நீர்த்துறைகளில் இறங்கி அங்குள்ள நீரை எல்லாம் குடித்துவிடுமோ என்று அவர்கள் கொண்ட வெறுப்பு. இவை இரண்டும் இவனுக்குப் பகையாகும் என்று கூறப்பட்டுள்ளமை இவண் சுட்டத்தகும்.

**நெட்டிமையார்**

இவர் புறநானூறுறில் 9,12,15 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார். இதில் மன்னன் பெருவழுதியின் வீரம், கொடை, அறப்பண்புகள் ஆகியன சுட்டப்பெற்றுள்ளன., சான்றாக,

***“முந்நீர் விழவின், நெடியோன்***
***நன்னீர்ப் பறுளி மணலினும் பலவே”*** [125]

*என்ற பாடலில் நெடியோனாகிய அவன் மணலின் எண்ணிக்கையை விட பலநூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என்று கூறியுள்ளமை அவனுடைய கொடை, வீரம் அனைவரையும் காக்கும் இயல்பு ஆகியன வெளிப்படும்.*

***மாறோக்கத்து நப்பசலையார்***

*இவர் புறம் - 37, 39, 126, 174, 226, 280, 383 ஆகிய பாடல்களைப் பாடியள்ளார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக் காரி, மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன், வானவன், வளவன், செம்பியன், சோழர், அவியன், கபிலன் ஆகியோர் இவரது பாடல்களில் குறிப்பிடப்படுகின்றனர். கிள்ளி வளவனைப் புறாவின் துயர் துடைத்த செம்பியன் மரபில் வந்தவன் என்றும் ஈகை அவனுடைய சிறந்த குணம், வீரம் உனது தன்மை என்றும் அவனுடைய முன்னோர்களின் செயல்களை ஒப்பிட்டு நப்பசலையார் கூறியுள்ளமை உணரத்தகும்.(புறம் – 39), மேலும் மலையமான் திருமுடிக்காரியைப் பற்றி,*

***“பாணர் சென்னி பொலியத் தைஇ,***
***வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்***
***ஓடாப் பூட்கை உரவோன் மருக”*** [126]

*வாடாத பொற்றாமரையை உன் முன்னோர் வழங்கினர். அதுபோல நீயும் பரிசில் வழங்குவாய் என்று குறிப்பிடுவது உணரத்தக்கது. மேலும், இவர் அவியன் என்னும் அரசனிடம் சென்று பரிசில் பெற்ற நிலையைக் கடைநிலை துறையில் (புறம்–383) பாடுகிறார்.*

***பேய்மகள் இளவெயினியார்***

*சங்ககாலப் பெண் புலவர்களில் ஒருவர். இவரது பாடல் ஒன்றே ஒன்று மட்டும் புறநானூறு 11 ஆம் பாடலாகச் சங்கத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளது. அதில் இவர் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவின் கொடைப் பெருமையைப் பாராட்டியுள்ளார்.சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ புலவராகவும் அரசனாகவும் விளங்கியவர்.*

***“அரி மயிர்த் திரள் முன்கை,***
***…………………………………***
***புறம் பெற்ற வய வேந்தன்***
***மறம் பாடிய பாடினியும்மே,***
***ஏர் உடைய விழுக் கழஞ்சின்,***
***…………………………………***
***ஒள் அழல் புரிந்த தாமரை***
***வெள்ளி நாரால் பூ பெற்றிசினே.”*** [127]

*என்ற பாடலில் சேரனின் வீரம்,கொடை ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.*

***நச்செள்ளையார்***

*நச்செள்ளையார் பதிற்றுப்பத்து ஆறாம்பத்து ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிய 10 பாடல்கள். (இதன் பதிகம் பிற்காலத்தது) பாடியுள்ளார். (பதிற்- 53) இதில்,*

> ***"வான் உற ஓங்கிய வளைந்து செய் புரிசை,***
> ***ஒன்னாத் தெவ்வர் முனை கெட விலங்கி,***
> ***நின்னின் தந்த மன் எயில் அல்லது,***
> ***முன்னும் பின்னும் நின் முன்னோர் ஓம்பிய***
> ***எயில் முகப்படுத்தல் யாவது?"*** [128]

*என்ற பாடலில் அவன் வீரத்தைச் சுட்டுகிறார். போர் செய்து வெற்றி பெற்று அதற்கு ஈடாக அவனுக்குப் பகை மன்னர்கள் திரை செலுத்தியிருக்கும் தன்மையினை உயர்த்தி பாடுகிறார்.*

***ஒக்கூர் மாசத்தியார்***

*இவர் வீரமிக்க பெண்ணைத் தன்னுடைய பாடலில் குறிப்பிட்டுள்ளார்.தன் தாய் நாட்டின் மீதுள்ள பற்றினை இப்பாடல் விளக்குகிறது.*

> ***"கெடுக சிந்தை; கடிதுஇவள் துணிவே;***
> ***மூதின் மகளிர் ஆதல் தகுமே;***
> ***........................................................***
> ***பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி***
> ***ஒருமகன் அல்லது இல்லோள்***
> ***செருமுக நோக்கிச் செல்கஎன விடுமே."*** [129]

*என்ற பாடல் மகளிரின் வீர உணர்வைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.*

***பூங்கணுத்திரையார்***

*இவர் வீர உணர்வினை ஒக்கூரார் போலவே பாடியுள்ளார். ஒரு வயதான தாயாரின் இளைய மகன் போரில் எதிர்த்து வந்த யானையைக் கொன்று விட்டு வீர மரணம் அடைந்தான் என்னும் செய்தியைக் கேட்டவுடன் மகனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி அடைந்தாளாம்.இதை,*

> ***"மீன்உண் கொக்கின் தூவிஅன்ன***
> ***வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்***
> ***..................................................***
> ***வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே."*** [130]

*என்ற பாடல் உணர்த்துவதைக் காணலாம்.*

**பொன்முடியார்**

*மறக்குடியில் பிறந்தவராகக் குறிப்புகள் கிடைக்கின்றன.இவர் சேரநாட்டின் ஒரு பகுதியான குட்டநாட்டின் வடக்கு பக்கத்தில் பொன்முடி நல்லூர் என்னும் ஊரில் பிறந்தவர் ஆவார். இவரின் பெருமையைப் பாராட்டி அரசர் எவரேனும் பொன்முடி பரிசளித்து இருக்கலாம் என்கிறார் உ.வே.சா . இவரது பெயரால் புறநானூற்றுப் பாடல்கள் உள்ளன. அவை 299, 310, 312 வரிசை எண்களில் உள்ளன.*

***"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்***
***......................................***
***அணங்குடை முருகன் கோட்டத்துக்***
***கலம் தொடா மகளிரின், இகந்து நின்றவ்வே."*** [131]

*போரில் உள்ள குதிரைகள் கலம் தொடாமகளிர் போல ஒதுங்கி நின்றதை மிகச் சிறப்பாக கூறியுள்ளதை அறியமுடிகிறது.*

**பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு**

*பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவரது ஒரே ஒரு பாடல் புறநானூறு 246 எண்ணுள்ள பாடலாகச் சங்கநூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. தன் கணவன் பூத பாண்டியன் இறந்த பின்பு, அவனோடு உயிர் துறக்க முடிவு செய்கிறாள். அப்போது எள், புளி, சேர்த்த உணவை உண்டு, படுக்க பாய் இல்லாமல் கைம்மை நோன்பு நோற்று வருந்தும் நிலையை விட இறத்தல் என்பது மேலானது என்று வருந்துகிறாள். இதனை,*

***"வெள் எட் சாந்தொடு புளிப்பெய்து அட்ட***
***வேளை வெந்தை, வல்சி ஆகப்,***
***..........................................***
***பெருந் தோட் கணவன் மாய்ந்தென அரும்பு அற***
***வள்இதழ் அவிழ்ந்த தாமரை***
***நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே"*** [132]

*மேற்காண் பாடல் உணர்த்தி நிற்கிறது.*

**வெண்ணிக்குயத்தியார்**

*வெண்ணிக்குயத்தியார் தம் பாடலில் சேர மன்னன் பெருஞ்சேரலாதனுக்கும் கரிகாலனுக்கும் இடையே நடைபெற்ற போரினைச் சுட்டுகிறார். இதில் சேர மன்னன் போரில் புண்பட்டமைக்கு நாணிப் போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்தமையும் சுட்டுகிறது.*

***"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி,***
***வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!***
***..............................................................***
***மிகப் புகழ் உலகம் எய்திப்,***
***புறப்புண் நாணி, வடக் கிருந்தோனே"*** [133]

*என்ற பாடல் தன்மான உணர்வுக்கு சான்றாகிறது.*

***மாற்பித்தியார்***

*மாற்பித்தியார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் பாடியனவாகச் சங்கத்தொகை நூல்களில் 2 பாடல்கள் உள்ளன. அவை புறநானூறு 251, 252 இரண்டும் தாபதவாகை என்னும் துறையைச் சேர்ந்தவை. 'நாலிரு வழக்கின் தாபத பக்கம்' என்று தொல்காப்பியம் (1021) இதனைக் குறிப்பிடுகிறது. தவம் செய்பவரைப் பற்றிக் கூறுவது தாபதவாகை. தவம் செய்வோரின் பணி எட்டு வகையில் அமைந்திருக்கும் என்பது தொல்காப்பியர் வகைப்பாடு. இப்பாடலில் துறவு பற்றாகக் கூறுவது நோக்கத்தக்கது. துறவி ஒருவர் வெம்மையுடைய தீயை மூட்டுவான். அத்தீயில் தன்முதுகுபுறம் சாய்ந்த முடியை உலர்த்துவான். புகழ் புரிந்த புதல்வரையும் அறம் புரிந்த சுற்றத்தினரையும் உடைய தலைமகனின் துறவினைக் குறிப்பிடுவது இது. இதனை,*

***"கறங்குவெள் அருவி ஏற்றலின், நிறம் பெயர்ந்து,***

***.........................................................***

***சொல்வலை வேட்டுவன் ஆயினன், முன்னே"*** [134]

*என்ற பாடல் வழி அறியலாம்.*

***பாரி மகளிர்***

*இவர்கள் தங்கள் தந்தையான பாரியின் இறப்புக்குப் பின் கையறு நிலையாகப் பாடிய பாடல் புகழ்பெற்றது.*

***"அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவில்***

***...............................................***

***குன்றும் கொண்டார்! யாம் எந்தையும் இலமே?"*** [135]

*என்று பாரி மகளிர் பாடியுள்ளமை இவண் சுட்டத்தக்கது. இந்தப் பாடலில் முன் இரண்டு அடிகள் ஒருவர் பாடியது போலவும், பின் மூன்று அடிகள் மற்றொருவர் பாடியது போலவும் காணப்படுகிது. அவர்கள் 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரட்டைப்புலவர்கள் போலச் செய்யுள் இயற்றிய சங்ககாலப் புலவர்கள் எனலாம்.*

***காமக்கண்ணியார்***

*இவர் போர் வீரனின் திறம் குறித்து பாடியுள்ளமை உணரத்தகும்.*

***"வேலின் அட்ட களிறு பெயர்த்து எண்ணின்,***
***விண்ணிவர் விசும்பின் மீனும்,***
***தண்பெயல் உறையும், உறை ஆற்றாவே"*** [136]

*இப்பாடலில் போர் வீரனின் கைவேலால் பல களிறுகள் கொல்லப்பட்டன. விண்மீன்கள் மழைத்துளிகளை எண்ண முடியாதது போல அவன் கொன்ற களிறுகளை எண்ணுவது அரிது என்று குறிப்பிட்டுள்ளார்.*

மேற்கண்ட சான்றுகளை நோக்கும் போது சங்க மகளிரின் ஆளுமையை அறிய முடிகிறது. இனி சங்க மக்களின் மொழியறிவைக் காண, அம்மக்களிடையே நிலவி வந்த பெயர்கள் குறித்து காணலாம்.

மனித வளக்கூறுகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது கல்வி என்பதைக் கண்டோம். அவற்றுள் சிறந்தது சங்க மக்களின் சொற்களஞ்சியம் ஆகும். தொல்காப்யத்திலிருந்து, சங்க இலக்கியங்கள் தன்னுள்ளே பல்வேறு காரண, இடுகுறி அடிப்படையிலான பெயர்களைக் கொண்டு விளங்குகின்றன. இப் பெயர்களை அறிந்து கொள்வதன் மூலம் பண்டைச் சொற்குவைகளை அறிந்து கொள்ள முடியும். அதற்கு முதலில் நமக்குக் கிடைத்த ஆதாரமான தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பெயர்களை ஆராயலாம்.

1.இலக்கணத்தில் பெயர்கள்
2.இலக்கியத்தில் பெயர்கள்

| | |
|---|---|
| 1. உயர்திணைப் பெயர்கள் | - தொல் – எழுத்து – 117 |
| 2. அஃறிணைப் பெயர்கள் | - தொல் – எழுத்து – 117 |
| 3. விரவுப் பெயர் | - தொல் – எழுத்து – 155 |
| 4. நிறைப்பெயர் | - தொல் – எழுத்து – 170 |
| 5. மரப்பெயர் | - தொல் – எழுத்து – 181 |
| 6. இளமைப்பெயர் | - தொல்- பொருள் – 1500 |
| 7. மகப்பெயர் | - தொல் – எழுத்து – 218 |
| 8. பிள்ளைப்பெயர் | - தொல்- பொருள் – 1501 |
| 9. குழவிப்பெயர் | - தொல்- பொருள் – 1518 |
| 10. ஆண்பால் பெயர் | - தொல்- பொருள் – 1510 |
| 11. பெண்பால் பெயர் | - தொல்- பொருள் – 1502 |
| 12. ஆடுஉ திணைப் பெயர் | - தொல்- பொருள் – 967 |
| 13. திணை நிலைப்பெயர் | - தொல்- பொருள் – 1510 |
| 14. பெண்மை சுட்டிய பெயர் | - தொல்- சொல் – 665 |
| 15. இயற்பெயர் | - தொல்- சொல் – 521 |
| 16. சிறப்புப் பெயர் | - தொல்- சொல் – 524 |
| 17. துறைக்கிழமைப் பெயர் | - தொல், பொருள் - 1573 |
| 18. சுட்டுப்பெயர் | - தொல், சொல் - 520 |
| 19. வினாப்பெயர் | - தொல், சொல் -622 |
| 20. விளிப்பெயர் | - தொல், எழுத்து - 224 |
| 21. பண்புப்பெயர் | - தொல், சொல் - 619 |
| 22. குடிப்பெயர் | - தெல், சொல் - 650 |
| 23. உடைப்பெயர் | - தொல், சொல் - 659 |
| 24. சினைமுதற்பெயர் | - தொல், சொல் - 659 |
| 25. தன்மைப்பெயர் | - தொல், எழுத்து - 320 |

26. முன்னிலைப்பெயர் - தொல், எழுத்து - 320
27. படர்க்கைப் பெயர் - தொல், எழுத்து - 320
28. முறைப்பெயர் - தொல், சொல் - 664
29. கிளைப்பெயர் - தொல், எழுத்து - 307
30. குழூப்பெயர் - தொல், சொல் - 650
31. ஆண்மை திரிந்த பெயர் - தொல், சொல் - 495
32. தன்மை திரிந்த பெயர் - தொல், சொல் - 540
33. அளவுப்பெயர் - தொல், எழுத்து - 168
34. சினைப்பெயர் - தொல், சொல் - 659
35. எண்ணுப்பெயர் - தொல், எழுத்து - 419
36. எண்ணியல் பெயர் - தொல், சொல் - 650
37. ஆடியல் பெயர் - தொல், சொல் - 650
38. உணவுப் பெயர் - தொல், எழுத்து - 308
39. திசைப்பெயர் - தொல், எழுத்து - 201
40. காயப்பெயர் - தொல், எழுத்து - 305
41. நிலப்பெயர் - தொல், சொல் - 650
42. பிண்டப்பெயர் - தொல், எழுத்து - 574
43. இடக்கார்ப்பெயர் - தொல், எழுத்து - 250
44. ஆகுபெயர் - தொல், எழுத்து - 598
45. தொழிற்பெயர் - தொல், எழுத்து - 306
46. தடுமாறு தொழிறபெயர் - தொல், சொல் - 579
47. தெய்வஞ்சுட்டிய பெயர் - தொல், சொல் - 487
48. வினைப்பெயர் - தொல், சொல் - 650

என்ற நாற்பத்து எட்டு வகையான பெயர்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவற்றிற்குச் சான்றாக இலக்கண உரையாசிரியர்கள் பல்வேறு சான்றுகளை அளித்துள்ளனர். அடுத்ததாக இலக்கியங்களில் அமைந்துள்ள பெயர்களைக் காண்போம்.

இலக்கியங்களில் காணலாகும் பெயர்கள்.

1. கடவுள் பெயர்கள் – சிறு தெய்வங்கள். பெருந்தெய்வங்கள்.
2. ஆண்பால் பெயர்கள்
3. பெண்பால் பெயர்கள்
4. அஃறிணைப் பெயர்கள்

என நான்கு வகையாகப் பிரிக்கலாம். இனி இப்பெயர்களின் அட்டவணையைக் காண்போம்.

**இலக்கியங்களில் கடவுள் பெயர்கள்**

இலக்கியங்களில் மனித வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதால் அவர்களின் வழிபாட்டு முறையையும் அது சுட்டுவதாய் அமைந்துள்ளது. பாடல்களில்

பலவகைப்பட்ட செய்திகளைக் காணும்போது அங்கு கடவுள் பெயர்கள் இடம்பெற்றுள்ளதையும் காண முடிகிறது. இவற்றை அட்டவணையில் நோக்கலாம்.

| **தெய்வத்தின் பெயர் – நிலம்** | **இலக்கியத்துள் சுட்டப் பெற்றுள்ள முறை** |
|---|---|
| முருகன் – குறிஞ்சி | சேய், கந்தன், கடம்பன், ஆறுமுகன், செவ்வேள், வேலன், குமரன், செல்வன், வேல்விலான் |
| திருமால் – முல்லை | மாயோன், திருமால், மால், மாஅயோன் |
| இந்திரன் – மருதம் | வேந்தன், வச்சிரன், திருக்கிளர் செல்வன் |
| வருணன் – நெய்தல் | புனற்கரசன் |
| கொற்றவை – பாலை | அயிரை, சூலி, கவுரி, சமரி, நீலி, பழையோள், காடு |
| வள்ளி – குறிஞ்சி | வள்ளி |
| தெய்வானை – குறிஞ்சி | தெய்வானை, (பரிபாடல் 9.29-40) மட்டும் |
| திருமகள் | செய்யோள், கார்த்திகைப் பெண்டிர், அருந்ததி |
| சிவன் | கரை மிடற்று அண்ணல், நீல மணி மிடற்று அண்ணல், முக்கட் செல்வன், முழுமுதல்வன், பாகத்து ஒருவன், பைங்கடபார்ப்பான், புங்கம் ஊர்பவன், மறுமிடற்று அண்ணல், முக்கணான், கணிச்சியோன், ஆலர்செல்வன் |
| பிரம்மன் | படைத்தோன், நான்முகன் |

மேற்கண்ட அட்டவணையில் குறப்பிடப்பட்ட பெயர்கள் அனைத்தும் பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட சங்கப் புதையல்களில் காணப்படுபவை ஆகும். இவ்வாறான பல்வேறு பெயர்களின் மூலம் தமிழின் சொற்செல்வமும், பரந்துபட்ட அறிவும் பெறப்பட்டு,தமிழர்களின் அறிதிறன்களை அறிய உதவுகிறது.

**இலக்கியங்களில் காணப்படும் சிறு தெய்வங்கள்**

பெருந்தெய்வ வழிபாடு மட்டுமின்றி சிறு தெய்வங்களும் அக்காலத்தில் இருந்து வந்துள்ளன. இந்த சிறு தெய்வ வழிபாடானது உயிரோடு வாழ்ந்த மனிதர்கள் தம் வீர தீர செயல்களின் மூலம் கடவுளாக மாற்றப்பட்டு வணங்கப்பட்டதை அறியலாம்.

காமன் சாலமன் (கலி- 94), மாதிரிக்கிழவன் (அக), கடல் தெய்வம், சூலி, சூரர மகளிர், வரையற மகளிர், மாயவள், வண்டல் பாவை, கொல்லிப்பாவை, உப்பியற் பாவை, தாது செய்பாவை, விண்மீன், வாயு, கள்ளிமரத்தடிக்கடவுள், உன்னமரத்துத் தெய்வம், வேம்பூமரத்தெய்வம் என்று பல சிறு தெய்வங்கள் இருந்தமையை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

**ஆண்பாற் பெயர்கள்**

தமிழ் இலக்கியங்களில் பலவிடங்களில் ஆண்களின் பொதுப்பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. இவற்றைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

| **திணை** | **ஆண்பாற் பெயர்** | **பெண்பாற் பெயர்** |
|---|---|---|
| குறிஞ்சி | குறவன், குறவர், குன்றவன், கானவன், கானவர், கானக நாடன், சிலம்பன், புனவன், பொரப்பன், பொருநன், மலைநாடன், வெற்பன், வேட்டுவன், வேட்டுவர் | குறத்தி, குறமகள், குறவன் மகள், கொடிச்சி |
| முல்லை | அண்ணல்,அண்டர், ஆயர், இடையர், இடைமகன், கோவலர், தோன்றல், பொதுவர் | ஆய்ச்சியர், ஆய்த்தியர் |
| மருதம் | உழவன், உழவர், ஊரன், மனையோன், களமர், களைஞர், மள்ளர், மகிழ்நன், கிழவன், வினைஞர், கம்பளர், பள்ளர், கிழவன் | கிழத்தி, பள்ளி, மனையாள், உழத்தியர், கடைச்சி, மள்ளி, பள்ளி |
| நெய்தல் | கடலன், திமிலர், நுளையர், துறைவன், கோண்கன், சேர்ப்பன், பரதவர், புலம்பன், வலைஞர், உமணர் | உமட்டியர், சேரிக்கிழவன் மகள், சேரியம் பெண்டிர், பரதவர், மடமகள், நுளையன் மகள், நுளைச்சி |
| பாலை | எயினர், எயினன், மறவர், மறவன், மீளி, விடலை | எயிற்றி, மறத்தி |

இவ்வாறு அவ்வவ்நிலங்களுக்குரிய பொதுப்பெயர்கள் இலக்கியங்களில் ஆங்காங்கே சுட்டப்பெற்றுள்ளன. இவையன்றி நிலங்களன்றி தலைவன் தலைவியை உயர்த்தும் நோக்கிலோ அல்லது செய்யும் தொழிலின் நோக்கிலோ வேறு பல பெயர்கள் பாடல்களில் காணப்படுகின்றன. அவற்றைக் காணலாம்.

| **பெயரின் வகை** | **பெயர்கள்** |
|---|---|
| பொதுப்பெயர் | அண்ணல், ஐயன், காதலர், கிழவன், குருசில், கொழுநன், தலைவன், தோன்றல், செம்மல், பெரும விறலன் |
| பெண் பொதுப்பெயர்கள் | பேதை, பெதும்பை, மடந்தை, மடந்தையர், அரிவை, தெரிவை, பேரிளம் பெண், கிழத்தி, ஆட்டி, காதலி, தையல், கன்னியர் |
| கலைஞர் – ஆண் | அகலவன் (அகவலோசையில் பாடுபவன்) அகவர், ஆடுநர், ஆடுமகன், அகவுநர், இயவர், இசைக்கருவிகளை இசைப்பவன், கண்ணுளர் (மாறுவேடத்தர்) கலப்பையர் (கலப்பையுடன் செல்லும் பாணர்) கிணையர் (கிணை வாசிப்பவர்), கிணை மகன், கூத்தர், கோடியர் (கோட்டிசையில் ஆடுபவர்) துடியன், துடியர், பரிசிலர், பரிசிலன், பறையன், பாடுநர், பாணர், பாணன், பாண் மகன், பொரநர், முழவன், வயிரியர், சூதர் (அரசரை சூழ்ந்து பாடுபவர்), மாகதர், வேதாளிகள் |
| வினையர் | அறவோன், சான்றோர், போர் மறவர், சான்றோன் தச்சன், ஆடை நெய்பவன், காரோடன், காவலர், காழோர், காழியர், குயவன், சீதரோர், பாகன், வலவன், கள்வன், கள்வர், கூவியர், விலைஞர், அறைஞர் (கரும்பை வெட்டுபவர்) புலையனர், ஆன்றோர் |

| | |
|---|---|
| கலைஞர்–பெண் | ஆடுமகளிர், கிணை மகள், பாண் மகள், பாடுமகள் |
| வினையர்– பெண் | கள்வி, பலைத்தி |
| பண்பு அடிப்படைப் பெயர்கள்– ஆண் | ஆன்றோர், சான்றோன், சான்றோர், அறிஞர் |
| பெண் | - |
| வயது - ஆண் | பெரியோர், மூதாளர், மூதாளன், முனைவன், கொள்ளையர், மடவோன் |
| பெண் | -------------- |
| உடலமைப்பு –ஆண் | ஊமன், முடவன், சிதபன் |
| பெண் | ------------------ |

மேற்கண்ட பட்டியலை நோக்கும் போது, மக்களின் வாழ்வியலை இப்பெயர்களைக் கொண்டே அறுதியிட முடியும்.

**அறம்**

மனிதவளக்கூறுகளில் முக்கியமான ஒன்று அறம் என்பதாகும். இவ்வறம் என்பது மக்கள் அமைதியான முறையில் வாழ வழிவகுப்பது ஆகும். அறம் என்ற ஒன்று இல்லையேல் இச்சமுதாயத்தின் குற்றங்கள் பெருகி, சமுதாயத்திற்குப் பெரும் குந்தகம் ஏற்படும். சமூகத்தில் அமைதி நிலவ அறம் துணை புரிகின்றது எனில் மிகையில்லை. அறங்கள் சங்ககாலத்தில் இரண்டு முறைகளில் இருந்தன.

1. சமுதாயத்தில் அறம்
2. அரசியல் அறம்

எனலாம்.

**அறம் என்பது**

அறம் என்பது அறு என்னும் சொல்லிலிருந்து தோன்றியது ஆகும். இது தீவினையை அறுக்கும் என்று பொருள் கொள்ளலாம்.

அறம் – அறு + அம் - தீவினையை அறுக்க உதவுவது அறம் எனலாம்.

**அறம் – செல்லாய்வு**

“கழகத் தமிழ் அகராதி அறம் என்ற சொல்லுக்கு கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினைப்”[137] போன்ற பல பொருள்களைத் தருகின்றது. “மணிமேகலைத் தமிழகராதி சமயம், ஞானம், புண்ணியம், நோன்பு, ஒழுக்கம், தவம், தானம், ஆகியவையே அறம்”[138] எனக் குறிப்பிடுகிறது.

**அரசியல் அறம்**

அரசியல் என்பது மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டது. எனவே குடிமக்களின் நலம் மிக முக்கியமாகப் பேணப்பட்டது.

**அறக்குழு**

அறத்தை நிலை நாட்டுவதற்குச் சங்க காலத்தில் தனியே ஒரு குழு அரசனால் அமைக்கப்பட்டது. இக்குழுவினரை,

1. **உடும்பில் சுற்றம்**
2. **தொலையாக் கொள்கைச் சுற்றம்**
3. **பூத்த சுற்றம்**

என்ற மூன்று வகைகளில் பிரித்திருந்தனர். இவர்கள் எப்போதும் அரசருடனே இருந்து நீதியினை எடுத்துக் கூறினர். இக்கருத்திற்குச் சான்றாகும் வகையில்,

**"பன்மீன் நடுவன் திங்கள் போலவும்**
**பூத்த சுற்றமொடு பொலித்து"** [139]

என்ற மதுரைக்காஞ்சி பாடல்கள் அமைகின்றன. இவ்வாறான சுற்றம் அரசனுக்கு அருகில் அமர்ந்து அவனுடைய ஒவ்வொரு செயலிலும் அவனுக்கு ஆராய்ந்து நீதியுடைய தன்மையை எடுத்துக் கூறுதல் முக்கியமானதாகும். அதே போல் அரசன் தனக்கு வேண்டியவர்கள் என்று நினைத்து அவர்களுக்கு நீதி வழங்குவதில் சற்றும் இளக்கம் காட்டாமல் சரியாக நிற்க வேண்டும் என்றும் மருதனிளநாகனார் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

**அரசர்கொடை**

அரசர்கள் தங்களை நாடி வருவோர்க்குத் தம் கையில் இருப்பதை அளித்து அவர்களை மகிழ்வித்து பசியாகிய பிணியினைப் போக்குவது வழக்கம். கடையேழு வள்ளல்கள் என்ற பெயர் நம் மன்னர்களின் வள்ளல் தன்மைக்குச் சான்றாக உள்ளமை நோக்கத்தக்கத்து.

**"பறம்பு பாடினரதுவே அறம்பூண்டு**
**பாரியும் பரிசிலர் இரப்பின்"** [140]

என்ற அடிகள் பாரி தன்னை நாடி வந்தவர்களுக்குப் பல்வேறு கொடைகள் தந்தது மட்டுமின்றி தன்னையே அளிக்க முன் வந்தமையை இப்பாடல் காட்டுகிறது. இவர்களின் கொடைத்தன்மை பின்னர் விளக்கப்படும்.

**ஆற்றுப்படையில் மன்னர்களின் அறத்தன்மை**

ஆற்றுப்படை என்பது பாணர்கள் தாம்பெற்ற பரிசிலைப் பிற பாணர்களும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவர்களை ஆற்றுப்படுத்துவது என்பதை முன்னரே கண்டோம். இனி, அவ்வாற்றுப்படைகளின் வழி மன்னர்கள் பரிசிலர்களை நடத்திய அறத்தன்மையினைக் காண்போம்.

பாட்டுடைத்தலைவன் எனில் ஒப்புயர்வற்றவனாகக் கருதப்படுவான். இன்றையத் திரைப்படங்களில் கூட பின்பற்றப்படும் எழுதப்படாத விதியாகும். இவ்வகையில் இன்றைய படங்களில் ஒரு கதாநாயகன் தன்னை எதிர்த்து வரும் அடியாட்கள் பத்துபேரையும் தான் ஒருவனே வீழ்த்துவதும், இரக்கம், வீரம் அறிவு, ஆற்றல் ஆகியவற்றில் இவன் ஒருவனே உயர்ந்தவனாகக் காட்டப்படுதல் கண்கூடு. இது இன்று சாத்தியப்படாத ஒன்று ஆகும். எனினும் இன்றைய கதாநாயகர்கள் மீதுள்ள பற்றினால் இதனை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். இப்போது இந்நிலை எனில், அக்காலத்தில் முடியுடை மன்னர்களும் உண்மையிலேயே அறிவு, ஆற்றல், ஈகை, வீரம் என அனைத்திலும் உயர்ந்தவராக இருப்பர். நாட்டின் மன்னராகவும், ஈகையுடையோராகவும் இருப்பதால் புலவர்கள், அரசர்கள் குறித்து எவ்வாறெல்லாம் பாடியிருப்பர் என்று எண்ணத்தோன்றுகிறது. இனி அவற்றைக் காண்போம்.

- தலைவன் மீதுள்ள அன்பினால் தலைவனின் தோற்றத்தை வருணித்தல்
- வாயிற் சிறப்பு கூறப்படுதல்
- மன்னனை தொழவேண்டிய முறை
- மன்னன் வரவேற்கும் முறை
- மன்னன் உடை நல்குதல்
- கள் தருதல்
- விருந்தோம்பும் தன்மை
- பரிசில் நீட்டிடாத பண்பு
- பரிசில்
- மன்னனை வாழ்த்துதல்
- மன்னரின் பெருமை
- மன்னனின் சிறப்பு
- கொடைச்சிறப்பு
- தலைநகரின் சிறப்பு
- மலைச்சிறப்பு

என்ற அடிப்படையில் ஆற்றுப்படையில் பல்வேறு செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. `இவை அனைத்துமே மன்னரின் சிறப்பை விளக்குவதாக அமைந்துள்ளது. இங்கு பரிசிலரைப் பற்றி மட்டும் காண்போம்.

**வாயிற் சிறப்பு**

அரசன் வரின் வாயில் மிகச் சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்டு இருக்கும், மேலும் வாயிற் காவலர்களின் சிறப்பு குறித்து நூலில் மிகப்பலவாக விளக்கப்பட்டுள்ளது.

கரிகாலனின் கோபுர வாயில்கள் கலைஞர்கட்குத் தடையின்றி எப்போதும் திறந்திருக்கும். வாயிலோர்க்கு அறிவிக்காமல் கூட கலைஞர்கள் உள்ளே செல்லலாம் என்று பெருநராற்றுப்படை கூறியுள்ளது.

இதுபோலவே தொண்டைமான் இளந்திரையன் வாயில் பரிசிலர்க்கு அடையாது எப்போதும் திறந்திருக்கும் என்பதும் அறியலாகிறது.

நல்லியக்கோடனின் அரண்மனை வாயில் புலவர், அந்தணரும் வருவதற்காக அவை எப்போதும் திறந்தே இருக்கும் அடையவே முடியாத அவ்வாயிலுக்கு பகைவர் வருவதற்கு அஞ்சுவர் என்று சிறுபாணாற்றுப்படை நவில்கிறது. நன்னனின் வாயிலில் வீரர்கள் விழிப்புடன் அமர்ந்து காவல் செய்வர் என்று மலைபடுகடாம் கூறுகிறது.

**மன்னர்கள் பரிசிலரை வரவேற்றல்**

விருந்து என்பது ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக ஏற்படுவது. அது பயணம் அல்லது தொழில், உறவுகளில் ஏற்படும் விழா என பல காரணங்களுக்காக இன்று விருந்தினரின் வருகை உள்ளது. ஆனால் அன்று விருந்து என்பது பெரும்பாலும் பரிசிலர்க்கானது. அவர்கள் மிகவும் நுண்ணுணர்வு வாய்க்கப்பெற்றவர்கள். எனவே அவர்களை வாக்கில் இனிமையும் மென்மையும் கொண்டு அரசன் வரவேற்பான். இவ்வகையில், கரிகால் வளவன் பசு தன் கன்றினைப் பரிவோடு நோக்குவதைப் போல பொருநனை நோக்கி வரவேற்பான்,

**"பழுது இன்று,**
**ஈற்று ஆ விருப்பின் போற்றுபு நோக்கி, நும்**
**கையது கேளா அளவை,"** [141]

என்று பொருநராற்றுப்படை நவில்கிறது.

நன்னனோ தம்மை நாடிவந்த கலைஞர்களை நோக்கி முதலில் முகமன் கூறுவான். நீங்கள் என்மேல் கொண்ட அன்பினால் வழியில் பல்வேறு வருத்தத்தை அனுபவித்தீர்களே.. என்று கூறி வருத்தமடைந்தான் என்பதை,

"……… **நசைதர**
**வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்"** [142]

மலைபடுகடாம் தெரிவிக்கிறது.

**மன்னர்கள் தரும் பரிசிலர் உடை**

மன்னர்கள் பரிசிலர்களை இனிது நோக்கி அவர்களின் வறுமையை போக்குவதில் நிலை கொள்கிறது. அதற்கு அவர்கள் கலைஞர்களின் புறத்தோற்றத்தைக் கவனம் செலுத்தி அவர்களின் அழுக்கடைந்த ஆடைகளைக் களைந்து தூய புதிய ஆடைகளைத் தரும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

கரிகாலன் பொருநனின் இடுப்பிலுள்ள கொண்டைப் பாசியின் வேர் போன்ற அழுக்குகள் உடைய துணிகளைக் களைந்து, கரையிடத்தே கொட்டைகள் சேர்த்து அழகூட்டப்பட்ட தூயப் பட்டுடைகள் கரிகாலனால் பொருநனுக்கு அளிக்கப்பட்டமையை பொருநராற்றுப்படை மூலம் அறியலாகிறது.

மேலும் மூங்கிலின் உட்பட்டையை உரித்ததால் ஒத்த தூய ஆடையினை நல்லியக்கோடன் அளித்தான் என்று சிறுபாணன் கூறுகிறான்.

தூரத்தே நின்ற பெரும்பாணனை இளந்திரையன் விரும்பி அழைத்து இடுப்பில் உடுத்தியிருந்த பாசிவேரையொத்த கந்தையை அகற்றி அரசவையில் அணியக்கூடிய பாலாவியன்ன நூலால் செய்த துகில்களை உடுக்கச் செய்வான் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

அதுபோலவே நன்னன் நுண்ணிய நூலால் இயற்றப்பட்ட ஆடைகளைத் தந்து அவர்களை உடுக்கச் செய்து மகிழ்விப்பான். ஆற்றுப்படையில் பொதுவாக அனைத்துப் பரிசிலர்களுக்கும் புதிய ஆடைகள் வழங்கப்பட்டமை புலனாகிறது.

**பரிசில்**

அழுக்கடைந்த ஆடைகளை அகற்றி புதிய உடைகளைத் தந்து, பின்னர் அவர்களுக்கு மன்னர்கள் பரிசிலைத் தருவதற்கு முன் அவர்களுக்கு கள் வழங்கப்பட்டது. இதனைத் தன்னை நாடி வந்த பொருநனுக்குப் பொற்கலத்தில் தீம்பூ மணக்கின்ற தெளிவைப் பெறுவான் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

பாம்பின் நஞ்சு ஏறி மயங்கியது போன்ற மயக்கம் தரும் கள்ளினை சிறுபாணாற்றுப்படை பரிசிலன் பெறுவதை அந்நூல் சுட்டுகிறது.

சேய்மைக்கண் நின்ற பெரும்பாணனை இளந்திரையன் விரும்பி அழைத்து அளித்தல் போல ஆற்றுப்படையின் அனைத்து மன்னர்களும் இருந்தனர் என்பதை ஆற்றுப்படைகள் சுட்டிநிற்கின்றன.

பொன்கலங்களில் உணவளித்து பல்வேறு சுவையுடைய அடிசிலை கலைஞர்களுக்கு அளித்தவன் நல்லியக்கோடன் என்ற செய்தியைப் பொருநராற்றுப்படை சுட்டுகிறது.

வெள்ளிக் கலங்களில் இறைச்சி, பொறுக்கரிசியாலான சோறு, அமிழ்தம் போன்ற பிற உண்டிகளை நிரப்பி தாய் தன்னுடைய பிள்ளையைப் பார்த்துக் கொள்வது போல பார்த்துக் கொள்வான். தானே நேரில் நின்று உபசரிப்பவனாக இளந்திரையன் விளங்குவதைப் பெரும்பாணாற்றுப்படை காட்டுகிறது.

அதுபோல நன்னன் வெண்ணெல் அரிசியிலான உணவினை அளவின்றி தருவதை மலைபடுகடாம் எடுத்தோதுகிறது.

இவ்வாறான செய்திகளை நோக்கும்போது அக்கால அரசர்கள் கலைஞர்களிடம் கொண்டிருந்த பேரன்பு வெளிப்படுகிறது.

**பொருநரும் விறலியரும்**

பொருநர்கள் என்பவர்கள் திறம்படப்பாடி நடிப்பவர்கள் ஆவர். இவர்கள் தடாரி, கிணை ஆகிய தோற் கருவிகளை இசைப்பர். ஒருவரைப் போல வேடமிட்டு பாடுபவரை பொருநர் என்பர். கூத்தர், பாணரைப்போலவே பொருநரும் வறுமையில் உழன்றவர்களே.

இதனை,

> **“ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு**
> **நீடுபசி”** [143]

*என்ற வரிகள் சுட்டி நிற்கின்றன. பொருநர்கள் விழாக்கள் நடக்கும் ஊரைத்தேடிச் செல்லும் இயல்புடையவர்கள் ஆவர். (பொரு, 2-3) பொருநர்கள் சோழனை, இருள் பிரியா விடியலில் நாடிச் சென்று இரட்டைத்தாளத்தில் மன்னனை வாழ்த்திப் பாடுவர்.*

***"வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்***
***ஒன்றியாயின் பெட்டா அளவையின்"*** [144]

*என்ற வரிகளில் முடத்தாமக்கண்ணியார் பாடியுள்ளமை இவண் சுட்டத்தக்கது.*

*பொருநர்கள் அதியமான் பொகுட்டெழினியின் முற்றத்தில் இளநிலவு திகழும் பனி சொரியக் கூடிய விடியற்காலத்தில் ஒரு கண் மாக்கிணையை இசைத்து நீண்ட காலம் வாழ்வாயாக என்று பாடியுள்ளமை இவண் உணரத்தக்கது.*

*பொருநர் சோழிய ஏனாதி திருக்குட்டுவனின் முன்றிலில் இருட்பொழுதிலும், நிலவுப்பொழுதும் கழிந்த பகற்பொழுதினைச் செய்தற்கு உரிய நேரத்தில் தடாரிப் பறையை மெல்ல ஒலிக்குமாறு வஞ்சிப்பாட்டினைப் பாடுவர்.*

*அவியனின் முற்றத்தில் நின்று சேவற்கோழி துயிலெழுப்பின் வேளையில் உழவெருதுகளையும் அவியனையும் வாழ்த்திப்பாடுவர்.*

*இவ்வாறு பொருநர்கள் ஆடுதல், பாடுதல் மட்டுமின்றி வேறுபல தொழில்கள் செய்தும் உண்டு மகிழ்ந்துள்ளமையை இலக்கியங்கள் சுட்டுகின்றன. இவை மட்டுமின்றி விறலியர்கள் குறித்தும் ஆற்றுப்படை இலக்கியங்கள் சுட்டியுள்ளன.*

***விறலியர்***

*விறலியர் குழுவோடு மட்டும் செல்லாமல் தனியே சென்றும் நிகழ்ச்சிகள் நடத்துவர். காவின் ஒரு பக்கத்தில் துளைகளை உடைய சிறிய முழவை தொங்க விட்டுப் புரவலரை நாடுவர். விறலியர் மூங்கில்களை உயரமாக நட்டு அவற்றின் தலையில் மடபாண்டிலை வைத்து திரியிட்டு எண்ணெய் வைத்து எரிப்பர். அந்த சுடரில் விறலியர் கூத்தாடுவர். மேலும், எண்ணெய் ஆடை இவைக்காகவும் விறலியர் ஆடல்கலையை நிகழ்த்தியுள்ளது குறித்தும் இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. விறலியர் தங்களின் வாழ்வியலை நடத்துவதற்குத் தலைவனுக்குப் பரத்தையரைக் கூட்டுவிப்பர். இவர்கள் மெய் பேசுதலைத் தொலைந்த நாவினை உடையவள். இழிந்த சொல்லினை உடையவள். தண்ணுமை உள்ளே யாதும் இல்லாத ஒரு போர்வையைக் கொண்டிருப்பது போல விறிலியும் ஒன்றுமற்ற சொற்களைக் கொண்டிருப்பாள் என்று,*

***"நாளை***
***மகட் கொடை எதிர்ந்த மடம் கெழு பெண்டே!***
***தொலைந்த நாவின் உலைந்த குறு மொழி***
***உடன்பட்டு, ஓராத் தாயரொடு ஒழிபுடன்***
***சொல்லலைகொல்லோ நீயே- வல்லை,***
***களிறு பெறு வல்சிப் பாணன் கையதை***
***வள் உயிர்த் தண்ணுமை போல,***
***உள் யாதும் இல்லது ஓர் போர்வைஅம் சொல்லே?"*** [145]

என்ற பாடலில் பரணர் விறலியர் குறித்து குறிப்பிடுவது விறலியரின் வாழ்வியற் சூழலை விளக்கும் என்பது இவண் உணரத்தக்கது.

**பரிசில் - அறம்**

மறுமைப்பயன் அறப்பயனாதலின், இம்மையில் நலம் செய்து மறுமையில் இன்பம் கருதுவோரை 'அறவிலை வணிகன்' என்பர். உலகத்துச் செல்வர் பலரும் செல்வத்தைப் பரிசிலர்க்கு வழங்குவது இம்மையில் புகழும், மறுமையில் துறக்க இன்பமும் பெற வேண்டும் என்னும் கருத்தேயாகும்.

> ***"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்***
> ***அற விலை வணிகன் ஆஅய் அல்லன் "*** [146]

> ***"வறியார்க்கென்று ஈவதே ஈகை மற்றெல்லாம்***
> ***குறியெதிர்ப்பை நீர துடைத்து"*** [147]

> ***'வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிகன்'*** [148]

என வரும் பகுதிகள் இம்மையில் செய்யும் செயலுக்குரிய பயனை மறுமையில் அடைவோம் என்பதை விளக்குவதாக அமைகின்றன.

> ***"ஒரு திசை ஒருவனை உள்ளி நால் திசைப்***
> ***பலரும் வருவர் பரிசில் மாக்கள்***
> ***வரிசை அறிதலோ அரிதே பெரிதும்***
> ***ஈதல் எளிதே மாவண் தோன்றல்***
> ***அது நற்கு அறிந்தனை ஆயின்***
> ***பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே"*** [149]

தகுதியை அறிந்து பரிசில் வழங்குதல் ஏனைப் புலவரோடு தன்னையும் ஒப்பாகக் கருதிச் சிறப்பு செய்த மலையமான் திருமுடிக்காரிக்கு வரிசை கருதாது பொதுநோக்கு ஒழிவாயாக என்று கபிலர் இப்பாட்டில் வற்புறுத்திப் பாடியுள்ளார். ஒரு திசை ஒருவனை உள்ளி நாற்றிசைப் பலரும் வருவர் என்றதனால், வள்ளலை நாடியே பலரும் வருவர், பொருள் கொடாதவனை யாரும் நாடிச் செல்லார் என்பதை உணர்த்தினார். பரிசின் மக்கள் பலரும் வருவர் எனப் பொருள்படும். அறிவுடையோர் வரிசை (தகுதி) அறிந்து ஈதல் வேண்டும் என்பதை 'ஈதல் எளிது, வரிசை அறிதல் அரிது' என்று குறிப்பிடுகின்றார். புலமிக்கவரைப் புலமை அறிதல், புலமிக்கவர்க்கே இயலுமாதலின் வரிசை அறிவது அரிதாயிற்று என்றார்.

> ***'பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கி'*** [150]
> ***'இரவல் மாக்கள் ஈகை நுவல'*** [151]
> ***'வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை'*** [152]

என்னும் பாடலடிகளால் தகுதியை அறிந்து பரிசில் வழங்கும் நிலையை அறியமுடிகின்றது.

**அரசர்களின் அறக்கடமைகள்**

இன்றைய ஆட்சி மக்களாட்சி, இன்றைய சூழலில் ஒரு அரசின் கடமை என்பதை மக்களைக் காத்தல், மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குதல் ஆகியனவாகும். வியத்தகு

*வகையில் இன்றைய அதே செயல்முறைகள் முற்காலத்திலும் இருந்துள்ளது. மக்களைக் காத்தல்,களவை ஒடுக்குதல், கொலையைத் தடுத்துதல்,வரிகள் அதிகம் பெறாமல் குடிகளுக்கு நல்லது செய்தல் ஆகியன அரசரின் கடமைகளாக இருந்த வந்தன.*

***"கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பி***
***குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக"*** [153]

*என்று பாண்டியன் நெடுஞ்செழியனின் வஞ்சினம், குடிகளிடமிருந்து வரிகளை அதிகம் பெறாமல் வாழவேண்டுமென்றது பெறப்படுகிறது.*

***"அருளும் அன்பும் நீக்கி நீங்கா***
***நிரயங் கொள்பவரொடு ஒன்றாது, காவல்,***
***குழவி கொள் பவரின், ஓம்புமதி!***
***அளிதோ தானே; அது பெறல்அருங் குரைத்தே".*** [154]

*என்ற அடிகள் பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் அகியவற்றை அறவே நீக்கிடுதல் வேண்டும். இவை அறம் செய்பவர்களுக்கு தடைக்கல்லாக அமையும். அறம் செய்யும் மன்னர்களை மக்கள் இறை என்று வைப்பர் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.*

***"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு***
***இறையென்று வைக்கப் படும்"*** [155]

*என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளமை உணரத்தக்கது. இதுபோலவே மன்னன் குறித்து மோசிகீரனாரும்,*

***"நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;***
***மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;***
***அதனால், யான்உயிர் என்பது அறிகை***
***வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."*** [156]

*மேலும், குடபுலவியனாரும்,*

***"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே***
***உண்டி முதற்றே உணவின் பிண்டம்***
***உணவெனப் படுவது நிலத்தொடு நீரே***
***நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு***
***உடம்பும் உயிரும் படைத்திசி னோரே"*** [157]

*என்றவாறு குறிப்பிட்டுள்ளனர். மன்னர்கள் என்பவர்கள் மக்களின் தலைவன் ஆவான். இவன் ஈதல் செய்து தன் குடிகளைக் காக்கும் பொறுப்புடையவன். என்றவாறெல்லாம் அரசர்களின் ஈகை குணம் எடுத்துகாட்டப்பட்டுள்ளன. இத்தலைப்பு தனிப்பட்ட அரசர்களை (பாரி உள்ளிட்டவர்கள்) குறித்தும் அவர்களின் கொடைத்தன்மை குறித்தும் பின்னர் விளக்கப்படும். இதுகாறும் புறத்திணைப் பாடல்களில் காணலாகும் மனித வளங்களும், வாழ்வியல் நிலைகளும் அம்மனித வளங்களால் சங்ககாலச் சமுதாயத்தில் நடைபெற்ற செயல்கள் அதுகுறித்தச் செய்திகளைக் கண்டோம்.*

**தொகுப்புரை**

*மனிதவளக்கூறுகள் என்னும் இத்தலைப்பில் பின்வரும் கருத்துகள் ஆராயப்பெற்றுள்ளன.*

- *மக்கள், மாக்கள் குறித்த விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.*
- *ஈதல் செய்வதற்கான காரணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.*
- *தனக்கு இல்லாத போதும் மற்றவர்களுக்கு உதவுதலை தலையாயப் பண்பாகக் கொண்டு வாழ்ந்ததை அக்கால மக்களிடம் காணமுடிகிறது.*
- *சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகள் குறித்து கூறப்பட்டுள்ளன.*
- *விருந்தோம்பலில், வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியுடனும் இனிய சொற்களுடனும், வரவேற்று உபசரித்து, அவர்களுக்கு தேவையானதை வழங்கி பண்டைக்கால மக்கள், அரசர்கள் வாழ்ந்தமையால் அவர்களிடம் மனிதநேய உணர்வு மேலோங்கி காணப்படுகிறது.*
- *அரசர், மறவன், மக்கள் ஆகியோரின் கொடைத்தன்மை குறித்து கூறப்பட்டுள்ளன.*
- *சங்ககாலத் தமிழர் அறிவுத்திறன் மிக்கவர்களாக விளங்கியது கல்வியால் தான், அவற்றைக் கற்பதில் எந்த ஒரு பாகுபாடும் இல்லாமல் கற்றதையும், அதனால் நாடு முன்னேற்றப் பாதையில் சென்றடைந்ததையும் அக்கால மக்களிடையே காணமுடிகிறது.*
- *கற்றறிந்த புலவர் பெருமக்களே அரசரையே வழிநடத்திச் சென்றதை அறியமுடிகிறது.*
- *மேலும் கற்ற கல்வி மட்டுமே ஓர் மனிதனை உயர்த்தி விடாது. கற்றவழி நடப்பதையும் பின்பற்றி வாழ்ந்த நிலையையும் அறியமுடிகிறது.*
- *சங்கப் புறப்பாடல்களில் பெண்களின் பங்களிப்பு மிகச் சிறப்பாக உள்ளது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நாகரிகமடைந்த பெண்களின் நிலமையைக் காட்டிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த பெண்பாற் புலவர்கள் கல்வி, நாகரிகம், பண்பாடு போன்றவற்றில் உயரிய இடத்தில் இருந்தனர் என்பதை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*
- *இலக்கியங்களில் காணப்படும் கடவுளர்கள் பெயர்கள், ஆண்பாற் பெயர்கள் போன்றவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.*
- *சங்ககால மக்கள் இசை, ஓவியம் போன்ற கலை நுண்ணறிவு குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.*
- *அரசர்களின் அறக்கடமைகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.*

## சான்றெண் விளக்கம்

1. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா. 121.
2. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),நற்றிணை, பா.186:8-9.
3. வி.நாகராசன் (உ.ஆ.),குறுந்தொகை., பா. 20: 1-2.
4. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா.195: 6-9.
5. மேலது.,பா.194.
6. தமிழண்ணல்(உ.ஆ.),அகம்.,பா. 327:1-3
7. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா. 163.
8. மேலது.,பா. 189.
9. தனிப்பாடல் திரட்டு , கம்பர், பா – 6.
10. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா.331:7 – 9.
11. மேலது.,பா.306: 3-6.
12. மேலது.,பா.333: 8-13.
13. பெரியபுராணம்.பா. 2.4.13.
14. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா.204:1-4.
15. வ.த.இராமசுப்பிரமணியம்(உ.ஆ.),தொல்.பொருள்.கற்பியல். நூ. 11.
16. பாரதிதாசன், தமிழச்சியின் கத்தி, ப.56.
17. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா.10:8.
18. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள் - 90.
19. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., 182:1-3.
20. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ.)சிலம்பு.கொலை .71-73.
21. வி.நாகராசன் (உ.ஆ.),பட்டினப்பாலை, அடி. 45-46.
22. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா.10: 8.
23. மேலது.,பா.374:15.
24. மேலது.,பா.42:12 -18.
25. மேலது.,பா.320:14-15.
26. மேலது.,பா.331:7-9.
27. மேலது.,பா.384:21-22.
28. மேலது.,பா.319:8-9.
29. கம்ப.காட். பா.15.
30. வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை.,பா – 18
31. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),நற்றிணை, பா.142:9

32. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா.10:7 - 8
33. மேலது., பா.333:12-13.
34. மேலது., பா.334:5-7.
35. வி.நாகராசன் (உ.ஆ.), மலைபடுகடாம்.அடி.184 – 185.
36. மேலது., பா.186-188.
37. இரா. மோகன் (உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை. அடி.195-196.
38. வி.நாகராசன் (உ.ஆ.), மலைபடுகடாம்.அடி.440 -443.
39. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா.215: 3 -5.
40. இரா. மோகன் (உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை. அடி.224-226.
41. மேலது., அடி.256.
42. மேலது., அடி.262.
43. மேலது., அடி.356 -359.
44. வி.நாகராசன் (உ.ஆ.), மலைபடுகடாம்.அடி.465.
45. மேலது., அடி. 455 -459.
46. இரா. மோகன் (உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை. அடி. 98-104.
47. இரா. மோகன் (உ.ஆ.), சிறுபாணாற்றுப்படை. 175-177.
48. இரா. மோகன் (உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை. அடி.142.
49. மேலது., அடி.165-168.
50. மேலது., அடி.303-310.
51. மேலது., அடி.281-282.
52. மேலது., அடி.478-479.
53. இரா. மோகன் (உ.ஆ.), பொருநராற்றுப்படை.அடி. 117-118.
54. மேலது., அடி. 82-83.
55. இரா. மோகன் (உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை. அடி – 470.
56. எஸ். கௌமாரீஸ்வரி, கௌரா தமிழ் அகராதி, ப.112
57. தமிழ்ப் பேரகராதி தொகுதி-1.ப.304.
58. இலக்கியச் சொல்லகராதி. ப-31
59. அகராதி நிகண்டு. ப-115.
60. தொல்.பொருள்.நச்.ப-235.
61. ஈசாந்திமங்கலம் முருகேசன், பார் போற்றும் வள்ளுவமும் பண்புசால் வாழ்க்கையும் ப.106
62. ஆறு. ஆழகப்பன், மனிதநேயம், ப.74.

63. ரா.சீனிவாசன், நாலடியார் செய்திகள், ப.40.
64. ஆறு. ஆழகப்பன், தமிழ்ப்பேழை, ப.23.
65. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .366:17-19.
66. மேலது., பா .119:5-7.
67. மேலது., பா .177:8-15.
68. மேலது., பா .385:3-7.
69. மேலது., பா .171:8-11.
70. மேலது., பா . 180: 11-13.
71. புறம் – உரையாசிரியர், துரைசாமிபிள்ளை - ப- 362.
72. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 333:8-13.
73. இரா. மோகன் (உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை. அடி. 22–27.
74. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.), திருக்குறள் - 226.
75. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 163.
76. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.), திருக்குறள் - 212.
77. பெ.சுப்பிரமணியன்(உ.ஆ.), பரிபாடல். பா.10:87-88.
78. அ.ஆலிஸ்,(உ.ஆ.), பதிற்றுப்பத்து, பா.67:4.
79. வி.நாகராசன் (உ.ஆ.), மதுரைக்காஞ்சி. அடி .749 – 752.
80. அ.ஆலிஸ்,(உ.ஆ.), பதிற்றுப்பத்து, பா.1484:3-5.
81. பெ.சுப்பிரமணியன்(உ.ஆ.). பரிபாடல். பா .10:126-127.
82. இரா. மோகன் (உ.ஆ.), சிறுபாணாற்றுப்படை. அடி.174 – 177.
83. அ.ஆலிஸ்,(உ.ஆ.), பதிற்றுப்பத்து, பா.47:1-2.
84. மேலது., பா.48:1-2.
85. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .189:5-6.
86. அ.ஆலிஸ்,(உ.ஆ,), பதிற்றுப்பத்து, பா.18.
87. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .205:11-14.
88. பத்மதேவன், விவேகசிந்தாமணி மூலமும் உரையும், ப.72.
89. இ.தமிழமுது (ப.ஆ.), ஏலாதி, பா.77:1.
90. இரா. பச்சையப்பன், திருவள்ளுவர் விரும்பும் குடும்பம் ப.87.
91. தமிழியல் ஆராய்ச்சித் தொகுதி - 7, ப.44.
92. இ.தமிழமுது (ப.ஆ.), ஏலாதி, பா.56.
93. வி.நாகராசன் (உ.ஆ.), பட்டினப்பாலை. அடி.169-71.
94. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .183:1-2.

95. அ.விசுவநாதன் (உ.ஆ.).கலித்தொகை.,பா .149:4-5.

96. வி.நாகராசன் (உ.ஆ.), குறுந்தொகை.,பா .33:1-2.

97. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .128:1-2.

98. மேலது., பா.374:15.

99. மேலது., பா.76:4.

100. மேலது., பா.79:2.

101. மேலது., பா.371:7.

102. மேலது., பா.235:13.

103. மேலது., பா.282:11.

104. பெ.சுப்பிரமணியன் (உ.ஆ.).பரிபாடல்.பா .12:83.

105. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .24:19.

106. மேலது., பா.18:18-28.

107. பெ.சுப்பிரமணியன் (உ.ஆ.).பரிபாடல்.பா.6 : 34.

108. மேலது., பா. 22 : 18.

109. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .35:28-30.

110. வி.நாகராசன் (உ.ஆ.),மலைபடுகடாம்.,அடி.114-115.

111. அ. விசுவநாதன்(உ.ஆ.).கலித்தொகை.,பா .17:17-21.

112. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து,பா.42:2-4.

113. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .353:14 -16.

114. மேலது.,பா. 30:1-7.

115. இரா. மோகன் (உ.ஆ.),சிறுபாணாற்றுப்படை.அடி .242-243.

116. பெ.சுப்பிரமணியன்(உ.ஆ.).பரிபாடல்.பா.19:46-47.

117. இரா. மோகன் (உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.405.

118. கட்டட இயல், தமிழில் அறிவியல் கருத்துகள், பக் 157- 158

119. நாகராசன்.வி (உ.ஆ.),மலைபடுகடாம்.அடி.3-10.

120. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ.)சிலம்பு, புகார்க் காண்டம்.ப.98-99.

121. நாகராசன்.வி (உ.ஆ.),பட்டினப்பாலை.அடி.49-50.

122. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .92.

123. மேலது.,பா.97:21-25.

124. மேலது.,பா.96.

125. மேலது.,பா.9:9-10.

126. மேலது.,பா.126:2-4.

127. மேலது.,பா.11.
128. அ.ஆலிஸ்,(உ.ஆ,),பதிற்றுப்பத்து,பா.53:9-13.
129. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .279.
130. மேலது.,பா.277.
131. மேலது.,பா. 299.
132. மேலது.,பா.246.
133. மேலது.,பா.66.
134. மேலது.,பா.252.
135. மேலது.,பா.112.
136. மேலது.,பா.302:9-12.
137. கழகத்தமிழகராதி.ப .49.
138. லேனா. தமிழ்வாணன் (ப.ஆ) மணிமேகலைத்தமிழகராதி ப- 48.
139. நாகராசன்.வி (உ.ஆ.),பட்டினப்பாலை.அடி.768-769.
140. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),புறம்.,பா .108:4-5.
141. இரா. மோகன் (உ.ஆ.),பொருநராற்றுப்படை.அடி.151-153.
142. நாகராசன்.வி (உ.ஆ.), மலைபடுகடாம்.அடி.546-547.
143. இரா. மோகன் (உ.ஆ.), பொருநராற்றுப்படை.அடி.61-62.
144. மேலது., அடி.72-73.
145. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை.பா.310:4-11.
146. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .134:1-2.
147. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.), திருக்குறள். 221.
148. இ.தமிழமுது (ப.ஆ.),சிறுபஞ். 34:1.
149. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .121.
150. மேலது., பா.6:16.
151. மேலது., பா.24:30.
152. மேலது., பா.47:6.
153. மேலது., பா.72:11-12.
154. மேலது., பா.5:5-8.
155. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள்.388.
156. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),புறம்.,பா .186.
157. மேலது., பா.18:19-23.

# இயல் – மூன்று

# புறத்திணைப் பாடல்களில் மனிதநேயம்

**முன்னுரை**

மனிதனுடைய வாழ்வியல் பல தருணங்களை உடையது. அது பெரும்பாலும் உணர்வுக் கலவையால் இயங்குகிறது. மனிதனின் பருவங்களில் இரக்க உணர்வு என்பது எக்காலங்களிலும் இருந்தே கொண்டேயிருக்கும். கருணை, வீரம் உள்ளிட்டவை அனைத்துத் தரப்பினருக்கும் வரும் என்பதைக் கூற முடியாது. இந்த இரக்க உணர்வு “உலகப்பொது உணர்வு”. மனிதர்கள் வளரவளர தங்களுடைய மனிதத்தை இழந்து விடுகின்றனர். அதனால் தான் முதியோர் இல்லங்களும், கருணை இல்லங்களும் பெருகி வருகின்றன. பலர் செய்யும் தவறுகளைச் சரி செய்யும் போக்கில் இவை இயங்கி வருகின்றன. மனிதநேயம் இன்று உள்ளதா? என்று எண்ணிப் பார்க்கையில் கவலைதான் மிஞ்சுகிறது. இன்றையநிலையில் மனிதநேயத்தை விடுத்து, சங்கஇலக்கியம் மனிதநேயத்தை எவ்வாறு போற்றியுள்ளது என்பது குறித்து ஆராய வேண்டியத் தேவை உள்ளது. உலகம் மகிழ்வுடன் வாழ அன்பே அடிப்படை. அன்புடையவரே பிறருக்கும் இன்பத்தை உண்டாக்கி தாமும் இன்பம் உடையவராக வாழ்வர். இவ்வாறு உண்டாக்கக் கூடிய அன்பு உள்நோக்கமற்றதாகப் பிறருக்கு இடையூறு செய்யாததாக, அனைவரிடமும் இணக்கம் காட்டுவதாக அமைய வேண்டும். இந்த அன்பே ”நேயம்” என்று கூறப்படுகின்றது. இந்த நேயம் என்பது, எவ்வுயிரிடமும் அன்பு கொள்ள வேண்டும். “வள்ளலாரைப் போல வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வருத்தமுற” வேண்டும். இந்த நேயம் ஆழ் மனதில் இருப்பின் எவரிடமும் அன்புடன் இருக்கலாம். மனிதநேயம் என்பது மனிதர்களிடம் நிலவும் நேயம், மனிதர்களிடம் காட்டும் நேயம், மனிதர்களுடைய நேயம், என்று பலவாறாகப் பொருள் கொள்ளத்தக்கது.

தமிழ்மொழியில் நேசம் என்பதற்கு “நேயம்” என்னும் இச்சொல்லை மாற்றாகக் கருதலாம். சொல்லுக்குத் தகுதி, அன்பு என்பவை பொருட்களாகக் கொள்ளப்படும். பெற்றோர் தம் குழந்தைகளிடத்து செலுத்தும் அன்பு “பற்று” என்று கூறப்படும். கணவன் மனைவியிடையே தோன்றும் அன்பு “காதல்” எனப்படும். இறைவன் பக்தனிடம் செலுத்தும் அன்பு “அருள்” எனப்படும். இரு மனிதர்களிடையே தோன்றும் அன்பு “நட்பு” என்றும் பொருள்படும்.

இவ்வாறு அன்புணர்வு அனைவரிடமும் பல்வேறு முறைகளில் வழங்கப்பட்டு வருகிறது.

அன்பு என்பது உலகத்தில் உள்ள அனைத்து மனங்களிலும் தோன்றுமாயினும், அது மனிதனுடைய மனங்களுள் எழும்போது மனிதநேயம் என்று அழைக்கப்படுகிறது. மன்னர்களின் கொடை (அல்லது) ஈகையின் அடிப்படையே மனிதநேயத்தின் காரணமாகத்தான் எனலாம்.

மனிதனுக்கு உயிர்வாழ உணவும் உடையும் இருப்பதற்கு இடமும் தேவை. இவை அனைத்தும் மக்களினம் அனைத்திற்கும் பொதுவானவை. இருப்பினும் வாழ்க்கையில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. மக்கள் மதம், சாதி, பொருளியல் முதலியவற்றால் வேறுபட்டும், நிறத்தாலும் பொருளாலும் பிளவுபட்டும் வாழும் வாழ்க்கை தொடர்ந்து வருகிறது. இத்தகைய பிரிவினைகளைப் போக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளுதல் அவசியமாகின்றன.

அனைவரும் வாழ வேண்டும் என்ற பொதுநல உணர்வு என்று தோன்றுகிறதோ அன்றே மனிதநேயம் வெற்றியடையும். இக்கூறு வாழ்வியலின் மிக முக்கியப் பண்பாகும்.

உலகில் உயிரினங்கள் பலவகைகளாகவும், எண்ணற்றவையாகவும் உள்ளன. அவற்றுள் மானுடப்பிறவி பெறுதற்கரியது என்பதை உணர்த்தும் வகையில் ஔவை மூதாட்டியார் “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்று பாடிச் சென்றுள்ளமையைக் காணலாம். அதிலும் இந்த மக்களினம் உலகில் தோன்றிய காலந்தொட்டுச் சமுதாய உணர்வுடன் இயல்பாகவே பிறருடன் ஒத்து வாழும் தன்மையினைப் பெற்று இருந்தனர். மேலும் உழைப்பு, ஆர்வம், பொருளீட்டம், வசதிப் பெருக்கம், அறிவாற்றல் போன்ற உந்துதல் தன்மைகளினால் மனிதன் பிறரிடையே வேற்றுமையுணர்வு கொண்டு தன்னலத்தை வளர்த்துக் கொள்ளத் தொடங்கினான். அந்நிலையில் சமுதாயத்தில் இருந்து விலகிப் பிரிந்து நிற்கவும் முனைந்தான். மேலும், தன் மனைவி தன் மக்கள், தன் உறவினர் எனும் உறவு பிணைப்பால் தன்னலம் தலையெடுக்கவே அவனது உயர்ந்த உள்ளம் சிறுத்துக் கடுகு மனப்பான்மை கொள்ளலாயினான். இதனால் மனித நேயத்திற்கு ஒரு வகைச் சோதனை ஏற்படலாயிற்று. இத்தகைய சூழலிலே சான்றோர்களும், அறவாணர்களும், அருளாளர்களும், புலவர்களும் தோன்றிச் சமுதாயத்தைத் தங்களின் மேலான கருத்துக்கள் மூலம் மனித நேயத்தைக் காக்க முன் வந்தனர். அந்த வகையில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமான சங்கஇலக்கியங்களில் புறம் சார்ந்த பாடல்களில் காணலாகும் மனித நேயச் சிந்தனைகளை எடுத்தியம்புவதே இவ்வியலின் நோக்கமாக அமைகிறது.

**இலக்கியங்கள் சுட்டும் மனிதநேயம்**

உலக மக்களின் ஒவ்வொரு காலக்கட்டத்தையும் காட்ட வரலாற்று நூல்களே சான்றாக உள்ளன. சமூகத்தைச் சுட்டும் சொல்லேழுவர்கள் பல்வேறு இலக்கியப் படைப்புகளை உருவாக்கி சமூகத்தின் நன்மை தீமைகளை மிக அழகாக சித்தரிக்கின்றனர். முதலாவதாக மனிதநேயத்தின் படிநிலைகளையும் அது குறித்து அறிஞர்கள் தரும் கருத்தினையும் காண்போம்.

**தொல்காப்பியம்**

தமிழ் மொழியில் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது தொல்காப்பியமே ஆகும்.

***“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது***
***தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்”*** [1]

*மனிதன் தன்மன மகிழ்ச்சியை நாடினால் மாற்றாரின் நலனையும் நாட வேண்டியவனாகிறான். என்பதைத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது இவண் உணரத்தக்கது.*

**தொல்காப்பியத்தின் உயிர்ப் பாகுபாடு**

*நாடோடியாகத் திரிந்து வாழ்ந்து, நாகரிகத்திற்குத் தலைக்காட்டிய மனிதயினத்தை அதன் உயர்நிலை கருதி, அதன் இயல்பு உணர்ந்து ஆறறிவு உயிராக வகைப்படுத்தினார் . இது அவரின் நுண்மான் நுழைபுலத்தையே காட்டுகிறது என்பர். பண்பாட்டாலும் நாகரிகத்தாலும் வளர்ந்து விட்ட மனிதன் எல்லா உயிர்களினின்றும் மேலானவன் என்பதை,*

***“மக்கள் தாமே ஆறறி வுயிரே***
***பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே”*** [2]

*என்கிறார். ஓரறிவு உயிர் முதல் வகைப்படுத்திக் கூறத் தொடங்கிய தொல்காப்பியர் மக்களோடொத்த தேவர், அசுரர் , இயக்கர் முதலானோரும் ஆறறிவு உடையோரே என்றும் , பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே என்பதில் பின்வருமாறு உள்ளடக்குவர்.*

***“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே***
***இரண்டறி வதுவே அதனொடு நாவே***
***மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே***
***நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே***
***ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே***
***ஆறறி வதுவே அவற்றொடு மனனே”*** [3]

*என்று உயிர்களை வகைப்படுத்துவார். ஆறாவது அறிவான பகுத்தறிவானது நன்மை தீமைகளை அறியும் தன்மையது என்கிறார். அதனைப் பெற்றது மனிதயினமே என்பதும் குறிப்பிடத்தக்கது. பகுத்தறிவு மனத்தோடு தொடர்பு கொண்டது. இதனை மேற்கண்ட நூற்பா தெளிவுறுத்துகின்றது.*

**மனித சிந்தனையின் தொடக்கம்**

*மனித சிந்தனையில் இயற்கை அமைப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. அதனால் ஏன், எதற்கு, எப்படி, என்ன என்று ஆராயத் தலைப்பட்டபோது புதிய சிந்தனைகள் மலரத் தொடங்கின.*

*“மனிதன் விலங்குகளிடமிருந்து கற்ற பல்வேறு உத்திகளின் அடிப்படையிலேயே பல பண்பாட்டுக் கூறுகள் தோன்றின”* [4]

*என்று கிரேக்கச் சிந்தனையாளரான டெமொகிரிட்டஸ் தெளிவுறுத்துகிறார். மேலும்,*

> “மனிதன் சிலந்தியிடமிருந்து நெசவு செய்தலையும், தூக்கணாங் குருவியிடமிருந்து வீடுகட்டும் முறையையும், நைட்டிங்கேல் பறவையிடமிருந்து இசையையும், அன்னத்திடமிருந்து பாடுவதையும் கற்றுக்கொண்டான்.” [5]

என்று மனிதன் பண்பாட்டு வளர்ச்சியை அவர் வகைப்படுத்துவார். இயற்கை அமைப்புகளைப் பகுத்தாயத் தொடங்கிய மனிதன், தன் வாழ்க்கை முறைக்கேற்ப தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால், “தொடக்க காலத்தில் மக்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒன்றுகூடி வாழ முற்பட்டபோது அவர்களின் தேவையை ஈடுசெய்ய ஒவ்வொருவரும் அவரவருக்குத் தெரிந்த வேலையைச் செய்து தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டனர். இதனடிப்படையிலேயே உழவர்கள், நெசவாளர்கள், கருமார்கள், தச்சர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், படைவீரர்கள், ஆட்சியாளர்கள் போன்ற பல்வேறு வகுப்பினர் தோன்றினர்.”[6] என்கிறார் பிளாட்டோ. இதன்படி மனிதன் தன் தேவைகளின் பொருட்டே சமுதாயத்தையும், வாழ்க்கை முறைகளையும் மாற்றியமைத்துக் கொண்டு வந்திருக்கிறான். இதைக் காண்கிறபோது மனிதன் தன் சிந்தனையாற்றலால் உலகில் ஒவ்வொன்றைப் பற்றியும் சிந்திக்கிறான். மனம் நினைப்பதைக் கட்டுக்குள் வைத்துச் செயல்படுத்துகிறான். உடலுறுப்புகள் ஒவ்வொன்றும் தத்தம் பணிகளைச் செய்ய அவனது கட்டுப்பாடே காரணமாய் அமைகிறது. தனது உருவில் ஓர் அரசாங்கத்தையே நடத்தி வருகிறான். அதாவது, நினைக்க ஒன்று கட்டளையிட ஒன்று பணியாற்ற ஒன்று இவையனைத்தும் பணியாற்ற மூலகாரணம் இன்னொன்று. இப்படி ஒரு உருவ அமைப்பைப் பெற்ற மனிதன் தன் சிந்தனா சக்தியால் சாதனைகள் பலவற்றையும் நிகழ்த்தி வருகிறான். தத்தம் பொறிகளால் உய்த்துணருகின்ற ஆற்றலை ஒவ்வொரு உயிரும் பெற்றிருந்தாலும், ஐம்பொறிகளாலும் உய்த்துணர்ந்து செயல்படுகின்ற தனித்தன்மையைப் பெற்றது மனித இனம்தான். இந்த மேலான சிறப்பினைச் செய்யும் விதமாக ஆறாவது அறிவானப் பகுத்தறிவைப் பெற்று உலகில் உயர்ந்து நிற்கிறது மனிதயினம்.

> “பிறக்கும்போதே மனிதனின் இயல்புகள் சமுதாயத்தோடு ஒன்றுபடும் தன்மைகளைப் பெற்றுள்ளன என்றும், இத்தன்மைகள் மொழி, பழக்கவழக்கங்கள், அறிவார்ந்த முறையில் சிந்தித்தல் போன்றவற்றில் புதைந்து கிடக்கின்றன.[7]

என்று சாக்ரடீஸ் மனித வளர்ச்சிகள் அனைத்தும் அவனது சிந்தனையில் தான் இருக்கிறது என்கின்றார்.

**மன் – மனம் – மனிதன்**

மனித உடலில் நிலையாக இயங்க வேண்டியது மூளையாகும். மூளை சிந்தனை உறுப்புக்களைக் கட்டுக்குள் வைத்திருக்கின்றது. எனவே, மனம் என்பதும் மனத்தின் இயக்கம் என்பதும், அதன் இயக்கத்தையுமே குறிக்கும். மூளையின் இயக்கத்தில் பிறழ்ச்சி

*நேர்ந்தால் மனிதன் மனநிலை பாதிக்கப்பட்டவன் ஆகின்றான். மனம் என்ற சொல், நிலைத்த என்ற பொருளைத் தரும் "மன்" என்ற வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்தது எனவே, மனிதன் என்ற சொல் மனம் என்பதன் அடியாகப் பிறந்தது எனப்பெறப்படும். இதனை,*

> *"மன் –முன்னுதல் – கருதுதல், எண்ணுதல், சூழ்தல் முன் – மன்ப – பகுத்தறிவும் மதிநுட்பங் கொண்டு சிறப்பாகக் கருதி அறியும் மாந்தன் மனம் - முன்னுதல் , கருதுதல் – முன் – முன்னம் – மனம்"* [8]

*என விளக்குவார் தேவநேயப்பாவாணர்.*

***மனிதன் என்பதன் பொருள்***

*மனிதன் என்ற சொல்லின் அடிச்சொல் மன். அது உறுதி, நிலைபேறு என்னும் பொருள் தருவது. மனிதவாழ்க்கை மனதினை உறுதிப்படுத்தி நிலைப்படுத்தி வாழ்வதாகும். தானும் நல்வழியில் சென்று, பிறரையும் நல்வழிப்படுத்துகின்றவனே மனிதன். சுவை. ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தறிவும் மனிதனுக்கும் விலங்கிற்கும் பொதுவாயிருப்பவை. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவே மனிதனைப் பிறப்பில் உயர்வுபடுத்துகின்றது. மனதினை வளப்படுத்தி, மன்னுயிர்கள் பயன்பெற வாழ்பவர் மனிதர் என்பதனை,*

> *"மனித உடல் தாங்கிய அனைவரிடத்தும் பகுத்தறிவு விளங்குகிறதா? அவ்வறிவு விளங்கப்பெற்ற எல்லோரும் அதன்வழி நின்றொழுகின்றனரா எனில், இல்லை என்க. சிலரிடம் பகுத்தறிவு விளங்குவதே இல்லை. அவ்வறிவு விளங்கப் பெறுவோருள்ளும் பலர் அதன்வழி நின்று ஒழுகுகிறாரில்லை. இவ்விரு சாராரும் ஓரினத்தவரேயாவர். இவரல்லாத பிறரே மனிதராவர்."* [9]

*என்கிறார் திரு.வி.க. மேலும்,*

> *"மனிதம் என்று இங்கே சொல்லும் பொழுது அது வெறும் மனிதாபிமானம் மட்டுமல்ல, அதாவது வேறொரு மனிதனுக்காகக் காட்டுகின்ற அபிமானத்தை நாம் மனிதம் என்று சொல்லவில்லை. மனிதனுடைய எல்லையில்லாத, எல்லை காட்ட இயலாத முழுமையான ஆற்றலையும், அதாவது மனித அறிவாற்றலும், ஆன்மிகச்செல்வமும், இதுவரை திரட்டப்பட்டிருக்கின்றன, இனிமேல் திரட்டப்போகின்ற எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, அவற்றுடன் மனிதனுடைய பண்புகளும், குணங்களும் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்தது தான் இந்த மனிதம்"*[10] *என்கிறார் கே.பாலதண்டாயுதம். இதிலிருந்து மனிதம் என்பது குறித்து நாம் பின்வருமாறு சிந்திக்கலாம்.*

**மனிதம்**

"மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள். நினைக்கும் கருவி மனம். மனத்தையுடையவன் மனிதன். தமிழில் மனிதன். வடமொழியில் மநுஜா, ஆங்கிலத்தில் மேன், இவையெல்லாம் 'மன்' என்ற பகுதியடியாகவே பிறந்தவை"[11] என்று திருமுருக கிருபானந்தவாரியார் குறிப்பிடுகிறார். மேலும் மனிதன் மாண்புமிக்கவன், மனிதத்தன்மையை "யாதும் ஊரே யாவரும் கேளிர்"[12] என்றார் கணியன் பூங்குன்றனார். மனிதன் மாண்புடையவன். அனைத்து மனிதர்களோடும் சமமாக வாழக்கூடியவன். தன்னைப் போன்று மற்றவர்களும் வாழ்ந்திட உதவும்போது மனிதம் நிறைவு பெறுகின்றது. மனித சமுதாயத்தில் காணப்படும் சுதந்திரம், சமத்துவம் போன்ற சிக்கல்களுக்குத் தீர்வு காணும் போது மனிதம் மலர்கின்றது. அத்தகைய மனிதம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் அடிமைத்தளையை அகற்ற வேண்டும் என்பது அடிப்படைத் தேவையாகின்றது.

**மனிதநேயம் என்ற சொல்**

மனிதநேயம் என்ற சொல் இத்தாலி மொழியிலுள்ள Humanista என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. Humain என்னும் பழைய பிரெஞ்சு மொழிச் சொல்லிலிருந்து Human என்ற ஆங்கிலச் சொல் தோன்றியது. Humanus என்னும் இலத்தின் சொல்லிலிருந்து Humain தோன்றியது. பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் Humanism, Humanity, Humanitarian போன்ற சொற்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. Humanism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக மனிதநேயம் குறிக்கப்படுகிறது. "மனிதநேயம் என்ற சொல்லின் பொருளாக, மனித மனத்தினின்று எழும் அன்பு சார்ந்த நலம் நாடும் உணர்வு என்பதைக் கொள்ளலாம்."[13] "மனிதனை மனிதன் மதித்துச்செல்லும் அன்பே மனிதநேயம் என அகராதி ஒன்று விளக்கம் தருகிறது"[14].

ஆங்கிலத்தமிழ் அகராதியில் டாக்டர் ஏ.சி.செட்டியார், "மனிதநேயம் என்பதற்கு – மனிதஇன நலக் கோட்பாடு, மனித உலக வாழ்க்கையியல், மனித பொதுமை நலஇயல், மனிதஇன பொதுச்சமய அமைதி, மனிதமனஇயல் பண்பாய்வுத்துறை, பண்டைய கிரேக்க உரோம கலை இலக்கியப்பண்பு"[15] என்று விளக்கமளிக்கிறார். கா.அப்பாத்துரை, "மனிதத்தன்மை, மனித பற்றுக்கோடு எனப்பொருள் தருகிறார்[16].

மனிதநேயம், மனிதம் என்ற இரு சொற்களிடையே மிக நுண்ணிய வேறுபாடு இருப்பினும், மானுடம் தழைக்க மனிதநேயம் அடிப்படை உணர்வாகின்றது. மனிதநேயப் பண்பினாலே மனிதம் செழிக்கின்றது என்பதை உணரலாம். பேராசிரியர் க.த திருநாவுக்கரசு கூறுவதைப்போல மனிதம் என்பது ஒரு வாழ்க்கை நெறி, மனிதப்பண்புகளை மதித்துப் போற்றுகின்ற நெறி, மனித உரிமைகளைப் போற்றிக் காக்கின்ற ஒருநெறி என்பதே மனிதநேய வழிச்சிறக்கும் மனிதத்தின் மாண்பாகத் தெரிகிறது.[17]

**மனிதநேயம்**

இவ்வுலகம் சரிசமானமாக மாறும்போதுதான் மாந்த நேயத்தின் தன்மை உருப்பெறும். மனிதனிடத்து காணப்படும் விலங்கின குணங்கள் மனிதன் விலங்கிலிருந்து பிறந்தான் என்பதற்குச் சான்றாகும். அன்பு பரப்பை விலங்குகள் தம் இனத்தோடு நிறுத்திக் கொள்கின்றன. ஆனால் மனிதன் மட்டும் உலகப்பொருட்கள் அனைத்திலும் அன்பு காட்டுகிறான். உலகம் போரின்றி வாழவும் உலக மக்களிடையே அன்பு உருவாகவும் ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் ஒழிந்து ஒப்புமை நிலைக்கவும் வழிவகுக்கும் உயர்ந்த தன்மையையே மனிதநேயம் என்று கூறலாம். மேலும் **"**மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய தொடர்புறவு பற்றிய ஒரு விதமான மனநிலை; மனிதநேயம் மனித உணர்வுகளின் அடிப்படையில் தோன்றுவது. காலம், இடம், சூழல் ஆகிய பின்னணிகளில் மனிதன் எப்படியெல்லாம் இயங்க வேண்டும் என்பதற்கான வரையரையைத் தேடித் தருவது. பிற உயிரினங்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டு இரக்கப்பட்டு, அவைகளை நீக்கிட விரைவிட மட்டுமின்றி, அதைவிட மிகப்பெரிய பரந்துபட்ட ஒரு நெகிழ்ச்சியும் மனிதநேயம் ஆகும்."[18] மேலும், மனிதர்களிடையே காணப்படும் நற்பண்புகளின் மூலமாகவே மனிதநேயத்தின் தரத்தினை மதிப்பிடலாம். நாம் பிற உயிர்களிடத்திலும் கருணை காட்டுவது, நன்றி மறவாமை, உண்மை, நியாயம், நேர்மை, ஒழுக்கம், சகிப்புத்தன்மை, பொறுமை போன்ற எண்ணற்ற குணங்களைப் பட்டியலிடலாம். மனிதநேயத்தைப் பற்றி,

> "மனிதாபிமானம் என்பதற்கு, மனிதாபிமானம் என்பது, துன்பத்தில் உழலும் மக்கள் மீது கருணை காட்டுவதோ, அவர்களுக்காகப் பரிந்துரைப்பதோ, ஒப்பாரி வைப்பதோ அல்ல, பிரச்சனைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்காக ஒப்பற்ற ஆற்றல் அம்மக்களிடம் உண்டு என்ற அசையாத தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்குப் பல வழிகளையும் காட்ட வேண்டும்."[19]

மேலும்,

"எல்லா மனிதர்களிடத்தும் மனிதநேயம் என்பது மனத்தின் ஓரத்தில் இருந்து கொண்டே தான் இருக்கும். அது வெளிப்படும் இடமும், வெளிப்படுத்தும் விதமும் வெவ்வேறாக இருக்கும்"[20] என்பது ப.தமிழரசியின் கூற்று. இது மட்டுமின்றி பா.குழந்தைசாமி என்பவர்,

> "மனிதனை மனிதன் மதித்து, அவனுடைய உரிமைகளைப் பாராட்டி, அவனுடைய முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்டு, இடரகற்றி அவனை உயர்நிலைக்கு உயர்த்தும் பண்பே மனிதநேயம்"[21] என்று கூறுகிறார்.

இத்துடன் மனிதநேயம் குறித்து நாம் சிந்திக்கும் போது பின்வரும் கருத்துகள் பெறப்பட்டுள்ளன.

மனம் என்பது எண்ணிப் பார்க்கும் ஆற்றல் கொண்டதாகும். சலனமற்ற வாழ்க்கைக்குத் துணைபுரிவது மனமாகும். மனிதன் என்ற சொல்லானது மனம் என்ற வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். இத்தகைய மனதை உடையவன் தான் மனிதனாகின்றான். மனதில் பலவகை எண்ணங்கள் தோன்றினாலும் நல்ல எண்ணங்களே ஒருவனை மனிதனாக்குகின்றன. பிறவிகளில் சிறந்த பிறவி மனிதப்பிறவியாகும். இந்தப் பிறப்பு சிறப்பாக அமைவதற்கு மனமே மூலகாரணமாக அமைகின்றது. எந்த ஒரு மனிதனுக்கும் மனமானது வலிமையானது, அந்த மனதை முழுமையாகப் பயன்படுத்தும் போது வாழ்வில் வெற்றி பெற முடியும்.

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்”**[22]

எல்லா உயிர்களுக்கும் பிறப்பு என்பது பொதுவான ஒன்றாகும். ஆனால் ஒருவன் செய்யும் தொழிலினுடைய உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை. மனிதநேயம் என்ற சொல் பொருள் ஆழமிக்கது, மனிதநேயம், மனிதப்பற்று, மானுடம், மானிடம், மனிதாபிமானம், மானிடப்பற்று, மனிதத்தன்மை என்ற சொற்கள் இருபதாம் நூற்றாண்டில் “மனிதம்” என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. பிறரிடம் கொள்கின்ற அன்பு, நட்பு, கருணை, இரக்கம் போன்றவற்றை உள்ளடக்கியதே மனிதநேயம் ஆகும். சுயநலமின்றிப் பிறர் பயன்நோக்கி செய்கின்ற செயலினையே இது பரந்த நோக்கில் சுட்டி நிற்கின்றது.

“அன்பு என்பது விலைமதிக்க முடியாத அணிகலன், உயர்ந்த பண்பு , இந்த அன்பு தான் உலகின் அச்சாணி. இதன் பிடியில் அகப்படாதோர் இல்லை. இறைவனே அன்புக்கு கட்டுப்பட்டவன் தானே”அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே” என இறைவனை வள்ளலார் போற்றுகின்றார். அன்பு இல்லாத இடமே இல்லை. அனபினைத் தான் நாம் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லையே? புரிந்து கொண்டால் உலகம் சொர்க்கமாகிவிடுமே”[23] என்னும் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

> மேலும், அன்பு, நட்பு, கருணை, கனிவு, பக்தி, காதல், வீரம், போன்ற பண்புகளே மனிதனுக்குப் பெருமை சேர்ப்பவை. இப்பண்பு நலன்களையே மனிதநேயம் என்கிறார் சீனி.திருநாவுக்கரசு.[24]

மேலும், மனிதநேயம் சிறப்பதற்கு எது அடிப்படை என்று சிந்திக்கிறார். வ.இராசகோபாலன். “மனித குல ஒருமைப்பாட்டைக் காண்பதற்கு மனித இனத்தின் மனம் தான் அடிப்படை. மனம் திருந்தின் இனம் திருந்தும். இனம் திருந்தின் உலகமே திருந்தும். அப்போது தான் மனிதநேயம் சிறக்கும்.”[25] என்பவர் கருத்தாகும். சிந்தனைகளோடு செயல்திறனும், உணர்ச்சிகளோடு உழைப்பாற்றலும் ஒருங்கிணைந்து நடைபோட்டால் தான் அன்பும் இன்பமும் அமைதியும், நிறைந்த சமுதாயத்தை உருவாக்க இயலும். இதனையே “சிந்தையும் தோளும் சேர்வது மனிதம்”[26] என்று சுருங்கச் சொல்கிறார் வா.செ. குழந்தைசாமி.

மக்களிடம் நம்பிக்கை ஊட்டுவதற்கும், எதிர்காலச் சிந்தனையை உருவாக்குவதற்கும், நிகழ்காலச் சமுதாயம் அச்சமின்றி வாழ்வதற்கும், வருங்காலச் சமுதாயம் நன்முறையில் அமைவதற்கும்"[27] உதவுவதே மனிதநேயம் ஆகும்.

"உலகம் போரின்றி வாழவும், உலக மக்களிடையே அன்பு தழைக்கவும், ஏற்றத்தாழ்வுகள் இல்லாதொழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழிவகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனிதநேயம்"[28]

உலக நலம் நாடும் நோக்கு மனித மாண்பின் ஊற்றுக்கண்ணாகிறது என்பது இவ்விளக்கத்தால் புலனாகிறது.

மனிதர்களை நேசிப்பது மட்டுமே மனிதநேயமாகாது, மன்னுயிர் அனைத்தையும் நேசிக்கும் அருளுறை ஆன்மீக ஆற்றலே மனிதம் ஆகும்.

**மனிதநேயத்தின் இயல்புகள்**

இது தண்ணீரைப் போலக் குளிர்ச்சியையும் தென்றலைப் போல இன்பத்தையும் தரவல்லது. மனிதனை வாழவைக்கும் ஆற்றல் மனிதநேயத்திற்கு உண்டு. மனிதநேயப் பண்புகள் பிறரிடம் கொடுக்கக் கொடுக்க குறையாது வளரும் தன்மையுடையது.

"மனதில் அன்பான எண்ணங்களைக் கொள்ளுங்கள். பிறகு உங்கள் நாயுடன், மாட்டுடன், குதிரையுடன் பழகிப்பாருங்கள். வாயில்லா ஜீவன்கள் என்று நாம் அழைக்கும் இந்த உயிர்களுடன் நம்மில் எத்தனைபேர் அன்னியோன்னிய நட்பு கொள்ள முடியும் என்பது விளங்கும்."[29] என்று அன்பின் சிறப்பினைப் பற்றி டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி கூறுகின்றார்.

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"[30]**

என்று திருக்குறள் சுட்டிநிற்கின்றது. ஆகையால் மனிதநேயம் வளர அன்பே சிறந்த வழியாகும். அன்பால் சாதிக்க முடியாத எந்தச் செயலையும் அதிகாரத்தாலோ, அடக்குமுறைகளாளோ சாதிக்க முடியாது என்பது திண்ணம்.

மேலும், அன்பு துன்ப நோய்க்கு மருந்தாகவும் இன்பம் உண்டாவதற்கு ஊற்றுக்கண்களாகவும் திகழ்கின்றன. அன்பானது அன்பு உள்ளம் கொண்டவர்களை மட்டும் மகிழ்விக்காமல் அவனைச் சார்ந்தோரையும் மகிழ்விக்கும் பண்புடையது. "சிறைச்சாலையை அறச்சாலையாக்கிய மணிமேகலையின் செயல்களும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று கூறுகின்ற இராமலிங்கஅடிகள் ஆருயிர்கட்கெல்லாம் நாம் அன்பு செய்ய வேண்டும் என இறைஞ்சுகின்ற செயலும் நினைவு கூரத்தக்கன. நேயத்தால் மிகச் சிறிய பொருளும் பெரிய மலையாகும். அது இல்லையேல் பெரிய மலையும் சின்னஞ்சிறிய அணுவாகும். மனிதநேயமுடையவன் செய்யும் தீமையும் நன்மையாகும். நேயமில்லான் செய்யும் நன்மையும் தீமையாகும்.

*நேயம் இன்றேல் இல்லறம் இல்லை, துறவறம் இல்லை, எவ்வித சிறப்பும் இல்லை, தூய்மையும் நற்கல்வியும் இல்லை, நல்லார் தொடர்பும் இல்லை, தானம் இல்லை, தருமம் இல்லை, தவமும் இல்லை, அழிவும் இல்லை, ஆக்கமும் இல்லை, ஏன்? எதுவுமே இல்லை என்கிறது பிரபுலிங்கலீலை."* [31]

*அனைத்திற்கும் ஆதிமூலமாக இறைவன் இருப்பதைப் போன்று உலக உயிர்களின் வாழ்க்கையில் அனைத்துமாக நின்று நிலைபெறுவது மனிதநேயமே என்பதை இக்கருத்துக்கள் பறைசாற்றுகின்றன.*

***மனிதநேயத்தின் பிறப்பிடம்***

*அன்பை உடன்பிறப்பாகக் கொண்டவன் மனிதன். முதன்முதலிலே குழந்தைப் பருவத்திலே பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் அன்னையிடம் அன்பு ஏற்படுகின்றது. பின்னர் ஒழுக்கம் பயிற்றுவிக்கும் தந்தையிடமும் கல்வியறிவூட்டும் ஆசிரியரிடமும் அன்பு விரிவாகின்றது. பின் சுற்றத்தாரிடம் அன்பு வளர்கின்றது. இத்தகைய தொடர்புடையாரிடம் கொண்ட அன்பே படிப்படியாக விரிவடைந்து ஏனையோரிடமும் நேசிக்க வைக்கும் ஆற்றலாய் அடிப்படை உணர்வாகக் காணப்படுகிறது. அன்பினால் வாழும் ஒத்த உயிரினங்கள் மட்டுமல்ல, மற்றைய இனங்களும் அன்பால் பிணைந்தே வாழ்கின்றன. மேயச் சென்ற பசு கன்றை நினைத்து அழைத்த வண்ணம் மாலையில் மீளுகின்றது. கூட்டிலுள்ள குஞ்சுகளுக்குத் தாய்ப் பறவைகள் இரையை வாயில் கவ்விச் சென்று ஊட்டுகின்றன. குட்டியைச் சுமந்தபடி குரங்குகள் மரத்திற்கு மரம் தாவுகின்றன. புலி, சிங்கம் போன்ற அச்சம் தரும் விலங்குகள் கூட இயற்கையாகவே ஒருவித அன்பினால் பிணைக்கப்பட்டு வாழ்கின்றன.*

*பாலைவனத்தில் வெம்மையில் வாழும்போது அன்பு நெஞ்சங்கள் சுடர்விட்டு வாழ்வதைத் தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. வெய்யிலில் நிழலின்றி வாடும் பெண்மானுக்கு ஆண்மான் தன் நிழலைத் தந்து நிற்கின்றது. நீர்த்தேக்கத்தில் தேங்கியுள்ள கலங்கிய நீரை முதலில் பிடிக்கு ஊட்டிய பின்னரே களிறு குடிக்கின்றது. இத்தகைய அன்போவியங்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.*

*தமிழில் தோன்றியள்ள சங்க புறஇலக்கியங்கள் பெரும்பாலானவை மனிதகுல மேம்பாட்டுச் சிந்தனைகளையும், செயல்பாடுகளையுமே குறிக்கோள்களாகக் கொண்டு விளங்குகின்றன. காலக்கண்ணாடியாகவும், கருத்துப்பேழைகளாகவும் விளங்கும் அவ் இலக்கியங்கள் மனித இனத்தின் ஆவணங்களாகவும் திகழ்கின்றன. முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை முறைகளைக் காட்டுவதுடன் நில்லாது, நாம் வாழவேண்டிய நெறிமுறைகளையும் எடுத்தரைக்க தூண்டும் வழிகாட்டிகளாகவும் செயல்படுகின்றன.*

*இனி சங்கப்புற இலக்கியங்கள் காட்டும் மனிநேயம் குறித்துத் தொகுத்து ஆராய்வோம்.*

**சங்க இலக்கியங்கள்**

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம், சமயத்தின் நம்பிக்கை இயற்கை வாழ்வு உள்ளிட்டவற்றைக் கொண்டது அல்ல. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்னும் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. "இந்தியாவில் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளின் இலக்கியங்களுள் மிகப் பழமையானவை"[32] சங்க இலக்கியங்கள் என்பார் மு.வரதராசன். "சமுதாய வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது, தமிழினத்தின் இனக்குழு வாழ்க்கை அழிந்து, நிலவுடமைச் சமுதாயமாக மலரும் காலக்கட்டத்தில் விளைந்தவை சங்கஇலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் தமிழரது பண்பாட்டுச் சிறப்பினைப் பறைசாற்றும் இலக்கிய முரசங்களாக விளங்குகின்றன"[33] என்று சங்கஇலக்கியங்களின் சிறப்புகளைப் போற்றுகிறார் இராஜமுத்திருளாண்டி.

மேலும், மாந்தரின் அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் செம்மைப்படுத்தும் குறிக்கோளுடன் அகம், புறம் என்ற பாகுபாட்டுடன் திகழ்வது சங்க இலக்கியத்தின் தனிச்சிறப்பாகும். அகப்பாடல்களின் எண்ணிக்கையைவிடப் புறப்பாடல்களின் எண்ணிக்கை குறைவு. 2381 சங்கப்பாடல்களில் புறப்பாடல்கள் 581 இக்குறைந்த எண்ணிக்கைக் கொண்ட பாடல்களிலே தமிழர்களின் எண்ணற்ற பண்பாட்டு நிகழ்வுகளை எடுத்தியம்பியிருப்பது சங்கச் சான்றோர்களின் தனித்தன்மையைக் காணமுடிகிறது.

இன்று உலக அரங்கினில் மனித பற்றானது பாரெங்கும் விரவி பரவியிருந்தாலும், மனித இல்லங்களிலும் உள்ளங்களிலும் மனிதநேயமானது பூத்துக் குளுங்கியிருந்தாளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இவ்வுலகுக்குச் சங்க இலக்கியங்கள் அனைவரும் போற்றத்தக்க வகையில் மனிதநேய அறக்கருத்துக்களை எடுத்துக்கூறிச் சென்றுள்ளது. மேலும், சங்கப்புலவர்கள் மன்னர்களுக்கும் மக்களுக்கும் மனிதநேயத்தைப் போதிக்கும் போதிமரங்களாகப் போதித்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

சங்க இலக்கியம் மனிதர்களைப் பாடுகின்றது. இயற்கையையும் மற்ற பொருள்களையும் பாடும்போது, மனிதர்களுக்காகவே மனிதநேயத்தை அன்றும் இன்றும் என்றும் இன்றிமையாததாக உள்ளது என்பதைச் சங்க இலக்கியம் புலப்படுத்துகின்றது.

**புறநானூற்றில் மனிதநேயம்**

இந்திரர்கள் அமிழ்தத்தையே இயைவதாயினும், தனக்கென வாழாமல் பிறர்க்கு என வாழும் தகைமை உள்ளவர்களாலேயே இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது என்பதைச் சங்ககால மக்கள் தம் வாழ்வியல் கூறுகளாகக் கொண்டு இருந்தனர். அவர்தம் வறுமையைப் போக்க வேண்டும் என்பதை எண்ணினர். மேலும் தம்மை நம்பி வந்தோரின் துன்பத்தைப் போக்கி அவரைக் கைவிடாமல் காக்கக்கூடிய இனிய

*தன்மையினைக் கொண்டிருந்தனர். சங்க இலக்கியத்தில் தொடங்கி பிற்கால இலக்கியங்கள் வரை மனிதநேயம் குறித்த செய்திகள் காணக்கிடைக்கின்றன.*

*அறவோர்க்கு அளிக்க நினைக்கும் கண்ணகியை இவ்வடிவில் நோக்கலாம். மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டியும் உயிரும் கொடுத்த மாதவியும் மனிதநேயத்தின் மாண்பினைக் கட்டிக்காக்கும் மாந்தராக நிற்கின்றனர்.*

*பக்தி இலக்கியங்களை நோக்கும்போது அதில் மக்கள் அனைவரும் கொடிய பஞ்சத்தில் சிக்கியபோது, கனவில் வந்த இறைவன் இருவருக்கும் பொருள் கிடைக்க வழி செய்ய திருஞானசம்பந்தர் பசி தீரவே பாடி மக்களின் பசித்துயர் நீக்கப்பாடுபட்டது நேயத்தின் தொடர்ச்சியே ஆகும்.*

*அதற்கு அடுத்ததாகப் பசிப்பிணி அழிக்க ஆருயிர்களுக்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்த வள்ளலார் மனிதநேயத்தின் தலைமைப் பதவியில் வைத்தெண்ணலாம். அதற்கு அடுத்ததாகப் பாரதியார் தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் என்று கூறி, காக்கைக் குருவி எங்கள் ஜாதி என்று கருதினர். அதனைத் தொடர்ந்து அப்பாதையில் பயணித்து “மானிட சமுத்திரம் நானென்று கூவு” என்று கூறியதை நோக்கலாம். எனவே அன்று முதல் இன்று வரை கவிஞர்கள் தம் கவிதையில் மனிதநேயத்தை வலியுறுத்தி வந்தமை நோக்கத்தக்கதாகும். இதிலிருந்து மானிடம் போற்றும் சமுதாயம் கண்டிப்பாக உயர்ந்து விடும். மானுடத்தை மதித்தல் என்பது அச்சமூகம் உயர்வதற்கான முதற்கட்ட அறிகுறி ஆகும்.*

*மனித உள்ளம் அன்பிற்காகவே படைக்கப்பட்டது. அன்பினாலேயே வாழ்கிறது. அன்பைப் பெறுவதும், அன்பை வழங்குவதும் இதன் அன்றாட வழக்கம். இதனை அருகி விடாமல் காப்பதே மனிதநேயம் ஆகும். இந்த மனிதநேயம், தாய்,தந்தை, தங்கை, கணவன், மனைவி என வரும் குடும்ப உறவுகளில் மனிதநேயம் இருந்துள்ளமையை இனி காணலாம்.*

*உண்பவற்றையும் உடுப்பவற்றையும் காரணம்காட்டி, மதம்,சாதி ஆகியவற்றால் அடிமைப்பட்டு பிளவுபட்டு வாழும்நிலை மாறி ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் மலர மனிதநேயம் துணை செய்வதே ஆகும். இந்த மனிதநேயம் வளர்வதற்கு அன்பு ஒன்றே அடிப்படை ஆகும். அன்பென்பது இயற்கையாகவே மனித மனத்தில் அமைந்த ஒரு பண்பாகும். இதனை நன்கு வளர்ப்பவன் மட்டுமே மனிதனாக முடியும். அன்பில் துவங்குகின்ற குழந்தைப் பருவ வாழ்வு வளர்ந்து வடிவெடுக்கும் போது அது சமுதாயத்திற்கு முக்கியத் தகுதியுடைய அன்பாகிறது.*

***இல்லறம்***

*குடும்பவாழ்வு குறித்துத் தமிழர்கள் மிக உயர்ந்த நோக்கத்தைக் கொண்டிருந்தனர். எனவேதான்* ***“இல்லறமல்லது நல்லறமன்று”*** *என்று ஆன்றோர்கள் கூறியமை இவண்சுட்டத்தக்கது. சமுதாய உயர்வுக்கு இனிமையான இல்வாழ்வு முதல்*

நிலையாகும். இந்த இல்லறத்தைச் சங்கமக்கள் அறம் என்று மதித்தனர். வாழ்க்கை முழுவதுமே அறம் உடையதாகும். அன்பு தியாகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இல்வாழ்க்கை மனிதன் தல்னலமின்றி மனிதநேயமிக்க நல்ல பண்பாளனாக வாழ வகுக்கிறது. இனிய முறையில் நடத்தப்படும் இல்வாழ்க்கை சங்ககாலத்தில் மிகச்சிறந்த வாழ்வாகக் கருதப்பட்டது. மேலும், மண்ணுலகின் நிலைபேற்றிற்கு இல்வாழ்வே காரணமாகும்.

**வீட்டுத் தலைமை**

ஒரு குடும்பம் என்பது அத்தலைமையின் பாற்பட்டது. 'இல்லறம்' என்பதற்கு பெண்ணின் பொறுப்பாக இருந்தது. குடும்பக் கடமையினை, வீட்டுப் பொறுப்பினை பழந்தமிழர் பெண்ணிற்கு வழங்கி பெருமை பெற்றனர். இல்லாள், மனையோள் /மனைவி முதலிய சொற்களுக்கு நேரான ஆண்பால் தமிழ்ச் சொற்கள் இல்லை. மேலும் மகவைப் பெற்றத்தருவதும், ஆண், பெண் இருவருள் பெண்களுக்கே பொறுப்பு அதிகமாகும். மகவை பெற்றுக் கொள்ளும் பெண் குடும்பத்தைச் சுமப்பது எளிய ஒன்றாகும்.

இத்தகைய இல்லறத்தை ஏற்று நடத்திய பெண்கள் வாழ்வின் ஒவ்வொரு சூழலையும் மிகச் சாதுர்யத்துடன் கையாண்டு, உயர்ந்த நிலையை அடைகின்றனர். ஒரு மனிதன் பிறக்கும்போது அவனுக்கு எவ்விதமான கட்டுப்பாடுகளும் இருப்பதில்லை. காலம் செல்லச் செல்லப் பல்வேறு கட்டுப்பாடுகள் அவனை வந்தடைகின்றன. இத்தகைய கட்டுப்பாடுகளுள் ஒன்றான குடும்ப அமைப்பு சமூகத்தின் நலனுக்காக, ஆழ்ந்த, நுண்ணிய கட்டமைப்புகளைப் புலப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. நுண்ணிய இந்தக் குடும்ப அமைப்பு இல்லையெனில் வாழ்வில் நாம் பல்வேறு துன்பங்களை அனுபவிக்க நேரிடும். சான்றாக கடந்த இருவாரங்களுக்கு முன்னர் (டிக்டாக்) என்னும் செயலிமூலம் தன்னுடைய எச்செயலையும் படம் பிடித்து வெளியிடும் சிறப்பு உண்டு. அவ்வகையில் அப்பெண் காதல் பாடல்களை அரைகுறை ஆடையில் பாடி பிறருடைய கவனத்தை ஈர்த்துள்ளார். பின்னர் அவருக்குச் சமூக வலைதளங்களில் பல்வேறு தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. பின்னர் அவருடைய பெயரில் பணம்கேட்டு பலர் ஏமாற்றுவதாக அப்பெண் காவல்துறையில் பதிவிட்டுள்ளார். இப்பெண்ணின் செயல் சமூகத்தின் ஒழுக்கத்தைப் பாதிக்கிறது. இப்பெண் சரியான குடும்ப அமைப்பில் இருந்தால், இச்செயல் நடைபெற்றிருக்காது. சமூக அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதற்குச் சரியான குடும்ப பின்புலம் இல்லையென்பதை எடுத்துக்கூறலாம்.

ஒரு சமுதாயத்தினர் சிறந்த நாகரிகம் மற்றும் பண்பாடு பெற்று வாழ்ந்திருந்தனர் என்பதற்கு அவர்களுடைய குடும்ப அமைப்பு தான் காரணமாகும். வீட்டில்நலமான வாழ்வு பெறாத எவரும் வெளியில் சிறந்த நிலையை, உயர்ந்த இடத்தைப் பெற்றதில்லை எனலாம். இதன் மூலம் குடும்ப அமைப்பின் முக்கியத்துவம் உணரப்படும்.

*“சங்க நூல்கள் குறித்துச் சங்க நூல்கள் சாதி, மதம், கட்சி முதலிய பிரிவுகள் இல்லாத இயற்கையான நூல்கள் இவ்வுலக வாழ்வு நோக்கித் தோன்றிய பண்பு நூல்கள்”*[34] *என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.*

*இவ்வாறு சாதி வேறுபாடுகள் இல்லாமைக்குக் காரணங்கள் அம்மக்களின் உழைப்பே ஆகும். அவர்கள் தங்களைப் போன்றே மனிதன் நலமாக வாழவேண்டும் என்னும் உயரிய நோக்கில் வாழ்ந்து வந்தனர்.*

*அப்போது நில அடிப்படையிலேயே மக்களின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது. இது இயற்கையோடு இயைந்த வாழ்வாக இருந்தது. இவ்விலக்கியங்களில் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாமல் ஊரன், நாடன் என்ற திணைப் பெயர்கள் சுட்டப் பெறுகின்றன. இவ்வாறான பலமான சமூக அமைப்புகள் இருந்த நம் மக்கள் பிறர்நலத்திற்காகப் பொருளைத் தேடியுள்ளனர்.*

***பிறருக்காகப் பொருள் தேடல்***

*இத்தகைய இல்வாழ்க்கையில் அமைந்த எவரும் வறுமையில் வாடிய எவருக்கும் உதவி செய்தனர். இது இல்லறத்தாரின் கடமையாகவே கொள்ளப்பட்டது. இதனை,*

***“மனைவயின் இருப்பவர் மன்னே துனைதந்து,***
***இரப்போர் ஏந்து கை நிறைய, புரப்போர்***
***புலம்பு இல் உள்ளமொடு புதுவ தந்து உவக்கும்***
***அரும் பொருள் வேட்டம் எண்ணி,”*** [35]

*என்ற பாடலின் வழி அறியலாம். அதேபோல் தம்மிடம் வந்து இரப்போர்க்குக் கைநிறையப் பொருள்தர வேண்டும் என்ற நோக்குடன் தலைவன் சென்றதனால் அப் பிரிவினால் வந்த துயரைப் பொறுப்பதாகத் தலைவி தோழியிடம் உரைக்கின்றாள். இதனை,*

***“பிறர்க்கு என முயலும் பேர் அருள் நெஞ்சமொடு***
***காமர் பொருட் பிணி போகிய***
***நாம் வெங் காதலர் சென்ற ஆறே”.*** [36]

*என்ற பாடல் வரியில் அறியலாம்.*

***நடத்தையில் நேயம்***

*தாம் வாழ்கின்ற சமுதாயத்தோடு ஒன்றி வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தனர். எனவே தான் உழைப்பாளர் பற்றியச் சிந்தனையாக,*

***“நாடா கொன்றோ ; காடா கொன்றோ;***
***அவலா கொன்றோ ; மிசையா கொன்றோ;***
***எவ்வழி நல்லவர் ஆடவர்,***
***அவ்வழி நல்லை ; வாழிய நிலனே.”*** [37]

*என்ற பாடலில் ஔவையார் உழைக்கும் மக்களே ஒரு நாட்டிற்கு வேண்டும். என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு நாட்டு மக்களின் அறிவாற்றலினாலேயே உயர்வும், மதிப்பும் பெற முடியும் கடுமையான உழைப்பினாலேயே உயர்வு கிடைக்கும். எக்காலத்திலும் நாட்டுநிலையை நன்கு அறிந்த அறிவாற்றல் மிக்க மகளிராலேயே வீடும் நாடும் உயரமுடியும். சங்க காலத்தில் நாட்டு உயர்வினைப் போற்றும் மக்கள் வாழ்ந்து இருந்தனர் என்பதை இதன் வழி உணரலாம்.*

***நல் மகன் – நாடு காப்பதற்கே***

*பெண்கள் மகனை ஈந்ததே நாட்டினைக் காப்பதற்கே என்பதைப் புகழ் பெற்ற பாடலான,*

***"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;***
***சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;***
***வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;***
***நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;***
***ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்***
***களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"[38]***

*விளக்குகிறது.*

***நாட்டின் மீது நேயம்***

*சங்கப்பெண்கள் தம் கணவன் போல, தன் பிள்ளை சமுதாயத்தில் வல்லவனாகச் சிறந்த மறவனாக வர வேண்டும் என்பதை.*

***"கன்றிய தெவ்வர் கடந்து களம் கொள்ளும்***
***வென்றி மாட்டு ஒத்தி பெரும"[39]***

*என்னும் பாடல் உணர்த்தி நிற்கின்றது. இதற்கு நிறைய பாடல்களைச் சான்றாகக் காட்டலாம். தன் மகன் போரில் நெஞ்சில் காயம்பட்டு இறக்க வேண்டும் என்று கூறிய தாய். தன் நாட்டின் மீதான நேயத்தை வெளிப்படுத்துகிறார். இதனை,*

***"......................................முதியோள் சிறுவன்***
***படைஅழிந்து மாறினன் என்று பலர் கூற,***
***மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்டஎன்***
***முலைஅறுத் திடுவென், யான் எனச் சினைஇக்,***
***கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்,***
***செங்களம் துழவுவோள், ,,............................"[40]***

*என்ற பாடல் உணர்த்தி நிற்கிறது. நாட்டின் நலனுக்காக நாட்டில் ஏற்படும் போரில் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களை இழந்தும் நாட்டின் மீதுள்ள நேயம் சிறிதும் குறையாப் பெண்ணைக் காண்கிறோம்.*

***“மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை,***
***யானை எறிந்து, களத்துஒழிந் தன்னே;***
***நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்,***
***பெரு நிரை விலங்கி, ஆண்டுப்பட் டனனே;***
***இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,***
***வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித்து உடீஇ,***
***பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,***
***ஒருமகன் அல்லது இல்லோள்,***
***செருமுக நோக்கிச் செல்க என விடுமே!”*** [41]

*என்ற பாடல் மூலம் மகனை, தந்தையை, தமையனை நாட்டிற்கு அனுப்பும் உயர்ந்தப் பெண்ணைக் காண்கிறோம். இது பெண்கள் நாட்டின் மீது வைத்த உயர்ந்த நேயத்தைச் சுட்டுவதாக அமைகிறது. மேலும்,*

***“என்திறத்து அவலம் கொள்ளல், இனியே;***
***வல் ஆர் கண்ணி இளையர் திளைப்ப,***
***நாகாஅல் என வந்த மாறே, எழாநெல்***
***பைங் கழை பொதி களைந்தன்ன விளர்ப்பின்,***
***வளைஇல், வறுங் கை ஓச்சி,***
***இளையுள் ஒய்வலோ? கூறு நின் உரையே!”*** [42]

*என்ற பாடல்வழி அறியலாம். நானும் மற்றவரைப் போன்றவன் அன்று என்று உரைப்பது போல போர்க்களத்தில் மாண்டது உன் சிறப்பு. நம் சுற்றத்தாரை அழைக்கும் வரை என்னுயிர் தாங்குமா? என்று வருந்தும் இளம் மனைவியின் மனநிலையை இது உணர்த்தி நிற்கிறது. மேலும், நாட்டின் மீதான நேயத்தில் பெண்கள் தங்களின் கணவர்களை நாட்டிற்காக அனுப்பி வைத்து அவர்களை இழந்த நிலையைச் சுட்டுகிறது.*

***“ஐயோ! எனின் யான் புலி அஞ் சுவலே;***
***அணைத்தனன் கொளினே, அகன் மார்பு எடுக்க வல்லேன்!***
***என்போல் பெருவிதிர்ப்புறுக, நின்னை***
***இன்னாது உற்ற அறன் இல் கூற்றே!***
***நிரை வளை முன் கை பற்றி***
***வரை நிழல் சேர்கம் - நடந்திசின் சிறிதே”*** [43]

*மேலும்,*

***“கலம்செய் கோவே கலம்செய் கோவே!***
***அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய***
***சிறுவெண் பல்லி போலத் தன்னொடு***
***சுரம்பல வந்த எமக்கும் அருளி,***
***வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி***
***அகலிது ஆக வனைமோ”*** [44]

*என்ற பாடலில் நாட்டின் மீது நேயம் கொண்ட ஆண் இறந்துவிட தனக்கும் ஈமத்தாழியில் இடம் வேண்டுமென கேட்கும் பெண்ணைக் காண்கிறோம்.*

மேலும்,

**"நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்;**
**பாகுவல் இட்ட புன் காற் பந்தர்ப்**
**புனல் தரும் இள மணல் நிறையப் பெய்ம்மின்-**
**ஒன்னார் முன்னிலை முருக்கிப், பின் நின்று;**
**நிரையோடு வரூஉம் என்னைக்கு**
**உழையோர் தன்னினும்பெருஞ் சாயலரே."** [45]

என்ற பாடல் தலைவனோடு சென்ற வீரர்களையும் பெருமைப் படுத்துகிறாள் தலைவி. இதனை,

**"நிரை இவண் தந்து, நடுகல் ஆகிய**
**வென் வேல் விடலை இன்மையின் புலம்பி"** [46]

என்ற பாடல் வரிகளில் அறியலாம்.

**நேயத்திற்கு நன்றி**

போரில் இறந்துபட்ட வீரர்களைப் பெருமைப்படுத்தும் முறையில் நடுகல் நட்டு அவனின் நினைவினைப் போற்றினர். இக்கருத்தினைப் பல்வேறு பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

**"கொல் புனல் சிறையின் விலங்கியோன் கல்லே".** [47]

**"அணிமயிற் பீலி சூட்டிப், பெயர்பொறித்து**
**இனிநட் டனரே……"** [48]

**"பல்லான் கோவலர் படலை சூட்டக்**
**கல்ஆ யினையே கடுமான் தோன்றல்"** [49]

**"பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல் "** [50]

**"நடுகல் கை தொழுது பரவும், ஒடியாது"** [51]

மேற்கண்ட பாடல்கள் நடுகல் வழிபாடு செய்யும் ஆண்களின் நாட்டுப் பற்றினை விளக்கி நிற்கின்றன. இவ்வாறு புலவர்கள் தங்கள் பாடல்களில் மனிதநேயத்தைச் சுட்டியுள்ளமை இவண் சுட்டத்தகும்.

**நன்றி மானுட நேயத்தினும் மேம்பட்ட வடிவ வெளிப்பாடு**

மானுட நேயம் அல்லாத செயல்களையும், மிக உயர்ந்த மானுட நேயச் செயலையும் குறிக்கும் ஒரு பாடல் புறம் 34. அதைப் பாடியவர் ஆலத்தூர் கிழார் (இயன்மொழித்துறை, பாடாண்திணை). ஒரு பாணர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் இயல்பைப் பாடுவது போலப் பாடுகிறார். அந்தப் பாடலில் அறநூல் சொல்லிய அறக்கருத்துக்களை, மானுட நேயக்கருத்துகளை, ஜீவ நேயக் கருத்துகளை,

*மானுட நேயக் கருத்து அல்லாத செயல்பாடுகளைச் சொல்லி அந்த எல்லாச் செயல்களை எல்லாம் விடச் சிறந்தது நன்றி மறவாமை என்பதைச் சொல்லும் பாங்கில் மானுட நேயத்தின் மேன்மையை அறிந்து கொள்ளும் வகையில்,*

> ***"ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்***
> ***மாண் இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்***
> ***பார்ப்பார் தப்பிய கொடுமை யோர்க்கும்***
> ***வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என***
> ***நிலம் புடை பெயர்வது ஆயினும் ஒருவன்***
> ***செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் என***
> ***அறம் பாடிற்றே"*** [52]

*என்று நன்றி மறவாமை என்பதன் அடிப்படையே மானுட நேயம்தான். இதனையே வள்ளுவர்,*

> ***"உதவி வரைத்தன்று உதவி உதவி***
> ***செயப்பட்டார் சால்பின் வரைத்து"*** [53]

*என்கிறார். இந்த சால்புதான் மானுட நேயத்தின் அர்த்தம். இந்த நேயம் எப்படி வரும்? வெட்டிக்கு வெட்டியாளனாகவோ, வீணான சிந்தனையாளனாகவோ, பொறுப்பில்லாகவனாகவோ ஒருவன் இருந்தால் அவனிடம் மனிதநேயம் எங்கே இருக்கும்? உதவி செய்பவன் சால்புடையவன். மனிதநேயம் உடையவன். ஆனால் யாருக்குச் செய்ய வேண்டுமோ அந்தத்தகுதி உடையவர்க்கே செய்ய வேண்டும். மானுட நேயம் உள்ளவனுக்குத்தான் செய்ய வேண்டும். மானுட நேயத்தின் இன்னொரு வடிவம் நன்றி. அறநூல் கூறுவதாக ஆலந்தூர் கிழார் கூறிய 'ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென' என்ற அடிகள் வலியுறுத்துகின்றன என்பது அறியலாகிறது.*

***பண்ணனின் ஈகை (புறநானூறு)***

*ஈகையின் விளக்கம் குறித்து அகராதிகள் தரும் பொருளினையும் அறிஞர்களின் கருத்தினையும் முன்னரே இரண்டாம் இயலில் கண்டோம். இருப்பினும் பண்ணனின் ஈகை குறித்து காண்பதால் இங்கு ஈகை குறித்து விளக்கம் பெறுவது சுட்டத்தக்கது. வறுமையால் இரந்துவந்து கேட்பவர்க்கு இல்லை என்று சொல்லாது கொடுத்தல், கொடிய வறுமைக்கண் பசி தீர்க்கும் உணவைக் கொடுப்பது ஈகை எனப்படும். அது வறுமையான் இழிந்தோனுக்குப் பொருளாலும் அருட்குணத்தாலும் உயர்ந்தோன் கொடுக்கும் கொடையாம். வறியராய் ஏற்றார்க்கு எதிர் ஈடு எதுவும் கருதாமல் ஈவது. ஒப்புரவு உலக நடையை அறிந்து, அனைவர்க்கும் பயன்படும் வகையில் பொதுக்கொடை வழங்குவதையும் பொதுநலத் தொண்டு ஆற்றுவதையும் குறிக்கும்; ஈகை வறியவர்க்கு ஒன்று ஈவதைச் சொல்வது.*

*'இல்லை' என்று வருபவர்க்கு 'இல்லை' என்று கூறாது, அவரது பசிப்பிணி தீர்க்கும் அறச்செயலே ஈகையாகும். ஒரு பொருளும் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்துதவுவதை அது குறிக்கும். மற்றவர்க்குக் கொடுப்பது எல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையுடையது. பசி தீர்த்தல் என்ற அறத்தை வள்ளுவர் இன்றியமையாத குணமாகக் கருதுகிறார். 'பசி என்னும் தீப்பிணி' 'அற்றார் அழிபசி' என்ற தொடர்களால் பசியைக் குறிப்பிட்டார். சங்க காலத்திலும் சிறுகுடி பண்ணன் போன்ற வண்மையாளரைப் புலவர் 'பசிப்பிணி மருத்துவன்' என்று கூறிப் புகழ்ந்தனர். அக்காலத்தில் பகிர்ந்துண்ணல், கொடை, பரிசில், உணவிடல் என்ற பலநிலைகளில் சமூக வழக்கிலிருந்த ஈகை, குறள் காலத்தில் வறியவனின் பசி தீர்த்தல் என்ற பொருளில் இறுக்கம் பெற்றது என்பர். விருந்தோம்பல் என்பதும் அன்று ஈகையைச் சார்ந்ததாகவே கருதப்பட்டது என அறிகிறோம். ஈகை என்பது தனி உயிர்த் துன்பம் நீக்கும் சிறப்புக் கொடை.*

*புகழ் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் 'ஈதல் இசைபட வாழ்தல்' என்று ஈதலால் புகழ் பெறலாம் என்று ஈகையைப் புகழோடு இணைத்துச் சொல்வார்.*

*ஈகை என்று வள்ளுவர் சிறப்பித்து உரைப்பது வயிற்றீகை. அது இயல்பூக்க நிலையில் உண்டாவது. இல்லை என்ற துயரை எடுத்துரைக்கும் முன்பே கொடுக்கப்படுவது. அது எதையும் எதிர்பார்த்துச் செய்வதில்லை. 'இம்மைச் செய்தது மறுமைக்காம்' என்று புதிதாய் அன்று கூறப்பட்ட வினைக் கொள்கையைப் புலவர் மரபு ஏற்றதில்லை.*

***"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்***
***அற விலை வணிகன் ஆஅய் அல்லன்;***
***பிறரும் சான்றோர் சென்ற நெறி என"*** [54]

*(ஆங்குப் பட்டன்று, அவன் கைவண்மையே, ஆய் அறம் செய்யும் வணிகம் அல்லன். தன் பணத்தை இந்த உலகில் முதலீடு செய்து மறு உலகில் அதன் ஊதியத்தைப் பெறுவதில்லை. சான்றோர்களின் மரபார்ந்த வழியில் அவன் வாரி வழங்குகின்றான்) என்று சங்கப்புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் முழங்கினார். அறம் அறத்திற்காகச் செய்யப்படவேண்டும். ஈகை ஈர உள்ளத்துடன் ஈகைக்காகச் செய்யப்படுவது.*

*வறியவர்க்குக் கொடுப்பதில் ஒரு மகிழ்ச்சியான இன்பம் இருக்கின்றது; இதை ஏன் ஈயாதவன் உணர்வதில்லை என வியக்கிறார் வள்ளுவர்.*

*ஈயாமல் செல்வத்தைச் சேர்த்து வைப்பவர் இகழப்படுகிறார். நிரப்பிய உணவைத் தனித்து உண்பது, இரப்பதைவிட பார்வைக்கு அருவருப்பானது எனச் சொல்லப்படுகிறது. சாதலை எவரும் விரும்புவதில்லை; ஆனால் கண்முன் பசித்தவன் இருக்க அவன் துயர் தீர்க்க முடியாத நிலையில் சாதலை ஒருவன் விரும்பலாம் எனவும் கூறப்படுகிறது.*

***வாழ்க அவன் தாளே!***

*சங்ககால அரசர்கள் வீரத்தில் மட்டுமன்றிக் ஈகைப் பண்பிலும் சிறந்து விளங்கியவர்கள். குன்றாத செல்வம் படைத்த அவர்கள் தாம்சேர்த்த செல்வத்தைத் தாமே துய்த்திட விரும்பினரல்லர். தம்மை நாடி வந்த இரவலர்களுக்கு இல்லையெனக் கூறாது வாரி வழங்கியவர்கள். மேலும் "கொடை கொடையில் சிறந்து விளங்குவது உயர்ந்த பண்பாடாகப் போற்றப்பட்டது. கொடையென்பது அசைவியல் பொருளையும் அசையாப் பொருளையும் மறுபயனின்றித் தாமாகவே ஒருவர் மற்றொருவருக்கு மாற்றுதல்"[55] எனப் பொருள் குறிக்கிறது வாழ்வியல் களஞ்சியம். அந்த வகையில் கோவூர் கிழார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடிப் பரிசு பெற்றவர். அவன் மீது மிகுந்த அன்பு கொண்டவர். சிறுகுடி என்னும் ஊரில் பண்ணன் என்னும் வள்ளல் ஒருவன் இருந்தான். கிள்ளி வளவனும் பண்ணனும் நெருங்கிய நண்பர்கள். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன் சிறுகுடி" என்று அகநானூற்றுப் பாடல் 54-இல் பண்ணன் சிறப்பிக்கப்படுகிறான். கோவூர் கிழார் பண்ணன் மீதும் மிக்க அன்பு கொண்டவர். பின்வரும் பாடலில் கோவூர் கிழார் கிள்ளி வளவனின் நாட்டு வளத்தையும் பண்ணனின் ஈகையையும் புகழ்ந்து பாடிப் பாணன் ஒருவனைக் கிள்ளி வளவனிடமும் பண்ணனிடமும் ஆற்றுப்படுத்துகிறார்.*

***"தேஎம் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண!***
***கயத்து வாழ் யாமை காழ்கோத் தன்ன***
***……………………………………***
***………………………………………………***
***சிறுவெள் ளாம்பல் ஞாங்கர் ஊதும்***
***கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடிப்***
***பாதிரி கமழும் ஓதி ஒள் நுதல்***
***இன் நகை விறலியொடு மென்மெல இயலிச்***
***செல்வை ஆயின் செல்வை ஆகுவை***
***விறகு ஒய் மாக்கள் பொன் பெற்றன்னதோர்***
***தலைப்பாடு அன்று அவன் ஈகை***
***நினைக்க வேண்ட வாழ்க, அவன் தாளே"*** [56]

*தேன் போன்ற இனிய இசையை அளிக்கும் சிறிய யாழையுடைய பாண! குளத்தில் வாழும் ஆமையை வலிய கம்பியில் கோத்ததைப் போல் நூண்ணிய குச்சிகளால் பொருத்தப்பட்ட தெள்ளிய கண்ணையுடைய பெரிய கிணையைக் காட்டி "இதை இனிதே காண்க இங்கே சற்று இருந்து செல்க" என்று கூறும் முதுமையும் வாய்மையும் உடைய இரவலனே!*

*கிள்ளி வளவனின் நாடு தை மாதத்தில் தெளிந்த குளிர்ந்த நீரையுடைய குளம் போல் கொள்ளக் கொள்ளக் குறையாத உணவுப் பொருட்களுடைய அகன்ற பெரிய நகரங்களுடையது. அந்நாடு பகைவர்களால் தீக்கிறையாக்கப்பட்டதில்லை. அங்கு சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தீயை மட்டுமே காணமுடியும். கிள்ளிவளவன்*

*பசிப்பணியை நீக்குவதற்குத் தேவையான நீர்வளமும் நிலவளமும் மிகுந்த நல்ல நாட்டுக்கு அரசன். அவன் புகழை நினைவுகொள். நீ கிள்ளி வளவனை நோக்கிச் செல்லும் வழியில் நறுமணத்தை விரும்பும் வண்டுகள் வெண்ணிற ஆம்பல் மலர்களின் மேலே ஒலிக்கும் சிறுகுடி என்ற ஊரில் வள்ளல் தன்மை உடைய கையையும் ஈகையில் சிறந்தவனுமான பண்ணன் என்ற ஒருவன் உள்ளான். பாதிரி மணம் கமழும் கூந்தலும் ஒளிபொருந்திய நெற்றியும் உடைய உன் விறலியுடன் மெல்லமெல்ல நடந்து சிறுகுடிக்குச் செல்வாயானால் நீ செல்வந்தன் ஆவாய். பண்ணன் உனக்குப் பரிசுகளை அளிப்பான். பண்ணனின் ஈகை விறகு வெட்டப் போனவனுக்குப் பொன்கிடைத்ததைப்போல் தற்செயலாக நடைபெறும் நிகழ்ச்சி அல்ல நீ அவனிடம் பரிசு பெறுவது உறுதி. பரிசு கிடைக்குமா என்று நீ ஐயப்படத் தேவையில்லை. வாழ்க பண்ணனின் தாள்கள் என்று கூறுவதிலிருந்து பண்ணனின் ஈகைப்பண்பு புலப்படுகிறது.*

***பசிப்பிணி மருத்துவன் பண்ணன்***

*பசிப்பிணி மருத்துவன் சிறுகுடிகிழான் பண்ணனது இயல்பு பாராட்டப்படுகிறது. பஞ்சகாலத்தில் தன்னை நாடிவரும் பொருநனுக்கு அவன் நிலமையைக் கேட்டறிந்து அவனுக்கு வேண்டிய பொருளுதவிகளைச் செய்து, அவனுடைய துயரத்தைப் போக்கினான்.*

*கனிமரத்திலே பறவையினம் ஒலித்தல் போல பண்ணன் வீட்டில் ஊண் உண்பார் ஆரவாரம் கேட்கும். மழைக்காலத்தில் எறும்புகள் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தை நோக்கி செல்வதைப் போன்று பெரிய சுற்றத்தாரோடு குழவிகள் கையிலே குழவிகள் சோற்றைப் பெற்றுக் கொண்டு செல்வர். இத்தகு பசிபோக்குவோன் சிறுகுடிகிழான் பண்ணன். இவனது இல்லம் அருகில் உள்ளதா இல்லது சேய்மையில் உள்ளதா என்று பாணர்கள் கேட்டறிந்தனர் என்பதை,*

> ***"யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய***
> ***பாணர் ! காண்க இவன் கடும்பினது இடும்பை***
> ***யாணர்ப் பழு மரம் புள் இமிழ்ந்தன்ன***
> ***.......................................................***
> ***பசிப்பிணி மருத்துவன் இல்லம்***
> ***அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே"*** [57]

*என்ற பாடல் மூலம் அறியலாம்.*

*மேலும், வாள் போரில் வல்லவனாகிய வல்லார் கிழான் பண்ணன் தன்னை நாடி வரும் கலைஞர்களுக்குப் பரிசில் பல வழங்குவான். பாணரின் பசிக்குப் பகைஞன் ஆவான் என்று பின்வரும் புறநானூற்று பாடல் குறிப்பிடுகின்றது.*

> ***"மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்***
> ***கருங் கண் எயிற்றி காதல் மகனொடு***
> ***கான இரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்***
> ***பெருங் குறும்பு உடுத்த வன் புல இருக்கைப்***

***புலாஅ அம்பின் போர் அருங் கடி மிளை***
***வலா அரோனே வாய் வாட் பண்ணன்***
***உண்ணா வறுங் கடும்பு உய்தல் வேண்டின்***
***இன்னே சென்மதி நீயே சென்று அவன்***
***பகைப் புலம் படரா அளவை நின்***
***பசிப் பகைப் பரிசில் காட்டினை கொளற்கே"*** [58]

*அஃதாவது, ஊர்ப்பொதுவிடத்தில் உள்ள விளாமரத்திலிருந்த விளாம்பழம் அங்கிருந்த வீட்டின் முற்றத்தில் விழுந்தவுடன், கரிய கண்ணையுடைய மறக்குலப் பெண் ஒருத்தியின் அன்பிற்குரிய மகன் அதை எடுப்பதற்குச் செல்வான். காட்டில் வாழும் கரிய பெண்யானையின் கன்றும் அவனோடு அந்தப் பழத்தை எடுப்பதற்குச் செல்லும். இத்தகைய வளமான வல்லார் என்னும் ஊர், புலால் நாற்றமுள்ள அம்புகளையும், போர் செய்வதற்கு அரிய பாதுகாப்பான காவற் காடுகளையுமுடைய, பெரிய அரண்கள் சூழ்ந்த வலிய நிலத்தின் இருப்பிடம். அங்கே, சிறந்த (குறி தவறாத) வாளையுடைய பண்ணன் வாழ்கிறான். பசியுடன் வாடும் வறுமையுற்ற உன் சுற்றம் பிழைக்க வேண்டுமானால், இப்பொழுதே சென்று, அவன் போருக்குப் போவதற்கு முன் உன் வறுமையைக் காட்டி, உங்கள் பசிக்குப் பகையாகிய (பசியைப் போக்கும்) பரிசிலைப் பெற்றுக் கொள்வாயாக என்று வறுமையில் வாடும் பாணன் ஒருவனைச் சிறுகருந்தும்பியார் வல்லார்கிழான் பண்ணனிடத்து ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

**எந்தை இவன்**

*பண்ணன் சிறுகுடி என்னும் ஊரில் வாழ்ந்த ஓர் உழவன். இந்தச் சிறுகுடி பாண்டிய நாட்டு ஊர். இந்தப் பண்ணன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவன் வழுதி. இந்த வழுதியை 'அண்ணல் யானை வழுதி' என்று புலவர் சிறப்பிக்கிறார். முரசு முழங்கும் பெரும்படை கொண்டவன் என்றும் குறிப்பிடுகிறார்.*

*பண்ணன் தென்னவன் மரபில் வந்தவன்.*

*கொடையால் பெரும்பெயர் பெற்றிருந்தான்.*

*(சோழநாட்டுச் சிறுகுடி கிழான் பண்ணன் வேறு)*

*வெள்ளிக்கோள் வானத்தின் தென்பகுதியில் தோன்றி மறையும் காலத்தில் மழை வளம் குன்றும் எனத் தமிழர் கணித்தறிந்தினர்.*

*இத்தகைய வறண்ட காலத்தில் புலவர் தன் பெரிய கிணைப்பறையை முழக்கிக்கொண்டு இவனிடம் சென்றார். பண்ணன் தன் நிலைமையை அளந்து பார்த்துப் புலவரின் துன்பமெல்லாம் நீங்கும்படிக் கொடை வழங்கினான். அதனால் புலவர் இவனை எந்தை (என் தலைவன், தந்தை) என்றும், கொடையில் மேம்பட்டவன் என்றும் குறிப்பிடுகிறார்.*

*இவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா என்று வினவிக்கொண்டு புலவர் கூறத்தொடங்குகிறார்.*

*வாய்மொழி தவறாமல் அரசனுக்கு வெற்றியைத் தேடித் தருபவன் என்கிறார்.*

*உழும் எருது பூட்டிய இவனது கலப்பையை வாழ்த்தி நாள்தோறும் பாடி என் கிணையை முழக்காவிட்டால் என் சுற்றத்தார் என்னைப் பேணாமல் விட்டுவிடுவார்களாகுக என்கிறார்.*

***"வெள்ளி தென் புலத்து உறைய, விளை வயல்,***
***பள்ளம், வாடிய பயன் இல் காலை,***
***இரும் பறைக் கிணைமகன் சென்றவன், பெரும் பெயர்***
***.......................................................................பொருந்தி,***
***தன் நிலை அறியுநன் ஆக, அந் நிலை,***
***இடுக்கண் இரியல் போக, உடைய***
***கொடுத்தோன் எந்தை, கொடைமேந்தோன்றல்,***
***.................................................................னாமருப்பாக,***
***வெல்லும் வாய்மொழிப் புல்லுடை வி ... ... ...***
***பெயர்க்கும் பண்ணற் கேட்டிரோ, மககிரென,***
***வினைப் பகடு ஏற்ற மேழி கிணைத் தொடா,***
***நாள்தொறும் பாடேன்ஆயின், ஆனா***
***மணி கிளர் முன்றில் தென்னவன் மருகன்,***
***பிணி முரசு இரங்கும் பீடு கெழு தானை***
***அண்ணல் யானை வழுதி,***
***கண்மாறிலியர் என் பெருங் கிளைப் புரவே!"*** [59]

*இவ்வாறாகப் பண்ணனின் ஈகைப் பண்பினைப் பல்வேறு புலவர்கள் தங்களின் பாடல்களில் குறிப்பிட்டுள்ளமை சுட்டத்தக்கது.*

*பணமும் பொருளும் கொடுப்பதும் மட்டுமல்ல ஈகை. மற்றவர்களின் திறமைக்கு ஏற்ற வாய்ப்புகளுக்கு வழிகாட்டுவதும் கூட ஈகையாகும். இதுவே மனிதநேயம் மிக்க மாண்புறு செயல் ஆகும்.*

***கொடை: சொல்விளக்கம்.***

*கொடை என்பதற்குத் தியாகம், புறத்துறை, திருவிழா, வசவு, அடி என்றும் ஈகைக்கு – கொடை, பொன், கற்பகம் என்றும் பொருள் தருகிறது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி"*[60] *தமிழ் தமிழ் அகரமுதலி கொடை என்ற சொல்லுக்கு, ஈகம், தியாகம், கொடை, கைக்கொண்ட ஆநிரையை இரவலர்க்கு வரையாது கொடுக்கும் புறத்துறை, ஊர்த்தேவதைக்கு மூன்று நாள் செய்யும் திருவிழா, வசவு, அடி"*[61]*, எனப் பொருளுரைக்கும். ஈகைக்கும் கொடைக்கும் உள்ள வேறுபாட்டினை அறிஞர் முத்துலக்குமி தனது நூலுள் குறிப்பிடும்போது,*

***“வறுமையுற்றார்க்கு அவர் வேண்டுவன ஈதல்***
***ஈகை எனவும், தம்மை நாடி வரும் இரவலர்க்கும்,***
***பரிசிலர்க்கும் அவரைப் போற்றி வரையாது கொடுத்தல்***
***கொடை எனவும் பெறும்”*** [62]

*என்பர். சங்க காலத்தில் இவ்விரண்டும் வேறுபாடின்றி போற்றப்படுவதைக் காணமுடிகின்றது.*

**தொல்காப்பியமும் கொடைப்பண்பும்**

*தொல்காப்பியர் புறத்திணையியலில் வெட்சித் திணையின் துறைப் பாகுபாட்டில் “கொடை” என்னும் சொல்லை,*

***“தந்துநிரை, பாதீடு, உண்டாட்டு, கொடையென***
***வந்த ஈரேழ் வகையிற்றாகும்”*** [63]

*என்ற நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், கொடைத் தன்மையின் சிறப்புகளை இளங்கோவடிகளும் சிலப்பதிகார வேட்டுவ வரியில்,*

***“இளமா வெயிற்றி இவைகாண்நின் னையர்***
***தலைநாளை வேட்டத்துத் தந்துநல் ஆனிரைகள்***
***கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல***
***நல்லியாழ்ப் பாணர்தம் முன்றில் நிறைந்தன”*** [64]

*எனச் சிறப்பித்துக் கூறுவதைக் காணமுடிகிறது.*

**இருவகைக் கொடை**

*கொடையை இயற்கை, செயற்கை என இருவகைப்படுத்தலாம். இதனை, ”மலையன் மதுவை உண்ட மகிழ்ச்சியால் கொடுக்கப்படும் கொடை செயற்கைக் கொடை என்றும், மதுவை உண்ணாமல் இருந்து கொடை கொடுப்பது இயற்கைக் கொடை”*[65] *என்றும் டாக்டர் உ.வே.சா, தம் உரையில் குறிப்பிடுகிறார்.”செயற்கையாவது மதுவுண்ட மகிழச்சியால் தன்னால் நல்கப்படும் பொருள்களின் அருமை நோக்கும், இயற்கையறிவிழந்து ஏற்றோர் ஏற்க வழங்குவது. இயற்கை மது முதலியவற்றால் அறிவு நலங்குன்றாது ஏற்போர் வரிசையறிந்து நல்குவது”*[66] *என்று ஔவை சு.துரைசாமிப்பிள்ளையும் கூறியுள்ளமையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.*

***பிங்கல நிகண்டும் கொடையும்***

*பிங்கல நிகண்டு ஆடவர் வகையில் மூன்று வகையான வள்ளல் தன்மையுடைய இருபத்தொரு வள்ளல்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. வரைவின்றி யாவருக்கும் கொடுப்பவர்கள் தலை வள்ளல்கள் என அழைக்கப்பட்டனர் இவர்கள் எழுவராவர் என்பதை,*

***“சகரன் நாரி நளன் தந்துமாரி***
***நிருதி செம்பியன் வராடன் தலைவள்ளல்”*** [67]

*எனக் குறிப்பிடுகிறது. இரப்போர்க்குக் கொடுக்கும் இடைவள்ளல்கள் எழுவரை,*

***“அந்திமான் சிசுபால னக்கு ரன் வக்கிரன்***
***சந்திமான் தன்னன் சந்தனிடை வள்ளல்”*** [68]

*எனக் குறிப்பிடுகின்றது. புகழ்வோர்க்குக் கொடுக்கும் கடைவள்ளல் எழுவரை,*

***“பாரி யெழினி நள்ளியாய் மலையின்***
***ஓரி பேக னிவர்கடை வள்ளல்”*** [69]

*எனவும் மூன்று வகையானவர்களைச் சுட்டிக் கூறியுள்ளார். ஈகை, தானம், இடுகை, கவிகை, வேள்வி, வண்மை, தியாகம், வேளாண்மை, உதாரம், கடப்பாடு, உபகாரம் முதலிய சொற்களும் கொடை எனப்படும் என்பதை,*

***“ஈகை தானே மிடுகை கவிகை***
***வேள்வி வண்மை தியாகம் வேளாண்மை***
***யுதாரங் கடப்பா டுபகாரங் கொடை யெனல்”*** [70]

*என்ற செய்யுள் உணர்த்துகிறது. மேலும், ஈதல், இசைத்தல், வீசல், நீட்டல், புரத்தல், நல்கல், அருளல், பகுத்தல், கொடுத்தல், வழங்கல், அளித்தல் என்னும் சொற்களும் பெருங்கொடையைக் குறிக்கும் சொற்கள் என்பதை,*

***“ஈதல் வீச லிசைத்தல் னீட்டல்***
***புரத்தல் னல்க லருளல் பகுத்தல்***
***கொடுத்தல் வழங்கலளித்தல் பெருங்கொடை”*** [71]

*என்னும் பிங்கலநிகண்டு நூற்பாவில் அறியமுடிகின்றது. வரையாது கொடுக்கும் தன்மையே, “கொடைமடம்” என்பதாகும். இதே நிகண்டு,*

***“கொடை மடமென்பது வரையாது கொடுத்தல்”*** [72]

*என்னும் பொருளையும் கூறுகிறது. இவ்வாறு கொடை என்பது பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது என்பதும், தொல்காப்பியர் காலம் தொடங்கி இன்று வரையிலும் கொடைக்குணம் இருந்து வருகிறது என்பதும் புலப்படுகிறது.*

***தமிழ்க் கொடைமாக்கள்***

*தமிழகத்தில் சங்ககாலம் முதலே கொடைக்குணம் மிகுந்த வேந்தர்களும், வள்ளல்களும், குறுநில மன்னர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். கடையெழு வள்ளல்களாகப் பேகன், ஓரி,பாரி, ஆய் அண்டிரன், நள்ளி, காரி, எழினி திகழந்து உள்ளனர். இவர்களது கொடைத் தன்மையை,*

***“பேகனே யோரியென்ப ரிவன் கண்மேற் படித்தோர்***
***பேசுலகி லெண்ணில்லை யிவர்தமிழ்த் தேயத்து***
***மாகுபிள பாடைதே யத்துமுள்ளார் தேய***

***மறைகவென்னி லப்பாரி ஆய்ஓரி நள்ளிசோழந்***
***தாகமுறு நகருறை யூரவர்சோழர் மலையன்***
***சாற்றெழினி பாண்டியதே யங்கூட லூராம்***
***பே யோடும் புகழ்கொள்வர் பாண்டியர் செம்பியனே***
***புகழ் பேகன் சேர தேயங் கருவூர்"*** [73]

*என்னும் பிரபந்தத் திரட்டுப் பாடலால் அறியலாம்.*

*இவ்வேழு வள்ளல்களும் கவிதைக்காகக் கொடுத்தும், இரவலர்க்கு அளித்தும், இரப்பவர்க்கு வலியச் சென்று அழைத்தும் ஒத்தவருக்கும், மிக்கவருக்கும் உதவி புரிந்தும் தன் உயிரையும் புகழுக்காகக் கொடுத்தும் வாழ்ந்தவர்கள் என்பதை,*

***"கவிமீது கொடுத்தும்யா சகர்மீது கொடுத்துங்***
***காசினியா லிரப்போர்க்கு வலிதழைத் திட்டும்***
***புவிமீது சமமானோர் மிகக்ணாருனார்க் குதவி***
***புரிந்துந் தன்னுயிரேனும் புகழ்வேண்டிக் கொடுத்துத்***
***தவறாத கீர்த்திக் கொண்டார்..............."*** [74]

*என்னும் பிரபந்தத்திரட்டுச் செய்யுளால் அறியலாம்.*

***குமணனின் கொடை (புறநானூறு)***

*சங்ககால குறுநில மன்னரில் ஒருவரான குமணன். கொடையால் பெயர் பெற்றுத் திகழ்ந்தான். பழநிக்கும் உடுமலைப்பேட்டைக்கும் இடையில் இருக்கிறது குமணமங்கலம் (கொமரலிங்கம் என்பது தற்போதைய பெயர்). இப்பெயர் இப்பகுதியை ஆண்ட குமணனின் பெயரால் துலங்குகிறது. முதிரமலை என்பது இதனுடைய பழைய பெயர். அவன் ஆட்சியைத்துறந்து, காட்டில் வாழ்ந்த போது தன்னை அணுகிய புலவனுக்குப் பரிசில் கொடுக்க ஒன்றுமின்றித் தன் தலையையே கொய்து எடுத்துச் சென்று பெரும்பொருள் பெறுக எனக் கூறியமை அம்மன்னனிடம் காணப்பட்ட மானுட மாண்பினை வெளிப்படுத்துகிறது. புலவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளல்களாக முடியுடை வேந்தரும்,குறுநில மன்னரும் விளங்கினர். அவர்களது சிறப்பான பணிகளில் வள்ளல் தன்மையும் ஒன்று, வேந்தரே அல்லாது வீரரும் கொடைப்பண்பில் சிறந்திருந்தனர். "செய்யுள் செய்யும் ஆற்றலுடையாரைக் கவிஞர் என்றும், பாவலர் என்றும் குறிப்பது பிற்கால மரபாகும் என்றும், சங்க காலத்தில் அறிவாளர் என்னும் சொல்லாலேயே அவர்கள் அறியப்பட்டனர்"* [75] *என்பர்.*

*"பரிசிலர் என்னும் சொல் புலவர்க்கும், பாணர் முதலான கலைஞர்களுக்கும் பொதுவாக வழங்கப்பட்டு வந்தது என்றும் மக்களால் வரிசை தந்து நன்கு மதிக்கும் உயர்ந்த பரிசை உடையராதலின் இவர்களைப் பரிசிலர்"* [76] *என்ற பெயரால் தமிழர் பாராட்டிப் போற்றுவராயினர் என்றும் கூறுவர். பாட்டியல் நூல்களும் கொடை கொடுத்தலின் இயல்பைச் சுட்டியுள்ளன.*

*மேலும், செல்வத்துப் பயனே ஈதல் என்பதை அறிந்து தன்னிடம் வரும் புலவர், பாணர், கூத்தர் முதலானவர்களுக்குக் கொடை புரிந்து புகழ் மேம்பட்டவன். அப்படிப்பட்ட வள்ளல் தன்மையுடைய குமணனின் சிறப்பினைக் கூறவந்த புலவர் பறம்பு நாட்டு மன்னன் பாரி, கொல்லிமலை அரசன் ஓரி, காரிக் குதிரையுடைய காரி, குதிரைமலைத் தலைவன் அதியமான், மயிலுக்கு போர்வை தந்த பேகன், மோசிகீரனாரால் புகழப்பட்ட ஆய்அண்டிரன், நாடிவந்தவரின் வறுமையைப் போக்கிப் பகைவரைப் புறம் கண்டோடிடச் செய்த தோட்டி மலைக்குரிய கண்டீரக்கோப்பெருநள்ளி ஆகிய எழுவரும் இறந்தபின் இரவலரின் துன்பத்தைப் போக்க நான் இருக்கிறேன் என்று உரிமை கொண்டவன். அதனால் இரவலர் சூழ யான் நின்னை அடைந்தேன் என்று பெருஞ்சித்திரனார் புகழ்ந்து பாடுகிறார். இதனால் கடையேழு வள்ளல்கள் இறந்த பின்பு குமணன் வாழ்ந்துள்ளான் என்பதும் அவ்வள்ளல்களுக்கு இணையாக இரவலரைப் பாதுகாக்கும் வல்லமையும் செல்வமும் பெற்றிருந்தவன் குமணன்.*

***“எழுவர் மாய்ந்த பின்றை அழிவர***
***பாடி வருநரும் பிறரும் கூடி***
***இரந்தோர் அற்றம் தீர்க்கு என விரைந்து இவண்***
***உள்ளி வந்தனென் யானே”*** [77]

*என்று புறப்பாடல் கூறுகிறது. மேலும், பெருஞ்சித்திரனார் வறுமைத்துயரால் தன்னைப் பெற்ற முதியதாயும் இனிய மனைவியும் பலராகிய மக்களும் உடல் தளர்ந்து வாடிக்கிடப்பதும் அவர் உள்ளம் மகிழுமாறு தான் பொருள் பெற்றுச் செல்லவேண்டும் என்று கூறும்போது யான் களிறு முதலிய பரிசில் பெறுவேனாயினும் முகமாறித் தரும் பரிசிலைப் பெறவிரும்பேன் என்று கூறுகிறார். எவ்வளவு வறுமையிலும் சான்றோர்கள் புலவர்கள் இழிவான செயல்களைச் செய்ததில்லை என்பது இவண் சுட்டத்தக்கது. இதனை வள்ளுவர்,*

***“ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க***
***சான்றோர் பழிக்கும் வினை”*** [78]

*ஈன்ற தாய் பசியால் வாடியபோதும் கூடச் சான்றோர்கள் பழிக்கும் செயலை செய்யமாட்டார்கள். பெருஞ்சித்திரனார் முகம்மாறித்தரும் பரிசிலை வேண்டாம் என்றும் குன்றிமணியளவாயினும் இன்புறந் தரும் பரிசிலை விரும்பி ஏற்பேன் என்று கூறுவதில் சங்க கால மக்களின் மான உணர்வு புலப்படுகிறது.*

***துன்பத்தைப் போக்குபவன் அவனே!***

*வறுமையின் பிடியில் சிக்கிய புலவர் பெருஞ்சித்திரனார் உடல் மெலிந்து தளர்நடையோடு குமணனைக் காணச் சென்றார். அங்கு சின்னாள் தங்கினார். குமணனோ புலவருக்கு நல்ல உணவு தந்து உடல் வளம் பெறச்செய்தார். அப்போது தன் மனைவி*

*குழந்தைகள் பசியால் வாடுவதை நினைத்து வருந்திய புலவர் குமணனிடம் நான் உன் புகழ்க் கூறுபாடுகளுள் சிறந்த சிலவற்றைச் சொலல் அறிந்தேனாயினும் அறியேனாயினும் என் கல்வியின் திறத்தை நீ அறிவாய். உனது புகழ் அறிதற்கு அறியாது அதனால் நீ அறிந்த என் கல்வி அறிவிற்கு ஏற்ற பரிசில் தாராது உன் தகுதிக்கு ஏற்றார் போலப் பரிசிலைத் தரவேண்டும் என்று கூறும் அளவிற்குப் பெரும்புகழ் உடையவன் குமணன். அதனால் கொடுப்பவர்களுக்கென்று ஒரு தகுதி தகுதிக்கேற்ப பொருள் வழங்க வேண்டும் என்று கூறுவதில் மன்னர்களின் மாண்பு வெளிப்படுகிறது.*

**வறுமையிலும் மனிதநேயம்**

*ஒருவன் சேர்த்து வைத்த அல்லது சம்பாதித்த பொருள்களையோ, செல்வத்தையோ மற்றவர்களுக்குக் கொடுத்து உதவும் பாங்கே மனிதநேயம் ஆகும். இன்று உலகில் வாழும் மக்கள் தொகையில் 55 பேர் ஒருவேளை உணவு இல்லாமல் வாழ்கிறார்கள் என்று ஐ.நா. கணக்கெடுப்புக் கூறுகிறது. (பார்க்க. தமிழ்விக்கிபீடியா) இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் புறநானூற்றுப் புலவர்களும், மன்னர்களும் பாடல்களாக உலகமக்களுக்குக் கருத்தை வழங்கியுள்ளனரோ என்ற வினா எழும்புகிறது.*

*வறுமையுற்ற நிலையில் பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பொருள் தேடி பரிசில் பெற செல்கிறார். அவர் குடும்பச்சூழலோ மிகவும் பரிதாபத்திற்குரியதாக உள்ளது. குமணனிடம் சென்று தன் குடும்ப வறுமையை எடுத்துரைக்கிறார். மன்னனும் பொன்னும் பொருளும் பரிசாகத் தந்து அனுப்பி வைக்கின்றான். வந்தவர் தான் மட்டும் அப்பரிசுப் பொருளை அனுபவிக்காமல் தன் மனைவியிடம் கூறும் பாங்கு உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் உரைக்கும் அறக் கொள்கையாகக் குறிப்பிடுகிறார்.*

*குமணனிடம் சென்று பாடிப் பரிசில் பெற்று வந்து தன்மனைவியிடம் கொடுத்துத் தன் குடும்ப வறுமையைப் போக்கிக் கொள்ளுமாறு சொல்கிறார். அப்போது, சுயநலம் கொண்டு தான் குமணனிடமிருந்து பெற்ற பரிசில் பொருள்களைத் தனக்கு மட்டுமே வைத்துக் கொள்ளாலாமல்லவா? ஆனால் அதை விடுத்து மனைவியிடம்,*

***“நின் நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்***
***பன்மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்***
***கடும்பின் கடும் பசி தீர யாழ நின்***
***நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்***
***இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது***
***வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்***
***எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே!***
***பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்***
***திருந்து வேல் குமணன் நல்கிய வளனே.”*** [79]

*எல்லோர்க்கும் கொடுத்து இன்புறுமாறு பணிக்கிறவர் உன்னை விரும்புவோர் உன்னால் விரும்பப்படுபவர் உன் உறவினர்களுக்கும் கடன் நல்கியோருக்கும் பலர்க்கும் வழங்குக.*

இன்ன தன்மையுடையவர்க்குத் தரவேண்டும் என்று எண்ணாது இதை வைத்துக் கொண்டு நன்றாக வாழவேண்டும் என்று எண்ணாமலும் நீயும் எல்லோர்க்கும் அளிப்பாயாக நானும் எல்லோர்க்கும் அளிப்பேன் என்று கூறுகிறார். இவ்வாறு பண்டைய நாளில் பரிசில் பெற்ற பரிசிலர் தாம் பெற்ற பரிசிற் பொருள் எவ்வளவு வறுமையிலும் வாடியபோதும் வறுமையில் உள்ளபோது கிடைத்த பொருள் வறுமையில்லாது வாழ உதவும் என்று எண்ணாது பொருளின் மேல் பற்றில்லாது வாழ்ந்த காலத்தை முன்னிறுத்துகிறது. இதுபோலச் செய்வதற்கும், அடிப்படையாக இருப்பதுதான் மனிதநேயம். வறுமை, பகைமை, எந்தச் சூழலிலும் தன்னை மட்டுமே மையப்படுத்திக் கொள்ளாமல் பிறரையும் தன்னைப் போல் எண்ணி வாழ்வதற்கு மனித நேயம் தான் அடிப்படையாக இருக்க முடியும் என்பதற்கு மேற்கண்ட பாடல்வரிகள் சான்றாக அமைவதைக் காணலாம்.

மேலும்,மன்னர் கொடுத்த பரிசிலை எல்லோருக்கும் கொடு என்று தன் மனைவியிடம் கூறும் பெருஞ்சித்திரனாரின் கருத்து உலக மக்களுக்குச் சொல்லபட்டதாக அமைந்துள்ளது.

**தன்னையே ஈந்த குமணனின் கொடை**

அப்படிப்பட்ட பொருள் பற்றில்லாத சங்ககாலத்தில் புகழை விரும்பி நிலைபெறச் செய்த பல மன்னர்கள் கொடை வள்ளல்களாக இருக்க அதனை விரும்பாது பொறாமை கொண்டு வாழ்ந்த தம்பிகளும் இருந்துள்ளனர்.

தம்பியாகிய இளங்குமணன் குமணனின் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு கொல்வதற்கு சூழ்ச்சியும் செய்துள்ளான். அதனால் குமணன் நாட்டை விட்டு நீங்கி காட்டில் வாழ்ந்து வந்தான். அப்போது பெருந்தலைச்சாத்தனார் வறுமையுற்று குமணனைக் கண்டு பரிசில் பெற முதிரத்துக்கு வந்தார். வந்தவர் நாட்டில் நடந்த செய்தியறிந்து இளங்குமணன் மனவன்மை இல்லாதவன் என்பதையும் அறிந்தார். பின் காட்டில் குமணன் இருக்கும் இடம் அறிந்து சென்று அங்கு தன் கருத்தை புலப்படுத்தாது தனது வறுமைத் துன்பத்தை குமணனுக்கு உணர்த்தினார். "வேந்தே! நீ வறுமை தீர்க்கும் குடியில் பிறந்தவன். வறுமையுற்றுவாடும் என்மனையாள் துன்பத்தைக் காணமுடியாது உன்னை நினைத்து போனேன். என்நிலை இது அதனால் உன்னிடம் பரிசில் பெறாது மீளேன்" என்று புலவர் கூறியதைக் கேட்டு குமணன் வருந்தினான்.

> **"நாடுஇழந் ததனினும் நனி இன்னாது` என,**
> **வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய,**
> **தன்னின் சிறந்தது பிறிதுஒன்று இன்மையின்;**
> **ஆடு மலி உவகையோடு வருவல்,**
> **ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே"[80]**

தான் காட்டில் வாழும் நிலையை விட புலவர்க்குத் துயர் நீக்க முடியவில்லை என்று துயரமுற்றான். அப்போது தன்னிடம் சிறந்தப் பொருள் இல்லை என்றாலும் தன்னுடல்

சிறந்தப் பொருளாதலையும் தலை சிறந்த உறுப்பு அதனைக் கொண்டு காட்டினால் தன் தம்பி இளங்குமணன் மிகுந்த பொருள் தருவதாக நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருக்கிறான். தன் தலையைக் கொய்து கொண்டு சென்று பொருள் பெற்று வறுமைத் துயரைப் போக்கிக் கொள்க என்று தன் வாளை எடுத்துச் சாத்தனார் கையில் குமணன் தந்தான்.

கை நடுங்க உள்ளம் பதைக்க வாங்கிய சாத்தனார் இளங்குமணனிடம் சென்று யான் நின் முன்னோனைக் கண்டு பாடி நின்றேன். நாடிழந்த துயரினும் பெரிதாக நான் பொருள் இல்லாமல் வாடியுள்ளது கண்டு வருத்தமுற்றான். தன்னிடம் வேறு சிறந்த பொருள் இல்லாமையால் தன் தலையை அரிந்து கொள்ளுமாறு தன் வாளைத் தந்தான் என்று கூறிய புலவர் வாளை இளங்குமணனிடம் காட்டினார். இவ்வுலகத்தில் நிலைபேறு கருதினோர் தம் புகழினை நட்டு உயிர் மாய்ந்தனர். பிற செல்வர்கள் வறுமையால் தம்மை இரந்தோர்க்கு ஒன்றும் கொடாது இறந்தவர். தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இவ்வுலகத்தோடு தொடர்பின்றி மறைந்து போயினர் என்று கூறினார்.

**"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன்று றில்"** [81]

என்று திருக்குறளும்,

**"நல் இசை நிலைஇய நனந் தலை உலகத்து"** [82]

என்று பதிற்றுப்பத்தும் உரைக்கிறது. புலவர் கூறியதைக் கேட்ட இளங்குமணன் நல்லுணர்வு பெற்று முன்னோனான குமணனை நாடி தன் தவறுக்கு வருந்தி அவனை நாட்டில் இருத்தி அவன் வழியில் நின்று நற்செயல் செய்து இன்புற்றான். நாடும் நலம் பெற்றது.

புலவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடி பரிசில் பெறுவது மட்டும் அவர்களின் செயல் அல்ல. அவர்களுக்கு இருக்கும் சிக்கல்களையும் நீக்கியத் தன்மை புலவர்களை மேலும் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் முறை இன்றும் இல்லத்தில் உள்ள கருத்து வேற்றுமையைப் போக்கிக் கொள்ளும் நிலையுள்ளது இங்கு எண்ணத்தக்கதாக உள்ளது. இச்செயலானது மனிதநேயத்தின் உச்சநிலை என்பது இவண் உணரத்ததக்கது.

**கடையேழு வள்ளல்களின் கொடை**

வள்ளல்களும் தங்களால் முடிந்தவற்றை தமக்கென வைத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் வாரி வழங்கினார்கள். மேலும் இவர்கள் புலவர்களுக்கு தன் உயிரையே கொடுக்க துணிந்தனர். குமணன் தன்னுடைய நாட்டையிழந்த நிலையிலும் தன் தலையையே கொடுக்கத் துணிந்தான்.

***“வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய,***
***தன்னின் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்;***
***ஆடு மலி உவகையொடு வருவல்,***
***ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே”*** [83]

*என்ற பாடல் சுட்டி நிற்கிறது. பேகன் இவர் பொதினி மலைக்குத் தலைவர். தற்போது இந்த இடம் பழனி மலை என்று அழைக்கப்படுகிறது. மழை வளம் மிக்க அந்த மலையின் காட்டில் மயில்கள் திரிந்து கொண்டிருக்கும். ஒருநாள் அப்படித் திரிந்து கொண்டிருந்த ஒரு மயில் அகவியதைக் கேட்டு, அது குளிரால் நடுங்கி அகவியது என்று பேகன் நினைத்தார். மயில் குளிரில் இருந்து காத்துக்கொள்ள தான் அணிந்திருந்த போர்வையை அம்மயிலுக்குப் போர்த்தினார். மயில் போர்வையைப் போர்த்திக் கொள்ளுமா எனச் சிறிதும் யோசித்துப் பாராமல் இத்தகைய செயல் செய்தார். இதனையே ‘கொடைமடம்’ எனச் சான்றோர் போற்றிக் கூறினர்.*

***“அறு குளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்,***
***உறும் இடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்,***
***வரையா மரபின் மாரிபோல,***
***கடாஅ யானைக் கழற் காற் பேகன்***
***கொடைமடம் படுதல் அல்லது,***
***படைமடம் படான், பிறர் படை மயக்குறினே”*** [84]

*மழையானது நீர் இல்லாத குளத்தில் பொழியும், அகன்ற வயலில் பொழியும், காயும் இடத்தில் பெய்யாமல் விளையாத களர் நிலத்திலும் பெய்யும், இது சரிதானா? இப்படி வரையறை இன்றி எங்கும் பொழியும் மழை போல யானை மேல் வரும் பேகன் வழங்குவான் இப்படிக் கொடை வழங்குவதில் மடம் பொருந்த நடந்துகொள்வானே தவிர, படை வந்து தாக்கும்போது மடங்கமாட்டான் (வளைந்து கொடுக்க மாட்டான்) என்று பரணர் பாடியுள்ளமை அறியத்தக்கது.*

***பாரி***

*பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னர் வேள்பாரி என்றும் வழங்கப்படுகிறார். இவர், தாம் சென்ற வழியில், தம் தேரைத் தடுத்த முல்லைக் கொடி, தேரை விரும்பியதாகக் கருதி, அது படர்வதற்குத் தனது பெரிய தேரையே அளித்தார். முல்லைக்குத் தேர் தந்த பாரி வள்ளலின் பெண்கள்தான் அங்கவை, சங்கவை. மாட மாளிகையில் வாழ்ந்த இவர்கள் தங்கள் தந்தையை இழந்து தவித்த போது அடைக்கலம் தந்து மணமுடித்து வைத்தவர் வள்ளல் பாரியின் நண்பரான புலவர் கபிலர் என்றும் கூறப்படுகிறது.*

***“பாரி பாரி’ என்று பல ஏத்தி,***
***ஒருவற் புகழ்வர், செந் நாப் புலவர்;***
***பாரி ஒருவனும் அல்லன்;***
***மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே”*** [85]

*ஒரு புலவர் பாரி பாரி என்று சொல்லி அவனை மட்டுமே புகழ்ந்துகொண்டிருக்கிறார். பாரி ஒருவன் மட்டுந்தானா கொடையாளி? மழையும் இருக்கிறதே. அதாவது மழைபோல் வேள் பாரி கொடை வழங்குபவன் என்பது பொருள். மேலும் பாரியின் வள்ளல் தன்மையை,*

***“குறத்தி மாட்டிய வறல் கடைக் கொள்ளி***
***ஆரம் ஆதலின் அம் புகை அயலது***
***சாரல் வேங்கைப் பூஞ் சினைத் தவழும்***
***புறம்பு பாடினரதுவே அறம் பூண்டு***
***பாரியும் பரிசிலர் இரப்பின்***
***வாரேன் என்னான் அவர் வரையன்னே”*** [86]

*என்று பாடுகிறார். படைகண்டு பணியாதது பாரியின் வீரம். ஆனால் பரிசாகக் கேட்டால் தன் நாட்டையும் தருகின்ற நெஞ்சில் ஈரம் உடையவன் பாரி என்பதனை,*

***“விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர***
***ஆடினிர் பாடினிர் செலினே***
***நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே”*** [87]

*என்கிறார் கபிலர்.*

***காரி***

*திருக்கோயிலூரைத் தலைநகராகக் கொண்டு மலாட்டை ஆட்சி புரிந்தவர் இவர். திருக்கோயிலூர்க்கு மேற்கே தென்பெண்ணையாற்றின் தென்கரை அடங்கிய பகுதியே “மலாடு” ஆகும். இவர் மலையமான் திருமுடிக் காரி என்றும், மலையமான் என்றும், கோவற் கோமான் என்றும் அழைக்கப்படும் வள்ளலாவார். கொடை கேட்டு வருபவர்களிடம் எப்போதும் அருள் நிறைந்த சொற்களைப் பேசும் இயல்பு உடையவன். ‘தலையாட்டம்’ என்ற அணியைத் தலையிலும், ஒலிக்கும் மணியைக் கழுத்திலும் அணிந்து ஆடுகின்ற குதிரையையும் மற்றும் ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் கொடை கேட்டு வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாது அள்ளி வழங்கினான். திருக்கோவிலூர் அழகிய சிற்றூர். இன்றும் கூட திருக்கோவிலூரில் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டு அதில் வருடந்தோறும் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. கபிலர் விழா எடுத்து தென்பெண்ணை ஆற்றின் இடையே உள்ள கபிலர் குன்றின் மேல் ஏறி கபிலர் பாடல்கள் இசைக்கப்படுகின்றன. இவ்வாய்வாளர் கபிலர் விழாவில் கலந்து கொண்டு கபிலர் குறித்த செய்திகளைக் கேட்டறிந்துள்ளார். காரியைப் போற்றிப் பாராட்டிப் புலவர்களான கபிலர், பெருஞ்சாத்தனார், நப்பசலையார் ஆகியோர் பாடிய பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.*

***“……ஈத்த இழை அணி நெடுந் தேர்***
***பயன் கெழு முள்ளூர் மீமிசைப்***
***பட்ட மாரி உறையினும் பலவே”*** [88]

இப்பாடலில் வருகின்ற இரவலர்க்குப் பரிசாகத் தேரையும் கொடுத்தான் மழைபோல் கொடுக்கும் தன்மை உடையவன் திருமுடிக்காரி என்று வியந்து பாடுகிறார். எவரையும் ஏமாற்றம் கொள்ளச் செய்யாது கொடையளிப்பவன் காரி என்பதை,

***“நாள் அன்று போகி புள் இடை தட்பப்***
***பதன் அன்று புக்கு திறன் அன்று மொழியினும்***
***வறிது பெயர்குநர் அல்லர் நெறி கொளப்***
***பாடு ஆன்று இரங்கும் அருவிப்***
***பீடு கெழு மலையற் பாடியோரே”*** [89]

என்று கபிலர் பாடுகிறார்.

***“புலன் அழுக்கு அற்ற அந்தணாளன்***
***இரந்து செல் மார்க்கட்கு இனி இடன் இன்றி***
***பரந்து இசை நிற்கப் பாடினன்”*** [90]

என்று காரியின் வள்ளன்மை முழுவதையும் கபிலர் பெருமான் பாடிவிட்டாலும், தங்கள் பாடலையும் கேட்டுப் பரிசில் தருமாறு மலையமான் திருமுடிக்காரியைப் பெண்பாற் புலவரான மாறோக்கத்து நப்பசலையார் கேட்கிறார். இதன் மூலம் அவனது கொடைச்சிறப்பு வலியுறுத்தப்படுகிறது

***ஆய்***

பொதியமலைச் சாரலில் உள்ள ஆய்குடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர். இவனை வேள் ஆய் என்றும் ஆய் ஆண்டிரன் என்றும் அழைத்தனர். ஒளி பொருந்திய நீல நிறமுள்ள நச்சரவம் (நஞ்சுடைய கொடிய பாம்பு) ஒன்று இவருக்கு ஓர் அரிய ஆடையை அளித்ததாம். நாகம் அளித்த ஒளிமிக்க ஆடையை இவன், ஆலமரத்தின் கீழிருந்த செல்வராகிய சிவபெருமானுக்கு அளித்தானாம்.

வேள்ஆயைப் போற்றி ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய பாடல்களும், துறையூர் ஓடைகிழார் பாடிய பாடலும் புறநானூற்றில் உள்ளன. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

***“களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்***
***பாடு இன் பனுவற் பாணர் உய்த்தென,***
***களிறு இலவாகிய புல் அரை நெடு வெளில்,***
***கான மஞ்ஞை கண்ணொடு சேப்ப,***
***ஈகை அரிய இழை அணி மகளிரொடு***
***சாயின்று’ என்ப, ஆஅய் கோயில்;***
***சுவைக்கு இனிது ஆகிய குய்யுடை அடிசில்***
***பிறர்க்கு ஈவு இன்றித் தம் வயிறு அருத்தி,***
***உரைசால் ஓங்கு புகழ் ஒரீஇய***
***முரைசு கெழு செல்வர் நகர் போலாதே”*** [91]

*ஆய் யானைகளைப் பாணர்க்கு வழங்குவான். அதனால் அவன் அரண்மனை முற்றத்தில் யானை இல்லை.யானை கட்டியிருந்த வெளில் என்னும் கட்டுத்தறியில் காட்டு மயில் கூட்டம் திரிகிறது. அவனது மனைவிமார் பிறருக்குத் தர முடியாத தாலியுடன் உள்ளனர். "ஈகை அரிய இழை அணி மகளிரொடு சாயின்று" இதுதான் ஆய் அரசன் அரண்மனை நிலைமை.இவன் வாழும் அரண்மனை, முரசு முழங்கும் செல்வம் படைத்த செல்வர் வாழும் மாளிகை போல் இல்லை. சுவைக்கு இனிதாகத் தாளித்த உணவை, ஈவு இரக்கம் இல்லாமல் தன் வயிற்றுக்கு மட்டும் உண்ணும் செல்வர் வாழும் மாளிகை போல் இது இல்லை என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது*

***"மன்றப் பலவின் மாச் சினை மந்தி***
***இரவலர் நாற்றிய விசி கூடு முழவின்***
***பாடு இன் தெண் கண், கனி செத்து, அடிப்பின்,***
***அன்னச் சேவல் மாறு எழுந்து ஆலும்,***
***கழல் தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்***
***ஆடுமகள் குறுகின் அல்லது,***
***பீடு கெழு மன்னர் குறுகலோ அரிதே"*** [92]

*ஆய் மன்னனைப் பாடிக்கொண்டு அவன் அரண்மனை செல்லும் இரவலர் (கொடை கேட்டு செல்பவர்) தம் முழவினை (முரசு) முழக்குவர். பின்னர் முழவினைப் பொதியமலையில் இருக்கும் பலா மரத்தின் கிளைகளில் தொங்க விடுவர் இரவலர் முழக்கும்போது பார்த்த பெண்குரங்கு அந்த முழவினைப் பலாப் பழத்தைத் தட்டிப் பார்ப்பது போலத் தட்டும். அந்த ஓசையைக் கேட்டு அங்குள்ள நீர்க்கரையில் அன்னச் சேவல் எழுந்து குதித்து ஆடும்.*

***விண்மீன்களை விட அதிகம்***

*மழை மேகம் தவழும் இந்தப் பொதியில் நாட்டு அரசன் ஆய். இந்த நாட்டில் ஆடிக் காட்டும் மகளிர் தடையின்றிச் செல்வர். பெருமை மிக்க மன்னராயினும் யாரும் போரிட நுழைய முடியாது என்றும் மேலும்,*

***"இரவலர்க்கு ஈத்த யானையின் கரவு இன்று***
***வானம் மீன் பல பூப்பின் ஆனாது***
***ஒரு வழிக் கரு வழி இன்றிப்***
***பெரு வெள்ளென்னின் பிழையாது மன்னே"*** [93]

*இரவலர்க்குப் பரிசாகத் தந்த யானைகளின் எண்ணிக்கை ஆகாயம் முழுவதும் விண்மீன்கள் படர்ந்தாலும், அவ்விண்மீன்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்றும், அவன் தானமாகக் கொடுத்த யானைகளின் எண்ணிக்கையைப் பார்த்து வியந்து,*

***"இளம் பிடி ஒருசூல் பத்து ஈனும்மோ"*** [94]

*இவ்வாறு உன் நாட்டில் பெண்யானை எத்தனை குட்டிகள் தான் போடுகிறதோ? என்று வியந்து ஆய்அண்டிரனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடுகிறார்.*

***அதியமான்***

*அதிகன், அதியமான் நெடுமான் அஞ்சி, அதிகைமான், அஞ்சி எனப் பல பெயர்களில் வழங்கப்படுகிறார். இவர் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட குறுநில மன்னர். இவர் ஒரு நாள் தன் நாட்டு மலையொன்றின் உச்சிப் பிளவின் சரிவில் நின்ற அருநெல்லி மரத்தின் அருங்கனி ஒன்றைப் பெற்றார். அந்த அருநெல்லியை உண்டால், உண்டவரை நரை, திரை, மூப்பு இன்றி நீண்ட நாள் வாழ வைக்கும் வலிமை உடையது. அக்கனியைத் தாமே உண்ணாமல் வைத்திருந்து தம்மைக் காண வந்த நல்லிசைப் புலவர் ஔவையார்க்குத் தந்து அழியாத அறப்புகழ் பெற்றார். அதியமான் நெடுமான் அஞ்சியைப் போற்றிப் புகழ்ந்து ஔவையார் பாடிய பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன.*

***"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்***
***பல நாள் பயின்று பலரொடு செல்லினும்***
***தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ"*** [95]

*இப்பாடலின் மூலம் அதியமான் அரசவைக்குப் பரிசில் பெறவேண்டிவரும் புலவர்க்கு ஒருநாளும் முந்தைய நாள் கொடையை விட அதிகமாகவே தரப்பட்டுள்ளதைச் சிறப்பித்துக் கூறுவதாக அமைந்திருக்கிறது.மேலும், அதியமான் தன்மீது கொண்டிருக்கும் அன்பினால் காலம் தாழ்த்திப் பரிசளித்ததை,*

***"பொழுது இடைப்படாஅப் புலரா மண்டை***
***மெழுகு மெல் அடையின் கொழு நிணம் பெருப்ப***
***அலத்தற் காலை ஆயினும்***
***புரத்தல் வல்லன் வாழ்க அவன் தாளே"*** [96]

*இவ்வாறு பாராட்டுகிறார் ஔவையார். இல்லாமையால் உலகம் வறுமையுற்றாலும், தம்மை நாடி வருவோர்க்கு இல்லை என்று அள்ளித்தரும் அதியமான் நெடுமானஞ்சியின் புகழைப் பாடுகிறார்.*

***நள்ளி***

*அதிக மலைகள் கொண்ட கண்டீர நாட்டினர். இவரை நளிமலை நாடன் என்றும், கண்டீரக் கோப்பெருநள்ளி என்றும், பெருநள்ளி என்றும் அழைத்தனர். நள்ளி, கொடை கேட்டு வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாது அள்ளி வழங்கினார். மேலும், பின்னர் அவர் வேறு ஒருவரிடம் சென்று கொடை கேட்காத அளவிற்குக் கொடை அளித்தார். நள்ளியைப் போற்றிப் பாராட்டி வன்பரணர் பாடிய பாடல்களைப் புறநானூற்றில் காணலாம். தோட்டி மலைவாழ் இனத்தினரின் தலைவனாக விளங்கினான் நள்ளி. புலவர்கள் பெற்ற பரிசிலால் ஏற்பட்ட மகிழ்ச்சியின் காரணத்தால் காலைப் பண்ணை மாலையிலும், மாலைப் பண்ணைக் காலையிலும் பாடி விட்டனர் என்கிறார் வன்பரணர்.*

***“நள்ளி ! வாழியோ; நள்ளி ! நள்ளென்
மாலை மருதம் பண்ணி, காலைக்
கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி,
வரவு எமர் மறந்தனர் - அது நீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே”*** [97]

*ஒருசமயம் வன்பரணர் எனும் பெரும்புலவர் தன் சுற்றத்தாரோடு நள்ளியைக் காணவந்த போது, வறுமையின் சிறுமையால் வாட்டமுற்றுக் களைந்த அவர்களுக்கு வேடனாக வந்து உணவளித்தவன் நள்ளி. அவ்வேடன்தான் நள்ளி என்பதை அறிந்த புலவர்க்கு அவன்மேல் வியப்பு மிஞ்சியது. மதிப்பு உயர்ந்தது. அவன் கண்டீரக் கோப்பெருநள்ளி என்று புலவர்களால் பாராட்டுப் பெற்றான்.*

***ஓரி***

*சிறிய மலைகள் உடைய நல்ல நாட்டிற்குத் தலைவராவார். கொல்லிமலையை அறநெறி பிழாது அரசு செய்து வந்து குறுநில மன்னனே ஓரி என்பவன். ஓரி விற்போரில் வல்லவர். அதனால் இவரை “வல்வில் ஓரி” என்றும் அழைப்பர். ஓரி, நெருங்கிய கிளைகளும், பூத்துக் குலுங்கியிருக்கின்ற நல்ல மலர்களையும் உடைய, இளமையும் முதிர்ச்சியும் கொண்ட சுரபுன்னை மரங்களும், சிறிய மலைகளும் அமைந்த நல்ல நாட்டைக் கூத்தாடுவோர்க்குப் பரிசிலாக் கொடுத்தவன். ஓரியிடம் பெருவளத்தைக் கொடையாகப் பெற்றதால், புலவர் வன்பரணரைத் தலைவராகக் கொண்ட பாணர் சுற்றம் தமக்குரிய பாடுதலும் ஆடுதலும் ஆகிய தொழில்களைச் செய்யாது சோம்பியிருந்து, அவற்றை மறந்து போயினராம் ஓரியின் சிறப்பைக் கூறும் வன்பரணரின் பாடல்களைப் புறநானூற்றில் காண்கிறோம்.*

***ஓம்பா ஈகை விறல்வெய் யோனே”*** [98]

*மற்றும் அளவில்லாத யானையை பரிசாகக் கொடுத்தனை,*

***“மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்
இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்”*** [99]

*என்று ஓரியின் கொடைச்சிறப்பைக் கூறுகிறார்.*

***“ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று ”*** [100]

*என்று எனக்கு நீ இப்போது பரிசில் தராமல் இல்லை என்று சொன்னாலும், வானமழை போல வழங்கும் வள்ளல் ஓரியே நீ வாழ்வாயாக என்கிறார் கழைதின் யானையார் என்ற புலவர்.*

***எழினி***

*கொடை வள்ளல் எழுவருள் ஒருவரான எழினியைப் பற்றிய குறிப்பும் மிக குறைந்த அளவே கிடைக்கிறது.*

***"வளநீர் வாட்டாற்று எழினியாதன்***
***கிணை யேம் பெரும!***
***கொழுந் தடிய சூடு என்கோ?"***

*என்று கேள்வியை எழுப்பியும் அதற்கு அவன் செய்த சிறப்பு பற்றி பின்வருமாறு புலவர் குறிப்பிடுகிறார்.*

***"வள நனையின் மட்டு என்கோ?***
***குறுமுயலின் நிணம் பெய்தந்த***
***நறு நெய் சோறு என்கோ?***
***திறந்து மறந்து கூட்டு முதல்***
***முகந்து கொள்ளும் உணவு என்கோ?"*** [101]

*இப்பாடலில் அவன் தந்த கள்ளைச் சொல்வேனா?,முயற்கறியிலே ஆக்கித் தந்த நெய்ச்சோற்றைச் சொல்வேனா?, நெற்களஞ்சியத்தைத் திறந்து விட்டு வேண்டுமளவு எடுத்துக்கொள் எனக் கூறியதைச் சொல்லவா? என அவனது கொடைச் சிறப்பை வியந்து போற்றுகிறார்.*

*கடையெழு வள்ளல் எழுவரையும் குறிப்பிட்டு பாடும் பாடலாகப் பெருஞ்சித்திரனார்,*

***"பறம்பின் கோமான் பாரியும்" – பறம்பு மலையை ஆண்ட பாரி***
***"கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்"- கொல்லி மலையை ஆண்ட ஓரி***
***"காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த***
***மாரி ஈகை மறப்போர் மலையனும்" –மலையமான் திருமுடிக்காரி***
***"கொடும் பூண் எழினியும்" – தகடுரை ஆண்ட எழினி***
***"பெருங் கல் நாடன் பேகனும்" – என பேகன்***
***"மோசி பாடிய ஆயும்" – மோசியால் பாடப்பெற்ற ஆய்அண்டிரன்***
***"ஈயும் தகைசால் வண்மைக்***
***கோள்ளர் ஓட்டிய நள்ளியும்"***
***என நள்ளியை பற்றியும்"*** [102]

*இதன் மூலம் வலுவான ஆதாரமாகக் கிடைக்கிறது. புலவர்கள் மட்டுமல்லாது வறுமையில் வாடிய குடிமக்களுக்கும் மன்னர்கள் பரிசாக ஆநிரைகளையும் எருதுகளையும் வழங்கியுள்ளனர் என்பதை,*

***"மீன்பூத்து அன்ன உருவப் பல் நிரை***
***ஊர்தியொடு நல்கி யோனே"*** [103]

*இதன் மூலம் அறிய முடிகிறது. கடையெழு வள்ளல்களின் சிறப்பைப் புறநானூற்றுப் பாடல்களில் மட்டுமின்றி நற்றிணை, அகநானூறு போன்ற பிற சங்க கால இலக்கியங்களிலும் காணலாம்.*

***நள்ளியின் கடப்பாடு (புறநானூறு)***

*நள்ளி என்பானும் கடையெழு வள்ளல்களின் வரிசையில் ஒருவனாகத் திகழவல்லவன். இவனைக் கண்டீரக் கோப்பெருநள்ளி எனவும், கண்டிற்கோப் பெருநள்ளி எனவும், கண்டீரக்கோன், கண்டீரக்கோ எனவும், நள்ளி எனவும் இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளனர். இவன் தோட்டி என்னும் மலைக்கும் அதனைச் சார்ந்த மலை நாட்டிற்கும் காடுகளுக்கும் தலைவனாக இருந்தவன். இவன் வன்பரணர், பெருந்தலைசாத்தனார் என்னும் பெரும் புலவர்களால் பாடப்பட்ட பெருமை சான்றவன். இவன் "இயல்வது கரவேல்" என்பதற்கு இணங்கத் தன்னை விரும்பி வந்தவர்க்கெல்லாம் இல்லறத்தை இனிது நடத்தப் பொருளை ஈந்து மகிழ்ந்தவன். அப்படிக் கொடுக்கும் காலத்தும் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்பதற்கிணங்க யாதொரு தட்டுத் தடங்கல் இன்றி அளித்து வந்தவன். நல்லத் தோற்றப் பொலிவும் உடையவன். தாள்தோய் தடக்கையுடையவன். இவன் இத்தகைய நல்லோன் ஆதலின், இவன் மலையும் நல்ல மழை வளம் கொண்டு விளங்க, அத்தோட்டி மலைக்குத் தலைவனாக இருந்தவன். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்யும் அல்லவா? மாரி இடையறதாது பொழிந்தால் அன்றே தானம் தவம் இரண்டும் நிலவுலகில் தங்கும். வானம் வழங்காது எனில் இவ்விரண்டும் தங்காவே, ஆகவே இவன் மழை வளம் தரும் தோட்டி மலையில் மாண்புடன் வாழ்ந்து வந்தனன். இதனை சிறுபாணாற்றுப்படை ஆசிரியர் வெகு அழகுபட,*

***"..................................................கரவாது***
***நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்***
***முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கை***
***துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு***
***நளி மலை நாடன் நள்ளியும் ................"*** [104]

*என்று அழகுபட பாடிக் களித்துள்ளார்.*

*நள்ளியின் கொடை நலத்தைப் பெரிதாக நுகர்ந்தவர் வன்பரணர். வன்பரணர் தமது சுற்றத்துடன் நள்ளியைக் காண நடந்து சென்றார். நடந்த களைப்பால் பலா மரத்தின் அடியில் அமந்திருக்க அவ்வழியாக மானை வேட்டையாடிய ஒருவன், அழுக்கேறிய கிழிந்த உடை நீரில் நனைந்தால் நனையாது இருக்கும் பருந்தின் சிறகு போல வறுமைத் துன்பத்தில் இருந்த எங்களைக் கண்டான்.*

***"நீர்ப்படு பருந்தின் இருஞ்சிற அன்ன***
***நிலம்தின் சிதாஅர்"*** [105]

***“கூதிர்ப் பருந்தின் இருஞ் சிறகு அன்ன***
***பாறிய சிதாரேன், பலவு முதல் பொருந்தி,***
***தன்னும் உள்ளேன், பிறிது புலம் படர்ந்த என்***
***உயங்கு படர் வருத்தமும் உலைவும் நோக்கி,***
***மான் கணம் தொலைச்சிய குருதி அம் கழற் கால்,***
***.........................................................................***
***.......................................................................***
***அம் மலை காக்கும் அணி நெடுங் குன்றின்,***
***பளிங்கு வகுத்தன்ன தீம் நீர்,***
***நளி மலை நாடன் நள்ளி அவன்' எனவே.”*** [106]

*வறுமை துன்பத்தில் இருந்த எங்களை அமரும் படியாகச் செய்து காட்டில் வேட்டையாடிய ஊனைத் தீயிலிட்டுப் பதப்படுத்தி உண்ணத் தந்தான். யாம் உண்டபின் அவன் தன் மார்பில் இருந்த மாலையையும் முன்கையின் கடகத்தையும் தந்தான். தாங்கள் யார் என்று கேட்க விடை கூறாது சென்ற நள்ளியை மற்றவர் கூற அறிந்துகொண்டோம். இங்கு பொருள் கொடுத்த கை மற்றவர்களுக்குத் தெரியா வண்ணம் நடந்து கொண்ட மனிதத் தன்மையைக் காணமுடிகிறது.*

*நள்ளியின் பரிசில் பெற்ற மகிழ்ந்துண்ட கூட்டத்தில் பாடுவதற்குரிய பாணர் காலையில் இசைப்பதற்கு உரிய மருதப்பண்ணுக்குப் பதிலாக மாலையில் பாடவேண்டிய செவ்வழிப் பண்ணைப் பாடினர். மாலையில் பாடவேண்டிய செவ்வழிப் பண்ணுக்குப் பதிலாகக் காலையில் பாடவேண்டிய மருதப்பண்ணைப் பாடினர். இதனைக் கண்ட பெருநள்ளி வன்பரணரிடம் காரணம் என்ன? என்று கேட்டான். அதற்கு நிரம்ப பாணர்க்குப் பரிசில் அளித்தாய் ஆதலால் பாடவேண்டிய முறையை இவர்கள் மறந்தனர் என்று கூறினார். இதனால் நள்ளி வழங்கிய கொடை பாணர்கள் பாடுவதை மறக்கும் அளவிற்கு அதிகமான கொடை என்பதை அறியமுடிகிறது.*

*நள்ளியின் கொடைச் சிறப்பைக் கூறிய வன்பரணர் பிறர்க்கு ஈயும் பெருமையில்லாத அரசரைப் புகழும் புகழ்ச்சியை விரும்பி அவ்வரசர் செய்யாதவற்றைச் சொல்லி அவர் குணங்களைக் கூறுவது என்பதை அறியாதது எம்முடைய செவ்விய சிறுநா என்று கூறியுள்ளார். அதனால் புலவர்கள் வள்ளல் தன்மை உடையவர்களின் இயல்பை மட்டும் பாடியுள்ளனர். பொய் கூறி பிழைப்பு நடத்திய பெருமை அக்கால வறுமையுடைய புலவர்களுக்கும் இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இனி, அரசர்கள் அல்லாது பிற ஈகையாளர்கள் குறித்துக் காண்போம்.*

***தோயன்மாறனின் பெருந்தகவு (புறநானூறு)***

*கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனரால் பாடப்பட்டவன் ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறன் . இவன் பெயர் ஈர்ந்தூர் கிழான் கோயமான் என்று சில*

உரையாசிரியர்கள் கருதுகின்றனர். ஈர்ந்தூர் என்பது இக்காலத்தில் கொங்கு நாட்டில் ஈஞ்னூர் என்று அழைக்கப்படுகிறது. இவன் சோழ வேந்தர்களுக்குத் துணையாகப் போர்புரிந்தவன். ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறனிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் பசியால் வாடும் பாணன் ஒருவனை ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

***"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;***
***இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே;***
***இறையுறு விழுமம் தாங்கி, அமரகத்து***
***இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண் நோய் தீர்ந்து,***
***மருந்து கொள் மரத்தின் வாள் வடு மயங்கி,***
***வடு இன்று வடிந்த யாக்கையன், கொடை எதிர்ந்து,***
***ஈர்ந்தையோனே, பாண் பசிப் பகைஞன்;***
***இன்மை தீர வேண்டின், எம்மொடு***
***நீயும் வம்மோ? முதுவாய் இரவல!***
***யாம்தன் இரக்கும் காலை, தான் எம்***
***உண்ணா மருங்குல் காட்டித், தன் ஊர்க்***
***கருங் கைக் கொல்லனை இரக்கும்,***
***திருந்து இலை நெடு வேல் வடித்திசின் எனவே."*** [107]

முதிய இரவலனே! ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் இரப்பவர்களின் வறுமையைத் தீர்க்கும் அளவிற்குக் கொடுக்கும் செல்வம் உடையவன் அல்லன்; ஆனாலும், இல்லையென்று மறுத்துக் கூறும் சிறுமை இல்லாதவன். அவன், தன் அரசனுக்கு வந்த துன்பங்களைத் தான் தாங்கிக்கொண்டு, போர்க்களத்தில் படைக்கருவிகளால் உண்டாகும் விழுப்புண்களை ஏற்றுக் கொண்டவன். மருந்துக்காகப் பல இடங்களில் வெட்டப்பட்ட அடிமரம்போல் உடலெல்லாம் வடுக்கள் நிறைந்திருந்தாலும் அவன் குற்றமற்ற அழகிய உடலுடையவன்; இரவலரை எதிர்பார்த்திருப்பவன்; ஈர்ந்தூர் என்னும் ஊரைச் சார்ந்தவன்; பாணர்களின் பசிக்குப் பகைவன். உன்னுடைய வறுமை தீர வேண்டுமானால், நீ என்னோடு வருவாயாக. நாம் இரக்கும் பொழுது, நம்முடைய பசியால் வாடும் வயிற்றைத் தன் ஊரில் உள்ள வலிய கைகளுடைய கொல்லனிடம் காட்டிச் சிறந்த இலைவடிவில் அமைந்த நெடிய வேலை வடிப்பாயாக என்று கூறுவான். அதாவது, கொல்லனிடம் வேல் வடிப்பாயாக என்று கூறுவது, பகைவர்களோடு போருக்குச் சென்று, அவர்களை வென்று, பொருள் கொண்டுவந்து இரப்போர்க்கு அளிப்பதற்காக என்ற பொருளில் கூறப்பட்டிருக்கிறது.

அரசனுக்குத் துணையாக போர் புரியும் தோயன் மாறன் பசிப்பிணிப் போக்கும் மருத்துவனாகவும் பெருந்தகவுடைத்த மனிதநேயப் பண்பாளராகவும் விளங்குவது இவண் சுட்டத்தக்கது.

***மணிமேகலை சுட்டும் அறச்சான்று***

*மணிமேகலை காப்பியத்தலைவியாக உயர்வு பெற்றதே அவள் பசிப்பிணி போக்கும் அறத்தினை மேற்கொண்டதால்தான் என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார். அறம் செய்வோரின் தகுதியை,*

> ***"பத்தினி பெண்டிர் பண்புடன் இடூஉம்***
> ***பிச்சை ஏற்றல் பெருந்தகவு உடைத்து"*** [108]

*முதலில் அமுதசுரபியில் பிச்சையிடும் தகுதியுள்ளவள் ஆதிரை என்று காயசண்டிகை கூறுவதாக இந்நூலின் ஆசிரியர்,*

> ***"வான் தருகற்பின் மனை உறை மகளிரில்***
> ***தான் தனி ஓங்கிய தகைமையள் அன்றோ."*** [109]

*இதன் மூலம் மணிமேகலைக் காப்பியத்தில் அறத்துடன், அறம் செய்வோரின் தகுதியும் வரையறுக்கப்படுகிறது. பசிப்பிணி போக்கும் அறத்துடன் கற்பறத்தையும் இந்நூலின் ஆசிரியர் போற்றுகிறார். மேலும் திருவள்ளுவர் திருக்குறளில்,*

> ***"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்***
> ***பெற்றான் பொருள்வைப் புழி"*** [110]

*இக்குறளில் செல்வம் பெற்றவர்கள் தம் எதிர்காலத்துப் பயனுக்கென அதனைச் சேமித்து வைப்பர். சேமித்து வைப்பதற்குரிய நல்ல இடம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அது பசியால் வாடும் மக்களின் வயிறுதான் என்று வள்ளுவர் கூறுகிறார். வள்ளுவர் வலியுறுத்தும் இப்பேரறத்தினையே, மணிமேகலை காப்பியத்தில் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.*

*பசியை நீக்கும் மருத்துவன் பசிப்பிணி மருத்துவன். சங்ககால வள்ளல் பெருமக்கள் அனைவரும் பசிப்பிணி மருத்துவர்களாகவே விளங்கினர். தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம் என்றார் தேசியக்கவி பாரதி. இன்றும் பசி என்று வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது மனமுவந்து உணவு வழங்கும் அனைவரும் பசிப்பிணி மருத்துவர்தான். பசிப்பிணி போக்குவதே தலைசிறந்த மனிதநேயம் என்று சாத்தனார், தன் காப்பியத்தில் குறிப்பிடுகிறார்.*

***அதியனின் அன்புள்ளம்***

*அதியமான் நெடுமான் அஞ்சி சங்ககால அரசர்களில் ஒருவன். ஒருநாள் மட்டும் செல்லவில்லை, இருநாள் மட்டும் செல்லவில்லை பல நாட்கள் பலருடன் சென்றாலும் முதல்நாள் காட்டிய விருப்பம் போல அன்பு செய்பவன்.*

> ***"தண்டாக் காதலும் தலைநாட் போன்மே "*** [111]

என்று கூறுவதற்கு ஏற்ப அன்பு செலுத்தியபவன். அவனது அன்பைப் பெற்ற சங்ககால ஔவையார் அரசர்களும் புலவர்களும் போற்ற பெருமதிப்புடன் வாழ்ந்தவர். சங்ககால ஔவையாரின் வாழ்க்கை வரலாற்றை சுவைத்தே பாரதியார்,

> **"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
> **நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
> **திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
> **செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"** [112]

என புதுமைப் பெண்ணைப் படைத்திருப்பார் போலும். ஏனெனில் பாரதி கூறிய அத்தனை இயல்புகளும் இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் வழ்ந்த சங்ககால ஔவையாரிடம் அதிகமாகவே இருந்திருக்கின்றன.

கொங்குநாட்டில் தருமபுரி எனப்படும் தகடூரை ஆட்சி செய்த அதியனின் கொடைப் புகழ் தமிழகமெங்கும் பரவியது. கடல் நோக்கிச் செல்லும் ஆறுகள் போல புலவரும், பாணரும், பொருநரும், கூத்தரும் பரிசில் பெற்றுச் சென்ற வண்ணம் இருந்தனர். அக்காலத்தில் மூவேந்தரையும் பாரி வள்ளலையும் பாடிய ஔையார் அதியமானைப் புகழ்ந்துபாடி பரிசில் வேண்டி சென்றார். புகழ்பெற்ற வள்ளல் அதியனும் ஔவையின் புலமை நலமும் மனநலமும் கேள்வியுற்றிருந்தான். ஔவையார் தன் பெருமனைக்கு வரப்பெற்றதும் அவரை சிலநாள் தங்க வைக்கக் கருதி உடன் வந்த பரிசிலர்க்கு வேண்டிய பரிசில் கொடுத்து விடுவித்தான். ஔவைக்குப் பரிசில் தரக்காலம் நீடித்தான். அதனால் ஔவையார் தன் மனதிடம் யானை தன் கொம்புக்கு இடையில் வைத்த உணவுத் திரளைப் போல் அதியனது பரிசில் தம் கையில் உள்ளதாகும் அது தவறாதுப் பரிசில் பெறும் பொருட்டு மனம் வருந்த வேண்டாம் என்று தன் மனத்திடம் கூறினார். அதியனின் மனம் அறியாத ஔவையார் வாயில் காவலனிடம் அதியன்மான் நெடுமான் அஞ்சி தன்னுடையத் தகுதியை அறியானோ? அறிவும் புகழும் உடைய வேள்பாரி முதலிய நல்லோர் இறந்ததால் வளமிக்க உலகம் வறிதாகவில்லை. யாங்கள் எத்திசைச் சென்றாலும் அத்திசையில் சோறு கிடைக்காமல் போகாது. சோறு ஒன்றே நான் வேண்டுவது என எண்ணி எனக்கு விடைதர நீடிப்பது உயர்ந்தன்று என்று கூறினார்.

அதிகமான் நெடுமான் அஞ்சியும் ஔவையாரின் தமிழ்ப்புலமைக்காகவும், எவருக்கும் தலைவணங்காத அவரது இயல்புக்காகவும் அவர் மேல் மதிப்பும் பற்றும் வைத்திருந்தான். இந்நிகழ்விற்குப் பின் அதியமான் ஒருமுறை வேட்டைக்குச் சென்று தன் நாட்டில் நின்ற மலைக்குச் சென்றான். அம்மலையில் அருநெல்லிமரம் ஒன்று இனிய கனிதாங்கி நின்றது. அதனை உண்டோர் நெடிது வாழ்வார் என்று கூறினர். வேட்டைக்குச் சென்ற அஞ்சி அம்மரத்தின் தீங்கனியைப் பறித்துத் தான் உண்ணாது தன் அரண்மனைக்கு வந்திருந்த ஔவைக்குத் தந்தான். அதியமான் நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்ததை சிறுபாணாற்றுப்படையில்

***“........................ ....... மால் வரை***
***கமழ் பூஞ் சாரல் கவினிய நெல்லி***
***அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த***
***உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்***
***அரவக் கடல் தானை அதிகனும் ............”*** [113]

*நல்லூர் நத்தத்தனார் கூறியுள்ளார். ஔவை உண்டபின், இத்தீங்கனியை உண்டவர் நீண்ட நாட்கள் வாழ்வர் என்ற உண்மைச் செய்தி தெரிந்தது. ஔவையார் பெருவியப்புற்றுத் தான் நெடிது வாழ நினையாது எனக்குத் தந்து என்னை நெடிது வாழச் செய்த பெருந்தன்மையை என்னென்பேன் என்று கூறும் போது,*

***“வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்***
***களம் படக் கடந்த கழல் தொடி தடக் கை***
***ஆர் கலி நறவின் அதியர் கோமான்***
***போர் அடு திருவின் பொலந் தார் அஞ்சி!***
***பால் புரை பிறை நுதற் பொலிந்த சென்னி***
***நீலமணி மிடற்று ஒருவன் போல***
***மன்னுக பெரும! நீயே தொல் நிலைப்***
***பெரு மலை விடரகத்து அரு மிசைக் கொண்ட***
***சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது***
***ஆதல் நின் அகத்து அடக்கிச்***
***சாதல் நீங்க, எமக்கு ஈந்தனையே”*** [114]

*அதிகமான் நெடுமான் அஞ்சி தான் வாழ்வதைவிட ஔவையார் வாழ்ந்தால் தமிழ் வாழும் என நினைத்தான். ஆதலால் ஔவையாரும் தனக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமானை சிவபெருமான் போல இவ்வுலகில் நிலைத்து வாழ வாழ்த்தியுள்ளார். ‘வெற்றிவாளை ஏந்தி, பகைவரின் பல போர்க்களங்களைக் கடந்த கால்களையும், தொடியணிந்த கையில் நுரைக்கும் தேனுமுடைய அதியர் கோமானே! வெற்றிச் செவத்தையும் பொன்மாலையையும் உடைய அஞ்சியே! பழமை வாய்ந்த பெரிய மலையின் பிளவினுள் அரிதாக வளர்ந்த சிறிய இலையுள்ள நெல்லியின் இனிய கனியை, அதன் அருமையை எனக்கு சொல்லாது உன் மனத்துள் வைத்துக் கொண்டு, சாகாது இருக்க எனக்குத் தந்தாய். ஆதலால், நீலமணி போன்ற கழுத்தை உடைய சிவன் போல நிலைபெற்று நீ வாழ்வாயாக! என வாழ்த்தியுள்ளார்*

***"அதியமான் தான் அக்கனியை உண்டிருப்பின் அவனது***
***உடல்போல அவன் பெயரும் மங்கி இருக்கும்"*** [115]

*அதியமானின் புகழ் இன்றும் பேசப்படுவதற்குக் காரணம் அதியனின் சிறந்த மனிதநேய உள்ளமேயாகும் என்பதில் ஐயமில்லை.*

**கொடை வண்மை**

*அதியமானிடம் பரிசில் பெற்றுச் சென்ற ஔவையார் வழியில் ஒரு சுரத்தில் தன் சுற்றத்தோடு தங்கியிருந்த விறலி ஒருத்தியைக் கண்டார். விறலி தான் அடைந்துள்ள வறுமையைத் தெரிவித்தாள். இடுவோர் இல்லாது கவித் தன் உண்கலத்தை உணவிடத் திருப்புபவர் எனக்கும் பரிசில் அளித்தவன் அதியமான். அவனை நோக்கிச் சென்றால் அவன் உனது உண்கலத்தில் நிறைய அளிப்பான் என்று கூறுவது விறலியரை ஆற்றுப்படுத்துவதாக உள்ளது. யாரும் கொடையளிக்காது வறுமையுற்ற காலத்திலும் அதியமான் உண்கலத்தை நிறைவிப்பான் என்பதில் அவனது கொடையின் மாண்பும் மனிதநேயமும் வெளிப்படுகிறது.*

*எனினும் அதியமான் நெடுமான் அஞ்சி இறந்த பொழுது ஔவையார் பாடிய பாடல்கள் நெஞ்சை உருக்குபவை. அதியமானின் புகழ் இன்றும் இருப்பதற்கு ஔவையாரின் பாடல்களே காரணம் என்று அறிஞர்கள் கருதுவர்.*

*மனதில் எவ்வித நோக்கமின்றி பிறருக்குப் பொருள்களை வழங்கினால் அவர்களை ஈகையுடையார் என்று கூறலாம். இவ்வாறு வரையாது வழங்கிய அதியனை ஔவை,*

***“ஓயாது ஈயும், மாரி வண்கை”*** [116]

*என்றும் அதியனின் நேயத்தைச் சுட்டுவது இவண் உணரத்தக்கதாகும். தம் போன்ற படைப்பாளரை மதிக்கும் பண்பு ஔவையிடம் காணப்பட்டது.*

***“வெள்ளி வீதியைப் போல நன்றும்***
***செலவு அயர்ந்திசினால் யானே”*** [117]

*என்ற பாடல் மூலம் தன்னுடைய சமகால புலவர்களை மதித்துப் போற்றிய நேயத்தைக் காணலாம். அகப்பாடல்கள் மட்டுமே பாடிய வெள்ளி வீதியைப் பாராட்டி எழுதியுள்ள ஔவையின் நேயம் இப்பாடலில் வெளிப்படுகின்றன.*

**கொடைச் சிறப்பு**

***“செல்வத்துப் பயனே ஈதல்”***

***“கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று”***

*என்ற கொள்கை வழி வாழ்ந்தனர் சங்கத் தமிழர். நேற்றைய வறுமை நிலையை எண்ணிப் பாராது, நாளைய வறுமையினின்றும் தற்காத்துக் கொள்ள நினையாது இன்று கிடைத்த குமணனின் பெருஞ்செல்வத்தை “எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே” என்கிறார் பெருஞ்சித்திரனார்.*

*புலவரின் வறுமை தீர்க்க, தன் தலையையே விலையாகத் தரத் துணிகிறான் குமணன். மறுமை நோக்கியது அன்று பேகனின் கொடை வளம். அது வறுமை*

நோக்கியது என்ற பரணரின் பாராட்டு அவனின் சுயலாபம் தேடாத நெஞ்சப் பண்பைக் காட்டவல்லது. முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, காட்டு மயிலுக்கு ஆடை அளித்த பேகன் என்ற கொடைமடம் பட்ட வள்ளல்களின் செயல்பாடுகள், அரசர்கள் என்ற ஏற்றமிகு நிலையில் வாழ்ந்தாலும், அஃறிணை உயிர்களையும் நேசித்த பேரருளின் வெளிப்பாடாக விளங்குகின்றன.

***"எந்நா டோ? என, நாடும் சொல்லான்!***
***யாரீ ரோ! எனப், பேரும் சொல்லான்;***
***பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே;***
***இரும்பு புனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி***
***அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றின்***
***பளிங்கு வகுத் தன்ன தீம் நீர்,***
***நளிமலை நாடன் நள்ளிஅவன் எனவே."*** [118]

இவ்வரிகள் உணர்த்துவது யாதெனில் விளம்பர மோகமின்றி விருப்பத்துடன் உதவும் உளப்பாங்குடன் கண்டீரக் கோப்பெருநற்கிள்ளி போன்ற கொடையாளர்கள் வாழ்ந்தனர் என்பது கொடைச்சிறப்பாக உள்ளது என்பது இவண் சுட்டத்தக்கது.

***எந்நிலையிலும் வள்ளல் தன்மை***

வள்ளல்கள் எந்நிலையும் வள்ளல் தன்மையிலிருந்து மாறுவதில்லை என்பதைப் பல புலவர்களின் பாடல் வழி அறியலாம்.

***"கான்கெழு நாடன், நெடுந்தேர் அவியன், என***
***ஒருவனை உடையேன் மன்னே, யானே;***
***அறான், எவன் பரிகோ, வெள்ளியது நிலையே?"*** [119]

என்ற பாடலில் அவியன் மிக கடுமையான சூழலிலும் கூட தன்னுடைய வள்ளல் தன்மையில் இருந்து மாறுபடவில்லை என்பதை உணர்த்துகிறது.

***"துடிய! பாண ! பாடுவல் விறலி!***
***என் ஆகுவிர்கொல் ? அளியிர் நுமக்கும்***
***இவண் உறை வாழ்க்கையோ, அரிதே ! யானும்"*** [120]

இப்பாடலில் கலைஞர்களுக்கு உதவமுடியவில்லை என்று வருந்தும் நேயத்தை அறியலாம்.

***ஆட்சி : இயற்கை : மானுடநேயம்***

இயற்கை மனிதனை மட்டுமல்ல, உயிர்களைக் காக்க வேண்டிய அவசியம் என்ன? மனிதனுக்கு எதிரியாக இயற்கை இயங்கலாமே! இயற்கை தனக்குட்பட்ட அனைத்து வகை உயிர்களையும் அழிவு, ஆபத்து, உற்பாதங்கள் போன்றவைகளிலிருந்து காப்பாற்றும் தன்மை மேன்மையானது. அந்த மேன்மை அரசன் சேரமான்

*பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனிடம் உள்ளது. இது இயற்கையின் மானுட நேயம் போன்றது. அரசன் சேரலாதனின் மானுடநேயம் ஆட்சியின் மாண்பு மானுடநேயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதாக முரஞ்சியூர் முடிநாகராயர்.*

***"மண் திணிந்த நிலனும்,***
***நிலன் ஏந்திய விசும்பும்,***
***விசும்பு தைவரு வளியும்***
***வளித் தலைஇய தீயும்,***
***தீ முரணிய நீரும், என்றாங்கு***
***ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்***
***போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்***
***வலியும், தெறலும், அணியும், உடையோய்"*** [121]

*என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகின்றார்.*

*உலகம் முழுக்க செஞ்சிலுவைச் சங்கம் என்ற ஓர் அமைப்பு உண்டு. இதனை நிறுவியர் ஹென்றி டூணாண்ட் என்ற சுவிஸ் நாட்டு அறிஞர். மனித குலத்திற்கு எவ்வகையில் துன்பம் நேர்ந்தாலும் உடனே அங்கு சென்று முதலுதவி செய்து அம்மக்களின் மறுவாழ்வு வரையிலும் உதவி செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் தான். இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் போராக இருந்தாலும், பூகம்பமாக இருந்தாலும் ஆழிப்பேரலையாக இருப்பினும் எரிமலை வெடிப்பாக இருப்பினும் தீவிரவாதத் தாக்குதலாக இருப்பினும் மக்கள் பாதிப்பிற்கு ஆளாகும் போது உடனே சென்று உணவு, உடை, தங்குவதற்குத் தேவையான குடில்கள் போன்றவைகளை மனிதாபிமான முறையில் உதவி புரிகிறது. நாடு, இனம், மொழி பாராமல் இப்பணித் தொடர்கிறது. இச்செயலை சுமார் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தைவிடப் பெரிய அளவில் உதவி புரியும் நோக்கில் சேரமான் பெருஞ்சோற்று உதியன் செயல் புரிந்துள்ளான். இவன் ஆட்சி புரிந்ததோ தென்னிந்தியாவைச் சேர்ந்த அக்காலத் தமிழகம். பாரதப் போர் நடைபெற்றதோ வட இந்தியாவில் குருஷேத்திரம். பாண்டவர்க்கும் துரியோதனாதிகளாகிய நூற்றுவர்க்கும் போர் நடந்திருக்கிறது. துரியோதனாதிகள் போரிட்டு மாய்ந்துவிட்டனர். அந்தப் போர்க்களத்தில் மாய்ந்துவிட்ட தலைவனுடைய எஞ்சிய படைவீரர்கட்கும், தருமன் முதலாகிய ஐவரின் படைவீரர்கட்கும் சேரலாதன் சோறிட்டுக் காப்பற்றினான். பொதுவாக வென்றவர்கள் பக்கம் சார்ந்து தோற்றவர்களை உதாசீனப்படுத்தும் பழக்கத்தைக் கடந்து இருவரையும் நேயத்துடன் பார்த்துப் பசி ஆற்றினான் என்றால் அது மானுட நேயத்தின் அடையாளமல்லவா? என்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது.*

***"அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ***
***நிலந்தலைக் கொண்ட பொலம் பூந்தும்பை***
***ஈர் ஐம்பதின்மரும் பொருது களத்து ஒழிய,***
***பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"*** [122]

உணவு அளிப்பது என்பது ஒரு கொடைச் செயல்தான் என்றாலும், மனித நேய அடிப்படையிலான செயலாகச் இச்செயல் பார்க்க முடிகின்றது. போர்க்களத்தில் இம்மன்னன் உணவு அளித்தது வேறு எந்த உள்நோக்கம் கருதியதாகப் பாடலில் சான்றாதாரம் இல்லை. எனவே இம்மன்னனின் உதவி கைம்மாறு கருதாத மாண்புரும் மனித நேயமே என்று கொள்ளலாம்.

மேலும், பாண்டியன் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பற்றிப் பல பாடல்கள் உள்ளன. அத்தனையும் வாகைத்திணைப் பாடல்கள். அவற்றுள் 25 ஆம் பாடல் குறிப்பிடத்தக்கது. சுக்கிரநீதி என்ற நூலின் முதல் அத்தியாயத்தில் 124, 125 ஆம் சுலோகம், "தீயோலை ஒறுத்தலும், ஈதலும், குடிகளைக் காத்தலும், இலாசசூயம் முதலிய வேள்விகளை வேட்டலும், அறநெறி பிறழாது பொருள் ஈட்டலும், பிற அரசர்களைத் திறை தரச் செய்தலும், பகைவரைத் தொலைத்தலும், மேன்மேலும் நிலப்பகுதி கோடலும் ஆகிய இவ்வெட்டும் அரசர்க்குரிய தொழில் ஆகும்" என்று சொல்கிறது. அடுத்த சுலோகத்தில், "தம் படையைப் பெருக்காதவரும், பிற வேந்தர்களைத் திறை செலுத்தச் செய்யாதவரும், குடிகளை நன்கு ஓம்பாதவருமாகிய அரசர்கள் பேடியை ஒப்பர்" என்று கூறப்படுகிறது.

பாண்டியன் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அரசனுக்குரிய கடமையை - சுக்கிரநீதி கூறுகின்ற கடமையைச் செய்வதில் பின்வாங்காதவன். ஆனால் அவனைப் பாடுகின்ற கல்லாடனார் என்ற புலவர்,

> ***"முலைபொலி அகம் உருப்ப நூறி,***
> ***மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்,***
> ***ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர,***
> ***அவிர்அறல் கடுக்கும் அம்மென்***
> ***குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே."*** [123]

என்று பாடுகிறார். இவ்வரிகள் சொல்லுவன என்ன? தம் கணவர் போரில் நெடுஞ்செழியனின் படையால் கொல்லப்பட்டதை அறிந்து அவர்களின் மனைவிமார்கள், முலை செழுத்த மார்பம் வருந்துமாறு அடித்துக் கொண்டும் அறிவு மயங்கியும் அளவற்ற அழுகையால் ஆரவாரித்தும் ஒள்ளிய நெற்றியை உடைய பெண்கள், கைம்மையை மேற்கொள்ள வேண்டி, நன்றாக விளங்கிக் கொண்டிருக்கும் ஆற்றின் கருமணலைப் போலவும், மெல்லியதும் குவிந்ததுமான கரிய கூந்தலைக் களைந்தார்கள். அதனைக் கண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் உடனே போரை நிறுத்திவிட்டு அருள்செய்தான். இது மானுட நேயத்தின்அடையாளமல்லவா? சுக்கிர நீதி கூறும் கடமையை விட மனிதநேயமே மிகவும் பாராட்டப்பட வேண்டிய நெடுஞ்செழியன் பின்பற்றினானே என்பது இவண் சுட்டத்தக்கது.

***மானுடநேயத்தின் வெளிப்பாட்டு அடையாளம்***

*மானுடநேயம் இடம், சூழல், தேவைக்கு ஏற்ப வெளிப்பட வேண்டும். அன்பாக, கருணையாக, உதவியாக, எளிமையான சொற்களாக வெளிப்படலாம். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியைப் பற்றிப் பாடியுள்ள பாடாண்திணைப்பாடலில் புலப்படுத்துகிறார். (புறம் 30). அவரே இருபத்து ஏழாவது பாடலில் கூறும் மானுடநேயம் அரசன் மட்டும் அல்ல அனைத்து மானிடரும் பின்பற்றவேண்டும். அறம், பொருள், இன்பம் என்பவற்றின் தன்மையைக் குற்றமில்லாது, அறிவுடையோர் அரசனுக்குக் கூறுதல் முதுமொழிக்காஞ்சித்துறை. உலகில் மானுடவாழ்வில் வளர்கின்ற செல்வம் குறைவதையும், குறைந்து போனது வளர்வதையும், பிறந்தது இறப்பதையும், இறந்தது பிறப்பதையும் உண்மை என்று மனிதன் அறிந்து கொள்ள தேய்ந்து, வளர்ந்து, மறைந்து தோன்றி வளர்ந்து மறைந்து காணப்பெறும் நிலவு உதாரணமாக விளங்குகிறது அல்லவா? இப்பேர்ப்பட்ட வாழ்க்கையில் மானுட நேயத்தோடு வாழ்ந்தால் மட்டுமே புலவரல் பாடப்பெறுவர். அப்படிப் பாடப்பட்டவர் தான் துறக்கம் செல்ல முடியும்! அதாவது புகழுடையாரைத் துறக்க உலகத்து ஊர்தி வந்து அழைத்துச் செல்லும் என்பது பொதுவான நம்பிக்கை. என்பதனை,*

***"புலவர் பாடும் புகழுடையோர், விசும்பின்***
***வலவன் ஏவா வான ஊர்தி***
***எய்துப என்பதம் செய்வினை முடித்தெனக்"*** [124]

*என்ற வரிகளில் தெரிகிறதே! அப்படி என்றால் புகழ் அடைய ஒருவர் செய்ய வேண்டிய நல்ல செயல் என்ன? அதே பாடலில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சொல்வது மிக முக்கியமான அம்சம். அதைத் தான் நாம் மானுட நேயம் எனப் புரிந்துகொள்ள வேண்டும். சோழன் நலங்கிள்ளியே!*

***"திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து,***
***வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,***
***வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,***
***அருள வல்லை ஆகுமதி; அருளிலர்***
***கொடா அமை வல்லர் ஆகுக;***
***கெடாஅத் துப்பின் நின் பகை எதிர்ந் தோரே"*** [125]

*என்று முதுகண்ணன் சாத்தனார் கூறுகிறார். திங்களாகிய கடவுள் இயங்கும் இந்த உலகத்தில் ஒரு காரியத்தைச் செய்ய முடியாதவர்களானாலும் செய்யும் வல்லமை வாய்ந்தவர்களானாலும் வறுமையால் வருந்தி வந்தோரின் பாடறிந்து அவர்களுக்கு அருளுடன் உணவு முதல் அனைத்தும் வழங்க வல்லவனாகுக. பகைவர்கள் எனப்படுபவர்கள் அருளின்றிக் கொடுக்காமல் இருப்பதில் வல்லவராகட்டும் என்று அறிவுரை கூறுகிறார். மேலும் சோழன் நலங்கிள்ளி அடக்கம் உடையவன். அதனால் மனித நேயம் அவனுடைய அடக்கத்தின் உள் ஒளிரும் ஒரு பண்பு என்பதை உறையூர்*

*முதுகண்ணன் சாத்தனார் புறநானூற்றுப் பாடல் முப்பதில் கூறுகிறார். அவர் கூறும் முறை, ஒப்புமை அமைப்பில் அமைந்து முரண்பட சொல்லும் பாங்கில் அமைந்துள்ளது.*

***"செஞ்ஞா யிற்றுச் செலவும்***
***அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்,***
***பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,***
***வளி திரிதரு திசையும்,***
***வறிது நிலைஇய காயமும், என்றிவை***
***சென்றளந்து அறிந்தார் போல, என்றும்***
***இனைத்து என்போரும் உளரே அனைத்தும்***
***அறிவுஅறி வாகச் செறிவினை யாகிக்"*** [126]

*சிவந்த சூரியனின் பாதையும், அச்சூரியனின் இயக்கமும் இயக்கம் சூழ்ந்த கிரணக் கதிர்களால் அமைந்த பார் வட்டடும் காற்றின் திசைகளும் எந்தப் பற்றுதலும் இல்லாது தனித்து நிற்கும் ஆகாயமும் ஆகிய இவற்றைச் சென்று அங்கங்கு அளந்து அறிந்தவர்களைப் போல் என்றும் எப்போதும் இவ்வளவின் என்று கூறுவோறும் உளரே! ஆனால் அவர்கள் அடக்கம் என்பது அறியார். நீயோ அடக்கமாக இருந்து வறிது வந்தவர்களுக்குப் பசிக்காக உணவு வழங்குகிறாய்! கூர்த்த அறிவுக்கெல்லாம் விட மேன்மையான மனித நேயமே சமுதாயத்தை உய்விக்கும் என்று புலவர் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.*

**போரில் வெளிப்படும் நேயம்**

*பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனைப் பற்றி மதுரை மருதன் இளநாகனார் பாடிய பாடலில் ஒரு அரசன் பெறும் வெற்றியைப் பற்றிச் சொல்லும் போது, "மாண்புடைய அறநெறியை அடிப்படையாகவும் முதலாகவும் கொண்டு பெறும் வெற்றியே வெற்றி ஆகும்" என்று கூறுகிறார். மாண்புடைய அறநெறி என்பது எது எனப் புரிந்து கொள்ள நெட்டிமையார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய பாடல் வழி காட்டுகிறது.*

***"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,***
***பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்***
***தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்***
***பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்,***
***எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்' என"*** [127]

*அறத்து ஆறு நுவலும் பூட்கை, வஞ்சினம் கூறலில் வெளிப்படும் மானுடநேயம் வஞ்சினக் காஞ்சி என்ற துறையில் உள்ள பாடல்கள் மானுட நேயத்தின் வெளிப்பாடுதான். (காஞ்சித்திணையில் எதிர்த்த பகைவரை வெல்வேன்; வெல்லேனாயின் இன்ன பிழை செய்தவன் ஆவேன் எனத் தன்னைக் குறித்து மொழிவது வஞ்சினக்காஞ்சி ஆகும்) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பாடிய புறநானூற்றுப் பாடல் 71 ல்*

அவனுடைய வஞ்சினம் வெளிப்படுகிறது. அந்த வஞ்சினத்தின் அடிப்படையே மக்கள் மேல், மனிதர்கள் மேல் கொள்ளும் நேயம் எனப் புரிந்து கொள்ள முடிகிறது. பெரிய படை உடைய வேந்தர் பலரும் தம்முள் கூடி என்னுடன் **"போரிடுவோம்"** என்பர். அவர்களைத் துரத்தி அடிப்பேன். அப்படித் துரத்தி அடிக்க முடியவில்லை எனில்,

- ❖ என் மனைவி பெருந்தேவியை விட்டு நீங்குவேனாகுக.
- ❖ அறம் விளங்கியுள்ளதும் குடிகளிடம் மாறுபடாத அன்புடையதுமான அவைக்களத்தில், அற முறைக்குப் புறம்பான ஒருவனை வைத்து, நீதி நெறி தவறி கொடுங்கோல் ஆட்சி செய்தவனாக நான் ஆவேனாகுக.
- ❖ கண்போன்ற நண்பர்களை இழந்து இனிய பெருமிதம் கூடிய மகிழ்ச்சியான நகைப்பினைத் தவறவிட்டவன் ஆவேனாகுக.என்று வஞ்சினம் மொழிகிறான்.

அந்த வஞ்சினங்களில் எல்லாம் இழையோடும் கூறு மனிதநேயம் தானே? அதே போல பாண்டியன் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் புறநானூற்று 72 ஆம் பாடலில் தன்னைச் சிறு சொற்களால் மன உளைச்சலை ஏற்படுத்தியவருக்குத் தோல்வியைத் தருவேன். நான் தோற்றுவிட்டால்,

**“என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது,**
**கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக”** [128]

என்று கூறியதோடுமட்டுமல்லாமல் தன்னைச் சிறப்பித்து மாங்குடி மருதனார் தலைமையிலான புலவர்களும் தன் நாட்டைப் புகழ்ந்தும், தன்னைப் புகழ்ந்தும் பாட வேண்டாம் என்று வஞ்சினம் கூறுகிறான். அதற்குமேல் மக்கள் துன்பம் அடைந்து வறுமை அடைந்து தன்னிடம் வந்து இரந்து கேட்கும் சூழ்நிலையில் அவர்களுக்குத் தரத் தக்க மனநிலையும் செல்வநிலையும் இல்லாமல் நான் சீரழிய வேண்டும் என்று வஞ்சினம் கூறுகிறான். ஆக, இந்த மனநிலையைத் தான் நாம் இன்று ‘மானுடநேயம்’ என்று சொல்கிறோம். அதைச் சில சங்க இலக்கிய ஆய்வாளர்கள், இனக்குழுச் சமுதாயத்தின் அறக்கோட்பாடு அதுவும் பொதுமை அறக்கோட்பாடு என்று கூறுவாருமுளர்.

**உலகமே உறவு, உள்ளதைப் பகிர்தலே வாழ்வு**

உலக இனம் ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியாகவும் வாழத்தான் விரும்புகிறது. ஆனால் இடையில் மதம், இனம், நாடு, மொழி என்ற பிரிவினைவாத நோய் மக்களை ஆட்கொண்டுவிட்டது. இதிலிருந்து விடுதலை அடைய வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் சமூகம் உயர்ந்த நிலையை அடைய முடியும்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற தாரக மந்திரங்களை கி.பி 18 ஆம் நூற்றாண்டில் வெடித்த பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக இவ்வையகம் கற்க முற்பட்டது. ஆனால் கி.பி இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்படத் தோன்றிய சங்க இலக்கியம் எல்லாம் நம் ஊரே, எல்லாரும் நம் உறவினரே என்று சமத்துவ கீதம் இசைக்கின்றது. நன்மையும் தீமையும் பிறர் தர வருவனவல்ல. எனவே யாரையும் நண்பர் பகைவர் என்று பாகுபடுத்தத் தேவையில்லை. உணர்ச்சிப் பெருக்கில் மகிழ்ச்சிக் கூத்தாடுவதும், வருத்த மிகுதியில் துவண்டு விடுவதும் தவிர்க்க வேண்டுவன. சாந்தம் மிகு சமநிலைப் பார்வையே வாழ்க்கையை அமைதிப் பூஞ்சோலையாக ஆக்கவல்லது,

இதனைக் கருத்தில் கொண்டுதான் என்னவோ பழந்தமிழ்ப் புலவன் உலக ஒற்றுமைக்கு முதன் முதலில் வித்திட்ட உலகப் புலவன் கணியன் பூங்குன்றனனின்,

**"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா;**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;**
**சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
**இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,**
**இன்னா தென்றலும் இலமே மின்னொடு**
**வானம் தண்துளி தலைஇ, ஆனாது**
**கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே;**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."** [129]

என்ற வரிகள் பொன்னெழுத்துக்களால் இன்று உலக மனிதநேய ஒற்றுமைக்கு வித்திட்ட ஒப்பற்றவன் என்பது புலனாகிறது. மேலும் **"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"** என்ற பொன்மொழி இன்றைய ஐ.நா சபையின் தாரக மந்திரமாகப் பொறிக்கப்பட்டுள்ளமை எண்ணத்தக்கதாம். அனைவரும் நம் உறவினர். நாம் அனைவரும் ஒரே நாட்டைச் சார்ந்தவர் என்று மக்களிடத்தே எடுத்தியம்பியுள்ள கொள்கைகள் ஆகும். இதனை அடியொற்றியே வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அரசியல் அறிஞர் எழுதி வெளியிட்ட 'ஓர் உலகம்' எனும் நூலில் வருங்காலத்தில் நம் சிந்தனை உலகளாவிய முறையில் பரந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தை யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற வரியிலிருந்து எடுத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

மேலும், வாழ்க்கை என்பது வெறும் கனவல்ல. அது பெருங் கடமை. வாழ்க்கை என்பது பூஞ்சோலையல்ல. அது தவச் சாலை. எனவே தான்,

***"இன்னா தம்ம இவ்வுலகம்***
***இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே!"*** [130]

*என்று அறிவுறுத்துகிறார் பக்குடுக்கை நன்கணியனார்.*

*கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடிய புறநானூற்றுப்பாடல் 182 இல் இந்த உலகம் நிலை பெற்று இருக்கக் காரணம் யாது என ஆய்கிறான். ஆய்வின் முடிவாகத் "தமக்கு என முயலா நோன்தாள் பிறர்க்கு என முயலுநர் உண்மையானே" இந்த உலகம் நிலைபெற்று இப்படி இருக்கிறது என்று கூறுகிறான். இந்த உலகத்திலே இந்திரலோகத்து அமிழ்தமே கிடைத்தாலும் தான் மட்டுமே சாகாது நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற பேராசை கொண்டும், சுய நலம் கொண்டும் இனிதானது என்று நினைத்துக் கொண்டு தானே உண்ணமாட்டார்கள். பிறர் தீது செய்கிறார் என்று யார் மீதும் கோபம் கொள்ளாதவர்கள், புகழ்க் காரியம் செய்வதற்கு உயிரையும் கொடுப்பர். 'பழி' எனின் உலகுடன் கொடுத்தாலும் கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்பேர்பட்ட மனிதர்கள் நிறைந்த உலகம் இது என்று கடலுள் மாய்ந்த இளம்பெரும்வழுதி பேசுகிறான்.மன்னர்களும் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர். உலகத்தில் அரிதாகக் கிடைக்கக் கூடிய இறைவனே வந்து கொடுத்த சிறப்பு பொருந்திய உணவாக இருந்தாலும் அதனைத் தான் மட்டும் உண்ணாமல் உலகில் உள்ள அனைவருக்கும் கொடுத்து உண்ணுவேன் என்று கூறிய அறக் கொள்கையைக் கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி,*

***"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்***
***அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்***
***தமியர் உண்டலும் இலரே"*** [131]

*என்ற பாடல் அடிகளின் மூலம் அமிழ்தமாக இருந்தாலும் அனைவருக்கும் பகிர்ந்தளிப்பேன் என்ற மனிதநேயச் செய்தியைப் புறநானூறு பதிவு செய்துள்ளது இவண் குறிப்பிடத்தக்கது.*

**ஒற்றுமைக் கொள்கையும் மனிதநேயமும்**

*சோழ மன்னர்களாகிய நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் பகைவர்கள். நலங்கிள்ளியின் நாட்டிலிருந்து நெடுங்கிள்ளி ஆட்சி செய்யும் உறையூருக்கு இளந்தத்தன் என்னும் புலவர் வருகிறார். பகை நாட்டிலிருந்து வந்ததால் இளந்தத்தனை ஒற்றன் எனக் கருதி நெடுங்கிள்ளி அவனை கொல்ல முற்பட்டான். இதனைக் கேள்வியுற்ற கோவூர்க் கிழார் அவ்விடம் சென்று,*

***"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி***
***நெடிய என்னாது சுரம் பல கடந்து***
***............ .............. ................ .................***
***வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை***
***பிறர்க்குத் தீதறிந் தன்றோ"*** [132]

எனப் பாடினார். இளந்தத்தனை விடுவிப்பது நல்லது. இல்லையேல் உங்களுக்குள் போர் தொடங்குவதை யாரும் தடுக்க முடியாது என்று கூறி அவனை விடுதலை செய்ய வைத்து இருவரையும் சேர்த்து வைத்து ஒற்றுமைக் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

**சமாதானம் தழைக்க உதவும் சான்றாண்மை**

> ***"உண்டாயின் பதம்கொடுத்து***
> ***இல்லாயின் உடன்உண்ணும்***
> ***இல்லோர் ஒக்கல் தலைவன்"*** [133]

அதியமான் நெடுமான்அஞ்சி மீது பகைமை கொண்ட தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார், குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனையும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெரு வழுதியையும் ஒரு சேரக் கண்ட, காவிரி பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் அவர்தம் நட்பையும் ஒற்றுமையையும் பாராட்டி,

> ***"ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவீரும்***
> ***உடனிலை திரியீர் ஆயின், இமிழ்திரைப்***
> ***பெளவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்***
> ***கையகப் படுவது பொய்யா காதே;***
> ***அதனால், நல்ல போலவும், நயவ போலவும்,***
> ***தொல்லோர் சென்ற நெறியர் போலவும்,***
> ***காதல் நெஞ்சின் நும் "*** [134]

என்று வாழ்த்தினார்.

சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தரும் நட்புடன் ஒருங்கிருக்கக் கண்ட, ஔவையார் வலியோர்க்கு உரியதாகும் இந்நிலவுலகை எம்முடையதென யாரும் உரிமை பாராட்டல் இயலாது, எனவே,

> ***"பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய***
> ***நாரறி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,***
> ***இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி,***
> ***வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்;***
> ***வாழச் செய்த நல்வினை அல்லது,***
> ***ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை"*** [135]

என்று அறிவுறுத்தி, நெடுநாள் வாழ்க என்று வாழ்த்தினார். சேரமன்னன் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்குத் தலையாலங்கானத்துச் செறுவென்ற பாண்டிய நெடுஞ்செழியனுக்கு,

> ***"நாடு எனும் பேர் காடு ஆக,***
> ***ஆ சேந்த வழி மா சேப்ப,***
> ***ஊர் இருந்த வழி பாழ் ஆக"*** [136]

போரின் பின்விளைவுகளை மனங்கொளக் கூறி,

***“பாணர் வருக, பாட்டியர் வருக,***

***யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக என”*** [137]

*வரவேற்று வேண்டுவன அளித்து, புகழ் பெருக்கி, போரைத் தவிர்த்து அறவழியில் வாழ அறிவுறுத்துகிறார் மாங்குடி மருதனார். இச்சரித்திரச் சான்றுகள், சமாதான சகவாழ்வு தழைக்கச், சான்றோர் ஆற்றிய பெருந்தொண்டினைப் பறைசாற்றும்.*

*கிள்ளிவளவனின் ஆட்சிக் காலத்தில், ஒரு சமயம், மழைவளம் குன்ற, வயலில் விளைச்சல் குன்றியது. உழவர்கள் விளை நிலத்திற்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த முடியவில்லை. மன்னனின் ஏவலாளர்களோ வரி கேட்டுத் தொல்லை செய்தனர். மன்னனிடம் நிலைமையை எடுத்துரைத்து விளக்குவது யார்? பலர் அஞ்சினர். துணிவுமிக்க புலவர் வெள்ளைக்குடி நாகனார் அஞ்சாது மன்னனிடம் சென்றார்.*

*"அரசே! உன் வெண்கொற்றக் குடை வெயிலை மறைத்தற்குக் கொண்டதன்று; வாடுகின்ற குடிமக்களின் வருத்தத்தைப் போக்கி அருள் செய்வதன் அடையாளமாகும். உன் படைவீரர் போர்க்களத்தில் தேடித்தந்த வெற்றி உழவர்கள் வயலில் உழுது விளைந்த நெல்லின் பயனாகும். சிலர் கூறும் பொது மொழியை நெஞ்சில் கொள்ளாமல் உழவர் குடியைப் பாதுகாத்து, அக்காவலால் மற்றக் குடிகளையும் பாதுகாப்பாயானால், உன் பகைவர் உன்னடி போற்றுவர்," என்று அச்சமின்றி உரைத்தார். கவிஞர் பாடிய பாடலின் குறிப்பை மன்னன் உணர்ந்தான். ஏனெனில் அவனும் பாடல் பாடிய புலவன் என்பதால்தான். புலவர் வெள்ளைக்குடி நாகனார் பாடிய பாடல் வெல்லும் பாடலானது. கட்டவேண்டிய வரி தள்ளுபடி ஆயிற்று.*

***“நளி இரு முந்நீர் ஏணி ஆக,***

***வளி இடை வழங்கா வானம் சூடிய***

***மண் திணி கிடக்கைத் தண் தமிழ்க் கிழவர்***

***........................................................***

***..........................................................***

***நொதுமலாளர் பொது மொழி கொள்ளாது,***

***பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி,***

***குடி புறந்தருகுவைஆயின், நின்***

***அடி புறந்தருகுவர், அடங்காதோரே”*** [138]

*மேலும், சோழர் குடியில் பிறந்தவர்கள் இருவர்; ஒருவன் நலங்கிள்ளி மற்றவன் நெடுங்கிள்ளி இருவருக்கும் பகை மூண்டது. ஆவூர் என்ற ஊரில் உரிமை குறித்துப் போர் மூண்டது. நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டைக்குள் இருந்தான். நலங்கிள்ளி படையெடுத்து வந்து ஆவூரை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளியோ போர்புரிய வராமல் கோட்டைக்குள் அடைந்து கிடந்தான். கோட்டை அடைபட்டமையால் ஆவூர் முழுவதும் துயரம் கொண்டது. இல்லமெல்லாம் மக்கள் கண்ணீர் விட்டனர். அரசனை நெருங்கிச் சூழ்நிலையை விளக்க எவரும் துணியவில்லை.*

*அறி(ற)வுரை*

*கோவூர்கிழார் என்னும் கவிஞர் நெடுங்கிள்ளியைச் சந்தித்தார். "அரசே! யானைகள் உணவின்றி வருந்திப் பிளிறுகின்றன; பால் இன்றிப் பச்சிளங் குழந்தைகள் அலறுகின்றனர்; வீடுகள் தோறும் மக்கள் கதறுகின்றனர். இவையெல்லாம் கேட்டும் வெட்கப்படாமல் இங்கே இனிதாக நீ இருப்பது தவறு! அறத்தை உடையவன் என்றால் கோட்டை உன்னுடையது என்று கூறித் திறந்து நலங்கிள்ளியிடம் ஒப்படைத்துவிடு. போர்புரியும் வீரம் உடையவன் என்றால் போர்புரியக் கதவைத் திறந்து செல்க! அவ்வாறன்றி நீண்ட மதிலுள் ஒடுங்கிக் கிடப்பது வெட்கப்படத் தக்கதாகும்," என்று அஞ்சாமல் இடித்துரைத்தார். அப்பாடல் வருமாறு:*

***"அறவை யாயின் நினதெனத் திறத்தல்***
***மறவை யாயின் போரொடு திறத்தல்***
***அறவையும் மறவையும் அல்லை யாகத்***
***திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்***
***நீண்ட ஒருசிறை ஒடுங்குதல்***
***நாணுத்தக வுடைத்துக் காணுங் காலே!"*** [139]

*என்ற கடுமையான தொடர்களால் பாடுகிறார். "நாணுத் தகவுடைத்து" என்று கூற எத்துணை நெஞ்சுரம் வேண்டும்! ஆள்பவன் மனம் அறிந்து தாளம் போடாமல், அறிவுரை கூறும் துணிவு, இடித்துக் கூறும் பேராண்மை அந்தக் காலப் புலவர்களுக்கு இருந்தது.*

*சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர்களில் மலையமான் திருமுடிக்காரியும் ஒருவன். அவன் சிறந்த வீரன்; பெரிய வள்ளல்; புலவர்களால் புகழ்ந்து பாடப்பட்டவன். அவனுக்கும், சோழன் கிள்ளிவளவனுக்கும் பெரும்பகை இருந்தது. மலையமான் திருமுடிக்காரி இறந்தான். அதன் பின்னரும் அவன்மேல் கிள்ளிவளவனுக்குப் பகையுணர்வு மறையவில்லை. சிறுவர்களாக இருந்த மலையமான் பிள்ளைகளைக் கொண்டுவரச் செய்தான். யானையின் கால்களில் இட்டுக் கொல்ல முடிவெடுத்தான். அரசரைத் தடுப்பார் யாரும் இலர். இச்செய்தியைக் கேள்விப்பட்டுக் கோவூர்கிழார் ஓடிவந்தார்.*

*"கிள்ளிவளவ! நீ புறாவுற்ற துன்பம் மட்டுமல்லாமல் பிறர் உற்ற துன்பம் போக்கிய சோழர் மரபில் தோன்றியவன். இப்பிள்ளைகளோ, அறிவால் உழுதுண்ணும் புலவர்களின் வறுமையை அஞ்சி, பெரும் பொருள் வழங்கி வாழ்ந்த வள்ளலின் பிள்ளைகள். யானையைப் பார்த்து அழுகையை மறந்த சிறுவர்கள்; இங்குள்ளவர்களை மருண்டு நோக்கிப் புதிய வருத்தமும் உடையவர்கள். யான் சொன்னதைக் கேட்டாய்! இனி நீ விரும்பியதைச் செய்க!" என்று அஞ்சாமல் மன்னவன் மனம் உணரும் வண்ணம் பின்வருமாறு பாடுகிறார்.*

***"நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்***
***இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;***
***இவரே, புலனுழுது உண்மார் புன்கண் அஞ்சித்***
***தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்!***
***களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த***
***புன்றலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி,***
***விருந்திற் புண்கண்நோ வுடையர்***
***கேட்டனை யாயின் வேட்டது செய்ம்மே."*** [140]

*கிள்ளிவளவன் பிறந்த சோழர் மரபின் பெருமையையும், இயல்பையும் நினைவுபடுத்தி, பிறருக்கு அருளிய மலையமான் திருமுடிக்காரியின் அருட்பண்பையும் புலப்படுத்தித் தம் எண்ணத்தை ஆணித்தரமாக உரைத்தார் புலவர். புலவர் உளக் கருத்தை ஏற்று, சோழன் கொடுஞ்செயல் தவிர்த்தான்.*

*தன் மைந்தர்களுக்கு எதிராகப் போர் தொடுக்க முற்பட்ட கோப்பெருஞ்சோழனைத் தடுத்து போரைத் தவிர்த்த புல்லாற்றூர் எயிற்றியனார் – ஒரு குடியில் பிறந்தோர் பகைமையால் போர் புரிதல் குடிப்பெருமைக்கு இழுக்காகும் என்று சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் உணர்த்திய கோவூர்கிழார் - ஆகியோரின் செயற்பாடுகள், செற்றமும் பகைமையும் கடிந்த சிந்தையராய்ச் சீலமுடன் வாழ வழிகாட்டுகின்றன.*

*இளந்தத்தனை ஒற்றன் எனக் கருதி கொல்லத் துணிந்த மன்னனுக்கு, பிறர்க்குத் தீதறியாத புலவர் தம் பொதுப் பண்பைக் கூறி கொலை மனதை மாற்றிய அருளுணர்வு – பிறர்நலம் பேணலே கொள்கையென வாழ்ந்த புலவர் தம் பேருள்ள மாண்பினைப் புலப்படுத்தும் பெற்றிமைத்து.*

*போரில் வென்ற மன்னனை வாழ்த்தும் அதே வேளையில், அவன் பகைவர் நாட்டு அழிவுக்காக வருந்தும் கொற்றவள்ளைத் துறைப்பாடல்கள் புலவரின் அருள்நெஞ்சினைக் காட்டுகின்றன. மனித மாண்புகளைச் சிதைத்து அழிவு பாதைக்கு அழைத்துச் செல்லும், போரின் கொடுமைகளை உணர்ந்த சான்றோர் போரற்ற உலகில் புவியோர் அமைதியுடன் வாழும் ஆனந்த வாழ்வுக்காகப் பெரு முயற்சிகள் செய்துள்ளமை, இன்றுள்ளோர்க்கும் உதவும் படிப்பினைகளாகும்.*

*மு.வ அவர்களின் "அந்த நாள்"என்ற புதினம் போரில்லா உலகு படைத்தல் என்பதையே கருவாகக் கொண்டது என்பது குறிக்கத்தக்கது.*

*இப்படிச் சங்க காலப் புலவர்கள் அச்சம் சிறிதும் இல்லாமல், துணிவு மிக்கவர்களாய் இருந்து, தொண்டுள்ளம் கொண்டவர்களாய் வாழ்ந்தார்கள். மன்னர்கள் தவறு செய்யும்போது, அறிவுரை கூறித், தடுத்து நிறுத்தி நன்மை புரிந்தார்கள். புலவர்கள் எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டினார்கள். இவ்வாறாகச் **சமாதானம்***

***தழைக்க உதவும் சான்றாண்மை*** *மிக்கவர்களாகச் சங்கப் புலவர்கள் இருந்துள்ளனர் என்பது இவண் உணரத்தக்கது.*

***அன்பின் காட்சிகள்***

*சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை மோசிகீரனாருக்கு – முரசு கட்டிலில் ஏறிப் படுத்திருந்த போது – கவரி வீசினானே அது மனிதரை மதிப்போடு நேசிப்புக்கும் அடையாளமாக விளங்குகிறதல்லவா? அதை மோசிகீரனாரே தம் பாடலில், இந்த அகன்ற பரந்த உலகில் புகழுடையார்க்கு அல்லது பிறர்க்கு உயர்நிலை உலகமாகிய சொர்க்கலோகத்தில் இடம் கிடைக்காது என்று புரிந்து கொண்ட நீ எனக்கு அருளோடு மனித நேயத்தோடு குளிர்ச்சியான காற்று வருமாறு கவரி வீசினாயே! அந்த மனித நேயத்துக்கு அடிப்படைக் காரணம் ஏதோ ஒன்று இருக்கிறது. என்று கூறுகிறார். அதை அடையாளம் அடிப்படை என்ன என்று கூறமுறப்படும் போது மோசிகீரனாரே,*

***"அறியாது ஏறிய என்னைத் தெறுவர,***
***இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை***
***அதூஉம் சாலும், நற் தமிழ் முழுது அறிதல்;***
***அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்***
***மதனுடை முழவுத்தோள் ஓச்சித், தண்ணென***
***வீசி யோயே; வியலிடம் கமழ,***
***இவண் இசை உடையோர்க்கு அல்லது, அவணது***
***உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை***
***விளங்கக் கேட்ட மாறுகொல்:***
***வலம்படு குருசில்! நீ ஈங்குஇது செயலே?"*** [141]

*என்று தமிழே மானுடநேயத்தின் வழி என்று பெருமைபடக் கூறுகிறார். மேலும், சங்கப்பாடல்கள் காட்டும் மனிதர்கள் அனைவருமே காதலாகிக் கசிந்து அனைத்துயிர்கள் மேலும் மனிதர்கள் பாலும் கனிவு காட்டுபவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பேகன் என்னும் மன்னன் மனைவி கண்ணகியைத் துறந்து வாழ்கிறான். பரிசில் பாடி வந்த கபிலர், பரணர், அரிசில்கிழார் ஆகியோர் கண்ணகிக்காக இரக்கப்பட்டு மன்னா "யாம் விரும்பும் பரிசில் நீவிர் இருவரும் சேர்ந்து வாழ்வதே ஆகும் எனச் சொல்கின்றனர்.*

***"................................இன்னாது***
***இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்.***
***முலையகம் நனைப்ப, விம்மிக்***
***குழல்இனை வதுபோல் அழுதனள், பெரிதே?"*** [142]

*எனக் கபிலர் வேதனைப்படுகிறார்.*

***“………………………………காந்தள்***
***முகைபுரை விரலின் கண்ணீர் துடையா,***
***யாம், அவன் கிளைஞரேம் அல்லேம்; கேள்,இனி;***
***எம்போல் ஒருத்தி நலன்நயந்து, என்றும்,***
***வரூஉம் என்ப”*** [143]

என்று பேகனின் மனைவி கூறுவதைப் பேகனிடம் உரைக்கிறார் பரணர்.

***“அருந்துயர் உழக்கும்நின் திருந்திழை அரிவை***
***கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன,”*** [144]

என்று கண்ணகியுடன் வாழ வேண்டும் என அவர்களின் மீது கொண்ட அன்பின் மிகுதியால் அரிசில்கிழார் கூறுவது நோக்கத்தக்கது. மேலும், பிற உயிர்படும் துன்பத்தைப் போக்க அத்துன்பத்தைத் தானும் ஏற்று, நடுவுநிலையோடு ஆட்சிப் புரிந்த மனுநீதிச் சோழனின் மனிதநேயம் மகத்தான ஒன்றாகும். இது மனிதன் பிற உயிர்கள் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு, எல்லா உயிர்களும் தன்குடைக்கீழ் உள்ள மக்களே என்ற தாயுள்ளம் கொண்ட தன்மையேயாகும்.

***“அருளும் அன்பும் நீக்கி நீங்கா***
***நிரயங் கொள்பவரொடு ஒன்றாது, காவல்,***
***குழவி கொள் பவரின், ஓம்புமதி”*** [145]

அன்பு காட்ட வேண்டிய இடத்தில் அன்பும் அடித்து திருத்த வேண்டிய இடத்தில் அடித்து திருத்தியும் குழந்தையின் நலத்தைப் பேணி வளர்ப்பது போல, தன் நாட்டு மக்களைப் பேணிக்காத்து வரும் மன்னன் என்பவன் தாய் போன்று அன்பு மிக்கவன் என்பது மேற்கண்ட கூற்றின் வழி அறியமுடிகிறது.

புறநானூறு என்றாலே போர்க்களக் காட்சிகள் நினைவுக்கு வருதல் இயல்பு. வீரை வெளியனார் என்னும் புலவரின் பாடலில் அக்கால மக்களின் வீரவாழ்வு மட்டுமல்ல அருளுணர்வும், உயர்ந்த மனப்பாங்கும் நிறைந்த பண்பு நலன்களும் அதில் பொதிந்து கிடப்பதைக் காணமுடிகிறது. வயல்வெளிகளுக்குப் புறத்தே உள்ள ஒரு வேட்டுவனின் வீட்டில் நடைபெறும் காட்சி இது. அவ்வீட்டின் முன்புறம் முன்னைக் கொடியும் முசுண்டைக் கொடியும் அங்குப் படர்ந்த பந்தலைப் போன்று உள்ளது. வாசலில் அன்றைய உணவுக்கு வேண்டிய தினையரிசி காய வைக்கப்பட்டுள்ளது. பந்தலின் கீழ் ஒரு கயிற்றுக் கட்டிலின் மேல் வேடன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறான். அங்குக் கலையும் பிணையுமாக இரண்டு மான்கள் அன்புகாட்டி இன்புறத் தொடங்குகின்றன. இந்தச் சூழலில் காட்டுக் கோழியும் இன்னும் சில பறவைகளும் தினையரிசியைத் திண்பதற்காக வந்துவிடுகின்றன. வேடன் மனைவிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வெளியே வந்து கோழியையும் பறவைகளையும் விரட்டினால் மான்களின் இன்பத்திற்கு இடையூறு நேரும்.உள்ளிருந்து ஓங்கிக் கூச்சலிட்டால்

கணவனின் உறக்கம் கெடும். மானின் இன்பமும், கணவனின் உறக்கமும் இடையூறு படக்கூடாது என்ற எண்ணம் அவளின் செயலைத் தடுத்து நிறுத்துகிறது.

வாழ்வின் நிகழ்ச்சிகளை எதிர்கொள்ளும் முறைகளிலேயே பண்பாடு வெளிப்படுகிறது என்றால், அது இந்த அன்புள்ளத்தில் தான் பண்பட்டுச் செம்மையாகிறது. அஃறிணையுயிர்களுக்கும் தீங்கு செய்யக் கூடாது என்ற ஆளச்சிறந்த அன்பு உள்ளத்தை,

**"முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பி,**
**பந்தர் வேண்டாப் பலா தூங்கு நீழல்,**
**கைம்மான் வேட்டுவன் கனை துயில் மடிந்தென,**
**பார்வை மடப் பிணை தழீஇ, பிறிது ஓர்**
**தீர் தொழில் தனிக் கலை திளைத்து விளையாட,**
**இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்**
**கணவன் எழுதலும் அஞ்சி, கலையே**
**பிணைவயின் தீர்தலும் அஞ்சி, யாவதும்,**
**இல் வழங்காமையின், கல்லென ஒலித்து,**
**மான் அதள் பெய்த உணங்கு தினை வல்சி**
**கானக் கோழியோடு இதல் கவர்ந்து உண்டென"** [146]

காணமுடிகிறது. இவ்வாறு புறநானூறு காட்டிய பெண்ணின் மனத்தில் தோன்றிய அன்புதான் மானின் இன்பத்திற்கு இடையூறு நேரும் என்ற அறிவையும் அருளுணர்வையும் கொடுத்தது. அந்த அன்பு உள்ளம்தான் அவ்அஃறிணை உயிர்களைக் காக்கும் செயலில் இறங்கியது. அருள் என்னும் அன்பின் குழவி அறத்துக்கே அன்பு சார்பு என்ற வள்ளுரின் விளக்கம் இப்பாடலில் பொருந்தி வரக் காணலாம்.

"இந்தியச் சிந்தனை மரபு என்ற ஆய்வு நூலில் திருக்குறள் முழுவதையும் தாங்கி நிற்கும் அன்பு அறம் ஆகியவற்றின் ஊற்றுக்கண் எவை என்பதை முதன்மை வினாவாக்கி, வேத மரபகளிலோ, சமணம், பௌத்தம் முதலான சமயச் சிந்தனையிலோ குறளின் அன்பு அறம் என்பதற்கு முழுநிலையில் அடிப்படைக் காணமுயல்வது சாத்தியமில்லை என்பதையும் அவை சங்ககால தமிழ் மக்களிடம் நிலவி வந்த அறக்கருத்துக்களாக இருக்கலாம்"[147] எனவும் ஆய்வாளர்கள் கருதுவதாகக் காமாட்சி சீனிவாசன் குறிப்பிடுகின்றார்.

அன்பின் வழியது உயிர்நிலை இல்லையெனில் என்புதோல் போர்த்த உடம்பு என்பது வள்ளுவர் கூற்று. சங்கப் புறப்பாடல்களில் இது போன்று அன்பு உணர்வு கொண்டு செயல்பட்ட மக்களைப் பல இடங்களில் காண்கிறோம். மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரனையும் மயிலுக்கு போர்வைக் கொடுத்து உதவியவனையும், கொடை மடம் பட்ட வள்ளல்களையும் அன்பின் மறுவடிவமாகவே கொள்ளலாம். ஒருவனுக்குக் கொடுத்துதவ உயர்ந்த உள்ளம் வேண்டும். அன்பு உள்ளம் கொண்டவன்

*பிறருடைய துன்பங்களை வெறுமனே பார்த்து கொண்டிருக்க மாட்டான். அவனே மனிதநேயம் கொண்டவன் என்பது மேற்காணும் கருத்துகளின் வழி இவண் உணரத்தக்கது.*

**நல்லதையே செய்க**

*எல்லோருக்கும் நல்லவை நாம் செய்ய முடியாவிட்டால், அல்லவையாவது செய்யாதிருங்கள் என்கிறார் நரிவெரூ உத்தலையார்.*

***"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,***
***அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்***
***எல்லாரும் உவப்பது; அன்றியும்***
***நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே"*** [148]

*என்ற பாடலில் சொல்லப்பட்ட நியதியை ஊன்றிக் கவனிக்கும்போது, நம்மால் முடிந்த வரை நல்லவையே செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் மலரும் போது, எடுத்த காரியம் யாதாயினும் இயல்பாகவே வெற்றி கிடைக்கும். அல்லவை செய்கின்ற சிலரால் ஏற்படுகின்ற பாதிப்புகள் மற்றவர்களுக்குப் பெரிதும் வேதனையைக் கொடுப்பதாக இருக்கின்றன. அல்லாத காரியங்களை யார் செய்வார்கள் என்றால் உழைக்க மனமில்லாத சோம்பேறிகளும் பிறர் உழைப்பில் காலம் தள்ளும் சுயநலவாதிகளும் தான். இவ்வாறு சங்க இலக்கியத்தில் புறநானூறு காட்டுகின்ற பொதுவான சிந்தனைகள், மனித நேயத்தினால் மானுடம் மேன்மையடைய வழி கூறுகின்றன.*

**ஆக்கப்பணிகளுக்கு ஊக்கம்**

*நீரினை நிலத்தில் தேக்கி, அதன் மூலம் புகழைத் தேக்க மன்னர்க்குக் கூறிய அறிவுரைகள் ஆக்கபணிகளுக்கு ஊக்கம் அளிக்கும் விதமாக அமைந்துள்ளது. வெள்ளப் பெருக்கால் பெருகிவரும் ஆற்று நீரின் விசையைக் கட்டுப்படுத்தித் தேக்கி வைக்கும் நிலையில் கல்லால் ஆன அணையைக் கட்டினர் என்ற செய்தியைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் காணலாம்.*

**"வருவிசைப் புனலைக் கற்சிறைபோல"** [149]

*பகைவன் தன்னைத் தாக்க வந்த போது தலைவனிடம் காணப்பட்ட உறுதியானது, கற்களால் கட்டப்பட்ட அணையானது பொங்கி வரும் வெள்ள நீரைத் தாங்கி நின்றது போல் என்று குறிப்பிடுவதன் வாயிலாக அக்காலத்திலேயே இவ்வகையான நீர்த்தேக்க முறையைச் சங்கத் தமிழர்கள் கையாண்டுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.*

*புறநானூற்றில் தேக்கமான இடங்களில் நீரைச் சேகரிக்க வேண்டுமென்பதைக் குடபுலவியனார் வலியுறுத்தியுள்ளதை,*

***"நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்***
***தட்டோர் அம்ம இவண் தட்டோரே***
***தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"*** [150]

மேற்கண்ட வரிகள் மூலம் அறியமுடிகிறது. நெல் முதலான தானியங்களை விதைத்து மழை வருவாய் ஒன்றையே பார்த்திருக்கும் வானவாரித் தரிசு நிலமானது இடம் அகன்ற நிலப்பரப்பாயினும் பொருந்தியாளும் அரசனது முயற்சிக்குப் பயன்படாது. ஆதலால் கொல்லும் போர்த் தொழிலை உடைய செழியனே! இதனை அலட்சியப்படுத்தாது, விரைவில் நிலம் பள்ளமாக உள்ள குழிந்த இடங்களில் நெடிய நீண்ட கரையெடுத்து, நீர்நிலை அமைத்து நீரைத் தேக்கி வேண்டுமளவு பயன்படுமாறு பெருகச் செய். அப்படிச் செய்தோர் தாம் செல்லும் உலகத்து அறம், பொருள், இன்பம் மூன்றினையும் இவ்வுலகத்து தம் பேரோடு தளைக்கச் செய்தோர் ஆவர். அந்நீரைப் பெருகச் செய்யாதோர் இவ்வுலகத்து தம் பெயரைத் தளைக்கச் செய்யாதோர் ஆவர் என்று கூறும் அறிவுரைகள் ஆக்கப் பணிகளுக்கு ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது.

ஒடிவரும் நீர் ஆற்றில் விழுந்து கலந்து வீணாகும் இத்தகைய நீரை சேமித்தால் அவை இல்லாத காலங்களில் பயன்படும் என்பதை உணர்ந்து அவற்றைச் சேர்த்து அணைகள் பல கட்டி புனலைத் தடுத்து சரியாகப் பயன்படுத்தினர். இவற்றைக்கட்டும் போது ஆரவாரத்தினை,

**“போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்குநரும்”** [151]

என்ற வரியால் இதனை அறியலாம்.

நம் தாய்த் திருநாட்டில் ஒடி வரும் ஆறுகளில் காவிரி ஆறானது தன் பெயரிலேயே அகண்ட காவிரி என்று பெயர் கொண்டுள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சோழ மண்டலத்தை ஆண்டு வந்த கரிகாலச்சோழன் காலத்தில் 3,00,000 கன அடிக்கும் மேலாகப் பெருகி வந்த காவிரியின் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தி அதனை விவசாய நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தலாம் என்று எண்ணி, கல்லால் ஆன அணையைக் கட்டினான்.

“இந்த அணையின் பரந்து விரிந்த நிலையைக் கண்டு ஈர்க்கப்பட்ட இங்கிலாந்து நாட்டுப் பொறியாளர் (Sir Arthur Cotton) என்பவர் இதற்குப் பெரிய அணைக்கட்டு (Grand Anicut) என்று பெயரிட்டார். அன்று முதல் இதனைக் கல்லணை என்றும் வழங்கலாயினர்”[152] இச்செய்தியானது பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே, நீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர் சங்கத் தமிழர் என்பது இவண் நோக்கத்தக்கது.

மேலும், ஆற்றல் மிக்க படைபலம் அரசனுக்கு வெற்றியைத் தருவதில்லை. அறமாட்சியே அவனுக்கு பெருமை சேர்க்கும் என்று,

**“நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட**
**அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்;**
**அதனால், நமரெனக் கோல்கோ டாது,**
**பிறர் எனக் குணம் கொல்லாது,,** [153]

*நடுநிலையுடன் நல்லாட்சிச் செலுத்த மருதனிள நாகனார் முடிவேந்தனுக்குக் கூறிய அறிவுரை, இன்றைய குடியாட்சியாளர்க்கும் பொருந்தும் பெற்றிமைத்து,*

***"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே***
***கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;***
***மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்***
***வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு***
***பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்***
***யானை புக்க புலம்போலத்***
***தானும் உண்ணான் உலகமும் கெடுமே"*** [154]

*என்ற பிசிராந்தையாரின் அறிவுரை, குடிமக்களிடம் வரி வசூலிக்கும் ஆட்சியாளர் இன்றும் கடைபிடிக்க வேண்டிய நெறியாம். வரிவசூலிப்பது அரசின் உரிமையானால், மக்களின் நிலமையை அறிய வேண்டுவது கடமையாம். மனித உரிமையும் மனிதக் கடமையும் மனித மாண்பின் இரு கண்களாம்.*

**அரசர்களின் நேயம்**

*அரசர்கள் என்பவர்கள் அக்காலத்தில் மக்களின் உயிர் போன்றவர்கள் ஆவர். முதலில் தலைவன் முதுகுடி மன்னன், சீறூர் மன்னர், வேந்தர் என அனைவரும் மேற்கொண்டது அரசு எனச் சுட்டப்படுவதாயிற்று.*

*தொல்காப்பியர் தம் செய்யுளில்,*

***"தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய"*** [155]

*என்று குறிப்பிட்டுள்ளார். அரசர்கள் தங்கள் காலத்திற்குப் பின் தன்னுடைய வாரிசுகளை பட்டத்து அரசர்களாக நியமித்தனர். ஆண் வாரிசு இல்லாத போது உறவுகளில் வீரமுடைய ஆண்மகனைத் தத்து எடுத்து அவர்களைத் தமக்குப் பின்னர் அரசனாக்கினர்.*

*வேளாண் தொழில் உள்ளிட்டவற்றைச் செய்யும்போது வலிமையுள்ளவனின் துணை தேவைப்பட்டுள்ளது. இயற்கையின் சீற்றம், விலங்குகள் பிற மனிதர்களிடமிருந்து மக்களைப் பாதுகாத்தான் அவனே தலைவனாகி மக்களின் அனைத்து நிலைகளுக்கும் பொறுப்பாகிறான். இதனை,*

***"காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்***
***போகு பலி வெண் சோறு போலத் "*** [156]

*மேற்கண்ட பாடல் வரிகள் உணர்த்தி நிற்கிறது.*

***மக்கள் மீதான நேயம்***

*மக்கள் மீதான நேயத்தில் வேளாண்மைக்கு முக்கியமாக நீர்நிலைகளை அமைத்தல் உள்ளிட்ட பணிகளை மக்கள் மீதுள்ள அன்பினால் செய்தனர். இது அரசனின்*

*மிகச் சிறந்த கடமையாகும். உழவுத்தொழிலே அனைத்திற்கும் அடிப்படை எனவே தான் வள்ளுவர் சுழன்றும் ஏர்பின்னது உலகம் என்றார். மக்கள், பசி,பிணி, பகை எதுவும் இன்றி மகிழ்வுடன் வாழ உழவுத்தொழில் முக்கியப் பங்கு வகிக்கும் அதற்கு நீர் என்பது அடிப்படை ஆதாரமாகும். எனவே மக்கள் மீதுள்ள அன்பினால் தண்ணீரை ஏற்படுத்தி தருவதற்காக நீர் நிலைகளை அமைத்தல் உள்ளீட்டவற்றை அரசன் செய்கிறான். இதனை,*

***"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்***
***உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோரே"*** [157]

*இப்பாடலில் குடப்புலவியனார் என்னும் புலவர் பாண்டியனுக்கு அறிவுறுத்துகிறார். இவ்வாறு நீர் நிலைகளை ஏற்படுத்தியதுடன் நின்று விடாமல் அதற்கு காவலன் ஒருவனை நியமித்துள்ளமை இவண் சுட்டத்தக்கது.*

***"மாரிக் குளத்துக் காப்பாள் அன்னன்"*** [158]

*என்ற பாடல் மேற்காண் கூற்றுக்குச் சான்று பகர்கிறது.*

***அரசனின் கொடையுள்ளம்***

*அரசன் தன்னை நாடி வருபவர்களுக்குத் தேவையானவற்றை அளித்து அவர்களைக் காக்கின்றான். இதனைப் பெரும்பாணாற்றுப்படை சித்தரிக்கின்றது.*

***"குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்***
***பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு,***
***முறை வேண்டு நர்க்கும் குறைவேண்டு நர்க்கும்,***
***வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி,***
***இடைத்தெரிந்து உணரும் இருள் தீர் காட்சிக்***
***கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளத்து,***
***உரும்பு இல் சுற்றமோடு இருந்தோற் குறுகி"*** [159]

*என்ற பாடல் வரிகள் இதனைச் சுட்டி நிற்கின்றன. மன்னன் வெற்றிபெற்றவனாகத் திகழ்தற்குக் காரணம் அவனுடைய படைவலிமையும் அறமும் ஆகும். இதனை,*

***"அற நெறி முதற்றே அரசின் கொற்றம்"*** [160]

*என்ற பாடலில் இக்கருத்தை உணரலாம். குடிமக்களைத் துன்புறுத்தாமல் அவர்களிடம் அதிக வரிகளைப் பெறாமலும் ஆட்சி புரிய வேண்டும். அடிமட்டத் தொண்டர்களுக்கு என்ன வேண்டும் என்பதை உணர்ந்து அவர்களுக்குத் தேவையானதைத் செய்து தர வேண்டும். இத்தகைய அறிவுள்ள அரசனின் ஆட்சியில் குடிமக்கள் வளமுடன் வாழ்வர். மகிழ்வும் நிறைவும் அவர்கள் ஆட்சியில் நிலைத்திருக்கும். இன்றைய ஆட்சியாளர்கள் நினைத்துப் பார்ப்பின் நாடு நலம் பெறும் வளமும் பெறும். எவ்விதமான சொத்தும் இல்லாமல் தேர்தலில் போட்டியிடுபவர்கள் பதவியேற்ற சிறிது காலத்திலேயே, பெரும் பணக்காரர்களாக ஆகி, பல பினாமிகளைக் கொண்டு சொத்து சேர்ப்பது கண்கூடு.*

*அவர்கள் சில கோடிகளில் ஆரம்பித்து பல கோடிகளில் வளர்ந்து லட்சம் கோடிகளில் முடிவுறுவது அரசியலில் வழக்கமாக இருப்பது கேலிக்கூத்தானது. கல்வி கற்கும் வாய்ப்புள்ள அனைவரும் வாக்களார்களாக உள்ள நிலையில் இந்நிலை மாற வேண்டும். எளிய கக்கன், காமராசர் போன்ற ஆட்சியாளர்கள் ஆட்சியில் அமரும் பொன்னாள் , அல்லது சங்க அரசர்கள் போல தன்னலம் பேணா அரசர்கள் ஆட்சியில் அமரும் நாள் எந்நாளோ?.*

***மக்களின் இன்னல்கள் போக்கியமை***

*அரசர்கள் மக்களின் இன்னல்களைப் போக்க நுண்ணறிவு, ஆன்ற நல்லொழுக்கம், நூற்பயிற்சி முறை, உலகியல் உணர்வு, நிறையப்பெற்று நல்ல அறமுடையவராக அமைச்சர்கள் இருக்க வேண்டும்.இத்தகைய அமைச்சர்களைக் கொண்டு நாட்டின் நிலைமை மக்களின் நிலமை அறிந்து அவர்களின் இடுக்கண் களைய அமைச்சர்களை நியமித்துள்ளனர். அமைச்சர்களை அரசன் நியமித்ததற்குக் காரணமே நல்லனவற்றை ஏற்று அல்லனவற்றைக் களைந்து, குடி மக்களிடம் அன்பொழுகப் பேசி நீதியினை நிலைநாட்டி போற்றத்தக்க செயல்கள் செய்வர். இதனை,*

***“அன்பும் அறனும் ஒழியாது காத்து,***
***பழி ஒரீஇ உயர்ந்து பாய் புகழ் நிறைந்த***
***செம்மை சான்ற காவிதி மாக்களும்”*** [161]

*என்ற பாடல் வரிகளில் குறிப்பிட்டுள்ளமை இவண் சுட்டத்தக்கது. அவ்வாறு வாழ்ந்த அமைச்சர்களின் தன்மையை இன்றுள்ள அமைச்சர்களோடு ஒப்பிட்டு பார்க்கும் போது பெருமூச்சே மிஞ்சுகிறது.*

***பாதுகாக்கும் நேயம்***

*நாட்டு மக்களைப் பாதுகாத்தலே மன்னனின் முக்கிய நோக்கம் ஆகும். இதன் அடிப்படையிலேயே தலைமை பொறுப்பு ஏற்பட்டது என்பதை முன்னரே கண்டோம்.*

***“ஆர்வலர் குறுகின் அல்லது, காவலர்***
***கனவினும் குறுகாக் கடியுடை வியல்நகர்”*** [162]

*என்ற பாடலில் அரசர்கள் தங்களின் தலைமையில் ஊரக்காவல் பணியில் அமர்த்தினர் என்பது நோக்கத்தக்கது.*

*இத்தகைய காவலர்கள் வாளையுடையவராய், பிடி வாளையுடையவராய், நீல நிற கச்சினை உடையவராய், நிலத்தினை அகழும் உய்யினை உடையவராய் இருப்பர் என்பதை இப்பாடல்கள் பதிவு செய்துள்ளமை நோக்கத்தக்கது.*

*புலியைப் போன்று தூங்காத கண்களை உடையவராக, அச்சம் அற்றவராய் ஆராய்ந்து களவினை அறியும் தன்மையுடையவராய் உள்ளமையை அறியலாம்.*

***“வயக் களிறு பார்க்கும் வயப்புலி போலத்***
***துஞ்சாக கண்ணர் அஞ்சாக் கொள்கையர்***
***அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த***
***நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி***
***ஊர் காப்பாளர் ஊக்கருங்கணையினர்,***
***தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக***
***மழை அமைந்து உற்ற அரை நாள் அமயமும்***
***அசைவிலர் எழுந்து நயம் வந்து வழங்கலின்,***
***கடவுள் வழங்கும் கையறு கங்குலும்***
***அச்சம் அறியா ஏமம் ஆகிய***
***மற்றை யாமம் பகல் உறக் கழிப்பிப்”*** [163]

***வீரர்களை காக்கும் நேயம்***

*போரில் காயம்பட்ட வீரர்களைக் காக்கும் பொருட்டு மருத்துவர்களை அழைத்து வந்து அங்கு காயம்பட்டவர்களுக்கு மருந்திடும் வழக்கமுடையவனாக வீரர்களின் மீது மிகுந்த அன்புடையனவாக இருந்தமையை அறியலாம். இதனை,*

***“கதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு,***
***பஞ்சியும் களையாப் புண்ணர்.”*** [164]

*என்ற பாடல் சுட்டுகிறது. நாட்டிற்காக அன்றைய மக்கள் தங்கள் உயிரையே தரும் தன்மையை நாம் காண்கிறோம். இவர்கள் போரில் காயம்பட்ட இடத்தை அறுவை சிகிச்சை மூலம் ஊசியில் கோத்து தோலைத் தைத்து செய்தமையை உணர்த்தி நிற்கிறது.*

***“மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்***
***சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ஊசி***
***நெடுவசி பரந்த வடு”*** [165]

*என்ற பாடலில் தமிழ் மருத்துவர்கள், மூலிகைகள், பூக்கள், மரப்பட்டைகள், இலைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி மருத்துவத்தைத் தொடங்கினர்.*

*இவ்வாறு அரசர்கள் தங்களுடைய நேயத்தால் பல்வேறு செயல்களைச் செய்துள்ளமை இவண் சுட்டத்தகும்.*

***பண்பாடு – நேயம்***

*தமிழர்கள் பண்பாடு உடையவர்கள். தமிழர்களின் உன்னதப் பண்பு உலகம் பின்தொடரும் பண்பாகும். மேலும் இரக்கம் என்னும் அருங்குணத்தை உடையவர்களாக இருப்பர் என்பதற்கு இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.*

***“எருமை அன்ன கருங்கல் இடை தோறு,***
***ஆனிற் பரக்கும் யானைய முன்பின்,***
***கானக நாடனை”*** [166]

*என்று வாழ்த்துகிறான். எருமை போன்ற வலுவான, கருப்பான, பெரிய கருங்கற்களை கொண்ட பசுக் கூட்டம் போன்ற யானைக் கூட்டத்தைக் கொண்ட காட்டை சொந்தமாகக்*

*கொண்டவனே! நீ ஒரு பெருமகன், நீ விரும்பினால் நான் ஒன்று கூற விரும்புகிறேன் என்கிறான் புலவன்.*

*அருளையும் அன்பையும் ஒதுக்கிவிட்டு நரகத்தில் வாழும் மக்களைவிட்டு நீ தூரமாக இரு. அவர்கள் துயரத்தில் உழல்பவர்கள் இன்பம் அறியாதவர்கள். அத்தகையவருடன் சேராதிரு என்கிறான், சேரனைப் பார்த்து. கிடைத்த அரிதானப் பதவியைக் கொண்டு உனது நாட்டை, குழந்தையைப் பார்த்துக் கொள்வது போல் பேணிப் பாதுகாக்க வேண்டும். அருளும் அன்பும் கொண்டு குழந்தையைப் பாதுகாப்பது போல் எனது நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் என சங்கப் புலவன் வலியுறுத்துகின்றான். அருளும், அன்பும் மன்னனுக்கு இரு கண்கள் போன்றது என்பது இவண் உணரத்தக்கது.*

*இவை மட்டுமின்றி நன்றி மறவாமை புறங்கூறாமை உள்ளிட்ட பண்புகள் நிறைந்திருந்தன. இனி இவை குறித்து காணலாம்.*

***நன்றி மறவாமை***

*ஒருவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பர். செய்த நன்றி என்பது தினை அளவு இருந்தாலும் பனை அளவாகப் பெரியவர் கொள்வர் என்று வள்ளுவனார் நவின்றிருப்பது இவண் இணைத்து நோக்கத்தகும்.*

***"செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்***
***இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்"*** [167]

*என்று செய்ந்நன்றி அறிதலை இனியனாக விளங்க முடியும் என்பதைச் சிறுபாணாற்றுப்படை உணர்த்துகிறது.*

***"ஆன் முலை அறுத்த அறனி லோர்க்கும்,***
***மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்,***
***குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,***
***வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என,***
***நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்***
***செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் என"*** [168]

*என்று நன்றி மறவாமை குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.*

***புறங்கூறாமை***

*சங்கால மக்கள் புறங்கூறுதலை வெறுத்தனர்.பொதுவாக வல்லவர்கள் ஆகியோரை அவரவர் தகுதிக்கு ஏற்ப குறை கூறாமல் பாராட்டிப் பேசுதல் உலக இயல்பாகும். தம்மோடு பகை கொண்டோரையும் புறுங்கூறக்கூடாது என்பதை,*

***"நல்லோர் குழீஇய நா நவில் அவையத்து***
***வல்லார் ஆயினும், புறம் மறைத்து சென்றோரைச்***
***சொல்லிக் காட்டி சோர்வு இன்றி விளக்கி,***
***நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும்"*** [169]

*என்ற வரிகள் ஒருவருக்கொருவர் புறங்கூறாமல் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சுட்டி நிற்கிறது.*

**அறம் போற்றுதல்**

சங்கத்தமிழர்கள் அறம் எனும் பண்பைப் புற வாழ்வில் மட்டும் மேற்கொள்ளாமல் அகவாழ்விலும் அறத்தைக் கடைபிடித்தனர். போர் அறம் உள்ளிட்டவை முன்னமே விளக்கப்பட்டன.

**உமண மகளிரின் நேயம்**

உமணர்கள் உப்பை விலைக்கு விற்று,அவற்றிற்கு பதிலாக (நெல்) உள்ளிட்ட பொருட்களை மாற்றாகப் பெறுவர். தம் குடும்பத் தலைவனின் குடும்ப பாரத்தைச் சுமக்க உமண மகளிரும் வண்டி ஓட்டிச் செல்வர்.

> **"காடி வைத்த கலனுடை மூக்கின்,**
> **மகவுடை மகடூஉப் பகடு புறம் துரப்ப"** [170]

என்ற வரிகள் உமண மகளிரின் நேயத்தை உணர்த்துகின்றன.

இதுவரை மனிதர்களின் மனிதநேயம் குறித்து கண்டோம். இனி, பிற உயிர்களின் மனிதநேயம் குறித்து சங்க இலக்கியம் கூறும் கூற்றுகளைக் காண்போம்.

மனிதன் என்பவனே சமூக விலங்கு ஆவான். தனி மனிதன் தோன்றுவதற்கு முன்பு விலங்குகளே உலகில் இருந்தன. அவையும் குடும்ப அமைப்பைப் பெற்று விளங்கின. மனிதனும் அவ்விலங்கினை நோக்கியே அன்புணர்வைப் பெற்று இருந்திருப்பான். இயற்கைப் பொருள்களும் விலங்குகளும் முற்கால மனிதனால் உற்றுநோக்கப்பட்டன. அவற்றிடையே இருந்த அன்புணர்வு மனிதனின் வாழ்வில் குடிகொள்ள ஆரம்பித்தன. இதற்குச் சரியான சான்றாக அஃறிணை உயிர்களின் நேயங்கள் சான்றாக அகப்பாடல்களில் எடுத்து ஆளப்பட்டுள்ளன.

சங்கப்பாடல்கள் இயற்கை கூறுகளை உவமையாகக் கொண்டு இலங்குகின்றன. புறம், அகம் என்ற இரண்டிலும் ஒப்பீட்டு நோக்கும் போது அகப்பாடல்கள் தலைவனின் அன்பைச் சுட்டுகின்றன. எனவே அதற்கான சான்றாக அஃறிணை உயிர்களின் நேயம் சுட்டப் பெற்றுள்ளன. எனவே இங்கு அஃறிணை உயிர்களின் நேயத்தைச் சுட்ட அகப்பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

**பறவைகளின் நேயம்**

இவ்வுலகில் பறவைகள் இயற்கையின் சமநிலையைக் காப்பதில் முக்கியத்துவம் பெற்றுள்ளமையை இன்றைய அறிவியலாளர்கள் உணர்த்துகின்றனர். பறவைகளின் வாழ்வியலை அறிந்து, அவற்றின் முக்கியத்துவத்தை உலகிற்கு உணர்த்தியவர் சலீம் அலி. இவர் பறவைகளின் மனிதராக அறியப்படுகிறார். இவருடைய கூற்றிற்குப் பின்னர் பறவைகள் மீதான விழிப்புணர்வு இவ்வுலகில் ஏற்பட்டது எனலாம். இனி சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பறவைகளின் நேயம் குறித்து அறியலாம்.

***“மனை சேர் பெண்ணை மடி வாய் அன்றில்***
***துணை ஒன்று பிரியினும் துஞ்சாகாண்' என,***
***கண் நிறை நீர் கொடு கரக்கும்,***
***ஒண் நுதல் அரிவையான் ”*** [171]

*என்ற பாடலில் தன் துணையைப் பிரிந்து வாழும் அன்றிலின் வலி தனக்கு வரக் கூடாது என்று தோழி வருந்துகிறாள். தன் இணையின் மீதுள்ள அன்பை அன்றில் வெளிப்படுத்தியுள்ளது. சேவல் தன் பெடையிடம்,*

***“இரவின் வம்மோ உரவு நீர்ச் சேர்ப்ப!***
***இன மீன் அருந்து நாரையொடு பனைமிசை***
***அன்றில் சேக்கும் முன்றில்,”*** [172]

*இப்பாடலில் சேவல் தன்னுடைய பெடையின் மீது காட்டும் நேயம் புலப்படுத்தப் பெற்றுள்ளது.*

*குருகுகள் தம்முடன் அன்போடு இருத்தலை,*

***“கொடு வாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய,***
***உயிர் செலக் கடைஇப் புணர் துணைப்***
***பயிர்தல் ஆனா, பைதல்அம் குருகே?”*** [173]

*என்ற பாடலில் குருகின் அன்பு புலப்படுத்தப்பட்டுள்ளது.*

**நாரையின் நேயம்**

*நாரை தன் இணையை இழந்த பின்னர் வாடியதை,*

***“நலன் உணப்பட்ட நல்கூர் பேடை***
***கழி பெயர் மருங்கில் சிறு மீன் உண்ணாது,***
***கைதை அம் படு சினைப் புலம்பொடு வதியும்”*** [174]

*என்ற வரிகள் சுட்டி நிற்கின்றன. ஆண் கொக்கு தன்னுடைய அறியாமையால் பரதவரின் வலையில் சிக்கியது. எனவே பெண் குருகு தன்னுடைய குஞ்சுகளை அணைத்தவாறு இக்காட்சியைக் கண்டு வருந்தியது.*

***“குடுமிக் கொக்கின் பைங் காற் பேடை,***
***இருஞ் சேற்று அள்ளல் நாட் புலம் போகிய***
***கொழு மீன் வல்சிப் புன் தலைச் சிறாஅர்,***
***நுண் ஞாண் அவ் வலைச் சேவல் பட்டென,***
***அல்குறு பொழுதின் மெல்கு இரை மிசையாது,***
***பைதல் பிள்ளை தழீஇ, ஒய்யென,***
***அம் கண் பெண்ணை அன்புற நரலும்”*** [175]

*என்ற பாடலில் கொக்கின் அன்பு புலப்படுகிறது.*

*பருந்து என்பது பிணங்களை உண்ணும் ஒரு பறவை. அப்பறவையிடம் இருந்த நேயத்தை,*

> ***"பருந்தின் கோள் வல் சேவல்***
> ***வளை வாய்ப் பேடை வரு திறம் பயிரும்***
> ***இளி தேர் தீம் குரல் இசைக்கும் அத்தம்"*** [176]

*என்ற பாடல் உணர்த்துகிறது. தன் பெடையிடம் தாம் கொண்ட அன்பை விளக்குவதாக இப்பாடல் அமைகிறது.*

***விலங்கின் நேயம்***

*காடுகள் இப்பூவுலகின் மையம் எனலாம். காடுகளே உயிர் காற்றினை உலகிற்கு அளிக்கின்றன. தற்போது நான்கு மாதங்களுக்கு முன் ஏற்பட்ட அமேசான் காடுகளின் தீ விபத்து உலகின் உயிரையே அசைத்துப் பார்த்தது எனலாம். இக் காட்டிற்கான அரணாக விலங்குகள் உள்ளன. இவ்விலங்குகளை இன்று தம் சுயநலத்திற்கு வேட்டையாடி மனிதகுலம் மகிழ்கிறது. இந்நிலை மாற வேண்டும்.*

*குரங்கு தன் துணையைப் பலாப்பழம் உண்பதற்காக அழைக்கும் நேயத்தை,*

> ***"முடவு முதிர் பலவின் குடம் மருள் பெரும் பழம்***
> ***பல் கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்,***
> ***பாடு இமிழ் அருவிப் பாறை மருங்கின்,***
> ***ஆடு மயில் முன்னது ஆக, கோடியர்***
> ***விழவு கொள் மூதூர் விறலி பின்றை***
> ***முழவன் போல அகப்படத் தழீஇ,***
> ***இன் துணைப் பயிரும் குன்ற நாடன் "*** [177]

*என்ற பாடல் வழி விளக்கலாம். மேலும் மந்தி தன் குட்டிகளுக்குக் காட்டு பசுவின் மடியினின்று பாலைக் கரந்து ஊட்டுகிறது. இச்செய்தியினை,*

> ***"தடங்கோட்டு ஆமான், மடங்கல் மா நிரைக்***
> ***குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தென,***
> ***துஞ்சு பதம் பெற்ற துய்த் தலை மந்தி***
> ***கல்லென் சுற்றம் கை கவியாக் குறுகி,***
> ***வீங்கு சுரை ஞெமுங்க வாங்கி, தீம் பால்***
> ***கல்லா வன் பறழ்க் கைந் நிறை பிழியும் "*** [178]

*என்ற வரிகள் புலப்படுத்த காணலாம்.*

***வராகங்களின் நேயம்***

*காட்டுப் பன்றிகள் தம்முடைய பெடை மற்றும் குழந்தைகளின் மீது வைத்துள்ள நேயத்தை சங்கப்பாடல் சுட்டி நிற்கிறது.*

***“வய நாய் எறிந்து, வன் பறழ் தழீஇ,***
***இளையர் எய்துதல் மடக்கி, கிளையொடு***
***நால்முலைப் பிணவல் சொலிய கான் ஒழிந்து,***
***அரும் புழை முடுக்கர் ஆள் குறித்து நின்ற***
***தறுகட் பன்றி நோக்கி, கானவன்***
***குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி***
***மடை செலல் முன்பின் தன் படை செலச் செல்லாது,***
***'அரு வழி விலக்கும் எம் பெருவிறல் போன்ம்' என”*** [179]

*இப்பாடல் மேற்காண் கூற்றினைச் சுட்டி நிற்கிறது.*

***பசுவின் துயரம்***

*கன்றுகளைக் காணாத பசுக்களின் துயரத்தை,*

***“கன்று காணாது, புன் கண்ண, செவி சாய்த்து,***
***மன்று நிறை பைதல் கூர, பல உடன்***
***கறவை தந்த கடுங் கால் மறவர்”*** [180]

*என்ற அகப்பாடல் விளக்கி நிற்கிறது.*

***மானின் அன்பு***

*புற்கள் இல்லாமையில் மூங்கிலில் இருந்து உதிர்ந்த நெல்லை உண்பதற்கு அழைக்கும் மானின் செயலை,*

***“……………………புல் மறைந்து***
***அலங்கல் வான் கழை உதிர்நெல் நோக்கி,***
***கலை பிணை விளிக்கும் கானத்து ஆங்கண்”*** [181]

*என்ற பாடல் விளக்கி நிற்கிறது. மான் தன் இணையான, பெண் மான் வெயிலில் துன்புறுவதைக் கண்டு, தன் நிழல் தந்து அவற்றைக் காப்பாற்றியதை,*

***“இன்நிழல் இன்மையான் வருந்திய மட பிணைக்குத்***
***தன் நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை”*** [182]

*என்ற பாடலின் வழி அறியலாம். மேலும்,*

***“அறுமருப்பு எழிற்கலை புலிப்பால் பட்டெனச்,***
***சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை”*** [183]

*என்ற பாடல் மான்களின் தாய்மையுணர்வைச் சுட்டி நிற்கிறது.*

***யானைகளின் நேயம்***

*தன்னுடைய பிடியும், கன்றுகளும் நீர் வேட்கையில் துன்புறுவதைக் கண்டு தன் குடும்பத்திற்கு நீர் வேட்கையைத் தணிக்க பந்தரின் வாயை மூடியிருந்த விற்பொறியை முறித்து நீரைத் தந்தது. இதனை,*

***"..............................துணையொடு***
***வேனில் ஓதி பாடு நடை வழலை***
***வரி மரல் நுகும்பின் வாடி, அவண***
***வறன் பொருந்து குன்றத்து உச்சி கவாஅன்***
***வேட்டச் சீறூர் அகன் கண் கேணிப்***
***பய நிரைக்கு எடுத்த மணி நீர்ப் பத்தர்,***
***புன் தலை மடப் பிடி கன்றோடு ஆர,***
***வில் கடிந்து ஊட்டின பெயரும்***
***கொல் களிற்று "*** [184]

*என்ற பாடல் வழி அறியலாம்.*

***ஆமையின் நேயம்***

*தம் பெடையிட்ட முட்டையைக் காத்து நிற்றலும் பார்ப்புகள் தம் தாயின் முதுகின் மேல் ஏறி தூங்கும் காட்சியை,*

***"ஒடுங்கு ஈர் ஓதி நினக்கும் அற்றோ?***
***நடுங்கின்று, அளித்து, என் நிறை இல் நெஞ்சம்.***
***அடும்பு கொடி சிதைய வாங்கி, கொடுங் கழிக்***
***குப்பை வெண் மணற் பக்கம் சேர்த்தி,***
***நிறைச் சூல் யாமை மறைத்து ஈன்று, புதைத்த***
***கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை***
***பார்ப்பு இடன் ஆகும் அளவை"*** [185]

*இவ்வாறு அஃறிணை உயிர்கள் தமக்கிடையே இருந்த நேயத்தை இலக்கியங்கள் சுட்டி நிற்கின்றன.*

*மேலும், சில புலவர்கள் பறவைகளைப் பாடி அவற்றின் வாழ்வை அப்படியே காட்டுகின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாகப் பிசிராந்தையார் பாடிய பாட்டினைக் கூறலாம். இப்புலவர் தம் நண்பன் கோப்பெருஞ்சோழனின் நட்பின் பெருமையினைக் கூற அன்னத்தினை விளித்து "நீ குமரிக்கடலில் மீனை உண்டு பின் இமயம் நோக்கி செல்வாயாயின் இடையிலுள்ள சோழநாட்டினிடத்துத் தங்கி எனது நண்பன் கிள்ளி கேட்கும்படி எனது, பெயரினைக் கூறின் நினது இன்புறும் பேடை பூண, அணிகலன்கள் பல அளிப்பான் என்பதை,*

***"அன்னச் சேவல்! அன்னச் சேவல்!***
***ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்***
***நாடு தலை அளிக்கும் ஒண்முகம் போலக்,***
***கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்***
***மையல் மாலை யாம் கையறுபு இனையக்,***
***குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி,***
***வடமலைப் பெயர்குவை ஆயின், இடையது***
***சோழ நன்னாட்டுப் படினே, கோழி***
***உயர் நிலை மாடத்துக், குறும்பறை அசைஇ,***
***வாயில் விடாது கோயில் புக்கு, எம்***
***பெருங் கோக் கிள்ளி கேட்க, இரும்பிசிர்***
***ஆந்தை அடியுறை எனினே, மாண்ட நின்***
***இன்புறு பேடை அணியத், தன்***
***அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே."*** [186]

*பாடியுள்ளமையில் இருந்து அன்னத்தை தூதாக அனுப்பியிருந்ததும் அதன்மீது மிகுந்த அன்பு கொண்ட உள்ளத்தினையும் அறியமுடிகிறது.*

*மேலும், பறவைகளைக் குறித்துப் பாடிய காரணத்தினால் சில புலவர்கள் தங்களின் இயற்பெயருக்கு முன் சிறப்புப் பெயரினைப் பெற்றனர். அதாவது பறவைகள் தங்களைப் பற்றிப் பாடிய புலவர்களுக்குப் பட்டங்கள் வழங்கின என்று கூறலாம். "விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" என்று காக்கை கரைந்தமையைப் பாராட்டிக் கூறிய அருமைபற்றிய நச்செள்ளையார் "காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் "என்றும் "முதுமரப் பொந்திற் கதுமென வியம்பும் கூகைக் கோழியாளுந் தாழிய பெருங்காடு" என்று மயானத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும் கூகைக் கோழியைப் பற்றிப் பாடிய புலவரைக் "கூகைக் கோழியார்" என்றும் குப்பைக் கோழியின் சண்டையினை வருணித்த புலவரைக் "குப்பைக் கோழியார்" என்றும் அறுகால் பறவையாகிய தும்பியைப் பாடிய புலவரைத் "தும்பிசேர் கீரணார்" என்றும் மக்கள் பிற்காலத்தில் வழங்கலாயினர்.*

*விலங்குகளும் பறவைகளும் ஒரு நாட்டின் விலை மதிப்பற்ற பெரும் செல்வம். நம் நாடும் இதற்கு விதிவிலக்கில்லை. விதி விலக்கில்லாதது மட்டுமல்ல, விலங்குகளோடும் பறவைகளோடும் வேறுபாடற்ற உறவுடையது. மனிதன் முதல் தேவன் வரை விலங்குகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள நாடு தமிழகம். சங்க இலக்கியம் காலம் முதல் நேற்று பாடிய பாரதி வரை பறவைகள், விலங்கினங்கள் பற்றிப் பாடிய பாடல்கள் நிறைந்த நாடு. இறைவனுக்கு ஊர்தியாய், அவதரிக்கும் பிறப்பாய், அறிவு புகட்டும் ஆசானாய் விலங்கினமும் பறவையினமும் இந்நாட்டில் விளங்குவது ஒன்றே நாம் அவற்றோடு கொண்ட உறவு விளங்கும்.*

சங்க இலக்கிய காலக்கட்டத்தில் உணவுக்காக விலங்கினமும் பறவையினமும் வேட்டையாடப்பட்டிருந்தும் அவ்வினங்கள் முற்றிலும் அழிந்துபோகா நிலையில் இருந்தது. இன்று பெரும்பாலும் காடுகளை அழித்தன் விளைவாக அங்கு இருக்க கூடிய பறவைகள், விலங்குகள் வேட்டையாடி இந்த இனமே இல்லாத நிலைக்கு மனிதர்களின் செயல்பாடுகள் இருக்கின்றன. இந்நிலைகள் மாற வேண்டும். காடுகள் பாதுக்காக்கப்பட வேண்டும். சாலையெங்கும் சோலையாய், பாலை வனமெங்கும் பசுஞ்சோலையாய் மாற, மாற்ற மக்கள் முன்வர வேண்டும். வேட்டைக்கென ஒதுக்கப்பட்ட காடுகளைத் தவிர வேறு இடங்களில் வேட்டையாடுதல் கூடாது. அதுவும் குறிப்பிட்ட அளவோடு நிற்க வேண்டும். எனவே மக்களின் மன ஒற்றுமையும் ஒத்துழைப்பும் தேவை. மக்களும் மக்களாட்சியும் ஒன்று சேர்ந்து விலங்கினங்களையும் பறவையினங்களையும் பாதுகாக்க முன்வர வேண்டும்.

மண் பயனுற மானுடம் செழிக்க மனிதேநேயத்தை மனத்தில் கொண்டு வாழ்தல் வேண்டும். இதுகாறும் மனிதநேயம் குறித்த சிந்தனைகளைக் கண்டோம்.

**தொகுப்புரை**

புறத்திணைப் பாடல்களில் மனிதநேயம் என்னும் இத்தலைப்பில் பின்வரும் கருத்துகள் ஆராயப்பெற்றுள்ளன.

- ❖ மனிதன், மனம் பற்றிய விளக்கமும் வழா மனிதநேயம் குறித்த செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன.
- ❖ சங்கப்புறப் பனுவலான புறநானூற்றில் மனிதநேயம் குறித்தச் செய்திகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.
- ❖ நாட்டின் மீதுள்ள பற்று, மக்களின் மீதுள்ள நேயம், ஈகை, கொடை ஆகியன சுட்டப்பெற்றுள்ளன.
- ❖ குமணனின் கொடைத்தன்மை ஆராயப்பெற்று விளக்கப் பெற்றுள்ளது.
- ❖ கடையேழு வள்ளல்களான பாரி, காரி, ஆய் அண்டிரன். அதியமான், நள்ளி, ஓரி, எழினி, ஆகியோரின் கொடைத்தன்மை எடுத்துக் கூறப்பட்டுள்ளன.
- ❖ கடையேழு வள்ளல்கள் வாழ்ந்த முறையை இவ்வியலில் காணமுடிகிறது.
- ❖ இயற்கையின் கூறுகள் மானுட நேயத்தின் வெளிப்பாடுகள். மானுடத்தின் பசி ஆற்றும் நேயமே சிறந்தது. அது மானுட நேயத்தின் முதன்மை அம்சம் என்பதை சுட்டப்பெற்றுள்ளன.
- ❖ புகழுக்கு அடிப்படை மானுட நேயம். புகழ் உடையவரைத்தான் துறக்க உலகத்து ஊர்தி வந்து அழைத்துச் செல்லும். அதுவும் புலவரால் பாடப் பெறும் புகழுடையோரால் மட்டுமே அத்தகுதி பெறமுடியும்.
- ❖ மானுட நேயத்தின் அடையாளம் நன்றியுணர்வோடு வாழ்தல் என்பதை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- ❖ பகைமை முடிக்கப் படை எடுத்துச் செல்லும் போதும் கூட அறநெறி பின்பற்றப்பட வேண்டும். அந்த அந்நெறிதான் மானுட நேயம் என நெட்டிமையார் கூறுகிறார்.
- ❖ பகைவரை வெல்ல வஞ்சினம் கூறும் அரசர்களின் கூற்றிலும் செயலிலும் கூட மானுட நேயம் அடிநாதமாக ஒலிக்கிறது.
- ❖ மானுட நேயத்தின் வெளிப்பாட்டுக் கூறுகளில் ஒன்று தன்னலம் பாராமை, தியாகம் என்பதை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- ❖ வறுமையிலும் கூட அனைவருக்கும் தன்னிடமுள்ளதைப் பகிர்ந்து அளித்து, ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்’ பாங்கான மானுட நேயம் புறநானூற்றுப் பாடல்கள் மூலம் கற்பிக்கப்படுகிறது.
- ❖ தமிழர் பண்பாட்டோடு இணைந்த மனிதநேயம் இணைத்து நோக்கப்பட்டுள்ளது.
- ❖ அஃறிணை உயிர்களின் மீதான நேயம் சான்றுகளுடன் வரிசைபடுத்தப்பட்டுள்ளது.

## சான்றெண் விளக்கம்


1. வ.த.இராமசுப்பிரமணியம்(உ.ஆ.),தொல், பொருள், பொருளியல்.நூ.219.
2. வ.த.இராமசுப்பிரமணியம்(உ.ஆ.),தொல், பொருள். மரபி. நூ.577.
3. மேலது.,நூ.571.
4. சீ. பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல் – ப -8.
5. மேலது நூல் – ப -8.
6. திரு.வி.கலியாணசுந்தரனார், மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் – ப 29-30.
7. கே.பாலதண்டாயுதம். இலக்கியத்தில் மனிதநேயம், ப- 10.
8. இரா.சக்குபாய், பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம் - ப-58.
9. திரு.வி.கலியாணசுந்தரனார், மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் – ப 29-30.
10. கே.பாலதண்டாயுதம். இலக்கியத்தில் மனிதநேயம், ப- 10.
11. வாரியார்-வாரியார் வழங்கும் சிந்தனைச்செல்வம் ப – 147.
12. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா. 192.
13. இரா.கமலா, தமிழ் இலக்கியங்களில் மனித நேயம் – ப -1.
14. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி.ப .820.
15. டாக்டர் ஏ.சி.செட்டியார் – ஆங்கிலத் தமிழ் அகராதி.
16. கா.அப்பாதுரை, ஆங்கில தமிழ் கையகராதி.
17. செ.ஜீரா லாரன்ஸ், மனிதநேயம். தியாகம்.ப -72.
18. குறிஞ்சி, அ.மகாலட்சுமி அவர்களின் கட்டுரை, ப. எண் – 247.
19. இரா.சக்குபாய், பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம் - ப-58.
20. ப.தமிழரசி , இருபதாம் நூறுறாண்டு பெண் கவிஞர்கள்,ப-25.
21. பா.குழந்தைசாமி, காண்டேகமும் முவ வும் ஓர் ஒப்புநோக்கு, ப- 97.
22. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள் –– 972.
23. டாக்டர் கமலிஸ்ரீபால், மனிதநேயம், ப- 20.
24. இதயகீதம், இராமனுஜம் இலக்கியத்தில் மனிதநேயம், ப-101
25. இராசபோபாலன். வ, இலக்கியத்தில் ஒருமைப்பாடு, ப -15.
26. குழந்தைசாமி வ.செ, அறிவியல் தமிழ், ப- 11.
27. கிருட்டிணசாமி. பெ, மணிமேகலையில் மனிதநேயம், ஆய்வுக்கோவை – 1.
28. இரா.சக்குபாய், பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம் - ப-39.
29. டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி, எண்ணங்கள். ப- 6.
30. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள் - 72.
31. டாக்டர் கமலிஸ்ரீபால், மனிதநேயம், ப- 20.

32. வரதராசன்.மு, இலக்கியவரலாறு , ப -27.

33. இராஜமுத்திருளாண்டி, இலக்கியத்தில் மனித உரிமைகள், ப – 28.

34. சங்கநெறி, ப -55.மணிவாசகர் நூலகம், சிதம்பரம் – 1987.

35. தமிழண்ணல்(உ.ஆ.),அகம்.,பா.389 :10-13.

36. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),நற்றிணை, பா.186 :8-10.

37. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா. 187.

38. மேலது., பா.312.

39. அ.விசுவநாதன்(உ.ஆ.).கலித்தொகை.,பா.86 :13-14.

40. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா. 278, 2-7.

41. மேலது.,பா.279:3-11.

42. மேலது.,பா.253.

43. மேலது.,பா.255.

44. மேலது.,பா.256:1-6.

45. மேலது.,பா. 262.

46. மேலது.,பா.261:15-16.

47. மேலது.,பா.263: 8.

48. மேலது.,பா.264: 3-4.

49. மேலது.,பா.265:5.

50. இரா.செயபால்(உ.ஆ.),அகம்.,பா.67:10.

51. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.306: 4.

52. மேலது.,பா.34:5-7.

53. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள்.105.

54. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.134:1-3.

55. பாலுசாமி, நா, (ப.ஆ), வாழ்வியற் களஞ்சியம், (தொகுதி – 8)ப -75.

56. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.70

57. மேலது.,பா.173.

58. மேலது.,பா.181.

59. மேலது.,பா.388.

60. சென்னை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி - பக்-236.

61. தமிழ் அகர முதலி – ப – 387.

62. வே.முத்துலக்குமி, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள், அனிதா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதல் பதிப்பு, 1999, ப-114.

63. வ.த.இராமசுப்பிரமணியம்(உ.ஆ.),தொல் , பொருள்.புறம்.நூ.61:7-8.

64. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ,)சிலம்பு,வேட்டுவரி.உரைபாட்டுமடை , பா -14.

65. சாமிநாதையர். உ.வே புறநானூறு மூலமும் உரையும்.

66. சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு மூலமும் உரையும்.

67. பிங்கலநிகண்டு., சூ.எ.,755 .

68. மேலது., சூ.எ.,756.

69. மேலது., சூ.எ.,157.

70. மேலது., சூ.எ.,2128.

71. மேலது., சூ.எ.,2128.

72. மேலது.,சூ.எ.,2130.

73. சிவகாமி.ச(ப.ஆ), பிரபந்தத்திரட்டு., பா.எ.503.

74. மேலவர்., மேலது.,பா.எ.507.

75. தட்சிணாமூர்த்தி.அ, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், ப.263.

76. வெள்ளைவாரணனார். க, சங்ககாலத் தமிழ் மக்கள், ப – 30.

77. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .158 :17-20.

78. மதுரை இளங்குமரனார் (உ.ஆ,),திருக்குறள் .656.

79. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .163.

80. மேலது.,பா.165:11-15.

81. மதுரை இளங்குமரனார் (உ.ஆ,),திருக்குறள் . 233.

82. அ.ஆலிஸ்(உ.ஆ,),பதிற்றுப்பத்து - பா-86 :5.

83. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .165:12-15.

84. மேலது.,பா.142.

85. மேலது.,பா.107.

86. மேலது.,பா.108.

87. மேலது.,பா.109:16-18.

88. மேலது.,பா.123.

89. மேலது.,பா.124.

90. மேலது.,பா.126:11-13.

91. மேலது.,பா.127.

92. மேலது.,பா.128.

93. மேலது.,பா.129:6-9.

94. மேலது.,பா.130:2.

95. மேலது.,பா.101:1-3.

96. மேலது.,பா.103:9-12.

97. மேலது., பா.149.

98. மேலது., பா.152:32.

99. மேலது., பா.153:1-2.

100. மேலது., பா. - 204:1-4.

101. மேலது., பா.396:13-20.

102. மேலது., பா.158.

103. மேலது., பா.399.

104. இரா. மோகன் (உ.ஆ.), சிறுபாணாற்றுப்படை.அடி.103-107.

105. அ.ஆலிஸ்,(உ.ஆ.), பதிற்றுப்பத்து, பா.12:19-20.

106. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .150.

107. மேலது., பா. 180.

108. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ.), மணி, பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை வரி. 73-74.

109. மேலது., வரி.77-78.

110. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.), திருக்குறள். 226.

111. தமிழண்ணல்(உ.ஆ.), அகம் 72:15.

112. சு.உஷாராணி(உ.ஆ.), பா. பாடல் , ப -443

113. இரா. மோகன் (உ.ஆ.), சிறுபாணாற்றுப்படை. அடி.99 – 103.

114. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா . 91.

115. தமிழர் உள்ளம் , ப – 57.

116. வி.நாகராசன்(உ.ஆ.), குறுந்தொகை.பா.91 :5.

117. இரா.செயபால்(உ.ஆ.), அகம்., பா.147:9-10.

118. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .150:22-28.

119. மேலது., பா - 383:21-23.

120. மேலது., பா.280:8-10.

121. மேலது., பா.2:1-8.

122. மேலது., பா.2:13-16.

123. மேலது., பா.25: 10-15.

124. மேலது., பா.27 : 7—9.

125. மேலது., பா.27: 14-19.

126. மேலது., பா.30:5-8.

127. மேலது., பா.9: 1-5.

128. மேலது., பா.72:10-12.

129. மேலது.,பா.192.

130. மேலது.,பா.194:6-7.

131. மேலது.,பா.182:1-3.

132. மேலது.,பா.47 : 1 – 7.

133. மேலது.,பா.95 :6-8.

134. மேலது.,பா.58:20-26.

135. மேலது.,பா. 367: 6-11.

136. வி.நாகராசன் (உ.ஆ.),மதுரைக்காஞ்சி. அடி.156-158.

137. மேலது.,அடி .749 – 750.

138. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .35.

139. மேலது.,பா.44:11-16.

140. மேலது.,பா.46.

141. மேலது.,பா.50:8-17.

142. மேலது.,பா.143:12-15.

143. மேலது.,பா.144 :8-12.

144. மேலது.,பா.146 : 6-8.

145. மேலது.,பா. 5 :5-7.

146. மேலது.,பா.320,1-11.

147. காமாட்சி சீனிவாசன், குறள் கூறும் சமுதாயம், ப – 205

148. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .195.

149. வ.த.இராமசுப்பிரமணியம்(உ.ஆ.),தொல் , பொருள்.புறம். நூ .65:7.

150. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .18:28-30.

151. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து, பா.22:28.

152. சங்க இலக்கியத்தில் பழந்தமிழரின் சூழல்காப்புணர்வு: பக் – 120.

153. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .55:9-12.

154. மேலது.,பா.184:5-11.

155. வ.த.இராமசுப்பிரமணியம்(உ.ஆ.),தொல் , பொருள்.மரபியல். நூ . 616.

156. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா . 331:11-12.

157. மேலது.,பா.351:19-20.

158. அ.தட்சிணாமூர்த்தி(உ.ஆ.),ஐங்குறுநூறு.பா.206:2.

159. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.441-447.

160. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .55:10.

161. வி.நாகராசன் (உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி.497 – 499.

162. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .390:5-6.
163. வி.நாகராசன் (உ.ஆ.), மதுரைக்காஞ்சி.அடி.643 – 653.
164. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .353:15-16.
165. அ.ஆலிஸ்,(உ.ஆ.), பதிற்றுப்பத்து, பா. 42:2-4.
166. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .5:1-3.
167. இரா.மோகன்(உ.ஆ.), சிறுபாணாற்றுப்படை .அடி.207-208.
168. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்., பா .34:1-6.
169. வி.நாகராசன்(உ.ஆ.), மலைபடுகடாம்.அடி.77 -80.
170. இரா.மோகன்(உ.ஆ.), பெரும்பாணாற்றுப்படை.அடி.57-58.
171. இரா.செயபால்(உ.ஆ.), அகம்.பா.50:11-14.
172. தமிழண்ணல்(உ.ஆ.), அகம், பா. 360: 15-17.
173. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை.பா.338:10-12.
174. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை.பா.178:3 -5.
175. இரா.செயபால்(உ.ஆ.), அகம்.பா.290: 5-7.
176. மேலது., பா.33:5-7.
177. தமிழண்ணல்(உ.ஆ.), அகம், பா. 352:1-7.
178. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை.பா.57:1-6.
179. இரா.செயபால்(உ.ஆ.), அகம்.பா.248:2-9.
180. மேலது., பா. 63:10-12.
181. மேலது., பா.129:3-6.
182. அ.விசுவநாதன்(உ.ஆ.), கலித்தொகை.பா .11:16-17.
183. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.பா .23 :18-19.
184. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை.பா.92.
185. இரா.செயபால்(உ.ஆ.), அகம்.பா.160:1-7.
186. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.பா. 67.

## இயல் – நான்கு

# புறத்திணைப் பாடல்கள் நுவலும் பொருள்கள்

### முன்னுரை

இலக்கியம் என்பது மனித உணர்வுகளை அப்படியே வெளிப்படும் கருவி என்று கூறலாம். மனிதன் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது, பிற மனிதர்களின் மீதான பார்வையையும் வெளிப்படுத்துகிறான். மேலும், சமூகத்தின் மீதான பார்வையையும் தன்னையறியாமல் பதிவு செய்கிறான். இதில் இயற்கை அழகுகள் மனிதனின் செயல்கள், சமூகத்தின் புழங்குப் பொருட்கள் உள்ளிட்ட பல செய்திகளைத் திறனாய்வாளர்கள் கண்டெடுக்கின்றனர். அக்காலத்தில் வீரம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த போதிலும் மானுடநேயத்தைப் போற்றியுள்ளமை அறியத்தக்கது. அரசர்களும் புலவர்களும் நட்புணர்வுடன் இருந்தமை புலனாகிறது. அரச இனங்கள் தங்களிடையே போட்டுக் கொண்ட போட்டிகள் ஆகியவற்றைப் பற்றியும் உரைத்து நிற்கின்றது.

### ஐந்நிலப் பிரிப்பு

மனிதர்கள் தங்களுடைய வாழ்வியலுக்கு அடிப்படையாக இருந்தவற்றைப் பிரித்து திணை என்று பெயரிட்டனர். திணை என்ற அச்சொல் நிலம் என்ற பொருளிலும் ஆளப்படுகிறது. மனித வாழ்வின் செயன்மைகள் ஒவ்வொரு மனித இனமும் எந்த இயற்கைச் சூழலில் வளர்ச்சி பெற்றதோ அந்த இயற்கைச் சூழலின் இயல்புகளோடு ஒத்திருந்தன.

மனிதயினங்களை ஆய்வுசெய்த போது மனித நாகரிகத்தின் இயல்பினைக் காட்டும் மூன்று நாகரிகங்கள் உண்டு. மத்திய தரைக்கடலைச் சார்ந்து நிலவிய நாகரிகம் தமிழின் நெய்தல் நாகரிகத்தோடு ஒப்பிடத்தகுந்தது. ஆல்ப்ஸ் மலைநாட்டு நாகரிகம் நம்முடைய குறிஞ்சிநில நாகரிகத்தையும் நார்டிக் நாகரிகத்தை “முல்லை” நிலத்திற்கும் ஒப்பிடலாம்.

### முதல் மனிதன் வாழ்ந்த நிலம்

உலகில் முதல் மனிதன் வாழ்ந்து வந்த இடம் குறிஞ்சி நிலம் எனலாம். மேடான இந்நிலத்தைப் பல காலங்களில் இயற்கையின் காரணமாக அரிப்புற்று அரிப்புற்று சிறுசிறு குன்றுகளாக மாறி இருக்கக் கூடும். அக்குன்றுகளைச் சார்ந்து வாழும் மக்கள் அந்நிலப்பகுதி மக்களாக அறியப்பட்டனர்.

ஆதி மனிதன் சூரியனின் வெப்பத்திலிருந்தும், பகை விலங்குகளிலிருந்தும், தன்னைக் காத்துக் கொள்ள குகைகளையும் பாறை இடுக்குகளையும் நீர் தேக்கங்களைப் பயன்படுத்திக் கொண்டான்.

உணவிற்காகப் பண்டை மனிதன் காய், கறி, பழம், கொட்டை ஆகியவற்றை உண்டு உயிர் வாழ்ந்திருந்தான். விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்

கொள்வதை விட வேட்டையாடவே அதனை அதிகமாகத் தாக்கத் தொடங்கினான். இதன் பின்னர் தீ,அம்பு உள்ளிட்ட அவசிய பொருட்கள் கண்டுபிடிப்பானது மிகப்பெரிய வளர்ச்சிக்கு வழி வகுத்தது. மேலும், வேலை எய்யும் ஒரே அம்பில் அது புலியை வேட்டையாடிவிடும் என்ற செய்தி அவர்களின் வீரச் சிறப்பைச் சுட்டும்.

**அரசர்கள்**

**ச**ங்ககாலத்தில் சேர, சோழ பாண்டிய அரசர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் குறித்துச் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள செய்திகளைக் காணலாம்.

**தமிழ்நாட்டின் பெருமை**

சீனாவுடன் ஒப்பிடக் கூடிய பழம் பெருமை மிக்க நாடு தமிழ்நாடு எனலாம். தமிழ்,தமிழகத்தின் பெருமை தனித்துவமானது. பெருமையுடன் இன்றும் கூடப் போற்றப்படுவது.

**"இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் அறிய"** [1]

என்று சிலம்பும்

**"இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க"** [2]

என்று பதிற்றுப்பத்தும்

**'வையக வரைப்பில் தமிழகம் கேட்ப"** [3]

என்று 168-வது புறப்பாடலும் செப்புவது தமிழகப் பெருமையை அறிய உதவுகிறது.

**பாண்டிய நாட்டின் பெருமை**

ஆதிகாவியம் என்று குறிப்பிடப்படும் வடமொழி பாரத, இராமாயணங்களில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளவை உணரப்படும். பாண்டிய வேந்தரின் தலைநகரம் பொன்னாலும் முத்தாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாக வால்மீகி இராமயணத்தில் சுட்டப்பெற்றுள்ளன. இலங்கையின் இரகு வம்சமும், பாண்டியர்களின் பெருமையைக் குறிப்பிட்டுள்ளன. "பாண்டிய நாடே பழம் பதி" என்று மாணிக்க வாசகரும் "தென்னம் பொருப்பன் நன்னாடு" என்று புறநானூறு குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.

பாண்டி நாடு மதுரை, திருநெல்வேலி இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்கள் புதுக்கோட்டையில் சில பகுதிகள் அக்கால பாண்டிய நாடாகும்.

**பாண்டியப் பேரரசு**

கடுங்கோனே தனித்தோ சிம்ம விஷ்ணுவுடன் சேர்ந்தோ களப்பிரர்களை வென்று முதல் பாண்டியப் பேரரசுக்கு வித்திட்டான்.

முதல் பாண்டியன் } கடுங்கோன் + அவனி சூளாமணி

சோழர் கைப்பற்றியது.

↓

மூன்றாம் குலோத்துங்கன்

↓

வீரபாண்டியன் & சுந்தர பாண்டியன் (சோழர் மறைவு)

↓

பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி (நெட்டியம்மையார், நெடும்பல்லியத்தார் உள்ளிட்ட புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்.

***தமிழகச் சங்க மக்கள்***

சங்க காலத்தில் தமிழர்கள் மற்றைய நாட்டு மக்களை விட நாகரிகம் அறிவு ஆகியவற்றில் உயர்ந்திருந்தனர். எனவே தான் உணர்வுகளுக்கு மிக முக்கியத்துவம் அளித்திருக்கும் நிலையைக் காண்கிறோம்.

அறிவு வளர்ச்சியில் சிறந்திருக்கும் நாடுகளாக அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளைச் சுட்டலாம். அவற்றில் உயர்நிலையில் அமெரிக்கர்கள் திகழ்கின்றனர். ஆனால் அறிவில் உயர்ந்த அவர்கள், குடும்ப அமைப்பைத் தோற்றுவிப்பதில் பண்பாட்டைக் கட்டமைப்பதில் வெற்றி பெற்றுள்ளனரா? எனில் இல்லை என்றே கூறலாம். தங்கள் குழந்தைகளைப் பேணி வளர்த்து குடும்ப முறையின் வெற்றியமைப்பு நம் நாட்டில் உள்ளதைப் போல் அங்கில்லை. மனம் என்பது உணர்வுகளால் நிரம்பியது. ஆயிரம் செல்வங்கள் இருப்பினும் மகிழச்சில்லையெனில் அவன் வாழ்வதில் பயன் இல்லை. இன்றும் கூட வாழ்வில் உயர்வதற்குப் பல்வேறு செயல்களை செய்யும், அங்குப் பாடல் பாட மேடைப் பாடகர்கள் மகிழச்சியூட்டுகின்றனர். மேடைப் பேச்சாளர்கள் மேடையில் பேசி மனங்களை ஆற்றுப்படுத்துகின்றனர்.

***“சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்***
***மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே.”*** [4]

என்று தாயுமானசுவாமிகள் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

அவர்களின் வாழ்வு நிறைவடைவது என்பது மன மகிழ்ச்சியினால் தான் என்பது மனிதராகப் பிறந்திருக்கும் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பண்பாகும். இன்றும் கூட உலகப் புகழ் பெற்ற“ஸ்டீவன் ஹாக்” தன்னுடைய இறப்பின் போது அருகில்

இருந்தவரிடம் கூறியதாகப் புலனத்தில் செய்திகள் கூறப்படுகின்றன. அதாவது நான் வாழும் போது அளவற்ற பொருள்களைச் சம்பாதித்தேன். பேரும், புகழும் என்னைத் தேடி வந்தன. ஆனால் அவை எதுவும் என் இறுதிகாலத்தில் என்னுடன் வரவில்லை. நல்ல நட்பு, நல்ல மக்கள் எதுவுமே என்னிடம் இல்லை என்று அவர் கூறியதாகக் கூறப்படும் செய்திகள் அனைவருக்கும் பாடமாகும். உண்மையில் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் நம் வாழ்வில் நம்மை வயதான காலத்தில் சந்திக்கும் மாந்தர், எத்தனை வீடுகள் இருக்கிறது. எவ்வளவு சொத்து வைத்திருக்கிறார்கள் என்று யாரும் கேட்பதில்லை. ஆனால் உங்களுடைய பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள். உங்கள் உடல் ஆரோக்கியம் எவ்வாறு இருக்கிறது என்று தான் வினவுவார்கள். இதுவே வாழ்க்கை, காந்திஜி தேசத்தந்தையாக இருந்தபோதும் கூட, தன்னுடைய இல்லத்திற்கு மிகச்சிறந்த (அ) சரியான தந்தையாக இல்லை என்னும் விமர்சனம் உண்டு.

எனவே குடும்பம் என்னும் அமைப்பு மிக மிக இன்றியமையாத ஒன்றாகிறது. மனித தோற்றத்தின் பின்னர், காட்டு மிராண்டி நிலையில் குழுமணம் இருந்தது. பின்னர் நாகரிகம் தோற்றம் பெற்ற பின்னர் ஒருதார மணம் தோன்றியது என்பர். இனக்குழு வாழ்க்கையின் படிநிலை வளர்ச்சியின் இறுதி நிலையே ஒரு தார மணமாகும். இதன் பின்னரே குடும்பம் என்னும் சமூக அமைப்பு தோற்றம் பெற்றது.

**அகவாழ்வு**

குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களிலும் வாழும் மக்களாகச் சங்க காலத்தாப் பிரித்திருந்தனர். இவற்றில் ஒவ்வொரு உணர்வுக்கும் ஒவ்வொரு நிலத்தை சுட்டியுள்ளமை உணரத்தக்கது.

**புறவாழ்வு**

புறவாழ்வு என்பதைப் போர், வீரம் என்றவாறு எளிமையாகக் கடந்து விடுவது போல இங்கு கடந்து விடுதல் நலம் பயக்காது. போரில் தங்கள் வீரத்தைச் சுட்டுவது மட்டுமின்றி , அறவழியில் அதனைச் செய்திருப்பதே இங்கு நோக்கத்தக்கதாகும். இனி சங்க காலத்தில் புறமாகக் கருதப்பட்டவைகளை இனி தொகுத்துக் காணலாம்.

1. திணைப் பாகுபாடு
    - ❖ தாய்வழிச் சமூகம்
    - ❖ தந்தைவழிச் சமூகம்
    - ❖ வேளாண் சமூகம்
    - ❖ மேய்ச்சல் சமூகம்
    - ❖ போர்ச் சமூகம்
    - ❖ உடைமைச் சமூகம்

2. அரசு


- ❖ அரசன்
- ❖ அரசின் தோற்றம்
- ❖ அரசின் கடமைகள்
- ❖ அரசின் உரிமைகள்

3. மக்களின் வாழ்வியற் பண்புகள்

- ❖ பெருமிதம்
- ❖ நன்னெறி
- ❖ நட்புணர்வு

சங்க காலச் சமூகம் முதலில் திணைப் பாகுபாட்டில் அமைந்திருந்தது. இனி அத்திணைப் பற்றிய விளக்கங்களையும் அவை உருவான முறையையும் காணலாம். அக்காலத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**மாந்தர் வாழ்வியற் படிநிலை வளர்ச்சி**




இனி இவற்றை விரிவாக ஆராய்வோம்.

**திணைப் பாகுபாடு**

*திணைப்பாகுபாட்டின் வழிப் பிரிக்கப்பட்ட சமூகம், காலம் செல்லசெல்ல தலைமை முறையில் மாற்றம் சமூக அமைப்பில் புதிய அமைப்பை உருவாக்கியது. இயற்கை விளைபொருள்களும் உற்பத்திப் பொருள்களும் உணவு முறைகளும், மரம் செடி கொடிகளும் உற்பத்திக் கருவிகளும் வெவ்வேறுபட்டனவாய் இருப்பதை முதற்பொருள் – கருப்பொருள் பாகுபாடு செய்து காட்டுகின்றன.*

**சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

*காட்டுமிராண்டித் தோற்றத்தில் மனிதன் கல்லும், வில்லும் கைத்தடியும் விட்டு விட்டு வேட்டையாடிய நிலையைத் தவிர்த்து, உணவுக்காகத் தானிய சாகுபடி முயற்சியில் ஈடுபட்டான். ஆனால் பயிர் சாகுபடி முயற்சியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. நிலத்தின் மேலே விதைகளை விதைத்தால் எறும்புகள் உள்ளிட்டவை அதனைத் தின்றுவிடும் என்றும் மழை காலத்தில் நீரில் அடித்துச் சென்றுவிடும் என்பதையும் அறிந்து நிலத்தைக் கீறி அதில் விதையைப் போட்டால் அது முளைத்து விடும் என்பதை அறிந்தான். இவ்வாறு படிப்படியாக தன்னுடைய பட்டறிவின் மூலம் வேளாண்மையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டான்.*

*காட்டுமிராண்டிக் காலநிலையில் குடும்ப அமைப்புத் தோற்றம் பெறவில்லை. மந்தைக் கூட்டங்களைப் போல மக்கள் வாழ்ந்த நிலையில் தங்கள் தாயை மட்டுமே பிள்ளைகள் அறிந்தனர். தங்களின் தந்தையை அவர்கள் அறியவில்லை.இதனையே தாய்மிச் சமூக அமைப்பு என்பர்.*

*வலிமை மிக்க குடும்ப விலங்குகள் காடுகளில் வாழ்ந்த மனிதக் குடும்பத்தைப் பெரும்பாலும் அடித்துக் கொன்று விடும். இதனால் மனிதக்குடும்பம் எச்சரிக்கையாய் வாழ முற்படுகின்றது. இவ்வாறு உணவு தேடி மீண்டும் வரும் நிலையில் வாழ்ந்த நிலையே காட்டுநிலைச் சமூகம் ஆகும்.இதன் பின்னரே தலைவி குடும்பத் தலைவியாக மதிக்கப்பட்டாலும் அவள் பின்னர் அடிமைப்படுத்தப்பட்ட நிலையை நாம் உணருகிறோம்.*

*தாய்வழிச் சமூகத்தைத் தொடர்ந்து அடுத்த கட்டம் தந்தைவழிச் சமூகம் தோற்றம் பெற்றுள்ளது.*

> **"ஒன்று அமர் உடுக்கைக் கூழ் ஆர் இடையன்**
> **கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி"**[5]

*இதில் இரவு நேரங்களில் காட்டில் பசுக்களைக் கிடையமர்த்திக் காவல் காத்த செய்தியைக் காணமுடிகிறது.*

> **"தகர் விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்**
> **கல்லென கடத்திடைக் கடலின் இரைக்கும்**
> **பல் யாட்டு இனி நிரை எல்லினிர் புகினே"**[6]

என்ற வரிகளில் பசுக்களைக் கவரா வண்ணம் காவல் புரிந்தனர் என்ற செய்தி பெறப்படுகின்றது. இவ்வாறு இல்லத்தின் பொருளாதார தேவைகளை நிறைவேற்றுபவனாகத் தலைவன் மாற்றம் பெறுகிறான். இது தந்தை வழிச் சமூகமாக உயர்வு பெறுகிறது. ஆண்களின் உழைப்பு மிகுதியாக இருந்ததால் கால்நடைப் பெருகியது. அதனால் மக்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு மாற்றங்கள் குறிப்பாக முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இதனால் கால்நடைகள் தந்தைவழிச் சமூகத்தின் முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது. மேலும், வேட்டையாடுதல், உள்ளிட்ட அனைத்துப் பொருளாதாரத் தேவைகளும் ஆண்களாலேயே நிறைவேற்றப்பட்டதால் அவை பொருளாதாரம் முழுமையும் ஆண்கள் வசமானது.

இவ்வாறு பெண்களின் தலைமைப் பொறுப்பைத் தலைவன் அபகரித்துக் கொண்டு தன் உணர்வை நிலைப்படுத்தியுள்ளமையை,

***"புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர்க்,***
***குமிழ்உண் வெள்ளைப் பகுவாய் பெயர்த்த***
***வெண்வாழ் தாய வண்காற் பந்தர்,***
***இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்,***
***பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை"*** [7]

ஆலந்தூர் கிழார் பாடிய இப்பாடல் தந்தை வழிச்சமூகத்தைப் பற்றிப் பேசுகிறது. மேலும் பெண்களின் வாழ்வு அடிமை நிலைக்குச் சென்றமையை,

***"களர்ப்படு கூவல் தோண்டி, நாளும்,***
***புலைத்தி கழீஇய தூவெள் அறுவை;***
***தாதுஎரு மறுகின் மாசுண இருந்து,***
***பலர்குறை செய்த மலர்த்தார் அண்ணற்கு"*** [8]

என்ற பாடல் விளக்குகிறது. மேலும், இல்லத்தில் இருந்து குழந்தைகளைப் பராமரிக்க பெண்களையும், தன்னுடைய தேவைகளை நிறைவு செய்ய விலங்குகளையும் பழக்கினான். இறைச்சிக்காகக் கோழியையும் வேட்டைக்காக நாயையும் பயன்படுத்தினான்.

அன்று தன்னுடைய சுயதேவைக்காகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அவன் பழக்கிய நாய் இன்று, தெரு நாய்களாகத் திரிந்து கொண்டுள்ளது. அன்றுள்ள சூழலில் தன்னுடைய சுய தேவைக்காக நாயின் குணங்களையே மாற்றி, அதனுடைய வேட்டையாடும் தன்மையை மாற்றித் தனக்கு வேலை செய்யும் விலங்கினமாக மாற்றிக்கொண்டான். அதனால் காட்டில் வாழ்ந்த நாய் முழுக்கமுழக்க, நாட்டில் வாழும் விலங்குகளாக மாறி விட்டது. அவை தமக்கு வாழத் தெரியாமல் நாட்டிற்கு வந்து அவை தெருநாய்களாக வாழ்கின்றன.

**வேளாண்மை**

*பண்டையத் தமிழர் நிலத்தின் இயற்கை அமைப்பு,இயற்கைச் சூழல் பருவகாலம் ஆகியவற்றிற்கு ஏற்ப பாகுபடுத்தியுள்ளனர். நாடோடி வாழ்க்கை முடிவுற்று,ஓரிடத்தில் கூடிவாழ தலைப்பட்ட சங்ககால மக்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை மேற்கொண்டனர். பல்வேறு காலக்கட்டங்கள் கடந்த பிறகு முறையான வேளாண்மை செய்யக் கற்றுக் கொண்டான் ஆதித் தமிழன். அந்த வகையில் இந்தியா இன்று வரை வேளாண்மை வளம் மிகுந்த நாடு. கிராமங்களே இந்நாட்டின் முதுகெலும்பு என்று காந்தியடிகள் கூறுவார். இன்று வரை அஃது உண்மையாகவே இருந்து வந்துள்ளமை நோக்கத்தக்கது.*

*"உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாக நிலமே விளங்கியது. ஒவ்வொரு குழுவும் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளனர். பின்னர் அது தனி உடைமையாக மாறிய நிலையில் வேளாண் வர்க்கம் உருப்பெறுகின்றது."*[9] *தமிழகத்தில் தலைசிறந்த தொழிலாக வேளாண்மை விளங்கியது. "சுழன்றும் ஏர்பின்னது உலகம், உழந்தும் உழவே தலை" என வள்ளுவர் கருதினார். வேளாண்மை சிறப்புறக் காரணமாக விளங்கியவை நீர்நிலைகளும், நீர் ஆதாரங்களுமே என்பது இங்கு நோக்கத்தக்கது.*

***"அம் தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட,***
***தோடு கொள் வேலின் தோற்றம் போல,***
***ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்***
***நாடுஎனப் படுவது நினதே அத்தை"*** [10]

*எனக் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவனைப் புலவர் வெள்ளைக்குடி நாகனார் பாடியுள்ளார்.*

***நன்செய் நிலங்கள்***

*சங்க காலம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்ட காலம். இக்கால மக்கள் இயற்கை பொருளாதாரத்தைக் கொண்டிருந்தனர். தினை, சாமை, பலா, வள்ளிக்கிழங்கு, தேன் முதலிய இயற்கையாய் கிடைத்த பொருட்களைப் பயன்படுத்திக் கொண்டனர். தவிர வரகு, அவரை, நெல், கரும்பு ஆகிய பொருளை உற்பத்தி செய்யவும் கற்றுக் கொண்டனர். இவைகளுக்கு நிலமே அடிப்படையானது. இந்நிலம் புன்செய் நிலம், நன்செய் நிலம் என இரண்டாகப் பிரித்துக் கொண்டனர். மருதம், நெய்தல் ஆகியத் திணைகளில் நன்செய் வேளாண்மை நடைபெற்றன. விலங்கினங்கள் மேய்வதற்கும், வேறு பயிர்கள் பயிரிடுவதற்கும் கரம்பு நிலங்கள் இருந்து வந்தன. இதனை,*

***"விடுநிலக் கரம்பை விடரளை நிறையக்***
***கோடை நீடக் குன்றம் புல்லென"*** [11]

***"இருநிலக் கரம்பைப் படுநீறு ஆடி"*** [12]

*என்ற வரிகளில் கோடையிலும் மிக்க நீர் பெருகு மென்றலின், அது பாயுமிடத்துக் கோடையால் உலர்ந்து வெடித்துக் கரம்பாய்க் கிடக்கும் புலங்களெல்லாம் அவ் வெடிப்பு நிறைய நீர் நிரம்பித் தேங்கிய நிலையில் நீர் இனிது ஏறமாட்டாமையின் வேளாண்மைக்குப் பயன்படாது புல் வகை வளர்ந்து விலங்குகள் மேயுமாறு விடப்பட்ட கரம்பு நிலத்தை "விடுநிலக் கரம்பை" என்றார். ஏறமாட்டாத மேட்டுப் பாங்கரினும் நீரேறி நிரம்புமாறு கோடையிலும் பேரியாறு நீர் பெருகிப் பாயுமென்பது கருத்தாயிற்று. "கரம்பை விடரளை நிறைய வென்றது, முன்பு நீரேறாத காம்பை வயல்களில் கமர்வாய் நீர் நிறைய வென்றவா" றென்பர் பழையவுரைகாரர்.*

***புன்செய் நிலம்***

*குறிஞ்சி, முல்லை ஆகியத் திணைகளில் புன்செய் வேளாண்மை நடைபெற்றன. நிலத்தைச் செறு,செய் என்று கூறியுள்ளனர் புலவர்கள். முடியாகக் கிடக்கின்ற நாற்றை நட்ட நெடிய நீரையுடைய செய்கள் என்று வகைப்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.*

***"கார் ஏறு பொருத கண் அகன் செறுவின்***
***உழாஅ நுண் தொளி நிரவிய வினைஞர்***
***முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்"*** [13]

*மேலும், நீரைத் தேக்கி வைக்கக் கூடிய ஆறு, குளம், வாய்க்கால் போன்ற நீர் நிலைகளை ஏற்படுத்தியும் உழவுத்தொழில் புரிந்தனர்.*

**வேளாண் கருவிகள்**

*கலப்பை, தளம்பு, பரண், தட்டன, கண்ண, தழலை, கவண், குயமி, வாள் போன்ற கருவிகள் உழவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***அரசியல்***

*முதலில் தனியே வாழ்ந்த மனிதன் நாகரிகம் தோன்றிய பின் பிறரிடமிருந்து விலங்குகளிடமிருந்து, மற்றும் கட்டுக்கோப்பாக வாழ்வதற்குத் தனக்கென ஒருத் தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அந்த தலைவன், ஒழுக்கம் ஆளுமை, வீரம், அறம், அறிவு என அனைத்து ஆற்றல்களும் உடையவனாக விளங்கினான். அவனே அரசன், கோ என்றெல்லாம் அழைக்கப்பட்டான். அவனுடைய செயல்களில் அன்பும் கருணையும் நிலைத்து நிற்க வேண்டும். அரசன் ஒப்புயர்வற்றவனாகத் திகழ்ந்து, தன்னலமில்லாமல் நாட்டை ஆள வேண்டும் என்று கருதினர். அரசன் என்பவன் தன்னுடைய சுற்றமாக மக்களைப் பேண வேண்டும்.*

*அரசனிடம் இருக்க வேண்டியவை*

- *தாய்மையுணர்வு*
- *ஒழுக்கம்*
- *இரக்கம்*
- *எளிமை*

ஆகியனவாகும். இவை அனைத்துக் கூறுகளையும் "அறவாழ்க்கை" என்ற ஒற்றைச் சொல்லால் குறிக்கப்படுகிறது. இதனைப் போற்றி வாழந்தவர்களே மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்கள் ஆவர். இவர்களே கடையேழு வள்ளல்கள் என்றும், மன்னனைக் கடவுளாக மதிக்கும் வழக்கம் இருந்தமையை நோக்க இது புலப்படும். மன்னர்கள் நேர்மையானவர்களாக அமைந்தமை மக்களும் மகிழ்ச்சியாக வாழந்தமைக்கு அடையாளமாக உள்ளது. மன்னர்களுக்கென இல்லங்கள், மாட மாளிகையாக எழுப்பப்பட்டன. வானை முட்டும் கோபுரங்கள், கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. மன்னனின் வெற்றியைத் தம் வெற்றியாகக் கருதினர். மேலும், தன் காலத்திலே உள்ள குடிகளைச் சமமாகக் கருதி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர். இதனால் மக்களின் வாழ்வு இனிமையாகச் சென்றது. குடிகளைக் காப்பதே தன்னுடைய வாழ்வியலின் இலட்சியங்களாகக் கொண்டான்.

**அரசின் தன்மை**

அரசு + இயல் – அரசியல். அரசுடன் தொடர்புடையது அரசியல் ஆகும். இது பொலிஸ் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். அரசு என்பது ஒரு வரையறைக்குட்பட்ட எல்லையில் வாழும் மக்களைக் கொண்டு அவர்கள் மீது அதிகாரமாகிய ஆட்சி செலுத்தும் அமைப்பைப் பற்றியும் நாடு மக்கள், அரசு தலைவர் ஆகியன பற்றிஅறிவது அரசியலாகும். அரசு என்பது நற்குணங்கள் நிறைந்த பெரிய அரசு என்று பிளாட்டோ குறிப்பிடுவார். நல்ல வாழ்க்கையை அடைய முயலும் கூட்டமைப்பே அரசு என்றும் அரிஸ்டாடில் குறிப்பிடுகிறார். வாய்மை நேர்மை கொண்டும் மிக்க நல்லரசு தான் ஒரு நாட்டை வல்லரசாக்க முடியும். இத்தகைய சிறந்த ஆட்சியினைத் தொண்டைமான் வழி காணஇயலும்.

**தொண்டைமான் ஆட்சி**

தொண்டைமான் மக்கள் மனதில் இடம் பெற்ற மன்னன். இவன் காஞ்சிபுரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி செலுத்தினான். அறத்தினைக் கைக்கொண்டு ஆட்சி புரியும் போது எவ்வித இடர்பாடுகளும் இல்லாமல் வாழலாம் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். இதனை,

> **"வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி**
> **அல்லது கடிந்த வறம்புரி செங்கோல்**
> **பல்வேல் திரையற் படர்குவிர் ஆயின்**
> **கேள் அவன் நிலையே கெடுகநின் அவலம்**
> **அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்**
> **கைப்பொருள் வௌவும் களவுஏர் வாழ்க்கை**
> **கொடியோர் இன்று அவன் கடியுடை வியன்புலம்**
> **உருமும் உரறாது அரவும் தப்பா**
> **காட்டு மாவும் உறுகண் செய்யா "[14]**

என்ற வரிகளில் மக்களிற் கொடியோரால் துன்பங்கள் நேராதபடி தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்களையும் அதனுடைய சொத்துக்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். பிற விலங்குகளிடமிருந்தும் தீமை நேராதபடி காத்துக் கொள்வேண்டுமெனில் நமக்கு உழைப்பும் முயற்சியும் அதிகம் தேவைப்படுகின்றன. ஆனால் அறத்தோடு தொண்டைமான் சிறப்பாக ஆட்சி செய்வதால் இந்த இயற்கையும் எந்த இடக்கண்ணும் செய்யாது என்று புலவர் கூறுவது இவண் உணரத்தக்கது. மேலும் இவனுடைய ஆட்சியில், அமைச்சர்க்ள சூழ அரசு வீற்றிருக்கும் இவனுடைய தோற்றம் உலகுக்கு ஒளி வழங்கும் ஞாயிற்றை ஒத்தது ஆகும் என்று,

> **“குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்**
> **பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு**
> **முறைவேண்டு நர்க்கும் குறைவேண்டு நர்க்கும்**
> **வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி**
> **இடைத்தெரிந்து உணரும் இருள்தீர் காட்சி,**
> **கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளத்து**
> **உரும்புஇல் சுற்றமோடு இருந்தோற்”** [15]

என்ற வரிகளில் சுட்டுகிறார். இதில் ஞாயிறு போல உலகத்திற்கு ஒளி வழங்கி, நடுவுநிலையாய் அமைந்து, அறமுறையாய் மொத்தத்தில் அது, உயிர்களுக்கு உதவுவதையே கடமையாகக் கொண்டு தாராள உள்ளத்துடன் கடலலையாகிய சுற்றத்துடன் விளங்குகின்றது. இங்ஙனமே, அரசனும் இவ்வுள்ளொளி உயர்வுடன் நல்ல அமைச்சர்களுடன் இணைந்துள்ளான்.

இவ்வுள்ளொளியின் மாட்சியே அரசனுக்கு மாட்சியாகும். மற்ற உடை, குடி, முடி இருக்கை முதலிய வெளி அடையாளங்கள் எல்லாம் இவ்வுள்ளொளி வீற்றிருக்கையை உணர்த்துதற்கே உள்ளன.

**அனைத்தும் அரசனே**

அக்காலத்தில் மன்னனே அனைத்துமாய் நின்றான். மக்களின் உயர்விற்கும் தாழ்விற்கும் அவனே பொறுப்பேற்றுக் கொண்டான். மக்கள் எதுவெனினும் அரசனின் முகம் நோக்கி நின்றனர். வாழ்த்தலும், தூற்றலும் அவனுடைய செயல்பாட்டைப் பொறுத்து அமைந்தது.

மேலும், தன்னுடைய நாட்டின் பாதுகாப்புக்காக அவனே படைகளை உருவாக்கி அவற்றைப் பேணிப்பாதுகாத்தான். பிறநாடுகளின் மீது போர் தொடுக்கும் முன் வஞ்சினம் உரைத்தான்.

**செங்கோல் ஆட்சி**


மன்னன் தலைவனாகி விட்டான். அம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்ற சூழலில் மக்கள் வாழவில்லை. செங்கோன்மை தவறாமல் ஆட்சி

நடத்துதல் என்பது அற ஆட்சியாகும். அறத்தின் பாதுகாவலர்களாக மக்கள் விளங்கினர். மக்களின் பாதுகாவலனாக, காண்பதற்கு எளியவனாக காட்சி தந்தனர். நீதி தவறாமல், ஆளவேண்டும் என்பதில் குறிக்கோளாய் இருந்தனர்.

இதனை,

**"......................விரிசீர்த்**
**தெரிகோல் ஞமன்ன் போல, ஒரு திறம்**
**பற்றல் இலியரோ! நின் திறம் சிறக்க"** [16]

என்ற வரிகளில் உணரலாம். நடுவுநிலைமை தவறாமல், தான், தனது என்று எண்ணாமல் வாழ்ந்தமையை இதன் மூலம் அறியலாம். "செங்கோல் என்பது அரசன் அதிகார முறையில் வீற்றிருக்கும் போதும், செல்லும்போதும் கையில் பிடித்திருக்கும் தண்டாகும். அதில் மணி இழைகளின் வேலைப்பாடு அமைந்திருக்கும். அரசனின் ஆட்சி நேர்மையாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பதற்கு இது நேரானதாகச் செய்யப்பட்டிருக்கும். அதனால் இதற்கு செங்கோல் என்று பெயர். ஆட்சியின் நேர்மையாவது அறநெறி வழி நேரே செல்லுதல் ஆகும்"[17] என்று பாவாணர் குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.




என்றவாறு அதிகாரப்பகிர்வு சங்க காலத்தில் இருந்திருப்பதை அறியலாம். சங்கமக்கள் பிறர்பொருட்டு வாழ்தல் பெருமையாளன் என்றும் தம்மை நம்பி வந்தவர்களுக்குக் கொடை அளிக்கும் போக்கு வேண்டுமென, தனிமனிதன் கருதியது இவண் சுட்டத்தக்கது. இதனை,

**"இன்மை உரைத்தார்க்கு, அது நிறைக்கல் ஆற்றாக்கால்,**
**தன் மெய் துறப்பான் மலை"** [18]

என்ற வரியில் அறியலாம். இதில் தனிமனிதனின் ஒழுக்கமே இவ்வாறு போற்றப்பட்டிருப்பின் தலைவனின் ஒழுக்கம் எவ்வாறு பேணப்பட்டிருக்கும் என்பதை எண்ணிப்பார்த்தால் நலம். ஈகையாளர்கள் என்பவர்கள் தனிமனிதனிடத்திலேயே

கண்டெடுக்கப்பட்டிருப்பின் சமூகத்தின் உயர்ந்த அடுக்கான அரசன் எவ்வாறு இருக்கவேண்டுமென கருதுவது இவண் சுட்டப்பெறும்.

**மன்னனும், குறுநில மன்னனும்**

மன்னர்கள் பேரரசாக பல மண்டலங்களை உடைய அமைப்பிற்குத் தலைவனாக இருந்தனர். பல அரசர்கள் தமக்குக் கீழ் குறுநிலத்தலைவர்களுடன் நட்பு கொண்டிருந்தனர். இவை அன்று வாழ்ந்த நாகன், பழையன், பிட்டன், ஈந்தூர் கிழான் தோயன் மாறன் முதலான தலைவர்கள் பற்றிய குறிப்புகள் மன்னர் மற்றும் குறுநில மன்னர்களுக்கிடையே இருந்து உறவினை உணர்த்துபவையாக உள்ளன.

சிற்றூர் மன்னர்கள் தன் அரசன் படைபலம் இல்லாமல் துன்புறும் நேரத்தில் அவர்களுக்கு உதவியாக இருந்தவன் குறுநில மன்னன் ஆவான்.

**“நிறை யழிந்து எழுதரு தானைக்குச்**
**சிறையும் தானே தன் இறை விழுமுறினே”** [19]

என்ற வரிகளில் இதனை உணரலாம்.நிறைகளெல்லாம் அழிந்து ஓடும் சூழலில் அரண் போல நின்று காப்பறை ஐயூர் முடவனதார் சுட்டியுள்ளார். மேலும் ஒரு குறுநிலத்தலைவன் அரசன் கொடுத்த பொருளைப் பாணர்க்கும் பாடினிக்கும் சிறப்பு செய்யும் நிலையைக் காண்கிறோம்.

**மன்னனும் பணியாளரும்**

மன்னர்கள் தங்களின் வாழ்வியல் நிகழ்வுக்குத் துணைபுரியும் செயலைச் செய்பவர்கள் பணியாளர்கள் எனப்படுவர். இவர்களைப் பின்வரும் பெயர்களில் இலக்கியங்களில் சுட்டப்படுகின்றனர்.

- **வினைஞர்**
- **தொழுவர்**
- **களமர்**
- **கடைசியர்**
- **நடுகர்**
- **சிலதர்**
- **அடியுறை**
- **இளையர்**
- **தோழி**
- **செவிலி**

அறிவிலோ, உடல் பலத்திலோ உயர்ந்தவன் உலகில் உயர்ந்த இடத்தில் இருப்பதும் அல்லாதவன் தாழ்ந்த இடத்தில் இருப்பதும், இன்றுவரை நடைமுறையில் இருப்பது

ஆகும். உயரந்த நிலையில் இருப்போர்க்கு இவர்கள் குற்றவேல் செய்வதும் இயல்பானது. எனவே ஏற்றத்தாழ்வு கொண்ட சமுதாயம் அன்றே தோன்றியிருப்பது புலனாகிறது.

மன்னன் தலைமையில் குடிகள் தோன்றதோன்ற காடுகள் அழிக்கப்பட்டு அங்கு விளைநிலங்கள் உருவாக்கப்பட்டன. காடுகளின் தன்மையை அழித்துத் திருத்த ஆட்கள் தேவைப்பட்டனர். இவர்கள், வேற்று நாட்டினராகவோ, அறிவில் (அ) வலிமையில் குன்றியவராகவோ இருந்தால் அவர்களை குற்றவேல் பணிக்கும் தங்களின் தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் வாழ்க்கைத் தரம் மிகப் பின்தங்கியிருந்ததாகத் தெரிகிறது. இவர்களின் வாழ்விடம் வயல்களில் புல்லால் வேயப்பட்ட மிகஎளிய குடிலாகக் காணப்பட்டது.

எனவே மாடமாளிகைகள் இருந்த மதுரையின் வயல்களில் இவ்வகையான குடிலும் இருந்தமை நாட்டில் ஏற்றத்தாழ்வுகள் நிலவியமைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

வினைஞர்கள் ஊரின் புறத்தே தங்கி இருந்தனர். அங்கு வினைஞர்கள் சங்கிலியில் நாய்களை கட்டிவிட்டு தங்கியிருந்தனர் என்பதை அறியலாம்.

இவர்கள் மட்டுமின்றி கடையர் என்ற வழக்காற்றின் மூலம் பணிமக்கள் வாழ்ந்திருந்த தன்மையையும் அறிய முடிகிறது.

**“கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்”** [20]

என்னும் பாடலில் கடையரின் மனைவியைக் கடைசியர் என்று புறநானூறு குறிப்பிடுவது உணரத்தக்கது. இவர்கள் தண்ணுமையும் துடியும் கொட்டும் மக்களாக இருந்துள்ளமையும் இவை உணரத்தக்கது.

மேலும், தலைவனோடு உடன் செல்லத்தக்க இளைஞன் இளையர் என்றும் அழைக்கப்பட்டான்.

இதுகாறும் அரசர் பற்றி கண்டோம். இனி மக்கள் வாழ்வியல் பற்றிக் காணலாம்.

மனிதனின் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் நிலைகளில் ஒப்பிடலாம்.

நாடோடி வாழ்வு (கிடைத்தவற்றை உண்ணுதல்)

↓

வேட்டையாடுதல்

↓

கால்நடை வளர்த்தல்

↓

நிலையான வாழ்வு (உழவு)

↓

கடல் கடந்து செல்லுதல்

இவ்வைந்து செயல்களும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணைகளோடு ஒத்துள்ளன. ஒவ்வொரு நிலத்தைச் சார்ந்த இயற்கை வளங்களின் இயல்புகள் அந்தந்த நிலத்துக்குரிய நாகரிக வளர்ச்சிக்குத் தூண்டுதலாய் அமைந்தன.

நாடோடிகள் வாழ்ந்த காலத்தில் மனிதன் உணவுக்காக அங்கும் இங்கும் அலைந்து திரிகிறான். சில இடங்களில் அவனுக்குத் தேவையான உணவுகள் அங்கு கிடைக்கவே அங்கு தங்கிவிடுகிறான். அங்கு அந்நிலங்களைத் தன் வயப்படுத்த எண்ணுகிறான். நிலங்களுக்குப் பெயரிட்டு அழைத்தது மட்டுமல்லாமல் அவற்றைத் தன்னுரிமை ஆக்கிக் கொள்கிறான்.

இவ்வாறு மரங்கள் அடர்ந்த மலைப்பகுதி குறிஞ்சி என்றும், காடுகள் அடர்ந்த பகுதி மல்லை என்றும், வயல்கள் அடர்ந்த பகுதி மருதம் என்றும் கடல் பகுதி நெய்தல் என்றும் மணல் பகுதி பாலை என்றும் குறிப்பிடப்பட்டன.

மனிதன் முதன் முதலில் குறிஞ்சி நிலத்திலேயே தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் உயிர்கள் தோன்றுவதற்குத் தகுந்த தட்பவெப்பநிலை அங்குதான் இடம்பெற்று இருந்தன.

குறிஞ்சி நிலம் வளமையானது அங்கு காய், கனி இயற்கை நீர் நிலைகள் இருந்தன. இவை மனிதன் வாழ்வியல் கூறுகளைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்துள்ளன. எனவே மனிதன் தான் வாழ்வதற்குரிய சூழலைப் பெற்றபோது அங்கேயே தங்கியுள்ளான். மேலும் விலங்கு மற்றும் இயற்கைத் தாக்குதல்களில் இருந்து மீட்டுக் கொள்ள அவனுக்கு குகைகள் உதவின. அதற்குக் காரணமான மண்பாண்ட கலங்களைத் தயாரிக்க அறியாதற்கு முன்னர் அடிப்படைத் தேவையான நீரைப் பெற அவன் குறிஞ்சி நிலத்திலுள்ள சுனை நீரையே பருகினான். இதனை,

**“கானவர்**
**கிழங்கு அகழ் நெடுங்குழி”**[21]

**“கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி”**[22]

இவ்வாறு குறிஞ்சியில் மக்கள் நாடோடிகளாய் உணவினைத் தேடி அலைந்தமை காண்கிறோம். குறிஞ்சி நில மக்கள் எனில் கு(ன்)றவர்கள் ஆவர். இங்குள்ள பெண்கள் குறத்தி கொடிச்சி எனப்பட்டனர்.

குறிஞ்சி நிலத்துக் குறவர்கள் தாம்வேட்டையாடிய உடும்பிறைச்சி உள்ளிட்ட விலங்குகளின் இறைச்சிகளை உண்டு வாழ்ந்தனர். மேலும், தேன் உள்ளிட்டவற்றை மூங்கில் குழாயில் இட்டு அருந்தினர். அதற்குப் பின்னர் மூங்கிலரிசியில் சமைத்த உணவை உண்டனர். மேலும், குறிஞ்சி நிலத்தின் முக்கியத் தாவரங்களாக குறிஞ்சி, மாமரம், மராமரம், வேங்கை உள்ளிட்ட மரங்கள் இருந்து வந்தன.

இன்றும் கூட மலைப்பிரதேசங்களில் அனைத்தையம் அழித்து அவற்றில் காபி, தேயிலை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். இயற்கை வளங்கள் அனைத்திலும் தம்முடைய கைகளை நீட்டி அவற்றைத் தமதுடையதாக்கிக் கொள்ளும் போக்கு இன்றைய மனிதர்களிடம் காணப்படுகிறது.

முல்லை நிலம் வியன்புலம், தண்புலம் என்று பலவாறாக அழைக்கப்பட்டன. இங்கு விளைந்த பயிர்களெல்லாம் புன்செய் பயிர்களாகும். குறிஞ்சி நிலத்தில் தங்களுக்கு கிடைக்காத்தால் அந்த இடத்திலிருந்து அவர்கள் வெளியேறி முல்லை நிலத்தை வந்தடைந்தனர். அங்கு தமக்கு பயனுள்ள வகைகளில் இருந்த மாடுகள், ஆடுகள், நாய் உள்ளிட்ட விலங்குகளைத் தம்முடைய பயன்பாட்டிற்காக முல்லை நிலத்தில் வாழ்கின்றனர். அங்குள்ள புற்கள் ஆடு மாடுகளுக்கு ஏற்றவாறு விளைச்சலுடன் காணப்படுகின்றன. இவற்றை உண்டு அவை மனிதர்களுக்குப் பயன்படுகிறது.

இவ்வாறு முல்லை நிலத்திலேயே மக்களின் ஆண்கள் சொத்துடையவராக மாறுகின்றனர். இங்குள்ள ஆடு மாடுகளை வைத்திருந்த ஒரு குடும்பத்தினரின் தந்தை எல்லா முன்னுரிமையையும் பெற்றான்.

இவ்வகையான "பல குடும்பங்களுக்குத் தலைவனாவனே பின்னால் அரசன் என்ற முறை தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். இவ்வாறு பலவகை குடும்பங்கள் நிறைந்த பல சீறுர்களுக்குத் தலைவனாக இருந்தவனை "சீறூர் தலைவன்" என்றனர்.

இடையனைக் குறிக்கும் கோன் என்னும்சொல் பிற்காலத்தில் அரசனைக் குறிப்பதாயிற்று. மந்தைகளை மேய்க்கும் கோலே செங்கோலாயிற்று"[23] என்று ந.சி.கந்தையாபிள்ளை குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.

முல்லை நில நாகரிகம் ஏனைய நில நாகரிகங்களை விட சிறப்புடையது. பிரிவு என்பது அப்பிரிவைப் பொறுத்திருப்பதையும் பிரிவுக்காக வருந்தியிருப்பது அனைத்து நிலங்களிலும் காணப்படும்.

**சங்க மக்களின் தொழில்கள்**

சங்ககால மக்கள் பல்வேறு செயல்களின் மூலம் தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, வாழ்வியற் கூறுகளை உயர்த்தும் அல்லது நடத்திச் செல்வதற்கு ஏதுவாக அமைந்து இருந்தது.

பழந்தமிழர் சமுதாயத்தில் பெரும்பாலான மக்கள் வேளாண்மை செய்வோர் கைத்தொழில், மீன்பிடித்தல், வாணிகம் செய்தல், போருக்குச் செல்லுதல் ஆகிய பணிகளைச் செய்து வந்தனர். இதில் பாலை நிலப் பகுதிகளைச் சார்ந்த மக்கள் கள்வர்களாகவும் இருந்து வந்தனர். மேலும் இசை மீட்டுதல், பாடுதல், ஆடுதல் ஆகியவற்றையும் செய்து வாழ்க்கை நடத்தி வந்தனர்.

இந்தத் தொழில்கள் அவரவர்களின் வாழ்வியல் சூழல்களுக்கு ஏற்றாற் போல அமைந்து சிறந்தது. தாங்கள் செய்த தொழில்களின் அடிப்படையில் அவர்களின் வாழ்வைக் கட்டமைத்துக் கொண்டனர். அவர்களிடையே ஏற்றத் தாழ்வு இல்லை. தங்களுடைய இடங்களில் கிடைத்தவற்றை மகிழ்வுடன் பகிர்ந்து (பண்டமாற்று முறையில்) வாழ்ந்த நிலையில் சங்கப் பாக்கள் சுமந்து நிற்கின்றன.

ஒரு மனிதன் தன்னுடைய மூளை அல்லது உடலின் மூலம் செய்யும் வேலையை அது செய்யப்படும் தன்மையைப் பொறுத்து அதனைத் தொழில் என்று குறிப்பிடுகிறோம். இந்த தொழில் எவ்வகைப் பட்டதாகவும் இருக்கலாம். ஆனால் உழைப்பவர்களாலேயே தொழிலைச் சிறப்பாக வளர்க்க முடியும் என்பது உண்மை. தத்தம் தொழில்களுக்கேற்ப மக்கள் அக்காலத்தில் அழைக்கப்பட்டனர். அவர்களுக்கிடையே எந்த வேற்றுமையும் இல்லை. தங்களுக்கேற்ற தொழில்களைச் செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

**தொழில்களின் வகைகள்**

சங்க இலக்கியம் சுட்டும் தரவுகளின் அடிப்படையில் தொழில்களைப் பிரித்துக் காண்போம். குறவர்கள், ஆயர்கள், பரதவர்கள், உழவர்கள், தச்சர், குயவர், கொல்லர், வண்ணார், நெசவாளர், உமணர், பறையர், பாணரை, துடியர்கள், கணியர்கள், கடுவர்கள், வேட்டுவர்கள் என பலவகைப்பட்ட தொழில்களைச் செய்த மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் செய்தவை அனைத்தும் தொழில்களே எனினும் உடலுழைப்பைச் செலுத்தி தொழில் செய்தமையும் அறிவினை மட்டுமே பயன்படுத்தி தொழில் செய்தமையும் அக்காலத்தில் உண்டு. தற்போதும் கூட தொழில்களை எளிமையாக இரண்டு வகையாகப் பிரித்துவிடலாம். அதாவது எப்போதும் உடலுழைப்புக்கு அதிக மரியாதையோ அல்லது பொருளாதார நிறைவு தரமுடியாது. ஏனெனில் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் உடலுழைப்பு செய்யும் பல பெண்கள் வளமான பொருளாதாரத்தைப் பெறுவதில்லை. ஏனெனில் அவர்களின் தொழில் உடலுழைப்புச் சார்ந்தது. அனைத்திற்கும் ஆக்கம் தந்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயி முதலிடத்தில் வைத்து எண்ணப்படுவதில்லை. விவசாயி இல்லையெனில் இந்நாட்டின் பொருளாதாரம் என்னவாகும். நாம் வாங்கும் காயின் மதிப்பு ரூ. 50 என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அந்த காயை விளைவிக்க அவனுடைய உடலுழைப்பு அளப்பறியது. இது இந்திய நாட்டின் நிலை. அமெரிக்கா ... உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் (வளர்ந்த நாடுகள்) விவசாயி, வீட்டு வேலை செய்யும் பெண்கள் ஆகியோர் அறிவுசார் வேலை செய்யும் ஊழியர்களின் ஊதியத்தைப் பெறுகின்றனர். மேலும் அங்குக் காய்கறிகள், உள்ளிட்ட அடிப்படை பொருட்கள் விலை உயர்வாக இருக்கின்றன. எனவே விவசாயிகளும் மகிழ்வுடன் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டு வாழ்கின்றனர்.

இந்த நிலையே சங்க காலத்திலும் இருந்து வந்தது. தான் கொண்டு வந்த தேனை நெல்லுக்கு மாற்றாகக் கொடுக்கிறாள் குறத்தி, பாலை நெல்லுக்கு மாற்றாக

கொடுக்கிறாள் ஆயமகள், மீனை நெல்லுக்கு மாற்றாகக் கொடுக்கிறாள் பரதப்பெண். இதில் உயர்ந்தவை தேன். உயர்ந்தது இது, தாழ்ந்தது இது என்ற கருத்துக்கு இடமில்லை. எனவே சங்க காலம் போல் அனைத்தும் சமமே என்ற நிலை இன்று வர வேண்டும்.

இன்றும் கூட இல்லங்களில் கீரைக்காரர்,பழக்காரரிடம் ரூ 5 க்கு பேரம் பேசும் நாம் பிற (துணி, நகைக்கடை) இவ்வங்காடிகளில் விலையைப் பார்த்து அங்கலாய்த்துவிட்டு அப்படியே வாங்கி வந்து விடுகிறோம்.காரணம் அவர்களிடம் எது கேட்பினும், விலை என்பது அவர்கள் நிர்ணயிப்பதில் தான் இருக்கிறது என்பதால்தான் என்பதை யாவரும் அறிந்த ஒன்றே. இனி சங்ககாலத் தொழில்களைக் காண்போம்.

1. அறிவுசார் தொழில்கள்
    - அந்தணர்கள்
    - அரசர்
2. உடல்சார் தொழில்கள்
    - ஐந்நிலமக்கள்       செய்தவை என்ற வகையாகப் பிரிக்கலாம்.

வாழ்க்கைக்கு முயற்சி என்பது மிக அவசியமான ஒன்றாகும். இதில் அறிவுசார்ந்த முயற்சி அனைவரையும் மகிழ்விக்கும். இதனை கலை என்று சுட்டலாம்.

வாழ்வில் ஒரு மனிதனின் அனைத்துத் தேவைகளையும், அவன் ஒருவனாலேயே நிகழ்த்தி கொள்ள இயலாது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவரின் உதவி தேவைப்படும். அவ்வாறு தேவைப்படும் உதவிகளைச் செய்தவர்களுக்குத் தகுந்த நன்றியைச் செலுத்துவதில் தமிழர்கள் தன்னிகரற்றவனாக விளங்குகின்றனர். வந்தோரை வாழ வைக்கும் தமிழகம் என்ற சொலவடையும் இதற்கு மெருகூட்டும். தமிழகத்தில் வந்து தொழில் நடத்தும் எவரும் வாழ்வில் உயர்ந்தவர்களே யாவர். பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அவர்கள் அடைவர். அரசர்க்கு ஆலோசனை கூறி, இறைவனை வணங்கி நிற்பதில் அந்தணர்கள் உள்ளனர்.

**உழைத்துப் பொருளீட்டல்**

மனிதன் தன்னைப் பேணிக்கொள்ள பொருளீட்டுதல் வேண்டும். அவர்கள் எனவே உடலின் உழைப்பைச் செலுத்தி அதன் மூலம் பொருளீட்டுதல் வேண்டும். அவ்வகையில் தமிழர்கள் செய்த பொருளீட்டிய தன்மையினைக் காணலாம்.

மனிதன் வாழ்வில் இன்பம் காண மனிதன் பொருளைத் தேடுகிறான். பொருளைக் கொண்டு அறம் நாடுகிறான். இன்பமும் பொருளும் அறமும் செம்மையாகச் செய்பவன் மனிதன் என்ற வரியில் குறிப்பிடுவது இவண் உணரத்தக்கது. எனவே தான்,

**“வினையே ஆடவர்க்குயிரே”** [24]

என்பதன் மூலம் தொழிலின் சிறப்பைச் சுட்டி நிற்கிறது இலக்கியம்.

**உழைப்பின் தன்மை**

செய்யும் தொழிலே தெய்வம் என்று கூறுவர் தமிழர். உயர்நிலையை அடைகின்ற தன்மையை தொழிலில் ஊக்கமும் சோர்வே இல்லாத பண்பும் உடையவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை,

> **"அழிவு இல் உள்ளம் வழிவழிச் சிறப்ப**
> **வினை இவண் முடித்தனம்"** [25]
>
> **"அருள் அன்று ஆக, ஆள்வினை, ஆடவர்**
> **பொருள்" என வலித்த பொருள் அல் காட்சியின்**
> **மைந்து மலி உள்ளமொடு துஞ்சல் செல்லாது"** [26]

என்ற வரிகளில் தொழில் ஊக்கத்துடன் செயல்பட்டைமையை அகநானூறு உணர்த்தி நிற்கிறது.

வாழ்க்கைக்கு முயற்சி கட்டாயமாயிருக்கிறது. முயற்சியில் இரண்டு வகை உண்டு. ஒன்று உடல் முயற்சி. மற்றொன்று அறிவு முயற்சி, பொதுவாக உடம்பு முயற்சியைத் தொழில் என்றும், அறிவு முயற்சியைக் கலை என்றும் சொல்லலாம். மேற்கண்ட வரிகள் தொழில் முயற்சிகளின் தன்மையைச் சுட்டுகிறது.

மனிதன் என்பவன் பிற உயிர்களிடம் வேறுபட்டுப் பல்வேறு செயல்களில் உடல் அமைப்பில், என அனைத்திலும் வேறுபட்டு உள்ளான். அவனுடைய அறிவுத் திறத்தால் இப்பிரபஞ்சத்தை ஆண்டு உள்ளான். இவன் பிற உயிரினங்களின் அடக்கி ஆளுதல் பயன்படுத்துதல் என அனைத்து நிலைகளிலும் தம்மை தனித்துக் காட்டும் தன்மையுடையன.

> **"யாழொடும் கொள்ளா; பொழுதொடும் புணரா;**
> **பொருள்அறி வாரா; ஆயினும், தந்தையர்க்கு**
> **அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை;**
> **என்வாய்ச் சொல்லும் அன்ன - ஒன்னார் "** [27]

என்ற வரியில் மனித சமூகத்தின் உறவுகள் குறித்து குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

**தொழில்கள்**

நிலத்திற்கேற்ப மக்கள் தொழில் செய்து வந்துள்ளமையைச் சங்க இலக்கியங்கள் நமக்கு சுட்டுகினறன.

மழைக்காலத்தில் நிலங்களைப் பயன்படுத்தி திணையையும் ஐவன நெல்லையும் பயிர் செய்துள்ளான்.

> **"ஐவன வெண்ணெல்,**
> **வேல் ஈண்டு தொழுதி இரிவுற்றென்ன"** [28]

என்ற பாடல் வரியில் இதனை அறியலாம். இவ்வாறு உணவினைப் பயிரிட "தொடுதோல்" என்னும் பாதணியை அணிந்த நிலையை

**"தொடுதோல் கானவன் சூடுறு வியன்புனம்"** [29]

என்ற பாடலில் சுட்டியுள்ளனர். இவ்வாறு விளைவித்த தினைமாவை விருந்தினருக்குக் கொடுத்தமையை,

**"ஏனல் உழவர் வரகுமீது இட்ட**
**கான் மிகு குளவிய வன்பு சேர் இருக்கை,**
**மென் தினை நுவணை முறைமுறை பகுக்கும்**
**புன்புலம் தழீஇய, புறவு அணி வைப்பும்"** [30]

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

முல்லை நில ஆடவர்கள் ஆடு மாடுகளை மேய்க்கும் தொழிலைச் செய்தமையைப் பெரும்பாணாற்றுப்படை,

**"நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்**
**கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்**
**இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்**
**நள்ளிருள் விடியற்"** [31]

என்ற வரியில் குறிப்பிடுகிறது. அவர்கள் வீட்டில் உழவுக்கருவிகளும் சார்த்தி வைக்கப்பட்டுள்ளமையைச் சுட்டுகிறது. இதேப்போல மருத நிலத்து மக்கள் நாகரிகம் பண்பாட்டின் தோற்றுவாயாக விளங்கினர். அங்குள்ள ஆடவர்கள் செய்த தொழிலினை,

நிலத்தை ஏரால் உழுது எருவிட்டு நீர் பாய்ச்சி விதைக்கும் உழவுத்தொழில் இவர்களது தொழிலாகும்.

**"பழன மஞ்ஞை உகுத்த பீலி**
**கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்"** [32]

என்ற வரியில் மருதநிலத்து மக்கள் உழவுத்தொழில் செய்துள்ளமையை குறிப்பிடுகிறது. நெய்தல் நில மக்கள் பரதவர்கள் ஆவர். கடல் சார்ந்த தொழில்களைச் செய்தனர். இவர்கள் மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகியவற்றைச் செய்தமையை,

**"பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்"** [33]

என்ற வரிகளில் மீன் பிடித்தலை மேற்கொண்டமையை அறியலாம். மேலும் பெண்கள் உப்பு மூட்டையினை வண்டியில் வைத்து ஓட்டிச் செல்லுதலை அறியலாம்.

**தமிழரின் வாணிப நிலை**

தமிழர்கள் தம்முடைய வாழ்வினைச் செம்மையாக நடத்திக் கொண்டிருந்தனர். பாடல்களின் அக, மற்றும் புற குறிப்புகளின் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம். சங்க

*காலத் தமிழகத்தில் ஐந்நிலத்தில் செய்த தொழில்களை ஏற்கனவே கண்டோம். மேலும் வாணிபம் தொடர்பான தொழில்கள் குறித்துக் காண்பதன் மூலம் மனித வளமை குறித்து அறிந்து கொள்ள ஏதுவாதலால் இப்பகுதியில் ஆராயப்படுகிறது.*

**வணிக முறை**

*சங்கத்தமிழர்கள் வாணிபத்தை இரண்டு முறைகளில் நடத்தினர் என்பதை அறிகிறோம். சங்ககால மக்கள் வாழ்ந்த காலம் இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் என்பதைப் பல்வேறு சான்றுகள் வழி அறிகிறோம்.*

1. *உள்நாட்டு வாணிகம்*
    - *பண்டமாற்று முறை*
    - *காசுகொடுத்துப் பொருள் பெறுதல்*
2. *வெளிநாட்டு வாணிகம்*
    - *கடல் வழி வாணிகம்*
    - *தரை வழி வாணிகம்*

*இனி மேற்கண்ட தலைப்புகளை நோக்கலாம்.*

**உள்நாட்டு வாணிகம்**

*சங்க காலத்தில் ஐவகையான நிலங்களிலும் இருந்து விளைந்த பொருட்களைப் பிற திணைகளைச் சேர்ந்த மக்கள் பிற திணை பகுதிகளுக்குச் சென்று அங்குள்ளோருக்குத் தங்கள் பகுதிப் பொருட்களைத் தந்து அவற்றுக்கு ஏற்றார் போல மாற்றிக் கொண்டு இன்பமாக வாழ்ந்து வந்தனர்.*

**பண்டமாற்று முறை**

*இடையன் பாலைத் தந்து அதற்கு ஈடாக தானியத்தைப் பெற்றுக் கொள்ளுதலை இலக்கியங்கள் நமக்கு சுட்டிச் செல்கின்றன.*

***“பாலொடு வந்து கூழொடு பெயரும்***
***யாடுடை இடைமகன்”*** [34]

***“உறை அமை தீம் தயிர் கலக்கி, நுரை தெரிந்து***
***புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ,***
***நாள் மோர் மாறும் நல்மா மேனி***
***சிறு குழை துயல்வரும் காதில், பணைத்தோள்,***
***குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்,***
***அளை விலை உணவின் கிளை உடன் அருத்தி”*** [35]

என்ற பாடலில் ஆயர்மகளிர் தயிரையும் மோரையும் மாற்றித் தானியத்தைப் பெற்று உணவு சமைத்து உண்டதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. மேலும்,

***“கான் உறை வாழ்க்கைக் கதநாய், வேட்டுவன்***
***மான்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்***
***தயிர்கொடு வந்த தசும்பும், நிறைய,***
***ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்***
***குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்***
***முகந்தனர் கொடுப்ப, உகந்தனர் பெயரும்***
***தென்னம் பொருப்பன் புன்னாட்டுள்ளும்”*** [36]

இதில் வேடன் கொண்டு வந்த இறைச்சிக்குப் பதில் நெல்லினை மாற்றிக் கொண்டதைக் கோவூர்கிழார் குறிப்பிடுவது இவண் சுட்டத்தக்கது.

***“குறும் பல் ஊர் நெடுஞ் சோணாட்டு***
***வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி***
***நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி”*** [37]

மேற்கண்ட சான்று நெல்லைக் கொடுத்து வெண்மையான உப்பைத் தந்து போனமையைச் சுட்டி நிற்கிறது. மேலும், மீன்களை தானியத்திற்கு மாற்றியதைக் குன்றியனார் நவில்கிறார்.

***“இனிது பெறு பெரு மீன் எளிதினின் மாறி”***[38]

***“மீன் நொடுத்து நெல் குவைஇ***
***மிசை அம்பியின் மனை மறுக்குந்து”*** [39]

இப்பாடல்களும் பண்டமாற்ற முறைக்கு மிகச் சிறந்த சான்றாக அமைகிறது. மேலும், எருதுபூட்டிய வண்டியில், உமணர் தம் மகளிருடன் சென்று உப்பை விலை கூறி விற்பர்.

***“சில்பத உணவின் கொல்லை சாற்றி,***
***பல் எருத்து உமணர் பதிபோகு நெடுநெறி”*** [40]

உமணர்கள் உப்பு மூட்டைகளை வண்டியில் ஏற்றிப் பல ஊர்களுக்குச் சென்று விற்று, அவ்விடத்து விளையும் பொருள்களைப் பண்ட மாற்றாகப் பெறும் கொள்கையை உடையவர்கள் என்பதைக் காணமுடிகிறது.

மேலும், வேடர் தேனையும் கிழங்கையும் கொணர்ந்து மதுபானக் கடையில் கொடுத்து அதற்கு மாறாக வறுத்தமீன் இறைச்சியையும், மதுவையும் வாங்கி உண்டதையும், உழவர் கரும்பையும், அவலையும் கொண்டுவந்து கொடுத்து அதற்கு மாறாக வறுத்த மான் இறைச்சியையும் மதுவையும் பெற்று உண்டு மகிழ்ந்ததையும் முடத்தாமக் கண்ணியார் கூறுகிறார்.

**“தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்**
**மீன் நெய்யொடு நறவு மறுகவும்**
**தீங்கரும்பொடு அவல் வகுத்தோர்**
**மான்குறையோடு மது மறுகவும்”[41]**

**“தொன்று திறை தந்த களிற்றொடு, நெல்லின்**
**அம்பண அளவை விரிந்து உறை போகிய” [42]**

என்ற வரிகள் மூலம் யானைத் தந்தங்களுக்கு பதிலாகத் தானியத்தையும், நெல்லுக்கு பதில் வேறு பொருட்கள் தந்தமையை அதனை அளந்து எடுத்துக் கொள்ள நெல் அளவையைப் பதிற்றுப்பத்து எடுத்தியம்புவது இவண் சுட்டத்தக்கது.

இதுவரை நெல்லுக்கு உப்பும் மீனுக்கு நெல்லும் வெண்ணெய்க்கு நெல்லும் கரும்பு, அவலுக்கு மாற்றாக மா இறைச்சியையும் மதுவையும் பண்டமாற்றுமுறையாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

இதுபோலவே நாணயங்களை அளித்துப் பொருட்களைப் பெற்றமை கண்கூடு.

**காசு தந்து பொருள் பெற்ற முறை**

பண்டமாற்றுமுறை நடைபெற்ற காலத்திலும் கூடப் பொருள்களைக் காசு கொடுத்து வாங்கி வந்தனர் என்பதைச் சங்க இலக்கிய வரிகள் சுட்டுகின்றன.

**“ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த**
**பொலம்செய் பல்காசு அணிந்த அல்குல்” [43]**

இப்பாடல் மெல்லியக் காசுகளைக் கோர்த்து மாலையாக அணிந்து கொண்டமையை உணர்த்தி நிற்கின்றன. இவை மட்டுமன்றி,

- பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தின் பதிகத்திற்கு களங்காய்கண்ணி நார்முடிசேரல் 40 நூறாயிரம் பொன்“ பரிசிலாகக் கொடுத்தான் என்பதும் இலக்கியம் நமக்குக் காட்டும் சான்றுகளாகின்றன.
- காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்க்கு அவ்வரசன் நகை செய்து அணிவதற்காக ஒன்பது காப்பொன்னையும் நூறாயிரம் காணமும் கொடுத்தான் என்று காசு புழக்கத்தில் இருந்தமை இவையெல்லாம் சான்றாக அமைகிறது.

**வாணிபத்திற்குப் பயன்பட்டவை**

வாணிபம் செய்வதற்குப் பல்வேறு பொருட்கள் பயன்பட்டன. எருது, கழுதை, வண்டி, படகு, பாய்க்கப்பல்கள் ஆகியன அக்காலத்தில் வணிகத்திற்கு பயன்பட்டன.

வணிகர் வாணிகப் பொருட்களை ஊர் ஊராக எடுத்துச் செல்லக் கழுதைகளையும் பயன்படுத்தினர்.

***அற வாணிகம்***

*சங்கத் தமிழர்கள் வாணிகம் என்பதை நேர்மை என்பதாகக் கொண்டனர். கொடுப்பதும் பெறுவதும் சமமாக இருந்தது.*

***"தமவும் பிறவும் ஒப்ப நாடி***
***கொள்வது உம் மிகை கொளாது***
***கொடுப்பது உம் குறைகொடாது***
***பல்பண்டம் பகர்ந்து வீசும்."*** [44]

*என்ற வரியில் இதனை உணரலாம். இன்றுள்ள வணிக மக்களை ஒப்பீட்டு நோக்கின் மனம் பதைக்கிறது. இன்றைய மக்கள் வணிக நோக்கில் மட்டுமே வாழ்கின்றனர். ஆனால் சங்க இலக்கிய காலத்தில் நேர்மையும் உண்மையும் இருந்தன என்பது புலனாகிறது.*

***புறத்திணையில் மகளிர்***

*சங்க காலத்தில் மக்கள் பல்வேறு செயல்களைச் செய்துள்ளனர். இவர்களின் வரலாறு குறித்து திரு.பக்தவச்சலம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். "முதன் முதலில் இச்சமுதாயம் பெண்களைக் கொண்டே இயங்கி வந்துள்ளது. தாய்வழிச் சமூகமாக இருந்து வந்துள்ளது"*[45] *என்கிறார். இதற்குப் பழங்குடியினரின் சமூகத்தில் பெண் பிரசவத்தின் போது ஆணும் அவளைப் போல வலி ஏற்பட்டுத் துன்புறுவதாகப் பாவனை செய்ய வேண்டும். இதிலிருந்து ஆணும் அப்பெண்ணின் துன்பத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் தன்மையை உணர்கிறோம். இது பெண்களின் ஆளுமையை உணர்த்துகிறது. இவ்வாறு தொடக்க காலத்தில் ஆளுமையுடையவர்களாக இருந்த மகளிர் பிற்காலத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட காரணம் அவர்களின் பிள்ளைப்பேறு ஆகும். நாகரிகம் வளர்ச்சியடைய அடைய அவர்களின் செயல்களில் மாற்றம் ஏற்பட்டு பெண்கள் அடிமை நிலைக்குச் சென்றனர். மேலும் அவர்களின் அடிமை வாழ்வினர் வரலாறுகள் கேட்போரின் கண்களில் கண்ணீரை வரவழைப்பன. பல்வேறு உதிரங்கள் மண்ணில் சிந்தப்பட்டு, போர்க்குரலில் எழுச்சிமிக்க உரைகளைக்கேட்டு பெற்றவை இன்றைய சுதந்திரம். பிறரின் கண்களை உறுத்தாத ஆடைகள், அளவான பேச்சு,அறிவிலே தெளிவு அனைத்திலும் கவனம் செலுத்த வேண்டிய பெண்கள், இன்று தம்நிலை மறந்து ஆண்களுக்கு நிகராக களியாட்டம்,கள்ளுண்ணதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதாக கூறுவர். மேலும், திரைத்துறையில் ஆபாசமான அருவருக்கத்தக்க அங்க அசைவுகளோடு பெண்களை நடத்துவது, பெண்கள் அடைந்த, அடைகின்ற இழிவு நிலை ஆகியன கண்டிக்கப்பட வேண்டும். இனி, புறப்பாடல்கள் வழி அறியலாகும் மகளிரின் பழக்கவழக்கங்கள் குறித்து நோக்குவோம்.*

***சங்க மகளிர் கள் அருந்துதல்***

*சங்க காலத்தில் இன்றைய மதுக்கடைகளில் விற்கும் மது போல அறிவை மயங்கச் செய்வன அல்ல. மாறாக லேசாக மயக்கந் தருவதைத் தவிர வேறொன்றும் கேடு தராத பொருளாக இருந்திருக்கிறது.*

*இதனை அரசன், தலைவன், புலவர் ஆகியோர்களுக்குக் கள் தயாரித்து அளிப்பவர்களாக இருந்துள்ளமை இவண் உணரத்தக்கது.*

*இந்த கள்ளானது தென்னை பனை மரங்களில் பாளையில் இருந்து ஒழுகும் நீராகும். இதனை வயலில் வேலை செய்வதற்கு உடல் வலிகளை நீங்கி உற்சாகம் பெறுவதற்கு வாங்கப்பட்ட கள்ளாகும்.*

***"அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம்***
***கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே"*** [46]

*என்ற வரியில் உழவர்கள் தம் எருதுகள் சேற்றில் உற்சாகத்துடன் செல்வதற்குக் கள்ளருந்தி ஆராவாரக் கூச்சலிட்டமையை அறியலாகிறது. மேலும், நாரைப் பிழிந்தெடுத்த கள்ளின் தெளிவைப் பண்ணிசைக்கும் யாழ் கொண்ட பாணர் உறவினர்களுக்குப் பிட்டங்கொற்றன் என்னும் குறுநில மன்னன் அளித்தமையை புறம் – 170 ஆம் பாடலில் மருத்துவன் தாமோதரனார் குறிப்பிட்டுள்ளார். இதில் பாணன் மட்டுமின்றிப் பாடினியும் கள்ளுண்டு மகிழ்ந்தமை பெறப்படும். மேலும், கள்ளுடன் இறைச்சியைக் கலந்து உண்ணும் வழக்கத்தை,*

***"களம் தோறும் கள் அரிப்ப,***
***மரம் தோறும் மை வீழ்ப்ப,***
***நிண ஊன் சுட்டு உருக்கு அமைய"*** [47]

*என்ற பாடல் வரிகளில் உணர்த்தி நிற்கின்றன. அக்கள் விற்கும் இடத்தை அறியச் செய்ய, கொடியை நட்டு விளம்பரப் படுத்தியிருக்கின்றனர். அக்கொடிகள் மகிழ்தரு கொடி, விற்றல் என்ற பொருளில் அமைந்த நொடைக்கொடி, கள்கொடி, நெடுங்கொடி என்றப் பெயர்களில் அமைந்திருந்ததை,*

***"கள்ளின் களி நவில் கொடி"*** [48]

***"நறவு நொடைக் கொடி"*** [49]

***"கட் கொடி நுடங்கும் ஆவணம்"*** [50]

***"நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகில்"*** [51]

*என்கின்ற சங்கப்பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. இதனால் உடல் வருத்தம் தீரவும், மகிழ்வான நேரங்களில் கள்ளும் இறைச்சியும், கலந்து உண்ட செய்தியும், கள் விற்கப்படும் இடத்தில் கொடிகள் அசைந்தாடும் காட்சியும் அறிய முடிகிறது.*

***மகளிர் கள் உருவாக்குதல்***

*சங்க காலப் பெண்கள் வீடுகளில் "கள்" தயாரித்துள்ளனர். ஆடவர்கள், இல்லங்களில் தயாரித்த கள்ளை விரும்பிப் பருகினார்கள் என்பது, 'இல் அடு கள்' (பெரும்.142) என வரும் அடியால் தெரிய வருகிறது.*

குற்றாத 'கொழியல்' அரிசியைக் குழியாகக் கிளறி, கூழாக்கி, பெரிய 'பிளா' எனப்படும் ஒரு வகையானத் தட்டில் ஆர வைத்து முளை விட்ட நெல்லை இடித்து அதனுடன் சேர்த்து ஒரு சாடியில் ஊற்றி, இரண்டு நாள்களுக்கு ஊற விட்டு, பின் அதனை வேக வைத்து விரலால் அலசி 'நெய்யரி' எனப்படும் சல்லடையால் வடிகட்டி கள் தயாரித்திருக்கின்றனர். இது விரலால் நன்கு அலசிப் பிழியப்படுவதால் 'நறும்பிழி' என்று அழைக்கப்பட்டுள்ளது. 'கள் அடு மகளிர்' பெரும்.339'அரியற் பெண்டிர்' அகம்.157;1 என்ற சொற்கள் சங்க கால மகளிர் கள் தயாரித்தலில் சிறந்திருந்த நிலையைச் சுட்டுவதாக உள்ளது. இவ்வாறு மகளிரால் இல்லங்களில் தயாரிக்கப்பட்ட கள் சங்க காலத்தில் வீர மறவனின் நினைவாக நடப்பட்ட நடுகல்லுக்குப் படைத்து வழிபட்டதை,

**"இல்அடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்**
**புடைநடு கல்லின் நாட்பலி ஊட்டி"** [52]

இப்புறநானூற்றுப் பாடல் அடிகள் தெரிவிக்கின்றன. கள் சமைக்கின்ற மகளிர் கிண்ணங்களைக் கழுவியதனால் வடிந்த நீர் குழம்பிச் சேறானதை.

**"கள்அடு மகளிர் வள்ளம் நுடக்கிய**
**வார்ந்து உகு சில்நீர் வழிந்த குழம்பின்"** [53]

என்ற அடிகளின் மூலம் அறிய முடிகிறது. இதனால் மகளிர் அதிகமான அளவில் கள் சமைத்துள்ளனர் என்பது புலனாகிறது. வீரன் ஒருவன், மகளிர் தங்கள் இல்லத்தில் சமைத்த கள்ளைப் பருகியதற்கான பழைய கடனைத் தீர்த்தான் என்பதை,

**"நாள்ஆ தந்துஇ நறவுநொடை தொலைச்சி,**
**இல்அடு கள்இன் தோப்பி பருகி"** [54]

என்னும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. இதனால் இல்லத்தில் சமைத்த கள் விருந்தினர்களுக்கு மட்டுமல்லாது, விற்பனைக்காகவும் இருந்துள்ளது என்பது புலனாகிறது.

கள் நிறைந்த குடம் 'தசும்பு' என்றழைக்கப்பட்டது. தசும்பு என்பதற்கு குடம், கொப்பரி, பொன், விமானகலசம் என்று கழக அகராதி (ப.510) பொருள் கூறுகிறது. இக்கள் குடம் உறி என்றழைக்கப்படும் தொங்கும் நிலையிலமைந்த, ஏறா ஏணியில் வைக்கப்பட்டதைப் பதிற்றுப்பத்து (43;33) குறிப்பிடுகிறது. குடத்தில் வைத்த கள்ளைப் பருகி வீரர்கள் வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்திருந்தனர். அக்குடத்தின் மேல் மாலையைக் கட்டி வைத்து, சாந்தினைப் பூசிவைக்கும் மரபு இருந்திருக்கிறது. இம்மரபை,

**"நிறைந்து நெடிது இராத் தசும்பின்"** [55]

**"சாந்து புறத்து எறிந்த தசும்பு துளங்கு இருக்கை"** [56]

**"துளங்கு தசும்பு வாக்கிய பசும் பொதித் தேறல்"** [57]

என்ற அடிகள் குறிப்பிட்டுள்ளன. மூங்கில் குழாய்க்குள் நிரப்பப் பெற்ற முற்றிய தேனால் செய்யப்பட்ட கள்ளை நிரம்பப் பருகி மலைவாழ் மக்கள் மகிழ்ந்திருந்த செய்தியை,

**"வேய்ப் பெயல் விளையுள் தேக்கட் தேறல்**
**குறைவு இன்று பருகிஇ நறவு மகிழ்ந்து"** [58]

**"திருந்து அமை விளைந்த தேக்கள் தேறல்"** [59]

எனும் அடிகள் தெளிவுப்படுத்துகின்றன. இதனால் மகளிர் கள் தயாரித்த செயலையும், கள் சேமித்து வைத்த செய்தியையும் அறிய முடிகிறது.

**மன்னர்களுக்கு கள் வழங்குதல்**

மகளிர் அரண்மனைகளில் மன்னனுக்கும், வரும் விருந்தினருக்கும் கள் வழங்கியுள்ளனர். அவ்வாறு வழங்கும் போது மகளிர் அணிகலன்களை அணிந்து, பொன்னால் செய்த கிண்ணங்களில் கள் வழங்கியுள்ளார்கள். கார்மேகம் போன்ற கருங்கூந்தல் கொண்ட நல்லணிகலன்களை அணிந்த பெரிய மாளிகையில் உலாவரும் மகளிர் புன்னகையோடு பொற்கிண்ணம் நிறையக் கள்ளினை வார்த்துப் பருக கொடுத்திருக்கின்றனர். இதனை,

**"மழை என மருளும் மகிழ்செய் மாடத்து,**
**இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்,**
**போக்குஇல் பொலங்கலம் நிறையஇ பல்கால்,**
**வாக்குபு தரத்தர, வருத்தம் வீட"** [60]

என்ற அடிகளில் முடத்தாமக் கண்ணியார் பாடியுள்ளார். இதைப்போல பொன் வட்டில்களில், மணம் நாறும் தேறலை, மன்னனைச் சந்திக்க வரும் விருந்தினர்களுக்கு அளித்திருக்கின்றனர். தேறல் என்பதற்குத் தெளிவு, தெளிந்த கள் என்பது பொருள். இதனை.

**"இலங்கு இழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**மணம் கமழ் தேறல் மடுப்ப நாளும்"** [61]

இம்மதுரைக்காஞ்சி அடிகள் தெளிவுப்படுத்துகின்றன. மேலும், குளிர்ச்சி பொருந்திய, மிக்க மணமுடைய மதுவினை வளையணிந்த மகளிர்,பொற்கலத்தில் ஏந்தி ஊட்டுவதை,

**"ஒண் தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**தண் கமழ் தேறல் மடுப்ப"** [62]

என்ற புறப்பாடலில் மாங்குடிக் கிழார் குறிப்பிடுகிறார். யவனர்களால் குப்பிகளில் கொண்டுவரப்பட்ட மணம் நாறும் குளிர்ந்த மதுவினைப் பொன்னாலாகிய கிண்ணத்தில் ஏந்தி, ஒளி பொருந்திய மகளிர் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்ற மன்னனுக்குத் தருவதனை,

***“யவனர் நன் கலம் தந்த தண் கமழ் தேறல்***
***பொன் செய் புனை கலத்து ஏந்தி, நாளும்***
***ஒண் தொடி மகளிர் மடுப்ப”*** [63]

*என்கின்ற அடிகளில் மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார் புலப்படுத்தியுள்ளார். பசிய இழையணிந்த மகளிர் பன்னாடையால் வடிக்கப்பட்ட கள்ளின் தெளிவை, பொற்கிண்ணங்களில் எடுத்துக் கொடுக்க, மன்னன் உண்டு மகிழ்ந்ததை,*

***“பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய***
***நார்அரி தேறல் மாந்தி”*** [64]

*எனும் அடிகள் தெரிவிக்கின்றன. இதன் வழியாக அரசர், புலவர், விருந்தினர் என அனைவருக்கும் மகளிர் ‘மது’ வழங்கியுள்ளனர் என்பதும், பொன்னால் செய்த கலத்தில் ‘கள்’ வழங்கப்பட்டுள்ளன என்பதும் அறிய இயல்கிறது.*

***கள் பருகுதல்***

*சங்க காலத்து மகளிர் சிலர் கள்ளுண்ணும் பழக்கம் உடையவர்களாக இருந்துள்ளனர். ஔவையார் அதியமானைப் பற்றிப் பாடும்போது,*

**“சிறிய கட் பெறினே, எமக்கு ஈயும்; மன்னே!**
**பெறிய கட் பெறினே,**
***யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே!”*** [65]

*எனப் பாடியுள்ளார். இதில் அதியன் குறைந்த அளவு கள் கிடைக்கும் பொழுது, அதைப் புலவர்களுக்கு மட்டும் (ஔவையாருக்கு) தருவான். அதிகளவு கள் கிடைக்கும்போது, அதைப் புலவர்களுக்குத் தந்து எஞ்சியதை அவன் உண்பான் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இது புலவரும், புரவலரும் பால் வேறுபாடின்றிக் கள் பருகி மகிழ்ந்த காலத்தைக் காட்டுகிறது. இதைப்போல் பெருஞ்சித்திரனார் வெளிமானைக் ‘கள் காமுறுநன்’(புறம்.238;5) எனப்பாடுவது அவர்களுக்கிடையில் வேறுபாடில்லாத நெருக்கம் இருந்த தொடக்கக் காலச் சமுதாயத்தைக் காட்டுவதாக உள்ளது. மதுரைக் காஞ்சிப் பாடல் மின்னல் நுடங்குவது போன்ற வடிவினையுடைய மகளிர், மது உண்டு, கணவரைப் புலந்து பேரணிகலன்களை அறுத்து எறிவதால், பருத்த வடமாக விளங்கிய முத்து மாலைகளின் முத்துகள் கீழே சிதறி விழுந்திருந்த காட்சியை,*

***“மின்னு நிமிர்ந்தனையர் ஆகி, நறவு மகிழ்ந்து,***
***மாண் இழை மகளிர், புலந்தனர், பரிந்த***
***பரூஉக் காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு”*** [66]

*இவ்வடிகள் தெளிவுப்படுத்துகின்றன. இதனால் மகிழ்ச்சி மற்றும் சினம் கொண்ட நேரங்களில் மகளிர் மது பருகிய பழக்கம் உடையவர்கள் என்பது தெரிய வருகிறது.*

*இதனால் மது என்பதற்கான பொருள் விளக்கமும், இலக்கியங்களில் மக்கள் 'கள்' பயன்படுத்தப்பட்ட நிலை மற்றும் விற்கப்படும் இடங்கள் பற்றியும் அறியப்பட்டது. மகளிர் இல்லங்களில் கள் தயாரித்தமையும், அவற்றை விலைக்கு விற்றும், விருந்தினர்களுக்கு வழங்கியும், நடுகல்லிற்குப் படையலிட்டும் உள்ளனர் என்பது பெறப்பட்டது. பல அணிகலன்களையணிந்த மகளிர் பொன்னால் செய்த வட்டில்களில் மன்னர், விருந்தினர்,பாணர் ஆகியோருக்குக் கள் வழங்கியமையும், மகிழ்ச்சி மற்றும் சினம் கொண்ட நேரங்களில் கள்ளைப் பருகியிருந்தமையும் புலனாகிறது. எனவே கள் சமைத்தல், வழங்குதல், விற்றல், பருகுதல் போன்ற பழக்க வழக்கச் செயல்பாடுகளில் மகளிர் ஈடுபட்டுள்ளமை புலப்படுகிறது.*

***மகளிரின் அன்புணர்வு***

*இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் என் கணவனை யானாகியர் நெஞ்சு நேர்பவளே ! என்று தலைவி விரும்புவது இவண் சுட்டத்தக்கது. அது போலவே தன் கணவரை இறப்பிலும் பிரியக் கூடாது என்று நினைக்கும் தலைவி குயவனிடம் இருவரும் சேர்ந்து இருக்கும்படியான பெரிய அகன்ற முதுமக்கள் தாழியைச் செய்து தருமாறு குயவனிடம் கேட்கிறாள்.*

> ***"வியல் மலர் அகன் பொழில் ஈமத் தாழி***
> ***அகலிதாக வனைமோ***
> ***நனந் தலை மூதூர்க் கலம் செய் கோவே!"*** [67]

*இவ்வாறு தாழியைக் கேட்பதால் அப்பெண்ணின் அன்புணர்வு பெறப்படுகிறது.*

**பெண்கள் கடமை**

*மகளிர் கண் விழித்து எழுந்தவுடன் கோலமிடுதல் வழக்கம்( மது- 664) இந்நடைமுறை இன்றுவரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதுபோலவே மாலையில் விளக்கேற்றுதல் என்பதும் மகளிரின் கடமையாக உள்ளது. இவ்வாறு மகளிர் இன்று வரை மாலையில் விளக்கேற்றுதல் இயல்பு. அக்காலத்தில் கணவரின் வருகையை நினைத்து வாசனை திரவியங்கள் பூசி அணிகள் பூட்டித் தங்களை அழகு செய்து கொண்டுள்ளமையை,*

> ***"மென் நூற் கலிங்கம் கமழ்புகை மடுப்ப,***
> ***பெண் மகிழ்வுற்ற பிணைநோக்கு மகளிர்***
> ***நெடுஞ்சுடர் விளக்கம் கொளீ,"*** [68]

*என்ற வரிகள் மூலம் அறியலாம்.*

*அதேபோல பெண்கள் பின்னர் தூங்கி முன்னர் எழும் நிலை அக்காலத்திலேயே தொடங்கியுள்ளது. மதுரைக்காஞ்சி (622-23) பெண்கள் தங்களின் இல்லாத்தாரின் உணவுத்தேவையை நிறைவு செய்த பின் கணவருக்காகக் காத்திருந்து,விளக்கேற்றி*

*வீட்டின் முன்புறக் கதவுகளை அடைத்து, இல்லத்தில் உள்ள அனைவரும் உறங்கிய பின் தானும் உறங்குவாள் என்று அச்செய்தி குறிப்பிடுகிறது.*

***மகளிரும் மலரும்***

*பெண்களின் கூந்தலை அலங்கரித்து அவர்களுக்குச் சிறப்பு தருவன மலர்கள். மலரா, கூந்தலா? எது நாற்றமுடைத்து? என்ற புகழ்பெற்ற வாதம் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி" என்ற பாடலில் இடம்பெற்று பின்னர் திரைப்படத்தில் இடம்பெற்றுச் சிறக்கிறது.*

*கணவன் இணைந்திருக்கும்போது மகளிர் மலர் சூடி மகிழ்வோடு இருந்துள்ளனர். அதன் பின்னர் மலர் சூடாமல் வருந்தியாற்றிருக்கும் நிலையைக் காண்கிறோம். இன்றும் கூட தம்முடைய கணவன் பொருட்காரணமாக வெளிநாடுகளில் வசித்தால், மகளிர் முகமும் அகமும் குன்றியிருப்பர். இருவரும் பிரிந்து பொருளாதாரத்தில் உணர்வுற்று அதனால் பெரும் பயன் ஏற்படினும்,தான் பெரும் பயனா ? என்று அவர்களுக்குள்ளேயே வினவிக்கொள்ளுதல் நலம்.*

> ***"புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர்***
> ***பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப"*** [69]

***மலரணியா மாந்தர்***

*அக்காலத்தில் ஆண்களும் மலரணிந்திருப்பர். பாடினி மகளிர் என பாணன் போர் வீரர்கள் ஆகியோர் கூட புரவலனாகிய மன்னனின் இறப்பின் போது மலரணியாமல் தங்கள் வருத்தத்தை எடுத்துரைப்பர். இதிலிருந்து மகளிர் செயல்கள், அவர்களின் சிறப்புகள் ஆகியவை சுட்டப்பெற்றுள்ளன.*

***சடங்குகள்***

*சடங்குகள் மனிதனுடைய வாழ்வுடன் பின்னிப்பிணைந்தவை. சந்திராயனுக்கு செயற்கைக்கோள் அனுப்பும் போது கூட இறைவழிபாட்டிற்குப் பின்னர் அது தொடங்கப்படுகிறது. காரணம் நேர்மறையான சக்தி இறையிடம் கிடைக்கும் என்ற அதீத நம்பிக்கையே ஆகும். இனி இவ்வாறான சடங்குகள் இருந்தனவா? எவ்வகையில் அவை இருந்தன? அதற்கான சான்றுகள் குறித்து ஆராய்வோம். இன்றும் கூட தெய்வக்குத்தமாயிடும் என்ற சொல்லைக் கிராமத்து எளிய மக்களிடையே கேட்டுக் கொண்டே இருக்கிறோம். வழிபாடு நிகழ்த்தச் செல்லும் மகளிர் ஒப்பனைகளோடு செல்வதைக் குறிக்கலாம். சடங்குகளைப் பின்வரும் தலைப்புகளில் ஆராயலாம்.*

- *பிறப்புச் சடங்குகள்*
- *வழிபாட்டுச் சடங்குகள்*
- *இறப்புச் சடங்குகள்*

இவற்றில் குழந்தைப் பிறந்த போது அதனுடைய பாதுகாப்பு கருதி பல்வேறு செயல்களைச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் பல செயல்கள் கட்டாயமாக்கப்பட்டன என்பது தெரியலாகிறது.

**பிறப்புச் சடங்கு**

குழந்தை பிறந்து இல்லத்திற்கு தாயும் சேயும் நலமாக வருவது என்பது இரண்டாம் பிறவி போல தான். மருத்துவமனைகள் மலிந்துள்ள இக்காலத்தில் இது சாத்தியமில்லை எனினும் மகளிர் உடல் மற்றும் மனரீதியாகப் பிரச்சனைகளை எதிர் கொள்கிறாள். அவற்றுள் மிக முக்கியமானது உடலில் தொற்று நோய் ஏற்படாமல் காப்பது. அதற்குக் குறிப்பாக பெண்கள் தங்களைத் தூய்மை செய்து கொண்டு இறையருளைப் பாடி அவளுக்காக வழிபாடு செய்யப்படுகிறது. இதில் பால்சோறு படைத்து யாழில் செவ்வழிப்பண் வாசிக்க, முழவு,சிறுபறை கொட்ட,முதுமைப் பெண்டிரோடு கடவுளை வழிபட்ட காட்சியை,

> **"நல்மா மயிலின் மென்மெல இயலி**
> **கடுஞ்சூல் மகளிர் பேணி கைதொழுது,**
> **பெருந்தோட் சாலினி மடுப்ப"** [70]

என்ற வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

**வழிபாட்டுச் சடங்குகள்**

மனித வாழ்வில் இரண்டற கலந்திருப்பது இறைவழிபாடு. இறைவனுடன் தொடர்பு கொண்டு வாழ வேண்டும் என்பது ஆன்றோரின் நோக்கமாகும். சங்க கால மக்கள் சிவபெருமான், திருமால், முருகன், கொற்றவை உள்ளிட்ட தெய்வங்களை வழிபாடு செய்தமையை பல்வேறு சான்றுகள் வழி அறிகிறோம்.

> **"முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே"** [71]

என்பது சிவபெருமானை வணங்குதல் குறித்துக் கூறப்படுகிறது. மேலும், திருமுருகாற்றுப்படை 153-154, மலைபடுகடாம் -82, புறம் – 91, உள்ளிட்டவையும் சுட்டி நிற்கின்றன.

முல்லை நிலத்தவனாகிய திருமால் குறித்து புறம் – 57, மதுரைக்காஞ்சி 591,763, பெரும்பாணாற்றுப்படை 402, ஆகியவை குறிப்பிடுகின்றன.

இதேப் போல முருகன் குறித்து சேஎய், நெடுவேள், வேலன், குறிஞ்சிக் கிழவன் என்ற சொற்களால் குறிக்கப்படுகிறார். இவர் குறித்து புறம் – 56, பதிற்றுப்பத்து 26, மதுரைக்காஞ்சி 181, புறம் – 16, என பெரும்பாலான சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. திருமுருகாற்றுப்படை அவர் குறித்துப் பாடியது என்பதால் இது முருகனிடம் மக்களுக்கு இருந்த செல்வாக்கை உணர்த்தும்.

கொற்றவையும் மிக சக்தி வாய்ந்த தெய்வமாகக் கருதப்பட்டிருக்கிறாள்.

**"வெற்றி வெல்போர்க் கொற்றவை"**[72]

**"உருகெழு மரபின் அயிரை பரவியும்"**[73]

*மரபுநிலை வழுவாது அயிறை மலையில் உள்ள கொற்றவை தெய்வத்தைச் சேர மன்னர் வழிபாட்டு வந்தனர் என்றும்,*

**"..........அஞ்சு வரும் மரபின்**
**கடவுள் அயிரையின் நிலை இ"**[74]

*அச்சம் தருகின்ற முறைமையினை உடைய கொற்றவை உறைகின்ற அயிறை மலை என்றும் பதிற்றுப்பத்து கூறுகிறது. இவ்வாறாகக் கொற்றவைக் குறித்து சங்க இலக்கியப்பாடல்களில் பல இடங்களில் காணலாம்.*

*அடுத்தாக இறந்த வீரர்களைப் போற்றும் வகையில்நடுகல் எடுத்து வழிபடும் முறை இருந்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பல நடுகற்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை இறந்த வீரனைப் போற்றுவது மட்டுமன்றி கணவன் போரில் வெற்றி பெற வேண்டுமெனமும் விருந்தெதிர் பெறவும், அவர்களை வணங்கியுள்ளாள் என்பதை,*

**"நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது;**
**விருந்து எதிர் பெறுகதில் யானே; என்னையும்"**[75]

*என்ற பாடல் சுட்டுகிறது. மேலும், இறந்த வீரருக்குப் பிடித்தவற்றைப் படைத்து அவற்றை வழிபட்டுள்ளனர். இதனை,*

**"நடுகல் பீலி சூட்டி, நார்அரி**
**சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லொ"**[76]

*இவ்வாறு நடுகல்லை வணங்குதல் சங்ககாலத்தில் இருந்து வந்துள்ளது. அதன் நீட்சியாகத் தற்காலத்தில் இறந்தவர்களைப் புதைக்கும் போது அதன் மீது அடையாளம் இடும் அல்லது மேடையிடும் வழக்கம் உள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது*

**இறப்புச் சடங்கு**

*இதில் இன்று வரையுள்ள பாடை கட்டுதல், அழுது புலம்பல், சுடுகாட்டுச் சடங்குகள் உள்ளிட்டவை சங்க இலக்கியங்களில் சுட்டப்பெறுகின்றன.*

*சேரமன்னன் கணைக்கால் இரும்பொறை போரில் தோல்வியடைந்தான். வெற்றி பெற்ற சோழன் செங்கணான், சேரனைக் குடவாயில் கோட்டத்துச் சிறையில் அடைத்தான். அப்பொழுது கடுமையான நீர்த்தாகத்தால் சிறைக்காவலரிடம் தண்ணீர் கேட்டான் இரும்பொறை. அவன் காலம் தாழ்த்தித் தண்ணீர் கொண்டு வந்ததால் வருந்திய சேரன் தண்ணீர் அருந்தாமலேயே உயிர் நீத்தான் அப்போது தன்னுடைய நிலைக்குத் தானே இரங்கிப் பாடியதாக இப் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.*

***“குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்,***
***ஆள் அன்று என்று வாளின் தப்பார்;***
***தொடர்ப் படுஞுமலியின் இடர்ப் படுத்து இரீஇய***
***கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்***
***மதுகை இன்றி, வயிற்றிதுத் தீத் தணிய,***
***தாம் இரந்து உண்ணும் அளவை***
***ஈன்மரோ, இவ் உலகத்தானே?”*** [77]

*இப்பாடல் பழங்காலத்தில் மன்னர்கள் போரின்போது விழுப்புண்பட்டு மடிவதையே பெருமையாகக் கருதினர் என்பதற்குத் தகுந்த சான்றாகத் திகழ்கிறது. மேலும், சேரன் கணைக்கால் இரும்பொறையின் மானமிகு வாழ்வையும் எடுத்தியம்புகிறது.*

*‘பிள்ளை இறந்து பிறந்தாலும் – தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் – அல்லது பிறந்த குழந்தை இறந்தாலும் அதனையும் ஒரு நபராகவே கருதி உயர்வு தருவர். அந்த இறந்த குழந்தையின் உடலை வாளால் பிளந்து வடுப்படுத்தி அடக்கம் செய்வர். அதுபோன்றே மன்னராக இருப்பவர் போரில் பகைவரின் வாளால் வடுப்பட்டு இறந்திடல் வேண்டும். அவ்வாறு இன்றிப் பிழைத்து விட்டால் நாயைச் சங்கிலியால் பிணைப்பதைப்போன்று விலங்கு பூட்டித் துன்புறுத்துவர் பகைவர். அத்தகைய பகைவரிடம் நீரை இரந்து கேட்டு வயிற்றுத் தீயை தணிக்க வேண்டாம். இவ்வுலகில் அத்தகைய இழிந்த இயல்புடையவரை அரசர்களும் பெறுவார்களோ! என்று பாடியுள்ளார் சேரமான் கணைக்கால் இரும்பொறை.*

*இதன்மூலம் சிறு குழந்தை இறந்தாலும் சரி, குழந்தை இறந்து பிறந்தாலும் சரி இறுதிச் சடங்கின்போது அவற்றிற்கு வடு ஏற்படுத்திப் புதைக்கும் முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சமூகத்தில் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.*

***புறத்திணையின் சமுதாய நோக்கு***

*சங்ககால மக்கள் ஆடல், பாடல், உழைப்பு மற்றும் போர்கள் ஆகியவற்றில் பங்கு கொண்டு சிறப்புடன் வாழ்ந்து வந்திருந்தனர். இதற்கான அடிப்படை காரணத்தைச் சற்று ஆராய வேண்டும். என்னவெனில் ஒரு மனிதன் மகிழ்வாக வாழ்வதற்கு அவனுடைய தேவையை உற்று நோக்கினால் உள்ளமே (எண்ணம்) காரணமாகும். இவ்வுள்ளம் உரைப்பவற்றை கேட்டு நடத்தல் உலக இயல்பு. உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் தோன்றினால் செயலும் நல்லதாகும். எண்ணம் போல வாழ்க்கை என்று பெரியோர் உரைத்திருப்பதை நோக்கினால் இவ்வுண்மை தெளிவாகும். இவ்வாறு நல்ல எண்ணங்களை உருவாக்க அவை நல்ல சொற்களை உருவாக்கும். எனவே நல்ல செயல்களுக்கு அடிப்படை நல்ல எண்ணங்களாகும். அத்தகைய நல்ல எண்ணம் என்பது கட்டுப்பாடுகளற்ற அன்பினால் அனைத்தும் சாத்தியம் என்பதை முன்னோர் உணர்ந்திருந்தனர். அந்த அன்பு ஒன்றே அனைத்து உயிர்களின் மீதும் நேயத்தைச் செலுத்த ஏதுவாக அமைகிறது.இக்கருத்தினை சங்கச் செய்யுள்கள் தாங்கி நிற்கின்றன. இனி நம் மக்களின் உணர்வுகளைக் காட்சிப்படுத்தும் செய்யுள்களைக் காண்போம்.*

***அன்பெனும் ஊற்று***

*அன்பே அகிலம் நகர்வதற்கு அடிப்படை என்பதை உணர்ந்ததால் புலவர்கள் பல்வேறு பாடல்களை எழுதியுள்ளனர். இதனை,*

***"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்***
***அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்***
***அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்***
***அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே."*** [78]

*என்ற பாடலில் திருமூலர் அனைத்தும் அன்பே, கடவுளும் அன்பே என்று தெளிவான விளக்கம் தருகிறார்.*

*அதேபோல,*

***"அன்பென்னும் அணுவுள் அமைந்த பேரொளியே***
***அன்புருவாய் சிவனே"*** [79]

*என்ற வரிகள் பிற்காலத்தில் வள்ளலாரால் இயற்றப்பட்டன. இவ்வாறு தமிழகத்தின் புலவர்கள் மிகப் பிற்காலங்களில் கூட (வள்ளலார்) அன்பு குறித்து அனைத்து உள்ளங்களுக்கும் எடுத்து காட்டினார்.*

*வள்ளலாரைப் பற்றிய மிகப் புகழ்பெற்ற செய்தி உண்டு.*

*"வாடிய பயிரைக் கண்டபோதெல்லா,ம் வாடினேன்" என்று பாடியவர் வள்ளலார். மேலும், அவருடைய வாழ்வில் நடந்த புகழ்பெற்ற நிகழ்வு அவருடைய அன்புள்ளத்திற்குப் பெருஞ் சான்றாய்த் திகழ்ந்தது. கற்பவருக்கும் கேட்பவருக்கும் பேரின்பத்தை வழங்குகிறது.*

*ஒருமுறை வள்ளலார் அடுத்த ஊருக்கு பயணம் புறப்பட்டார். அங்கு உடல் ஓய்விற்காக சத்திரம் ஒன்றில் படுத்தார். அப்போது அவ்வழியே சென்ற திருடன் ஒருவன் வள்ளலாரின் காதில் உள்ள கடுக்கனை அவர் அறியாமல் கழற்றினானாம். அதற்கு வள்ளலார் பதிலேதும் சொல்லாமல் அவன் திருடுவதற்கு வாய்ப்பாகத் திரும்பிப் படுத்தார். திருடன் மீண்டும் ஒரு கடுக்கனைத் திருடிவிட்டான். அப்போது வள்ளலார், அந்த திருடனைப் பார்த்து தம்பி நீ எடுத்துச் செல்லும் என்னுடைய கடுக்கன் தங்கக் கடுக்கன். அவற்றைக் குறைந்த விலைக்கு விற்று விடாதே என்றுரைத்தாராம். அவருடைய (அன்பு) அருள் உள்ளத்தை நினைத்து திருடன் திகைத்து அங்கேயே நின்று விட்ட நிகழ்வு அனைவரும் அறிந்த ஒன்று ஆகும்.*

*இன்று வரை வள்ளலார்காட்டிய வழியில் அன்பு கொண்டு உணவளிக்கும் அருள் உள்ளங்கள் இருக்கும் வரை வடலூரில் அணையா விளக்கும், பசிப் பிணியை அழிக்கும் உணவும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா என்ற கொடிய வைரஸ் உலகத்தையே ஆட்டி வைத்துக்கொண்டிருக்கிறது. கடந்த நான்கு மாதமாக எந்த*

ஒரு ஆலயமும், உணவகமும் திறக்கப்படாமல் இருக்க வடலூரில் மட்டும் என்றும் போல ஏழை மக்களின் பசியைப் போக்கிக்கொண்டு இருக்கிறது. இத்தகைய அன்பு எவரால் சாத்தியமாயிற்று. நம் முன்னோர்களான சங்க மக்களால் தானே அவர்களும் கூட இறைவனிடத்தில் வேண்டும் போது என்ன கேட்டிருக்கின்றனர் என்பதை பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

***" ……….. ……… யாம் இரப்பவை***
***பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்***
***அருளும் அன்பும் அறனும் மூன்றும்***
***உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயோ"*** [80]

*என்னும் பாடலடிகள் உணர்த்தும்.*

***"தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்று***
***எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் - உம்மை***
***எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று***
***பரிவதூஉம் சான்றோர் கடன்"*** [81]

*என்ற பாடல் அன்பினை உணர்த்தி நிற்கிறது. இவ்வாறு மக்கள் தங்கள் அன்பினை வேண்டி நின்றமையை மேற்காண் சான்றுகள் உணர்த்தி நிற்கின்றன.*

**உயர்ந்த உள்ளம்**

*மாடலன் மதுரை குமரனார் என்பவரும் உயர்ந்த நோக்கமுடைய சிந்தனைகளைத்தம் பாடலில் எடுத்தியம்பியுள்ளார்.*

***"மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்***
***வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே;***
***எம்மால் வியக்கப் படூஉ மோரே***
***இடுமுள் படப்பை மறிமேய்ந்து ஒழிந்த***
***குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு***
***புன்புல வரகின் சொன்றியடு பெறூஉம்***
***சீறூர் மன்னர் ஆயினும் எம்வயின்***
***பாடறிந்து ஒழுகும் பண்பி னாரே;***
***மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்***
***உணர்ச்சி யில்லோர் உடைமை யுள்ளேம்;***
***நல்லறி வுடையோர் நல்குரவு***
***உள்ளுதும்; பெரும யாம் உவந்துநனி பெரிதே"*** [82]

*இப்பாடலில் பண்பில்லாமல் இருப்பவனை நாங்கள் மதிக்க மாட்டோம். சிறிய மன்னராயினும் பண்புடையவர்களையே மதிப்போம். அறிவில்லாதவர்களின் செல்வத்தை நினைக்க மாட்டோம். அறிவுடையோரின் வறுமையையே நினைப்போம். என்ற உயர்ந்த நோக்கை ஆற்றொழுக்கச் சிந்தனையை அறியமுடிகிறது.*

இன்றைய சமூகம் அறிவார்ந்த, விஞ்ஞான வளர்ச்சி பெற்ற உயர்ந்த சமூகமாக விளங்கி வருகிறது. இச்சமூக மக்களின் சிந்தனைகளில் அத்தகைய மாற்றங்கள் இருக்கின்றனவா? என்பதை யோசித்தால் இது இல்லை என்றே தோன்றுகிறது.

அறிவற்றவர்கள் செல்வத்தைப் பெறுகின்றனர். அவர்கள் தாம் பெற்ற செல்வத்தை அறவழியில் செலவிடாமல் அவற்றை எடுத்துச் சென்று கோயில்களுக்கும், ஆசிரமங்களுக்கும் அள்ளித் தந்து ஆத்ம திருப்தி அடைகின்றனர். அது தவிர்த்து ஆங்கொரு ஏழைக்கு கல்வி கற்பித்தல், உழவர்கள், விவசாயிகள் என இவர்களுக்கு வட்டியில்லா கடன் தருதல், ஏழைகளுக்கு இலவச மருத்துவ வசதிஅளித்தல் உள்ளிட்ட எவ்வளவோ சமூகப்பணிகளை ஆற்றி சமூக இன்னல்களை அகற்றலாம். ஆனால் அந்தோ அதனை நிறைவேற்ற தெளிந்த சிந்தை இல்லையே, அவர்களிடம் நல்லவற்றைப் பேசவும், பண்பாட்டோடு நடக்க தெரிந்தவர்களிடையே உறவு வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் எளியவராயினும் கவலை இல்லை என்று கூறும் மதுரை மாடலனாரின் உரத்த சிந்தனை நம்மை வியக்க வைக்கிறது. முந்தைய கணியரின் சிந்தை ஆழ்ந்து யோசிக்கவும், இவரது சிந்தை வியக்கவும் வைக்கிறது.

**புறத்திணையின் மானமேம்பாடு**

புலவர்கள் அரசனிடம் பொருள் பெற்று வாழ்வர் எனினும் ஆர்வமின்றி வழங்கினாலோ, தாமதமாக வழங்கினாலோ தகுதியறியாமல் சமமாக வழங்கினாலோ அவற்றைப் பெறுவதற்குப் புலவர்கள் விரும்பவில்லை. அறவே ஒதுக்கிய புலவரின் உணர்வினை அறியமுடிகிறது.

> ***"ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்***
> ***ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;***
> ***..........................................................***
> ***கருவி வானம் போல***
> ***வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே"*** [83]

இப்பாடலில் கழைதின் யானையார் வல்வில் ஓரியிடம் கூறுவது நுட்பமானது. முடியாட்சி மன்னரிடம் வெற்றுப் புலவரின் வாயில் இருந்து இத்தகையச் சொற்கள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாய்ச் செல்வது உரைக்கத்தக்கது. எவ்வளவு வண்மை பொருந்தியது என்று இவண் சுட்டத்தக்கது.

மேலும்,

> ***"தினையனைத்து ஆயினும் இனிதுஅவர்***
> ***துணைஅளவு அறிந்து நல்கினர் விடினே"*** [84]

என்றும்

> ***"முற்றிய திருவின் மூவர் ஆயினும்***
> ***பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே"*** [85]

என்ற இப்பாடல்களில் தினையளவே கொடுப்பினும் தகுதியறிந்து கொடுக்க வேண்டும் என்றும், மூவேந்தரே செல்வத்தைத் தரினும் ஆர்வமின்றி தருவதை எம்மனம் ஒப்பாது என்று கூறும் மான உணர்வு போற்றத்தக்கது. ஒருகணம் அப்புலவர்களின் நிலைமையை யோசிக்க வேண்டும். புலவர்களைவிட்டு வறுமையைப் பிரிக்க இயலாதது. புலவர்கள் தங்களின் அன்றாட வாழ்வியலுக்குக் கூட தேவையான பொருளாதாரமின்றி வருத்தப்படும் துன்பமான நிலையில் உள்ளவர்கள் காளான் முளைத்த அடுப்பினில் பூனை படுத்துறங்க வற்றிய முலையில் பாலினைப் பெறாமல் குழந்தை அலற,அழுகை சொரிந்த கண்களோட மனைவி புலவரை நோக்கிய கொடிய வறுமையைப் படம் பிடித்து காட்டியுள்ளனர் புலவர்கள் இச்சூழலிலும் கூட அரசர்களை எதிர்த்தல் (அ) வினவுதல் என்பது சாதாரண ஒருநிகழ்வே அல்ல. குடியாட்சி மலர்ந்த இக்காலத்தில் கூட அரசனை இகழ்தல் என்பது நம் நிம்மதியை நாமே தேடிச் செய்து குலைப்பது போலதான். எனவே மன்னரின் வார்த்தைக்கு மறு வார்த்தை இல்லாத நிலையே இங்கு உண்டு. ஆனால் அன்று உண்மையான மன்னர் முடியாட்சி, நெஞ்சில் துணிவு கொண்டதால் மானத்தை இழந்து வயிறு வளர்க்க வேண்டாம் என புலவர்கள் வாழ்ந்த நிலையை இவண் நோக்கலாம்.

அடுத்த வேளை உணவுக்கு வழியில்லாத சூழலில் இவ்வாறு கிடைக்கும் பரிசிலை விடுதல் என்பதில், எதிர்க்கும் நோக்கில் எதிர்நோக்கியிருக்கும் மான உணர்வு தமிழனுடையது. அதனால்தான் நாமக்கல் கவிஞர் தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு என்று பாடியிருப்பதைக் காண்க. இத்தகைய மறத்தமிழன் தான் தன்னுடைய நாட்டிற்குப் பிரச்சனை என்று வந்தால் அதனை தீர்ப்பதற்கு தன்னுடைய உயிரையும் அளிப்பர். சான்றாக, 1968 – இல் நடந்த மொழிப்போரில் ஈடுபட்ட மாணவ மணிகளைக் கூறலாம். மொழிப்போரில் இந்தியை எதிர்த்த ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். இந்த தண்ணருந் தமிழ்நாட்டில் இன்று வரை இந்தி நுழைய முடியவில்லை. சமீபத்தில் கூட சென்னை, மதுரை உள்ளிட்ட விமான நிலையங்களில் தமிழில் அறிவிப்பு வேண்டும் என்ற பரிந்துரையும் தமிழனின் தமிழ் உணர்வையும் மான உணர்வையும் பறைசாற்றி நிற்கின்றன.

மேலும், கடந்த நான்கு வருடங்களுக்கு முன் சென்னையில் நடைபெற்ற “மெரினா புரட்சி“ என்று வரலாற்றில் இடம்பெற்ற அருமையான நாளில் ஜல்லிக்கட்டு போராட்டம் நடைபெற்றது.இவண் சுட்டத்தக்கது. இவ்வாறு தமிழனின் ஒவ்வொரு செயலும் அவனின் தனித்த அடையாளத்தைக்காட்டி மான உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன.

**புறத்திணையின் தூய்மை உணர்வு**

மக்கள் தங்களையும் தாங்கள் சார்ந்த இடங்களையும் எப்போதும் தூய்மையாகவே வைத்துக் கொள்வது இன்றைய வழக்கம். ஆனால், அன்று மனிதன் நாகரிகமடையா அல்லது அடையத் தொடங்கும் காலத்திலேயே அவையெல்லாம் இருந்திருக்குமா? என்பது ஐயமே. ஆனால் சங்கப் பாடல்களை ஆராயம் போது ஐயந்திரிபர மக்கள் தூய்மையுணர்வோடு இருந்து வந்தமையைக் காணலாம்.

*இன்றைய இந்தியாவில் கங்கை நதியை, மெரினா கடற்கரையைத் தூய்மையாக்க பல இலட்சம் ரூபாய்களை நிதிவசதி அளித்துள்ளது அரசு. மாநகராட்சி ஊழியர்கள் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.*

*எனினும் தூய்மையான பாரதம் பிறக்க வழிதான் இல்லை. அங்இங்கெனாதபடி நீக்கமற நிறைந்த குப்பைகளைத் தவிர்க்க அரசு பல கோடிகளை ஒதுக்குகிறது. ஆனால் வெளிநாடுகளில் ஒவ்வொரு வீடும் தனித்தனியாக இருந்தும் தூய்மையானதாக இருக்கும். தெருக்களில் வாகனங்கள் மிக அழகாக வரிசையில் வாகனங்கள் செல்லும். ஏதேனும் ஒரு அவசரத்தேவை எனில் பொறுத்திருந்து செல்லும் பாங்கு அழகு. ஆனால் தமிழ்நாட்டில் அனைத்து வண்டியோட்டிகளும் கண்டிப்பாகச் சாலை வசதிகளை மதிப்பதோ இல்லை. ஆனால் வெளிநாடுகளில் வீடுகள், சாலைகள் என அனைத்தும் தூய்மையானதாக இருக்கும். மேலை நாடுகள் தூய்மையைப் போற்றுகின்றனர். இங்கு தூய்மையைப் போற்றுவோம் என்று கூறுவதோடு பின்பற்ற தவறுகிறோம். ஆனால் சங்க கால மக்கள் தூய்மை உணர்வுடன் வாழ்ந்திருந்தமையைப் பல சான்றுகளால் அறியலாம்.*

*பண்டைத் தமிழ் மக்கள் காலை எழுந்தவுடன் தாங்கள் பணிக்குச் செல்லும் முன் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டனர். கல்வித் தொழிலாளர்கள், காவலர்கள், வணிகர்கள் முதலியவர்கள் காலையிலும், உடலுழைக்கும் உழவர்கள், கைத்தொழிலாளர்கள் ஆகியோர் மாலையிலும் உழைத்து முடித்து உடல் அழுக்கைக் களைய நன்கு குளித்து உண்டு முடிப்பர்.*

*ஆண்கள் தம் உடலைத் தூய்மையாக்க பீர்க்கங்கூட்டைப் பயன்படுத்தினர். மகளிர் தங்களின் அழகை அதிகரிக்க, தூய்மை படுத்திக்கொள்ள சுண்ணப்பொடியைப் பயன்படுத்தி தங்கள் உடலை தூய்மை செய்தலைச் சங்கப்பாடல்கள் சுட்டியுள்ளன.*

**"மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப"** [86]

***"………………….யாம் எம்***

**கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்"** [87]

*இப்பாடல் மகளிர் களிமண் எடுத்துச்சென்று உடலைத் தூய்மையாக்கி போற்றியமையை அறியலாம்.*

*மேலும் "சுண்ணப்பொடியில் பல வகையான மூலிகைகள் கலந்திருந்தமையை, கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம், நாவல், பூவந்தி, கடுநெல்லி, தான்றி, ஆல், அரசு, அத்தி, முத்தக்காசு, இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகனம், இலவங்கம், பச்சிலை, ஏலம், கோட்டம், நாகம், மதாவாசி, இலாமிச்சம், கண்டில், வெண்ணெய், துத்தம் வண்ணக் கச்சோலம், அரேணகம், மாஞ்சி, சயிலேகம், புழுகு, புன்னை, நறுத்தாது, சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், நுண்ணேலம், கொவேரி ஆகிய முப்பத்திரு வகை மூலிகைகள் கலந்து ஊற வைத்த நன்னீரில் குளித்தனர்"* [88] *என்பதைப் பாவாணர் தம் நூலில் எடுத்துகாட்டியுள்ளமை இவண் சுட்டத் தக்கது.*

ஆனால் இன்று பல்வேறு செயற்கைப் பூச்சுகளை அயல்நாட்டினர் நம்குலப் பெண்களுக்குத் தந்து அதன் மாயையில் சிக்கி தம்முடைய ஆரோக்கியத்தை இழந்து வருகின்றனர். தம்முடைய அழகுசாதனப் பொருட்களின் விற்பனைக்குப் பல்வேறு உத்திகளைப் பன்னாட்டு நிறுவனங்கள் கையாண்டு வருவதைக் காணமுடிகிறது.

**சங்க மக்களின் சுவையுணர்வு**

எந்த ஒரு உணவுப் பொருளையும் சுவைத்தல் என்பது ஒரு கலை. தமிழகத்தில் அறுசுவைகளை விரும்பியுண்டனர். சரியாகக் கூறின் உலகில் பச்சையாக உணவை உண்ணும் சூழலில், தமிழகத்தில் சோறும், கறியும் சமைத்து உண்டனர்.

**காய்கறிப் பயன்பாடு**

காய் வகைகளைக் காம்பு களைந்து சீவ வேண்டுபவற்றைச் சீவி, உள்ளேயுள்ளவற்றை கறியாகப் பயன்படுத்தினர்.

கலவையாக அரைத்துச் சேர்த்தலை மஞ்சள், மிளகு, சீரகம், கொத்தமல்லி, தேங்காய் போன்றவற்றை அரைத்து பயன்படுத்தியுள்ளனர்.

கடுகு, ஆவின் நெய் ஆகியவற்றைக் கொண்டு தாளித்துள்ளமையை சங்கநூல்கள் சுட்டியுள்ளன.

**"குய்யுடை யடிசில்"** [89]

என்ற வரிகளில் மேற்காண் கூற்றுக்குச் சான்றாகின்றது. இவ்வாறு அரிசியினைத் தனியாக உண்டு வாழ்ந்தமையை,

**"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த**
**அவைப்பு மாண்அரிசி அமலைவெண் சோறு"** [90]

சிறுபாணாற்றுப்படை நவில்கிறது.

அரிசியை உரலிலிட்டு அதனை வெளுக்கத் தட்டுவர். உண்ணும் சோறு முல்லைப் பூப்போல வெண்மையாகக் காணப்பட்டது, பழஞ்சோற்றையும் விரும்பி உண்டனர் . இதனை,

**"அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்**
**தொடிமாண் உலக்கைப் பரூஉக் குற்று அரிசி**
**..........................................................**
**பழஞ்சோறு அயிலும் முழங்கு நீர்ப் படப்பைக்**
**காவிரிக் கிழவன் மாயா நல்லிசை"** [91]

என்ற பாடல்வரிகள் உணரத்துகின்றன. வெண்மையான பூளைப் பூவுக்கு ஒப்பான சிறுதாளுடைய வரகின் சோறாக்கிக் கொத்துக்கொத்தாக மலரும் அழகிய வேங்கைப் பூவைப் போன்ற அவரைப் பருப்புடன் வேகவைத்து இனிய சுவையான உணவைச் சங்கத் தமிழர்கள் அளிப்பார்கள் என்பதை,

***“நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன***
***குறுந்தாள் வரகின் குறள் அவிழ்சொன்றி***
***புகர்இணர் வேங்கைங் கண்டன்ன***
***அவரை வான் புழுக்கு அட்டி பயில்வுற்று”*** [92]

இப்பாடல் வரிகள் தெளிவாக்குகின்றன. இப்பழக்கம் இன்றும்கூட கிராமப்புற மக்களிடம் இருக்கிறது. அவரைப்பருப்பை உணவில் கலந்து உண்ணும்போது மணமும், சுவையும் மிகுதியாக இருக்கும்.

இவ்வாறு தமிழர் தம் உணவைப் பற்றிச் சங்க நூல்கள் குறிப்பிட்டுள்ளமையை அறிய முடிகிறது.

இவ்வாறான உணவு மட்டுமல்ல ஊன் உணவுகள் இருந்தமையை,

***“மட்டவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்”*** [93]

***“ஊன் சோற்று அமலை பாண் கடும்பு அருந்தும்”*** [94]

***“உடும்புஇழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச்”*** [95]

***“மைவிடையிரும் போத்துச் செந்தீச் சேர்த்தி”*** [96]

***“மரந்தோறும் மைவிழ்ப்ப”*** [97]

***“மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி”*** [98]

என்றவாறு வரும் வரிகளால் உணரலாம்.

***அந்தணர்கள் ஊண் உண்ணுதல்***

அக்காலத்தில் ஊண் உணவு உண்டமையை,

***“கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது***
***பிறிதுதொழில் அறியா ஆகலின், நன்றும்***
***மெல்லிய பெரும! தாமே, நல்லவர்க்கு”*** [99]

இதில் செல்வக்கடுங்கோ வாழியாதன், அந்தணரான கபிலரின் கையைப் பிடித்து உம்முடைய கை மெல்லியதாய் இருக்கிறதோ? என்ன காரணம் என்று வினவ அதற்கு ஊன் உணவு உண்பது குறித்து விடையளிப்பதிலிருந்த புலனழுக்கற்ற அந்தணாளனான கபிலர் ஊண் உணவை உண்டது அறிய வரும்.

***பண்டைத்தமிழரின் அழகுணர்வு***

தமிழகத்தில் பழங்காலத்திலேயே நெசவு தோன்றிவிட்டது. அக்காலத்தில் தம்மை அழகுப்படுத்தி கொள்ள பல்வேறு செயல்களை மேற்கொண்டமையை முன்னரே கண்டோம். இன்று தம்மை அழகுபடுத்திக் கொள்ள மேற்கத்திய நாகரிகத்தினைப் பின்பற்றியுள்ளமையை அறிகிறோம். மேற்கத்திய நாடுகள்

*குளிர்பிரதேசம் ஆகும். அதனால் அவர்கள் காலோடு இறுக்கிய அடர்த்தியான உடைகளை அணிந்திருப்பர். ஆனால் மேற்கத்திய நாட்டினரின் உடைகளைப் பின்பற்றி நாமும் ஜீன்ஸ் போன்ற அடர்த்தியான உடைகளை அணிகிறோம். அவ்வுடைகள் உடலின் வெப்பத்தைக் கூட்டிக் குழந்தையின்மை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு அடிகோலுகின்றன. மேலும் பல்வேறு அழகு சாதனப் பொருட்கள் விற்பனைக்காகச் செயற்கை நறுமண மூட்டிகளை இணைத்து விற்பனை செய்து நம்நாட்டு மகளிர்களை மயக்கி வருகின்றனர். இம் மாயையிலிருந்து நம் மகளிர் வெளிவர வேண்டும். நம் மக்கள் பருத்தியினாலான உடைகளை அணிந்திருந்தனர்.*

***"பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன"*** [100]

***"ஆள் இல் பெண்டிர் தாளின் செய்த***
***நுணங்கு நுண் பனுவல் போல"*** [101]

*என்ற அடிகள் பெண்கள் நூல் நூற்றமையை உணர்த்தும்.*

***"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து***
***அரவுரி யன்ன அறுவை நல்கி"*** [102]

***"பாம்பு உரி அன்ன வடிவின, காம்பின்***
***கழைபடு சொலியின் இழை அணி வாரா***
***ஒண்பூங் கலிங்கம் உடீஇ, நுண்பூண்"*** [103]

***"நீலக் கச்சைப் பூவார் ஆடைப்"*** [104]

***"ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்"*** [105]

*என்ற பாடலடிகள் அக்கால ஆடைகள் பாம்பின் தோல் போன்றும் மூங்கிலின் உட்புற மீந்தோல் போவும், புகை விரிந்தற் போலவும், நீராவி படர்ந்தது போன்றும், இழைகளின் தன்மையே தெரியாதது போல இழைக்கப்பட்டிருப்பதைக் காட்டி நிற்கின்றன.*

*இவ்வாறு ஆடைகள் மட்டுமன்றி, பொற்காசுகள் வழக்கத்திலிருந்ததால் பொன் அணிகலன்களும் வழக்கத்திலிருந்தது தெரிய வருகிறது.*

***"பலவுறு கண்ணுள் சிலகோல் அவிர்தொடி"*** [106]

***"மலைபயந்த மணியும் கடறுபயந்த பொன்னும்***
***கடல்பயந்த கதிர்முத்தமும்"*** [107]

***"விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்"*** [108]

*இப்பாடலில் முத்துக்களின் பயன்பாட்டினை அறியமுடிகிறது.*

***"தென்கடல் முத்தும்"*** [109]

*என்றவாறு முத்தின் பெயர்கள் பாடல்களில் எடுத்தாளப்பட்டிருப்பதைப் பாண்டிய நாட்டின் பெருமைகள் விளங்கும்.*

இவ்வாறு முத்தினைச் சேர்த்த அணிகலண்கள் சங்க மகளிர் அணிந்திருந்தனர். இதன் பின் பல்வேறு அணிகலன்களாக மாற்றம் பெற்றவயையே மாதவி அணிந்திருப்பதைச் சிலாப்பதிகாரம் உணர்த்தும்.

சிலம்பின் கடலாடு காதையின் மாதவியின் அணிகலன்கள் சுட்டப்பெற்றுள்ளன. கால் மோதிரம்(விரலணி) காற்சவடி, (பரியகம்) சிலம்பு, பாடகம், சதங்கை, அரியகம், கவான்செறி, விரிசிகை, கன்டிகை, தோள்வளை, சூடகம், கை வளை, வால்வளை, பவழ வளை, வாளை மோதிரம், மணி மோதிரம், மரகதத்தாள் செறி, சங்கிலி, நுண் ஞாண், ஆரம், பின்தாலி, இந்திர நீலக்கடிப்பிணை, தெய்வவுத்தி, வலம்புரி, தொய்யகம், புல்லகம் ஆகிய 27 வகையான அணிகலன்கள் இருப்பதைப் பண்டைய தமிழ் நாகரிகமும் பண்பாடும் என்ற நூலில் பாவாணர் குறிப்பிடுகிறார். ப – 62. இவை மட்டுமன்றி,

பழஞ்செய்யுள் திரட்டில்,

**“என்கோவை காஞ்சி எழுகோவை மேகலை**
**பண்கொள் கலாபம் பதினாறு – கண்கொளி**
**பருமம் பதினெட்டு முப்பத்திரண்டு**
**விரிசிகை யென்றுணரற் பாற்று”** [110]

என்ற பாடல் சுட்டுகிறது.

இன்று கூட இவ்வாறான அணிகலன்கள் இருக்கின்றன. ஆனால் இவ்வளவு வகையான அணிகலன்கள் அணிகின்றோமா? என்பது வினவுதலுக்குரியதே.

**பாதுகாப்பு உணர்வு**

சங்க மக்களின் வாழ்வியல் தரம் உயரஉயர தங்களின் பாதுகாப்பு குறித்த உணர்வு அவர்களிடம் மேலோங்குகிறது. எனவே அவர்கள் பாதுகாப்பான குடிசைகளில், குடில்களில் வாழ்ந்திருக்கின்றனர். இதற்கு சங்க இலக்கியங்களில் மிகச் சிறந்த சான்றுகள் உண்டு.

இதனை,

**“சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்”** [111]

**“வகை பெற எழுந்து வானம் மூழ்கி,**
**சில் காற்று இசைக்கும் பல் புழை நல் இல்”** [112]

இவை மட்டுமன்றி இல்லத்தில் ஐந்நில மக்களும் வாழ்ந்து வந்தமையைப் பல்வேறு சான்றுகள் சுட்டி நிற்கின்றன. ஆனால் இன்று நில, நீர், வான் வழிப் போக்குவரத்துகள் பெருகிவிட்டன. அதையும் விட இன்றைய அறிவியல் தொழில் நுட்பத்தில், மனிதர்களின் மூளையில் கணிணியின் சிப்களைப் பொருத்தி நாம் வீட்டில் இருக்கும் போதே குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று அவற்றைக் கண்டு அனுபவித்த

உணர்வுகளை ஏற்படுத்தி விடலாம் என்று கூறியுள்ளனர். இது அறிவியல் முன்னேற்றத்தின் எல்லை எனலாம்.

**அன்புணர்வு**

உலக வாழ்க்கையானது. முப்பெரும் பிரிவுகளை உடையது. இளமைப் பருவம், கன்னிப்பருவம் (பேரிளம் பருவம்) முதிர் பருவம் என்ற மூன்றினை உடையது. முற்காலத்தில் மனத்திற்குப் பிடித்த பருவங்களில் முக்கியமானது கன்னிப் பருவமே மனம் தெளிந்து தெரிந்து அமைவது அப்பருவம். மாந்தர்கள் எவரிடம் வினவினாலும் தங்களுக்கு பிடித்த பருவம் எது எனில் இளமைப் பருவத்தைக் கூறுவர்.

காமத்தை அகப்பொருள் என்றும், ஒருதலைக் காமத்தை அன்பின் ஐந்திணை என்றும் , பொருந்தாக் காமத்தைப் பெருந்திணை எனவும் இலக்கணம் கூறும்.

இயற்கையாகவே இருவரிடையே ஏற்படும் அன்பு குறித்து பல்வேறு பாடல்கள் குறிப்பிட்டுள்ளன.

> ***"இவன் இவள் ஐம்பால் பற்றவும் இவள் இவன்***
> ***புன் தலை ஓரி வாங்குநள் பரியவும்***
> ***காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது***
> ***ஏதில் சிறுசெரு உறுப மன்னோ***
> ***நல்லை மன்றம்ம பாலே மெல் இயல்***
> ***துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்***
> ***மண மகிழ் இயற்கை காட்டியோயே"*** [113]

இப்பாடலில் உனக்கு உரிமையான பெண்ணை ஊழ்வினை இணைத்து வைத்தமையைச் சுட்டியுள்ளது நோக்கத்தக்கது.

**தாய்மையுணர்வு**

இக்கலியுகத்திலும் கூடத் தாய்மையுணர்வு மேலோங்கி இருப்பதால் தான் இவ்வுலகம் உயிர்ப்புடன் இயங்குகிறது. இவ்வுலக மக்கள் உரத்துடன் வாழ நற்செயல் காரணமாக அமைகிறது. இதுகுறித்து,

> ***"பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்***
> ***றென்னுடையரேனும் உடையரோ? – இன்னடிசில்***
> ***பூக்களையும் தாமரைக் கைப்பூநாறும் செய்யவாய்***
> ***மக்களையிங் கில்லாதவர்."*** [114]

இப்பாடலில் சிறுவர் பெருமை நவிலப்பட்டுள்ளது. பொன், புகழ், உள்ளிட்ட அனைத்தையும் பெற்று, மக்கட் செல்வத்தைப் பெறவில்லையெனில் எதையும் பெற்று பயனில்லை என்பதை நளவெண்பா சுட்டுகிறது. இதே கருத்தை ஒட்டியே,

***“படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்***
***உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்***
***குறுகுறு நடந்து சிறுகை நீட்டி***
***இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்***
***நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்***
***மயக்குறு மக்களை இல்லோர்க்குப்***
***பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே.”*** [115]

பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடல் சுட்டும். எனவே தான் வள்ளுவரும்,

***“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த***
***மக்கட்பேறு அல்ல பிற”*** [116]

என்ற வரிகளும் மக்கட் செல்வத்தைப் புகழ்ந்துள்ளமை உணரத்தக்கது. இவ்வாறு மக்கட் செல்வம் குறித்து நம் இலக்கியங்கள் பல்வேறு பாடல்களால் போற்றி நிற்கின்றன. மேலும், இன்று குழந்தைச் செல்வம் பெறுதல் என்பதே அறை கூவலாக இருக்கிறது. தவறான உணவுப் பழக்கங்கள், உடை உள்ளிட்ட பல குழந்தையின்மைக்குக் காரணமாக அமைகின்றன. இவற்றினால் பல்வேறு குழந்தைப் பிறப்புக்கான மருத்துவமனைகள் தோன்றி அவை மக்களிடமிருந்து பணத்தினை உறிஞ்சுகின்றன. மேலும், பல்வேறு பொருளாதார நெருக்கடிகளால் குழந்தைகளைப் பராமரிக்க முடியாமல் பெண்களும் அவதியுறுகின்றனர். குழந்தைகளை வளர்ப்பது குறித்துப் பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. பத்துக் குழந்தைகளைப் பெற்று நன்முறையில் வளர்த்து பட்டம் பதவிகளை வாங்கித் தந்த நிலை மாறி இன்று ஒரே குழந்தையைப் பெற்று உயிரைக் கொடுத்து வளர்த்து, அவர்களை ஆளாக்குதல் என்பது உலகின் மிகப்பெரிய சவாலாக விளங்கி வருகிறது. மேலும், அக்காலத்தில் குழந்தைகள் பல குழந்தைகளோடு இணைந்து பல்வேறு விளையாட்டுகளை விளையாடின. அதன் மூலமாகவே அவை வாழ்க்கைக் கல்வியைக் கற்றுக்கொண்டன. சான்றாகத் தாயம், பல்லாங்குழி போன்ற விளையாட்டை விளையாடுவதன் மூலம் குழந்தைகள் கூட்டல் உள்ளிட்ட கணிதங்களைக் கற்றுக்கொள்கின்றன. மேலும், கபடி உள்ளிட்ட விளையாட்டுக்கள் குழந்தைகளின் உடலைப் பேண முடிகிறது. மேலும், சிறு குழந்தைகளிடம் பப்பு கடை என்ற விளையாட்டைச் சிறு குழந்தையாய் இருக்கும் போது கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவ்விளையாட்டு குழந்தைகளிடம் பகிர்ந்து கொடுக்கும் பண்பினை வளர்க்கிறது. ஆனால் இன்று இதற்கு வாய்ப்பே இல்லை. குழந்தை வளர்ப்பு என்பதே மிகப்பெரிய சவாலாக வளர்ந்து வருகிறது.

***தமிழர் தம் கலையுணர்வு***

சங்ககாலத் தமிழர்கள் தம் வாழ்வை மிகவும் இரசித்துக் கொண்டாடியவர்கள். மகிழ்வான பல தருணங்கள் அவர்களுடைய வாழ்வினில் இருந்தமையைச் சங்க இலக்கியம் காட்சிப்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.

***“குக்கூ வென்றது கோழி அதன்எதிர்***
***துட்கென் றன்றென் தூய நெஞ்சம்***
***தோடோய் காதலர்ப் பிரிக்கும்***
***வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே.”*** [117]

*அள்ளூர் நன்முல்லையாரின் இப்பாடல் கவிஞர்களால் கொண்டாடப்படும் பாடலாக உள்ளது. கவிஞர்களால் வைகறைப் பொழுதைப் பலவிதமாக பாடியிருக்க, இவர் வைகறைப் பொழுது வந்தவுடன் கோழிக் கூவும் சத்தம் கேட்ட தலைவியின் இதயம் துணுக்குறுகிறதாம். தலைவி தலைவனைப் பிரிய வேண்டுமே என்று தலைவன் மீதான அன்பை வெளிப்படுத்திய தலைவியை ஆசிரியர் படைத்துள்ள விதம் பாராட்டுக்குரியது.*

*இவ்வாறு சிறு சிறு செயல்களையும் இரசித்து ருசித்துள்ளனர் நம் முன்னோர் எனில் அவர்களுடைய ஒவ்வொரு செயலையும் நோக்கும் போது அவர்கள் எவ்வாறு வாழ்ந்திருப்பர் என்று எண்ணிப் பெருமிதமடைகிறது இதயம்.*

***கட்டடக்கலை***

*சங்க காலத்திலேயே கலைகளில் சிறந்த கலையாகக் கட்டடக்கலை உயர்ந்திருந்தது நோக்கத்தக்கது. மாளிகை, கோபுரம், மணிமண்டபம் ஆகியன கட்டடங்களுக்கான வேறு பெயர்களாகும்.*

*வேந்தன் இருந்த உயர்ந்த கட்டடம் முதலில் “கோபுரம்” எனப்பட்டது. எங்கெல்லாம் உயர்ந்த கோபுரங்கள் உள்ளனவோ அந்நகரங்களின் பெயரின் இறுதியில் புரம் என்று முடிவதாக அறிஞர்கள் கூறுவதுண்டு. சமயபுரம், காஞ்சிபுரம், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற நகரங்களை இவண் சுட்டத்தக்கது.*

***“தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே”*** [118]

***“தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்”***
***“மகிழ்நன் மறுகின் மதுரை”*** [119]

*மாடங்கள் மதுரையில் அதிகம் இருந்தமையை,*

***“மாட மதுரை”*** [120]

***“மாடமலி மறுகிற் கூடல்”*** [121]

***“மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்”*** [122]

***“நான மாடக் கூடல் மகளிரும்”*** [123]

*இவ்வாறான சான்றுகளில் இருந்து உயர்ந்த கட்டடங்கள் இருந்தமை தெளிவாகிறது. மேலும் மதில்,எயில், இஞ்சி, சோ என்ற நால் வகையாக அரண்கள் இருந்தன. இன்றும் கூட ஆங்கிலேயர் தமிழகத்தை ஆண்டபோது கல்லணை கட்டிய முறை கண்டு வியந்து*

மிகச் சிறந்த அமைப்பு எனக் கூறி, அதனைப் பின்பற்றி அணைகள் கட்டியமை நம்முன்னோர் சிறப்பை உணர்த்தும்.

**மொழி**

இலக்கணம், மொழி,அறம், பொருள், இன்பம், மறை, பட்டாங்க, அளவை, ஏரணம், வானநூல், கணிய நூல், கணக்கு நூல், உடற்குறி நூல், புள் நூல், கனா நூல், உளப்பொருளியல், உளநூல், நில நூல், நீர்நூல் என்று பல வகைகளில் நூல்கள் அமைந்திருந்தன.

இவ்வாறு தமிழர்கள் அனைத்து துறைகளிலும் உயர்ந்து துறைபோகியவர்களாக இருந்தமை மேற்கண்ட சான்று முறைகளில் அறிய ஒண்ணும். இவற்றுள் கணிதநூல் என்பது தமிழரின் நுண்மாண் நுழை புலத்திற்குச் சான்றாக இருக்கும். தமிழ் எண்கள் பின்வருமாறு பயன்பாட்டில் இருந்தன.

இலக்கங்கள் இரண்டு வகைப்படும்.

1. கீழ்வாய் இலக்கம்
2. மேல்வாய் இலக்கம்

| | |
|---|---|
| 6 ½ தேர்த்துகள் | - 1 நுண்மணல் |
| 100 நுண்மணல் | - 1 வெள்ளம் |
| 60 வெள்ளம் | - 1 குரல்வளைப் பிடி |
| 40 குரல் | - 1 கதிர்முனை |
| 20 கதிர்முனை | - 1 சிந்தை |
| 14 சிந்தை | - 1 நாகவிந்தம் |
| 17 நாகவிந்தம் | - 1 விந்தம் |
| 1 விந்தம் | - 1 பாகம் |
| 6 பாகம் | - 1 பந்தம் |
| 5 பந்தம் | - 1 குணம் |
| 9 குணம் | - 1 அணு |
| 7 அணு | - 1 மும்மி |
| 11 மும்மி | - 1 இம்மி |
| 21 இம்மி | - 1 கீழ்முந்திரி |
| 320 கீழ் முந்திரி | - 1 மேல்முந்திரி |
| 320 | - 1 முழு எண் |

சுருக்கமாக,

1 தேர்த்துகள் – $\frac{1}{2,3238245,3022720,0000000}$

1 கீழ் முந்திரி - $\frac{1}{102400}$

1மேல் முந்திரி - $\frac{1}{320}$

இதேப் போல கீழ்வாயிலக்கத்தை விரிவாக நோக்கினால் நமக்கு மலைப்பு ஏற்படுகிறது. மிக நுண்ணிய அறிவு பெற்றவர்களாக நம் முன்னோர்கள் இருந்துள்ளனர். இதனை, உற்றுநோக்குவோருக்கு இது புலனாகும்.

| பெயர் | - | அளவு |
|---|---|---|
| முந்திரி | - | $^1/_{320}$ |
| அரைக்காணி | - | $\frac{1}{160}$ |
| காணி | - | $^1/_{80}$ |
| அரைமா | - | $^1/_{40}$ |
| ஒருமா | - | $^1/_{20}$ |
| இருமா | - | $^1/_{10}$ |
| நான்மா | - | $^1/_5$ |
| மாகாணி வீசம் | - | $^1/_{16}$ |
| அரைக்கால் | - | $^1/_8$ |
| மூன்று வீசம் | - | $^3/_{16}$ |
| கால் | - | $^1/_4$ |
| அரை | - | $^1/_2$ |
| முக்கால் | - | $^3/_4$ |

கீழ் வாயிலக்க நூற்கணக்கு கடந்த நாற்பது (அ) ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கற்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 8 அணு | - | 1 தேர்த்துகள் |
| 8 தேர்த்துகள் | - | 1 பஞ்சிழை |
| 8 பஞ்சிழை | - | 1 மயிர் |

| | | |
|---|---|---|
| *8 மயிர்* | - | *1 நண் மணல்* |
| *8 நண் மணல்* | - | *1 கடுகு* |
| *8 கடுகு* | - | *1 நெல்* |
| *8 நெல்* | - | *1 பெரு விரல்* |
| *12 பெரு விரல்* | - | *1 சாண்* |
| *2 சாண்* | - | *1 கோல்* |
| *500 கோல்* | - | *1 கூப்பீடு* |
| *4 கூப்பீடு* | - | *1 காதம்* |

*என்றவாறு அமையும். இதில் குறிக்கப்பட்டுள்ள சாண், முழம், கூப்பீடு, காதம், ஆகியவை இன்றும் நம் முன்னோர்களால் குறிக்கப்பட்டுள்ளன.*

*மேல் வாயிலக்கம்*

*தொல்காப்பியத்தில் பல வகையான எண்ணுப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதனை,*

***"ஐ அல் பல் என வரூம் இறுதி***
***அல்பெயர் எண்ணினும் ஆயில் நிலையும்"*** [124]

*என்ற செய்யுளின் வழி அறியலாம். இதில் இடம்பெறும் ஐ,அம்,பல் எனக் குறிப்பிடும் சொற்கள்,*

***"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்***
***மையில் கமலமும் வெள்ளமும்"*** [125]

*என்ற பரிபாடலில் குறிப்பிட்டுள்ளமை உணரத்தக்கது.*

| | | |
|---|---|---|
| ***கும்பம்*** | **-** | ***ஆயிரங்கோடி*** |
| ***கணிதம்*** | **-** | ***பத்தாயிரம் கோடி*** |
| ***தாமரை*** | **-** | ***கோடா கோடி*** |
| ***சங்கம்*** | **-** | ***பத்துக் கோடா கோடி*** |
| ***வாரணம்*** | **-** | ***நூறு கோடா கோடி*** |
| ***பரதம்*** | **-** | ***இலக்கம் கோடிக் கோடா கோடி*** |
| ***பரதம்*** | **-** | ***1000000000000000000000000*** |
| | | ***(24 சுழியங்கள்)*** |

*என்றவாறு பல கோடிகளுக்கும் தமிழில் சொற்களும், கணிதக் கூறுகளும் இருந்தமையை அறியலாம். இவை குறித்தும் இந்த கீழ்வாயிலக்கச் சொல் குறித்தும் தம்முடைய அறுவகை இலக்கணத்தில் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிட்டுள்ளமையை இவண் ஒப்பு நோக்கலாம்.*

**புறத்திணையின் நட்பும் மனிதநேயமும்**

பண்பாட்டு வளர்ச்சியில் நட்புக்கென்று ஒரு தனித்துவம் இன்றுவரையிலும் காணப்படுகிறது. நட்பு என்பது இருவர் உறவுக்கொள்ளும் மனம் ஒத்த உணர்வாகும். இந்த நட்பின் அடிப்படையில் தான் உறவானது மேம்பாடு அடைகிறது. மனிதனின் மனதுக்கு அன்பும், அமைதியும் ஆறுதலும் கொடுப்பது நட்பு ஆகும். மனித நேயத்துக்கும் வழிகாட்டியாகவும் இது அமைகிறது. ஒரு தனி மனிதனைச் சமுதாயத்தோடு பிணைத்து வைப்பதற்கும் நட்பே முன்னோடியாக உள்ளது. சமுதாயத்தில் ஒற்றுமை, அமைதி போன்றவைகள் நிலைபெற நட்பே அவசியமாக உள்ளது.

நட்பின் சிறப்பினைக் கருதியே திருவள்ளுவர் நட்பு, நட்பாராய்தல், பழமை, தீ நட்பு, கூடா நட்பு, என ஐந்து அதிகாரங்களை வகுத்துள்ளார். நட்பு என்பது இரு உள்ளங்களுக்கிடையே பாலமாக விளங்குகிறது. எனவே தான் நட்புச் செய்வது என்பது நகுதல் பொருட்டு அல்லாது அது மிகுதிக்கண் மேற்சென்று இடித்தார் பொருட்டு என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். முகம் மட்டும் மலரும் வகையில் நட்புக்கொள்வது நட்பாகாது அகமும் முகமும் ஒரு சேர மலர்வதே நல்ல நட்பு என்பதனை,

> **“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
> **அகநக நட்பது நட்பு”** [126]

வெளியே முகமலர்ச்சியுடன் பழகுவது மட்டுமே நட்பு ஆகாது மாறாக முகத்துடன் அகமாகிய மனமும் மலருமாறு நட்புக் கொள்வதே சிறந்த நட்பாகும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இவ்வகையில் உணர்ச்சியொத்த அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் நட்புக் கொண்டதனைப் பெரியபுராணம் பின்வரும் பாடல் மூலம் குறிப்பிடுகிறது.

> **“காண்டகை இன்றியுமுன் கலந்தபெருங் கேண்மையினார்**
> **பூண்டபெருங் காதலுடன் போனகமுங் கறியமுதும்**
> **வேண்டுவ வெவ்வேறு விதங்கள் பெற விரும்பினால்**
> **ஆண்ட அரசமுதுசெயத் திருவமுதாம் படிஅமைத்து”** [127]

என்பது அப்பாடலாகும். நட்பு என்பது ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழும் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதை,

> **“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
> **இடுக்கண் களைவதாம் நட்பு”** [128]

உடுத்தியுள்ள ஆடையானது நழுவும் போது கையானது உடனே சென்று ஆடையைச் சரிசெய்யும் அதைப்போன்று தன் நண்பனுக்குத் துன்பம் ஏற்படும் போது துடித்தெழுந்து அந்த துன்பத்தைப் போக்குவதே உயர்வான நட்பாகும்.

நண்பன் தீய வழியில் செல்லும் போது அவனைத்தடுத்து நல்ல வழியில் நடத்த வேண்டும். நண்பனுக்கு ஒரு இன்னல் (துன்பம்) ஏற்படும்போது அவனுடனிருந்து தானும் பங்குகொண்டு ஆறுதல் கூறவேண்டும்.

ஒத்த உணர்வினால் இருவர் மேற்கொண்ட நட்பின் சிறப்பானது நல்ல புத்தகங்களைப் படிக்கும் போதெல்லாம் அது கற்பவருக்கு இன்பத்தைக் கொடுக்கும் அது போல பழகும் தோறும் இன்பத்தைத் தரக் கூடிய சிறப்பினை உடையது என்பதை

**"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு"** [129]

என்ற குறட்பா மூலம் அறியமுடிகிறது. காலத்ததைக் கடந்தும், தூரத்தை அறியாமலும் நட்பு தோன்றி வளரும். முக நட்புக்கும், அக நட்புக்கும் வேறுபாடு உள்ளது. முகத்தளவில் மட்டும் கொள்ளும் நட்பு என்பது நிலைப்பதில்லை. வெளி வேடம் போடாமல் உயிரோடு உயிர் பிணைகிற அளவில் அன்பால் இணைவதே உண்மையான நட்பாகும். நல்லவர்களோடு ஏற்பட்ட நட்பானது நிலவு போன்று வளரும், தீயோருடன் கொள்ளும் நட்பானது தீமையிலே முடியும் என்பது முன்னோர்களின் கருத்தாகும்.

தன் நண்பன் தீய வழியில் செல்லும் போது அவனை உரிமையோடு திருத்தி நல்லனவற்றை எடுத்துக்கூறி அவனை நல்வழியில் நடத்திச் செல்வது நண்பனின் கடமை ஆகும். கூடவே இருந்து கொண்டு சிரித்துப் பேசி உயிரைக் கொல்லும் நஞ்சுத்தன்மைக் கொண்ட நட்பினைக் கனவில் கூட நினைப்பது அழிவினையேத் தரும். இதனை,

**"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு "** [130]

**"அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு."** [131]

என்ற குறட்பா மூலம் வள்ளுவர் கூறுகின்றார். நன்றியுணர்வின் பொருட்டும் நம்பிக்கையின் காரணமாகவும் நட்பானது சிறக்கின்றது. நட்புக்காக உயிரை விடத் துணிவதும், எதையும் எதிர்கொள்ள துணிவதற்கும் ஓர் ஒப்பற்ற அன்பு தான் காரணம் இவ்வுண்மையை,

**"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு"** [132]

எனும் குறளானது புலப்படுத்துகிறது. தன்னலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நட்புப் பாராட்டி நடிப்பவர்கள் உண்மையான நண்பர்கள் அல்ல, அவர்கள் தங்களுக்கு நன்மைக் கிடைக்கும் வரையில் தான் நண்பர்களாக இருப்பர். தந்நலம் நிறைவேறாத போது நட்பினைக் கைவிடுவர். இத்தன்மை கொண்டோருடன் நட்புக் கொள்ளக் கூடாது.

நண்பனுக்கு உதவி செய்தல் தன்னுடையக் கடமை என்று நினைப்பவரோடு ஏற்படுகின்ற நட்பு தான் நீடித்து வரக்கூடியது முடிவில்லாதது இதனை,

**"சிறப்பு செய்து உழையராப் புகழ்பு ஏற்றி மற்றவர்**
**புறக்கொடையே பழிதூற்றம் புல்லியார் தொடர்புபோல்"** [133]

எனும் பாடலடியின் மூலம் உணரமுடிகிறது.

ஒருவர் தன்னோடு இருக்கும் போது அவரைக் கொண்டாடுவதும் அவர்கள் அப்பாற் போனபின் அவர்களைப் பழித்துப் பேசுபவர்கள் அற்பர்கள் என்பதனை, இந்தப் பாடலடியின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஒருவரோடு ஒருவர் நண்பர்களாக இருக்கும் போது ஒருவருடைய இரகசியங்களை எல்லாம் தெரிந்துக் கொள்வார்கள். நட்பானது பிரியும் நிலைவரும் போது அவர்களது இரகசியங்களை பிறரிடம் கூறுவார்கள். இவர்கள் அரக்கர்கள் பெருந்தன்மை அற்றவர்கள் இவர்களுடன் நட்புக்கொள்ளுவது ஆபத்தானது. இதனை,

**"பொருந்திய கேண்மையின் மறையுணர்ந்து அம்மறை**
**புரிந்தக்கால் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்"** [134]

எனும் கலித்தொகைப் பாடலடியின் மூலம் உணரமுடிகிறது. புறக்கூறுபவன், தன்னலமே குறிக்கோளாக உடையவன். இரகசியத்தை வெளிப்படுத்துபவன் ஆகிய தன்மையுடையவர்களுடன் நட்புகொள்ளக்கூடாது. இவர்கள் நட்புகொள்ளத் தகுதியற்றவர்கள் ஆவர்.

**பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும்**

கோப்பெருஞ்சோழன் மன்னன் மட்டுமல்லாது தமிழ்ப்புலவனாகவும் திகழ்ந்தான். புலவர்களிடம் அன்பும், மதிப்பான நட்பும் கொண்டவன். பிசிராந்தையார் பாண்டிய நாட்டினைச் சார்ந்தவர். அரசவைக் கவிஞராகவும் விளங்கியவர். சோழனும், புலவரும் ஒருவரை ஒருவர் ஒருமுறைகூடக் கண்டதில்லை. வேறு எந்த ஒரு தொடர்பும் கொள்ளவில்லை. ஆயினும் இருவரும் ஒருவரை ஒருவர் கேள்விப்பட்டதன் மூலமும் ஒத்த மன உணர்வினாலும் நட்புக் கொண்டனர் உண்மையான நட்புக்கு ஒத்த உணர்வே போதும் என்பதனை,

**"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்"** [135]

எனும் வள்ளுவரின் குறளுக்கு ஏற்றவகையில் ஒத்த அன்பினாலும், மனஉணர்வினாலும் இந்த இருவரும் நட்பு பூண்டனர். ஒருவரை ஒருவர் காணாமல் நட்புக் கொண்டு உலகிற்கு உயர்ந்தோர் நட்புறவினையும், தமிழர்களின் நட்பின் மதிப்பினையும், வெளிப்படுத்தினர். பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனின் வள்ளல் தன்மையினையும், நட்புறவினையும் கூறி அவனே தனக்கு கோமான் ஆவான் நண்பனும் ஆவான் என்று கூறுகிறார்.

குற்றமற்ற நட்புணர்வோடு வாழ்பவன் உறையூர் என்னும் படைவீட்டிடத்திலே பசிக்குப் பகைவனாகப் பாடிவரும் பாடினிக்கும் பாணருக்கும் வாரி வழங்குபவன் அப்படிப்பட்ட சிறப்பினை உடைய தலைவன் என் நண்பன் என்று பின்வாறு கூறுகிறார் பிசிராந்தையார்.

***“யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்***
***பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்***
***கோழி யோனே கோப்பெருஞ் சோழன்***
***பொத்தி னண்பிற் பொத்தியொடு கெழீஇ***
***வாயார் பெருநகை வைகலு நக்கே”*** [136]

என்ற பாடலின் வழி உணரமுடிகிறது. பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனின் பெருமைகளையும், புகழையும் கேள்விப்பட்டு நட்பு கொண்டு, அவனைப் பார்க்க வருகிறார். ஆனால் பார்க்க முடியவில்லை. ஆனாலும் அன்னச் சேவலின் மூலம் கோப்பெருஞ்சோழனைக் காணுகின்ற ஆவலைக் கூறுகிறார்.

பிசிராந்தையார் மீது கோப்பெருஞ்சோழன் வைத்திருந்த அன்பும் ஆழமும் புலப்படுகிறது. இதனை,

***“அன்னச் சேவல் ! அன்னச் சேவல் !***
***……………………………………………***
***உயர் நிலை மாடத்துக், குறும்பறை அசைஇ,***
***வாயில் விடாது கோயில் புக்கு, எம்***
***பெருங் கோக் கிள்ளி கேட்க, இரும்பிசிர்***
***ஆந்தை அடியுறை எனினே, மாண்ட நின்***
***இன்புறு பேடை அணியத், தன்***
***அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே.*** [137]

என்று பிசிராந்தையார் அன்னச்சேவலிடம் தன் விருப்பத்தைப் புலப்படுத்துகிறார். கோப்பெருஞ்சோழனின் மகன்கள் தன் தந்தையின் மீது போர்த் தொடுத்தனர். இதனால் மனம் வருந்திய சோழன் வடக்கிருந்து உயிர் துறக்க எண்ணியவிடத்து தன் நண்பரான பிசிராந்தையாரைக் காண விரும்புகிறான் எனினும் அவர் வரும் வரை தான் உயிரோடு இருக்க மாட்டோம் என்று கருதி, தான் உயிர் விடும் இடத்துக்குப் பக்கத்திலே பிசிராந்தையாருக்கு ஒரு இடம் ஒதுக்குமாறு கூறுகின்றான். இவ்வுண்மையை,

***“தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்***
***பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே;***
***செல்வக் காலை நிற்பினும்,***
***அல்லற் காலை நில்லலன் மன்னே.”*** [138]

என்ற பாடலில், ‘தென்னகத்துப் பொதியமலையிலுள்ள பாண்டிய நாட்டில் என்னை நினைத்துக் கொண்டிருப்பவனாகிய பிசிரோன் என்பவன் உற்றான், என் உயிரைத்

தன்னுயிராகக் கருதும் நட்பினால் ஒன்று கலந்தவன் ஆவான். செல்வம் நிறைந்திருக்கும் போது அவன் என்னைத் தேடி வராமல் போயிருந்தாலும், என் உயிருக்கு இன்னல் ஏற்படும்போது இங்கு வராமல் இருக்கவே மாட்டான்' என்று கோப்பெருஞ்சோழன் கூறுகிறார்.

சோழனிடம் சான்றோர்கள் பலர் பின்வருமாறு வினவுகின்றனர். கேள்விப்பட்டதன் அளவில் தானே நீங்கள் இருவரும் அறிந்துள்ளீர்கள். ஒருமுறைகூட நீங்கள் இருவரும் சந்தித்தது இல்லை. பல ஆண்டுகளால் பழகிய பழக்கமும் இல்லை. உள்ளத்தால் ஒன்றுபட்டு பழகியவர்கள் தானே, அப்படியிருக்க அவர் இங்கு வருவதாக நீங்கள் சொல்வது எளிதல்ல என்றுக் கேட்கின்றார்.

***"இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;***
***புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே;***
***தன்பெயர் கிளக்கும் காலை 'என் பெயர்***
***பேதைச் சோழன்' என்னும் சிறந்த***
***காதற் கிழமையும் உடையவன்; அதன் தலை***
***இன்னதோர் காலை நில்லலன்;***
***இன்னே வருகுவன்; ஒழிக்கஅவற்கு இடமே"*** [139]

அவன் என்னை என்றும் இகழ்ந்துப் பேசாத இனிய பண்பினை உடையவன், உள்ளம் கலந்த என் நண்பன் புகழைக்கெடுக்க வரும் பொய்யான வாழ்வினை விரும்பாதவன், அவன் பெயரை சோழன் என்று சொல்லிக் கொள்ளுமளவுக்கு என் மீது பேரன்பு கொண்டவன். அப்படிப்பட்டவன் நான் துயரம் கொண்ட காலத்தில் கண்டிப்பாக வருவான். இப்போதே வருவான் எனவே எனக்குப் பக்கத்திலேயே அவனுக்கும் இடம் ஒதுக்குங்கள் என்று நட்பினால் கூறுகிறார். இதன் மூலம் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் மீது வைத்திருந்த நட்பின் உறுதியை உணர முடிகிறது.

ஒருவரை ஒருவர் பார்த்து நட்புக்கொண்டு பழகியிருந்தாலும் கூட அவர்கள் உணரமுடியாதப் பேரன்பினை ஒருவரை ஒருவர் காணாது கொண்ட நட்பின் மூலம் உணர முடிகிறது. கோப்பெருஞ்சோழன் சொன்னது போலவே பிசிராந்தையாரும் அங்கு வந்தார். அதனைக் கண்ட சான்றோர்கள் வியப்பில் மூழ்கினர். 'பொத்தியார்' என்னும் புலவர் இவ்வியப்பினை பின்வரும் பாடல் வழிப் புலப்படுத்துகிறார்.

***"வருவன்' என்ற கோனது பெருமையும்,***
***அதுபழுது இன்றி வந்தவன் அறிவும்***
***வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே;***
***அதனால், தன்கோல் இயங்காத் தேயத்து உறையும்***
***சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை***
***அன்னோனை இழந்தஇவ் வுலகம்***
***என்னா வதுகொல்? அளியது தானே"*** [140]

பெரும் சிறப்போடு வாழ்ந்த மன்னன் வடக்கிருந்து உயிர் விடத் துணிந்ததே வியப்புக்குரியது. அப்படியிருக்க பிற நாட்டில் வாழும் புலவன் புகழை மேன்மையாகக் கொண்டவன், நட்பினைப் பற்றுக் கோடாகக் கொண்டு, இந்த துயரமான நேரத்தில் அவன் வருவான் என்று மன்னன் கூறியதுப் போல வந்து நின்றது அதைவிட வியப்பினைத் தருகிறது என்று கூறுகின்றார்.

தனது ஆட்சியானது இல்லாத இடத்திலுள்ள சான்றோன் நெஞ்சில் கூட இடம்பெற்ற பெரும் புகழினையும் கோப்பெருஞ்சோழனின் நட்பும் பிசிராந்தையாரின் நட்பும் வியத்தற்கும், போற்றுதற்கும் உரியது. கோப்பெருஞ்சோழன் சொன்ன கூற்றினைப் புலவர் வந்து உண்மையாக்கியதோடு மட்டுமல்லாமல், தானும் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தார் அதனைப் பொத்தியார் பின்வருமாறு கூறுகின்றார்.

பொன், பவளம், முத்து, மாணிக்கம் என்பன ஒவ்வொன்றும் வேறு வேறு இடங்களில் கிடைப்பதாக இருந்தாலும், ஒன்றாகத் தொடுத்து கோர்வையாக்கும் போது அவை ஓரிடத்திலே அணிகலனாகச் சிறப்படைகிறது. அதே போல ஒத்த உணர்வினை உடைய சான்றோர் சான்றோர் பக்கமே சேருவர். இதனை இந்த இருவரின் நட்புத்திறத்தால் உணர முடியும் என்று கூறுகிறார். இதிலிருந்து நட்பானது உயர்வானது உண்மையானது என்றும் அழிவில்லாது உயிர்வாழ்வது என்பதை அறிய முடிகிறது.

கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் வடக்கிருந்து உயிர் துறந்தனர். இருவருக்கும் ஒரே இடத்தில் நடுகல் அமைக்கப்பட்டது. அதன் பிறகு பொத்தியாரும் வடக்கிருந்து உயிர் நீத்தார் இதனை,

**“நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்,**
**இடங் கொடுத்து அளிப்ப, மன்ற-உடம்போடு**
**இன்னுயிர் விரும்பும் கிழமைத்**
**தொன்னட் புடையார் தம்உழைச் செலினே”** [141]

எனும் பாடல்வழி அறிய முடிகிறது. சோழனின் மறைவுக்குப் பிறகு பல சான்றோரும் அவன் பால் கொண்ட நட்பின் காரணமாக தாங்களும் வடக்கிருந்து உயிர் துறந்தனர். சோழனும் - புலவரும் ஒன்றாக வாழவில்லை ஒருவரை ஒருவர் கண்டதில்லை எனினும் ஒன்றாகிப் போன உள்ளத்தால் இருவரின் நடுகல்லும் ஒன்றானது இப்படிப்பட்ட நட்பின் மேன்மையை உலகம் என்றும் உச்சரித்துக் கொண்டேயிருக்கும்.

**ஔவையாரும் - அதியமானும்**

அதியமான் ஒர் அரசன், ஔவையார் ஒரு புலவர். அதியமானைப் பல புலவர்கள் பாராட்டி பாடியுள்ளனர். ஔவையும் பல மன்னர்களைப் பாடியிருக்கிறார். ஆனால் ஔவையார் அதியமானின் மீது பாடியப் பாடல்களில் நட்பின் சால்பினையும், நன்மதிப்பினையும் காண முடிகிறது. இந்த இருவரின் நட்பானது வியப்பதற்கும், போற்றுவதற்கும் உரியதாக உள்ளது. அதியமானின் வீரத்தினையும், கொடைப் பண்பினையும் ஔவையார் பின்வருமாறு போற்றுகின்றார்.

*“மறம்புலி உடலின் மான்கணம் உளவோ? மருளின விசும்பின் மாதிரத்து ஈண்டிய இருளும் உண்டோ, ஞாயிறு சினவின்”*[142] *புலியானது சீறினால் எதிரே மான் நிற்காது, சூரியன் எழும் போது இருளானது ஓடிவிடும். அது போல அதியமானின் கோபம் கொண்ட தோற்றத்தினைப் பகைவர் எதிரே நின்று பார்க்கமுடியாமல் ஓடுவார்கள் என்று கூறுவதிலிருந்து அதியமான் மீது ஔவையார் வைத்திருந்த நம்பிக்கையும், நட்பின் மதிப்பையும் உணர முடிகிறது.*

*அதியமான் கிடைப்பதற்கு எளிதில் இயலாத, உண்டால் நீண்ட நாள் உயிர் வாழக் கூடிய நெல்லிக்கனியை மலைச் சரிவிலே கடுமையான முயற்சியுடன் பெற்றும் அதனைத் தான் உண்பதை விட, தனது நண்பன் ஔவையார் உண்டால் தமிழானது வாழும் எனக்கருதி கொடுக்கின்றான். தன்னைவிட தன் நண்பரே நீடு வாழவேண்டும் எனக்கருதும் அதியமானின் நட்புத்திறனைப் பின்வரும் பாடலின் மூலம் ஔவையார் உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.*

***“நீல மணிமிடற்று ஒருவன் போல***
***மன்னுக, பெரும! நீயே தொல் நிலைப்***
***பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட***
***சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,***
***ஆதல் நின் அகத்து அடக்கிச்”*** [143]

*சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே.எனது சாவானது ஒழியுமாறு, கிடைப்பதற்கரிய நெல்லிக் கனியை அளித்தவனே, பெருமானே, நீலமணிமிடற்று இறைவனைப் போல நீயும் நிலைப்பெற்று வாழ்வாயாக என்று பாடியுள்ளார்.*

*ஔவையார் அதியமானைவிட வயதில் மூத்தவர் அதியமான் அரசனாக இருந்த போதிலும் அவனைத் தனது தந்தையாகக் கருதினார். ஔவையார், இதனை*

***“யாழொடும் கொள்ளா; பொழுதொடும் புணரா;***
***பொருள்அறி வாரா; ஆயினும், தந்தையர்க்கு***
***அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை;***
***என்வாய்ச் சொல்லும் அன்ன; ஒன்னார்***
***கடிமதில் அரண்பல கடந்த***
***நெடுமான் அஞ்சி! நீஅருளல் மாறே.”*** [144]

*குழந்தைகளின் மழலைச் சொல்லானது யாழின் இசையைவிட இனியது, பொருளை உணரமுடியாது எனினும் அச்சொற்கள் தந்தையருக்கு அருள் கூறுதல் போல இருக்கும் அதேப் போன்று தான் நெடுமான் அஞ்சியும் எனக்கு அருள் புரிகின்றான் என்று ஔவையார் கூறுவதிலிருந்து அதியமானைத் தந்தையாக தன்னைக் குழந்தையாகவும் நினைத்து நட்புக் கொண்டதனை அறிய முடிகிறது. அதியமானின் பண்பு நலனானது*

*தன்னை நாடி வந்த தலைமக்கள் பலநாட்கள் தங்கினாலும் அவர்களை உபசரிக்கும் முறையானது முதல் நாள் இருந்ததுப் போலவே, அனைத்து நாளும் இருக்கும் என்பதை,*

***"ஒருநாள் செல்லலம்; இருநாட் செல்லலம்;***
***பன்னாள் பயின்று பலரொடு செல்லினும்***
***தலைநாள் போன்ற விருப்பினன்"*** [145]

*என்ற பாடல் வழி அறிய முடிகிறது. அதியமான் இறந்தபிறகு அவனது உடலினை எரியூட்டுகின்றனர். அதனைக் கண்டு ஔவையார் கையறு நிலையில் உள்ளமானது கசிந்து உருக கண்ணீரானது அருவியாகப் பெருக பின்வருமாறு பாடிப் புலம்புகிறார்.*

***"எறி புனக் குறவன் குறையல் அன்ன***
***கரி புற விறகின் ஈம ஒள் அழல்,***
***குறுகினும் குறுகுக; குறுகாது சென்று,***
***விசும்புற நீளினும் நீள்க பசுங் கதிர்த்***
***திங்கள் அன்ன வெண்குடை***
***ஒண் ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே"*** [146]

*குறவர்கள் வெட்டிக் கொண்டு வந்த விறகினால் அடுக்கப்பட்ட ஈமப்படுக்கையில் அவனது உடலானது உள்ளது. அந்த உடலினைத் தீயானது சுட்டாலும், சுடாமல் ஆகாயத்தின் கண் போனாலும் போகட்டும் நிலவினைப் போன்ற வெண்கொற்றக் குடையினை உடையவனும், சூரியனுக்கு ஒப்பானவனுமாகிய அவனது புகழ் என்றும் அழியாது என்று கூறுகிறார். உடலினை விட்டு உயிர் பிரிவதை விட நட்புக்கொண்டவர் ஒருவரை ஒருவர் பிரியும் நேரம் மிகக் கொடுமையானது. பிரிந்தவர்கள் கூட எப்போதாவது சந்திக்க வாய்ப்புள்ளது. ஆனால் இறந்தவர்களை மீண்டும் எங்கே? எப்போது? காண முடியும் ஒரு போதும் முடியாது. அத்தகைய சோகத்தை இப்பாடலின் மூலம் அறிய முடிகிறது.*

*அதியமான் இறந்தபிறகு ஔவையார் இனி பாடுவதும் இல்லை. காரணம் பாடுவருக்கு ஒன்று ஈகுநரும் (கொடை கொடுப்பவரும்) இல்லை என்று கூறுவதிலிருந்து அதியமான் புலவர்களை ஆதரித்த திறமையை உணர முடிகிறது. இதனை*

***"சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே;***
***பெரியகட் பெறினே***
***யாம்பாடத் தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே;***
***சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே;***
***பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே;***
***என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே;***
***அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தான்நிற்கும் மன்னே;***
***நரந்தம் நாறும் தன் கையால்***
***புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே"*** [147]

*என்னும் பாடல், சிறிய அளவில் கிடைத்த கள்ளினை எனக்கு அளித்து வருவான். பெரிய அளவில் கள் கிடைத்தாலோ யாம் பாட எமக்கும் அளித்து அவனும் உண்பான். எலும்பும், தசையும் கொண்ட மாமிச உணவையெல்லாம் எனக்கு அளித்துவிட்டு அம்பும், வேலும் நுழையும் போர்க்களத்தில் எல்லாம் தானே முன் நிற்பவன் நரந்தம் பூவின் மணம் போல மணம் வீசும் தனது கைகளினால் புலால் நாறும் எனது தலையினை அன்போடு தடவி மகிழ்வான். எனக்கு தந்தையாக இருந்து காத்தவன் எங்கே உள்ளான்? என்ற அதியமான் தன் மீது கொண்டிருந்த நட்பினையும் அன்பினையும், தம்மை ஆதரித்த முறையினையும் உபசரித்த தன்மையினையும் நினைத்து நினைத்து வேதனைப்படுவதைக் காட்டுகின்றது. அதியமான் இறந்த பின்பு தானும் உயிர் வாழ விரும்பாது மனம் நொந்துப் புலம்புகிறார் இதனை,*

***“இல்லா கியரோ, காலை மாலை!***
***அல்லா கியர், யான் வாழும் நாளே!***
***நடுகல் பீலி சூட்டி, நார்அரி***
***சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லொ-***
***கோடு உயர் பிறங்குமலை கெழீஇய***
***நாடு உடன் கொடுப்புவும் கொள்ளாதோனே?”*** [148]

*அதியமான் கொடைப்பண்பு மிகுந்தவன். நல்ல நட்பினைக் கொண்டவன். அவனிடம் நாட்டினையும் மலையினையும் கொடுத்தாலும். கூட அவன் அதனை ஏற்கமாட்டான். அப்படிப்பட்டவன் இறந்த பின்பு அவனுக்கு நடுகல்லை நாட்டி அதற்குப் பீலியுஞ் சூட்டி மதுவையும் வைத்துப் படைத்தால் அதனை அவன் ஏற்பானோ?.. ஏற்கமாட்டான். அவனே மறைந்து விட்டான். இனி காலை, மாலை என்பது எனக்கில்லை என்னுடைய வாழ்நாளும் இன்றோடு மறையட்டும் என்று ஔவையார் பாடுவதிலிருந்து அதியமான் மீது அவர் கொண்டிருந்த நட்பின் மதிப்பினை உணரமுடிகிறது.*

*ஔவையாரும் அதியமானும் நட்புக் கொண்டதால் தமிழும் வளர்ந்தது. வாழ்ந்தது கிடைப்பதற்கு அரிய பொருள் கிடைத்தாலும் அதனை தான் மட்டும் வைத்துக் கொள்ளாது தன் நண்பனிடம் கொடுக்கும் அதியமானின் நட்பின் சால்பும் அன்பின் திறமும் போற்றுவதற்கு உரியது இவர்களின் நட்புத் திறனானது என்றும் புகழ்ந்துப் போற்றக் கூடியது ஆகும்.*

***பாரியும் - கபிலரும்***

*பாரி பறம்பு நாட்டினை ஆண்டவன், கடையேழு வள்ளல்களில் ஒருவன். இல்லை என்று வந்தவர்களுக்கு இல்லை என்று கூறுவதை அறியாதவன். பாரி பல புலவர்களால் பாடப்பட்டவன். கபிலரும் பாரியும் சிறந்த நண்பர்களாக இருந்ததோடு மட்டும் அல்லாமல் நல்ல சான்றோர்களாகவும் விளங்கினர். பாரியின் மீது கபிலர் கொண்டிருந்த மதிப்பினைப் பின்வரும் பாடல் மூலம் அறியமுடிகிறது.*

***"பாரி பாரி என்றுபல ஏத்தி,***
***ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்:***
***பாரி ஒருவனும் அல்லன்;***
***மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே"***[149]

*கொடுப்பதற்குப் பாரி, பாரி என்று பெருமைப் பேசுகிறீர்களே! பாரி மட்டுமல்ல கொடுப்பதற்கு மாரியும் உண்டு என்று கூறுகிறார். இதிலிருந்து பாரிக்கு நிகர் இவ்வுலகத்தில் மாரியைத் தவிர எவரும் இல்லை. எதுவும் இல்லை என்று கூறுவதிலிருந்து பாரியின் மீது கபிலர் கொண்டிருந்த மதிப்பினை உணர முடிகிறது.*

*மூவேந்தர்களும் பாரியை எதிர்த்துப் போரிட வருகின்றனர் அப்போது கபிலர் அவர்களிடம் பாரியின் தன்மையினைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்.*

*பெரும்படையினைக் கொண்ட நீங்கள் மூவரும் பாரியை வென்று பறம்பு மலையினைக் கைப்பற்ற உங்களால் இயலாது. முந்நூறு ஊர்களை உடைய இம்மலையின் ஒவ்வொரு ஊர்களையும் பரிசிலர் பெற்றுச் சென்று விட்டனர். நீங்களும் படையெடுத்து வராமல் பாடி வந்தால் நானும் உள்ளேன். பாரியின் மலையும் இருக்கிறது என்கிறார். தன்னையும் பாரியின் செல்வமாகக் கூறுகின்றார் புலவர். உள்ளத்தாலும் பிரியாததது இவர்களுடைய நட்புணர்வாகும்.*

***"யாமும் பாரியும் உளமே;***
***குன்றும் உண்டு; நீர் பாடினிர் செலினே."*** [150]

*என்று கபிலர் மூவேந்தர்களையும் நோக்கி சொல்கின்றார். பாரி இறந்த பின்பு கபிலர் பாரி மகளிருக்குத் தந்தை என்ற இடத்திலிருந்து ஆறுதல் கூறுகிறார். நின் மகளிருக்கு ஏற்ற கணவனை எங்குத் தேடுவேன் என்று வருந்திக் கூறி பாரி மலையின் சிறப்பினையும் அவன் இறப்புக்குப் பின் ஏற்பட்ட துன்பங்களையும் நினைத்து வருந்துகிறார். கபிலரின் மனம்பட்ட துயரத்தைப் பின்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது.*

***"மட்டு வாய் திறப்பவும், மை விடை வீழ்ப்பவும்,***
***அட்டு ஆன்று ஆனாக் கொழுந் துவை ஊன் சோறும்***
***பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி,***
***நட்டனை மன்னோ, முன்னே; இனியே,***
***பாரி மாய்ந்தெனக், கலங்கிக் கையற்று,***
***நீர் வார் கண்ணேம் தொழுது நிற் பழிச்சிச்***
***சேறும் - வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!***
***கோல் திரள் முன்கைக் குறுந் தொடி மகளிர்***
***நாறு இருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே".***[151]

*பாரி உயிருடன் இருந்த போது தன்னை நாடி வந்தவர்களுக்கு ஊனும் சோறும் கொடுத்து உபசரித்தான் என்பதை இப்பாடல் வழி அறியலாம். பாரி இறந்த பின் அவனுடைய*

*மகளிரைத் தன் மகளிராக ஏற்று அவர்களுக்கு மணம் செய்து வைப்பது தன் கடமை என்று கருதுவதிலிருந்து கபிலர் பாரியின் மீது கொண்டிருந்த நட்பின் நன்றியுணர்வையும் உரிமையையும் உணர முடிகிறது.*

*பாரியின் மறைவுக்குப் பிறகு அந்த மலையினைப் பகைவர்கள் கைப்பற்றினர். கபிலரும் பாரி மகளிரும் அங்கிருந்து வெளியே செல்லும் போது கபிலர் பாடிய பாடலானது அம்மலையின் பெருமையினை விளக்குவதாகவும், பாரி பகைவருக்கு இன்னாதவனாகவும் தன் போன்ற புலவர்களுக்கு இனியவனாகவும் இருந்தப் பண்பினை விளக்குவதாக உள்ளது,*

***“ஒரு சார் அருவி ஆர்ப்ப ஒரு சார்***
***பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்***
***வாக்க உக்க தேக் கட் தேறல்***
***கல் அலைத்து ஒழுகும் மன்னே பல்வேல்***
***அண்ணல் யானை வேந்தர்க்***
***இன்னான் ஆகிய இனியோன் குன்றே”*** [152]

*பாரி பகைவருக்குத் தான் இன்னாதவன். என் போன்ற புலவர்களுக்கு என்றும் நன்மைசெய்பவன். பாரியின் பறம்பு மலையானது ஒரு பக்கம் அருவிகள் எழுப்பும் இசையோடு நிரம்பி வழியும். மற்றொரு பக்கத்தில் பாணர்கள் ஏந்திய கலத்தில் மது நிரம்பி வழியும் தரையில் சிந்திய மதுவானது கற்களையும் உருட்டிக் கொண்டு ஓடிவரும் மலையே இப்போது என் கண்பார்வையிலிருந்து மறைந்து போகிறாயே என்று வருந்திக் கூறுவதிலிருந்து பாரியிடம் கொண்டிருந்த நட்பானதுப் புலப்படுகிறது.*

*கபிலர் துறவு வாழ்வினை மேற்கொண்டவர். எனினும் தன் நண்பனது மகளிரைத் தனது மகளிராகக் கருதி அவர்களை மணந்து கொள்க என்று விச்சைக்கோனைப் பின்வருமாறு வேண்டுகிறார்.*

*மலைவளம் மிக்க வெற்பனே நெடிய வேலினையும், கொல்லுகின்ற வாளையையும் உடையவனே, விச்சைக்கோவே எம் தோழன் பாரி என்பவன் கொடி முல்லையானது பாடிப் பரிசிலைக் கேட்காவிட்டாலும் அதற்கு தன் தேரினையேப் பரிசாக அளித்தவன் அவர்கள் பாரியின் மகளிர் நானோ ஒரு பரிசிலன் மேலும் ஒரு அந்தணன் நீயோ பகைவரை வென்று தாழ்விக்கும் வாள் வலிமையை கொண்டவன். அதனால் அடங்கா மன்னரை அடக்கும் வன்மையும் மடங்காத வினைகளையும் உடைய நாட்டின் தலைவன் நீ, நான் இவர்களை உனக்குத் தருகின்றேன் நீ மணம் புரிந்து இனிதே வாழ்வாயாக என்று வேண்டுகிறார்.*

*விச்சிக்கோவோ, மூவேந்தருக்கும் பயந்து அந்த மகளிரை ஏற்க மறுத்துவிட்டான். கபிலர் பாரி வள்ளலின் தகுதிக்கு இணையாக உள்ளவரையும் பாரிமகளிருக்கு பொருத்தமான கணவரையும் தேடித்தான் விச்சிக்கோவை கேட்கிறார். மேலும் அவனும்*

*வேளிர் குலத்தைச் சார்ந்தவன் என்பதால் ஒரே இனம், ஒரே தகுதி என்றிருப்பதால் அவனுக்கு பாரிமகளிரை மணமுடித்தால் நலம் உண்டாகும் என்ற அவனிடம் கேட்டார்.*

*மனம் நொந்த கபிலர் பாரிமகளிரை இருங்கோவேளிடம் அழைத்துக் கொண்டு சென்று அவனிடம் பின்வருமாறு வேண்டுகிறார். ஊர் முழுவதையும் இரவலர்களுக்கு வழங்கி உயர்ந்தவனும் முல்லைக்கு தேரினை வழங்கியவன் யானைப் படையை உடைய பறம்பின் தலைவன் பாரி, அவனது மகளர் அவர்கள் இவர் தந்தையின் தோழன் நான் ஆகையால் இப்போது இவர்களுக்குத் தந்தை நானே, 49 தலைமுறைகள் துவரையை ஆண்ட போர் முரசம், கொடையும் மிகுந்த வேளிர்களுள் ஒருவனே, இருங்கோவேளே! இவர்களை உனக்கு மணம் முடித்துத் தருகிறேன். மணந்துக் கொண்டு சிறப்புடன் வாழ்வாயாக என்று கூறுகிறார்.*

*பாரிமகளிரை இருங்கோவேள் ஏற்க மறுக்கின்றான். அவர்களை எள்ளி நகையாடுகின்றான். ஏளனம் செய்கின்றான். அவ்விடத்தில் மனம் வேதனைப்பட்ட கபிலர் இருங்கோவேளை எச்சரித்தும் அறிவுரைக் கூறியும் செல்கின்றார் இதனை,*

***“நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்***
***புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை***
***இகழ்ந்ததன் பயனே; இயல்தேர் அண்ணல்!***
***எவ்வி தொல்குடிப் படீஇயர், மற்றுஇவர்***
***கைவண் பாரி மகளிர் என்றஎன்***
***தேற்றாப் புன்சொல் நோற்றிசிற் பெரும”*** [153]

*கழாஅத் தலையாரென்னும் புலவரை உன் முன்னோர்களுள் ஒருவன் உன்னைப் போல் அறிவற்றவனாக இகழ்ந்ததனால் கேடுற்று அழிந்தான். ஆகையால் நீ என்னையும் பாரிமகளிரையும் எள்ளி நகையாடுவதை நிறுத்துவாயாக என்று கூறுகின்றார்.*

*பாரி அரச மரபினன். கபிலர் அந்தணன் இருவரும் சாதி, வேறுபாடின்றி இனமாறுபாடின்றி நட்பு பூண்டு வாழ்ந்தனர். நட்புக்காக எதையும் செய்யும் மனமும், திறமும் இவர்கள் இருவரிடமும் காணப்பட்டது. பாரி கபிலர் கேட்டதெல்லாம் கொடுத்தான். கபிலரும் பாரியின் எண்ணப்படி இருந்தார். பாரி இறந்த பிறகு அவர்தம் பிரிவினைக் கபிலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. முடிவாகப் பாரிமகளிரை பார்ப்பவரிடம் விட்டுவிட்டுத் தானும் வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தார். பாரியின் பிரிவினை தாங்க முடியாத கபிலர் பின்வருமாறு புலம்புகிறார். மலைநாட்டின் அரசனே! எனக்கு உதவி நீ என்னோடு பழகிய காலமெல்லாம் மனம் கலந்த நட்பிற்கு பொருந்தாதவன் என்ற என்னை வெறுத்துவிட்டாயோ பெருமைத் தங்கிய சிறந்த நட்புக்கு ஒவ்வாமல் நீ இறந்த போது உன்னோடு என்னையும் அழைத்துக் கொண்டு செல்லாமல் என்னை இங்கேயே தவிக்கவிட்டு சென்றுவிட்டாய் இருப்பினும் இங்கிருந்தது போலவே அங்கும் இடைவிடாது உன்னுடன் இருந்து உன்னைக் கண்டு வாழும் நிலையை இனிமேலாவது எனக்குத் தரவேண்டும் என்று கூறுகிறார். இதனை,*

***“மலைகெழு நாட! மாவண் பாரி!***
***கலந்த கேண்மைக்கு ஒவ்வாய்; நீஎற்***
***புலந்தனை யாகுவை புரந்த ஆண்டே;***
***பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது***
***ஒருங்குவரல் விடாஅது ஒழிகெனக் கூறி***
***இனையை ஆதலின் நினக்கு மற்றுயான்***
***மேயினேன் அன்மை யானே; ஆயினும்***
***இம்மை போலக் காட்டி உம்மை***
***இடையில் காட்சி நின்னோடு***
***உடன்உறைவு ஆக்குக உயர்ந்த பாலே!”*** [154]

*என்ற பாடல் வழி அறிய முடிகிறது. நட்புக்காகக் கபிலர் தன் உயிரினை விட்டு பாரி இருக்கும் இடத்துக்குச் செலல் என்பதும் வடக்கிருந்ததைக் கொண்டு நட்புறவின் உச்சக்கட்டத்தினை உணர முடிகிறது. நட்புக்கு ஒரு இலக்கணமாக விளங்கியவர்கள் இவர்கள் இருவரும் ஆவார்கள்.*

***மோசிகீரனாரும் – பெருஞ்சேரல் இரும்பொறையும்***

*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்ற உலக நெறியினை வேந்தர்களுக்கு உணர்த்தியவர் மோசிகீரனார் எனும் புலவராவார். இரும்பொறையைக் காண வந்த மோசிகீரனார் மன்னனின் முரசு கட்டிலில் அறியாது உறங்கிவிட்டார். அப்போது அங்கு வந்த மன்னன் புலவன் மீது கோபம் கொள்ளாமல் கவரி வீசி, புலவனின் தூக்கத்திற்கு இடையூறு நிகழாமல் காவல் நிற்கின்றார். இந்தத் தன்மையானது தமிழ்ப் புலமைக்குக் கிடைத்த நட்பின் மேம்பாட்டால் உண்டானது என்பதை மோசிகீரனார் பின்வரும் பாடல்வழி உணர்த்துகிறார்.*

***“நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை***
***அறியாது ஏறிய என்னைத் தெறுவர,***
***இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை***
***அதூஉம் சாலும், நற் றமிழ்முழுது அறிதல்;***
***……………………………………………….***
***வலம்படு குருசில்! நீ ஈங்குஇது செயலே?”*** [155]

*என்ற பாடலின் வழி, முரசுக்கட்டிலிலே உறங்கிக் கிடந்த என்னை இரு கூறுகளாகப் பிளக்காமல் உள்வாளை மாற்றிய ஒன்றே தமிழ் அறிந்தாரை மதிக்கும் உனது மாண்பினை உணர்த்துகிறது. அதோடு மட்டுமல்லாமல் எனது அருகே வந்து நின்று குளிர்ந்தக் காற்றினை வீசுகின்ற உனது நட்பானது மிகவும் போற்றுவதற்கு உரியது என்று கூறுகிறார். தமிழுக்கும் தமிழ் புலவர்களுக்கும் கிடைத்த மரியாதையை உணரமுடிகிறது. தமிழ்ப் புலவரைக் காப்பதே தமிழைக் காப்பதாகும் என்பதை உணர்ந்த இரும்பொறை, மோசிகீரனார் செய்த செயலை மனம் உவந்து ஏற்று, உள்ளன்போடு நடந்துகொள்கிறான்.*

மோசிகீரனார் தான் அச்செயலைத் தவறு என்று வருதப்பட்டாரே தவிர இரும்பொறை அதைப் போன்று நினைக்கவில்லை. அதற்குக் காரணம் புலவரிடமும், தமிழிடமும் கொண்ட பற்றும் நட்புமே ஆகும்.

புலவரின் தூக்கத்திற்குக் கவரி வீசிநின்ற காவலன் தமிழின் காவலனாகவும் புலவர்களின் நண்பனாகவும் விளங்கினான், இம்மன்னனின் செயலானது நட்பெனும் உறவால் மலர்ந்தது ஆகும்.

சேரன் பெருஞ்சேரலிரும்பொறைக்கும் சோழன் கரிகால்பெருவளத்தானுக்கும் பகைமை தோன்றிப் போர் ஏற்பட்டது. அப்போரில் சோழன்விட்ட அம்பானது பெருஞ்சேரலாதனது மார்பில்பட்டு ஊடுருவி, முதுகின் வழியே வெளியேறியது. அது கண்ட பெருஞ்சேரலாதன் மிக்க நாணமடைந்தான். அவன் முதுகில் காணப்படும் அந்தப் புண் அம்பானது மார்பில் பட்டு முதுகுவழியே சென்றதால் உண்டானது என்பதை அறியாதவர்கள், “இவ்வரசன் போரிலே தோற்றோடினான். அப்போது பகைவர்விட்ட அம்பு இவன் முதுகிற்பட்டு புண் உண்டானது’ என்று தான் எண்ணுவார்கள் என்று கருதிய பெருஞ்சேரன் இந்த இகழ்வினைக் கொண்ட வாழ்வானது வேண்டாம் என்று நினைந்து வடக்கிருந்து உயிர் துறந்தான் .இவரின் உள்ளப் பண்பினை புலவர் பின்வரும் பாடல் மூலம் கூறுகின்றார்.

> **“தன்போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த**
> **புறப்புண் நாணி, மறத்தகை மன்னன்**
> **வாள் வடக்கு இருந்தனன்; ஈங்கு,**
> **நாள்போல் கழியல, ஞாயிற்றுப் பகலே!”** [156]

இப்பாடலில், புலவர் கொண்ட நட்பானது வெளிப்படுகிறது. இப்போரினைப் பற்றி வெண்ணிக்குயத்தியார் பின்வருமாறு கூறுகிறார். “கரிகாற்பெருவளத் தானே நீ போரில் வெற்றிபெற்றாய். உனது அம்பானது மார்பில் பட்டு முதுகு வழியே சென்றதனால் உண்டான புறப்புண்ணுக்கு வெட்கப்பட்டு உயிர்விடத் துணிந்த பெருஞ்சேரலாதனின் சிறப்பானது உனது வெற்றியை விட பன்மடங்கு போற்றத்தக்கது என்று கூறுவதிலிருந்து அம்மன்னன் மீது புலவர் கொண்டிருந்த நட்பின் திறனை அறிய முடிகிறது.

**முதுக்கண்ணன் சாத்தனார் – நலங்கிள்ளி**

சங்க காலப் புலவர்கள் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்திற்காகத் துணிச்சலுடன் செயல்பட்டு வந்தனர். மன்னர்கள் தவறு செய்யும் போது அவர்களை இடித்துரைத்து அவர் தம் தவறினைச் சுட்டிக்காட்டி அதைச் சரி செய்யக் கூடிய அறிவுரைகளையும் வழங்கி உள்ளனர். நலங்கிள்ளி எனும் மன்னன் வறியவர்களுக்கு ஈயாதவனாக இருக்கின்றான். அவனை நோக்கி முதுக்கண்ணன் சாத்தனார் பின்வருமாறு கூறுகின்றார்.

நலங்கிள்ளியே! அஞ்சாமல் பகைவரோடு போர் புரிந்து அவர்களுடைய வளமிக்க நாடுகளைக் கைப்பற்றி உன்னிடம் கொடுத்தப் படைவீரர்கள் உனது பகைவர்களைப் போல வறுமையால் துன்புற்று சிறியக் குடிசைகளிலிருந்து வாழ்வது தகாத செயலாகும். அவர்கள் மகிழ்ச்சியோடு வாழும்படி செய்ய வேண்டியது உன் கடமை ஆகும்.

உன்னை நோக்கி வரும் பரிசிலருக்கு உன் படைவீரர்களே வேண்டிய உதவிகளைச் செய்யக்கூடிய வகையில் அவர்களைச் செல்வசெழிப்போடும் வளமையோடும் வாழ வைக்க வேண்டியது உன் பொறுப்பாகும். பிறப்பதும் இறப்பதுமான இந்த உலகத்திலுள்ள உன் சுற்றத்தார் அனைவரும் மகிழ்ச்சியோடு வாழும்படி செய்து உனது வாழ்நாளின் பயனை நீ அடைக என்று கூறுகிறார் புலவர் முதுக்கண்ணன் இதனை,

> **“இளநீர் உதிர்க்கும் வளமிகு நல் நாடு**
> **பெற்றனர் உவக்கும் நின் படைகொள் மாக்கள்**
> **……………………………………………**
> **உதவி ஆற்றும் நண்பின் பண்புடை**
> **ஊழிற்று ஆக, நின் செய்கை”** [157]

என்று குறிப்பிடுகிறார். புலவரின் முயற்சியானது நன்கு பயனளித்தது. சோழன் நலங்கிள்ளி புலவர் மீது கொண்ட நட்பினாலும் பெருமதிப்பினாலும் அவர் கூறிய அறிவுகளைக் கேட்டு தன்னை மாற்றிக் கொண்டான். இதனை அரசன் பாடிய பாடல்கள் மூலமும், அரசனைப் பற்றி பிற புலவர்கள் பாடிய பாடல்கள் மூலம் தெளிவாகிறது. நலங்கிள்ளி பாடிய பாடலில் என்னிடம் வந்து இரங்கி வேண்டுவோராயின் தொன்றுத்தொட்டு வருகின்ற என்னுடைய அரசாட்சியையும் எனது உயிரினையும் பரிசாகக் கொடுப்பான் என்றும் என்னையும் எனது ஆற்றலையும் மதிக்காமல் போருக்கு வருவோரையோ ஒழிக்காமல் விடமாட்டேன் என்று கூறியதன் மூலமும் அறிய முடிகிறது.

கோவூர்கிழாரும் நலங்கிள்ளியைப் பற்றி பாடி உள்ளார். “நலங்கிள்ளி உறையூரில் உள்ளான் அவனிடம் சென்று கேட்டால் இப்பிறவியல் நாம் பிறரிடம் சென்று வேறு எதையும் கேட்க தேவையில்லாத அளவுக்கு நாம் வேண்டியதை நல்குவான், எனவே பாணர்களே அவனை நாடிச் செல்வோம் வாருங்கள். மேலும் நலங்கிள்ளியின் புகழைப்பாடும் விருப்பமுடையவர் பிறரைப் பாடி பொருள் பெறுவதை விரும்பமாட்டார்கள் என்றும் கூறுகிறார். இதிலிருந்து முதுக்கண்ணன் சாத்தனாரின் முயற்சியால் நலங்கிள்ளி சிறந்த ஈகை உடையவனாகிய பண்பு தெளிவாகிறது. இது நட்புணர்வினால் ஏற்பட்ட மாற்றமாகும்.

**முடமோசியாரும் – ஆய்அண்டிரனும்**

ஆய்அண்டிரன் மேகங்கள் தங்கும் மலைக்கு தலைவனாவான முடமோசியார் ஒரு பரிசில் புலவர் ஆவார். இவர் மன்னனைப் போற்றி பாடிய பாடல்கள் மூலம் அவன் மீதுக் கொண்டிருந்த நட்பின் ஆளுமையை உணர முடிகிறது.

*போர் வாளினைக் கொண்டவன். சுரப்புன்னை பூமாலையை அணிந்தவன், அவன் மலையிலுள்ள் இந்த அழகியக் காடானது அவனது மலையின் புகழைப்பாடி இவ்வளவு யானைகளையும் பரிசாகப் பெற்றுள்ளதோ! என்று அவனது சிறப்பினை எடுத்துரைக்கின்றார். இதனை,*

***"மழைக்கணம் சேக்கும் மாமலைக் கிழவன்***
***வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்***
***குன்றம் பாடின கொல்லோ;***
***களிறுமிக உடையஇக் கவின்பெறு காடே?"*** [158]

*எனும் பாடலானது புலப்படுத்துகிறது. குறுகிய மறைப்பை உடைய சிறியக் குடிசைகளில் வாழும் மலைவாழ் குரவர்கள் மூங்கில் குழாயிலிருந்த மதுவினைக் குடித்து வேங்கை மரத்தின் முற்றத்தில் குரவைக் கூத்தினை ஆடுகின்றனர். பலா மரங்கள் நிறைந்துக் காணப்படும் மலைக்கு தலைவனாகிய நீ! உன்னை நாடிவரும் இரவலர்களுக்குப் பெரும் எண்ணிக்கையில் யானையினைப் பரிசாக அளிக்கின்றாய் மேகத்தால் சூழப்பட்ட வானத்திலிருக்கும் விண்மீன்களின் தொகையைவிட நீ தந்த யானைகளின் எண்ணிக்கை மிகுதி என்று கூறுவதிலிருந்து அம்மன்னன் மீது புலவர் கொண்ட நட்பின் மதிப்பினையும் அவனது பண்பினையும் அறிய முடிகிறது.*

**தொகுப்புரை**

புறத்திணைப் பாடல்கள் நுவலும் பொருள்கள் என்னும் இத்தலைப்பில் பின்வரும் கருத்துகள் ஆராயப்பெற்றுள்ளன.

- ❖ புறத்திணைப்பாடல்களில் இடம் பெற்றுள்ள பல்வேறு செய்திகளில் முன்னியலில் கூறப்படாத செய்திகள் தரவுகள் இவ்வியலில் கூறப்பட்டுள்ளது.
- ❖ மக்களின் அகவாழ்வு மற்றும் புறவாழ்வு குறித்துச் சுட்டப்பெற்றுள்ளது.
- ❖ திணைப் பாகுபாடு, மக்கள், அரசு, அரசின் தன்மை, சிறப்பு ஆகியன விளக்கப் பெற்றுள்ளது.
- ❖ உழைப்பு, உழைப்பின் சிறப்பு குறித்து கூறப்பட்டுள்ளது.
- ❖ வணிகம் எவ்வாறெல்லாம் நடைபெற்றது, பண்ட மாற்றம், உள்நாடு, வெளிநாடு வணிகம் குறித்து கூறப்பெற்றுள்ளது.
- ❖ புறத்திணைச் சுட்டும் மகளிர் நிலை, அவர்களின் செயல்கள் விளக்கப்பெற்றுள்ளன.
- ❖ நடுகல் வழிபாடுகள், சடங்குகள் ஆகியன சுட்டப்பெற்றுள்ளன.
- ❖ பிறப்பு, இறப்பு சடங்கு உள்ளிட்டவை சங்க இலக்கியங்களில் சுட்டப்பெறுகின்றன.
- ❖ புலவர்கள் அரசனிடம் பொருள் பெற்று வாழ்வர் எனினும் ஆர்வமின்றி வழங்கினாலோ, தாமதமாக வழங்கினாலோ தகுதியறியாமல் சமமாக வழங்கினாலோ அவற்றை பெறுவதற்கு புலவர்கள் விரும்பவில்லை. அறவே ஒதுக்கிய புலவரின் உணர்வினையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- ❖ பண்டைத்தமிழர்களின் அழகு, பாதுகாப்பு குறித்த செய்திகள் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.
- ❖ சங்க மக்கள் தாய்மையுணர்வில் சிறந்து விளங்கியதை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- ❖ கட்டிடக்கலையிலும், மொழியியல் அறிவிலும் சிறந்த ஆளுமைகளாக சங்க மக்கள் இருந்துள்ளனர் என்பது விளக்கப்பெற்றுள்ளது.
- ❖ மனிதவாழ்வின் மகத்தான உணர்வு நட்பு. அவற்றை உயிராக எண்ணி வாழ்ந்தனர். தனக்குத் துன்பம் நேர்ந்தால் தன் நண்பருக்கும் துன்பம் ஏற்படுமோ என்று எண்ணி வாழ்ந்த நிலையை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- ❖ நட்பு குறித்த விளக்கமும் நட்பியலும் இடம் பெற்றுள்ளது.

## அடிக்குறிப்பு

1. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ.),சிலம்பு, அரங்கேற்றுக்காதை .வரி.37.
2. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து,,இரண்டாம்பத்து,பதிகம் – 5.
3. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா . 168 :18.
4. தாயு, கண்ணி -169.
5. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.175-176.
6. வி.நாகராசன்(உ.ஆ.),மலைபடுகடாம்.அடி.414 -416.
7. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .324: 8-12.
8. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .311:1-4.
9. பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகம்,ப – 4.
10. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .35:8-11.
11. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து,பா.28:6-7.
12. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.93.
13. மேலது.,அடி. 210-212.
14. மேலது.,அடி.35-43.
15. மேலது.,அடி.441-447.
16. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .6:8-10.
17. பழந்தமிழாட்சி, ஞா.தேவநேயன், ப – 64, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு – 2014.
18. அ.விசுவநாதன்,(உ.ஆ.),கலித்தொகை,பா . 43:26-27.
19. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .314:6-7.
20. மேலது..பா .61:1.
21. அ.தட்சிணாமூர்த்தி(உ.ஆ.),ஐங்குறுநூறு.பா.208:1-2.
22. வி.நாகராசன்(உ.ஆ.),குறுந்தொகை.பா.233:1.
23. தமிழர் சரித்திரம், ந.சி. கந்தைய, ப -78.
24. வி.நாகராசன்(உ.ஆ.),குறுந்தொகை.பா.135:1.
25. இரா.செயபால்(உ.ஆ.),அகம்.,பா.47:1-2.
26. மேலது..பா .75:1-3.
27. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா . 92:1-4.
28. வி.நாகராசன்(உ.ஆ.),மலைபடுகடாம்.அடி.115-116.
29. தமிழண்ணல்(உ.ஆ.),அகம்,பா. 368:1
30. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து, பா. 30:22-25.

31. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.152-155.
32. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .13:10-11.
33. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),நற்றிணை .பா.219: 6.
34. வி.நாகராசன்(உ.ஆ.),குறுந்தொகை.பா.221:3-4.
35. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.158-163.
36. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .33:1-7.
37. வி.நாகராசன்(உ.ஆ.),பட்டினப்பாலை.அடி.28-30.
38. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),நற்றிணை .பா.239:3.
39. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .343:1-2.
40. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.64-65.
41. இரா.மோகன்(உ.ஆ.),பொருநராற்றுப்படை.அடி. 214-217 11.
42. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து, பா.66: 7-8.
43. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .353: 1-2
44. வி.நாகராசன்(உ.ஆ.),பட்டினப்பாலை.அடி. 209-212.
45. பக்தவச்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப -45,
46. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .259 -260.
47. மேலது.,அடி.753 – 755.
48. மேலது.,அடி.372.
49. வி.நாகராசன்(உ.ஆ.),பட்டினப்பாலை.அடி.180.
50. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து,68:10.
51. இரா.செயபால்(உ.ஆ.),அகம்.,பா.126:10.
52. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .329:1-2.
53. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.339-340.
54. மேலது.,அடி.141-142.
55. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து,43:34.
56. மேலது.,பா.42:11.
57. வி.நாகராசன்(உ.ஆ.),மலைபடுகடாம்.அடி.463.
58. மேலது.,அடி.171-172.
59. மேலது.,அடி.522.
60. இரா.மோகன்(உ.ஆ.),பொருநராற்றுப்படை.அடி.84-87.
61. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .777-778.
62. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .24:31-32.
63. மேலது.,பா.56:18-20.

64. மேலது.,பா.367:6-7.
65. மேலது.,பா.235;1-3.
66. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .679-681.
67. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .256;5-7.
68. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .554-556.
69. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா .194;3-4.
70. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .608 – 610.
71. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா . 6;18
72. இரா.மோகன்(உ.ஆ.),திருமுருகாற்றுப்படை.அடி .258
73. அ.ஆலிஸ்,(உ.ஆ.),பதிற்றுப்பத்து, பா. 90 ;19.
74. மேலது.,பா.79;17-18.
75. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.306, 4-5
76. மேலது.,பா.232,3-4.
77. மேலது.,பா.74.
78. திருமந்திரம் – 270.
79. திருவருட்பா, ஆறாம் திருமுறை, பாடல் – 3.
80. பெ.சுப்பிரமணியன்(உ.ஆ.),பரிபாடல்.பா. 5;78-80.
81. இ.தமிழமுது(ப.ஆ.),நாலடியார் – 58.
82. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா. 197;7-18.
83. மேலது.,பா.204
84. மேலது.,பா.208, 8-9
85. மேலது.,பா.205, 1-2
86. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி . 685.
87. வி.நாகராசன்(உ.ஆ.),குறுந்தொகை.பா.113, 4-5.
88. பண்டைத்தமிழர் நாகரிகமும் பண்பாடும், பூம்புகார் பதிப்பகம், ப – 42, முதற் பதிப்பு – 2004, சென்னை -8)
89. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.127;7.
90. இரா.மோகன்(உ.ஆ.),சிறுபாணாற்றுப்படை.அடி.193-194.
91. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.399.1-12.
92. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.192-195.
93. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா. 113;1.
94. மேலது.,பா. 33;14.
95. மேலது.,பா.325;7.

96. மேலது.,பா.364;4.

97. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .754.

98. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.143.

99. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா. 14:14-16.

100. மேலது.,பா.125:1.

101. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),நற்றிணை .பா. 353:1-2.

102. இரா.மோகன்(உ.ஆ.),பொருநராற்றுப்படை.அடி.82-83.

103. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.),புறம்.,பா.383:9-11.

104. மேலது.,பா.274:1.

105. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி. 469.

106. அ.விசுவநாதன்,(உ.ஆ.),கலித்தொகை,பா .85:7.

107. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.377:16-17.

108. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .135.

109. வி.நாகராசன்(உ.ஆ.),பட்டினப்பாலை.அடி.189.

110. பழம்பாடல்.

111. இரா.மோகன்(உ.ஆ.),பெரும்பாணாற்றுப்படை.அடி.405.

112. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .357 -358.

113. வி.நாகராசன்(உ.ஆ.),குறுந்தொகை.பா.229.

114. நளவெண்பா.கலி -68.

115. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.188.

116. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள்.61.

117. வி.நாகராசன்(உ.ஆ.),குறுந்தொகை.பா.157.

118. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா. 58:13.

119. இரா.மோகன்(உ.ஆ.),சிறுபாணாற்றுப்படை.அடி .66-67.

120. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.32:5.

121. இரா.மோகன்(உ.ஆ.),திருமுருகாற்றுப்படை.அடி. 71.

122. வி.நாகராசன்(உ.ஆ.),மதுரைக்காஞ்சி.அடி .429.

123. அ.விசுவநாதன்,(உ.ஆ.),கலித்தொகை,பா .92:65.

124. தொல்.எழுத்து.புள்ளிமயங்கியல்.நூ -395.

125. பெ.சுப்பிரமணியன்(உ.ஆ.),பரிபாடல்.2:13-14.

126. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள்.786.

127. வ.சுப. மாணிக்கம், சங்கநெறி, ப.8.

128. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள்.788.

129. மேலது.,குறள். 783.

130. மேலது.,குறள்.784.

131. மேலது.,குறள்.787.

132. மேலது.,குறள்.781.

133. அ.விசுவநாதன்,(உ.ஆ,),கலித்தொகை,பா . 25:15 -16.

134. மேலது.,பா.25:23- 24.

135. மதுரை இளங்குமரனார் (உ.ஆ.),திருக்குறள்.785.

136. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா. 212:6-10.

137. மேலது.,பா. 67.

138. மேலது.,பா.215:6-9.

139. மேலது.,பா. 216:6-12.

140. - மேலது.,பா.217:7-13.

141. மேலது.,பா.223:2-6.

142. கரு. இராமநாதன், சங்க காலத்தமிழர் வாழ்வு, ப.24.

143. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), புறம்.,பா.91:6-10.

144. மேலது.,பா.92

145. மேலது.,பா.101:1-3.

146. மேலது.,பா.231.

147. மேலது.,பா.235:1-9.

148. மேலது.,பா.232.

149. மேலது.,பா.107.

150. மேலது.,பா.110:5-6.

151. மேலது.,பா.113.

152. மேலது.,பா.115.

153. மேலது.,பா.202:11-16.

154. மேலது.,பா.236:3-12.

155. மேலது.,பா.50:7-17.

156. மேலது.,பா.65:9-12.

157. மேலது.,பா.29:16-22.

158. மேலது.,பா.131.

# முடிவுரை

சங்ககால மக்களின் வாழ்வியலைச் சுட்டும் நூல்களுள் மிக முக்கிய இடம் வகிப்பது சங்க இலக்கியங்கள் ஆகும். இதில் காணப்பெறும் செய்திகள் பிற்கால அகழ்வாய்வுகளுக்கு கூட மிக முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது. எனவே கடந்த கால மக்களின் வாழ்க்கையை வாழும் தன்மையுடையதாக இருக்கும் நிலையினை சங்க இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன. இவற்றை ஆராய்வதன் மூலம் பல புதிய செய்திகள் வெளிப்பட்டுள்ளமை உணரத்தக்கது.

சங்க இலக்கியங்களில் புற இலக்கியங்கள் மிக முக்கிய பங்காற்றுகின்றன. புறத்திணை என்பதற்கு விளக்கம், தோற்றம் அவற்றின் தன்மை ஆகியன சுட்டப்பெற்றுள்ளன. போருக்கான காரணம், புறத்திணையின் கூறுகள் உள்ளிட்டவை சான்றுகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், புறத்திணை , புறத்திணை நுவலும் பொருட்கள் குறித்தும் உரைக்கப்பெற்றுள்ளன.

வாழ்வியல் முறைகளே மனிதவளக் கூறுகளையும் அறம் சார்ந்த செயல்களையும் மனித நேயத்தையும் வலியுறுத்துகின்றன. இயல் மூன்றில் மனிதநேயக் கூறுகள் ஒவ்வொரு நூலிலும் அமைந்துள்ள நிலைகளை எடுத்தாராயப்பெற்றுள்ளன. கடையேழு வள்ளல்கள் என்ற சொல்லாடலே அக்கால மன்னர்களின் மனிதநேய உணர்வுகளை சுட்டுகின்றன. புறத்திணை பனுவல்களில் குறிப்பிடப்படும் மக்களின் வாழ்வியல், வாழ்வியல் தொடர்பான செய்திகள், மனிதநேய உணர்வுகளைத் தூண்டக்கூடிய சான்றாகத் திகழ்கின்றது. மகளிர்நிலை, வாணிகம், அழகுணர்வு ஆகியன எடுத்துக்காட்டப்படுவதன் மூலம் மனிதநேயக் கூறுகளின் பின்புலம் குறித்து உணர முடிகிறது. நட்பு குறித்த செய்திகள் மேற்காண் தலைப்பிற்கு வலு சேர்ப்பதாக இவ்வாய்வு அமைந்து சிறக்கிறது எனலாம்.

உலகம் நாகரிக வளர்ச்சியில் உச்சத்தை எட்டியுள்ள காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இக்காலத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகமே ஒரு கிராமம் போல் சுருங்கி விட்டது. உணவு, உடை, உணர்வுகளில் பல்வேறு மாற்றங்கள் நம்மில் ஏற்பட்டுள்ளன. எனினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சங்ககால நூல்களின் மாந்தர்கள் நமக்கு முன்னோடிகளாக திகழ்கின்றனர். ஏன், உலகப் பண்பாட்டிற்கே முன்னோடிகளாக வாழ்ந்தனர் என்பது கண்கூடு.

உலக நாகரிகத்திற்கு முன்னோடியாகத் திகழக்கூடிய சீன, எகிப்து உள்ளிட்ட நாடுகளில் காணப்பெறும் இலக்கியங்களில் கூட பெண்கல்வி, மனித மனம் குறித்த நுண்ணிய சிந்தனைகள் சுட்டப்பெறவில்லை. ஆனால் நம்முடைய சங்கப் பனுவல்கள் அஃறிணை உயிர்களையும் தம்முயிர் போல் மதிக்கின்றன. தம் வாழ்வியலோடு இணைத்துக்காணும் கடையேழு வள்ளல்களையும் காண்கிறோம்.

மயிலுக்கு போர்வைத் தருதலும், முல்லைக்கு தேர் தருதலும் வாழ்நாள் நீட்டிக்கும் அரிய நெல்லிக்கனியை தமிழுக்கு வழங்கி உதவும் அவர்தம் உயர் நாகரிகமான மனிதநேயத்தைச் சுட்டிச் செல்கின்றன.

அதியமான் தான் கண்டெடுத்த சாகா மருந்தாகிய நெல்லிக்கனியை ஔவையார்க்குக் கொடுத்து நீண்ட நாள் சாகா வரம் பெற்று மக்களுக்காகவும், அரசனுக்காகவும், நாட்டுக்காகவும் தமிழ்ப்புலவர் வாழ வேண்டும். தனக்குச் சாகாவரம் என்பதைவிடத் தனக்குப் பிறகும் மக்களையும் அரசனையும் பாடி நல் வழிகாட்ட வேண்டும் என்று தன் சாவு பற்றிக் கவலைப்படாமல் புலவர் ஔவை பிராட்டி நீண்ட நாள் வாழும் வரம் பெறட்டும் என்ற உயரியச் சிந்தனையில் வாழ்ந்த அதியமானின் மனம் முழுதும் மானுட நேயமே நிறைந்திருக்கிறது அல்லவா? அதனால் தானே 'கடிய விடமுண்டு தேவர்களைக் காப்பாற்றி அருள் செய்கின்ற சிவபெருமானின் மன நிலையினை அதியமானுக்கு உவமையாக கூறுகின்றார் ஔவையார். இதை தியாகம் என்று சொல்வதை விட மானுட நேயம் என்பது இச்சூழலில் மிகப் பொருத்தமாக உள்ளது.

வேள்பாரியைப் பற்றிக் கபிலர் பாடிய பாடல் எல்லாமே அவனுடைய மானுட நேயத்தையும், ஜீவகாருண்யத்தையும், வீரத்தையும் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது. சான்றாக, எருக்கம் பூவையே ஒரு பக்தன் சூட்டித் தெய்வங்களை வழிபட்டாலும், அத்தெய்வங்கள் விரும்பேம் எனக் கூறாது. அது போல அறிவில்லாதவரும் புல்லிய குணத்தவரும் சென்று கேட்டாலும் பாரி அவர்களுக்கும் கொடுத்து மகிழ்வான் என்கிறார் கபிலர். எல்லாவற்றையும் பரிசிலர்க்குக் கொடுத்துவிட்ட பாரி தன்னையும் கொடுக்கும் குணம் உடையவன். அந்தக் கபிலர் பாரி இறந்த பிறகு 'எத்திசைச் செல்லினும் அத்திசை சோறே' என்று சென்றுவிடலாம்! ஆனால் கபிலர் அப்படிச் செய்யாமல் பாரியின் மகளிருக்குத் திருமணம் செய்து வைக்க அங்கும் இங்கும் அலைகிறார். பாரி மட்டுமல்ல சங்க காலக் கடை ஏழு வள்ளல்களும் மானுட நேயம் மிக்கவர்களாக விளங்கியவர்கள் என்பது அவ்வவர்களின் வாழ்க்கை காட்டிச் செல்கிறது.

நாகரிகம் என்பது உடைகளிளோ, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளிளோ இல்லை. நாகரிகம் மனித மனங்களில் போது அரும்பாகி மலர்ந்து மணம் வீச வேண்டும். இதுவே உண்மையான பண்பாடு. எங்கே பண்பாடு உயர்நிலையை எட்டுகிறதோ அங்கே நாகரிகம் போற்றப்படும்.

தன்னுடைய தேரின் மணியோசையால் வண்டுகளின் மகிழ்வு கெடும் என்று உணர்ந்து மணியின் நாவினைக் கட்டிவிட்டுச் சென்ற தலைவன் பண்பாட்டின் சின்னம். அப்படியான மனிதநேயமிக்கவர்களே அன்று அரசர்களாக இருந்துள்ளனர். இல்லை என்று வருவோரையெல்லாம் வாவென்று அழைத்து முதலில் அவர்களின் உடல்பெற்ற துயர்களை நீக்கி, புத்தாடைகளை வழங்கி அவர்களின் பசிக்கு விருந்தளித்து பின்னர் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தவர்களே மன்னர்களாக போற்றப்பட்டனர்

என்ற செய்தியைக் காண்கிறோம். இது இன்று வரை ஒப்பிடற்கரிய செய்தியாக இருந்து வருகிறது.

பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள ஆற்றுப்படை இலக்கியங்கள் மனிதநேயத்தை பறைசாற்றுகின்ற இலக்கியங்கள். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயரிய நோக்கின் சான்றாதாரங்கள் இவை. பரிசு பெற்ற இரவலன் தன்வீடு தன் உலகம் என்று நினைக்காமல் எதிர் வரும் இரவலனுக்கு வழி கூறியதோடு மட்டுமல்லாமல் தான் பரிசுப் பெற்றச் செய்தியையும் கூறி பாதுகாப்பான இடத்திற்கு பயணத்தை மேற்கொள்ளும் முறையையும் கற்றுத்தந்த ஆற்றுப்படை இரவலன் பண்பாட்டின் உச்சமன்றோ. உற்று நோக்கின் ஆற்றுப்படை பொருண்மையிலான இலக்கியங்கள் மனிதநேயத்தின் ஊற்றுக்கண்கள் எனில் மிகையன்று.

“கலம் செய் கோவே” என்று அழைத்து பானை வனையும் குயவனையும் மன்னராக உணர வைத்த மாண்பு சங்கத்தமிழருடையது. கடையேழு வள்ளல்களின் கொடைகள் காலத்தால் அழியாதவை.

இன்று கோயில்களுக்கு நிவந்தம் அளிப்பினும் அதில் தம் பெயரை பதிவுசெய்து பெருமை கொள்கின்றனர். ஆனால் அன்று நாட்டைக் காப்பதற்கு புதல்வர்களை பெற்றளித்த நற்றாயைக் காண்கிறோம். முதுகில் புண்பட்டு இறந்திருந்தால் என் மகனே அல்ல என்று அறைகூவலிடும் தாயை இன்றைய தாய்மார்களுக்கும் வீர உணர்வூட்டக்கூடியவை.

பிறருக்கு உதவி செய்வது நேயம். பிறர் உதவியை மறவாமல் வாழ்ந்து தினை போன்ற உதவியைப் பனைப் போல பெரிதாகக் கருதுவதும் நேயமே. ஆலந்தூராரின் கூற்று திருவள்ளுவரோடு ஒப்பிடத்தகுந்தது. பிற்கால, தற்கால வாழ்வியலுக்கும் சான்றாக நிற்கிறது. நன்றியுணர்வு நேயத்தின் மூலமே விளங்கும்.

தான் யார் என்பதைக்காட்டி வாரி வழங்கிய நள்ளி, அரவம் தந்த ஆடையை சிவனுக்கு வழங்கிய ஆய்அண்டிரன், பாணர்கள் பாடும் தொழிலையே மறக்கும் அளவிற்கு வழங்கிய ஓரி, ஆநிரைகள், எருது, கள் என அனைத்தையும் அள்ளி வழங்கிய எழினி, முன்னரே குறிப்பிடப்பட்ட பாரி, பேகன் போன்றோர் உயர் பண்பாட்டின் சின்னங்கள் எனில் மிகையில்லை.

புறங்கூறாது இருத்தல், அறஞ்செய்தல், கல்வியறிவு வழங்குதல், உள்ளனவற்றை பகிர்தல், இல்லையெனினும் இருப்பதை ஈதல், நாட்டிற்காக வாழ்தல் என மக்களும் மனிதநேய மாந்தர்களாகவே வாழ்ந்திருந்தனர் என்பதை சங்கப் புறப் பனுவல்கள் இன்று சுட்டி நிற்கின்றன.

மேலும், புலவர்கள் மன்னர்களின் இயல்பையும், கொடைச் சிறப்பையும் கூறும்போது பொய் கூறாது உண்மையை மட்டுமே கூறிய நிலை தெரிகிறது. குறுகிய நிலமாக இருந்தபோதும் பரந்த மனம் கொண்டு கடையேழு வள்ளல்கள்

வாழ்ந்துள்ளனர். கொடைகுணம் கொண்ட சங்காலத்து தமிழர் மனநிலை இன்று இல்லாமல் போனது வருத்தம் தருவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும், கவுரவர்களுக்கும் போர் நடந்தது. அப்போது தமிழ் மன்னன் ஒருவன் இருபடையினருக்கும் சோறு கொடுக்கும் புண்ணியத்தைச் செய்தானாம். அவன் பெயர் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன். இந்தத் தகவலை சங்ககாலப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடுகிறார். கைவீசி நடந்தால் காற்றுக்கும் வலிக்குமோ என்று கைகட்டியே நடந்தவர் வள்ளலார் என்பார்கள். அவர் உருகுவதைப் பாருங்கள்

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**
**வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த**
**வெற்றரைக் கண்டுள்ளம் பதைத்தேன்"**

மேற்கண்டவாறு "உயிரிரக்கம் மனிதநேயத்தின் திறவுகோல்" என்று கூறியதோடு மட்டுமல்லாமல் மனிதர்களின் பசிப் பிணியைப் போக்கும் எண்ணத்தோடு வடலூரில் அன்று அவர் மூட்டிய கனல் இன்றுவரை அணையவில்லை. அவரைப்போன்று மனிதநேயத்திற்கு சான்றாகத் திகழக்கூடியவர் அன்னைதெரசா. இவர் சேவை செய்வதற்கென்றே வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்பதில் மிகையன்று.

உலக மானுடம் தழைக்க, மனித நேயம் வளர்ந்து அனைவரும் மனிதநேயத்தோடு வாழவேண்டும். இல்லையெனில் உலகம் வர்க்க, மதப் போரிலும், இனச் சண்டையாலும் மாய்ந்துவிடும் இல்லை அழிந்து போகும். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு உலக மானுடம் மனிதநேயத்தை தம் கொள்கைகளாகவும், ஒற்றுமை உணர்வுடனும் அனைவரும் வாழவேண்டும். பிறருக்குக் கொடுத்து உதவும் மனப்பாங்கைப் பெற்று வளர அறக்கொள்கைகளைப் பின்பற்றி வாழ வேண்டும். இவை மட்டுமல்லாமல் பிற உயிரினங்களையும் பேணுதல், போற்றுதல் மனித இனத்தின் தலையாய கடமைகளாக இருக்கின்றன. இவ்வழியைப் பின்பற்றி கருத்தை மனத்தில் இருத்தி பிறருக்கு உதவிகள் புரிந்து மகிழ்ச்சியோடு வாழ்வதே சாலச்சிறந்தது. அதுவே மனிதநேயமும் ஆகும்.

ஆகஸ்டு 19-ந்தேதி உலக மனிதநேய தினம். இருகரம் கூப்பி வணங்குவதைவிட ஒரு கரம் நீட்டி உதவி செய்வது உன்னதமானது என்பார்கள். இந்த உயர்ந்த நோக்கத்தை வலியுறுத்தத் தோன்றியது தான் உலக மனிதநேய தினம். உலகளாவிய ரீதியில் யுத்தம், இயற்கைப்பேரிடர், நோய், வறுமை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரினை நினைவு கூறும் வகையிலும், இவர்களைப் பாதுகாக்க பாடுபட்ட மனிதநேயப் பண்பாளர்களை நினைவு கூறும் வகையிலும் மனிதநேய நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2008-ம் ஆண்டு டிசம்பர் 11-ந்தேதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் தீர்மானத்தின்படி இந்த நாள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

முதலாவது உலக மனிதநேய தினம் 2009-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ந்தேதி கொண்டாடப்பட்டது. இந்த மனித நேயச் சிந்தனை தமிழனுக்குப் புதிதல்ல. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எல்லா ஊர்களும் நமதே! எல்லோரும் நமது உறவினர்களே! என்ற சங்கப் புலவன் கணியன் பூங்குன்றனின் கூற்றில் இத்தகைய உயரியச் சிந்தனை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உயர்ந்து ஓங்கி ஒலித்திருக்கிறது.

**சங்க இலக்கியத்தில் மேலும் ஆய்விற்கு உரிய களன்கள் உள்ளன.**

1. சங்கப் புறத்திணையில் வாழ்வியல் கூறுகளும் விழுமியங்களும்.
2. சங்ககாலப் பண்பாடும் மேலைநாட்டு பண்பாடும் ஓர் ஒப்பீடு.
3. சங்கப் புறத்திணையில் ஆளுமைசார் கூறுகள்.
4. சங்கப் புறத்திணையில் சமுதாயச் சிந்தனைகள்.

# முடிவுரை

சங்ககால மக்களின் வாழ்வியலைச் சுட்டும் நூல்களுள் மிக முக்கிய இடம் வகிப்பது சங்க இலக்கியங்கள் ஆகும். இதில் காணப்பெறும் செய்திகள் பிற்கால அகழ்வாய்வுகளுக்கு கூட மிக முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது. எனவே கடந்த கால மக்களின் வாழ்க்கையை வாழும் தன்மையுடையதாக இருக்கும் நிலையினை சங்க இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன. இவற்றை ஆராய்வதன் மூலம் பல புதிய செய்திகள் வெளிப்பட்டுள்ளமை உணரத்தக்கது.

சங்க இலக்கியங்களில் புற இலக்கியங்கள் மிக முக்கிய பங்காற்றுகின்றன. புறத்திணை என்பதற்கு விளக்கம், தோற்றம் அவற்றின் தன்மை ஆகியன சுட்டப்பெற்றுள்ளன. போருக்கான காரணம், புறத்திணையின் கூறுகள் உள்ளிட்டவை சான்றுகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், புறத்திணை , புறத்திணை நுவலும் பொருட்கள் குறித்தும் உரைக்கப்பெற்றுள்ளன.

வாழ்வியல் முறைகளே மனிதவளக் கூறுகளையும் அறம் சார்ந்த செயல்களையும் மனித நேயத்தையும் வலியுறுத்துகின்றன. இயல் மூன்றில் மனிதநேயக் கூறுகள் ஒவ்வொரு நூலிலும் அமைந்துள்ள நிலைகளை எடுத்தாராயப்பெற்றுள்ளன. கடையேழு வள்ளல்கள் என்ற சொல்லாடலே அக்கால மன்னர்களின் மனிதநேய உணர்வுகளை சுட்டுகின்றன. புறத்திணை பனுவல்களில் குறிப்பிடப்படும் மக்களின் வாழ்வியல், வாழ்வியல் தொடர்பான செய்திகள், மனிதநேய உணர்வுகளைத் தூண்டக்கூடிய சான்றாகத் திகழ்கின்றது. மகளிர்நிலை, வாணிகம், அழகுணர்வு ஆகியன எடுத்துக்காட்டப்படுவதன் மூலம் மனிதநேயக் கூறுகளின் பின்புலம் குறித்து உணர முடிகிறது. நட்பு குறித்த செய்திகள் மேற்காண் தலைப்பிற்கு வலு சேர்ப்பதாக இவ்வாய்வு அமைந்து சிறக்கிறது எனலாம்.

உலகம் நாகரிக வளர்ச்சியில் உச்சத்தை எட்டியுள்ள காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இக்காலத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகமே ஒரு கிராமம் போல் சுருங்கி விட்டது. உணவு, உடை, உணர்வுகளில் பல்வேறு மாற்றங்கள் நம்மில் ஏற்பட்டுள்ளன. எனினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சங்ககால நூல்களின் மாந்தர்கள் நமக்கு முன்னோடிகளாக திகழ்கின்றனர். ஏன், உலகப் பண்பாட்டிற்கே முன்னோடிகளாக வாழ்ந்தனர் என்பது கண்கூடு.

உலக நாகரிகத்திற்கு முன்னோடியாகத் திகழக்கூடிய சீன, எகிப்து உள்ளிட்ட நாடுகளில் காணப்பெறும் இலக்கியங்களில் கூட பெண்கல்வி, மனித மனம் குறித்த நுண்ணிய சிந்தனைகள் சுட்டப்பெறவில்லை. ஆனால் நம்முடைய சங்கப் பனுவல்கள் அஃறிணை உயிர்களையும் தம்முயிர் போல் மதிக்கின்றன. தம் வாழ்வியலோடு இணைத்துக்காணும் கடையேழு வள்ளல்களையும் காண்கிறோம்.

*மயிலுக்கு போர்வைத் தருதலும், முல்லைக்கு தேர் தருதலும் வாழ்நாள் நீட்டிக்கும் அரிய நெல்லிக்கனியை தமிழுக்கு வழங்கி உதவும் அவர்தம் உயர் நாகரிகமான மனிதநேயத்தைச் சுட்டிச் செல்கின்றன.*

*அதியமான் தான் கண்டெடுத்த சாகா மருந்தாகிய நெல்லிக்கனியை ஔவையார்க்குக் கொடுத்து நீண்ட நாள் சாகா வரம் பெற்று மக்களுக்காகவும், அரசனுக்காகவும், நாட்டுக்காகவும் தமிழ்ப்புலவர் வாழ வேண்டும். தனக்குச் சாகாவரம் என்பதைவிடத் தனக்குப் பிறகும் மக்களையும் அரசனையும் பாடி நல் வழிகாட்ட வேண்டும் என்று தன் சாவு பற்றிக் கவலைப்படாமல் புலவர் ஔவை பிராட்டி நீண்ட நாள் வாழும் வரம் பெறட்டும் என்ற உயரியச் சிந்தனையில் வாழ்ந்த அதியமானின் மனம் முழுதும் மானுட நேயமே நிறைந்திருக்கிறது அல்லவா? அதனால் தானே 'கடிய விடமுண்டு தேவர்களைக் காப்பாற்றி அருள் செய்கின்ற சிவபெருமானின் மன நிலையினை அதியமானுக்கு உவமையாக கூறுகின்றார் ஔவையார். இதை தியாகம் என்று சொல்வதை விட மானுட நேயம் என்பது இச்சூழலில் மிகப் பொருத்தமாக உள்ளது.*

*வேள்பாரியைப் பற்றிக் கபிலர் பாடிய பாடல் எல்லாமே அவனுடைய மானுட நேயத்தையும், ஜீவகாருண்யத்தையும், வீரத்தையும் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது. சான்றாக, எருக்கம் பூவையே ஒரு பக்தன் சூட்டித் தெய்வங்களை வழிபட்டாலும், அத்தெய்வங்கள் விரும்பேம் எனக் கூறாது. அது போல அறிவில்லாதவரும் புல்லிய குணத்தவரும் சென்று கேட்டாலும் பாரி அவர்களுக்கும் கொடுத்து மகிழ்வான் என்கிறார் கபிலர். எல்லாவற்றையும் பரிசிலர்க்குக் கொடுத்துவிட்ட பாரி தன்னையும் கொடுக்கும் குணம் உடையவன். அந்தக் கபிலர் பாரி இறந்த பிறகு 'எத்திசைச் செல்லினும் அத்திசை சோறே' என்று சென்றுவிடலாம்! ஆனால் கபிலர் அப்படிச் செய்யாமல் பாரியின் மகளிருக்குத் திருமணம் செய்து வைக்க அங்கும் இங்கும் அலைகிறார். பாரி மட்டுமல்ல சங்க காலக் கடை ஏழு வள்ளல்களும் மானுட நேயம் மிக்கவர்களாக விளங்கியவர்கள் என்பது அவ்வவர்களின் வாழ்க்கை காட்டிச் செல்கிறது.*

*நாகரிகம் என்பது உடைகளிளோ, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளிளோ இல்லை. நாகரிகம் மனித மனங்களில் போது அரும்பாகி மலர்ந்து மணம் வீச வேண்டும். இதுவே உண்மையான பண்பாடு. எங்கே பண்பாடு உயர்நிலையை எட்டுகிறதோ அங்கே நாகரிகம் போற்றப்படும்.*

*தன்னுடைய தேரின் மணியோசையால் வண்டுகளின் மகிழ்வு கெடும் என்று உணர்ந்து மணியின் நாவினைக் கட்டிவிட்டுச் சென்ற தலைவன் பண்பாட்டின் சின்னம். அப்படியான மனிதநேயமிக்கவர்களே அன்று அரசர்களாக இருந்துள்ளனர். இல்லை என்று வருவோரையெல்லாம் வாவென்று அழைத்து முதலில் அவர்களின் உடல்பெற்ற துயர்களை நீக்கி, புத்தாடைகளை வழங்கி அவர்களின் பசிக்கு விருந்தளித்து பின்னர் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தவர்களே மன்னர்களாக போற்றப்பட்டனர்*

என்ற செய்தியைக் காண்கிறோம். இது இன்று வரை ஒப்பிடற்கரிய செய்தியாக இருந்து வருகிறது.

பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள ஆற்றுப்படை இலக்கியங்கள் மனிதநேயத்தை பறைசாற்றுகின்ற இலக்கியங்கள். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயரிய நோக்கின் சான்றாதாரங்கள் இவை. பரிசு பெற்ற இரவலன் தன்வீடு தன் உலகம் என்று நினைக்காமல் எதிர் வரும் இரவலனுக்கு வழி கூறியதோடு மட்டுமல்லாமல் தான் பரிசுப் பெற்றச் செய்தியையும் கூறி பாதுகாப்பான இடத்திற்கு பயணத்தை மேற்கொள்ளும் முறையையும் கற்றுத்தந்த ஆற்றுப்படை இரவலன் பண்பாட்டின் உச்சமன்றோ. உற்று நோக்கின் ஆற்றுப்படை பொருண்மையிலான இலக்கியங்கள் மனிதநேயத்தின் ஊற்றுக்கண்கள் எனில் மிகையன்று.

“கலம் செய் கோவே” என்று அழைத்து பானை வனையும் குயவனையும் மன்னராக உணர வைத்த மாண்பு சங்கத்தமிழருடையது. கடையேழு வள்ளல்களின் கொடைகள் காலத்தால் அழியாதவை.

இன்று கோயில்களுக்கு நிவந்தம் அளிப்பினும் அதில் தம் பெயரை பதிவுசெய்து பெருமை கொள்கின்றனர். ஆனால் அன்று நாட்டைக் காப்பதற்கு புதல்வர்களை பெற்றளித்த நற்றாயைக் காண்கிறோம். முதுகில் புண்பட்டு இறந்திருந்தால் என் மகனே அல்ல என்று அறைகூவலிடும் தாயை இன்றைய தாய்மார்களுக்கும் வீர உணர்வூட்டக்கூடியவை.

பிறருக்கு உதவி செய்வது நேயம். பிறர் உதவியை மறவாமல் வாழ்ந்து தினை போன்ற உதவியைப் பனைப் போல பெரிதாகக் கருதுவதும் நேயமே. ஆலந்தூராரின் கூற்று திருவள்ளுவரோடு ஒப்பிடத்தகுந்தது. பிற்கால, தற்கால வாழ்வியலுக்கும் சான்றாக நிற்கிறது. நன்றியுணர்வு நேயத்தின் மூலமே விளங்கும்.

தான் யார் என்பதைக்காட்டி வாரி வழங்கிய நள்ளி, அரவம் தந்த ஆடையை சிவனுக்கு வழங்கிய ஆய்அண்டிரன், பாணர்கள் பாடும் தொழிலையே மறக்கும் அளவிற்கு வழங்கிய ஓரி, ஆநிரைகள், எருது, கள் என அனைத்தையும் அள்ளி வழங்கிய எழினி, முன்னரே குறிப்பிடப்பட்ட பாரி, பேகன் போன்றோர் உயர் பண்பாட்டின் சின்னங்கள் எனில் மிகையில்லை.

புறங்கூறாது இருத்தல், அறஞ்செய்தல், கல்வியறிவு வழங்குதல், உள்ளனவற்றை பகிர்தல், இல்லையெனினும் இருப்பதை ஈதல், நாட்டிற்காக வாழ்தல் என மக்களும் மனிதநேய மாந்தர்களாகவே வாழ்ந்திருந்தனர் என்பதை சங்கப் புறப் பனுவல்கள் இன்று சுட்டி நிற்கின்றன.

மேலும், புலவர்கள் மன்னர்களின் இயல்பையும், கொடைச் சிறப்பையும் கூறும்போது பொய் கூறாது உண்மையை மட்டுமே கூறிய நிலை தெரிகிறது. குறுகிய நிலமாக இருந்தபோதும் பரந்த மனம் கொண்டு கடையேழு வள்ளல்கள்

வாழ்ந்துள்ளனர். கொடைகுணம் கொண்ட சங்காலத்து தமிழர் மனநிலை இன்று இல்லாமல் போனது வருத்தம் தருவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும், கவுரவர்களுக்கும் போர் நடந்தது. அப்போது தமிழ் மன்னன் ஒருவன் இருபடையினருக்கும் சோறு கொடுக்கும் புண்ணியத்தைச் செய்தானாம். அவன் பெயர் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன். இந்தத் தகவலை சங்ககாலப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடுகிறார். கைவீசி நடந்தால் காற்றுக்கும் வலிக்குமோ என்று கைகட்டியே நடந்தவர் வள்ளலார் என்பார்கள். அவர் உருகுவதைப் பாருங்கள்

**“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**
**வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த**
**வெற்றரைக் கண்டுள்ளம் பதைத்தேன்”**

மேற்கண்டவாறு “உயிரிரக்கம் மனிதநேயத்தின் திறவுகோல்” என்று கூறியதோடு மட்டுமல்லாமல் மனிதர்களின் பசிப் பிணியைப் போக்கும் எண்ணத்தோடு வடலூரில் அன்று அவர் மூட்டிய கனல் இன்றுவரை அணையவில்லை. அவரைப்போன்று மனிதநேயத்திற்கு சான்றாகத் திகழக்கூடியவர் அன்னைதெரசா. இவர் சேவை செய்வதற்கென்றே வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்பதில் மிகையன்று.

உலக மானுடம் தழைக்க, மனித நேயம் வளர்ந்து அனைவரும் மனிதநேயத்தோடு வாழவேண்டும். இல்லையெனில் உலகம் வர்க்க, மதப் போரிலும், இனச் சண்டையாலும் மாய்ந்துவிடும் இல்லை அழிந்து போகும். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு உலக மானுடம் மனிதநேயத்தை தம் கொள்கைகளாகவும், ஒற்றுமை உணர்வுடனும் அனைவரும் வாழவேண்டும். பிறருக்குக் கொடுத்து உதவும் மனப்பாங்கைப் பெற்று வளர அறக்கொள்கைகளைப் பின்பற்றி வாழ வேண்டும். இவை மட்டுமல்லாமல் பிற உயிரினங்களையும் பேணுதல், போற்றுதல் மனித இனத்தின் தலையாய கடமைகளாக இருக்கின்றன. இவ்வழியைப் பின்பற்றி கருத்தை மனத்தில் இருத்தி பிறருக்கு உதவிகள் புரிந்து மகிழ்ச்சியோடு வாழ்வதே சாலச்சிறந்தது. அதுவே மனிதநேயமும் ஆகும்.

ஆகஸ்டு 19-ந்தேதி உலக மனிதநேய தினம். இருகரம் கூப்பி வணங்குவதைவிட ஒரு கரம் நீட்டி உதவி செய்வது உன்னதமானது என்பார்கள். இந்த உயர்ந்த நோக்கத்தை வலியுறுத்தத் தோன்றியது தான் உலக மனிதநேய தினம். உலகளாவிய ரீதியில் யுத்தம், இயற்கைப்பேரிடர், நோய், வறுமை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரினை நினைவு கூறும் வகையிலும், இவர்களைப் பாதுகாக்க பாடுபட்ட மனிதநேயப் பண்பாளர்களை நினைவு கூறும் வகையிலும் மனிதநேய நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2008-ம் ஆண்டு டிசம்பர் 11-ந்தேதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் தீர்மானத்தின்படி இந்த நாள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

முதலாவது உலக மனிதநேய தினம் 2009-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ந்தேதி கொண்டாடப்பட்டது. இந்த மனித நேயச் சிந்தனை தமிழனுக்குப் புதிதல்ல. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எல்லா ஊர்களும் நமதே! எல்லோரும் நமது உறவினர்களே! என்ற சங்கப் புலவன் கணியன் பூங்குன்றனின் கூற்றில் இத்தகைய உயரியச் சிந்தனை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உயர்ந்து ஓங்கி ஒலித்திருக்கிறது.

**சங்க இலக்கியத்தில் மேலும் ஆய்விற்கு உரிய களன்கள் உள்ளன.**

1. சங்கப் புறத்திணையில் வாழ்வியல் கூறுகளும் விழுமியங்களும்.
2. சங்ககாலப் பண்பாடும் மேலைநாட்டு பண்பாடும் ஓர் ஒப்பீடு.
3. சங்கப் புறத்திணையில் ஆளுமைசார் கூறுகள்.
4. சங்கப் புறத்திணையில் சமுதாயச் சிந்தனைகள்.